
# நாசரேத் மிஷன் சரித்திரம்



பரி. யோவான் தேவாலயம், நாசரேத்

# A History of the Nazareth Mission

*Edited by*

**The Rev. D. A. CHRISTADOSS** B. A., L. T., B. D.

*Lecturer in Church History and Oriental Religions.*

*Tirunelveli Theological College,*

*Tirumaraiyur, Nazareth.*

PRINTED AT

THE TIRUNELVELI DIOCESAN PRESS,

AND PUBLISHED BY

THE NAZARETH CIRCLE & JUBILEE COMMITTEES.

NAZARETH.

***Price Rs. 1—12—0***

# FOREWORD

Every Christian congregation should take an interest in the history of its origin. Early records are now available and some of the oldest members of the community may have very interesting anecdotes in their minds which may soon be lost for ever. Any one who has the time and patience to seek out such records and collect these stories will be doing a great service to the Church.

The author of this book has undertaken this task for Nazareth and must be congratulated on the scholarly nature of his work. He has collected material from books and magazines no longer available to the general public and so preserved much valuable and interesting information for future generations.

It is to be hoped that now he has completed the task of recording the detailed history of the growth of the Nazareth Christian community, he may find time to do the same for other congregations in this Diocese.

*G. T. Selwyn,*

20—7—1950. Bishop in Tinnevelly.

# முகவுரை

நாசரேத் சர்க்கிள் கமிற்றியாரின் வேண்டுகோளுக்கிணங்கி, 1949 மே மாதம் முதல் இச் சரித்திரவாராய்ச்சியிலீடுபட்டேன். இவ்வாராய்ச்சியின் தொடக்கமுதலே, திருநெல்வேலி நாட்டில் S P G ஊழியஸ்தானங்களில் விசேஷித்து விளங்குவதற்கென்று ஆண்டவர் எவ்வண்ணம் குக்கிராமமான சாண்பத்தைத் தெரிந்துகொண்டார் என்று வியப்புற்றேன். கிறிஸ்தவ மிஷன்கள் இந்தியாவில் ஊழியம் ஆரம்பித்த காலத்தில், அவைகள் தலைமை ஸ்தானமாகத் தெரிந்துகொண்டவிடங்கள் பெரும்பாலும் கல்கத்தா, பம்பாய், சென்னை, தஞ்சாவூர் போன்ற பெரும் பட்டணங்களே. திருநெல்வேலி ஊழியத்திலும் முதலில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி போன்ற நகரங்களே எண்ணப்பட்டன. ஆனாலும் S. P. G யின் முக்கிய ஸ்தானமாக விளங்க எம்பெருமான் தெரிந்துகொண்ட தலம் பாளையங்கோட்டை, தூத்துக்குடி போன்ற பட்டணங்களுமல்ல, ஆழ்வார்திருநகரி, அம்பாசமுத்திரம் போன்ற நகரங்களுமல்ல, தேறித்திட்டுகளின் சரிவில், பனைமரங்களாலும், உடை விருக்ஷங்களாலும் மூடப்பட்டு உறங்கிக்கிடந்த சாண்பத்தாம்! இதுதான் விந்தையாய்த் தோன்றிற்று. ஆனால் ஆதிகாலத்தில் சீயோன் பர்வதத்தைப் பற்றியும் எம்போன்றே மக்கள் வியப்புற்றனர் போலும். ஆகையால்தான் பக்தன், "உயர்ந்த சிகரங்களுள்ள பர்வதங்களே, ஏன் துள்ளுகிறீர்கள்? இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்க தேவன் விரும்பினார். ஆம், கர்த்தர் இதிலே வாசமாயிருப்பார்". என்றார். சாண்பத்தைப் பற்றியும் தேவன் இவ்வண்ணமே சித்தங்கொண்டார். அதே சங்கீதக்காரன், "நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச் சிறகுகள் போலும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்" என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார். சீயோன் வாசிகளுக்கருளப்பட்ட இவ்வாசீர்வாதம் சாண்பத்து மக்களிலும் நிறைவேறக் கண்டேன். அது எவ்விதம் நிறைவேறிற்று? இக்கேள்விக்கு விடை, அன்று, 'நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா' என்று சந்தேகித்த நாத்தான்வேலுக்கு,

(இயேசுவின் வாசஸ்தலமும் தொழிலகமுமான நாசரேத்துக்கு) 'வந்துபார்' என்று உத்தரம் கொடுக்கப்பட்டது போன்றே, இன்றும் கொடுக்கப்படக்கூடும்.

இப்புஸ்தகத்தை எழுதுவதற்கு எமக்குத் துணையாயமைந்த நூல்களின் அட்டவணை யொன்றை இத்துடன் இணைத்திருக்கிறேன். தவிரவும் இவ்வாராய்ச்சி சம்பந்தமாய் மறைந்துநின்ற அனேக விஷயங்களைத் தெரிவித்த சென்னை ராவ்சாகிப் S. K. தேவசிகாமணி, நாசரேத் ஸ்ரீ போதகம் கோவில்பிள்ளை, ஸ்ரீ R. T. கிறிஸ்றியன், ஸ்ரீமதி பாலம்மாள் அம்மாள், ஸ்ரீ மோசஸ் ஆபிரகாம், ஸ்ரீமதி G. D. ஞானுயுதம் அம்மாள், ஸ்ரீ A. கோவில் பிள்ளை (Retired A. I. S. teacher) முதலியோருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். மேலும் முந்திய காலத்துப் புகைப்படங்களை ஆர்வத்துடன் எமக்கனுப்பித்தந்து எம்மை ஆசிர்வதித்த S. P. G. தாய்ச் சங்கத்தாருக்கும், உற்சாகப்படுத்தி எழுதின மகாகனம் நீல் அத்தியக்ஷரவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும். டென்மார்க் தேசத்தில் சின்ன லிங்பி (Little Lyngby) சபைக்குரு மிகுந்த பிரயாசத்துடன் நம் முதல் மிஷனெரி கனம் ரோசன் ஐயரவர்களின் புகைப்படமொன்று தயாரித்து எமக்கனுப்பி உதவியதற்கு இவண் உவப்புடன் நன்றி செலுத்துகிறேன். அவ்வாறே நசரைவாசிகளிலும் பலர் படங்களைக் கொடுத்துதவினர். பழைய ரிக்கார்டுகளைப் புரட்டிப் பார்த்தாராய எமக்கு அனுமதிதந்த சென்னை அத்தியக்ஷாதீன ஆபீஸ் அதிகாரிகளும், அவணுள்ள ஸ்ரீமான் ஏஞ்சல் தேவதாஸ் அவர்களும், நெல்லை அத்தியக்ஷாதீன அதிகாரிகளும், நசரைப் பஞ்சாயத் போர்ட் பிரசிடென்றும், கிளார்க் ஸ்ரீ துரைசாமி தாமஸ் அவர்களும் எமக்கு வெகு ஒத்தாசை செய்துள்ளார்கள்.

கையெழுத்துப் பிரதிகள் சுமார் 420 பக்கங்களுக்கு (Foolscap size) மேலிருந்தும் அவற்றை ஊக்கத்துடன் வாசித்துத் தமிழ் நடை திருத்திய பரி. யோவான் பெண்கள் கலாசாலைத் தமிழாயர் ஸ்ரீ V. சுவிசேஷமுத்து வித்துவானவர்களும், திருச்சி தெப்பக்குளம் பிஷப் ஹீபர் உயர்தரக் கலாசாலைத் தமிழரையர் வித்துவான் A. M. பரிமணம் அவர்களும், அவற்றைத் தெளிவா

யெழுதி அச்சுக்குத் தயாராக்கின சகோதர சகோதரிகளும், அச்சுப் பிரதிகளைத் திருத்துவதில் உதவியாற்றிய திருமறையூர் மாணவரான கனம் B. மாணிக்கராஜ் ஐயர், ஸ்ரீ P. G. சத்திய நாதன் என்போரும் இவண் அன்புடன் பாராட்டப்படுவதற் குரியர்.


இந்நூலுக்கு முன்னுரை எழுதி, எம் முயற்சியை ஆசீர் வதித்த திருநெல்வேலி மகாகனம் செல்வின் அத்தியக்ஷரவர் களுக்கும் மிகுந்த நன்றிகூறி, சாணளவான சாண்பத்தை நகரள வான நாசரேத்தாக்கித் தம் நாமத்தை மகிமைப்படுத்தச் சித்தம் கொண்ட நசரையம்பதியதிபராம் எம்பெருமான் இயேசுநாதரின் திருவடிகளுக்கே இந்நூலைப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக் கிறேன்.

திருமறையூர்
30—5—50.

*D. A.* கிறிஸ்துதாஸ்

# பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | முன்னுரை | | ... | iii |
| 2. | முகவுரை | | ... | v |
| 3. | தோற்றுவாய் | | ... | 1 |
| 4. | சாண்பத்தும் சத்தியநாதனும் | அத். 1 | ... | 7 |
| 5. | நாசரேத்தின் இளம்பிராயம் | ,, 2 | ... | 19 |
| 6. | முதலிரு தந்தையர் | ,, 3 | ... | 32 |
| 7. | புதிய சகாப்த ஆரம்பம் | ,, 4 | ... | 49 |
| 8. | நாட்டுச் சபையும் கேமரரும் | ,, 5 | ... | 70 |
| 9. | பக்தன் பிரதர்ட்டன் | ,, 6 | ... | 84 |
| 10. | டாக்டர் ஸ்ட்ராஹ்ன் | ,, 7 | ... | 99 |
| 11. | அறுப்பு மிகுதி | ,, 8 | ... | 113 |
| 12. | ஸ்தாபனச் சேவை | ,, 9 | ... | 128 |
| 13. | சுய ஆதரவு | ,, 10 | ... | 144 |
| 14. | மர்காஷிஸ் | ,, 11 | ... | 164 |
| 15. | சங்கிலித் தொடர் | ,, 12 | ... | 181 |
| 16. | தற்கால ஆரம்பம் | ,, 13 | ... | 194 |
| 17. | இரு கனோன்கள் | ,, 14 | ... | 210 |
| 18. | தற்காலம் | ,, 15 | ... | 224 |
| 19. | முடிவுரை | | ... | 243 |
| 20. | அனுபந்தங்கள் | | ... | 246 |



பரி. யோவான் தேவாலயம், நாசரேத்

பிரதிஷ்டை 12—3—1928

# நாசரேத் மிஷன் சரித்திரம்

## தோற்றுவாய்.

அருள் நாதனின் அன்பின் பார்வை அந்தகாரத்தில் ஆழ்ந்துகிடந்த திருநெல்வேலி நாட்டின்மீது 1771ம் வருஷம் திரும்பியது. தஞ்சையில் திருப்பணிவிடையாற்றிவந்த சங்கை ஷ்வார்ட்ஸ் ஐயரிடம் ஞானதீட்சை பெற்ற திருநெல்வேலி நாட்டினரான 'சவரிமுத்து' என்பவர் பாளையங்கோட்டையில் 'தேவனுடைய வார்த்தையை அங்குள்ள ரோமன் கத்தோலிக்கேயருக்கும் இந்துக்களுக்கும் வாசித்துப் போதித்து வந்தார்.

சவரிமுத்து

அதுமுதல் பாளையங்கோட்டையில் சபை உண்டாகி வளர ஆரம்பித்தது. சங்கை ஷ்வார்ட்ஸ் ஐயர் S. P. C. K. சங்க ஆதரவில் உபதேசிமாரையும், பிரசங்கிமாரையும் பாளையங்கோட்டைக்கு அனுப்பி, சபையைக் கண்காணித்து வந்ததுமன்றி 1778ம் வருஷத்தில் தாமே பாளையங்கோட்டைக்கு முதன்முறையாக விஜயம் செய்தார். அவருடைய இவ் விஜயத்துக்குக் காரணம் என்னவென்றால், *பாளையங்கோட்டைப் பட்டாளத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவர் தம்முடைய விவாகத்தை நடப்பித்து வைக்கக் குருவானவர் எவரும் அருகிலில்லாததால் சங்கை ஷ்வார்ட்ஸ் வந்து அவ்விவாகத்தை முடித்துத் தரவேண்டும் என்றும், ஞானஸ்நானம் பெறவேண்டிய அநேக குழந்தைகள் குருவானவரே இல்லாக் காரணத்தால் ஞானதீக்ஷை பெறுதிருந்தமையால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுமேயாம். இவ்விதமாக முதன்முதல் மிஷனெரியொருவர் திருநெல்வேலி நாட்டிற்கு வந்தது ஓர் மங்கள காரியத்தை முன்னிட்டேயாகும்.

ஷ்வார்ட்ஸ் வருகை

திருநெல்வேலி திருச்சபையின் அங்கத்தினர் பெயர்களடங்கிய ஜாபிதா ஒன்று 1780ம் வருஷம் எழுதப்பட்டது அதின்படி அக்காலத்தில் நாற்பது பேரே சபையில் இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, பற்பநாதபுரம், உக்கிரமன்கோட்டை முதலிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இதற்கு முந்திய வருஷத்தில்தான், திருநெல்வேலி ஊழியத்தில் ஷ்வார்ட்ஸ் ஐயருக்கு உதவியாக இருக்கவென்று, S. P. C. K. சங்கத்தார் போஹ்ல் (Pohle) ஐயரை அனுப்பியிருந்தார்கள். அவர் அவ்வருஷம்

ஆதிச்சபை

* Early records of the History of Tinnevelly Missions by Bp. Caldwell - Page 5

ஜூன், ஜூலை மாதங்களில் பாளையங்கோட்டைக்கு வந்து, அங்கு பிரசங்கித்து, பலருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக 1780ம் வருஷம் மார்ச்மீ 10ம௳ தாம் சங்கத்தாருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கிளாரின்டா

1785ம் வருஷம் சங்கை ஷ்வார்ட்ஸ் ஐயர் மறுபடியும் பாளையங்கோட்டைக்கு வந்து கிளாரின்டா அம்மாள் அங்கு கட்டின ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தார். இந்த அம்மாள் ஒரு பிராமண ஸ்திரி. இவளுடைய பழைய ஜீவியம் 'பாவியான ஸ்திரீ'யின் வாழ்க்கை. இவள் விதவையாயிருந்த காலத்தில் ஒரு ஆங்கிலேய போர்வீரனின் "விவாகமில்லா வாழ்க்கைத் துணைவி"யாகிப், பின் அப்போர்வீரனிடத்திலிருந்தே கிறிஸ்தவ சத்தியங்களைக் கற்றறிந்து, பாவிகளின் நேசரிடத்தில் பாவ அறிக்கை செய்து மனச்சாந்தி பெற்றாள். விவாகமில்லா அவ்வாழ்க்கை கிறிஸ்தவ அனுசாரத்துக்கு விரோதமாகையால், அவள் தனக்கு ஞானதீக்ஷை வேண்டுமென்று ஷ்வார்ட்ஸ் ஐயரிடம் கேட்டபோது அவர் மறுத்தாரெனினும், அப்போர்வீரன் மரித்தபின் பாளையங்கோட்டையில் 1778ம் வருஷத்தில் ஐயர் அவளுக்கு ஞானதீக்ஷை கொடுத்தார். கிளாரின்டா அம்மையாரின் பின் ஜீவியம் இப்புத்தகத்திற்குரிய விஷயமன்று. பாவ வாழ்க்கையினின்று பரிசுத்த ஜீவியத்துக்கு அழைக்கப்பட்ட அவளே 1780ம் வருஷ ரிஜிஸ்டரில் முதலாவது பேரெழுதப்பட்டாள். மேலும் இம்மாது சிரோமணியே, ஜீவனுள்ள தேவனை மக்கள் ஆராதிப்பதற்கென்று திருநெல்வேலிச் சீமையில், அதிலும் திருநெல்வேலித் திருச்சபையின் தலைமை ஸ்தானமாகிய பாளையங்கோட்டையில் முதல் ஆலயத்தையும் கட்டினாள்.

தஞ்சைப் பிரசங்கிமார்

1785-ம் வருஷத்தில் திருநெல்வேலித் திருச்சபையின் ஆதி அப்போஸ்தலர்களில் விசேஷித்தவர் என்று பாராட்டத்தக்க சத்தியநாதன் என்பவர் தஞ்சையிலிருந்து பாளையங்கோட்டை வந்தார். ஜனுவரி முதல் ஜூன் வரையில் இவர் பாளையங்கோட்டையில் சுவிசேஷப் பிரசங்க ஊழியமும், கிளாரின்டாவின் ஆலயத்தில் திருப்பணிவிடையும் நிறைவேற்றித் தஞ்சை திரும்பினார். ஆனால் மறுபடியும் 1786-ம் வருஷம் பாளையங்கோட்டையின் முதல் உபதேசிகராக நியமிக்கப்பட்டு அங்கு நிரந்தரமாக கிறிஸ்தவப் பணிவிடையாற்ற ஆரம்பித்தார். சத்தியநாதன் 1786-ம் ௵ முதல் 1805-ம்௵ வரை தொடர்ந்து இருபது வருஷமாகச் செய்த ஊழியத்தின் பயனாகத்தான் திருநெல்வேலியில் கிறிஸ்து மார்க்கம் இன்னும் செழிப்புடன் விளங்குகின்ற தென்கீழ்ப் பிராந்தியங்களில் சபைகள் உண்டாயின. அவருக்கு உதவியாக, தஞ்சையிலிருந்து அடிக்கடி பிரசங்கிமாரும், உதவி உபதேசிகரும் அனுப்பப்படுவதுண்டு. மேலும் இவர்களது ஊழி

யத்தை மேற்பார்வையிடவும், பரிசீலனை செய்யவும் தஸ்தாவேஜுகள் முடிக்கவும், பண வருவாய், செலவு இவைகளை கண்காணிக்கவும் மிஷனெரிமாரும் நியமிக்கப்படுவர். அவ்விதம் நியமிக்கப்பட்டவர்களில் சிரேஷ்டமானவர்கள் கனம் J. D. ஜெனிக்கே ஐயர், கனம் C. W. கெரிக் ஐயர், கனம் J. C. கோலாப் ஐயர் முதலியவர்கள். இம்மிஷனெரிமார் அடிக்கடி திருநெல்வேலி நாட்டுக்கு வந்து சுற்றுப் பிரயாணம் செய்து, சுவிசேஷ ஊழியம் நடப்பித்தனர். ஜெனிக்கே ஐயர் உடல்நலங்குன்றியவராயிருந்த போதிலும் வாஞ்சையுடனும் விடாமுயற்சியுடனும் காடுகளிலும், கிராமங்களிலும், மலைநாட்டிலும், கடற்கரைகளிலும் செய்த பணிவிடை மிக மிகப் பாராட்டத்தக்கது.* கெரிக் ஐயர் ஓர் சிறந்த பக்திமான். சபைகளில் உற்சாக மூட்டி, அவைகளை ஸ்திரப்படுத்துவதில் ஆவியின் வரத்தைச் சம்பூரணமாகப் பெற்றவர். 1800—1803ல் அவர் 5000 பேருக்கதிகமான கரைச் சுற்றுக் கிராமவாசிகட்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இவ்வேராளமானவர்கள் ஞானஸ்நானம் பெற அவர்களை ஏற்கனவே ஆயத்தஞ் செய்தவர்கள் சத்தியநாதனும் அவருடைய பிரசங்கிமாருமாம்.

சத்தியநாதன் உபதேசிகாது திறமையையும் பக்தியையும் கண்ட ஷ்வார்ட்ஸ் ஐயர் 1790-ம் வருஷம் டிசம்பர்மீ 26-ம் தேதி அவருக்கு குருப்பட்டம் கொடுத்து பாளையங்கோட்டைச் சபை மேற்பார்வையும், கிராமங்களில் சுவிசேஷ ஊழியமும் செய்யுமாறு அவரை ஏற்படுத்தினர். எனவே இவர் திருநெல்வேலித் திருச்சபையின் முதல் இந்திய குருவானர். இந்த சத்தியநாதன் ஐயர் 1753-ம் வருஷம் தஞ்சையில் வேளாளர் குலத்தில் இந்துப் பெற்றோருக்குப் பிறந்து இந்து மார்க்கத்தில் வெகு வைராக்கியமுள்ளவராக வளர்ந்தார். வாலிபப் பிராயத்தில் தம் மார்க்க அனுஷ்டானங்களினால் யாதொரு திருப்தியும் ஏற்படாதது கண்டு கவலையுற்றிருக்கும் நாளில், 1772-ம் வருஷத்தில் தரங்கம்பாடி மிஷனெரிமாரால் தஞ்சைக்கு அனுப்பப்பட்ட பிரசங்கிமாரின் மூலம் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவர் அதிகமாகக் கல்வி கற்றவரல்லவெனினும், கிறிஸ்து மார்க்க சத்தியங்களை வெகு இலகுவில் கிரஹித்துக், 'கிறிஸ்துவின் மூலமாயன்றி இரட்சிப்பில்லை' என்று தீர்க்கமாய் உணர்ந்து, அவ்வருஷ இறுதியில் சத்தியநாதன் என்ற பெயருடன் கிறிஸ்தவரானர்.

**சத்தியநாதன் ஐயர்**

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதும் அவர் தம் இனஜனத்தாரால் ஏற்பட்ட உபத்திரவங்களைச் சகிக்கவும், கடைசியில் அவர்களைவிட்டு நீங்கிக் கொள்ளவும் வேண்டியதாயிற்று. தம் சொந்த ஜனங்களை மட்டுமன்று, தம் சொந்த ஜாதியையும் அவர் மறந்தார். ஜாதிப் பெருமையை அறவே

* Lives of South Indian Missionaries P. 245 ff

ஒழித்ததினால்தான் திருநெல்வேலி தென்கிழக்குச் சீமையில் அவர் மூலம் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படக் கூடியதாயிற்று. இதை ரூபிக்க அக்காலம் நிகழ்ந்த ஒரு விஷயத்தை ஈண்டு எழுதுவது நலம்.

**சத்தியநாதனையரும் ஜாதி வித்தியாசமும்**

1800-ம் வருஷம் முதல், அதற்கு முந்திய வருஷந்தான் ஸ்தாபிக்கப் பட்டிருந்த முதலூர் சபையில் ஊழியம் செய்ய வென்று, ஒய்வுநாள்தோறும் இரண்டிரண்டு பிரசங்கிமாரை அனுப்புவது சத்தியநாதனையர் வழக்கம். அப்பிரசங்கிமார் தஞ்சையிலிருந்து வந்தவர்கள். வேளாள வகுப்பார். அவர்கள் முதலூர்க் கிறிஸ்தவர்களோடு போஜனம் செய்ய மாட்டார்கள். பாளையங்கோட்டையிலிருந்தே கட்டமுது கொண்டுவந்து விடுவார்கள். முதலூர்க் கிறிஸ்தவர்கள் வீடுகளில் தண்ணீர் தானும் வாங்கிக்கொள்ளமாட்டார்கள். அவ்வூரார் எதாவது கொடுத்தாலும் மறுத்து விடுவார்கள். இது முதலூர்வாசிகளுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. "இது தானா கிறிஸ்து மார்க்க அனுஷ்டானம்?" என்று கூட அவர்கள் எண்ண ஆரம்பித்தார்கள். பிரசங்கிமாரையும் அவர்கள் போதனையையும் பற்றி வெறுப்புக்கொள்ளத் தலைப்பட்டார்கள். இவ்வாறிருக்கையில், ஒரு தடவை சத்தியநாதனையரே அங்கு வந்தார். இவரும் வேளாள குலத்தினராதலால் பிரசங்கிமார் போலவே நடந்து கொள்வார் என்று முதலூரார் எண்ணினர். ஆனால் அதற்கு மாறாகத், தமக்கு ஆகாரம் சமைத்துத் தருமாறு அவ்வூர்க் கிறிஸ்தவர்களையே கேட்டு, அவர்கள் சமைத்த ஆகாரத்தை உண்டு, அவர்கள் கொடுத்த தண்ணீரை அவர் பருகினதை அவர்கள் கண்டு வியப்புற்று, "ஐயா, இதென்ன? உங்கள் குலத்தைச் சேர்ந்த பிரசங்கிமார் ஜாதி வித்தியாசம் பாராட்ட நீங்கள் மட்டும் எங்களோடு சரிசமானமாய் இருக்கிறீர்களே!" என்று கேட்டுப், பிரசங்கிமாரின் நடத்தையைப்பற்றி அவரிடம் புகார் செய்தனர். ஐயர், பிரசங்கிமாரின் நடத்தைக் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு விரோதம் என்றும், ஆனால் அவர்கள் அவ்விதம் நடந்துகொண்டதற்கு அவர்களது குறைந்த கிறிஸ்தவ ஜீவிய அனுபவமே காரணம் என்றும் கூறிக், கிறிஸ்தவர்களிடை ஜாதிபேதம் காணப்படுவது பெருந்தவறு என்று போதித்துத் தம்முடைய செய்கையே அவர்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டும் என்றும் உபதேசித்தார். உடனே முதலூர் சபைத் தலைவர், "ஐயா, நீங்களே இனி வாருங்கள். பிரசங்கிமார் வேண்டாம். என் ஜாதியாரில் இன்னும் பலர் இரக்ஷிப்படைய வேண்டுமானால் இன்னும் சில காலத்துக்காவது பிரசங்கிமாரை அனுப்பாதிருங்கள்"* என்று வேண்டிக்கொண்டார்.

* Early Records of the History of Tinnevelly Missions by Bp. Caldwell P. 59.

சத்தியநாதன் ஐயர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கிராமங்களிலும் நாட்டுப்புறங்களிலும் மட்டுமல்ல, பட்டணங்களிலும் அரசர் மாளிகைகளிலும் சென்று தைரியமாய்ப் பிரசங்கித்து வந்தார்.

ஐயரின் சுவிசேஷ வைராக்கியம்

அக்காலம் திருநெல்வேலி நாட்டில் புஜபல பராக்கிரமமும் அஞ்சாநெஞ்சமும் கொண்டவராய், சத்துருக்களை நிர்த்தாக்ஷண்யமாய் அடக்கி ஒடுக்கி ஆண்டு வந்த பாளையக்காரர்களில் கீர்த்தி பெற்றவராய் விளங்கினது பாஞ்சாலங்குறிச்சி சிற்றரசனாகிய கட்டபொம்மு நாயக்கர். இவர் ஆங்கிலேயருக்கு விரோதமாய்ப் பலத்த கட்டுப்பாடுகள் செய்து, அவர்களோடு யுத்தம் நடத்திக்கொண்டு வந்தார். இக்காலம் தான் திருநெல்வேலி நாடு ஆங்கில அரசாட்சிக்குட்பட்டது. அடிக்கடி கலகம் செய்து, நாட்டின் சமாதானத்தைக் குலைத்து வந்த நாயக்க மன்னனைப்பல பிரயத்தனங்களின் முடிவில், ஆங்கிலேயர் பிடித்துப் பாளையங்கோட்டையில் சிறையில் வைத்தார்கள். அக்காலத்தில் ஆங்கிலேயருக்கு உண்மையாயிருந்த பல பாளையக்காரர் புடைசூழ, கலெக்டர் லஷிங்க்டன் [இவரே திருநெல்வேலியின் முதல் கலெக்டர். இவர் பின்னால் சென்னை கவர்னர் ஆனார்.] பாஞ்சாலங்குறிச்சியில் முகாம் செய்தார். அவ்வூரில் ஒரு சிறு கிறிஸ்தவ சபை இருந்தது. சத்தியநாதன் அச்சமயம் [1800 ஜூன்] அவ்வூர் சென்று அங்குள்ள சிறு சபையை சந்தித்து, ஆராதனை நடத்தி, ஐந்து பேருக்குப் பரிசுத்த விருந்து பரிமாறினார். பின்னால் கலெக்டரைக் காணச் சென்றார். அங்கு கலெக்டரைப் புடைசூழ்ந்து நின்ற அநேக பாளையக்காரருக்குக் கிறிஸ்துவினால் உண்டான மீட்பைத் தைரியமாக எடுத்துக்கூறி மனந்திரும்புதலுக்கு அவர்களை அழைத்தார்.

இம் மகோன்னதரைப் பற்றி, சங்கை ஷ்வார்ட்ஸ் கூறும் நற்சாட்சியாவது: "சத்தியநாதனின் தினசரி வாழ்க்கை அவரது இருதயத் திடனைக் காண்பிக்கும். அவரிடத்திலுள்ள தாழ்மையும், நம்பிக்கையும், சுயநலமற்ற நடத்தையும் எனக்கும் மற்ற யாவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த விஷயங்கள். அவருடைய சுயதேசத்தாரில் அவருக்குச் சமானமானவர்கள் வெறெவரையும் நான் சந்தித்ததில்லை என்று திட்டமாய்க் கூறுவேன். கிறிஸ்துவின் பேரில் அவருக்கிருந்த அன்பும், தம் சுயதேசத்தாரின் நல்வாழ்வுக்காகப் பாடுபடவேண்டும் என்ற அவாவும் அவரிடத்தில் துலக்கமாய்க் காணப்பட்ட லக்ஷணங்கள். அவருடைய பிரசங்க வரம் எல்லாருக்கும் திருப்தியை அளித்தது ...... ஏழைகளுக்கு அவர் காட்டின அன்பு விசேஷமானது. தமக்குக் கிடைத்த சொற்பச் சம்பளத்தில் எவ்வாறு தம் குடும்பக் காரியங்களையும் நடத்தி, ஏழைகளுக்கும் இவ்வளவு அதிகமாக உதவிசெய்து, அவர்களுடைய கஷ்டங்களை அவர் போக்குகிறார் என்று

ஷ்வார்ட்ஸின் நற்சாக்ஷி

நான் அதிக ஆச்சரியப்படுவதுமுண்டு. தம் பிள்ளைகளை அவர் நடத்தும் விதம் மிகமிக மெச்சப்படத்தக்கது. தமது குடும்பத்தாருக்குச் சிறந்த நன் மாதிரியாயிருந்தார். பல வருஷங்களுக்கு முன், ஏழெட்டு வயதுள்ள அவரது மூத்த மகள் வைசூரியினால் இறந்தாள். அவள் புத்திக்கூர்மையும் தெய்வ பக்தியும் மிகுந்தவள். அவளது பக்தியினால் பலர் நன்மையடைந்த துண்டு. அப்பெண்ணை நல்லடக்கம் செய்யும்போது நான் என் கண்ணீரை அடக்கக் கூடாதவனாயிருந்தேன். ஆனால் அவளுடைய தகப்பனாரோ பள்ளிக்கூடச் சிறுவரோடு சேர்ந்து, 'ஏசுவே, என் நம்பிக்கையே' என்ற கீதத்தைப் பாடினார். இது என்னைப் பலமாய் அசைத்தது'' என்பதாம்.

1790-ம் வருஷம் டிசம்பர்மீ 26-ம் தேதி சத்தியநாதன் ஷ்வார்ட்ஸ் ஐயரிடம் லுத்தரன் முறைப்படி குருவபிஷேகம் பெற்றார். இச்சமயம் கோலாப் ஐயர் சத்தியநாதனைப் பற்றிக் கூறிய வசனம் பின்வருமாறு: ''அநேகர் தங்கள் பாவங்களை விட்டுக் கடவுளை அணுக, இவர் செய்த பிரயாசங்களை கர்த்தர் வாய்க்கச் செய்தார். சர்வ வல்லமையுள்ளவர் தம்முடைய ராஜ்ய விருத்திக்காக இவரை வல்லமையாய் உபயோகித்தருளுவார் என்பதுபற்றி எனக்கு யாதொரு சந்தேகமுமில்லை.''

குருப்பட்டம்

1791-ம் வருஷம் ஏப்ரல்மீ முதல் திருநெல்வேலி நாட்டிலுள்ள கிறிஸ்தவ சபைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு கோலாப் ஐயரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் அவ்வருஷமுதல் அடிக்கடி இந்நாட்டுக்கு வந்து சுற்றுப் பிரயாணங்கள் செய்து சபைகளைச் சந்தித்து உற்சாகப்படுத்திவிட்டுப் பின் தஞ்சாவூருக்குத் திரும்புவார். சத்தியநாதனையர் நாம் ஏற்கெனவே பார்த்தது போல், பாளையங்கோட்டையில் நிலையாகத் தங்கிப் பணிவிடையாற்றினார். இவரது ஊழியத்தின் பயனாகவேதான் 1797-ம் வருஷம் முதல் திருநெல்வேலி நாடார்களிடையில் சுவிசேஷம் வேரூன்றி பலனடைய ஆரம்பித்தது. நாசரேத் சபை தோன்றுவதற்குக் காரணஸ்தர் இப்பக்தனே என்பது மகாகனம் கால்டுவெல் அத்தியக்ஷர் தம் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மை.* அத்தியக்ஷர் ஐயரைப்பற்றி ''காலவரிசையிலும் குணமேம்பாட்டிலும் அவர் முதன்மையானவர். உண்மையான கிறிஸ்தவ திடனும், வரம்புக்குட்படாத கொடைத் திறனும், அஞ்சா நெஞ்சமும், ஊக்கமும் கொண்டவர். ஆழமாய்ப் பதியத்தக்கதாகப் பேசுவதுமன்றி, அதிகாரத்தொனியுடன் காரியங்களை நடத்தும் ஆற்றலும் படைத்தவர். கடவுளால் தமக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தின் தன்மைக்கேற்ற குணம் கொண்டவர். கல்வியறிவற்ற முரட்டாட்டமான ஜனங்களின் மத்தியில் கிறிஸ்தவத் திருச்சபை ஸ்தாபிதமாக அடிகோலியவர் இச் சத்தியநாதனே யாவார்'' என்று எழுதுகிறார்.

கால்ட்வெல்லின் நற்சாக்ஷி

*(p 27. Early records of the History of Tinnevelly Missions by Bp. Caldwell)

# அத்தியாயம் 1

## சாண்பத்தும் சத்தியநாதனும்

**சாண்பத்து**

தென்கீழ் நெல்லை நாட்டில் வாழையடி, மூக்குப்பீறி என்ற இரு பெரும் கிராமங்களுக்கிடையில் தேறி மணற்றிட்டுகளின் மீது அமைந்திருந்தது சாண்பத்து என்ற சிற்றூர். சில சிறு குடிசைகளே அக்கிராமத்தின் வீடுகள். மேற்கெல்லையும் கிழக்கெல்லையும் இரு ஓடைகள். மேற்கு ஓடைக்குச் சமீபத்தில் வகுத்தான் குப்பம் என்ற கிராமத்தாருக்குச் சொந்தமான ஓர் கிணறு. இதன் சமீபத்திலிருந்து கிட்டத்தட்ட வாழையடி வரையில் அடர்ந்து வளர்ந்த உடை மரங்களையுடைய ஒரு காடு. இக்காடு வகுத்தான்குப்பம், சாண்பத்து கிராமத்தாரில் சிலருக்குச் சொந்தமாயிருந்தன. உடை மரங்களினூடே ஓங்கி வளர்ந்த பல பனைமரங்கள் நின்றன. இவ்வூர் வாசிகள் வகுத்தான்குப்பம், மூக்குப்பீறியிலுள்ளவர்களோடு கொடுக்கல் வாங்கல், விவாகசம்பந்தம் முதலியவற்றில் நெருங்கிய தொடர்புடையர்.

**வாழையடி—முதலூர்**

சத்தியநாதனையர் கிறிஸ்துவின் சுவிசேஷ நற்செய்தியை இப்பாகங்களில் பிரசங்கித்து வருங்காலையில் இவ்வூருக்கும் வந்து சுவிசேஷ எக்காளம் ஊதியிருப்பார் என்று நாம் துணிந்து கூறலாம். எனினும் கிறிஸ்து மார்க்கம் 1799க்கு முன் இவ்விடத்தில் வேரூன்றவில்லை. ஏனெனில் முதலூர் கிராமத்தை 1799 ஆகஸ்ட்டில் ஏற்படுத்திய தாவீது உபதேசியார் அவ்வூரே 'முதற் கிராமம்' என்ற கருத்துடன் அப்பெயரை அவ்வூருக்கு வைத்தார். கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டபின், 'நாசரேத்' என்ற பெயரை ஏற்குமுன், சாண்பத்து, "வடக்கு முதலூர்" என்றும் "வாழையடி—முதலூர்" என்றும் அழைக்கப்பட்டது. ஏற்கெனவே தெற்கில் முதலூர் என்றவோர் கிராமம் உண்டாயிருந்தமையால்த்தான் சாண்பத்துக் கிராமத்தார் தாங்கள் கிறிஸ்தவர்களானதும் தங்களூருக்கு 'வடக்கு முதலூர்,' அல்லது 'வாழையடி முதலூர்' என்று பெயர் வைத்துக்கொண்டார்போலும். இவ்வூரில் கிறிஸ்துமார்க்கம் எப்பொழுது பிரசங்கிக்கப்பட்டது என்பது காலத்தில் கரந்து மறைந்த விஷயம். எனினும் மக்களுக்குள் வழங்கிவரும் பாரம்பரியக் கதையொன்று சிந்தனைக்குரியது. அஃதென்னவெனின், தென்திருப்பேரியில் கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிக் கேள்வியுற்ற சந்நியாசி ஒருவர் அதையாராய்ச்சி செய்யத் தலைப்படவே, அதுகண்ட அவ்வூரார் அவரை ஊரைவிட்டு வெருட்டியடித்தனர். தப்பியோடிய சந்நியாசி வாழையடிக்கு வந்து மறைந்த

வாழ்ந்துவந்த சின்னாட்களில் அவ்வூராரும் அவரைப் புறக்கணிக்கவே, சாண்பத்து கிராமத்துக்கடுத்த உடங்தோப்புக்குள் புகுந்து; ஓங்கி அடர்ந்து வளர்ந்த மரமொன்றின் கீழ் அமர்ந்து, தாமாகக் கண்டறிந்த அருள் நாதரைப் பண்டு 'அத்திமா காத்தான்வேல்' போல் தியானிக்க, அவ்வமயம், மணியோசை காதில் கேட்கவே, "உன்னதமான கடவுளுக்கு இவ்விடத்தில் என்றென்றும் ஆராதனை நடக்கும்," என்று தீர்க்கதரிசனம் கூறிப் போந்தார். அவரைத் தேடி வந்த வாழையடிச் சிறுவர் இவ்வாக்கைக் கேட்டும் இதைக் கேலிக்கூத்தாய்க் கருதினர் என்பதாம்.

**பாரம்பரியம்**

பாரம்பரியமாகச் சொல்லப்படுகிற மேற்சொன்ன சரித்திரத்தின் உண்மை எவ்வாறாயினும், உடைமரங்கள் நின்ற அவ்விடமே கடந்த 150 வருஷங்களாகப் பரிசுத்த தேவனை நாசரேத்தூரார் ஆராதிக்கும் பரிசுத்த ஆலயம் நிற்கும் புண்ணிய பூமியாகும்.

சாண்பத்துக் கிராமத்தார் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும் கால் முதன் முதல் எண்மரே அவ்வண்ணம் செய்தனர். இவ்வெண்மரோடும் அவர்கள் குடும்பத்தினரான முப்பத்தொன்று ஆன்மாக்களும் ஆயத்தக்காரரானார்கள். பின் சின்னாளில் ஊராரனைவரும் மெய்யான தேவனை ஒருங்கே அண்டிக்கொண்டு 'வேதம்படிக்க'லானார்கள் என்றும் எண்ணப்படுகிறது.

இனி இவ்வித மாறுதல் ஏற்பட்ட காலம் எது என்பதை ஆராய்வது அவசியம்.

**காலம்**

1890-ம் வருஷத்து M. D C. ரிப்போர்ட்டில் 168-ம் பக்கத்தில் காணப்படுகிற குறிப்பு பின் வருமாறு: "இந்த [நாசரேத்] மிஷன் தென் இந்தியாவின் மாபெரும் மிஷனெரியான சங்கை ஷ்வார்ட்ஸ் ஐயரால் அனுப்பப்பட்ட நாட்டையரான அடைக்கலம் என்பவரால் 1798-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்ப முதலே இவ்வூரார் அனைவரும் கிறிஸ்தவர்கள் தாம்" என்பது. ஆனால் இக்குறிப்பு இவ்வாறே ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. ஏனெனில் இங்குக் குறிக்கப்பட்ட அடைக்கலம் ஐயர் ஷ்வார்ட்ஸ் ஐயரால் அனுப்பப்பட்டவராகார். சங்கை ஷ்வார்ட்ஸ் நமது நாட்டுக்கு அனுப்பின ஐயன்மார் பாளையங்கோட்டைக்கு 1783-ம் வருஷம் வந்து அவ்வருஷம் ஜூலை 29-ம் தேதி முதல் செப்டம்பர் 23 வரை அங்கு தங்கி ஊழியம்செய்த கனம் ராயப்பன் ஐயரும், பாளையங்கோட்டையின் முதல் குருவான கனம் சத்தியநாதன் ஐயருமே ஆவர். மேலும், அடைக்

கலம் போதகர், ஷ்வார்ட்ஸ் ஐயர் மரித்துச் சுமார் 30 வருஷங்களுக்குப் பின்தான் [1828-ம் ௵ முதல் 1831-ம் ௵ வரை] பாளையங்கோட்டையில் ஊழியம் செய்தார். அவர் குருப்பட்டம் பெற்றதும் கனம் போஹ்ல் ஐயரிடமேயன்றி சங்கை ஷ்வார்ட்ஸிடமன்று. அவர் 1798-ல் இந்நாட்டுக்கு வந்ததும் இல்லை. ஒருவேளை அவர் ஒரு பிரசங்கியாராக 1798-ம் வருஷத்தில் நாசரேத் வந்து சத்திய மார்க்க உபதேசம் கொடுத்திருக்கலாம். ஆனால், நாம் அப்படி எண்ணவும் (போதிய) ஆதாரமெதுவுமில்லை. எனினும், அவ்வறிக்கையில் கண்ட அடைக்கலம் போதகர் என்பது சத்தியநாதனையர் என்ற பெயருக்குப் பதிலாகத் தவறுதலாய் எழுதப்பட்டதெனக் கொள்ளல் வேண்டும். அப்படிக் கொள்ளின் 1798-ல் சாண்பத்துக் கிராமத்தார் சத்தியநாதனையரால் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்க்கப்பட்டனர் என்று அனுமானிக்க இடமுண்டு. ஆனால் 1800-ம் வருஷ முதல்தான் சாண்பத்து ஓர் கிறிஸ்தவ கிராமமாயிற்று என்பதற்குப் பல சான்றுகளுள.

**முதல் ஆலயம்**

1816-ம் வருஷம் நவம்பர்௴ முதல் 1821 மார்ச் வரை பாளையங்கோட்டையில் சர்க்கார் குருவாயிருந்த கனம் ஜேம்ஸ் ஹாப் (Rev. James Hough) ஐயர் 1820-ம் வருஷம் S. P. C. K. சங்கத்தாருக்கு எழுதிய கடிதம் ஒன்று 1839-ம் வருஷத்து M. D. C. ரிப்போர்ட்டில் [73-ம், 74-ம் பக்கங்களில்] வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர் திருநெல்வேலி நாட்டில் S. P. C. K. சங்கத்தாருக்குச் சொந்தமான மிஷன் கிராமங்களைப்பற்றி ஓர் விளக்கம் கொடுத்துள்ளார். அவர் தரும் குறிப்புப் பின்வருமாறு: “ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயமுண்டு. இரண்டு ஊரைத் தவிர [பாளையங்கோட்டை, முதலூர்] மற்றவைகளிலெல்லாம் களிமண் செங்கலால் (சுடாத செங்கல்) தான் ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. [இவ்விரண்டு ஊர்களில் மட்டும் சுடு செங்கலால் கட்டப்பட்டிருந்தன என்பது அனுமானம்] கூரைகள் பனையோலையால் ஆனவை. இவ்வாலயங்கள் கட்டப்பட்டுள்ள இடங்கள் நவாபின் சர்க்காரால் 1800-ம் வருஷம் கொடுக்கப்பட்டவை. இக்கட்டடங்களில் அநேகம் அவ்வருஷமே கட்டப்பட்டவையாம். நாசரேத்தில் ஷ்வார்ட்ஸின் மாணவரான விசுவாசநாதன்...... குருப் பணிவிடையாற்றி வருகிறார்” என்பது. இக்கூற்றில் நாசரேத்து ஆலயம் நிற்குமிடம் ‘நவாபு சர்க்காரால் கொடுக்கப்பட்டது’ என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இக்குறிப்பைக் கொண்டு முதல் ஆலயம் கட்டப்பட்ட வருஷத்தைக் கணக்கிடலாம். (கர்நாடக) நவாபு ஆட்சி நமது ஜில்லாவில் 1801-ம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதி வரையே நீடித்தது. அந்நாளில் நவாபு ஆட்சி முடிவுற்று, ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரின் ஆட்சி ஆரம்பமாயிற்று. எனின் நவாபு சர்க்காரால்

நிலம் கொடுக்கப்பட்டதென்பதனால், நாசரேத் முதல் ஆலயம் கட்டப்பட்டது 1801-க்கு முன் என்னலாம். இருப்பின் ஹாப் ஐயரின் கூற்றை ஒப்புக் கொண்டு 1800-ல் சாண்பத்து ஓர் கிறிஸ்தவ கிராமமாயிருந்தது என்பது தெளிவு.

ஆலய பூமி

நவாபு சர்க்காரே இவ்வூர் ஆலய நிலத்தைக் கொடுத்தாரோ என்பது ஒரு கேள்வி. பாரம்பரியச் சரித்திரத்தில், ஊராருக்குச் சொந்தமான உடைமாத் தோப்பில் தியானத்திலாழ்ந்திருந்த சந்நியாசி மணி ஓசை கேட்டுக் கூறிய தீர்க்க தரிசனம் நிறைவேறினது என்பதிலிருந்து, அந்நிலம் யாரிடமிருந்தாவது நாசரேத்தூரார் வாங்கியிருக்கவேண்டும் அல்லது அந்நிலத்தையுடையவர் அதை இனாமாகக் கையளித்திருக்கவேண்டும் என்றுதான் நாம் எண்ணவேண்டும். ஹாப் ஐயர் 'நவாபு சர்க்கார் கொடுத்தார்கள்' என்று கூறும் பொழுது, நாசரேத்தை மட்டும் குறிப்பிடாமல், மற்ற கிறிஸ்தவ கிராமங்களையும் சேர்த்திருப்பதால் நாசரேத்தின் விஷயத்தை அவர் தனித்திடாமல் மற்றவற்றோடு பொதுப்பான்மையில் சேர்த்துக் கொண்டு விட்டார் என்று கொள்க.

ஹாப் ஐயர் ஆலயத்தைப்பற்றிக் கூறியதற்கிணங்க 1806-ம் வருஷம் பெப்ருவரி மாதம் 17-ம்வ ரிங்கல்டாப் என்ற மிஷனெரிப் பெரியார் நாசரேத்துக்கு வந்து, *"இங்கு களிமண்ணால் கட்டப்பட்ட ஒரு அழகிய சிறு ஆலயம் உளது. அதன் கூரை பனையோலைகளாலானது. மாலை ஆராதனைக்குப்பின் ஆலயத்தில் இளைப்பாறினேன்" என்றெழுதினர்

'76 வருஷங்களுக்கு முன்'

மேலும் தற்கால நாசரேத்தூரின் மேன்மைக்குக் காரணஸ்தரான கனம் கனோன் மர்காஷிஸ் ஐயர், தாம் இந்நகரில் ஊழியம் நடப்பிக்க வந்த வருஷத்தில், நாசரேத்தின் நிலையைப்பற்றிக் கூறியவிடத்து "1876-ல் இவ்வூரில் 742 நற்கருணைக்காரருண்டு. இவர்கள் '76 வருஷ' ஊழியத்தின் பலன்" என்று எழுதியிருக்கிறார். இவரது குறிப்பில் 76 என்பது கவனிக்கத்தக்கது. 'சுமார் 70 அல்லது 75' என்று சொல்லாமல் '76' என்று திட்டவட்டமாகக் குறித்தார். மர்காஷிஸ் ஐயரை அறிந்தவர்கள் அவர் எக்காரியத்தையும் திட்டவட்டமாகக் கணிப்பவர் என்றும், திட்டவட்டமாகப் பேசுபவர் என்றும், அவரைக் குறித்துச் சாக்ஷியிடுகின்றனர். 'எழுபத்தாறு வருஷம்' என்று அவர் திண்ணமாகக் கூறினமையின் நாசரேத்தூரார் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட காலம் 1800-ம் வருஷம் என்று ஐயந்திரிபின்றிக் கொள்ளலாம்.

நாசரேத் முழுவதுமாகக் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டது என்பதற்கு ஏற்கெனவே காரணம் காண்பித்தனம். 1890-ம் வருஷ அறிக்

* (P. 143. Caldwell 'Tinnevelly Missions')

கையின் குறிப்பும், நாசரேத்தூரார் நாசரேத் என்ற பெயரைத் தங்கள் ஊருக்குத் தரிக்குமுன் தங்களூரை வடக்கு முதலூர் அல்லது வாழையடி முதலூர் என்றழைத்தனர் என்பதுவுமே அதற்குப் போதிய சான்றாகும். கனம் கால்ட்வெல் அத்தியக்ஷாவர்களும் இக்கருத்தே கொண்டுள்ளார்.†

சாண்பத்து என்னும் கிராமம் வடக்கு அல்லது வாழையடி முதலூராகிப் பின் நாசரேத்தானது என்பது சரித்திர ரூபகாரமான விஷயமெனினும், எவ்வருஷம் நாசரேத் எனும் புனித நாமம் சூடிற்று நாசரேத் என்பது திட்டவட்டமான ஆராய்ச்சிக்குட்படாத காரியமாகும். இது விஷயமாய் மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷாவர்கள், "1804-ம் வருஷத்துக்கு முன் நாசரேத் என்றொரு கிராமம் இருந்ததாக எவ்விதக் குறிப்பும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதற்குச் சமீபத்திலுள்ள வாழையடியைப்பற்றிப் பல குறிப்புகள் கிடைத்துள்ளன," என்று கூறி அதே கூற்றில் "முதலிலிருந்தே 'நாசரேத்' என்ற பெயராலேயே மிஷன் சடிதங்களில் இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. 'வாழையடி—முதலூர்' என்ற பெயர் நாசரேத் என்ற பெயருக்கு முந்தியதாகவிருந்திருக்க வேண்டும்." என்றும் எழுதுகிறார். [P. 119 – Caldwell's Tinnevelly Missions] இக்குறிப்பினின்று அத்தியக்ஷர் 'நாசரேத்' என்ற பெயர் 1804-ல் தான் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கருத்துக் கொள்வது காண்க.

ஆனால் 1803-ம் வருஷம், கனம் ஜான்கோலாப் ஐயர் சாண்பத்துக் கிராமத்துக்கு மேற்சேயுள்ள மிஷன் பூமியை வகுத்தான்குப்பம் சிவகுரு நாடார், மாசில்லாமணி நாடார் வகையறாக்களிடமிருந்து ரூ. 28 பணம் ஒன்றுக்கு விலைக் கிரயமாய் வாங்கிய கிரயப்பத்திரத்தில், "வாழையடி நாசரேத்தூர்" என்ற தலைப்புப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. [அப்பத்திர நகல் ஒன்று இப்புத்தகத்தில் வேறொரு பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது]* எனின் 1803-ம் வருஷத்திற்குள் 'நாசரேத்' என்ற பெயர் வழக்கத்திலாயிற்று என்பதவும், மிஷன் பூமி வாங்கப்படுமுன்பே அப்பெயர் வழங்கப்பட்டமையால், புதிதாய் வளர்ந்த மிஷன் கிராமமன்று, பழைய சாண்பத்தே நாசரேத்தாயிற் றென்பதும் தெளிவு. மற்றும் 1802-ம் வருஷம்முதல், மிஷனெரி கனம் C. W. கெரிக் ஐயர் நமது ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து 5000க்கு அதிகமானவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்த காலை, நாசரேத்துக்குச் சமீபமான வாழையடியில் 23 பேருக்கு 1803 ஜூன்மீ 4-ம் தேதியில் ஞானதீக்ஷை கொடுத்தார். [ரிக்கார்டுகள்படி இதுவே வாழையடிச் சபையின் பிறந்த நாள்] அவ்வமயம் பக்கத்திலுள்ள நாசரேத்துக்கு அவர் விஜயம் செய்திருப்பார் என்பதற்குச்

† (P. 119. – Caldwell's Tinnevelly Missions.) * P. 13.

சந்தேகமில்லை. எனினும் அவர் வந்ததாகக் குறிப்பெதுவும் கிடையாது. 'நாசரேத்' என்ற பெயருடன் அவ்வூர் வழங்கியிருப்பின் கட்டாயம் குறிப்பு இருந்திருக்கவேண்டும். ஆனதுபற்றி 1802-ம் வருஷம் அப்பெயர் வழக்கத்திலில்லை என எண்ணலாம். எனினும் அவ்வெண்ணத்துக்குச் சரியான முகாந்தரமாவது ஆதாரமாவது கிடையாதுதான். இருந்தபோதிலும் எல்லாவற்றையும் சீர்தூக்கியாராயுங்கால் 1802-க்கும் 1804-க்கு மிடையில் 1803-ம் வருஷத்தில் அப்பெயர் கனம் சத்தியநாதனையரால் கொடுக்கப்பட்டது என்று தீர்க்கமாய்க் கூறலாம். இக்கூற்றுக்குத் துணிபியாது என்று நேயர் கேட்பின் நியாயமே. 1800 முதல் 1803 வரை ஞானஸ்நானம் பெற்றோரின் பெயர்களடங்கிய ஜாபிதாவில் 1802 அக்டோபர் 1-ம் தேதியில் கெரிக் ஐயரின் சுற்றுப்பிரயாணத்தின் போது 'அச்சம்பாடு என்ற பேத்லகேமில்' அப்புவிளை, ஆவணங்காடு, பேத்லகேம் கிராமங்களைச் சேர்ந்த 203 ஆன்மாக்கள் இத்தீக்ஷை பெற்றதாகக் காண்கிறோம். அச்சம்பாட்டில் கிறிஸ்தவக் குடியேற்றத்துக்குப் பேத்லகேம் என்ற பெயர் கொடுத்தது யார்? அம்மாதம் 15-ம் 'எருசலேமில்' பல கிராமங்களைச் சேர்ந்த பதினொருவரும் பள்ளிப்பத்தைச் சேர்ந்த ஒன்பதின்மரும் ஞானஸ்நானம் பெற்றனர். பள்ளிப்பத்தினருகில் கிறிஸ்தவர்கள் வாசஸ்தலமான குக்கிராமம் 'எருசலேம்' என்ற பெயரை அந்நாளுக்கும் முன்பே பெற்றுள்ளதெனில் அவ்வுயர் நாமத்தை அது யாரிடமிருந்து பெற்றது? இயேசு ரக்ஷகரின் பிறப்பிடத்தின் திருநாமமும், அவர் இரக்ஷிப்பை நிறைவேற்றி உயிர்த்தெழுந்து பரத்துக்கேறி மகிமையடைந்த பதியின் பரிசுத்த பெயரும் இவ்விரு கிறிஸ்தவக் குடியேற்றங்களுக்கும் தீர்க்கதரிசன நோக்குடன் யார் கொடுத்தாரோ அவரே, ஆண்டவரின் அலுவலகமாம் நாசரேத்தின் நாமத்தை, கிறிஸ்துவின் 'தொழிற்சாலை' யாகக்கூடிய மேன்மை சாண்பத்துக்குக் கிட்டும் எனத் தீர்க்கமா யறிந்து அதற்குத் தரித்தார் என்று கொள்ளலாமன்றோ? முதல் கிறிஸ்தவக் கிராமம் முதலூர் என்ற பெயரை 1799-ல் பெற்றபின், சத்தியநாதனையரே 1800 அல்லது 1801-ல், ரக்ஷகரின் அவதாரத்தில் அவர் வந்துதித்த பெத்லகேம்பதியின் பெயரையும், அவதார நோக்கு நிறைவேறிய எருசலேநகர் நாமத்தையும் பெத்லகேமுக்கும் எருசலேமுக்கும் தந்து, 1802-க்குப்பின் தான் சாண்பத்தினர் ஞானஸ்நானம் பெற்றாராதலின், அவர்தம் கிராமத்திற்கு அருள்நாதனின் அவதார வாழ்க்கையில் மூன்றும் முக்கிய ஸ்தலமான நசரையின் நாமத்தை நல்கினர் என நவிலின் பொருந்தாதா? பொருந்துமெனின் 1802—1803-ல் சத்தியநாதனையரே இப்பெயர்தரக் காரணர் என்று கொள்வம்.

'நாசரேத்' என்ற பெயர்

இவ்விதமாய் சத்தியநாதனையர் பிரயாசத்தின் பயனாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சாண்பத்து கிராமத்தினருக்கு, அக்காலத்தில் மற்றக் கிராமங்களிலுள்ள கிறிஸ்தவர்களுக்கேற்பட்டது போன்ற துன்பமுண்டாயிற்று. இச்செய்தி கனம் கெரிக் ஐயரவர்கள் கடிதங்களில் காணக்கிடக்கிறது. அக்கடிதங்கள் திருநெல்வேலி நாட்டில் கிறிஸ்தவர்களுக்குண்டான துன்பங்களுக்கு நிவாரணம் தேடி கனம் ஐயரவர்கள் திருநெல்வேலியின் கலெக்டரான S. R. லிஷிங்டன் துரைக்கு எழுதினவைகள். இவைகளினின்று கிறிஸ்தவர்களுக்குண்டான உபத்திரவம் அதிகமாய் சர்க்கார் அதிகாரிகளிடமிருந்தே என்று காணலாம். கிறிஸ்தவர்களிடமிருந்து அநியாய வரி, இரட்டிப்பு வரி முதலியவை தண்டமாக வசூலிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் இரட்டிப்பு வரி கொடுக்க மறுத்தால் அவர்கள் சேவகர்களின் அடிதடிகளுக்குட்படுத்தப்பட்டார்கள். கலெக்டர் முதலிய உயர்ந்த அதிகாரிகளிடம் பொய்ப் பிராதுகள் கொடுக்கப்பட்டமையால் ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு நீதி கிடையாமல் போயிற்று. இவ்வித நிலைமையில் கெரிக் ஐயர் தம்மாலியன்ற மட்டும் கிறிஸ்தவர்களுக்குத் தஞ்சாவூரிலிருந்தே உதவிபுரிந்து வந்தார். கலெக்டருக்கும் அவருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தினால் மிகுதியான நன்மை கிறிஸ்தவர்களுக்குக் கிடையாது போயினும், சிறிது காலமாயினும் உபத்திரவம் நீங்கினது. எனினும், கெரிக் ஐயர் 1803-ம் வருஷம் இறந்து போகவே, மறுபடியும் திருநெல்வேலியில் கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்படுகிறார்கள் என்ற ஓலம் தஞ்சாவூரை எட்டினது. எனவே கனம் ஜாண் கஸ்பர் கோலாப் ஐயர் திருநெல்வேலிக் கண்காணிப்பை ஒப்புக்கொண்டு, உடனேயே திருநெல்வேலி வந்து சேர்ந்தார்.

துன்பம்

கெரிக் ஐயர் இறந்த பின்னர் கோலாப் ஐயர் திருநெல்வேலிக் கண்காணிப்பை மேற்கொண்டு சத்தியநாதனையர் மூலமாய் சாண்பத்துக் கருகில் ஓர் நிலத்தை வாங்கினார். அவருக் கெழுதிக் கொடுக்கப்பட்ட நிலக்கிரய தஸ்தாவேஜின் நகல் பின்வருமாறு.'

வாழையடி நாசரேத்தூர்
சவாது, இதுக்கு
அகில தஞ்சாவூரிலிருக்கும்
சவாது.

சாலிவாகன சகாப்தம்; கரு எா உ௰௧ (1721-க்கு) வருஷம், செல்லா னின்ற கொல்லம் ௯ ௭௰௮ (978) வருஷம் ஆனிமீ 29உ ஆதித்த வாரம் (ஞாயிறு) உத்தா நக்ஷத்திரம் அமிர்த யோகமும், சிங்க லக்கணமும் பெற்ற சுபயோக, சுபதினத்தில் நாட் செய்த சோம வாரம் குடியேற்று

**முதல் மிஷன் பூமிக்கிரயப் பத்திரம்**

பட்டயம் எழுதிக்கொடுத்த காரணமாவது, சோளமண்டல நாடு தஞ்சை நகர் நாட்டிலிருக்கும் சுபமங்கள சுபஸ்திரிபன், மகா மண்டலகான் அறிய தவவி, பாடனலான விக்குத, புனித கண்டன் மூலரா கண்டன் முத்தமிழ் நாடன் அசுபதி, கேசபதி, நளபதி, நாகலோக கண்டன், கண்ட நாடு கொண்டு, கொண்ட நாடு, கொடாததான பாண்டி மண்டலத்தார் வணச்சாரியன் சோள மண்டலத்தவ ஆச்சாரியன் தென் மண்டலப் பிரசண்ட பிரசண்டனஸ்திர் ஈளம், மூளம், கொங்கு, வியாப் பாணமூமற்று, மே மண்டலம் கொண்டு திசைவேட்டையருளிய ராஜாதி ராஜன் ராஜகெஜேந்திரன் ராஜமாத்தண்டன் உரிகோல சுார்தான சம்மஸ்டி நாராயணன் கடல் கலங்கினும், காவேரி வற்றினும், மலை கலங்கினும், மனம் கலங்காத கண்டன் இங்கிலீஷ் கும்பினி ராஜ மானிய ராஜஸ்திரி, பாதிரியாரவர்கள் யோவான் கோலாப் ஐயரவர்கள் சம சமூகத்துக்கு ஆழ்வார்திருநகரி உள்ளூர் சாண்பத்து வாளையடி ஐயம் பெருமாள் நாடான், சிவகுரு நாடான், மாசிலாமணி நாடான், சாமிநாத நாடான், பூமாலை கைலாச நாடான், வேம்பட நாடான், முன்னடிபிர்முத்து நாடான், இவர்கள் உள்ளிட்டார். சோமவாரமும், குடிஎற்றும், விலைமுறி பட்டயம் எழுதிக்கொடுத்த பரிசாவது :—

நாங்கள் குருபாமுடையோராய் ஆண்டனுபவித்து வருகிற எங்கள் நிலைமையான கிணற்றடி பொற்றல் மேட்டுவிளைக்கு, கீழ் எல்கையாவது, போத்திக்கோன்விளைமேல்பொழிக்கு மேற்கு, தெற்கு பொழிக்கும், தெற்கு ஓடைக்கும் மேற்கு கிணறும் கிணற்றடி தோட்டமும் தென் எல்கை. கோவிலுக்கு தெற்கு சாய பருவப்பனைக்கு வடக்கு. மேல எல்கைக்குள் வடலி, ரெண்டு ஒழுகுக்கு கீழ் ஒழுகுக்கு உள்பட கிழக்கும். வட எல்கை, பள்ளன் புதியவன் விளை கட்டக் கட்டுப்பாளைக்கு தெற்கு. இந்த நான்கு எல்கைக்கு உள்பட்டதையும்; புளியம்; வேம்பும், முதுகுபனையும், இள வடலியும், தோட்டமும், கிணறும், தென்னமாமும், மாமரமும், வாரா வாரம் எறிய இடைகருப்புக்கட்டியும், குடிஎற்று, கல்நாட்டு சொல் சுவந்தரமும், சந்து இறைச்சிக் கலச்சோறும் கொட்டு கொலவையும், சர்வ சொல் சுவந்தரமும், கீழ் நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும், புங்கும், பிலாவும், புன்னை, இலுப்பையும், தேங்கும் மற்றும் மரங்களும் நத்தமும், நத்தப்பாடும் ஆமை, தவளை, ஆள்போகும் வழியும் நீர் போகிற காலும், கல்லும் காடும் காஞ்சூரம் குத்தியும் முள்ளும் முசுரும் மூர்க்கம் பாம்பும் சர்வநிதி நிர்ச்சேயமும் எப்பேர்ப்பட்ட சொல் எதார்த்தமுள்பட மண் அடங்க, மரமடங்க, மனையடங்க, பயிரடங்க, விற்றுவிலை பிரமாணம் செய்து கொடுத்தோம்: அன்றூடகம் வழங்கும் செல்மேனி கலியுகாாமன்,

புது மின்னல் ரூபாய் உ௰அ (28 ரூ.) ஊசிக்காந்தம் பணம் க (1) ஆக பொன் இருபத்தெட்டும், பணம் ஒன்றும் ஒரு கிளிக்கட்டாய் இரு கைபட வாங்கி விலை அறவிற்று, பொருறை பற்றி கட்டி எத்திகை செலவா கொண்டு விலையறவிற்று விலைப்பிர்மாணம் செய்துகொடுத்தோம். இங்கிலீஷ் கும்பினி ராஜராஜஸ்திரி பாதிரியாரவர்கள் யோவான் கோலாப் ஐயரவர்கள் ஸைரிஷி குருசாமி அவர்கள் சமசமுகத்துக்கு வாளையடி வகுத்தான் குடல் ஐயம்பெருமாள் நாடான், சிவகுரு நாடான், மாசிலாமணி நாடான், சுவாமினாத நாடான், பூமாலை கைலாச நாடான், முன்னடி பிர்முத்து நாடான், வேம்பட நாடான், உள்ளிட்டாருமென், இது அல்லது வேலை விலையாவன் பொருளாவன பொருள் பாவகிதி பொருட்சில ஓலை காணவும் காட்டவும் கடப்பதன்றியே ஒழுக்காலாவது இருக்காலாவது முக்காலாவது ஓலை குற்றம் எழுத்து குற்றம் சொல் குற்றம் பொருள் குற்றம் வெட்டு செதுக்கு வரி மாராட்டம் வாசகப்பிளைவரிதுளைத்து எழுதுதல் நெரியல் கிளியல் மற்றும் மேல் குற்றமும் குற்றம் அன்றியே இந்தப்படிக்கே இருபத்தெட்டு பொன், ஒரு பணமும் பற்றிக்கொண்டபடியினாலே இதுவே விலை முறியாகவும் பணப்பற்று சீட்டாகவும் கட்டிக் கொள்வார்களாகவும்.

இந்த குடிவத்து விளக்கு கட்டுக் குத்தகையாய் வருஷம் ஒன்றுக்கு பதினைந்து பணவீதம் பொருப்பு கொடுத்து ஆதிசந்தரகாலம், சந்திர பிரவேசமுள்ள வரைக்கும் கையாட்களை பரிபாலனம் பண்ணி சுகமே கையாடி கொள்வார்களாகவும். இப்படி சம்மதித்து இந்த சொத்து வாரமும் குடி வத்துக்கும் பட்டயம் எழுதிக்கொடுத்தேன் இங்கிலீஷ் கும்பனி மகயோவான் கோலாப் ஐயர் குருசாமி அவர்கள் சம சமுகத்துக்கு வாளையடி வகுத்தான்குடல் ஐயம்பெருமான் நாடான், சிவகுருநாடான், மாசிலாமணி நாடான், சுவாமினாத நாடான், பூமாலை கைலாச நாடானுகிய கருத்தக்கண்ணு கைலாச நாடான், வேம்பட நாடான், முன்னடி பிர்முத்து நாடான் உள்ளிட்டோன்.

இப்படிக்கு,

முன்னடி நாடான் மகன் பிர்முத்து நாடான்

| | |
|---|---|
| மாசிலாமணி நாடான் | உள்ளிட்டார் |
| சுவாமிநாத நாடான் | உள்ளிட்டார் |
| கைலாச நாடான் | உள்ளிட்டார் |
| வேம்பட நாடான் | உள்ளிட்டார் |

வன்னிய நாடான் மகன் நாராயணனுகிய நல்லதம்பி

இந்த முறி எழுதின அறிவு சுவாமிநாத நாடான் அறிவேன். தென் திருப்பதி கைலாச நாடார்.

இந்த குடியேற்ற பட்டயம் எழுதினேன் வாளையடி தனுபதி தக்ஷணாமூர்த்தி.''

இத்தஸ்தாவேஜினின்று நாம் சில முக்கிய குறிப்புகளைக் காணலாம். அவை பின்வருமாறு:

1. 1803ம் வருஷம் ஜூலை 13ம் தஸ்தாவேஜு எழுதிக் கொடுக்கப்பட்டது.

2. எழுதிக்கொடுத்தவர்கள் ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த சாண் பத்து கிராமம் வாழையடியைச் சேர்ந்த ஏழு பேர்.

3. கிரயம் ரூ. 28ம் பணம் ஒன்றும் மட்டும்.

4. எழுவரும் வகுத்தான் குப்பத்தில் குடியிருந்தனர்.

5. கோலாப் ஐயரவர்களே கையெழுத்திட்டார்கள்.

இதன் பின்னால் கனம் சத்தியநாதனையர் பாளையங்கோட்டையை விட்டுவிட்டு வேலை ஓய்ந்து இளைப்பாறும் நோக்கமாய்த் தஞ்சாவூருக்குச் சென்ற 1805ம் வருஷம் வரையும் சில குறிப்புக்களே நமக்கெட்டியுள்ளன.

**வாழையடி**

1803-ம் வருஷம் வாழையடியிலுள்ள 23 நாடார்கள் ஜூன் 4-ம் இந்து மார்க்கத்தை விட்டுவிட்டுக் கிறிஸ்துநாதரை ரக்ஷகராக ஏற்று சத்திய நாதனையர் மூலமாய் ஞானதீக்ஷைக் குட்பட்டிருந்தார்கள். அதன் பின் மறுபடியும் அவரிடமே 1804-ம் வருஷம் அவ்வூரில் 25 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். வாழையடிச் சபையில் ஊழியம் செய்யவென்று மதுரநாயகம் பிள்ளை என்ற ஒருவரை உபதேசியாராக நியமித்தார். ஆனால் மதுரநாயகத்துக்கு இங்கு வசிக்க ஏற்ற வசதியில்லாமையால் பாளையங்கோட்டையிலேயே இருந்துகொண்டு ஒவ்வுநாள் தோறும் இங்கு வந்து போவது வழக்கமாயிற்று. இதுபற்றி எழுதின கடிதத்திலேயே [Letter dated 29th Jan. 1805 from Sathianathan to Kohloff] "வாழையடிக்குச் சமீபத்திலுள்ள நாசரேத்தில் ஒரு சிறு ஜெபவீடு உண்டு. தேவபிரசாதம் பிள்ளையை இங்கு உபதேசிகராக நியமித்திருந்தேன். ஆனால் அவர் சரியாக நடந்து கொள்ளாததால் அவரைக் சரைச்சுத்துக்கு மாற்றிவிட்டு நாட்டையரின் [நாட்டையர் என்ற வார்த்தை தம்மையே, அதாவது சத்திய நாதனையரையே குறிக்கும்] மருமகன் ஞானமுத்துப் பிள்ளையை நியமித்திருக்கிறேன்'' என்றெழுதுகிறார். இன்னும் இவ்விடத்தில் பள்ளிக்கூடம் அமைக்கப்படவில்லை என்பதும் நாம் அக்கடிதத்திலிருந்தறியக்கூடியவோர் குறிப்பு.

1804-ம் வருஷம் தான் முதன் முதலாக நாசரேத் என்ற பெயர் மிஷன் ரிக்கார்டுகளில் காணப்படுகிறது. அவ்வருஷத்தில் "நாசரேத் என்றவூரில் 39 பேருக்கு"ச் சத்தியநாதனையர் ஞானஸ்நானம் கொடுத்த தாக மிஷன் ரிக்கார்டுகளில் எழுதப்பட்டிருக்கிறது. இதுவே இவ்வூரில் நடைபெற்ற முதல் ஞானஸ்நான ஆராதனை.

1805-ம் வருஷம் சத்தியநாதனையர் திருநெல்வேலியை விட்டுத் திரும்பினர். நாசரேத் சத்தியநாதனையருக்கு என்றும் கடமைப்பட்ட தாதலால் இவண் அவரது வாழ்க்கைக் குறிப்புக்களில் சிலவற்றைக் கவனிப்பது தகும்.

**வாழ்க்கைக் குறிப்புகள்**

இவர் பிரசங்க சமர்த்தர். குருப்பட்டாபிஷேகச் சமயத்தில் இவர் செய்த பிரசங்கம் மிக்வும் வல்லமையுடையதாயிருந்தது. ஷ்வார்ட்ஸ், கோலாப் என்ற மிஷனெரிமார் அப்பிரசங்கத்தை மிகவும் பாராட்டி அதை ஆங்கிலத்தில் திருப்பி இங்கிலாந்திலுள்ள S. P. C. K. சங்கத்துக்கு அனுப்பி அச்சிட்டார்கள். அச்சமயத்தில் கோலாப் ஐயர் சத்திய நாதனையரைப்பற்றிக் கூறின வார்த்தைகள் இங்குத் தமிழில் மொழி பெயர்க்கப்படுவது நலம் என்றெண்ணுகிறேன். அவை "அநேகர் தங்கள் பாவ ஜீவியத்தைவிட்டுத் தேவனண்டை திரும்புவதற்கேதுவாய்க் கடவுள் இந்தப் 'பாத்திரமிக்க' மனிதனின் உழைப்பை ஆசீர்வதித்திருக்கிறார். சர்வ வல்லவரின் கரங்களில், அவருடைய இராஜ்ய விருத்திக்கேதுவான ஒரு உத்தம கருவியாக இவர் விளங்குவாரென்பதுபற்றிச் சந்தேகமெதுவுமில்லை" என்பவைகளே.

S. P. C. K. சங்கத்தாரும் அப்பிரசங்கத்தை அச்சிட்டு வெளியாக்கி, "இந்திய சுதேசிகள் குருத்துவ ஊழியத்தில் மிகுந்த பயன் பெறத்தக்கதாக உழைக்கக்கூடிய சக்தியுடையவர்கள் என்பதற்கும், இந்தியாவில் மிஷனெரி மாரின் பிரயாசங்கள் வீண்போகவில்லை என்பதற்கும் இப்பிரசங்கம் அத்தாட்சியாகும்" என்று அதற்கு முகவுரை யெழுதி, முடிவுரையாக "எவ்வளவு காலம் சங்கத்தார் மிஷனெரிமாரை இந்தியாவுக்கனுப்பக்கூடும் என்பதும், எவ்வளவு காலம் இந்தியாவின் காரியாதிகள் அதற்கு அனுகூலமாயிருக்கு மென்பதும், நாம் கணக்கிடக்கூடாத காரியங்கள். இந்தியாவில் நாம் சுவிசேஷத்தை நிலைநாட்ட எண்ணினல் ஐரோப்பாவின் யுத்தங்களும் கலகங்களும் அப்புனித முயற்சியைத் தடுத்துவிட இடம் தாலாகாது. ஆகையால் உடனே சுதேசிகளுக்கு, சங்கத்தாரின் ஆதரவின்றி நிலைநிற்கக் கூடிய ஒரு திருச்சபையைப் பண்படுத்திக் கொடுப்பது நமது கடமை. உதவி அத்தியக்ஷர்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாய் டீக்கன்மாரும் குரு

மாரும் அப்போஸ்தல முறைப்படி பட்டாபிஷேகம் பெற்றுத் திருச்சபையை நிலைநாட்டச் செய்யவேண்டும். அதினல் தாய்ச் சங்கத்தாராகிய நம்முடன் அவர்களுக்கு எவ்விதத் தொடர்புமில்லாமல் போய்விட்டாலும் காரியமில்லை'' என்று எழுதினர்கள். இந்த வசனம் வாசிப்போரின் சிந்தனையைத் தூண்டிவிடும். தென்னிந்தியாவின் கிறிஸ்து மார்க்கம் தன் இளம்பிராயத்திலேயே அத்தியக்ஷர்களைப் பிறப்பிக்கத் தக்கது என்று தாய்ச் சங்கத்தாரால் எண்ணப்பட்ட தெனினும் தன்னிலிருந்தே அத்தியக்ஷர் ஒருவரைப் பிறப்பிக்க அது 1912-ம் வருஷம் வரை காத்திருக்கவேண்டியதிருந்தது ஓர் விந்தையே.

சத்தியநாதனையர் தம் பட்டாபிஷேகத்துக்கு முன் 5 வருஷங்களாக 1786 முதல் 1790 வரைப் பாளையங்கோட்டையில் சங்கை ஷ்வார்ட்சுக்குக் கீழ்ப்பட்ட ஓர் உபதேசிகராக விருந்தார். 1790-ல் பட்டம் பெற்றபின் 1791 முதல் 1805 வரை பன்முறை நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து மார்க்கத்தை ஸ்தாபித்தார். பல கிராமங்களில் கிறிஸ்து மார்க்கம் ஸ்தாபிதமாயிற்று. விசேஷமாய் சத்தியநாதனையரின் பிரயாசத்தினல் அவர் காலத்தில் திருநெல்வேலி நாடார்களிடை கிறிஸ்து மார்க்கம் வேரூன்றிற்று. மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷாவர்கள் இது பற்றி ''ஜெனிக்கேயுடன் சேர்ந்து பாளையங்கோட்டையின் சுற்றுப் புறங்களில் கிறிஸ்து மார்க்கம் பரவ உழைத்ததுமல்லாமல், ஜெனிக்கே திருநெல்வேலியை விட்டுப் போனபின், நாடார் என்ற ஜாதியாரினிடை கிறிஸ்து மார்க்கம் நிலைநாட்டப்படவும், முக்கியத்துவம் வாய்ந்த நாசரேத், முதலூர் என்ற கிறிஸ்தவ கிராமங்கள் ஸ்தாபிக்கப்படவும் காரணஸ்தராயிருந்தமையால் ஆதி திருநெல்வேலி திருச்சபைச் சரித்திரத்தில் அவரது பெயர் கண்ணியம் பெற்றுள்ளது' என்று எழுதுகிறர்.

திருநெல்வேலியில் அவர் ஊழியம் செய்துவந்த காலத்தின் பின்பாகத்தில் அவருக்கும் கோலாப் ஐயருக்கும் பல விஷயங்களில் மனஸ்தாபங்கள் ஏற்பட்டதுண்டு. ஆனல் அவர் தஞ்சை திரும்பியபின் இருவரும் மறுபடியும் சிநேகிதரானர்கள். தாம் வேலை ஓய்ந்து இளைப்பாற வந்திருந்தும், எந்த நேரம் கோலாப் ஐயர் விரும்பினலும் அந்த நேரங்களில் ஆராதனைகள் நடத்தியோ பிரசங்கங்கள் செய்தோ ஐயருக்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்து வந்தார். அவர் மிகவும் கண்டிப்புள்ளவராயிருந்தார் என்றும் திருநெல்வேலியிலிருக்கும் காலத்தில் தமக்குட்பட்ட ஊழியக்காரரிடத்தில் கடினமுள்ள எஜமானக நடந்துகொண்டார் என்றும் கோலாப் அவரைப் பற்றி எழுதியிருந்தார். ஆனல் பின்னல் மிகுந்த சாந்த சொரூபியாக மாறிவிட்டார்.

1810-ம் வருஷத்தில் தாம் நேசித்த திருநெல்வேலிச் சபைகளை மறு படியுமோர்முறை சந்தித்துத் திரும்பிச்சென்று, 1815-ம் வருஷம் தம்மு டைய 62-ம் வயதில் நித்திய இளைப்பாறுதலுக் குட்பட்டார்.

ரிக்கார்டுகளிலிருந்து, ஐயரவர்களுக்கு இரண்டு குமாரத்திகளும் ஒரு குமாரனும் இருந்தார்கள் என்றும், இவருடைய குமாரன் முதலூரில் உப தேசியாராக இருந்தார் என்றும், மூத்த மருமகன் நாசரேத்திலும், இளைய மருமகன் நடுவக்குறிச்சியிலுள்ள பெத்தானியாவிலும் உபதேசிமார்களாகச் சில காலம் வேலை செய்தார்கள் என்றும் நாம் அறியலாம். இவை தவிர இவர்களது குடும்ப வரலாற்றைப்பற்றி வேறொன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை.

மிகுந்த தேவ பக்தியும் ஆத்தும வாஞ்சையும் சுவிசேஷ ஊழியப்பற்றும் உடையவராகத் தம் பிள்ளைகளையும் அவ்வூழியத்திற்கே அர்ப்பணம் செய் தார். முதலிலிருந்தே இவர்போன்ற பக்தர்கள் பலர் நாசரேத்தில் ஊழியம் செய்தது கடவுள் நாசரேத் மீது கொண்ட அன்பின் காரணத்தாலேயே என்போம்.

---

# அத்தியாயம் 2

## நாசரேத்தின் இளம்பிராயம்

## 1805 — 1829

உவில்லியம் தோபியா ரிங்கல்டாப் (William Tobia Ringeltaube) ஜெர்மனி தேசத்தின் மாகாணங்களில் ஒன்றான ஸைலீஷியாவில் ஷிடெல்விட்ஸ் (Scheidelwitz) என்ற வூரில் 1770-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ம்உ பிறந்தார். ஹலே (Halle) பட்டணத்தில் கல்விபயின்று தம்முடைய 26-ம் வயதில் வெர்ணிகெரோட் நகரத்தில் குருப்பட்டாபி ஷேகம் பெற்றார். பின் 1797-ம் ஆண்டில் S. P. C. K. சங்கத்தின் மிஷனெரியாகக் கல்கத்தா வந்து 1799 வரை ஊழியம் செய்து, சம்பளம் போதாது என்று கூறி வேலையை ராஜினமாச்செய்து, சுயதேசம் திரும்பினர். ஆனலும், சீக்கிரமே இங்கிலாந்து சென்று அங்கு 4 வருஷங் களைப் பின்னிட்டு, 1803-ம் வருஷம் லண்டன் மிஷன் சார்பில் மிஷனெரி யாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்து, 1803 முதல் 1806 வரை தரங்கம் பாடியில் வதிந்து தமிழ் பாஷையைக் கற்றார்.

ரிங்கல்டாப் ஐயர்

1805-ம் வருஷம் சத்தியநாதனையர் தஞ்சைக்குச் சென்ற பின், தரங்கம்பாடி முதல் கன்னியாகுமரி வரை பரந்துள்ள S. P. C. K. மிஷனை மேல் விசாரணை செய்வது கோலாப் ஐயரால் கூடாதிருந்தது. ஆகையால் அவர் S. P. C. K. சங்கத்தாரிடம் புதிய மிஷனெரிமாரை அனுப்ப வேண்டும் என்று எவ்வளவோ கேட்டுப்பார்த்தார். ஆனால் அச்சங்கத்தாரால் அது கூடாது போயிற்று. இச்சமயத்தில் ரிங்கல்டாப் 'எங்கே பயனுண்டோ அங்கே தாம் ஊழியம் செய்யப் பூரண சுயாதீனமுடையவர்' என்று தம்மைக் குறித்துக் கூறிக்கொண்டதால், திருநெல்வேலியிலுள்ள S. P. C. K. சபையை மேல் விசாரணை செய்வதில் தமக்கு உதவி புரிய வேண்டும் என்று கோலாப் அவரைக் கேட்டுக்கொண்டார். ரிங்கல்டாபும் அதற்குச் சம்மதித்து 1806-ம் வருஷம் பெப்ருவரி 11-ஆ பாளையங் கோட்டை வந்து சேர்ந்தார். திருநெல்வேலியில் 1810-ம் வருஷம் வரை அவர் செய்த ஊழியத்தை இங்கு விவரணம் செய்யாமல் இவர் காலத்தில் நாசரேத்தின் சரித்திரத்தைமட்டும் இங்குத் தருவோம்.

அவருடைய நாள்வழிக்குறிப்பேட்டில் 1826 பெப்ருவரி 17-ஆ எழுதிய குறிப்பு பின்வருமாறு: "மாலை வேளையில் [பட்டியிலிருந்து அதாவது பத்மநாபபுரத்திலிருந்து] நாசரேத் வரை வந்தேன். அங்கு மாலை ஆராதனைக்குப்பின் ஆலயத்தில் இளைப்பாறினேன். இது மிஷனுக்குச் சொந்தமான ஒரு கிராமம். இங்குள்ள ஆலயம் களிமண்ணால் கட்டப்பட்டு, பனையோலையால் வேயப்பட்ட ஒரு அழகிய சிறு கட்டடம். இங்குள்ள சபையார் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தார்கள்." அடுத்த நாள், "ஜெபத்திற்குப்பின் ஜனங்களுடன் சம்பாஷித்துப், பின்னால் சில குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு, சிவந்த மணல் திட்டைக் கடந்தேன். இது ஒரு பயங்கரமான வனாந்தரம். இதன் உச்சியிலிருந்து சமுத்திரத்தையும், (அதன் கரையிலுள்ள) திருச்செந்தூர், மணப்பாடு என்ற ஊர்களையும், பாளையங்கோட்டையையும் பார்க்கக்கூடும். பாரம்பரியத்தின்படி ஒரு பெரிய பட்டணம் இம்மணலினடியில் புதைந்து கிடக்கிறது.

நாள்வழிக் குறிப்பு

உஷ்ணம் தாங்கக் கூடாதிருந்ததால், என் குதிரைக்குச் சற்று சௌகரியம் ஏற்படுவதற்காக நடந்து சென்றேன்." என்று வரைந்தார். மார்ச்சு மீ 11-ஆ மாலை அவர் மறுபடியும் நாசரேத்துக்கு வந்தார். அன்றைய குறிப்பில் "நாசரேத் ஒரு 'சமாதான அரணைத்' தோன்றியது. (அடுத்த நாள்) காலையில் 5 மணிக்கே எழுந்து இந்நாட்டு வழக்கப்படி காவல் தலைவனை அழைத்து, கடந்த சில வருஷங்களாக இவ்வூரில் களவு போயிருந்த பொருட்களின் ஜாபிதாவைத் தயாரித்து என்னிடம் கொடுக்க ஏற்பாடு செய்தேன். அவனும் அவ்வாறே ஒப்புவித்தான். ஆனால் பொருட்களின்

கிரயத்தில் ஒரு பாகத்தை மட்டும் தான் கொடுத்தான். மாலையில் பாளையங்கோட்டைக்குத் திரும்பினேன்'' என்றெழுதினர்.

1807-ம் வருஷம் ஆகஸ்டு 15-ல் ஐயர் மூன்றும் விசை நாசரேத்துக்கு விஜயம் செய்தார். இக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு இப்பாகங்களில் கொடுந்துன்பமுண்டாகியிருந்தது. ''புளியங்காடு என்ற கிராமத்தில் சுமார் 20 கிறிஸ்தவர்கள் தங்கள் ஆலயத்தில் ஆராதித்துக் கொண்டிருந்த சமயத்தில், சுமார் 100 இந்துக்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு ஆலயத்துட்புகுந்து, அம்மக்களைப் பெண்ணென்றும் பிள்ளையென்றும் பாராமல் அடித்து, இம்சித்துக், குற்றுயிருடன் போட்டுவிட்டுச் சென்றார்கள். அவர்களில் இரு குடும்பத்தார் பட்ட அடிகளுடன் தப்பியோடி அடைக்கலம் தேடி நாசரேத்துக்கு வந்திருந்தார்கள். இரக்கமற்ற விதமாய் அடிக்கப்பட்ட அவர்கள் அளித்த காட்சி என் மனத்தை உருக்கிற்று. மிகவும் கலக்கத்துடன் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். 'நமது பலவீனங்களில் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார்' என்ற வாக்கியத்தின் மீது சபையாருக்குப் பிரசங்கம் செய்து, கிறிஸ்துவுக்காக அப்போஸ்தலர் சனதரீம் சங்கத்தாரிடம் சவுக்கடிகளையும் நிந்தைகளையும் சகித்தது போல நாமும் அவருக்காக வீரத்துடன் பொறுமை காட்டவேண்டும் என்று ஆறுதல் கூறினேன்'' என்று எழுதுகிறார். கடைசிக் குறிப்பாக ''இன்றைத்தினம் எங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காக உள்ளான மனத்துடன் ஜெபித்தோம்'' என்று வரைந்துள்ளார்.

1807-ம் வருஷத் துன்பம்

ரிங்கல்டாப் ஐயர் இதன்பின் எழுதிய கடிதங்களில் யாதொன்றும் கிடைத்திலது. 1810-ம் வருஷம் இப்பக்தன் திருநெல்வேலிநாட்டை விட்டு நீங்கி 1816-ம் வருஷம் வரை தென் திருவாங்கூரில் மைலாடி என்ற விடத்தில் வசித்து, அந்நாட்டில் இன்றும் செழிப்புடன் விளங்கா நிற்கும் தமிழ்ச் சபைகளை ஸ்தாபித்து, 'தென் திருவாங்கூரின் அப்போஸ்தலன்' என்னும் மங்காப் புகழ் எய்தினர். இடைக்கிடை இவர் நம் நாட்டுக்கு வந்து போவதுண்டு. பின் 1816-ம் வருஷம் மொலுக்காத் தீவக்குச் சென்றவர் திரும்பவேயில்லை. கடலிலோ, வழியில் மலேயா நாட்டிலோ மரணமாயிருப்பார் என்று எண்ண இடமுண்டு.

ரிங்கல்டாபின் கடிதங்களிலிருந்து நாசரேத்தைப் பற்றி நாமறியக் கூடிய குறிப்புகள் ஒரு சிலவே. நாசரேத் அக்காலத்தில் ஒரு குக்கிராமமாயிருந்தது. களிமண்ணாலான ஓலை வேய்ந்த சிற்றாலயம் ஒன்றுண்டு. மக்கள் தங்களுக்குள் மிகுந்த அன்பும் ஐக்கியமுமுடையவராய் வாழ்ந்தார்

கள். மிஷனெரியின் எண்ணத்தில் நாசரேத் ஒரு 'சமாதானம் நிறைந்த மாளிகை.' கிறிஸ்தவர்களுக்குத் துன்பமுண்டான காலத்தில் அது ஒரு அடைக்கலப் பட்டணமாகவும் விளங்கிற்று. நாசரேத், வாழையடி என்ற கிராமங்களோடு நின்றுவிடாமல் சுவிசேஷ ஒளி, புளியங்காடு போன்ற கிராமங்களுக்கும் பரவி அங்கும் கிறிஸ்தவர்கள் காணப்பட்டார்கள்.

ரிங்கல்டாப் ஐயர் போனபின், 1816ம் வருஷம் வரை திருநெல்வேலியில் மிஷனெரிமாரே கிடையாது. எனவே பாதுகாப்பாரும், அரவணைப்பாரும், ஆறுதல் கூறுவாருமில்லாமல் திருநெல்வேலி நாட்டுத் திருச்சபை வலிமை குன்றியது. அக்காலத்தில் பகைவராலுண்டான கொடிய துன்பங்களையும், கொள்ளைநோய், பெருவெள்ளம், பஞ்சம் முதலிய கொடிய சோதனைகளையும் தாங்கவியலாது மிகுதியான கிறிஸ்தவர்கள் மறுதலித்து விட்டார்கள். எனவே சபைச் சரித்திரத்தில் இக்காலத்திற்கு இருண்ட காலம் எனும் பெயர் சூட்டப்பட்டது.

**இருண்ட காலம்**

1810-ம் வருஷம் டிசம்பர் முதல் 1811-ம் ஆண்டு ஏப்ரில் வரை நமது நாட்டில் ஓயாப் பெருமழை பெய்து, நதிகளும் குளங்களும் கரைகளையுடைத்து, வயல்களையும் கிராமங்களையும் அழித்தன. தாமிரவருணியில் மட்டும் 11 இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டனவாம். ஆழ்வார் திருநகரியில் உண்டான உடைப்பின் காரணமாக அப்பட்டணத்தில் 500 வீடுகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழிந்தன. மழை ஓய்ந்ததும் 'திண்டுக்கல்' அல்லது 'கோயமுத்தூர்க் காய்ச்சல்' என்னப்பட்ட விஷக் காய்ச்சல் மக்களைத் துன்புறுத்திற்று. ஆயிரக்கணக்கானவர்கள் இந்நோய்க்கிரையானார்கள். இக்கொடிய உபத்திரவ காலத்தில் தங்கள் 'பழைய தெய்வங்களின கோபத்துக்காளாய் விட்டோமோ' வென்று எண்ணின ஏராளமான கிறிஸ்தவர்கள் மறுதலித்துவிட்டது வியப்பன்று. இதோடு நிலபுலன்கள் அழிந்ததினால் ஆகாரப்பஞ்சமும் சேர்ந்து கூத்தாடியது. தஞ்சாவூரிலிருந்து வந்து ஊழியஞ்செய்து கொண்டிருந்த உபதேசிகரும் பிரசங்கிமாரும் சொந்தநாட்டுக்கோடிவிட்டனர். சுக்கிராமங்களில் கிறிஸ்துவை மறுதலியாமல் மீந்திருந்த மக்கள் முதலூர் போன்ற பெரிய கிராமங்களில் அடைக்கலம் புகுந்தனர். மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷரின் ஆராய்ச்சியின்படி "முதலூர், நாசரேத் போன்ற பெரிய சபைகள் மட்டும் தான் நிலைத்து நின்றன. அஞ்ஞானம் நிறைந்த மற்றப் பெரிய கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சிறு சபைகளில் மிகுதியானவைகளும், கரைச்சுற்றுப் பிரதேசம் என்ற தென் கீழ்க்கடற்கரைப் பிராந்தியத்தில் ஏற்பட்டிருந்த சபைகளும் விழுந்துபோயின."

**கோயமுத்தூர் காய்ச்சல்**

திருநெல்வேலியில் இந்தத் துன்பம் ஏற்பட்ட காலத்தில் சபைகளுக்கு உற்சாகம் அளிக்கவென்று வேதநாயகம் ஐயர் என்னப்பட்ட ஒரு ஊழியன் தஞ்சாவூரிலிருந்து அனுப்பப்பட்டார். ஆனால் அவர் எவ்விதமான ஊழியமும் செய்ததாகத் தெரியவில்லை. கால்ட்வெல் அத்தியக்ஷர் கூற்றின்படி அவர் நம் நாட்டுக்கு வரவேயில்லை. ஆனால் வெஸ்ற்றர்ண் அத்தியக்ஷரவர்கள் வேதநாயகம் ஐயர் நம் நாட்டில் 1811 முதல் 1813 வரை பாளையங்கோட்டையில் வசித்து வந்ததாகவும், 1813 அக்டோபரில் பாளையங்கோட்டையிலேயே மரித்ததாகவும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**வேதநாயகம் ஐயர்**

வேதநாயகம் ஐயருக்குப் பின் ஆபிரகாம் ஐயர் அனுப்பப்பட்டார். இவர் 1816-ம் ஆண்டு பாளையங்கோட்டைக் குருவாகிப் பின்னால் நாசரேத்திலும் குருத்துவப் பணியாற்றினார். இவர் கறுத்தமேனியுடையவர். மிகுந்த கரிசனையுடையவர். இவர் காலத்தில் கல்கத்தா அத்தியக்ஷரான பிஷப் மிடில்ற்றன் பாளையங்கோட்டைக்கு (1816-ம் ஆண்டு மார்ச்சு மீ 22௳) விஜயம் செய்தார். அதே வருஷம் நவம்பர் மீ பாளையங்கோட்டை ராணுவக் குருவாக ஜேம்ஸ் ஹாப் ஐயர் (Rev. James Hough M. A.) அங்கு வந்தார். ஹாப் ஐயர் திருநெல்வேலி வந்ததிலிருந்து, இருண்ட காலம் முடிந்து புதிய சகாப்தம் தொடங்கிற்று.

**ஆபிரகாம் ஐயர்**

S. P. C. K. சங்கத்தார் தாங்கள் திருநெல்வேலிக்கு மிஷனெரிமாரை அனுப்பக்கூடாத நிலைமையிலிருந்ததினால், அங்குள்ள சபைகளை மேற்பார்க்க வேதநாயகம், ஆபிரகாம் போன்ற குருக்களை அனுப்பினார்கள் என்று கூறினோமன்றோ. அக்காலத்தில் பாளையங்கோட்டையில் வியாபாரியாகவிருந்த சாயர் என்ற துரைமகன் S. P. C. K. சங்கத்தார் உபதேசிமாருக்கென்று அனுப்பிய பணத்தைப் பெற்று, அதைப் பட்டுவாடாச் செய்வது வழக்கம். அவரும் 1816-ம் வருஷம் மரித்துப் போகவே அவர் பார்த்து வந்த அவ்வேலையைச் செய்ய ஆளில்லை. உபத்ரவ காலத்தில் அனுசரணையாயிருந்து ஆதரவு அருள ஒரு ஐரோப்பிய மிஷனெரியும் கிடையாது. அந்நிலையில் சாப்ளனாக வந்த ஹாப் ஐயர் ஓர் தேவதூதனைப் போலவே திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களுக்கு விளங்கினார்.

**சாயர் துரை**

ஹாப் ஐயர் ஆங்கிலேய நாட்டில் கம்பர்லாந்து மாகாணத்தில் 1789-ம் ஆண்டு பிறந்தவர். 1814-ம் ௵ M. A. பட்டம் பெற்றபின் கார்லைல் (Carlysle) பட்டணத்து அத்தியக்ஷரிடத்தில் குருவபிஷேகம்

பெற்று, 1816-ல் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரின் குருவாக, சென்னை வந்து சேர்ந்தார். அவ்வருஷம் நவம்பரில் பாளையங்கோட்டையிலிருந்த சங்கத்தாரின் ராணுவத்தில் மார்க்க பணிவிடையாற்றுவதற்கென்று அந்நகருக்கு மாற்றப்பட்டனர். இவர் ராணுவ குருவாயிருந்த போதிலும் உள்ளத்தில் ஓர் மிஷனெரி. பட்டம் பெறுவதற்கு முன்பே மிஷனெரியாக வேண்டும் என்று அவாக்கொண்டிருந்தார். ஆனால், தெய்வ சித்தம் வேறாயிருந்தது. எனினும் அவர் தம் உள்ளத்தில் ஊறிக்கிடந்த வாஞ்சையின் காரணமாக "இந்தியாவின் குடிகளுக்கு மீட்பின் அன்பைப் பற்றிய நற்செய்தியைக் கூறி அறிவிக்க என் ஆத்துமா வாஞ்சித்துக் கதறுகிறது" என்று அடிக்கடி சொல்லிக் கொள்வதுண்டு.

ஜேம்ஸ் ஹாப் ஐயர்

அவர் பாளையங்கோட்டைக்கு வந்ததும், திருநெல்வேலிச் சபைகளின் பரிதாப நிலைமையை அறிந்து, தாயற்ற குழந்தைபோன்று பரிதவித்து நின்ற சபைகளுக்குத் தாமே தாயானர். தமது கடமைகளுக்கும் மிஷனெரிச் சேவைக்கும் முற்றிலும் வித்தியாசம் உண்டெனினும், ஓய்வு நேரங்களை மிஷனெரி ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்தார். அவரது சேவையை விவரிக்க இது இடமில்லையாதலின் நாசரேத்தின் அக்கால நிலைமையையும், அவர் காலத்தில் அதற்குக்கிடைத்த பாக்கியங்களெவை என்பதையும் மட்டும் இங்கு ஆராய்வோம்.

சென்னையிலுள்ள S. P. C. K. கிளைச் சங்கத்தாருக்கு இவர் 1818-ம் வருஷத்தில் எழுதிய கடிதத்தில் மிஷனுக்குச் சொந்தமான சொத்துக்களைப்பற்றி எழுதினர். அதில் காணப்பட்ட விஷயம் பின் வருமாறு. "...... ஆழ்வார்திருநகரிக்குச் சமீபத்தில் மிஷனுக்குச் சொந்தமான சில கட்டடங்கள் உண்டு என்று கேள்விப்படுகிறேன். எனக்குச் சரீர சுகம் நன்றாயிருந்தால் நான் அவற்றைப் போய்ப் பார்வையிட்டிருப்பேன். ஆனால் அவை அதிக விலைமதிப்புள்ளவையல்ல என்றும் கேள்விப்படுகிறேன். அவை எப்படி மிஷனுக்குச் சொந்தமாயின என்றாவது, அவற்றினால் மிஷனுக்குக் கிடைக்கும் வருஷ வருமானம் எவ்வளவு என்றாவது இங்குள்ள எவரும் எனக்குத் தெரிவிக்கக் கூடாதவர்களாயிருக்கிறார்கள் .........". இங்கு குறிக்கப்பட்ட கட்டடங்களே ஆழ்வார்தோப்புக்குச் சமீபத்தில் இடிந்து காணப்படுகின்றன என்பது பலருடைய அபிப்பிராயம்.

1819-ம் வருஷத்தில் எழுதிய ரிப்போர்ட்டில், விசுவாசநாதன் என்ற ஒரு சுதேச குரு 'கிறிஸ்தவர்களால் நாசரேத் என்று அழைக்கப்படுகிற' கிராமத்தில் ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் உள்ளான பக்தியுடையவராயும் திறமைசாலியாகவும் விளங்கினர் என்றும்

குறிப்பிட்டு "அவர் தமது சபையாருக்குச் செய்த பிரசங்கத்தை நான் கேட்டேன். அப்பிரசங்கம் அவரைவிட அதிகம் படித்தவர்களாலும் செய்யக் கூடாதபடி அவ்வளவு விசேஷமாக இருந்தது" என்று எழுதுகிறார். கனம் விசுவாசநாதனையரே நாசரேத்தின் முதல் இந்திய குரு. இவர் 1810-ம் வருஷம் தஞ்சையில் லுத்தரான் அபிஷேகம் பெற்றவர். ஒரே வருஷம் இங்கு ஊழியம் செய்தபின் முதலூருக்கு மாற்றப்பட்டார். இவரைப் பற்றி வேறொரு செய்தியும் நமக்குக் கிடைக்கவில்லை. இவர் 1822-ம் வருஷத்தில் மரித்தார் என்பது ஐதிகம்.

**விசுவாசநாதன் ஐயர்**

1819-ம் வருஷத்தில் நாசரேத், முதலூரைப் பற்றிக் கனம் ஹாப் ஐயர் எழுதும் சித்திரத்தைக் கீழே வரைகிறேன். "இவ்விரண்டு கிராமங்களிலும் [நாசரேத்திலும் முதலூரிலும்] நான் சில நாட்களே தங்கினேன். இவ்வூர் வாசிகள் தங்கள் குருக்கள் மீது மிகுந்த பற்றுள்ளவர்கள் ...... ஜனங்களிடை காணப்பட்ட மகிழ்ச்சி விஸ்தரிக்க வியலாதது. பக்கத்துக் கிராமங்களிலுள்ள ஜனங்களும் கூட்டம் கூட்டமாக வந்துசேர்ந்தார்கள். பிரதானமானவர்கள் என்று அவர்கள் மத்தியிலிருந்து எனக்கு அறிமுகம் செய்யப்பட்டவர்களை நான் சில கேள்விகள் கேட்டபொழுது, நான் எதிர்பார்த்திருந்ததைவிட அதிகமாகத் தங்கள் மார்க்கத்தைப் பற்றி அவர்கள் போதிக்கப்பட்டிருப்பதை அறிந்தேன். மிஷனெரிமாரில்லாமல் அவர்கள் பின்னிட்ட காலத்தின் அளவை நிதானித்தால், கிறிஸ்து மார்க்கத்தின் சமாதான ஆவி அவர்களை ஐக்கியப்படுத்தி அதில் நிலைத்திருக்கச் செய்யக்கூடியதான சக்தியுடையதாயிருந்ததைக் கண்டு வெகுவாய் மனச் சாந்தியடைந்தேன். இவ்விரண்டு கிராமங்களிலும் முழுவதுமாய் நமது புராட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களே குடியிருக்கின்றனர் ...... இவ்விடங்களில் கிறிஸ்து மார்க்கம் பேரளவில் அல்லாது, உள்ளான சக்தி வாய்ந்ததாகவே காணப்படுகிறது ...... S. P. C. K. சங்கத்தாரின் பிரயாசங்களும், பணச் செலவுகளும் வீண்போகா. அவை மெய்யாகவே கிறிஸ்தவ அறிவை இந்தியாவில் வளரச்செய்கின்றன என்பதற்கு இவ்விரு கிராமங்களை அவர்கள் [சங்கத்தார்] பெருமையுடன் சுட்டிக் காட்டக்கூடும். அவர்கள் பிரயாசங்கள் வீண்போகவேயில்லை. இந்தக் கிராமங்களில் காணப்படுகிற அளவான மார்க்கப் பற்றை நான் இங்கிலாந்து தேசத்தின் பட்டணங்களில் எதிலும் கண்டிலேன் ......" மேலே மொழிபெயர்க்கப்பட்ட வாக்கியங்களினின்று நாசரேத், முதலூர் என்ற கிறிஸ்தவ கிராமங்களின் மார்க்க நிலை, சமூக வாழ்க்கை இவற்றின் மேம்பாட்டை நாம் நிதானித்தறிந்து கொள்ளலாம்.

**சபையின் நிலைமை**

நாசரேத் தான் உள்ளளவும் ஹாப் ஐயரை மறக்க முடியாது. ஏனென்றால் இன்றைக்கும் அவ்வூருக்கு மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அளித்துக் கொண்டிருப்பனவும், சுமார் 130 வருஷங்களாக நாசரேத்துக்குமட்டுமன்று, தென்கீழ் திருநெல்வேலிக்கே மிகுந்த பிரயோஜனத்தை அளித்துக் கொண்டிருப்பனவுமான கல்விச் சாலைகளை முதல்முதல் அமைத்துத் தந்தவர் அவரே. அவர் S. P. C K. சங்கத்தாருக்கு எழுதி அவர்களிடமிருந்து பணச் சகாயம்பெற்று, பாளையங்கோட்டை, முதலூர், நாசரேத், தருவை, உக்கிரம்கோட்டை, குலசேகரபட்டினம், பத்மநாதபுரம் என்ற ஊர்களில் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார். நாசரேத்தில் 1819-ம் வருஷத்தில் ஒரு ஆண்கள் பாடசாலையும், 1820 மே மாதம் 1-உ பெண்களுக்கென்று ஒரு பாடசாலையுமாக இரண்டு கல்வி ஸ்தாபனங்களை நிறுவினார்.

**கல்வி ஸ்தாபனங்கள்**

ஆண்கள் பாடசாலையில் தவசியப்பன் என்பவரும், பெண்கள் பாடசாலையில் பாக்கியநாதன் என்பவரும் முறையே ரூ. 1—8—0, 0—8—0 மாதச் சம்பளத்தில் ஆசான்களாக அமர்ந்தார்கள் இவற்றில் பெண்கள் கல்விச்சாலையை ஸ்தாபிக்குமுன் ஐயர் வெகு கஷ்டப்படவேண்டியதாயிற்று. பெற்றோர் தங்கள் பெண்களை அனுப்ப முற்றிலும் மறுத்துவிட்டார்கள். ஹாப் ஐயர் வீடுவீடாய்ச் சென்று பெற்றோருக்கு உருக்கமாய் போதனை செய்து, ஒன்றொன்றாகத் தடைகளை ஜெயித்து, 10 பெண்களுடன் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். முதலூரிலும் அதே நாளில் 11 பெண்களுடன் ஒரு பெண் கலாசாலையைத் திறந்தார். ஆனால் அது இரண்டொரு வருஷங்களில், பெற்றோர் தங்கள் பெண்மக்களைப் பள்ளிக்கனுப்ப மறுத்துவிட்டதால் மூடப்பட்டுவிட்டது. நாசரேத் பெண்கள் கலாசாலையோ, அன்று அவ்வளவு கஷ்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது, 1826 வரையுமாவது நடந்து வந்தது. அவ்வருஷத்தில் நாசரேத் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை நிறுத்திக்கொள்ளவே அதுவும் மூடப்படவேண்டியதாயிற்று.

ஹாப் ஐயர் 1818-இல் சபை ஊழியரைப் பயிற்சி செய்யவென்று பாளையங்கோட்டையில் ஒன்றும், 1819-ல் நாசரேத்தில் ஒன்றுமாக இரண்டு 'திருமறைக் கழகங்'களை (Seminaries) ஸ்தாபித்தார். இவ்விரண்டிலும் கல்வி கற்பித்து வேத அறிவு புகட்டுவதற்கென்று சம்பளமில்லாமல் வேலை செய்ய இரு ஆசிரியர் ஒப்புக்கொண்டனர்.

மேற்சொல்லப்பட்ட உத்தம பணிகள் தவிர, ஹாப் ஐயர் சுவிசேஷ ஊழியத்திலும் சிறந்த ஊக்கம் காண்பித்தார் என்று எண்ண இடமுண்டு. 1819ம் வருஷத்தில் நாசரேத்துக்குச் சமீபத்தில் இந்துமார்க்க அரணாக விருந்த மூக்குப்பீறியில் சபை யுண்டாயிற்று. இதுபற்றி 1821ம் வருஷம்

**முக்குப்பீறி**

பெப்ருவரியீ வெளியிடப்பட்ட 'India within the Ganges' என்ற மிஷனெரிப் பத்திரிகையில் "மூக்குப்பீறி, புரையூர், சிதம்பரபுரம் என்னும் கிராமங்களில் 1819ம் வருஷம் சுதேசக் கிறிஸ்தவ சபைகள் ஏற்பட்டன" என்னும் குறிப்புக் காணப்படுகிறது. 1819 மட்டும் மூக்குப்பீறியில் ரோமன் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த இரு குடும்பங்கள் மட்டுமே யுண்டு. முதன் முதல் நமது சபையைச் சேர்ந்தவர்கள் யார் என்றாவது எத்தனை பேர் என்றாவது தெரியாது. 1819ம் வருஷத்தில் அங்குச் சபை உண்டாயிற்று என்பது மட்டும்தான் நாம் ரிக்கார்டுகளிலிருந்து அறிந்துகொள்ளக்கூடிய குறிப்பு ஆனல் அச்சபை 1820 முதல் C. M S. மிஷனெரிமாரின் ஆதரவுக்குட்பட்டிருந்தது என்றும் அறிகிறோம்.

**காலரா**

1818ம் வருஷம் ஜனுவரியில் நமது ஜில்லாவில் காலரா என்ற ஒரு புதிய விஷ வியாதி தலை காட்டிற்று. இந்நோய் 1818 ஏப்ரலில்தான் முதன் முதலாக * நாசரேத்தில் தோன்றிற்று. சபையில் பலர் இதற்கிரையானர்கள். இத்துயரச் செய்தியை சுதேச குருவான விசுவாசநாதன் ஐயர் தஞ்சை மிஷனெரிக்குத் தெரிவித்தார். இந்நோய் நாட்டுக்கு புதிதாகையினல் அதற்குத் தகுந்த சிகிச்சை முறைகள் ஒருவருக்கும் தெரியாது போயிற்று.

**குருமார்**

விசுவாசநாதன் ஐயர் 1822ம் வருஷம் வரை நாசரேத்திலேயே இருந்ததாகத் தெரிகிறது. ஒருக்கால் 1820ம் வருஷம் மட்டும் சிலகாலம் அவர் முதலூரிலும், முதலூர் குருவான கனம் ஆபிரகாம் ஐயர் நாசரேத்திலும் பின்னிட்டிருக்கலாம். ஆனல் அவ்வருஷ முடிவுக்குள்ளாக விசுவாசநாதன் நாசரேத் திரும்பியிருத்தல்வேண்டும். ஆபிரகாம் ஐயர் தஞ்சை சென்றுவிட்டார் என்றும் எண்ண வேண்டியதிருக்கிறது.

ஹாப் ஐயர் 1820ம் வருஷம்போல் சுகவீனமேலிட்டு, உடல்நலங் குன்றி, திருநெல்வேலியிலிருந்து இடமாற்றம் நாடி கம்பெனி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தார். அவருக்குத் திருநெல்வேலியை விட்டுச் செல்வது மிகுந்த துயரத்தைக் கொடுத்ததெனினும், உடல்நலம் காரணமாக அவர் போகவேண்டியதாயிற்று. ஆதலால் அப்படிப் போகும்பொழுது தாம் அம்மட்டும் செய்துவந்த வேலையைத் தொடர்ந்து நடத்தக் கட்டாயம் ஒரு மிஷனெரி தேவை என்று S. P. C. K. சங்கத்தாருக்கு எழுதினர்.

---

* மகாகனம் கால்டுவல் அத்தியக்ஷர் இவ்விதம் அபிப்பிராயம் தெரிவிக்கிறர்கள். See his 'Missions' page 193.

C. M. S ஆரம்பம்

அவர்களோ மிஷனெரி ஒருவரையும் அனுப்பக்கூடா தவர்களாகவே இன்னமுமிருந்தார்கள். ஆகையினால் அவர் அக்காலத்தில் சென்னையில் ஊழியம் நடப்பித்துக்கொண்டிருந்த C. M. S. கரஸ்பாண்டிங் கமிட்டியாருக்கு எழுதி, அவர்களாவது திருநெல்வேலி ஊழியத்தை மேற்கொள்ள முன்வர வேண்டுமென்று மன்றாடினார். C. M. S. கழகத்தினரும் சம்மதித்து, சென்னையில் தங்கள் ஆதரவில் மிஷனெரியாயிருந்த கனம் C. T. E. ரேனியஸ் ஐயரையும் சில மாதங்களில் அவருக்குதவியாகக் கனம் ஷ்மிட் ஐயரையும் அனுப்பினார்கள். ரேனியஸ் ஐயரும், ஷ்மிட் ஐயரும் 1820ம் வருஷம் ஜூலையிலும் அக்டோபரிலுமாகப் பாளையங்கோட்டை வந்து சேர்ந்து C. M. S சபைகளை ஸ்தாபிக்கலானார்கள்.

ஹாப் ஐயர் போனபின் விசுவாசநாதனையரே S. P. C. K. சபைகளைக் கவனிக்கலானார். அவர் தஞ்சை கோலாப் ஐயருக்கெழுதிப் பணம் வருவித்து உபதேசிமார் சம்பளம், புதுப் பள்ளிக்கூடக் கட்டுமானச் செலவு ஆகிய இவற்றைக் கொடுத்துவந்தார். நாசரேத்திலும் முதலூரிலும் பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டப் பெரிதும் முயன்றார். ஆனால் கட்டினாரா என்பது தெரியவில்லை. ஒருவேளை அவற்றைக் கட்ட ஆரம்பிக்குமுன் அவர் தஞ்சை திரும்பியிருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம். 1822க்குப்பின் விசுவாசநாதனையர் கடிதங்கள் யாதுமில்லை. தஞ்சை மிஷனெரிமார் இப்போது திருநெல்வேலியில் S P. C. K சங்கத்தாரின் ஊழியர் யாருமில்லாததினால், தங்கள் சபைகளின் கண்காணிப்பையும் சேர்த்துக் கவனிக்குமாறு கனம் ரேனியஸ் ஐயரை வேண்டிக்கொண்டனர். அவ்வாறே அவரும் ஒப்புக்கொண்டதினால் நாசரேத்தும் மற்ற S. P. C. K. சபைகளும் ரேனியஸ் ஐயரின் கண்காணிப்புக்குள் 1822 முதல் 1829 வரை இருந்துவந்தன. இவ்வேழு வருஷங்களில் மிஷனெரி ஊழியத்தில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. அதாவது: 1824ம் வருஷத்தில் S. P. C. K. சங்கத்தார் தங்கள் தென் இந்திய மிஷனெரி ஊழியங்களை S. P. G. சங்கத்தாரின் கையில் ஒப்புவித்துவிட்டார்கள் (transferred). எனவே நாசரேத், * வாழையடி முதலிய சபைகளும் அவ்வருஷ முதல் S. P. G. சபையாக மாறின. இச்சங்கத்தாரும் தாங்கள் S. P. C K சபைகளை ஏற்றுக்கொண்டவுடன் தாங்களே மிஷனெரிமாரை அனுப்பக்கூடாதிருந்தமையின், திருநெல்வேலிச் சபைகளை, [முன்னிருந்தபடியே] C. M. S. மிஷனெரி ரேனியஸ் ஐயரின் பாதுகாப்பிலேயே விட்டு வைத்தனர்.

ரேனியஸ் ஐயர்

* *1823, 24ம் வருஷத்தில் அருளூர் கிராமத்தார் கிறிஸ்தவர்களாவதற்கு வாழையடிச் சபையாரே ஆதிகாரணர்.* See C. M. Record of 1828 page 154.

ரேனியஸ் ஐயரின் காலத்தில் 1829ம் வருஷம் வரை நாசரேத்தைப் பற்றிய குறிப்புகள் யாதும் கிடைத்திலது. அவர் C M. S. சங்கத்தின் ஊழியராதலாலும் திருநெல்வேலியின் மேல், தென், வட, பாகங்களில் மிஷன் ஊழியத்தைப் புதிதாக ஆரம்பித்து நடத்தி வந்தமையாலும், தென் கிழக்குத் திருநெல்வேலிச் சபைகளின் ஊழியத்தை வெகு சிரத்தையுடன் மேற்பார்வையிடக்கூடாதவராயினர். இப்பாகங்களிலுள்ள உபதேசிமாருக்கு மாதந்தோறும் தஞ்சையிலிருந்து வரும் சம்பளப் பணத்தைப் பட்டுவாடாச் செய்தது தவிர வேறு அதிகமாக அவர் ஒன்றும் செய்திலர்.

1828ம் வருஷத்து பள்ளிக்கூடச் சங்கியையை மட்டும் கனம் கால்ட்வெல் அத்தியக்ஷரவர்கள் தமது புஸ்தகத்தில் எடுத்தெழுதியுள்ளார்கள்.

சுவாமியடியான் உபாத்தியாயர்

அச்சங்கியையினின்று நாசரேத்தில் ஒரே பள்ளிக்கூடம் தானிருந்ததென்றும், அதில் சுவாமியடியான் என்ற உபாத்தியாயர் மாதம் நாலு ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்தார் என்றும், அப்பள்ளியில் 23 பிள்ளைகள் கல்வி கற்றனரென்றும் நாமறியலாம். இந்த சுவாமியடியான் உபாத்தியாயர் பின்னால் நாசரேத்திலும் மூக்குப்பீறியிலுமாக வெகுகாலம் தேவ ஊழியம் செய்தார். இவரைப்பற்றி இனியும் கேள்விப்படுவோம்.

S. P. G. யின் தென்னிந்திய சபைகளை விசாரணை செய்யவென்று சென்னைப் பிரதேசத்தில் மதராஸ் பிரதேசக் கமிற்றி (Madras District

M. D. C.

Committee) 1826 மே 15ல் சென்னை பரி. ஜியார்ஜ் ஆலயத்தில் வைத்து ஆர்ச்டீக்கன் சங்கை வாகன் ஐயர் தலைமையில் நிறுவப்பட்டது. (அக்காலத்தில் மதராசில் அத்தியக்ஷர் இல்லை) திருநெல்வேலி S. P. G. ஊழியமும் இது முதல் சுமார் 100 வருஷங்களாக இக்கமிற்றியின் ஆதிக்கத்துட்பட்டேயிருந்தது.

1829ம் வருஷத்தில் ரேனியஸ் ஐயர் சென்னையிலுள்ள [S. P. G. சங்கத்தாரின்] M. D. C கமிட்டியாருக்குத் திருநெல்வேலியிலுள்ள S. P. G. சங்கத்தாரின் சபைகளைப்பற்றிய ரிப்போர்ட் ஒன்று அனுப்பினர். அதிலிருந்து நாசரேத்தைப்பற்றிய ஒரு விசேஷம் நாம் அறியக் கிடக்கிறது. அது வருமாறு:

1804ம் வருஷம்போல் இவ்வூரில் கட்டப்பட்டிருந்த களிமண் ஆலயம் நாளடைவில் விஸ்தீரணமாக்கப்பட்டு வந்தது என்று நாம் எண்ண இடமுண்டு. 1828ம் வருஷம் சபையார் தங்கள் பழைய ஆலயத்தை இடித்துப் பெரிதாகக் கட்ட எண்ணங்கொண்டனர். ஏனெனில் சபையாரின் தொகை 500. இவ்வளவு பெரிய சபைக்கு ஆலயம் வெகு சிறிதாயிருந்தது.

அக்காலத்தில் நாசரேத் சபையே திருநெல்வேலிச் சபைகளில் இரண்டாவது பெரியது. [முதலூரில் சுமார் 800 பேரிருந்தமையால் அது முதல் ஸ்தானம் வகித்தது.] சபையார், ரேனியஸ் ஐயருக்கு உதவியாக S. P. G. சங்கக் குருவாய்ப் பாளையங்கோட்டையிலிருந்துகொண்டு சபைகளைச் சந்தித்து வந்த அடைக்கலம் ஐயரிடம் சென்று, தங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதில் தங்களுக்கு உதவிபுரியுமாறு கேட்டனர். அடைக்கலம் ஐயரும், ரேனியஸ் ஐயர் மூலமாய் M. D. C. க்கு மனுச்செய்யவேண்டுமென்று ஆலோசனை கூறி, அச்சபையில் பிரதானமான இயேசுவடியான் முக்கந்தன், வேதமுத்து முக்கந்தன், ஞானக்கண்ணு முக்கந்தன் என்பவர்களைக்கொண்டு மனுவொன்று தயாரித்து ரேனியஸ் ஐயரிடம் கொடுத்தார்.

**புதிய ஆலயம்**

அம்மனுவில் "திருநெல்வேலி ஜில்லாவில், வாழையடிக்குச் சமீபத்தில் நாசரேத் ஊரிலுள்ள ஏழைக் கிறிஸ்தவர்களாகிய நாங்கள், எல்லாக் கிறிஸ்தவ சீமாட்டிகளுக்கும் சீமான்களுக்கும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுவதாவது: கிறிஸ்துமார்க்கத்தை நாங்கள் தழுவிய காலமுதல் ஓலையால் வேயப்பட்டதாக நாங்கள் அமைத்துக்கொண்ட ஒரு சிறிய ஜெப வீட்டில் ஆராதனைக்குக் கூடிவருகிறோம். காலம் செல்லச் செல்ல ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாக 500 பேரையுடையதாய் எங்கள் சபை வளர்ச்சியடையக் கர்த்தர் சித்தங்கொண்டார். எங்களுடைய இச்சிறிய ஆலயத்தில் இடம் போதாததால் எங்களில் அநேகர் ஆலயத்துக்கு வெளியிலுட்கார்ந்துகொண்டுதான் தேவ வசனத்தைக் கேட்கக்கூடியதாயிருக்கிறது. ஆகையால் சுமார் 1500 ரூபாய் செலவில் பெரிதும், நிரந்தரமானதுமான ஓர் ஜெபவீடு கட்ட நாங்கள் ஆசிக்கிறோம். நாங்கள் எங்களுடைய எழிமையிலிருந்து சுமார் ரூ. 350 கொடுக்கக்கூடும் என்று நம்புகிறோம். மீதிப் பணத்துக்கு மற்றவர்களிடமிருந்துதான் ஒத்தாசை கிடைக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகையினால் எல்லா கிறிஸ்தவ சீமாட்டிகளும் சீமான்களும் தேவ நாம மகிமைக்காகவும், அநேக ஆத்துமாக்களின் நன்மைக்காகவும் தங்கள் ஈகையின் மூலமாய் எங்களுக்குத் தாராளமாய் உதவி செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இயேசுவடியான் முக்கந்தன்
வேதமுத்து முக்கந்தன்
ஞானக்கண்ணு முக்கந்தன்"

என்று கண்டிருந்தது. இந்த மனுவைக் கமிட்டியாருக்கு அனுப்புகையில் ரேனியஸ் ஐயர் அதினடியில் "சுதேச குருவான அடைக்கலமும், மேலே குறிக்கப்பட்ட சபையாரும் கேட்டுக்கொள்ளுகிறபடியே, உங்கள் கிறிஸ்தவ ஈகைத் தன்மைக்கேற்றவாறு நீங்கள் கொடுக்கக்கூடியது எவ்வளவானாலும்

சந்தோஷத்துடன் நானதைப் பெற்றுக்கொண்டு நாசரேத் ஆலயக் கட்டுமானத்துக்கன்றி வேறெந்தச் செலவுக்கும் அதைப் பயன்படுத்தாதவாறு பார்த்துக்கொள்ளுவேன்'' என்றெழுதினர். 1829ம் வருஷம் பெப்ருவரி மீ 9ம் நாளில் தேதியிடப்பட்ட இம்மனு M. D. C.யின் உப கமிட்டியாரின் மாதாந்தரக் கூட்டத்திற்கு அம்மாதம் 21ம் தேதி அனுப்பப்பட்டது. இம்மனுவைப்பற்றி ஆலோசித்த அக்கமிட்டியார் தங்களுடைய இரண்டாவது தீர்மானத்தின்படி, நாசரேத் சபையாரின் மனுவைத் தஞ்சாவூர் மிஷனெரிமாருக்கனுப்பி, அவர்கள் தங்களுடைய சிபார்சுடன் ஆலயத்தின் ஒரு பிளானும் எஸ்டிமேட்டும் அனுப்பினல், கமிட்டியார் அங்கீகாரம் செய்ததின் பின், அச்சபையார் கேட்கும் தொகையை உதவக்கூடும் என்று முடிவு கூறினர்கள். மேலும், ரேனியஸ் ஐயருக்கு எழுதிய கடிதத்தில், நாசரேத் சபையார் கேட்கும் தொகை முழுவதும் தங்களால் கொடுக்கக்கூடும் என்று நம்புவதாகக் கூறிக், கட்டுமான வேலையையும் ஐயரே தயவுகூர்ந்து மேற்பார்வையிட்டு விரைவில் கட்டடத்தை முடிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

**புதிய மிஷனேரி**

இதற்கிடையில் 1829ல் S. P. G. சங்கத்தார் ஒரு புதிய மிஷனெரியை அனுப்பினர்கள். ரேனியஸ் ஐயர் தமது பாரத்தை அப்புதிய மிஷனெரியான கனம் டேவிட் ரோசன் ஐயரிடம் ஒப்புவித்தார். நாசரேத் ஆலயத்தின் பிளானும் எஸ்டிமேட்டும் தஞ்சாவூர் மிஷனெரிகளான கோலாப், ஹாப்ரோ (Rev. L. P. Haubroe) ஐயர்மாரால் தயாரிக்கப்பட்டு M. D. C. கமிட்டியாரால் அக்டோபர் மாதம் 17ம்வ அங்கீகாரம் பெற்று ரோசன் ஐயருக்கு அனுப்பப்பட்டது. நவம்பர் மாதக்கடைசியில் அது ரோசன் ஐயர் கையில் சேர்ந்து, டிசம்பர் மீ 8ம்வ வேலையை ஆரம்பிக்கவென்று பாளையங்கோட்டை அடைக்கலம் ஐயர் ரோசன் ஐயரால் அனுப்பப்பட்டு நாசரேத்துக்கு வந்து சேர்ந்தார்.

# அத்தியாயம் 3

## முதலிரு தந்தையர்

## 1829—'38

ரோசன் ஐயர் பாளையங்கோட்டைக்கு 1829 நவம்பர் 6-ம்வ வந்து, சேர்ந்து, அங்கு வாசஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டு S. P. G. சபைகளை சுற்றுப் பிரயாணங்கள் செய்து மேற்பார்வையிடலானார். தம்முடைய முதலாம் சுற்றுப் பிரயாணத்தை டிசம்பர்ஸ்ரீ 22-ம்வ ஆரம்பித்து அடுத்த நாள் ஆழ்வார்திருநகரியை அடைந்தார். ஏற்கெனவே நாசரேத்தை S. P. G. ஊழியத்துக்குத் தலைமை ஸ்தானமாக்க (Head-quarters) வேண்டுமென்று சங்கத்தாரிடமிருந்து இவருக்கு உத்தரவு கிடைத்திருந்தது. எனினும் ஆழ்வார்திருநகரிக்கு வந்ததும், முற்காலத்தில் அங்கு ஹாமில்டன் என்ற துரை ஒருவரால் ஆற்றங்கரையில் கட்டப்பட்டிருந்த மாடிக்கட்டடம் ஒன்றைக் கண்டு, சர்க்காரிடமிருந்து அதைக் கிரயமின்றிப் பெற்றுக்கொள்ளலாம் என்று உத்தேசித்து ஆழ்வார்திருநகரியையே தலைமைஸ்தானமாக்குவது என்று தீர்மானித்தார். இது பற்றி அவர் குறிப்பிடுவது என்னவெனில் "பங்களா கட்டுவதற்குத் தற்சமயம் நாசரேத்தில் இடமில்லை; பூமி வாங்கித்தானாக வேண்டும். அப்படியாயினும் மிஷனெரி ஒருவர் எப்பொழுதும் நாசரேத்திலேயே குடியிருப்பது கடினம். ஆழ்வார் திருநகரியில் பல சௌகரியங்களுண்டு. நாசரேத் ஆழ்வார்திருநகரிக்குச் சமீபத்தில் இருப்பதால் மிஷனெரி அடிக்கடி அங்கு போய்க் கொள்ளலாம்." என்பதாம்.

**ரோசன் ஐயர் ஊழியம்**

அன்றே (டிசம்பர் 23, 1829) ரோசன் ஐயர் நாசரேத்துக்கு வந்தார். அவர் அன்று வந்தது தான் நாசரேத்துக்கு S. P. G. மிஷனெரி ஒருவர் வந்த முதல் தடவை. ஆகவே ஆலயக் கட்டுமான விஷயமாய் ஏற்கெனவே பாளையங்கோட்டையிலிருந்து நாசரேத் வந்திருந்த கனம் அடைக்கலம் ஐயர் சபையார் அனைவரையும் கூட்டிக்கொண்டு ஊருக்கு வெளியே ஆழ்வார்திருநகரிப் பாதையில் மிஷனெரியை எதிர்கொண்டு வரவேற்றனர். ரோசன் ஐயர் பல்லக்கில் வந்தார். மிஷனெரியும் மக்களும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர். அப்போது காலை 9 மணியிருக்கும். ஊர் வந்து சேர்ந்ததும், கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும் நோக்கத்துடன், மிஷனெரியும் குருவும் சபையாரும் நேராக ஆலயத்துக்குச் சென்றார்கள். வெகு சீக்கிரம் ஆலயம் நிரம்பிற்று. ஜனங்கள் ஆலயத்தில் இடமில்லாததுபற்றி, சன்னல்களிலும் உட்கார்ந்துகொண்டதால் வாசல் வழியாயன்றி வேறு

**மிஷனெரி வருகை**

வழியில் வெளிச்சம் வரக்கூடாது போயிற்று. இப்பெருங் கூட்டத்தைக் கண்ட ரோசன் கொண்ட உற்சாகத்துக்களவில்லை. உள்ளக்கனிவுடன் அவர் ஸ்தோத்திர ஜெபம் செய்த பின், கூட்டம் கலைந்தது. கனம் ரோசன் ஐயர் அன்றைய நாசரேத்தைப்பற்றிய வர்ணனை ஒன்று எழுதியுள்ளார். அதைக் கீழே மொழி பெயர்த்திருக்கிறோம்.

"நாசரேத் தாழ்ந்த பூமியில் கட்டப்பட்ட கிராமம். சுறுசுறுப்புள்ள சுமார் 500 குடி ஜனங்கள் வசிக்கும் இவ்வூர் சுமார் 30 வருஷங்களுக்கு முன்னால் ஒரு வறண்ட பிரதேசமாய் இருந்தது. ஏனெனில் ஒருவித சிவப்பான காய்ந்த மணலே இங்கு மிகுந்துள்ளது. நீர்ப்பாசனத்துக்கேற்ற குளம் குட்டைகள் ஒன்றுமில்லை. ஆற்றிலிருந்து ஜலத்தை இங்கே தருவிப்பதும் கூடிய காரியமாகப் புலப்படவில்லை. பனை மரங்களே இங்கு காணப்படுகிற பிரயோஜனமான மரங்கள். சுமார் 30 வருஷங்களுக்கு முன் மிஷனெரிமாரால் இங்கு கிறிஸ்தவர்கள் குடியேற்றப் பட்ட காலத்தில் அநேக பனை மரங்கள் நாட்டப்பட்டன. அவையே இப்போது ஜனங்களின் வருவாயின் மிகுதி யான பாகத்துக்கு ஆதாரம். இவ்விதமாய் (பனை மரங்கள் நாட்டப்பட்டு) ஆயத்தம் பண்ணப்பட்ட பிராந்தியத்தில் தான் கிராமம் கட்டப்படலாயிற்று. மீதியான இடம் மாடுகள் மேய்ப்பதற்கான வெளியாய் விடப்பட்டுள்ளது. ஜனங்கள் பக்கத்துக் கிராமங்களிலும் பனை, வயல் முதலியவற்றைக் குத்தகை எடுத்துப் பிழைப்புத் தேடிக் கொள்ளுகிறார்கள். (குத்தகை நிலங்களிலும்) அதிகமாய் சோளம், கம்பு, பயறு முதலிய தானியவகைகளே பயிரிடப்படுகின்றன. ஏனெனில் வயல் நிலங்கள் நெல் சாகுபடிக் கேற்றவைகளாயில்லை. நாசரேத்திலும் முதலூரிலும் உள்ள நமது கிறிஸ்தவர்கள் வெகுவாய்ப் பனைகளையே சார்ந்து வாழுகிறார்கள். இம்மரங்களிலிருந்து விலைச்சரக்காக்கும் பொருள் ஒருவித காடு முரடான சர்க்கரைக் கட்டி. இதை இத்தேசத்திலுள்ள பல பாகங்களுக்கும் விற்பனைக்காக ஏற்றுமதி செய்கிறார்கள். இக்கைத்தொழிலை இன்னும் சற்று நேர்த்தியாகச் செய்யக் கூடிய விதத்தைக் கண்டுபிடித்துக் கொள்வார்களாயின்............சீன தேசத்தினரின் சர்க்கரையையும் விட நேர்த்தியானதாகச் செய்துவிட முடியும் என்பது நானே செய்து பார்த்த முறைகளினின்று நான் கொண்டுள்ள நம்பிக்கை. நாசரேத் என்னும் இச்சிறு கிராமம் அதன் குடிகளுக்குப் பெருமையளிக்கக்கூடியது. வீடுகள், இப்பிரதேசத்தில் மற்ற ஊர்களில் கட்டப்பட்டிருப்பதைவிட சற்று சிறப்பாகவே கட்டப்பட்டுள்ளன. தெருக்கள் ஒடுக்கமாயிருப்பினும் வெகு சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் இவ்வூர், இவ்வூர்வாசிகளின் விவேகத்தையும், சகலமும் ஒழுங்காகக் காணப்படவேண்டும் என்ற ஆசையையும் பிரதிபிம்பிக்கிறது.

1830-ல் நாசரேத்

இவ்வூரில் மூன்று கிணறுகள் உண்டு. அவற்றிலுள்ள தண்ணீர் உருசி மிகுந்தது. அவற்றின் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும் விதமும் வெகு நேர்த்தி. இப்பாகத்தில் ஏராளமாய்க் காணக்கிடக்கும் ஒருவித சுண்ணும்புக் கற்களால் அச்சுவர்கள் அமைந்திருக்கின்றன. இந்த ஸ்தாபனம் முழுவதும் கிறிஸ்தவர்களால் நிறைந்திருப்பதைக் கண்டு நான் வெகு மகிழ்ச்சியடைந்தேன். கிறிஸ்தவர்கள் புறமதஸ்தரினின்று பிரிந்து தனியே வாழுகிருர்கள். அதினுல் கிராமங்களில் பொதுவாய் ஏற்படும் சண்டைகளுக்கும் பிரிவினைகளுக்கும் அடிகோலும் அநேக காரணங்கள் இங்குண்டாவதற்கு ஆதாரமேயில்லை.''*

இதன் பின் ஆலயக் கட்டுமானத்திற்கு நாசரேத் வாசிகள் சேகரித்திருந்த பொருட்களை வர்ணிக்கிருர். அவை 200 பனைகளும், ஒரு பெரிய உத்திரமும், இரண்டு சிறிய உத்திரங்களும் சுண்ணும்பும், குவியல் குவியலாக மணலும், ஏராளமான சுண்ணும்புக் கற்களும், பணி செய்யப்படா கருங்கற்களுமே. செங்கற்கள் அக்காலத்தில் கருங்கற்களைவிட விலையதிகம் என்றும், அப்படி விலை கொடுத்து வாங்கினதும் அவை நன்ருகச் செய்யப்படாதவைகளாயிருந்ததால் கட்டுமானத்துக் குதவா என்றும் அவரே எழுதுகிருர்.

24-ம் தேதியாகிய மறுநாள் கனம் ஐயர் மூக்குப்பீறிக் குடியிருப்புக்குச் சென்ருர். அங்குள்ள அழகிய சிறு ஜெப ஆலயத்தில் ஆராதனை நடத்தி சபையாரோடு சம்பாஷித்தார். சபையார் தம்முடைய வசனங்களை வெகு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தது ஐயருக்கு வெகு குதூகலத்தைத் தந்தது. "பின்னுல் அக்கிராமத்தின் மேல் பாகத்தில் C. M. S. சங்கத்தாருக்குட்பட்டிருந்த ஓர் சிறு சபையைப் பார்த்தேன்,'' என்றெழுதுகிருர். அதுவே பிரகாசபுரம் சபையாம். அச்சபையாரும் தங்களுக்கென்று ஒரு சிறு ஜெபாலயம் கட்டியிருந்தனர். ஐயர் அங்கும் ஆராதனை நடத்தி ஜனங்களுடன் சம்பாஷித்த பின் மாலையில் நாசரேத் வந்து சேர்ந்தார். அன்று கிறிஸ்மஸுக்கு முன் தினம். அன்றும் மறுநாளும் ரோசன் ஐயர் நாசரேத்தில் தங்கி ஆராதனைகள் நடத்தி, அவ்வாராதனைகளைப்பற்றி ஒரு சுருக்கவுரை தந்துள்ளார். சுமார் 120 வருஷங்களுக்கு முன்னிருந்த நம் முன்னுேர் கிறிஸ்மஸ் தினத்தை எவ்வாறு ஆசரித்தார்கள் என்பதை யறிய வாசகர்களுக்கு விருப்பமிருக்கலாமாதலின், ஐயர் தந்த சுருக்கவுரையைக் கீழே தருவாம். "24-ம்வ.........ஆலயம் உள்ளும் புறமும் விளக்குகள் வைக்கப்பட்டு மிகவும் பிரகாசமாயிருந்தது. கிறிஸ்மஸுக்கு முன் தினம் இவ்வூராருக்கு ஒரு விசேஷித்த கொண்டாட்டம். ஆராதனை முடிய

கிறிஸ்மஸ் 1829

* P 239 f. Caldwells' Tinnevelly Mission

வெகு நேரமாயிற்று. அடுத்த நாள் காலை 6 மணிக்கு மறுபடியும் ஆராதனையிருந்தது. இவ்வூரின் வழக்கப்படி உபதேசியாரே இவ்வாராதனையை நடத்தினர்..........." "25-ம்வ கிறிஸ்மஸ். ஆலயத்திற்குள் மிதமிஞ்சின கூட்டம். ஒருவர் மீது ஒருவர் உட்கார்ந்திருந்ததுபோலவே தோன்றினது. ஆகையால் பரிசுத்த நற்கருணை பரிமாறப்படும்போது நற்கருணையிற் சேராதவர்களை வெளியேற்றினல்தான், சேருகிறவர்கள் சற்று பயபக்தியோடும் கிரமத்தோடும் சேரக்கூடுமாதலால், அவ்விதம் செய்ய நேரிட்டது. சரியான பிரகாரம் ஆயத்தம்பண்ணிக் கொண்டவர்களைமட்டும் தான் நற்கருணைக்கு அனுமதித்தோம். அவ்வாறு அன்று 96 பேர் திருப்பந்தியில் சேர்ந்தார்கள். விசேஷ நாளாகையால் நாட்டையரின் மகன் அன்று ஆராதனையில் பிடில் வாசித்தார்."†

மறுநாள் ரோசன் ஐயர் முதலூருக்குச் சென்று, சில நாள் தங்கி விட்டுத் திரும்பும் வழியில், 29ம்வ நாசரேத் வந்தார். அவரது அன்றைய குறிப்பில் நாசரேத்துத் தேரியைப் பற்றிக் கீழ்க்கண்ட விஸ்தரிப்புக் காணப்படுகிறது. "மாலையில் நாசரேத்துக்குச் சுமார் இரண்டு மைலுக்குக் கிழக்கேயுள்ள சிவந்த மணல் குன்றுகளுக்குச் சென்றேன். இக்குன்றுகள் அதிக உயரமில்லாவிடினும் அவற்றின் உச்சியிலிருந்து திருச்செந்தூரின் கோவில், மணப்பாட்டின் ஆலயம், தூத்துக்குடி ரோம ஆலயம் இவற்றைப் பார்க்கக் கூடும். இந்தக் குன்றுகள் உயரமாயிருப்பதினல் ஒருவித செடிவகைகளையும் உடைத்தாயில்லை. புற்கள் கூட முளைத்திருக்கக் காணேன். இத்தேரி தென் வடலாய் எழு மைலும், கிழமேலாய் நான்கு மைலும் விஸ்தீரணமுள்ளது. இதில் திருடர் ஏராளம்".*

தேறி மணல்

பின்னும் இரண்டு நாள் தங்கி, 31ம்வ புதிய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டார். அன்று மாலை சிற்றாலயத்திற்குப் பின்புறத்தில் தோண்டப்பட்ட குழியைச் சுற்றி மிஷனெரியும், குருவானவரும், உபதேசிகரும், உபாத்தியாயரும் பள்ளிக்கூடச் சிறுவர்களும், சபையில் பலரும் நின்று பாட்டுகள் பாடி ஜெபித்தனர். பின்னர் மிஷனெரி அஸ்திபாரக் குழிக்குள் இறங்கி மூலைக்கல்லை வைத்துச் சாந்திட்டார். இவ்வண்ணமாய் 1829ம் வருஷம் டிசம்பர்மீ 31ம்வ மாலை, சுமார் 5 மணிக்கு, இப்போதுள்ள ஆலயத்துக்கு முந்தின ஆலயத்தின் அஸ்திபாரம் S. P. G.யின் முதல் மிஷனெரி ரோசன் ஐயரால் போடப்பட்டது.

ஆலய அஸ்திபாரம்

† P 239 f—Caldwell's Tinnevelly Mission.

* Pp 242 ff—Caldwell's Tinnevelly Mission.

அன்றிரவு 8 மணிக்குப் புதுவருஷ ஆயத்த ஆராதனை நடத்திவிட்டு ரோசன் ஐயர் இரவே தூத்துக்குடிக்குப் பயணமானார். அதுமுதல் தூத்துக்குடியையே தம் தலைமை ஸ்தானமாக்கிக்கொண்டு, இடைக்கிடையே நாசரேத்துக்கு வந்து சபைகளைச் சுற்றிப் பார்த்து, சபை ஊழியருக்கும் மாதாந்தரக் கூட்டங்கள் நடத்தினார். அவர் அக்காலங்களில் எழுதி வைத்த பல நாட்குறிப்புகளிலிருந்து ஆலயக் கட்டுமானத்தைப்பற்றிய சில விபரங்கள் நாம் அறியக்கிடக்கின்றன.

1830ம்௵ ஜனுவரி 2ம்௳யே கட்டுமான வேலை ஆரம்பமாயிற்று. சபையார் தாங்கள் வாக்குப் பண்ணின ரூ. 350 ஐயும் ரோசன் ஐயர் கையில் கொடுத்து விட்டார்கள். S. P. G. சங்கத்தார் 21ம்௳ ரூ. 1000மும் இரண்டொரு மாதங்களில் மீதி ரூ. 500ஐயும் அனுப்பினார்கள். அடைக்கலம் ஐயர் நாசரேத்திலேயே தற்காலிகமாக ஜாகை செய்து கட்டுமான வேலையை மேற்பார்வையிட்டார்.

அக்காலம் இந்தியாவிலுள்ள ஆங்கிலிக்கன் சபைகள் அனைத்தும் கல்கத்தா அத்தியக்ஷரின் கண்காணிப்பில் இருந்தன. தென்னிந்திய சபைகளை, அவருக்குதவியாக, சென்னை ஆர்ச்டீக்கன் மேற்பார்வை செய்தார். ஜனுவரி மாதம் 22ம்௳ ஆர்ச்டீக்கன் கனம் ராபின்சன் ஐயர் நாசரேத்துக்கு வந்து, சபைகளைச் சந்தித்து ஆலய வேலையையும் பார்த்துவிட்டுச் சென்றார்.

**கட்டுமானம்**

புதிய ஆலயம் பழைய ஆலயத்தைச் சுற்றிக் கட்டப்பட்டது. யாது காரணத்தாலோ புதிய ஆலயச் சுவர்கள் உயர்ந்து பழைய ஆலயத்தை மறைத்து விடுமட்டும் பழைய ஆலயம் இடிக்கப்படவில்லை. ஜூலை௴ 21ம் தேதிக்குள் கட்டுமானம் கிட்டத்தட்ட பூர்த்தியாகி விட்டது. கூரை ஓடு வேயப்பட்டு பக்கங்களிலுள்ள தட்டொட்டிகளும் மூடப்பட்டாயின. ஆலயத்துக்குள் போதுமான வெளிச்சம் ஜன்னல்களின் வழியாய் வந்தது. வெளித்தோற்றம் மிகவும் கம்பீரமாயிருந்தது. வேலை முழுவதும் நாசரேத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் கொத்தன்மார்களே செய்து முடித்திருந்தனர். கட்டடம் காற்றுப் போக்குள்ளதாகவும், ஏராளமான ஜனங்கள் உட்காருவதற்கேற்றவாறு அகலமும் நீளமும் உள்ளதாகவும், பலம் பொருந்தினதாகவும் காணப்பட்டது. ஜனங்கள் தாங்களே பணம் சேகரித்துச் சமீபத்தில் [ஜூன் மாதத்தில்] ஒரு ஆலய மணி வாங்கியிருந்தார்கள். ஆலயத்திற்குக் கோபுரம் இல்லாததால் இரு தூண்கள் கட்டி அவற்றின் மத்தியில் மணி தொங்கவிடப்பட்டது.

இவ்விதமாக ஒரு பெருங்காரியத்தை நாசரேத்தில் செய்து வந்த கனம் ரோசன் ஐயர் நிக்கோபார் தீவுகளில் ஊழியம் செய்ய வேண்டுமென்று

ஆசை மேலிட்டு, சங்கத்தாரிடமிருந்து உத்தரவு பெற்று, செப்டம்பர் 7ம௳ தரங்கம்பாடிக்குப் போய் அங்கிருந்து நிக்கோபார் தீவுகளுக்குச் சென்றார்.

**நிக்கோபார் ஊழியம்**

அக்காலம் அவை டேனிஷ்காரருக்குச் சொந்தமாயிருந்தன. டென்மார்க் அரசன் ரோசன் ஐயரை நிக்கோபார் தீவுகளின் கவர்னராகவும் நியமித்தார். சுமார் நாலு வருஷம் அங்கு உழைத்த பின் ஐயர் தம்முடைய ஊழியம் பிரயோஜன மற்றதாயிருக்கக்கண்டு சோர்வுற்றார். மேலும் இவருடன் சென்ற மற்ற ஐரோப்பியர் எல்லாரும் அங்கேயே மரித்துப்போனார்கள். ஆகவே தனியனாய் விடப்பட்ட ரோசன் ஐயர் மிகுந்த துயரத்துடன் அவ்வேலையைக் கைவிட்டு, திரும்பவும் திருநெல்வேலி ஊழியத்தில் தம்மைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று S. P. G. சங்கத்தாருக்கு மனுச் செய்தார். கல்கத்தா அத்தியக்ஷரான மகாகனம் வில்சன் பிஷப் இம்மனுவைச் சிபார்சு செய்யவே, சங்கத்தார் அவரை மறுபடியும் ஏற்றுக்கொண்டார்கள். ஐயரும் 1835 மார்ச்சு 31ல் தூத்துக்குடி வந்து சேர்ந்தார். இடைப்பட்ட $3\frac{1}{2}$ வருஷங்களாக திருநெல்வேலிச் சபைகள் தஞ்சாவூர் மிஷனெரிகளின் மேற்பார்வையில் விடப்பட்டதினால் கனம் J. C. கோலாப் ஐயர் மறுபடியும் விசாரணையை மேற்கொண்டார்.

இந்த இடைக்காலத்தில் நாசரேத் ஆலயக் கட்டுமானம் பூர்த்தியாகி 1830 நவம்பர் மாதத்திற்குள் பிரதிஷ்டைக்குத் தயாரானது. எனவே சங்கத்தாரின் அனுமதிபெற்று, [கனம் கோலாப் ஐயர் மூப்பு மேலிட்டதினால் பிரயாணம் செய்யக்கூடாத நிலைமையிலிருந்தபடியால்] கனம் அடைக்கலம் ஐயரே நவம்பர்ீ 20ம௳ பிரதிஷ்டை ஆராதனை நடத்தினர். அச்சமயம் அக்கால நாசரேத் சபையில் பிரதானமானவர்களில் ஒருவரும், கோவில் பெருக்கியார் என்று பெயர் பெற்றவரும், முன் சொல்லப்பட்ட சுவாமியடியான் உபாத்தியாயரின் தகப்பனாருமான கறுப்பன் முக்கந்தர் என்பார் பத்திரம் வாசித்து ஆலயத்தைச் சங்கத்தாருக்கு ஒப்படைத்தார். பிரதிஷ்டை முடிந்தவுடன் ஐயரவர்கள் அவ்வாராதனையின் தொடர்பாகவே ஞானஸ்நான ஆராதனை நடத்தி, அதில் நான்கு குழந்தைகளுக்கும் பருவம் கடந்த பதினொருவருக்கும் ஞானதீக்ஷை கொடுத்த பின், பரிசுத்த நற்கருணைத் திருவிருந்தில் 86 பேர் பங்கு பெற்றனர். பின்னர் விவாக ஆராதனை யொன்றும் நடைபெற்றது. இவ்வண்ணம் முந்திய ஆலயப் பிரதிஷ்டையாராதனையில் ஞானஸ்நானம், நற்கருணை என்ற சாக்கிரமெந்துகளும் விவாக மகோற்சவமும் நடந்தேறியது மங்களகரமான ஆரம்பமே.

**ஆலயப் பிரதிஷ்டை**

1830-ம் வருஷத்திய நாசரேத் சபையைப்பற்றி இன்னும் இரண்டொரு குறிப்புக்கள் தவிர வேறொன்றும் நமக்குக் கிட்டிலது. இவ்

வருஷத்தில் நாசரேத் சபை என்னும்பொழுது அதில் இருசபைகள் சேர்ந்திருந்தன. அவை நாசரேத், வாழையடி என்பனவாம். இவ்விரண்டு சபைக்கும் நாசரேத் ஆலயம் ஒன்றுதான் தேவனை ஆராதிக்கும் ஸ்தலமாயிருந்தது. நாசரேத்தின் இவ்வாலயத்தைப்பற்றி, C. M. S. மிஷனெரியான கனம் J. J. முல்லர் ஐயர் 1832 நவம்பர் 14ல் எழுதி வைத்த ஓர் குறிப்பு பின்வருமாறு:

நசரைச் சபை

"இன்று (குதிரையின்மேல் பிரயாணம்பண்ணி) நாசரேத் வந்தோம். இது ஒரு பெரிய கிறிஸ்தவ கிராமம். இங்குள்ள ஆலயம் வெகு நேர்த்தியாயிருக்கிறது. இந்த நாட்டில் நான் பார்த்த ஆலயங்களிலெல்லாம் இதுவே மிகவும் அழகு வாய்ந்ததும் மகா பெரியதுமானது"* என்பதுவே.

இவ்வருஷம் நாசரேத் சபையின் தொகை ஆண்கள் 170, பெண்கள் 172, ஆண் குழந்தைகள் 136, பெண் குழந்தைகள் 117. பள்ளிக்கூடத்தில் 23 கிறிஸ்தவப் பையன்கள், 2 கிறிஸ்தவப் பெண்கள், 1 புறமதஸ்தப் பையன் ஆக 26 பிள்ளைகள்.

சபை வருமானம் ரூ. 53—11—5.


1835 எப்ரிலிலிருந்து ரோசன் ஐயரின் இரண்டாம் ஊழியகாலம் ஆரம்பமாகிறது. ஐயர் தூத்துக்குடியை வாசஸ்தலமாக்கினது S. P. G. சங்கத்தாருக்குப் பிரியமில்லை. அவர்களின் நோக்கம் நாசரேத், முதலூர் என்ற இரு இடங்களிலும் பங்களாக்களைக்கட்டி, இரு மிஷனெரிமாரை நியமிக்க வேண்டும் என்பது. எனவே பங்களாக்கள்கட்டும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று ஐயருக்குப் பணித்தனர். ரோசன் ஐயர்

மிஷன் பங்களா

முதலில் இதற்கு இணங்காவிடினும் சங்கத்தாரின் கட்டாயத்துக் கிணங்கி ரூ. 2000 செலவில் நாசரேத்தில் ஒரு பங்களாக் கட்டுவதாக வாக்களித்துப், பணத்தைப்பெற்று தற்போது பங்களா இருக்கும் இடத்தை விலைக்கு வாங்கினார். ஆனால் இதற்கிடையில் கனம் J. L. இரியன் ஐயர் நாசரேத் மிஷனெரியாக நியமிக்கப்பட்டு, ரோசன், முதலூருக்கு மாற்றப்படவே அவர் 'பங்களாவில் இனி இரியன் ஐயர் தான் வாசம் பண்ணப்போவதால் அவரே வந்து கட்டிக்கொள்ளட்டும்" என்று சங்கத்தாருக்கு எழுதிவிட்டு வாங்கின நிலத்தில், இரியன் ஐயர் வந்ததும் தங்குவதற்கான ஒரு சிறு வீடுமட்டும் அமைத்தார்.


---

* P. 68 C. M. Record 1834 Apr.



நாசரேத் பரி. யோவான் [முந்தின] ஆலயம்

*பிரதிஷ்டை 20—11—1830*



முதல் மிஷனெரி கனம் டேவிட் ரோசன் ஐயர்



கனம் வெஸ்ற்றன் ஐயர் — டாக்டர் பார்ஸன்ஸ் அம்மாள் விவாகம் 28 – 12 — 1910

சங்கத்தாரின் கட்டளை, ரோசன் ஐயர் தமக்கென முதலூரில் ஒரு பங்களா கட்டி, அவ்வூரையே தமக்குத் தலைமை ஸ்தானமாக்கிக்கொள்ள வேண்டும் என்பது. இதுவும் ரோசன் ஐயருக்குப் பிடிக்கவில்லை.

**முதலூர் பங்களா**

ஆகையினால், "முதலூர் தாழ்ந்த பூமி, சுகக்கேடானது, நாசரேத்துக்கு வெகு சமீபமானது," என்று பல காரணங்களைச் சொல்லிக் காலங்கடத்தினார். ஆனால் சங்கத்தார் செவிகொடுக்கவில்லை. எனவே முதலூரில் தற்போது பள்ளிக்கூடம் இருக்கும் இடத்தை ரூ. 50க்கு விலைக்கிரயமாக வாங்கினார்.

இதற்கிடையில் கனம் அடைக்கலம் ஐயர் ஓய்வெடுத்துக்கொண்டு, தம் சுயநாடாகிய தஞ்சை ஜில்லாவுக்குப்போய்விடவே, கனம் நல்லதம்பி ஐயரவர்கள் அனுப்பப்பட்டார்கள். நல்லதம்பி ஐயர் பாளையங்கோட்டையில் 1832—34 வரை ஊழியம் செய்துவிட்டுத் திரும்பினார். ஆகையினால் ரோசன் இரண்டாம் விசையாகத் திருநெல்வேலி ஊழியத்தை மேற்கொண்டபோது அவருக்குதவியாக யாருமில்லை.

**விசாரணை உபதேசிமார்**

எனவே ரோசன் ஐயர், C. M. S. பாகத்தில் ரேனியஸ் ஐயரவர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த, விசாரணை உபதேசிமார் முறையை ஏற்படுத்தும் எண்ணத்தை மேற்கொண்டார். அதன்படி S. P. G. சபைகள் 4 ரேஞ்சுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை உக்கிரன்கோட்டை ரேஞ்சு, நாசரேத் ரேஞ்சு, முதலூர் ரேஞ்சு, இடையன்குடி ரேஞ்சு என்பவை. இவை ஒவ்வொன்றிலும் சுற்றுப்பிரயாணம் செய்து உபதேசிமாரின் வேலையை விசாரணை செய்வது தலைமை ஸ்தானத்திலிருக்கும் விசாரணை உபதேசிகர் பொறுப்பு. நாசரேத்தின் முதல் விசாரணைஉபதேசிகர் நாசரேத் ஆண்பள்ளிக்கூடத்தின் முதல் உபாத்தியாயராக 1820ல் நியமிக்கப்பட்ட கனம் தவசியப்பன் என்பவரே. நாசரேத் ரேஞ்சில் சேர்க்கப்பட்ட சபைகள் நாசரேத், வாழையடி, மூக்குப்பீறி, எருசலேம், குலசேகரப்பட்டினம், ஹௌவையர்புரம், ஐயம்பெருமாள் குடி (near Manapad), ஐயர்விளைப் புதூர், சிவத்தையாபுரம், சாயர்புரம், புளியங்காடு முதலியன. தவசியப்பன் உபதேசியாருடைய மாதச்சம்பளமும் ரூ. 8—12—0க்கு உயர்த்தப்பட்டது. இவ்வண்ணம் 1835ம் வருஷம் அக்டோபர்மீ முதல் 'நாசரேத் மிஷன்' உருவாயிற்று.

கனம் ரோசன் ஐயர் 1836ம் வருஷம் ஜூலைமீ புதிதாய் வந்த இரியன் ஐயரிடம் நாசரேத், உக்கிரன்கோட்டைச் சேகரங்களின் கண்காணிப்பை ஒப்படைத்துத் தாம் முதலூர் சென்று, தம்முடைய புதிய பங்களாவில் குடியேறினார். ரோசன் ஐயர் நாசரேத்துக்காகச் செய்த பலவிதப்பணிகளைப் பார்த்த நாம் அவரது வாழ்க்கைக் குறிப்புகளில்

நமக்குக் கிட்டக்கூடியவற்றையும் அறிந்துகொள்வது அவசியமாதலால் அவற்றைக் கீழே எழுதுவோம்.

டேவிட் ரோசன் ஐயர் டென்மார்க் தேசத்தில் எபல்டாப்ட் கிராமத்தில் 1791ம் வருஷம் ஜனுவரிமீ 21ல் பிறந்து 1818ம் வருஷம் ஸீலந்து அத்தியக்ஷரால் லுத்தரன் முறைப்படி குருவபிஷேகம் பெற்றுர். சென்னை (1817) திருச்சி (1820—24) கடலூர் (1824—29) முதலிய விடங்களில் S. P. C. K. மிஷனெரியாக ஊழியம்செய்து, பின்னல் நாம் பார்த்தபடி 1829—30ல் தூத்துக்குடியிலும் 1830—34ல் நிக்கோபாரியிலும் 1834—36 மறுபடியும் தூத்துக்குடியிலும் 1836—38 முதலூரிலும் பணியாற்றி, சுகவீனத்தின் காரணமாய் 1838ல் சுயதேசம் திரும்பினர். அங்கே 1857 வரை சின்னலிங்ஸ்பி கிராமத்தில் குருப்பணிவிடையாற்றித் தம்முடைய 66ம் வயதில் மரித்து அவ்வூரிலே அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழும்பும் நாளை எதிர்நோக்கி நித்திரை செய்கிறுர்.

**ரோசன் ஐயர் வாழ்க்கைக் குறிப்புகள்**

கனம் ரோசன் ஐயரவர்கள் நாசரேத்தைவிட்டு முதலூருக்குப் போகுமுன் நாசரேத் சபையாருக்குப் பக்கத்து ஊரிலுள்ள தேவமார்களால் கொடிய இன்னல்கள் ஏற்பட்டன. ஓரிரவு அவர்கள் நாசரேத் கிராமத்தைக் கொள்ளையடித்துப் பல வீடுகளைத் தீக்கிரையாக்கினர். இது சம்பந்தமாய்க் கனம் ரோசன் ஐயர் மாஜிஸ்திரேட்டிடம் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் C. J. பர்ட் (Mr. C. J. Bird) குற்றவாளிகளைக் கிரிமினல் கோர்ட்டுக்கு அனுப்பினர். ஆனல் முடிவில் நாசரேத் ஊரார் எவ்வளவோ செலவுசெய்து பார்த்தும் எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்புப்பெற்று விடுதலையடைந்தார்கள். எனவே அது முதல் தேவமார்களால் மேலும் மேலும் இடைஞ்சல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. இந்நிலையில்தான் கனம் J. L. இரியன் ஐயர் இங்கு மாற்றப்பட்டார்.

இரியன் ஐயரே நாசரேத்தில் வசித்த முதல் மிஷனெரி. 'ஜாண் லட்விக் இரியன்' என்ற நாமமுடைய இப்பெரியார் ஹாலந்து தேசத்தில் 1800ம் வருஷம் பிறந்து, தமது வாலிபத்தில் தம்மை ஆண்டவருக்குரிமையாக்கி 1829ம் வருஷம் லுத்தரன் முறைப்படி குருப்பட்டாபிஷேகம் பெற்றுர். அடுத்த வருஷம் தம்மை இந்திய மிஷனெரி ஊழியத்துக் கொப்புவித்து வெப்பேரி S. P. C. K. சபையின் போதகராக அமர்ந்தார்.

**J. L. இரியன் ஐயர்**

இக்காலத்தில் தென்னிந்திய சபைகளில் ஜாதி வித்தியாசம் அதிகமாய்ப் பாராட்டப்பட்டது. சபைகளின் ஒற்றுமையைக் கெடுத்துக்,

கிறிஸ்துவின் அன்பை அவமாக்கி வந்த இக்கொடும்பேயைச் சபைகளிலிருந்து அப்புறப்படுத்த கனம் ரேனியஸ், ஹாப்ரோ முதலிய குருமார்கள் பெரிதும் முயன்றும் பயனில்லை. பின்னால் வந்த மிஷனெரிமாரும், கல்கத்தா அத்தியக்ஷர்களும், இது விஷயத்தில் பாராமுகமாய் இருந்துவிடுவதே மேல் என்றெண்ணிவிட்டனர். ஆனால் 1830க்குமேல் நிலைமை மிகு மோசமாய்விட்டது. கிறிஸ்தவர்கள் தங்கள் ஜாதி அடையாளங்களைக் காட்டக்கூடிய சின்னங்களையும் [உ-ம். நாமம், பொட்டு, நீறு], இந்து மார்க்கத்தின் சகல அனுஷ்டானங்களையும் கைக்கொள்ளலானார்கள். வெப்பேரி பரி. பவுல் ஆலயத்தில் பரி நற்கருணை முதலாய் ஜாதிக்கிறிஸ்தவர்களுக்குத் தனியாகவும் (முன்பும்) தாழ்ந்த ஜாதிக்காரரான கிறிஸ்தவர்களுக்குத் தனியாகவும் (பின்பும்) பரிமாறப்பட வேண்டியதாயிற்று. தரங்கம்பாடியில் ஆதித்திராவிடக் கிறிஸ்தவர்கள் ஆலயத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டார்கள். எனவே

**ஜாதி வித்தியாசம்**

1832ம் வருஷம் கல்கத்தா அத்தியக்ஷராக அபிஷேகம் பெற்ற மகா கனம் வில்சன் அத்தியக்ஷரவர்கள் ஜாதி வித்தியாசத்தை வேருடன் களைந்துவிடத் தீர்மானித்து, 1833ம் வருஷம், கிறிஸ்தவர்கள் ஜாதி அடையாளங்களான பொட்டுப் போடுதல், நாமம் தரித்தல் முதலியவற்றை உடனே நிறுத்தவேண்டும் என்றும், உபதேசிமாரை நியமிப்பது, ஞானப்பெற்றோரைத் தெரிந்தெடுப்பது, கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்வது முதலியவற்றில் ஜாதிவித்தியாசம் பாராட்டப்படலாகாது என்றும், எல்லா ஆலயங்களும் எல்லா ஜாதிக்காரருக்கும் பொதுவாகும், ஆகையினால் தாழ்ந்த ஜாதிக்காரரும் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார். இக்கட்டளை எல்லா ஆலயங்களிலும் வாசிக்கப்பட்டது. வெப்பேரி, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தரங்கம்பாடி என்றவிடங்களில் இக்கட்டளை வாசிக்கப்பட்டதும் மிகுந்த கலவரங்கள் ஏற்பட்டன. திருநெல்வேலியில் மேற்சொன்ன அளவுக்கு ஜாதி வித்தியாசம் பாராட்டப்படாதிருந்தமையால் மேற்படி கட்டளை கலவரமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டது. வெப்பேரியில் ஏற்பட்ட குழப்பங்களைச் சரிப்படுத்த, இயற்கையிலேயே மிகுந்த சுவாமியானவராயிருந்தமையால் இரியன் ஐயரால் இயலவில்லை. எனவே வில்சன் அத்தியக்ஷர் இரியன் ஐயரை நாசரேத்துக்கு மாற்றிவிட்டு, A. F. கேமரர் ஐயரை வெப்பேரியில் நியமித்தார்.

இக்காலத்தில் இந்திய திருச்சபைக்கு வேறொரு சங்கடமும் உண்டாயிற்று. இதுமட்டும் S. P. C. K., C. M. S., S. P. G. முதலிய ஆங்கிலிக்கன் மிஷன் சங்கங்கள் இந்தியாவில் மிஷனெரி ஊழியத்தை

நடத்தியபோதிலும், ஊழியத்தைச் செய்தவர்கள், லுத்தரன் அபிஷேகம் பெற்ற ஜெர்மனி, ஹாலந்து, டென்மார்க்கு, ஸ்விட்சர்லாந்து தேசவாசிகளே லுத்தரன்சபைமுறைப்படி இந்த மிஷனெரிகள் மற்றவர்களுக்குக் குருப்பட்டம் கொடுக்கவும், திடப்படுத்தல் கொடுக்கவும் அதிகாரமுடையவர்கள். 1814ம் வருஷ முதலே கல்கத்தாவில் ஒரு அத்தியக்ஷர் இருந்துவந்த போதிலும், அவர் அடிக்கடி தென் நாடுகளுக்கு வந்துபோவது அக்காலத்தில் கூடாதகாரியமாதலால், இவ்விஷயத்தில் அவர் தலையிடவில்லை. ஆனால் 1834ம் வருஷத்தில் சென்னையில் ஒரு அத்தியக்ஷர் ஏற்படுத்தப்பட்டபின், ஆங்கிலிக்கன் மிஷனெரிச் சபைகளில் குருப்பட்டம், திடப்படுத்தல், ஜெபமுறைமை முதலியன ஆங்கிலிக்கன் முறைப்படியே நடைபெற வேண்டும் என்று ஷை சங்கத்தார்கள் தீர்மானித்தனர். இத்தீர்மானத்தை லுத்தரன் மிஷனெரிமாரும் ஒப்புக்கொண்டனர். பின்னும் ஆங்கிலிக்கன் சங்கங்களின் அதிகாரிகள், லுத்தரன் மிஷனெரிமார் இனிமேலும் தங்களுக்குட்பட்ட மிஷனெரிகளாயிருக்கவேண்டுமென்று விரும்பினால், லுத்தரன் முறைப்படியான குருப்பட்டத்தைத் துறந்து ஆங்கிலேய ஜெப புஸ்தக முறைப்படி முதலில் டீக்கன்பட்டமும், பின் குருப்பட்டமும் பெறவேண்டும் எனறு ஆக்ஞாபித்தனர். சில முதிர்ந்த அனுபவசாலிகளான மிஷனெரிமார் இதை ஒப்புக்கொள்ள மறுத்தனர். இதனாலும் இதுபோன்ற பல பிற காரணங்களாலும் நமது ஜில்லாவில் ரேனியஸ் ஐயரும் அவரது சகாக்களும் C. M. S. சங்கத்தைவிட்டுப் பிரிந்துகொண்டார்கள். ஆனால் மற்றும் பலர் இந்தக் கட்டளையையும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அப்படி ஒப்புக்கொண்டவர்களில் கனம் J. L. இரியன் ஐயரும் ஒருவர். இவர் தாமே சென்னை அத்தியக்ஷருக்கு எழுதி 1835ம் வருஷம் ஜனுவரி 31ல் கனம் வில்சன் அத்தியக்ஷரிடத்தில் தஞ்சாவூர் ஆலயத்தில் டீக்கன் பட்டமும், அடுத்த மாதத்தில் அதே அத்தியக்ஷரிடத்தில் சென்னை வெப்பேரி ஆலயத்தில் குருப்பட்டமும் பெற்றார். இக்காலத்திற்றான் நாசரேத்துக்கு மாற்றப்பட்டு, தம் சுகவீனத்தினிமித்தம் ஆறு மாதம் தரங்கம்பாடியில் பின்னிட்டு, 1836ம் வருஷம் ஜூலை 30ல் தூத்துக்குடி, சாயர்புரம் மார்க்கமாய் நாசரேத் வந்து சேர்ந்தார்.

குருப்பட்டம்

தங்களுக்கென்று ஒரு மிஷனெரி வருகிறார் என்று கேள்விப்பட்டதும் நாசரேத் சபையாருக்கு மிகுந்த குதூகலம் ஏற்பட்டிருந்தது. எனவே அவரது வருகையை ஆவலோடு எதிர்நோக்கினர். தூத்துக்குடியிலிருந்து பல்லக்கில் புறப்பட்ட கனம் ஐயர் செவத்தையாபுரம், சாயர்புரம் வழியாய்ப் பிரகாசபுரத்தை அடைந்தார். பிரகாசபுரத்தில் அச்சபையார் அவரை ஏற்றுக்கொண்டு உபசரித்தனர்.

அங்கிருந்தே அவர் நாசரேத் ஆலயத்தைக் காணக் கூடியதாயிருந்தது. மிஷனெரி வந்து சேர்ந்து விட்டதைக் கேள்விப்பட்ட நாசரேத் சபையார் அங்குச் சென்று, ஞானப்பாட்டுகளையும், வரவேற்புக்கென்று ஆயத்தம் செய்திருந்த பாடல்களையும் பாடிக்கொண்டு அவரை அழைத்து வந்தனர்.

இரியன் வருகை

ஊருக்கருகில் வந்ததும் கோவில் மணியோசையும் நகரா ஒலியும் முழங்கின. அப்பொழுது மாலைப் பொழுதான தால், உடனேயே மாலை ஆராதனையை உபதேசியார் நடத்த, ஐயரவர்கள் சபையாருக்குச் சில வார்த்தைகள் கூறி ஆராதனையை முடித்தனர் அடுத்த நாள் ஓய்வு நாளானதால் அன்று காலை ஆராதனையில் ஐயாவர்கள் "பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்". (யோவான். 15:9) என்ற வசனத்தின் பேரில் பிரசங்கம் செய்தார்கள். அப்பிரசங்கத்தைக் கேட்கக் கூடி வந்திருந்த சபையார் சுமார் 300 பேர்.

ஐயாவர்களுடைய கடிதங்களிலிருந்து நாசரேத்தின் அக்கால வாழ்க் கைச் சரித்திரக் குறிப்புகள் பலவற்றை நாமறியலாம். நாசரேத் வாசிகளில் பலர் கருப்புக்கட்டி வியாபாரிகள். அவர்கள் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சை முதலிய விடங்களுக்கு, வண்டிகளில் கருப்புக் கட்டிகளை எற்றிச் சென்று அவ்விடங்களில் பலநாட்கள் தங்கி வியாபாரம் செய்வதுண்டு.

நாசரேத் சபையாருக்கு இன்னமும் மறவர்களால் துன்பம் எற்பட்டுக் கொண்டே யிருந்தது. நில புலன்களின் வருவாய் குறைவாயிருந்த படி யால் சிறிது கஷ்டத்துடனேயே வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது.

சபையார் நிலைமை

எனினும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், ஓயா உழைப் பாளிகளாகவும் இருந்தார்கள். அவர்களில் சிலர் மட் டுக்கு மிஞ்சின பொருளாசையுள்ளவர்களாய்க் காணப் பட்டார்கள். பிச்சைக்காரன் ஒருவனாவது நாசரேத் வாசிகளிலிருந்ததில்லை. மார்க்க அனுசார விஷயமாய் ஐயரவர்கள் வெகு திருப்தியுடன் தான் எழுதுகிறார்கள். "நானறிந்த மட்டில் அவர்களுக்குள் ஒரு கெட்ட பழக்க வழக்கத்தையும் கண்டிலேன், பொல்லாப்பைத் தங்கள் மத்தியில் அவர்கள் அனுமதிப்பதேயில்லை. கேடு ஒன்றும் சபைக்குள் நுழைந்து விடாதபடி காப்பதில் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறேன். சமயா சமயங்களில் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டால், கண்டித்துப் புத்தி சொல்லுகிறேன். அதிகமாய் இந்து மார்க்கப் பழக்க வழக்கங்கள் விஷயத் தில்தான் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்கிறேன். கண்டனத்தை எற்றுக் கொண்டு, உடனே கீழ்ப்படிய ஜனங்கள் ஆயத்த முள்ளவர்களாகவே யிருக் கிறார்கள். குடிகாரன் என்றாவது, விபசாரக்காரன் என்றாவது அவர்

களுக்குள் ஒருவனையும் நான் கண்டதில்லை. எனினும் அப்படிப்பட்டவர்கள் அவர்களில் ஒருவருமே யில்லை என்று சாதித்து விடமுடியாது''.* மேலும் ஆராதனைகளுக்கு சபையார் வருவதைப்பற்றி ஓய்வுநாட்களில் சராசரி 300 பேரும், வார நாட்களில் சராசரி 70 முதல் 80 பேரும் ஒழுங்காக வருவார்கள் என்று கூறுகிறார்.

இரியன் ஐயர் வந்த சமயத்தில் பங்களா முடியவில்லை. நிலமும் முழுவதும் வாங்கப்படவில்லை. ரோசன் ஐயர் கட்டியிருந்த ஓலை வேய்ந்த ஒரு சிறு "பங்களா" அறை மட்டும் தானிருந்தது. ஐயர் அதில் தான் வசிக்க நேர்ந்தது. ஆதலால் உடனே நிலம் வாங்க உத்தேசித்து, ரோசன் ஐயர் ஏற்கெனவே தீர்மானித்திருந்த நிலத்தை வாங்க ஏற்பாடுகள் செய்தார். அந்நிலமே இப்போது பங்களா கட்டப்பட்டிருக்கும் பூமி.

**பங்களா**

அது அக்காலத்தில் மிஷனுக்கும் ராமநாதநாடார் வகையறுவான எழெட்டுப் பேருக்கும் சொந்தமாயிருந்தது. பல தடைகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவில் ராமநாத நாடார் மூலமாய்க் கிரயப்பத்திரம் முடிவாயிற்று. கிரயம் ரிஜிஸ்ட்ரேஷன் செலவு உட்பட ரூ. 162—12—8. நிலம் வாங்கியானதும் கட்டட வேலை ஆரம்பமாயிற்று. கட்டடச் செலவுக்கென்று S. P G. சங்கத்தார் கொடுத்தது ரூ. 2000/- 1837 அக்டோபருக்குள் வேலை முடிந்து பங்களா பிரதிஷ்டையானது.

நாம் மேலே பார்த்தபடி இக்காலத்தில் S. P. G சபைகள் இரண்டு † சேகரங்களாகப் பிரிக்கப்பட்டு நாசரேத் சேகரம் இரியன் ஐயரின் மேற்பார்வையிலும், முதலூர் சேகரம் ரோசன் ஐயர் மேற்பார்வையிலுமிருந்தன. இரியன் ஐயர் தமது சேகர மேற்பார்வையை வெகு உற்சாகத்தோடு செய்ததாக அவருடைய கடிதங்கள் காட்டுகின்றன. அவர் காலத்தில்

**சேகரச் சபைகள்**

நாசரேத் சேகரத்தைச் சேர்ந்த சபைகள் கீழ்க்கண்டவை: நாசரேத், மூக்குப்பீறி, வாழையடி, எருசலேம், உக்கிரமன்கோட்டை, பூவாணி, தளவாய்புரம் (North), ராஜபதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, பத்மநாதபுரம், பார்வதியாபுரம், சாயர்புரம், செவத்தையாபுரம், தூத்துக்குடி, தட்டைப்பாறை, குலசேகரப்பட்டினம், புதியம்புத்தூர், செட்டிகுளம், ஐயர்விளை, ஹௌவ்வையர்புரம். இன்னும் சில குக்கிராமச் சபைகள். இவற்றில் செட்டிகுளம், தட்டைப்பாறை, ராஜபதி முதலியவை இரியன் ஐயரின் ஊழியத்தின் பலன்கள்.

இச்சபைகளைக் கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் விருத்தியடையச் செய்ய வேண்டுமென்பதே ஐயரவர்களின் பேராவல். அதற்காகக் கூடிய

---

* P. 298 — Caldwell's Tinnevelly Mission.

† ஒரு சேகரத்தில் இரண்டு ரேஞ்சுகள்.

வற்றையெல்லாம் செய்வதில் கருத்துள்ளவராயிருந்தார். குருமார் எல்லாச் சபைகளிலும் திட்டவட்டமான ஆவிக்குரிய ஊழியம் செய்துவிட முடியாது. ஒவ்வொரு சபையையும் தீர்க்கமாய் ஆராய்ந்தறிந்து ஒவ்வொரு ஆத்துமாவின் நல்வாழ்வுக்கானவற்றையும் நலம்படச் செய்து முடிப்பது ஒரே மனுஷனுடைய பலத்திற்கும் சக்திக்கும் மிஞ்சினது. இவ்விஷயத்தில் சபைகளில் ஊழியம் செய்யும் சபை ஊழியரின் முகங்கோணு ஒத்துழைப்பு அத்தியாவசியம். இதைத் திட்டமாய் உணர்ந்தவர் இரியன் ஐயர். ஆகையினுல் சபை ஊழியரை உற்சாகப்படுத்தவும், அவர்களது ஊழியத்தில் ஏற்படும் கஷ்டங்களையும், தளர்ச்சிகளையும் அறிந்து செய்யக்கூடிய ஒத்தாசைகளைச் செய்யவும், வேத அறிவை அவர்களில் அதிகரிக்கச் செய்யவுமாய் உபதேசிமாரின் மாதாந்தரக் கூட்டத்தை நாசரேத்தில் ஒழுங்காய் நடத்தினுர்.

சபை ஊழியர்

இதுபற்றி ஐயர் தம் ரிப்போர்ட்டில் கூறுவதாவது. "வெகு தூரமான இடங்களிலுள்ள சபைகளுக்கு ஆவிக்குரிய போதனை கொடுப்பது வெகுவாய் உபதேசிமாரையே பொறுத்தது. ஆகையினுல் இம்முக்கிய பணிவிடையையாற்றுகிற அவர்கள் தகுந்த பயிற்சியடைதல் அவசியம். (என்) உபதேசிமார் கூடிய மட்டும் சுவிசேஷத்தின் முக்கிய உபதேசங்களையும் கற்பனைகளையும் அறிந்திருக்கிறுர்கள். ஆனுல் மொத்தத்தில் அவர்களது வேத அறிவு வெகு குறைவானது. அவர்களுடைய பிரசங்கங்கள் ஏராளமான வார்த்தைகளை யுடையனவாயிருக்கின்றனவேயன்றி, மக்களுக்கு அறிவைப் புகட்டக்கூடியனவாயில்லை. ஆகையினுல் அவர்களுக்கு உபதேசம் கொடுப்பது அவசியமாயிருக்கிறது. அப்படி நாம் கொடுக்கும் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் வெகு விருப்பமுள்ளவர்களாய் இருக்கிறுர்கள். அவ்வித உதவியை அவர்களுக்குச் செய்யக்கூடிய தருணங்கள் தான் வெகு சொற்பம். அவர்களில் அநேகர் வேதாகமத்தையும், ஞானப்பாட்டுகளையும், ஜெப புத்தகத்தையும் உடையவர்களாயிருப்பினும், ஆராதனைச் சமயத்தைத் தவிர மற்ற நேரங்களில் அவைகளைப் பெட்டிகளில் பூட்டியே வைத்திருக்கிறுர்கள். தாங்கள் வாசித்து அறிவை விருத்தி செய்துகொள்வதற்கும், மற்றவர்களுக்குபதேசம் செய்வதில் தங்களுக்கு உதவியாயிருப்பதற்கும் அவற்றைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வதில்லை," * என்பதாம். மாதாந்திரக் கூட்டங்களில், உபதேசிமாரின் ஊழியத்தைப்பற்றிக் கேட்டு, அவர்களது கஷ்டங்களை விசாரித்தறிந்து, மனச் சோர்புகளை நீக்கி உற்சாகப்படுத்தி, ஆலோசனைகள் சொல்லி ஊக்கப்படுத்துவதுடன், வேத அறிவைப் புகட்டி, மாதிரிப் பிரசங்கங்கள் செய்து, இவ்விதமாய் அவர்களுடைய ஊழியத்தில் அவர்களுக்குற்ற துணைவனுகவும் வழிகாட்டியாகவும் கனம் இரியன் ஐயர் விளங்கினுர்.

---

* P 298 — Caldwell's Tinnevelly Mission.

இந்தப் பக்த சிரோன்மணியின் உத்தம ஊழியத்தை வெகுநாள் அனுபவிக்க நாசரேத் சிலாக்கியம் பெறவில்லை. எனெனில் அவருடைய சுகம் நம் தேசம் வந்ததிலிருந்து கெடவாரம்பித்து, நாசரேத் வந்தபின் அவருக்கேற்பட்ட வியாதி முற்றிவிட்டது. இரியன் அம்மையார் சலிப் படையாது பணிவிடை செய்து வந்தபடியால்தான் இரண்டு வருஷமாவது அவர் ஊழியம் செய்யக்கூடியதாயிருந்தது. அக்கால நாசரேத் சேகரம் சுமார் 40 மைல் நீளமும் 30 மைல் அகலமுமாயிருந்தது.

சுகவீனம்

இப்பெரிய சேகரத்தில் சுற்றுப்பிரயாணம் செய்வது அக்காலத்தில், அதுவும் உடல் நலமில்லாத இரியன் ஐயரைப் போன்றவர்களுக்கு மிகவும் கஷ்டம். இருப்பினும் சுகவீனத்தின் நடுவிலும் அடிக்கடி பல்லக்கிலும், குதிரையிலுமாகச் சுற்றுப் பிரயாணங்கள் செய்து வந்தார். கடைசியில் 1838 ஜனுவரியில் பக்கவாத நோய் உண் டாகிப் படுத்தபடுக்கையாய் விட்டார். எனவே அவரைப் பாளையங் கோட்டைக்குக் கொண்டு போனார்கள். அங்கு C. M. S. மிஷனெரியான கனம் ஜியார்ஜ் பெற்றிட் (Rev. George Pettit) ஐயாவர்களும் பெற்றிட், இரியன் அம்மையரும் வெகு கரிசனையுடன் கவனித்தார்கள். எனினும் வியாதி அதிகரித்துக் கொண்டே போனது. இரியன் ஐயர் பேனாப் பிடித்து எழுதவும் கூடாத நிலைமைக்கு வந்துவிட்டார். அதினால் இரியன் அம்மை யாரே சென்னை M. D. C. சங்கத்தாருக்குத் தம் பர்த்தாவின் வியாதியைக் குறிப்பிட்டு லீவுக்காக மனுச் செய்தார்கள். லீவும் கொடுக்கப்பட்டது. சிறிது சுகம் ஏற்பட்டபின் ஐயரவர்களும் அம்மையாரும் தோணியேறி சென்னைக்குச் சென்று சுமார் 8 மாதம் ரஜாவிலிருந்தார்கள். டாக்டர்கள்

மரணம்

ஐயாவர்கள் தங்கள் சுயதேசம் போய்விடவேண்டும் என்று ஆலோசனை கூறவே, 1839-இன் மத்தியில் தங்கள் சுயதேசமாகிய ஹாலந்து போய்ச் சேர்ந்தார் கள். 1840-ம் வருஷக் கடைசி அல்லது 1841-ம் வருஷத் துவக்கத்தில் அவர்கள் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்திருக்கவேண்டும். அவர்கள் மரிக்கும்போது வயது சுமார் 41.

இரியன் ஒரு சாது. மிகவும் இரக்க சுபாவமும் யாரையும் இலகுவில் நம்பிவிடும் தன்மையுமுடையவர். தம்மை இரக்ஷித்த ஆண்டவர் மீது அளவு மிகுந்த அன்பு கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்காகச் சகலத்தையும் இழக்க ஆயத்தமாயிருந்தார். தமிழ்ப் பாஷையை நன்றாய்க் கற்றிருந்தத னால் சென்னையில் அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த வேதசாஸ் திரியும் மிஷனெரியுமான டாக்டர் ராட்லருடன் ( Dr. Rottler ) சேர்ந்து வேதாகமம் முழுவதையும் தமிழில் மொழிபெயர்த்ததுமல்லாமல், தமது சொந்த முயற்சியினால் புராட்டஸ்தாந்து ஞானோபதேசம் ( Protestant

Catechism) என்ற நூலையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இவரை இழந்தது ஆதித் தென்னிந்திய சபைகளுக்கு ஓர் பெரு நஷ்டமே.

கனம் இரியன் ஐயர் நாசரேத்தைவிட்டுப் போனபின், 1838-ம் வருஷத்தில் நாசரேத் சபையின் நிலைமை என்ன என்பது C. M. S. மிஷனெரியான கனம் ஜியார்ஜ் பெற்றிட் ஐயர் எழுதிய கடிதத்திலிருந்து நாம் ஒருவாறு அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது. அவ்வருஷத்தை யொட்டி கனம் பெற்றிட் ஐயர் பிரகாசபுரத்திற்கு வந்தவர், பக்கத்தில் மிகுந்த புகழுடன் விளங்கிய நாசரேத் சபைக்கும் விஜயம் செய்தார். அவர் வந்தபொழுது கனம் இரியன் ஐயர் ரஜாவில் சென்றுவிட்டமையால் ஊரில் மிஷனெரி ஒருவருமில்லை. கனம் பெற்றிட் எழுதிய

**பேற்றிற் ஐயர் தரும் வர்ணனை**

வரலாறு பின்வருமாறு: "1838 பெப்ருவரி 23 வெள்ளிக்கிழமை......ஊர்த்தலைவர்கள் (பிரகாசபுரச் சபையின் தலைவர்கள்) தங்கள் ஊர் ஆலயம் கட்ட ஒரு தரைப்படம் (plan) வரைய வேண்டுமென்றும்.........கேட்டுக்கொண் டார்கள். நாங்கள் plan தயாரிப்பதில் செய்யக்கூடியதைச் செய்துவிட்டு, எதற்கும் S. P. G. சங்கத்தாருக்குச் சொந்தமானதாய் இவ்வூருக்குச் சுமார் அரைமைல் தூரத்திலுள்ள நாசரேத்துக்குப் போய், அங்குள்ள ஆலயத்தைப் பார்த்துவிட்டுப், பின்னால் plan தயாரித்துக்கொள்வது நன்று என்று எண்ணினோம். நாசரேத் ஆலயத்தின் அழகுதான் இந்தச் சபையாரும் தங்களுக்கும் ஒரு நல்ல ஆலயம் கட்டிக்கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கக் காரணமானது.........மாலை 4 மணிக்கு நாசரேத் துக்குப் போனேன் இது ஒரு மிஷனெரி ஸ்தானம். சில மாதங்களுக்கு முன் தான் [அக்டோபர் 1837] கனம் J. L. இரியன் ஐயர் தமது பங்களாவைக் கட்டி முடித்தார். ஆனால் சுகவீனத்தின் காரணமாகத் தற்காலிகமாக அவர் வேற்றிடம் [சென்னைக்கு] சென்றிருக்கிறார். பங்களா வெகு சிங்காரமாகவும், இடவிஸ்தாரமுள்ளதாகவும் உறுதியாகவும் கட்டப்பட்டிருக்கிறது.

"ஆலயம், நான் இப்பாகங்களில் பார்த்திருக்கிற எல்லா ஆலயங்களி லும் மேலானது என்று திண்ணமாகக் கூறுவேன். உட்பாகத்தில் பணி முட்டுக்கள் இன்னும் கொஞ்சம் நேர்த்தியாகவும், ஆலயம் கோபுரமுடைய தாகவும் இருந்தால், இவ்வாலயம் (நாசரேத்தில் அல்ல) சென்னைப்பட்டினத்திலிருக்கத் தகுந்தது. ஐரோப்

**ஆலயத்தின் மேம்பாடு**

பியர் வணங்கும் ஆலயங்களுடன் ஒப்பிடுகையில் சுதேசி களின் ஆலயங்கள் மிகவும் சேவலமாய்க் காணப்படு கின்றன என்று சிலர் கூறுகிற விதண்டாவாதக் கூற்றை இவ்வாலயம் பொய்ப்பிக்கிறது. ஆலயத்தில் காலரி (Gallery) இல்லாதிருந்தும்

ஐந்நூறு பேருக்குத் தாராளமான இடமுண்டு. வாசல்களும் சன்னல்களும் பதினைந்துண்டு. .........பங்களாவில் தேநீர் அருந்திய பின் மாலை ஆராதனைக்கு ஆலயத்துக்குப் போனேன். ஆண்களும் பெண்களுமாக அநேகர் ஆராதனைக்கு வந்திருந்தனர்.

'மணி அடித்தபின் ஆலயத்துக்குட் புகுந்தேன். முன் வரிசைகளில் பள்ளிக்கூடச் சிறுவர் உட்கார்ந்திருந்தனர். அவர்களின் தலைவனாகத் (leader) தோன்றின ஒருவன் தூண் மறைவில் நின்றுகொண்டு, கர்த்தருடைய ஜெபத்தையும், விசுவாசப் பிரமாணத்தையும், பத்துக் கற்பனையையும், சுவிசேஷ ஊழியக் கட்டளையையும் வாக்கியம் வாக்கியமாகச் சொல்ல மற்றவர்கள் அவன் பின்னே சொன்னார்கள். சபையாரும் இதில் சேர்ந்ததினால் ஆலயம் அவர்கள் சத்தத்தால் முழங்கிற்று. இப்பழக்கத்தினால் ஏற்படும் பயன் மேலானது. இத்தலைமுறையினருக்குச் சுவிசேஷ சத்தியங்களைக் கற்பிக்கவும், வருங்காலத் தலைமுறையினரின் மனதில் அவற்றைப் பதிய வைக்கவும் இதோர் சிறந்த முறையென்று எனக்குத் தோன்றுகிறது. இது முடிந்ததும் லுத்தருடைய கீதங்களொன்றில் மூன்று கவிகள் பாடினோம். நான் உத்தரவிட்டபடி உபதேசிகர் அன்றைக்குரிய இரண்டாம் பாடத்தை வாசித்தபின், மத்தேயு 8 : 1—3ன் பேரில் பிரசங்கம் செய்தேன். பிரசங்கம் செய்யும்பொழுதே இடைக்கிடையே ஜனங்களைக் கேள்வி கேட்டேன். ஜனங்கள் கவனமாய்க் கேட்டதும், கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்கள் விடையளித்ததிலிருந்து நான் கண்ட அவர்களின் வேத அறிவும் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தந்தன....................'' *

மாலை ஆராதனை

மேலே கொடுக்கப்பட்ட குறிப்பிலிருந்து 1838ம் வருஷத்தில் நாசரேத் சபையில் நடைபெற்ற உன்னத ஊழியம் எத்தன்மையது என்றும், இத்தன்மையதான ஊழியத்தை நடைபெறச் செய்த பக்தன் இரியன் ஐயரின் உற்சாகம் எப்பேர்ப்பட்டது என்றும் நாம் உணர்ந்துகொள்ளலாம்.

---

* Report of Rev. G. Pettitt dated Feb. 12, 1838 in C. M. Record—October 1838 pages 145 f.

# அத்தியாயம் 4

## புதிய சகாப்த ஆரம்பம்

## 1838—1858

1838-ம் வருஷம் திருநெல்வேலித் திருச்சபைச் சரித்திரத்தில் விசேஷித்தது. இவ்வருஷத்திலிருந்து ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது. S. P. G., C. M. S. என்ற இரு சங்கங்களும் இம்மட்டும் தாங்கள் நடத்தி வந்த வேலையை இனி அதிக ஊக்கமாய் நடத்த ஆரம்பித்தன. இவ்விதமான ஓர் புதிய உற்சாகம் காணப்படுவதற்குப் பல காரணங்கள் உள. C. M. S. சபைகளில் 1835-ல் ரேனியஸ் ஐயருக்கும் C. M. S. சங்கத்தாருக்கு மிடையில் ஏற்பட்ட மனஸ்தாபத்தாலுண்டான பெரும் பிளவு அவரது மரணத்துடன் 1838-ல் முடிவுற்று, சமாதானம் நிலை பெற்றது. தாய்ச் சங்கத்தாரும் 1835-க்கு மேல் 1844-க்குள் திருநெல்வேலியின் பல பாகங்களிலும் மிகுந்த உற்சாகத்தோடும் விடா முயற்சியோடும் சுயவெறுப்புடனும் பரிபூரணமாய்த் தங்களைத் தத்தம்செய்து உழைக்கக்கூடிய பல மிஷனெரிமார்களை அனுப்பினார்கள். அவர்களில் விசேஷித்த சிலர், மகாகனம் சார்ஜன்ட் அத்தியக்ஷரவர்கள் (1835—1889) ஜாண் தேவசகாயம் ஐயர் (கடாக்ஷபுரம் 1832—61) கனம் ஜியார்ஜ் பெற்றிட் ஐயர் (பாளையங்கோட்டை 1835—1847,) எட்வர்ட் டென்ட் ஐயர் (டோனாவூர் 1835—1849) ஜாண் தாமஸ் ஐயர் (மெஞ்ஞானபுரம் 1837—1870) ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயர் (சாத்தன்குளம் 1839—56.) செப்டிமஸ் ஹாப்ஸ் ஐயர் (1842—55), ஜாண் டக்கர் ஐயர் (பண்ணைவிளை 1842—66,) போன்புருக் ஐயர் (சுரண்டை 1844—58;) இவர்களுடன் பிளவு நீங்கி ஐக்கியப்பட்ட கனம் P. P. ஷாப்டர் ஐயர் (நல்லூர் 1831—61,) J. J. முல்லர் ஐயர் (சுவிசேஷபுரம் 1832—43) என்பவர்கள். இதே விதமாய் S. P. G. தாய்ச் சங்கத்தாரும் புத்துயிர் பெற்றவர்களாய் 1838க்கு மேல் 1848க்குள் கனம் கால்ட்வெல் ஐயர் (பின்னால் அத்தியக்ஷர்) (இடையன்குடி 1841—1891,) கனம் A. F. கேமரர் ஐயர் (நாசரேத் 1838-–58,) G. Y. ஹேஹன் ஐயர் (முதலூர் 1839—45),) C. S. கோலாப் ஐயர் (முதலூர் 1839.) J. K. பெஸ்ட் ஐயர் (கிறிஸ்தியாநகரம் 1842—56,) G. U. போப் ஐயர் (சாயர்புரம் 1843—50) T. P. அடால்பஸ் ஐயர் (புதுக்கோட்டை 1848—53) என்ற மகா தீரபுருஷரான மிஷனெரிமாரை அனுப்பினார்கள். இரு சங்கத்தாரின் வேலையும் இது முதல் வெகு துரிதமாய் முன்னேறிற்று. இரு பக்கத்தாரின் சார்பிலும் கிராமம்

புதிய சகாப்தம்

பிரபல மிஷனேரிப் பேரியார் வருகை

கிராமமாய் ஜனங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள். இது முதல் ஆலயங்கள் கட்டப்படுதல், பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுதல், போர்டிங் கலாசாலைகள் ஏற்படுத்தப்படுதல், பெண் கல்வி முன்னேற்றம், சுய ஆதரவு முயற்சி, ஜெப புஸ்தக உபயோகம், தீவிர சுவிசேஷப்படைமுயற்சிகள் இவை திருநெல்வேலி அத்தியக்ஷாதீனச் சரித்திரத்தின் விசேஷித்த அம்சங்களாயின.

S. P. G. பாகங்களில் மேற்சொல்லப்பட்ட மிஷனெரிமாரில் முதலில் வந்தவர் நாசரேத் மிஷனெரியான A. F. கேமரர் ஐயர். இவர் காலத்திற்றான் நாசரேத் பிராந்தியத்தில் சபைகள் நிலைபெற்று S. P. G. ஊழியம் ஊர்ஜிதமடைந்தது. இது பற்றி 1841-ம் வருஷத்திய M. D. C. ரிக்கார்டில் கீழ்க்கண்ட கூற்று காணப்படுகிறது. "[பாளையங்கோட்டையிலிருந்த S. P. G. மிஷனெரியான] ஹபர்ட் ஐயர் (Rev. C. Hubbard B. A.) 1837-ம் வரு மதுரைக்கு மாற்றப்பட்டும், இரியன், ரோசன் ஐயர்மார் சுகவீனத்தின் காரணமாக லீவு எடுத்துக்கொண்டும், [திருநெல்வேலியை விட்டுப்] போன பின்னர் கேமரர் ஐயரின் நியமனம் புதிய சக்திவாய்ந்த ஊழிய காலத்தின் ஆரம்பமாயிற்று. சுவிசேஷ வைராக்கியத்தில் தமக்கு முந்தினவர்களுக்குச் சமமானவராகவும், இயற்கையாகவே சரீர பலத்திலும் சத்துவத்திலும் அவர்களை நிகர்த்தவராகவும் விளங்கிய இவர் நாசரேத் பிராந்தியத்தில் அழியா ஊழியத்தைச் செய்துள்ளார். இவர் இங்குவந்து சில நாட்களுக்குள்ளாகத், தாய்ச் சங்கத்திலிருந்து எவ்வித உதவியும் பெறாமலே இரு சபைகளின் மக்கள் தங்களுக்கு ஆலயங்களைக் கட்டிக்கொண்டனர். மிஷன் சரித்திரத்திலேயே இது ஓர் புதிய சகாப்த ஆரம்பமாகும்.'' *

கேமரர் ஊழியம்

கேமரர் ஐயர் வரும்போது, தஞ்சையிலிருந்து வந்து திருநெல்வேலியில் ஊழியம் செய்த சுதேசக் குருக்களில் கடைசியானவரான கனம் பாக்கியநாதன் ஐயர் நாசரேத்தில் வசித்து வந்தார். தாம் வந்தபின் சுதேசக் குருவொருவர் அவசியமாயிராததாலும், அக்குருவானவர் மீதும் பல புகார்கள் இருந்ததினாலும் தஞ்சைக்கெழுதி அவரைத் திரும்ப அழைத்துக்கொள்ளுமாறு ஏற்பாடு செய்தார். எனவே அவரும் திரும்ப அழைக்கப்பட்டார். கேமரர் ஐயருக்கு உதவியாகவிருந்த பாக்கியநாதனையர் தஞ்சைக்குச் சென்றுவிட்டபின் கேமரரே திருநெல்வேலியிலுள்ள S. P. G. சபைகள் யாவற்றையும் மேற்பார்வையிட வேண்டியதாயிற்று. மே மாதம் அவர் வந்ததிலிருந்து ஜூலை மாதம் பாக்கியநாதனையர் அனுப்பப்படுமட்டும் பாக்

பாக்கிய நாதனையர்

* M. D. C. Report 1841

கியாதனுல் அனுகூலத்துக்குப் பதில் உபத்திரவமே அதிகமாயிருந்தபடியால் அவர் போய்விட்டது கேமாருக்கு மிகவும் நன்மையாகவே இருந்தது என்றும் நாமறிகிறோம்.

S. P. G. சங்க ஊழியத்திலேற்பட்டிருந்த பல தாறுமாறுகளை நிவிர்த்தி செய்வதே ஐயரின் முதல் வேலையாயிற்று. இம்மட்டும் சங்கத்தார் திருநெல்வேலியில் உபதேசிமார் சம்பளமாக மாதந்தோறும் செலவழித்த பணம் ரூ. 223 தான். இந்தத் தொகையும் ஒழுங்காய் அனுப்பப்பட்டதில்லை. இதன் பயனுய்க் கிறிஸ்து மார்க்கத்துக்காகாத பல ஒழுங்கீனங்கள் சபைகளில் அபரிமிதமாய்க் காணப்பட்டன. எனவே ஐயர் சென்னைக் கமிட்டிமாருக்குக் கண்டிப்பான கடிதங்கள் எழுதி, சம்பளத் தொகை மாதம் 250 ரூபாயாக அதிகரிக்கப்படவும், அத்தொகை ஒழுங்காகக் காலாகாலத்தில் அனுப்பப்படவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளவே, கமிட்டிமார் தொகையை ரூ. 240 ஆக உயர்த்தி, அப்பணம் ஒழுங்காக அனுப்பப்பட ஏற்பாடு செய்ததினிமித்தம், (அது முதல்) சபை ஊழியம் செவ்வனே நடைபெறலாயிற்று.

உபதேசிமார் சம்பளம்

அடுத்த வருஷமான 1839ல் முதலூர் சேகரத்தை மேற்பார்வை செய்யவென்று கனம் C. S. சோலாப் ஐயரும், கனம் G. Y. ஹேன் ஐயரும் அனுப்பப்பட்டார்கள். அது முதல் கேமார் ஐயருக்கு முதலூர்ச் சேகரப் பொறுப்பு இல்லையெனினும், அக்காலத்தில் தாமே வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவராதலால், திருநெல்வேலி நாட்டில் நடைபெற்ற S. P. G. சங்க ஊழியம் முழுவதையும் கண்காணிக்க வேண்டிய உத்திரவாதம் அவருக்கிருந்து வந்தது. ஆதலின் அடிக்கடி சுற்றுப்பிரயாணங்கள் செய்து சபைகளைச் சந்தித்து, பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டு வந்தார். அக்காலத்தில் முதலூரில் ஆலயம் விஸ்தீரணமாக்கப்படவேண்டிய அவசியமேற்படவே, ஹேன் ஐயர் கேட்டுக்கொண்டபடி, கேமார் சென்னைக் கமிட்டியாருக்கு எழுதி ரூ. 2609 கிடைக்கும்படிசெய்ய, முதலூர்வாசிகள் தாங்களும் ரூ. 400 செலவழித்து, ரூ. 3000ல் 91 அடி நீளமும் 51 அடி அகலமும், சுமார் 1500 ஜனங்கள் உட்காரக்கூடிய விஸ்தீரணமுள்ளதுமான ஓர் பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டிமுடித்தனர்.

முதலூர் ஆலயம்

1840 மார்ச்சு மாதம் கேமார் ஐயருக்கு உதவியாக ஸ்ரீ C. E. மக்லியாட் (Mr. C. E. Mc Leod) உபதேசியார் அனுப்பப்பட்டார். இவர் வசிப்பதற்காக ரோசன் ஐயர் முதன் முதலாகக் கட்டின சிறிய பங்களா அறை ரூ. 127 செலவில் பெரிதாக்கப்பட்டது. நாசரேத்தில்

ஒரு வருஷம் ஊழியம் செய்த பின், மக்லியாட் பாளையங்கோட்டையில் 1841 ஜனுவரி 17ல் நடந்த குருப்பட்ட ஆராதனையில் உதவிக் குருவபிஷேகம் பெற்று, ஒரு வாரத்துக்குள் நாகப்பட்டினம் மிஷனெரியாக நியமிக்கப்பட்டு அவ்விடம் சென்று தம் மிஷனெரி ஊழியத்தை ஆரம்பித்தார்.

**C. E. மக்லியாட்**

1840 ஜூலையில் நாசரேத் சேகரத்தை சேர்ந்த இரு கிராமங்களில் 136 ஆத்துமாக்கள் புதிதாய்ச் சபையில் சேர்ந்ததாகக் கேமரர் எழுதுகிறார். இவ்விரு கிராமங்களில் ஒன்று மூக்குப்பீறி யென்றறியலாம். மற்றது எது வென்று திட்டமாகத் தெரியவில்லை. இதே வருஷத்தில் தான் உடன்குடியிலுள்ள சிலர் கிறிஸ்தவர்களாகித் தங்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிப் போதித்த முதலூர் மிஷனெரி கனம் C. S. கோலாப் (கிறிஸ்தியான் சாமுவேல் கோலாப்) ஐயரின் முதற் பெயரைக் கொண்டு தாங்கள் வசித்த பாகத்துக்குக் கிறிஸ்தியாநகரம் என்று பெயர் வைத்தனர். [ஒருக்கால் அந்த 'மற்ற கிராமம்' கிறிஸ்தியாநகரமாயிருக்கலாமோ?] இவ்விதம் பல கிராமங்களில் இயேசுவின் நாமம் பிரசங்கிக்கப்பட்டுப், பலர் ரக்ஷிப்பைக் கண்டடைந்து கிறிஸ்து மார்க்கத்தைச் சேரலாயினர். மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷர் இக்காலத்தைக் குறித்து, "நாசரேத் பிராந்தியத்தில் எற்பட்ட இப்புத்துணர்ச்சி ஒரு புதிய முன்னேற்ற சகாப்தத்தை ஆரம்பிக்கிறது. சத்திய நாதனையர் காலத்தில் போல மறுபடியும் ஆன்மாக்கள் அஞ்ஞானமார்க்கத்தைத் துறந்து, மந்தைக்குள் கூட்டம் கூட்டமாய் வரலாயினர்'' என்று கூறுகிறார். புதிதாக வந்த சபைகளை உற்சாகப்படுத்தி அவர்கள் மத்தியில் ஊழியம் செய்யவென்று கனம் ஐயர் இரு உபதேசிமாரை ரூ. 5 சம்பளத்தில் 'இவ்விரு கிராமங்களிலும்' எற்படுத்தினர்.

**கிறிஸ்தியா நகரம்**

1841ம் வருஷம் கேமரர் ஐயர் ஊழிய காலத்தில் நாசரேத் சேகரச் சரித்திரத்தில் விசேஷமானது. அவ்வருஷம் ஜனுவரி மாதம் 7ம் தேதியில் நாசரேத்துக்கு சென்னை மகாகனம் ஸ்பென்ஸர் (Rt. Rev. G. J. T. Spencer) அத்தியக்ஷரவர்கள் விஜயம் செய்தார்கள். இதுவே நாசரேத் பெற்றமுதல் அத்தியக்ஷ விஜயம். அத்தியக்ஷர் அன்று ஆராதனை நடத்தினர். அடுத்த நாள் 441 ஆத்துமாக்கள் திடப்படுத்தல் பெற்றனர். ஆராதனைக்குப் பின்னுல் நாசரேத்தாரும் உபதேசிமாரும் அத்தியக்ஷரைச் சந்தித்துத் தங்கள் மனமகிழ்ச்சியையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டார்கள். அத்தியக்ஷரவர்கள் தங்கள் தினசரிக் குறிப்பில் நாசரேத்தைப்பற்றி எழுதிய வரலாறு என்னவெனில் "நாசரேத்: ஜனுவரி 7. கனம் பிளாக்மன் (சாத்தன்குளம் மிஷனெரி) தாமஸ் (மெஞ்ஞான

**ஸ்பென்ஸர் அத்தியக்ஷர் விஜயம்**

புரம் மிஷனெரி) டென்ற் (டோனுவூர் மிஷனெரி) ஐயர்மாருடன்......... இன்று காலை இங்கு வந்து சேர்ந்தேன்............". "பாளையங்கோட்டை: ஜனுவரி 9: நாசரேத்திலிருந்து இரவு முழுவதும் பிரயாணம் செய்து இங்கு [பாளையங்கோட்டையில்] இன்று காலை சேர்ந்தோம். அந்த விசேஷித்த ஊரில் [நாசரேத்] இரண்டு நாள் தங்கச் சிலாக்கியம் கிடைத்தது. அங்கே 441 ஆத்துமாக்களைத் திடப்படுத்தினேன். நாசரேத் ஆலயம் கிறிஸ்தவ ஆலயத்துக்குரிய சகல அம்சங்களுமுடையதாய் திருநெல்வேலியில் நான் கண்ட சகல ஆலயங்களிலும் மிகவும் பெரியதும் மேலானதுமானது. சபையார் வெகு ஒழுங்குள்ளவர்கள். நான் அங்குக் கண்டதும் கேட்டதுமான சகல காரியங்களும் எனக்கு வெகு திருப்தியளித்தன. தென்னிந்தியாவின் பழைய ஜெர்மன் கோத்திரப் பிதாவொருவருடைய குமாரனுன கனம் கேமரர் ஐயர் ஜனங்களைப் பற்றியும், தாம் செய்யும் ஊழியத்தைப் பற்றியும் நல்ல அறிக்கை செய்தார்...............".†

கேமரர் தமது ஊழியத்தைப்பற்றி நல்ல அறிக்கை தரக்கூடியதாயிருந்தது ஆச்சரியமன்று. ஏனெனில் அவரது ஊழியம் நிச்சயமாகவே கடவுளுடைய உன்னத ஆசீர்வாதம் பெற்றிருந்தது. எப்படியென்ருல் அவரது ஊழியத்தின் பயனுக அடுத்த மாதத்திற்குள் 5 கிராமங்களில் பல குடும்பத்தார் தாங்கள் கிறிஸ்தவர்களாகி ஞானஸ்நானம் பெற விரும்புவதாக ஐயருக்குத் தெரிவித்தார்கள்.

**ஐந்து சபைகள்**

இது பற்றி S. P. G.யின் இருநூறு வருஷச் சரித்திரம் என்ற நூலில் "அவருடைய (அத்தியக்ஷருடைய) விஜயத்துக்கு அடுத்த மாதம் 5 கிராமங்கள் நாசரேத் மிஷனைச் சேர்ந்தன. மே மாதத்தில் கேமரர் ஐயர் அஞ்ஞான மார்க்கத்தை உதறித் தள்ளின ஜனங்கள் தம்மிடம் ஒப்புவித்துவிட்ட விக்கிரகங்கள் நிறைந்த கூடை ஒன்றை சங்கத்தாருக்கு அனுப்பினர்"* என்றெழுதப்பட்டுள்ளது.

இவ்வைந்து சபைகளின் வரலாறு.

பன்றிமடல். 1841 ஏப்ரலில் 23 ஆண்களும், 19 பெண்களும், 29 குழந்தைகளுமான 19 குடும்பத்தார் ஞானஸ்நான ஆயத்தக்காரராகச் சேர்க்கப்பட்டார்கள்.

கடையனேடை. 1841 மார்ச்சுமீ. ஆயத்தக்காரராக 61 ஆண்களும், 69 பெண்களும், 133 குழந்தைகளும் சேர்ந்த 54 குடும்பங்கள் சேர்க்கப்பட்டன.

† P. 236 Caldwell's Tinnevelly Mission

* P. 536 Two-hundred years of S. P. G.

...... வதுத்தான்குப்பம். 1841 எப்ரிலில் 18 ஆண்களும், 15 பெண்களும், 21 பிள்ளைகளும் கொண்ட 14 குடும்பத்தினர் ஆயத்தக்காரரானூர்கள். வேதக்கண் என்பார் உபதேசிகராக நியமிக்கப்பட்டார்.

தேமாங்குளம். 5 ஆண்களும், 4 பெண்களும், 10 பிள்ளைகளும் உள்ள 7 குடும்பத்தார் 1841 ஜூலையில் ஆயத்தக்காரராகச் சேர்க்கப்பட்டார்கள்.

வெள்ளரிக்காயூரணி. 1841ல் (மாதம் தெரியவில்லை) 12 ஆண்கள், 18 பெண்கள், 22 பிள்ளைகளையுடைய 17 குடும்பத்தார் ஆயத்தக்காரராகச் சேர்க்கப்பட்டார்கள்.

மேற்கண்ட சபைகளுடன் நாசரேத் வட்டாரத்தைச் சேர்ந்த சபைகளில் மற்றவை நாம் ஏற்கெனவே பார்த்த உக்கிரமன்கோட்டை, பார்வதியாபுரம், பட்டி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, சாயர்புரம், செவத்தையாபுரம், மூக்குப்பீறி, வாழையடி, எருசலேம் முதலியன. ஒய்யான்குடி ஆழ்வார்திருநகரி, திருக்கோளூர் என்ற இவ்வூர்கள் 1837ம் வருஷம் முதல் C. M. S. சங்கத்தாருக்குட்பட்டிருந்தன. ஒய்யான்குடியில் 1837ல் ஒரு ஆணும், இரண்டு பெண்களும், 3 குழந்தைகளுமுள்ள ஒரு குடும்பம பிரகாசபுரம் C. M. S. உபதேசிகருடைய முயற்சியால் சுவிசேஷத்தை விசுவாசித்து ஆயத்தக்காரரானூர்கள். ஆழ்வார்திருநகரியில் C. M. S. ஊழியம் 1837க்கு முன்னேயே ஆரம்பமாயிற்று என்று 1838ம் வருஷத்தில் அக்டோபர் மாதம் C. M. S. மிஷனெரி கனம் பெற்றிட் ஐயர் எழுதிய ஓர் கடிதத்திலிருந்து தெரியவருகிறது.


**ஆழ்வார்திருநகரி C. M. S. சபை**

அவர் * "ஆழ்வார்திருநகரி என்ற இவ்வூர் விஷ்ணு பக்தருக்கு ஓர் விசேஷித்த பெரிய பட்டணம். சமீபத்தில் தேவமாரில் சுமார் 30 குடும்பத்தினர் ஆயத்தக்காரராகி உபதேசம் கற்று வருகிறூர்கள். அவர்கள் தங்களுக்கென்று ஒரு சிறு ஜெப வீடும் அமைத்திருக்கிறூர்கள். இன்று மதியம் அவர்களுக்கு ஆராதனை நடத்தி முதலாம், பதினூரும் சங்கீதங்களை வாசித்து, வேதத்தின் மேன்மையை எடுத்துக் காட்டிப் பிரசங்கித்தேன். அவர்கள் இதற்குள்ளாகக் கற்றுக்கொண்டிருக்கிற ஞானேபதேச வினு விடை அறிவு எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. இவ்வூரில் நமக்குள்ள மூன்று பள்ளிக்கூடங்களையும் பார்வையிட்டேன். முதல் பள்ளிக்கூடத்தில் 40 பிள்ளைகளும், தேவமார்களுக்காக ஏற்படுத்திய பள்ளிக்கூடத்தில் 30 பிள்ளைகளும், சமீபத்தில் ஏற்படுத்தியதில் 21 பிள்ளைகளுமே வந்திருந்தார்கள்." † என்றெழுதியிருக்கிறூர். மேலும் வேறொரு


---

* ஆழ்வார்திருநகரியின் ஜனத்தொகை 33000.

† C. M. Record of 1838 October




தைலாபுரம் பரி. மிகாவேல் ஆலயம்
பிரதிஷ்டை 1—11—1934




ஆசீர்வாதபுரம் — பரி. லூக்கா ஆலயம்
பிரதிஷ்டை 21—10—26

## [ இக்காலத்துள்ள ஆலயங்கள் ]




குரிப்பன்குளம் — தேவதாயார் ஆலயம்
பிரதிஷ்டை 18—2—1937




தோப்பூர்—இயேசுவின் திருநாம ஆலயம்
பிரதிஷ்டை 1933


# [ இக்காலத்துள்ள ஆலயங்கள் ]



வகுத்தான்குப்பம் ஆலயம்
பிரதிஷ்டை 1920



முதலிமொழி — பரி. அகஸ்ற்றீன் ஆலயம்
பிரதிஷ்டை 1913



வேதநகர் — பரி. அந்திரேயா ஆலயம்
பிரதிஷ்டை 22—11—1947

கடிதத்திலிருந்து 1837லேயே முதற் பள்ளிக்கூடம் இங்கு ஸ்தாபிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

**ஒய்யான்குடி**

1838-ம் வருஷத்துக்குப் பின் ஒய்யான்குடியின் பெயரே C. M. S. ரிக்கார்டுகளில் காணப்படவில்லையாதலால் 1840-ம் வருஷத்தில் "நாசரேத் பிராந்தியத்தில் இரு ஊர்களில் 136 ஆத்துமாக்கள் புதிதாய்ச் சபையில் சேர்ந்ததாகக்" கேமரர் குறிப்பிடுகிற கிராமங்களில் ஒன்று ஒய்யான்குடியாயிருக்கலாம் என்ற எண்ணமுமுண்டு. ஆனால் ஆதாரமில்லை. C. M. S. சபையைச் சேர்ந்திருந்த அந்த ஒரு குடும்பத்தினர், ஒன்று மற்றவர்களுடன் சேர்ந்து S. P. G. சபைக்குட்பட்டிருந்திருக்கலாம், அல்லது வேறிடம் சென்றிருக்கலாம். அது பற்றியும் எதுவும் சொல்லவியலாது.

**பொறமைத் தீ**

மேற்சொன்னவாறு பற்பல கிராமங்களில் கிறிஸ்து மார்க்கம் பாவ ஆரம்பித்தது. நாசரேத் பிராந்தியத்தில் மட்டுமன்றி, முதலூர் சேகரத்திலும், விசேஷமாய்க் கரைச்சுற்றுக் கிராமங்கள் என்ற தற்கால இடையன்குடி வட்டாரத்திலும், C. M. S. பாகத்தில் பண்ணைவிளை, பாளையங்கோட்டை, நல்லூர், டோனாவூர், சாத்தன்குளம், மெஞ்ஞானபுரம் வட்டாரங்களிலும் ஏராளமானவர்கள் ரக்ஷிப்பின் நற்செய்தியை ஏற்றுக்கொண்டார்கள். இவ்விதம் ஏராளமான இந்துக்கள் கிறிஸ்தவர்களானதும் திருச்செந்தூர், ஆழ்வார்திருநகரி, பெருங்குளம், ஸ்ரீவைகுண்டம், ஏரல் முதலிய நகரங்களில் பெரிய கலக்கம் உண்டாயிற்று. தீவிரமாய்ப் பாவி வருகிற கிறிஸ்துமார்க்கத்தைத் தடுக்காவிடில் இந்துமார்க்கத்துக்கு விக்கினம் நேரிடும் என்று எண்ணின பிராமணர், இத்தருணத்தைப் பயன்படுத்தி, திருச்செந்தூரில் "விபூதி சங்கம்" என்றொரு கழகத்தை ஏற்படுத்தினர். இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் கிறிஸ்தவர்களைப் பயமுறுத்தி, கஷ்டநஷ்டங்களுக்குட்படச் செய்து, இம்சித்துத் தங்கள் புதிய மார்க்கத்தை அவர்கள் கைவிடச் செய்ய வேண்டுமென்பதே.

**சாலைத்தெரு**

இவ்விபூதி சங்கத்துக்கு அதிக ஆதரவளித்தது சென்னையில் ஏற்பட்ட 'சாலைத்தெருச் சங்கம்'. இச்சங்கம் மிஷனெரிமாருக்கு விரோதமாக அவதூறான பிரசாரங்கள் செய்வதும், அக்காலத்திய கிழக்கிந்திய சர்க்காரிடத்தில் அக்கிரமமான பொய்க்குற்றச்சாட்டுகள் ஏறெடுப்பதும், 'தேசாபிமானி' என்ற பத்திரிகை ஒன்றை ஸ்தாபித்து, அதில் கிறிஸ்துமார்க்கக் கண்டனமும், இந்துமார்க்கப் பிரசாரமும் செய்வதுமாய், ஜனங்களைக் கிளப்பிவிட்டது. சர்க்காரும், தாங்கள் கிறிஸ்தவர்களாயிருந்தும், இந்தியாவில்

கிறிஸ்துமார்க்கம் பரவுவதைச் சகியாதவர்களாய், அதைத் தடுப்பதே தங்கள் கொள்கையாக வுடையவர்களானதால், மேற்படி விஷயத்தில் கண்சாடையாயிருந்தனர். இந்துக்களான கீழ்த்தர அதிகாரிகள் இதுகண்டு, தங்களிடத்தில் வரும் பொய்ப் பிராதுகளை நிஜம் எனப் பாராட்டிக் கிறிஸ்தவர்களுக்கு அநீதி செய்தார்கள். அக்காலத்தில் திருநெல்வேலியில் கலெக்டராயிருந்தவரும் மிஷனெரிமாரையும் சுதேசக் கிறிஸ்தவர்களையும் பற்றிக் குறைவான அபிப்பிராயம் கொண்டிருந்தமையால் பராமுகமாயிருந்தார்.

ஆகவே விபூதி சங்கத்தார் தங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்துவிட 1841 ஏற்ற சமயமாயிற்று. முதன் முதலில் ஏரல் கிராமத்தில் இவ் விஷத்தீ மூட்டப்பட்டது. அங்கு தேவமார்களில் சில குடும்பத்தார் ஆயத்தக்காரராயிருந்தனர். ஒரு நாள் திடீரென்று ஏரல் இந்துக்களும், வெளியூர்களிலிருந்து இக்காரியத்துக்காகவே தருவிக்கப்பட்ட பலரும் அக்கிறிஸ்தவர்களைத் தாக்கிச் சிறைப்பிடித்து, ஓர் இடத்தில் காவலில் வைத்துவிட்டு, அவர்களுடைய வீடுகளைக் கொள்ளையடித்து, தாசில்தாரிடத்தில் பொய்ப் பிராது செய்வதாய்ப் பயமுறுத்தி, மேற்படி கிறிஸ்தவர்கள் இந்துமார்க்கத்தைத் துறந்த குற்றத்திற்காக அபராதம் செலுத்தி விபூதி பூசிக்கொண்டால் அவர்களை விடுதலையாக்கி, அவர்கள் உடைமைகளையும் திரும்பத் தந்துவிடுவதாகக் கூறினார்கள். இச்செய்தி வெகு சீக்கிரத்தில் பண்ணைவிளைக்கு எட்டவே, அங்கிருந்து பல உபதேசிமாரும் சபை மூப்பரும் ஏரலுக்குச் சென்று கிறிஸ்தவர்களை விடுவிக்கப்போனார்கள். ஆனால் ஜனக்கூட்டம் அவர்களைத் தாக்கிப் பிடித்தும் கல்லாலெறிந்து காயப்படுத்தி வெருட்டியும் விட்டதுமன்றி, தாசில்தாரிடத்தில் பண்ணைவிளையார் மீது வழிப்பறிக் கொள்ளைக் குற்றம் சுமத்திப் பிரியாது செய்தார்கள். கிறிஸ்தவர்கள் தாங்கள் இந்துக்களிடத்திலடைந்த கொடூரங்களைக் காட்டி வியாஜ்யம் செய்தும், இந்து அதிகாரிகள் பாரபக்ஷம் காட்டி அவர்கள் வியாஜ்யத்தைத் தள்ளிவிட்டனர். மேலதிகாரிகளான ஐரோப்பிய துரைமாரும் இவ்விஷயத்தில் தலையிடமறுத்துவிட்டார்கள். ஏரலில் கிடைத்த வெற்றியின் செய்தி நாடெங்கும் காட்டுத்தீப் போல் பரவியது. உடனே தென்கிழக்குப் பிரதேசத்தில் கிறிஸ்தவர்களுக்குக் கொடுந்துன்பம் உண்டாயிற்று. இத் துக்கச்சரிதையை விவரிக்க இடம் போதாது. கிராமம் கிராமமாய்க் கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டார்கள். சிறைப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் திருச்செந்தூருக்கு இழுத்துச் செல்லப்பட்டு, திருச்செந்தூர் கோவிலின் முன்னால் விபூதி பூசிக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். மறுத்தால் இம்சை. இதன் பயனாக ஏராளமான கிறிஸ்தவர்கள் "இரக்கத்தின் பிராகாரங்களுக்குள் அடைக்கலம் புகுந்திருந்தும் மறுபடியும் சாபத்

ஏரல் துன்பம்

தீடான சாத்தானின் காவலுக்குள் கட்டாயமாகவும் பயத்தினாலும் இழுக்கப்பட்டார்கள்."* மெஞ்ஞானபுரம் சேகரத்தில் மட்டுமே சுமார் 1000 பேர் மறுதலித்து விட்டார்கள்.

கிராமங்களில் தங்களுக்குக் கிடைத்த ஜெயத்தினால் ஊக்கப்பட்டவர்களாய்ப், பகைவர் மிஷனெரி வாசஸ்தலங்களையும் தாக்க ஆரம்பித்தனர். சுமார் 500 பேர் மெஞ்ஞானபுரத்தைத் தாக்கும் நோக்கமாய் கம்பு, தடிகளுடனும் மற்ற ஆயுதங்களுடனும், அவ்வூருக்குச் சுமார் ஒரு மைல் தூரத்தில் வந்து விட்டார்கள். வழியிலிருந்த கிராமங்களில் கிறிஸ்தவ ஜெபாலயங்களை இடித்து, வீடுகளைக் கொள்ளையடித்து, கிறிஸ்தவர்களையும் உபதேசிமாரையும் நிர்ப்பந்தப்படுத்தி, பலவித இம்சைகளுக்குள்ளாக்கினர். ஆனால் இரக்கமுள்ள தகப்பன் மெஞ்ஞானபுரத்தைக் காத்தருளினார். முற்றுகையிட்ட பகைவர் ஏதுகாரணத்தாலோ பின்வாங்கி விட்டார்கள்.

மெஞ்ஞானபுரம் முற்றுகை

† நாசரேத் வட்டாரத்தில் தான் இந்த வருஷத்துவக்கத்தில் சபைகள் அதிகமாய்ப் பெருகின. புதிதாய்ச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 1000க்கு மேலானது. எனவே பகைவரின் ஒரு முக்கிய இலக்கு நாசரேத். எவ்விதமும் அவ்வூரைப் பிடித்துக், கிறிஸ்தவர்களை மறுதலிக்கச் செய்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிப், பெருங்கூட்டமாக அவர்கள் நாசரேத்தை நோக்கி முன்னேறினார்கள். ஊரில் பெருந்திகிலும் கலக்கமும் ஏற்பட்டது. இதற்கு முன் C. M. S. மிஷனெரிமார் சர்க்கார் அதிகாரிகளுக்கு என்னவிதமாய் மனுச் செய்தும், நேரில் தங்கள் கஷ்டத்தை எடுத்துரைத்தும் பயனில்லாது போயினமையின், நாசரேத் மிஷனுக்கே முடிவு காலம் கிட்டியதோ என்று மக்கள் ஐயுற்றனர் எனினும் தங்களையும் தங்கள் ஊரையும் காக்கவேண்டிய பொறுப்பை உணர்ந்து நாசரேத்தூரார் யுத்தத்துக்குத் தயாராயினர். இச்செய்தி கேள்வியுற்ற கனம் கேமரர் ஐயர் உடனே பாளையங்கோட்டைக்குப் போய். அங்குள்ள ஐரோப்பிய சர்க்கார் உத்தியோகஸ்தரான கலெக்டர், சப்கலெக்டர், போலீஸ் அதிகாரி, நியாயாதிபதி முதலியோரை நேரில் கண்டு, கிறிஸ்தவக் கிராமமாகிய நாசரேத்தும், அதிலுள்ள தமது வீடும் பேராபத்துக்குட்பட்டிருக்கிறதென்றும், கிறிஸ்தவர்களுடைய வார்த்தைகள் இம்மட்டும்

நாசரேத் படையெடுப்பு

---

* Half-yearly report 1841 Dec. reported in Madras and South India Mission Report Nov. 1842. by Rev. John Thomas of Megnanapuram.

† Pp 263, 266 – History of Tinnevelly Mission by Rev. G. Pettitt.

சர்க்காரால் நம்பப்படாதபடியால் தங்களுக்கு நியாயம் கிடைக்க வழியில்லை என்றும், அதனால் பகைவரை எதிர்த்துச் சண்டை செய்து தங்கள் உயிரையும், உடைமைகளையும் பாதுகாக்க நாசரேத்வாசிகள் முடிவு செய்துவிட்டார்கள் என்றும், ஆதலால் சர்க்கார் உடனே தகுந்த நடவடிக்கை எடாதிருப்பின், பெருங்கலகமும், மிகுந்த உயிர்ச்சேதமும் உண்டாகும் என்றும் தெரிவித்தார். இதன் பின்னரே அதிகாரிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது போலும்! உடனே போலீஸ் ஜவான்களை மாறுவேடத்தில் தலத்துக்கு அனுப்பி உண்மையை அவர்கள் மூலமாய் விசாரித்தறிந்து, பிரதான எதிரிகளை வாரண்டு மூலம் கைது செய்தனர். கிறிஸ்தவர்களுக்கு எதிரிகளிழைத்த கொடுமைகள் விசாரிக்கப்பட்டு, மறுதலித்தவர்கள் அவர்களுக்கெதிராகச் சாட்சி சொல்லப் பயந்து மறுத்தபோதிலும், பல குற்றங்கள் ருசுப்படுத்தப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டனர். மற்றவர்கள் 'நாட்டில் சமாதானத்துக்குப் பங்கம் விளைவியாதிருக்கவேண்டும்' என்று எச்சரிக்கப்பட்டு, நன்னடத்தை ஜாமீனில் விடப்பட்டார்கள். அது முதல் சீக்கிரத்தில துன்பம் ஓய்ந்து, வருஷ முடிவுக்குள் அமைதி ஏற்பட்டது.

இவ்வண்ணம் நாசரேத்தாரின் உறுதியும், கேமரர் ஐயருடைய மனோதைரியமுமே 1841-ம் வருஷம் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களுக்குண்டான கொடிய விபத்தைப் போக்குவதற்குக் கர்த்தர் உபயோகித்த கருவிகள் ஆனார்கள் எனின் மிகையாகாது.

உலக திருச்சபைச் சரித்திர மாணவர் அறிந்து கொள்ளக்கூடிய சத்தியம் ஒன்றுண்டு. எவ்வெப்பொழுது திருச்சபைக்குத் துன்பம் ஏற்பட்டதோ அவ்வக்காலங்களில் இருபெரு நன்மைகள் சபைக்குப் பலிக்கும். அவை: உறுதியாய் நின்ற சபைகள் விசுவாசத்தில் இன்னும் வலிமையடைந்து வாலவயது பெறும்; மற்றப்படி, பதர் பறந்து போக, எஞ்சினோரின் சீரிய விசுவாசம், ஊக்கம், பக்தி இவற்றினால் கவரப்பட்டு மற்றவர்கள், அதிலும் பகைவர், திரள் கூட்டமாய்ச் சபையில் சேருவார்கள்.

துன்பத்தின் பயன்

திருநெல்வேலித் திருச்சபையிலும் இவ்விரண்டும் உண்மையாயின. சபைகள் விசுவாசத்தில் வலுப்பெற்றன. நாசரேத் சபையின் விசுவாசம் ஆழமாய் வேரூன்றி விட்டது. இத்துன்பத்தில் சில ஊர்களிலிருந்த சபைகள் அடியோடு அழிந்து விட்டன. மற்றும் பல கிராமங்களில் ஏராளமானவர்கள் பின்வாங்கி விட்டனர். S. P. G. பாகங்களில் ஒரு சபையிலாவது ஞானஸ்நானம் பெற்றவர்களையன்றி ஆயத்தக்காரரில் மறுதலியாத ஒரு ஆத்துமாவாவது காணப்படாமலில்லை. * ஆனால் நாசரேத்தில் மட்டும்

* M. D. C. Record May 1841 Report by A. F. Caemmerer

ஞானஸ்நானம் பெற்றவர்களிலும் ஆயத்தக்காரரிலும் ஒரு ஆணாவது, பெண்ணாவது, பிள்ளையாவது 'தன் ரக்ஷகரைக் காட்டிக் கொடுக்கவில்லை.'

அதோடு துன்பம் முடிந்ததும் ஏராளமான ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தனர். பிரகாசபுரத்தில் மட்டும் ஒரே நாளில் 109 பேர். இப்படியே ஒவ்வொரு சபையிலும் இந்துக்கள், அதிலும் சிலர் முந்திய பகைவர், கிறிஸ்துவின் தொண்டரானார்கள். கேமரர் ஐயர் ஞானஸ்நானம் பெறாதவர்களைவிட ஞானஸ்நானம் பெற்றவர்களின் உறுதி நம்பப்படத்தக்கதாயிருந்தது என்று கண்டதும், ஆயத்தக்காரராக இதுவரை இருந்தவர்களையும், புதிதாய்ச் சேர்ந்தவர்களையும் அத்திவ்விய சாக்கிரமெந்துக்கு ஆயத்தப்படுத்தி, அடுத்த வருஷம் முதல் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். எனினும் சரியான ஆயத்தமில்லாவிட்டால் ஞானதீக்ஷை கொடுக்க மறுத்தார். வெள்ளரிக்காயூரணியில் முதல் ஞானஸ்நானம் 1842 ஜனுவரியில் ஞானமுத்து, பாக்கியம் என்ற இருவருக்குக் கொடுக்கப்பட்டது.

**ஞானஸ்நான ஆராதனைகள்**

கடையனோடையில் 1841-ம் வருஷத் துன்பத்தில் 26 குடும்பத்தார் மருள விழுந்தது போக மீதியான 28 குடும்பத்தாரில் ஒரே குடும்பத்தாருக்கு மட்டும் 1842 நவம்பர் 6-ல், தகுந்த ஆயத்தமுண்டென்று ஐயருக்குத் திருப்தி ஏற்பட்டு, ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அடுத்த வருஷம் ஏப்ரில் 9-ல் மேலும் 5 குடும்பத்தார் இச்சாக்கிரமெந்தைப் பெற்றார்கள். டிசம்பரில் இன்னும் 13 குடும்பத்தார். இவ்விதமாய் சபை உறுதிப்பட்டதும், முன்னால் மறுதலித்த 26 குடும்பத்தாரும் அவ்வருஷம் செப்டம்பர் மாதத்துக்குள்ளும், டிசம்பருக்குள் புதிதாய் 58 குடும்பத்தாரும் சபையில் ஆயத்தக்காரராய்ச் சேரவே, 1843 டிசம்பருக்குள் 360 ஆத்துமாக்கள் கொண்ட 112 குடும்பத்தாரையுடைய பெரிய சபையாகக் கடையனோடை வளர்ச்சியடைந்தது.

பன்றிமடவில் ஞானஸ்நான ஆராதனை 1844 ஜுலை 5-ம் தேதி நடந்தது.

வகுத்தான்குப்பத்தில் நவம்பர் 11-ல் முதன் முதல் 3 ஆண்களும், 4 பெண்களுமான 7 பேரடங்கிய ஒரு குடும்பத்தாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

மூக்குப்பீறியில் இன்னும் இந்துக்களாயிருந்தவர்களில் 49 பேர் துன்பம் ஓய்ந்ததும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, ஆயத்தக்காரராகி 1842 அக்டோபர் 30-ல் கேமரர் ஐயரால் ஞானதீக்ஷையின் மூலம் சபையில் சேர்க்கப்பட்டனர்.

மேற்சொன்னவை தவிர, 1844-க்குள் குளத்துக்குடி, பாற்குளம், மாவீடுபண்ணை முதலிய கிராமங்களிலும் மார்க்கம் ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. கேமரர் ஐயர் 1845-ம் வருஷ M. D. C. ரிக்கார்டில் * " நாசரேத்திலிருந்து வடக்கே ஆற்றின் இக்கரை வரைக்கும் உள்ள எல்லாக் கிராமங்களிலும் நாடார்கள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். 1844 அக்டோபர் முதல் 1845 ஜூன் வரையுமுள்ள சுமார் 9 மாதங்களுக்குள் 832 பேரடங்கிய 227 குடும்பங்கள் பல புதிய கிராமங்களிலிருந்து கிறிஸ்துவின் மந்தைக்குட்பட்டிருக்கிறார்கள். பழைய கிராமங்களிலும் சுமார் 500 பேர் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். 1844 அக்டோபர் மீ 9-ம் தேதி 'மாவீடுப்பம்' (மாவீடுபண்ணை) என்ற கிராமத்தினர் அனைவரும் ஒருங்கே கிறிஸ்தவ உபதேசம் கேட்க விரும்பி ஆயத்தக்காரராக அனுமதிக்கப்பட்டார்கள்" என்றெழுதினார். அம்மாதம் 11-ம் தேதி † கேமரர் தாமே நேரில் மாவீடுபண்ணைக்குச் சென்றார். கிராமத்தார் தங்களுக்குச் சொந்தமாய் ஆற்றுக்குள் கட்டப்பட்டிருந்த 5 இந்துக் கோவில்களை ஐயர் வசம் ஒப்புவித்தனர். இவைகளில் ஒன்று கட்டப்பட்டு 230 வருஷமாயிருந்தது. தங்களுக்கு ஒரு உபாத்தியாயரை அனுப்பவேண்டும் என்றும் அவ்வூரார் கேட்டுக்கொண்டனர். அடுத்த நாளில் அவர்கள் தாங்கள் இம்மட்டும் வணங்கிவந்த 36 விக்கிரகங்களை ஒரு வண்டியிலேற்றி, 13-ம் தேதியில் நாசரேத் சேர்ந்து கேமரர் வசம் ஒப்புவித்து, இவ்விதமாய்த் தங்கள் தீர்மானத்தின் உறுதியை நிரூபித்தார்கள்.

சபை வளர்ச்சி

மாவிடுபண்ணை

1841-ம் வருஷ இறுதியில் கனம் ராபர்ட் கால்ட்வெல் [பின்னால் அத்தியக்ஷர்] திருநெல்வேலியில் ஒரு மிஷனெரியாய் நியமிக்கப்பட்டு, இடையன்குடியைத் தலைமை ஸ்தானமாக்கி அங்கிருந்து ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்டார். அவர் சென்னையிலிருந்து புறப்பட்டுக் கால் நடையாகவே தஞ்சை வந்து, அங்கிருந்தும் நடந்தே உதகை சென்று உதவிக் குருப்பட்டம் பெற்று, பின்னும் நடந்தே கோயமுத்தூர், திண்டுக்கல், மதுரை மார்க்கமாய்ப் பாளையங்கோட்டை சேர்ந்து, நவம்பர் 28-ம் தேதி நாசரேத்துக்கு வந்தார். அன்று அட்வெந்து ஞாயிறு. கால்டுவெல் அத்தியக்ஷரது 50 வருஷத் திருநெல்வேலி வாழ்க்கையில் அதுவே முதல் ஞாயிறு. அன்று நாசரேத் ஆலயத்தில் பிரசங்கம் செய்யக் கனம் கேமரர் ஐயர் அவரைக் கேட்டுக்கொள்ளவே, "இரவு சென்று போயிற்று ; பகல் சமீபமாயிற்று" என்ற திவ்விய வசனத்தின் பேரில் முதன் முதலாகத்

ராபர்ட் கால்டுவெல் ஐயர்

* M. D. C. 1845 P. 82.

† P. 536 Two - hundred years of S. P. G.

தமிழில் பிரசங்கித்தார். ஆம், 'இரவு' சென்று போயிற்று. துன்ப இருள் கடந்துவிட்டது. அஞ்ஞான இருட்டின் ஆதிக்கம் கழிந்துவிட்டது. நவம்பர் துவக்கத்தில்தான் பகைவர் தண்டிக்கப்பட்டு அமைதி உண்டாயிருந்தது. இனி 'அகவிருள் அகன்று அறிவொளி வீசும்' பகல் வந்துவிட்டது. * திருநெல்வேலித் திருச்சபை வாழ்க்கையின் பிற்காலச் சரித்திரத்தை பற்றுநோக்கின் மெய்யாகவே அன்று ஊனம் கால்ட்வெல் நாசரேத் பொற்பத்தில் நின்று உன்னத தீர்க்கதரிசனம் உரைத்தார் என்றறியலாம்.

இத்தீர்க்கத்தரிசனத்தின் உடன் நிறைவேறுதலாக S. P. G., C. M. S. பாகங்களிரண்டிலும் கிறிஸ்துவின் ராஜ்யம் முன்னேவிட அதிக தீவிரமாய்ப் பரவினது மட்டும் அன்றி, அம்மார்க்கம் நிலைத்துவிட்டது என்பதற்கறிகுறியாகப் பலவிடங்களில் பேராலயங்கள் கட்டப்பட்டும் [1] சுய ஆதரவு முயற்சிகள் பல நிர்மாணிக்கப்பட்டும், கிறிஸ்தவ மெய்யறிவில் பின் சந்ததியாரைப் பயிற்றுவிக்க ஏராளமான ஆரம்பப் பாடசாலைகள், [2] போர்டிங் பாடசாலைகள் அதிலும் விசேஷமாய்ப் பெண்களுக்கென்று பிரத்தியேகக் கலாசாலைகள், லேஸ் பின்னுதல், தையல் வகுப்புகள் முதலிய கைத்தொழிற்சாலைகள் [3] போதனுமுறைப் பாடசாலைகள், உயர்தரக் கலாசாலைகள், [4] சின்னுட் கழித்து மிஷன் ஆஸ்பத்திரிகள் முதலியன ஸ்தாபிக்கப்பட்டும், வேதாகம மொழி பெயர்ப்பு, [5] ஜெப புஸ்தக உபயோகம், ஞானப்பாட்டு, கீர்த்தனைகள் முதலியன அச்சடிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டும், திருநெல்வேலியில் கிறிஸ்து ராஜாவின் அன்பின் ஆட்சி மக்களின் சரீர ஆன்ம ஈடேற்றத்துக்காக அழியாத் தன்மையுடன் விளங்கலாயிற்று.

தீர்க்கத்தரிசனம் நிறைவேறல்

மேற்சொன்னவாறு திருநெல்வேலி நாட்டில் 1842 முதல் ஆரம்பமான தீவிர முன்னேற்றம் நாசரேத் சேகரத்திலும் காணப்பட்டது. கேமரர் ஐயர் மிகவும் சுறுசுறுப்பும், உற்சாகமும், எட்டியோசித்து எதையும் செய்யும் ஆற்றலும் மிக்கவர். அவருக்கு வாழ்க்கைத்துணைவியாயமைந்த அனி (Annie) அம்மாள் ஓர் உத்தம கிறிஸ்தவ மாது. இவ்வம்மையார் 1821ம்

அனி கேமரர்

---

* See page 78. Reminicences of Bp. Caldwell by J. L. Wyatt.

[1] 1855 நாசரேத் சுதேச திருச்சபை சுய ஆதரவு நிதி.

[2] 1841 மெஞ்ஞானபுரம், 1844 இடையன்குடி, சாயர்புரம் முதலிய பற்பலவிடங்களில் போர்டிங் பாடசாலைகள்.

[3] 1844 கனம் போப் ஐயர் கலாசாலை, சாயர்புரம்.

[4] 1854 சாயர்புரம் மிஷன் ஆஸ்பத்திரி ஹக்ஸ்டபிள் ஐயரால் ஸ்தாபிக்கப்பட்டது.

[5] 1843, 44ல் ஜெப புத்தகம் மறுபடியும் மொழி பெயர்க்கப்பட்டு உபயோகத்தில் வந்தது.


வருஷம் ஜூலையில் பிறந்தவர்கள். ஐயருக்குச் சுமார் 17 வருஷம் இளையவர்கள். விவாகம் ஆகும்பொழுது சுமார் 20 வயதேயாயினும் தம் கணவரின் ஊழியத்தில் மிகவும் உற்சாகமாய்ப் பங்கெடுத்தார்கள்.

நாசரேத் ஊருக்கு வந்தது முதல் இவ்வம்மையாரின் மனதிலிருந்த பேராவல் நாசரேத்துப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட ஓர் பாடசாலை அமைக்கவேண்டுமென்பதே. ஆனல், இது இலகுவில் நிறைவேற்றிவிடக் கூடிய காரியமன்று. எற்கெனவே 1820இல் ஹாப் ஐயர் இவ்வூரில் ஒரு பெண் பாடசாலையை வெகு சிரமத்துடன் ஸ்தாபித்தும் 1826க்கு முன் அக்கலாசாலை அகால மரணமடைந்தது என்று முன் கண்டோம். ரோசன் ஐயரும், இரியன் ஐயரும் சுதேசிகள் பெண்கல்வி விஷயத்தில் கொண்டுள்ள விபரீத சித்தாந்தங்களை அறிந்தவர்களானதால், இது விஷயமாய் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. கேமரர் ஐயரைப்பற்றி அவரது மாணவர் ஒருவரின் குமாரர் "கேமரர் பெரிய கல்விப் பிரியன். ஒரு சிறந்த ஆசான் என்று என் தகப்பனர் அடிக்கடி கூறுவார்" என்று சொன்னர். ஒரு சிறந்த உபாத்தியாயராகவும் தாமே பெரிய படிப்பாளியாகவும் இருந்ததினல் கேமரர் ஐயர் கல்வியபிவிருத்திக்காக அரும்பாடுகள் பட்டார். எற்கெனவே நாசரேத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடத்தைப் பழுதுபார்த்து ஸ்திரமான கட்டடம் அமைத்து, பள்ளிக்கூட வேலையையும் அடிக்கடி நேரில் சோதனைசெய்து, மேற்பார்வையிட்டு வந்தார். தவிரவும் மூக்குப்பீறி, எருசலேம், கடையனேடை, உக்கிரன் கோட்டை, பாளையங்கோட்டை முதலியவிடங்களில் பழைய பள்ளிக்கூடங்களை ஸ்திரப்படுத்தியும், புதியவைகளை ஸ்தாபித்தும் இவ்வூழியத்தை நலம் பெற நடத்தினர்.


1842ம் வருஷத்தில் நாசரேத்தில் பெண்கள் பாடசாலை ஒன்றை நிறுவத் தீர்மானித்தார். ஐயரும் அம்மாளும் வீடு வீடாய்ச் சென்று பெற்றோரைக்கண்டு, பெண்கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்து, பெற்றோர் தங்கள் பெண்மக்களைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று வெகுவாய் மன்றாடினர்கள். கடவுள் இவர்கள் பிரயாசங்களை ஆசீர்வதித்தார். எனவே 1843ம் வருஷம் இறுதிக்குள் பெண்கள் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. கனம் அனி கேமரர் அம்மாளே இக்கலாசாலையின் முதல் தலைவரும் முக்கிய ஆசிரியையுமானர்கள்.

**பெண் கல்வி**


தவக்கத்தில் இவர்களுக்கு அக்குழந்தைகளுக்குக் கற்பிப்பது மிகவும் கஷ்டமான காரியமாயிருந்தது. பெண் கல்வியின் மேன்மையை உணராத பலர் "இப்பெண்களுக்குப் படிப்பு வருமா? இதைவிடப் பசுக்களுக்குக் கல்வி புகட்டலாமே" என்று




பரி. யோவான் பெண்கள் பாடசாலை தற்காலக் கட்டடம் see page (184)



மர்காஷிஸ் கலாசாலை (P. 224)



பரி. லூக்கா ஆஸ்பத்திரி (P. 232)



திருமறையூர் வேதசாஸ்திரக் கல்லூரி (P. 225)

ஏளனம் செய்தனராம். பெண்கல்வி முதலில் இவ்வளவு கஷ்டமாகத்தான் தோன்றிற்று. குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வருவதிலும், படிப்பதிலும் மிகுந்த ஒழுங்கீனமும் மந்தமும் காணப்படவே, அடிக்கடி கேமரர் அம்மாளுக்குச் சோர்புண்டாயிற்று. எனினும் கடவுளுக்காக ஊக்கத்துடன் முன்னிலும் அதிகமாய்ப் பிரயாசப்பட்டார்கள். பிள்ளைகளுக்குத் துணியும், சில சமயங்களில் பணமும் கூடக்கொடுத்து பள்ளிக்கூடத்துக்கு அழைத்து வருவார்கள். பிரயாசம் வாய்த்தது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பத் தலைப்பட்டார்கள். பிள்ளைகளும் உற்சாகமாகப் படிக்க ஆரம்பித்தார்கள். 1846க்குள் ஆலயத்துக்கு முன்னுல் ஒரு சிறு கட்டடம் கட்டி, அதில் பெண்கள் பள்ளிக்கூடத்தை நிலைப்படுத்தினுர்கள். 1846ம் வருஷ ரிப்போர்ட்டில் 'பெண்கள் கல்வி வெகு உற்சாகமாய் நடைபெறுகிறது. அதன் காரணமாக நாசரேத் மிஷனுக்கு ரூ. 100 கடன் ஏற்பட்டிருக்கிறது'' என்று எழுதினுர்கள். இக்கடன் புதிய கட்டடத்தின் காரணமாய் ஏற்பட்டது என்று நாம் எண்ணலாம்.

**மூக்குப்பீறி பெண்கள் பாடசாலை** மூக்குப்பீறியிலும் 1848 அக்டோபர் முதல் வாரத்தில் பெண் பாடசாலை ஒன்றை ஏற்படுத்தினுர்கள். அக்காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் மூக்குப்பீறியில்தான் பெரிய கிறிஸ்தவ சபை இருந்தது. அவ்வருஷக் கணக்கின்படி ஞானஸ்நானம் பெருதவர்களோடு சேர்த்து, சுமார் 1000 பேர் சபையில் அங்கத்தினராயிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் சுவாமியடியான் (உபாத்தியாயரின்) உபதேசியாரின் ஊழியத்தின் பலன். 1852க்கு மேலாகத்தான் இவர்களனைவரும் சரியான ஆயத்தத்துடன் ஞானதீக்ஷை கொடுக்கப்பெற்றுர்கள். இப்பெரிய சபைக்குப் பெண்கள் கலாசாலை மிகுந்த அவசியமாகத்தானிருந்தது. 1849 ஜுன் மாதக் கணக்கின்படி, இப்பள்ளிக்கூடத்தில் 121 கிறிஸ்தவப் பெண்கள் கல்வி கற்றுர்கள்.

கேமரர் அம்மாள் நாசரேத்துக்குச் செய்த கடைசிப்பேருதவி நாசரேத் பெண்கள் பாடசாலைக்கு ஒரு போர்டிங் அமைத்தது. இப்

**நாசரேத் போர்டிங் ஸ்கூல்** போர்டிங் 1849க்கு முன் ஒருவேளை 1848 கடைசியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம். 1849 ஜுன் கணக்கின்படி போர்டிங் பெண்களின் தொகை 68 ஆகும். ஆனுல் இப்போர்டிங் அம்மையாரின் மாணத்திற்குப் பின் மூடப்பட்டிருக்குமோ என்று ஐயுற வேண்டியதிருக்கிறது.

இவ்விதம் பெண்கள் கலாசாலைக்காக மிக உற்சாகமாய்த் தங்கள் முழுசக்தியையும் பிரயோகித்து ஊழியம் செய்த அனி அம்மாள் 1849 செப்டம்பர் 15-ல் தம் 28-ம் வயதில் திடீரென்று மறுமைக்குட்பட்டார்கள். கேமரர் ஐயர் தம் வாழ்க்கைத்துணைவியை இழந்தார். நாசரேத்தூர் தன் பெயரை உலகில் S. P. G. ஊழியம் நடைபெறும் தேசங்களிலெல்லாம் தன்னிலுள்ள இப்பெண்கள் கலாசாலையின் மூலம் பரிமளிக்கச் செய்த தாயை இழந்தது. நாசரேத் தேவாலயத்தில் இவ்வம்மையாரை என்றும் நினைவு கூறுவதற்காக ஞாபகச்சின்னம் அமைத்திருப்பது அச்சபையின் நன்றி உணர்ச்சியைத் தெரிவிக்கும் சிறந்த அடையாளமே.

அனி அம்மாளின் மரணம்

கால்ட்வெல் அத்தியக்ஷர் இடையன்குடி மிஷனெரியாக 1841 நவம்பர்மீ வந்ததிலிருந்து C. M. S., S. P. G. சங்கத்தார் ஊழியத்தில் ஒரு புதிய ஏற்பாட்டை ஆரம்பித்தார். இம்மட்டும் C. M. S. சங்கத்தாரின் ஊழியம் வெகுவாய் உள்நாட்டிலும், S. P. G. யின் சேவை தென் கீழ்க்கடற்கரைப் பிரதேசத்திலும் நடந்ததெனினும், C. M. S. ஐச் சேர்ந்த சில சபைகள் S. P. G. ஊழிய முகாமுக்குள்ளும், S. P. G. சபைகளில் சில C. M. S. பிராந்தியத்திற்குள்ளும் இருந்தன. 1843, 44ல் இருசங்க மிஷனெரிமாரும் கூடி ஆலோசித்துத் தத்தம் எல்லைகளை வகுத்துக் கொண்டனர். அதின்படி முதலூர், சாத்தன்குளம், மெஞ்ஞானபுரம், நாசரேத் வட்டாரங்களும், சுவிசேஷபுரம், இடையன்குடி, சாயர்புரம், பண்ணைவிளை வட்டாரங்களும் திருத்தியமைக்கப்பட்டன. நாசரேத் வடக்கிலுள்ள உக்கிரன்கோட்டை, பார்வதியாபுரம், பாளையங்கோட்டை, பத்மநாதபுரம் சபைகளைப் பாளையங்கோட்டை C. M. S.க்கு விட்டு விட்டு, அங்கிருந்து ஆழ்வார்திருநகரி, திருக்கோளூர் என்றவூர்களையும், மெஞ்ஞானபுரத்திலிருந்து ஒய்யான்குடியையும் சேர்த்துக்கொண்டது. பிரகாசபுரம் சபை எக்காரணத்தாலோ மெஞ்ஞானபுரத்தோடேயே இருக்கவும், எருசலேம் நாசரேத்தோடேயே சேர்ந்துநிற்கவும் தீர்மானிக்கப்பட்டது. இது தவிர மற்ற வட்டாரங்களிலும் பல மாறுதல்களுண்டாயின. அவை நமது சரித்திரத்திற்குள்ளமையாவாதலால் இங்குக் குறிக்கப்படவில்லை.

C.M.S., S.P.G., எல்லைகள்

இவ்வித மாறுதல்களால் 1843ம் வருஷத்தில் தென் இந்தியாவிலேயே S. P. G. வட்டாரங்களில் மிகவும் விஸ்தீரணமான நாசரேத் வட்டாரம் வெகுவாய்ச் சிறுத்து விட்டது. 1844ல் நாசரேத் மிஷனில் 22 கிராமங்களே இருந்தன. அவற்றில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்த

வர்கள் 2170ம், ஆயத்தக்காரர் 2145 பேரும் வசித்தார்கள். இவர்களுக்கு 15 உபதேசிமார் ஆவிக்குரிய பணிவிடை செய்தனர். பள்ளிக்கூடங்கள் 7. பள்ளிச்சிறுவர் 291. ஆலயங்கள் 12. விஸ்தீரணத்தில் சிறிதாயினும் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கைப்படி நாசரேத் மிஷன் இந்தியாவில் தன் முதன்மை ஸ்தானத்தை இழந்துவிடவில்லை. இது முதல் 1857-ம் வருஷம் வரை நாசரேத் மிஷன் ஊழியம் விருத்தியடைந்துகொண்டே போனது. கீழ்க்கண்ட சில வருஷக் கணக்குகள் இதைத் தெளிவுபடுத்தும்.

நாசரேத் வட்டாரம்

| | மிஷனெரிமார் | கிறிஸ்தவக் கிராமம் | ஆலயங்கள் | உபதேசிமார் | ஐரோப்பிய உபதேசிமார் | உபாத்திமார் | பள்ளிக்கூடங்கள் | ஞானஸ்நானம் பெற்றவர்கள் | | | நற்கருணைக்காரர் | ஆயத்தக் காரர் | | | பள்ளிக் கூடப் பிள்ளைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | ஆண்கள் | பெண்கள் | பிள்ளைகள் | | ஆண்கள் | பெண்கள் | பிள்ளைகள் | ஆண்கள் | பெண்கள் |
| 1844 | 1 | 22 | 12 | 15 | ... | 7 | 7 | | 2170 | | 164 | | 2145 | | 291 | |
| 1846 | 1 | 22 | 19 | 19 | ... | 7 | 7 | 633 | 703 | 929 | ... | 825 | 880 | 1127 | 228 | 93 |

1857ல் நாசரேத் கிராமத்தில் சபையின் மக்கள் 872 பேர்
மூக்குப்பீறி ,, ,, ,, 1039 பேர்

இவ்விடத்தில் 1844ம் வருஷம் நாசரேத் வட்டாரச் சபைகளின் பெயர்களைத் தருவது நலம். அவையாவன: நாசரேத், மூக்குப்பீறி, ஒய்யான்குடி, கடையனோடை, பன்றிமடல், மணப்படை வீடு (மாவீடு பண்ணை) வாழையடி, வகுத்தான்குப்பம், வெள்ளரிக்காயூரணி, மணல்மேடு, எருசலேம் என்ற 11 சபைகளும், திருக்கோளூர் முதலிய சின்னஞ் சிறு சபைகளுமே. ஆழ்வார்திருநகரியிலும் அக்காலம் ஓர் சிறு சபை இருந்தது. கேமரர் ஐயர் 1857ம் வருஷத்தில் அங்கு ஒரு ஆண்கள் பாடசாலையை ஸ்தாபித்தார். அப்பாடசாலை பின்னுல் ஒரு உயர்தரக் கலாசாலையாகவும், தற்போது உயர்தர ஆரம்பப் பாடசாலையாகவும் சிறந்த சேவை செய்து வருகிறது.

1857க்குள் உடையார்குளம் * பிள்ளையன்குடி, அகப்பைகுளம், கீழ வெள்ளமடம், மணல்குன்று முதலிய கிராமங்களில் சபைகள் ஏற்பட்டன.

* 1860ம் வருஷம் வரை பிள்ளையன்மனை, பிள்ளையன்குடி அல்லது பிள்ளையன்குடியிருப்பு என்றே குறிப்பிடப்படுவது காண்க.

இச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தைத் திட்டவட்டமாய்க் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாதிருப்பினும், அவைகளின் ஆரம்பகாலத்தை அவ்வூர்களில் நடந்த முதல் ஞானஸ்நானத் தேதியிலிருந்து ஊகித்தறியலாம். ஞானஸ்நானம் பெறுமுன் சில மாதங்கள் அல்லது இரண்டொரு வருஷங்கள் ஆயத்தக்காரராகவே இருப்பதுண்டு என்று பார்த்தோம். எனின்,

| | முதல் ஞானஸ்நானத் தேதி | ஆயத்தக்காரராகச் சேர்க்கப் பட்டிருக்கக் கூடிய காலம் |
|---|---|---|
| குளத்துக்குடி | ... 1852 செப் 26 | 1851 அல்லது 52ன் முன் பாகம் |
| தொட்டியன்குடி | ... ,, ,, | ,, ,, |
| கீழ வெள்ளமடம் | ... ,, அக். 8 | ,, ,, |
| *பிள்ளையன்குடி (மனை) | ... ,, ,, | ,, ,, |
| ஆகப்பைக்குளம் | ... ,, ,, | ,, ,, |
| உடையார்குளம் | ...1854 ஏப்ரில் 20 | † 1853 முன் பாகம் |

நெய்விளைச் சபை 1855ல் ஸ்தாபிக்கப்பட்டு நாசரேத் சேகரத்தோடிருந்தது. முதல் ஞானஸ்நானம் 1855 டிச. 23.

1855, 56ம் வருஷங்களில் நமது சேகரத்தில் பணியாற்றிய சில உபதேசிமார்களின் பெயர்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவை:

நாசரேத் — { மாசில்லாமணி உபதேசியார் (1855 வரை)
ஆபிரகாம் உபதேசியார் (1856 முதல்)

எருசலேம் — சாமுவேல் உபதேசியார்

பிள்ளையன்குடி (மனை) — ஞானமுத்து ,,

மூக்குப்பீறி — சித்தர் எசுவடியான் ,,

உடையார்குளம் — ஒய்யான்குடிச் சாமுவேல் ,,

தொட்டியன்குடி — மதுரநாயகம் ,,

கடையனோடை — ஆ. யோபு உபதேசியார் (பின்னால் யோபு ஐயர்)

இவர்களில் 1855ம் வருஷம் நாசரேத்தில் உபதேசியாராகவிருந்த மாசில்லாமணி உபதேசியார் 1856ம் வருஷம் கனம் கேமரர் ஐயரவர்களால் குருப்பட்டத்துக்குத் தகுதியுள்ளவரென்று அத்தியக்ஷருக்குச் சிபார்சு செய்யப்பட்டார். மகாகனம் டியல்ட்ரி அத்தியக்ஷரவர்கள் அவ்வருஷம் மெஞ்

† உடையார்குளத்தில் ஆயத்தக்காரியாக விருந்த ஒரு பெண்ணின் கிறிஸ்தவ கலியாணத்திலிருந்து இக்கணக்கு எடுக்கப்பட்டது.

**மாசிலாமணி ஐயர்**

ஞானபுரத்தில் நடந்த குருப்பட்ட ஆராதனையில் அவருக்கு உதவிக் குருப்பட்டம் கொடுத்து, கனம் கேமரர் ஐயருக்கு உதவியாக நாசரேத்திலேயே ஊழியம் செய்ய அவரை நியமித்தார். கனம் மாசிலாமணி ஐயரவர்கள்தான் நாசரேத் சபையில் ஊழியம் செய்த திருநெல்வேலி இந்திய குருக்களில் (ஆங்கிலத் திருச்சபை முறைப்படி பட்டம் பெற்றவர்களில்) முதல்வர். மேலும் இவர் நாசரேத்வாசியாவர். நாசரேத்தின் முதல் கிறிஸ்தவர்களில் ஒருவரின் வழிவந்தவர். இவரது பின் சந்ததியார் இன்றும் நமது ஊரில் வசிக்கிறார்கள். நமது சபையின் முதல் இந்திய குருவாதலால் இவரது வாழ்க்கைக் குறிப்பு இங்கு தரப்படுவது அவசியம். மாசிலாமணி ஐயரின் இளமைச் சரித்திரம் நமக்குத் தெரியாது. இவர் சுமார் 1815ம் வருஷத்தில் நாசரேத்தில் பிறந்தார். 1851ல் இவர் சாயர்புரத்தில் உபதேசியாராக ஊழியம் செய்ததாக ரிக்கார்டுகளிலிருந்து அறியலாம். 1852க்கு மேல் நாசரேத்தில் உபதேசியாராக அமர்ந்து 1856ல் உதவிக் குருப்பட்டம் பெற்றார். இரு வருஷங்கள் நாசரேத்தில் ஊழியம் செய்தபின் 1858 லிருந்து கனம் கால்ட்வெல் ஐயருக்குதவியாக இடையன்குடியில் ஊழியம் செய்து 1862 முதல் 66 வரைப் புதியம்புத்தூரில் கனம் J. F. கேர்ண்ஸ் ஐயருக் குதவியாயனுப்பப்பட்டார். 1866ம் வருஷம் பாளையங்கோட்டையில் குருப்பட்டம் பெற்றபின் (வெளிநாட்டில்) நங்கூர், பொறையார் முதலிய விடங்களில் பணியாற்றினார். பின்பு மறுபடியும் 1874இல் சுய நாட்டுக்கு வந்து மேலச்செய்த்தலையில் 5 வருஷங்களும், புதியம்புத்தூரில் 2 வருஷமும் வேலை செய்து, அங்கேயே 1881ல் பரம இளைப்பாறுதலுக் குட்பட்டார்.

**யோபு ஐயர்**

கடையனோடை உபதேசியாரான யோபு உபதேசியாரும் கேமரர் ஹென்றி போப், ஐயர்மாரால் சிபார்சு செய்யப்பட்டுச் சென்னையில் 1859 முதல் ’62 வரை வேத சாஸ்திரம் கற்று, 1862ல் உதவிக் குருப்பட்டம் பெற்று ஆதிக் குருக்களில் புகழ்பெற்றவர்களில் ஒருவராய் கிறிஸ்தியா நகரம் முதலியவிடங்களில் ஊழியம் செய்தார்.

திருநெல்வேலிச் சபைகள் கிறிஸ்து மார்க்கத்தை அண்டிக்கொண்டதும் முதலில் செய்யும் வேலை பழைய இந்துக் கோவிலை கிறிஸ்தவ ஜெப வீடாக்குவது அல்லது புதிய ஜெபாலயம் கட்டிக்கொள்வதேயாம். இவ்வித இயற்கைச் சுபாவத்துக்கு நாசரேத் வட்டாரச் சபைகள் விலக்கல்ல. முதலில் தாங்கள் தங்களுக்கென்று அமைத்துக்கொள்ளுகிற சிற்றாலயங்களையும் சீக்கிரமே இடித்துப் பெரிதாக்கிக் கொள்வதும் திருநெல்வேலிச் சபைகளின் மற்றொரு விசேஷித்த பண்பு. அதின்படி ஒவ்வொரு சபையும்

தனக்கென ஆலயம் உடனேயே அமைத்தது மட்டுமல்லாமல், சில வருஷங்களுக்குள் சற்றுப் பெரிதாக்கிப் புதிய ஆலயங்களைக் கட்டிக்கொண்டன. அவ்விதம் புதிதாய்க் கட்டப்பட்ட சில முக்கிய ஆலயங்களின் ஜாபிதா கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மூக்குப்பீறி | — | 1847 | (முந்திய ஆலயம்) |
| கடையனோடை | — | 1848 டிசம்பர் | ,, |
| ஒய்யான்குடி | — | 1855 | ,, |
| வாகைழயடி | — | 1857 | ,, |
| பன்றிமடல் | — | 1857 | ,, |

இவையெல்லாம் முந்திய ஆலயங்களே. இவை தவிர அகப்பைக்குளம், பிள்ளையன்மனை, உடையார்குளம் முதலிய ஊர்களில் ஆலயக்கட்டுமான வேலைகளும், கட்டுமானத்துக்கான முயற்சிகளும் மும்முரமாய் நடந்தன. இவ்வூர்களில் முறையே 1857, 1859, 1860-ம் வருஷங்களுக்குள் ஆலயக் கட்டுமானம் முடிந்து பிரதிஷ்டையும் ஆயிற்று. கேமரர் ஐயாவர்கள் காலத்தில் பல பெரிய கோபுரங்களும் கட்டப்பட்டன. நாசரேத் கோபுரம் 1845-லும் மூக்குப் பீறி, கடையனோடை (?) என்ற விடங்களில் 1850-க்குள்ளும் கோபுரங்கள் கட்டப்பட்டு முடிந்தன. இம்மூன்று ஆலயக் கோபுரங்களும் ஏக காலத்தில் இவற்றின் நடுவான ஒரிடத்திலிருந்து பார்க்கக் கூடியனவாயிருந்தன என்று கால்ட்வெல் அத்தியக்ஷர் எழுதினர்.

**ஆலயங்கள்**

திருநெல்வேலி திருச்சபை சுய ஆதாரவுள்ளதாய் வளரவேண்டுமென்பது நமது நாட்டுக்கு வந்த ஆதி மிஷனெரிமாரின் அவா. அவ்வவா வெறும் வார்த்தையில் மட்டும்தான் என்றில்லாமல், கிரியாம்சத்திலும் சுதேசக் கிறிஸ்தவர்களை அதற்கென்று பழக்கி வந்தனர். C. M. S. மிஷனெரிமாரில் கனம் ரேனியஸ் ஐயர் துவக்கத்திலிருந்தே தம் சபைகளுக்கு இப்பயிற்சி தாலாயினர். S. P. G. சபைகளில் † கனம் கேமரர் ஐயர் இது விஷயத்தில் கவனம் செலுத்தி 1855-ம் வருஷம் நாசரேத் சுதேச திருச்சபை நிதி ஒன்று ஏற்படுத்தினர். ஒரே நாளில் நாசரேத் வட்டாரத்தில் இந்நிதிக்கென்று ரூ. 1300 திரண்டுவிட்டது. நம் முன்னோர்களின் பக்தி வைராக்கியமும், சுயவெறுப்பும், தியாக சிந்தையும் இருந்தவாறென்னே!

**சுய ஆதாவு**

தவிரவும் நாசரேத் வாசிகள் அக்காலத்தில் ஒய்வு நாளாசரிப்பில் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களாகத் திகழவும் ஐயரின் ஊக்கமான உழைப்பும் ஆத்மீக வாஞ்சையுமே காரணம் என்னலாம். மக்களின் பக்தி நிலையைக்

† S. P. G. 200 years P. 542.

காட்ட C. M. S. குருக்களில் ஒருவரான, சுவிசேஷபுரம் கனம் தேவ சகாயம் ஞானமுத்து ஐயர் 1850-ம் வருஷ C. M. ரிக்கார்டில் எழுதியதை மொழி பெயர்த்திருக்கிறோம். * அவர் கூறுவது. "சென்னையிலிருந்து திரும்பும் வழியில் இந்நகருக்கு வந்தேன். [விருதுபட்டி] இது ஜன நெருக்கமுள்ள பட்டணம். இங்கு அமெரிக்க மிஷனெரிகள் ஒரு சிறு ஜெபாலயத்தைக் கட்டியிருக்கின்றனர். ஒரு உபாத்தியாயரும் உபதேசியாரும் பல வருஷங்களாக ஊழியம் செய்கிறார்கள். தற்சமயம் சில குடும்பங்களே ஆயத்தக்காரராயிருக்கிறார்கள். இவ்வூரில் திருநெல்வேலி நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும், இந்துக்களுமான சில வியாபாரிகள் ஒரு வியாபாரப் பேட்டை அமைத்திருக்கிறார்கள். இவர்களில் மிகுதியானவர்கள் திருநெல்வேலியின் தென் பாகத்திலுள்ள நாசரேத், முதலூர் முதலிய கிராமங்களைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். இன்று அவர்களில் அநேகரைக் கண்டதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவர்கள் விரும்பினபடியால் அவர்களுக்கு ஒரு ஜெபக்கூட்டம் வைத்தேன். கடவுள் வணக்கத்தில் அவர்கள் காட்டிய மரியாதை, கவனம், நல்லொழுக்கம் முதலியவை என்னைச் சந்தோஷப்படுத்தின. வாசிக்கக்கூடிய ஒவ்வொருவரிடத்திலும் ஜெப புஸ்தகமும், அதோடு வேதாகமமாவது, புதியேற்பாடாவது இருந்தன. அவர்களில் இரண்டு, மூன்று பேர் மிகுந்த பக்தியுடையவர்களாயும், அந்தச் சிறு மந்தையின் முக்கியஸ்தராகவும் காணப்பட்டார்கள். ஓய்வு நாட்களில் தங்கள் வியாபாரப் பேட்டைக்குள் வியாபாரம் பண்ணுவதற்கு யாரையும் வரவிடுவதில்லை. அவ்வூரிலுள்ள இந்துக்களும் இதைத் திட்டமாய் அறிந்திருந்தபடியால், ஓய்வுநாட்களில் இந்தப் பேட்டைக்கு வருவதேயில்லை. அந்நாட்களில் இவர்கள் அமெரிக்கன் மிஷன் ஜெபாலயத்தில் காலை ஆராதனைக்குப் போவது வழக்கம்".

ஓய்வு நாளாசரிப்பு

அந்நிய இடங்களிலுங்கூட, தங்கள் வேலைகளின் மத்தியிலும் கர்த்தரை மறவாத நம் முன்னோர்கள் நமக்கு எவ்வளவு சிறந்த முன் மாதிரி!

"தேவனை மறக்கிறவர்களே இதைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்".

"நான் ஒருபோதும் உமது பிரமாணங்களை மறக்கமாட்டேன். அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்".

---

* South India Mission P. 258 (1850)

# அத்தியாயம் 5

## நாட்டுச் சபையும் கேமரர் ஐயரும்

நாம் மேற்கண்டவாறு மிகவும் உற்சாகத்துடன் நாசரேத் மிஷனெரி ஊழியத்தைச் செய்துவந்த கனம் கேமரர் ஐயரின் கடைசி வருஷங்களில் அவருக்கு மிகுந்த மனவேதனையை யுண்டாக்கிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இச்சம்பவம் கேமரர் ஐயருடைய ஊழியத்துக்கு மட்டும் பங்கம் விளைத்ததன்று. நாசரேத் சபையை அது எவ்வண்ணமும் பாதிக்காவிடினும்,

**சபைப் பிளவு**

நாசரேத் வட்டாந்தரத்திலும் மெஞ்ஞானபுரம் சேகரத்தைச் சேர்ந்த பிரகாசபுரத்திலும் சபையை அலைக்கழித்துவிட்டது. இச்சம்பவமே இன்றும் மூக்குப்பீறி, ஒய்யான்குடி, பிரகாசபுரம் சபைகளைப் பிரித்து இந்து—கிறிஸ்தவ சபை என்று பெயர் பெற்று விளங்கும் நாட்டுச் சபைப் பிரிவினையின் உற்பத்தியாகும். இப்பிரிவினையேற்படப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவைகளைச் சீர்தூக்கி யாராய்வது நமது காரியமன்றெனினும் அக்காரணங்களை யறிந்துகொள்வது அவசியம்.

கனம் கேமரர் ஐயர் உண்மையான கிறிஸ்தவ பக்தனும் மெய்யான ஆத்மவாஞ்சை நிறைந்த மிஷனெரியே யாயினும், அக்கால மிஷனெரிமாரிடை காணப்பட்ட சில குற்றங் குறைகள் அவரிடத்திலுமில்லாதிருந்ததில்லை. அக்காலத்திய மிஷனெரிகள் 'சுதேசக் கிறிஸ்தவர்கள் சகல காரியங்களிலும் தங்களுக்குட்பட்டிருக்கவேண்டும்' என்ற சித்தாந்தமுடையவர்களாயிருந்தார்கள். அப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாயவர்களிருந்ததற்கும் காரணங்களில்லாமலில்லை. கல்வி யறிவின்மையும், அறிவீனமும், மூட நம்பிக்கைகளும், உயர்ந்த ஜாதியாருக்குக் கீழ்ப்பட்டிருந்த அடிமைத்தனமும், எழிமைத்தனமும் மிகுந்திருந்த நம் முன்னோர்கள் சகலத்திலும் மிஷனெரிமாரைச் சார்ந்தேயிருந்தார்கள். எனவே அவர்களைக் குழந்தைகளைப்போல மிஷனெரிமார் நடத்தினார்களென்றால் அது ஆச்சரியப்படுவதற்குரிய ஓர் காரியமன்று. சபைகளை நீர்மூலமாக்கவன்று,

**பிளவுக்குக் காரணங்கள்**

ஊன்றக் கட்டுவதற்கென்றே கர்த்தர் ஊழியக்காரருக்கு மேன்மைபாராட்டிக்கொள்ளத்தக்க அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார் என்பது பரிசுத்த பவுலின் சித்தாந்தமன்றோ. 2 கொரி 10 : 8. ஆனால் மிஷனெரிமாரின் அன்பும் தியாக சிந்தையும் எத்துணைத்தாயினும், அவர்கள் எவ்வளவு அதிகமாய் அன்பு கூர்ந்தார்களோ அவ்வளவு குறைவாய் அன்பு கூறப்பட்டார்கள் என்பதும் மிஷனெரிச் சரித்திரத்தில் ஆதிமுதல் காணப்பட்ட அனுபவ உண்மை (2 கொரி 12 : 15) கேமரர் ஐயாவர்களிடத்திலும்

சபையாரையும், ஊழியரையும் தமக்கு அடக்கி ஆளும் சிந்தனையும், அதற்குரிய சாமர்த்தியமுமுண்டாயிருந்தன. எனினும் அது இரக்ஷகர்மீது அவர் கொண்டிருந்த பாசத்தாலும் பக்தி வைராக்கியத்தாலும் சபைகளை அவர் நேசித்த காரணத்தாலேயே என்பது அவர் செய்த சேவைகளை வாசித்தறிந்த நாம் கிரஹித்துக்கொள்ளக்கூடியதே. கேமரர் ஐயர் கொஞ்சம் முற்கோபமுள்ளவராகவுமிருந்தார் என்றும் எண்ணலாம். இக்குணமே சட்டம்பிள்ளைப் பிரிவினையின் உடன் காரணமாயிருந்தது. ஒருவேளை கொஞ்சம் நிதானமாய்க் காரியங்களை ஆலோசித்துச் செய்திருப்பாரானால் இது நேரிடாவண்ணம் தடுத்திருக்கலாம்.

மேலும் நம் ஐயர் பேரில் மட்டுமன்றி, மற்ற ஐரோப்பிய மிஷனெரிமார் மீதும் அக்காலத்திய நாடார் சமூகக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பெருங்குறைபாடு உண்டாயிருந்தது. 1849ம் வருஷம் இடையன்குடி மிஷனெரி கனம் கால்ட்வெல் ஐயர் "திருநெல்வேலிச் சாணர்" என்றொரு சிறு புஸ்தகம் ஆங்கிலத்தில் எழுதி இங்கிலாந்தில் பிரசுரம் செய்திருந்தார். இப்புஸ்தகத்தைப்பற்றிய செய்தி திருநெல்வேலியில் பரவியதும் நாடார் குலக் கிறிஸ்தவர்களுக்குள் அதிருப்தியும், மிஷனெரிமாரைப்பற்றிய வெறுப்பும் ஏற்பட்டிருந்தன. இக்காலத்தில் மிஷனெரியொருவருக்கு விரோதமாகச் சிலர் எழுந்ததும் ஏராளமான மக்கள் அச்சிலரோடு கூடிக்கொண்டார்கள்.

மேற்சொன்ன காரணங்களால் தோன்றின பிரிவினையின் உற்பத்தி மிஷன் ஊழியரில் அக்காலம் தலைசிறந்தவராய் விளங்கின சுவாமியடியான் உபதேசியாரின் வீட்டிலாம். இச்சுவாமியடியான் உபதேசியார் 1820ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட ஆண்கள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருந்தார். இவரது தகப்பனார்தான் முதல் கோவில்கூட்டியான கறுப்பன் முக்கந்தர். சுவாமியடியான் மிகுந்த தேவதாபக்தியுடையவர். வேத வாசிப்பு ஜெப தியானங்களில் வெகு கரிசனையுடையவர். பிள்ளைகளை வளர்ப்பதில் அதிகக் கண்டிப்பாய் நடந்துவந்தார். இவருடைய பக்தியும், காரிய சமர்த்தும் மிஷனெரிமாரால் வெகுவாய்ப் பாராட்டப்பட்டன. எனவே இவர் 1838 போல் மூக்குப்பீறிக்கு உபதேசிகாராக நியமிக்கப்பட்டார்.

சுவாமியடியான் உபதேசியார் வீடு

மூக்குப்பீறியில் 1819ம் வருஷம் ஒரு சிறு சபை உண்டாயிற்று என்றும், அது பின்னால் C. M. S. மிஷனெரிமாருக்குட்பட்டிருந்தது என்றும் பார்த்தோம். பிற்காலத்தில், அதாவது சுமார் 1825 போல் இச்சபை பிரகாசபுரம் என்ற கிறிஸ்தவப் பெயரைத் தரித்து பிரபலமான சபையாகத் திகழ்ந்தது. பழைய மூக்குப்பீறியோ இந்து மார்க்க அரணு

கவே விளங்கி நின்றது. எனினும் 1829க்குள் அங்கு ஒரு சிறு சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது என்றும் ஒரு பள்ளிக்கூடமும் இருந்தது என்றும், கனம் ரோசன் ஐயர் கடிதங்களி லிருந்து புலனுகிறது. 1830 ஆக்ஸ்டில் ஐயர் அச் சபைக்குச் சென்று சபையாரைச் சந்தித்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கும்விஜயம் செய்தபோது அங்கு 5 சிறுவர்களே படித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். பாடசாலை டாப்பில் 6 பையன்களின் பெயர்களும், 2 பெண்களின் பெயர்களுமே காணப்பட்டன. 1830ம் வருஷத்திய பாளையங்கோட்டை மிஷன் ரிஜிஸ்டர்படி சபையின் தொகை 17 ஆண்களும், 15 பெண்களும், 14 பிள்ளைகளுமே. இவர்களுக்கு உபதேசியாராக ஞானப்பிரகாசம் என்பவர் ஊழியம்செய்தார். 1835ல் ஞானப்பிரகாசம் இடையன்குடிக்கு மாற்றப்பட்டுச் சேனுபதி என்ற பெயருடைய ஒருவர் புதிதாய் நியமிக்கப்பட்டார்.

மூக்குப்பீறி ஆதிச்சபை

1838 போல் சுவாமியடியான் மூக்குப்பீறிக்கு மாற்றப்பட்ட காலத்தில், இவ்வூராருக்கு மாவீடுபண்ணை நாடார்களால் பல இடைஞ்சல்களும் இன்னல்களும் ஏற்பட்டிருந்தன வென்றும், சுவாமியடியான் கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களை எதிர்த்து, முடிவில் கலகங்கள் உண்டாகவே கேமரர் ஐயர் உதவியால் அவற்றில் ஜெயமடைந்து மூக்குப்பீறிவாசிகளுக்குச் சுயாதீனம் கிடைக்கச்செய்தார் என்றும் பாரம்பரியக் கதை உண்டு. நிலபுலன்களைத் தாங்களே சுயாதீனமாக அனுபவித்துக் கொள்ளத் தங்களுக்கு உரிமை உண்டானபின் மூக்குப்பீறிவாசிகள் தங்கள் சுறுசுறுப்பான உழைப்பின் பயனும், கடவுள் கிருபையாலும் சீக்கிரத்தில் ஐசுவரியம் படைத்தவர்களானுர்கள். அக்காலத்தில் அவ்வூரில் சுமார் 2000 ஜனங்கள் இருந்தார்களாம். ஜனங்களில் மிகுதியானவர்கள் இந்துக்களாயிருந்தும் சுவாமியடியான் உபதேசியாரை மிகவும் மதித்து, அவருக்குச் சகலத்திலும் கீழ்ப்படிந்து அவர் சொற் கேட்டு நடந்து வந்தார்கள். எனவே வெகு சீக்கிரத்தில் விக்ரகக் கோவில்கள் தேடுவாரின்றிப் பாழடைந்தன. ஜனங்கள் மெய்யான தேவனையறியவும், ஆயத்தக்காரராகச் சேரவும் உபதேசியார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனடைந்தன. நாம் மேற் கண்டவாறு 1847க்குள் ஒரு பெரிய சபை வளர்ந்துவிட்டது. சுவாமியடியான் உபதேசியாரின் முயற்சியினுலும், கேமரர் ஐயரின் உதவியாலும் ஆண்டவருடைய நாமத்துக்கு மகிமையாக ஆலயமும் கட்டி முடிவுற்று 1847ல் பிரதிஷ்டையானது.

சுவாமியடியான் ஊழியம்

இவ்வளவு பிரபலமான சுவாமியடியான் உபதேசியாருக்கும் கனம் கேமரர் ஐயருக்கும் 1855ம் வருஷத்தில் உபதேசியாரின் மூத்த மகன்

விஷயமாய் மனத்தாங்கல் ஏற்பட்டு, விரோதம் முற்றிக்கொண்டே போயிற்று.

இவ்விதமிருக்கையில் மூக்குப்பீறியில் அருமை நாயகம் என்றொரு வாலிபன் நாசரேத் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அக்காலத்திலிருந்த சுதேசக் கிறிஸ்தவர்களில் இவரே அதிகக் கல்வி கற்றவர். அக்காலத்தில் S. P. G. மிஷனெரிமாரின் லோக்கல் கமிட்டி கூட்டம் நாசரேத்தில் நடைபெறுவது வழக்கம். அக்கூட்டங்களில் உபதேசியார் பரீக்ஷைகளில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தேறியவர்களுக்குப் பரிசு கொடுப்பதுண்டு. உபதேசிமாரல்லாத உபாத்திமார் மாங்க்றன் உபதேசிப் பரீக்ஷை (Monkton Catechistship) எழுதி அதில் உயர்ந்த மார்க்குகளெடுத்தால் உபதேசிமாராக அங்கீகரிக்கப்படுவார். 1848ம் வருஷ மாங்க்றன் பரீக்ஷையில் அருமை நாயகம் உயர்ந்த முறையில் தேறி உபதேசிப் பட்டம் பெற்றார். அடுத்த வருஷம் வியாசப் பரீக்ஷையில் முதற் பரிசு பெற்றார். இவர் சாதுரியவான். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இவர் சுவாமியடியான் உபதேசியாரிடத்தில் இளம் பிராயத்தில் கல்வி கற்றதுமல்லாமல் அவருக்குப் பந்துவுமாம். அருமைநாயகம் உபாத்தியாயரின் விவாக காரியம் தீர்மானிக்கப்படும் காலம் வந்தபோது, கேமரர் ஐயர் யாது காரணத்தாலோ அவர் குறித்திருந்த பெண்ணை அவர் விவாகம் செய்யக்கூடாது என்று தடுத்தார். அக்காலத்தில் சபையாரின் வாழ்க்கையில் சகல விஷயங்களிலும் மிஷனெரிமார் தலையிடுவதுண்டு என்று நாம் மேலே பார்த்தோம். இவ்விதம் தம் விஷயத்திலும் மிஷனெரி தலையிட்டது அருமைநாயகத்துக்குப் பிடிக்கவில்லை. இது சமயம் பள்ளிக்கூடத்தில் நடந்த ஒரு தகராறும் இவர்களிடை விரோதத்தை வளர்த்து முற்றச் செய்தது. இத்தகராறு சுவாமியடியான் உபதேசியார்மீதும் ஐயரது கோபம் அதிகரிக்க ஏதுவாயிற்று. இதன்முடிவாக அருமைநாயகம் வேலையைவிட்டு நீக்கப்பட்டார்.

சட்டம்பிள்ளை அருமைநாயகம்

வேலையிழந்த வாலிபன் சென்னை M. D. கமிட்டியாருக்கும், அத்தியக்ஷரவர்களுக்கும் மனுச் செய்தும் பயனெதுவும் கிட்டவில்லை. எனவே கால் நடையாகவே சென்னைக்குச் சென்று நேரில் M. D. C.யில் தம் காரியத்தைத் தெரிவித்துப் பேசியும் பார்த்தார். பிரயோஜனம் எதுவுமில்லாமலே திரும்பி வரவேண்டியதாயிற்று. அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமையில் அருமை நாயகம் ஆலயத்துக்குச் சென்றார். அங்கு கேமாருக்கும் இவருக்கும் வாக்குவாத மேற்படவே கேமரர் ஐயர் கோபாவேசத்துடன் கோவில்கூட்டியைக் கொண்டு அருமைநாயகத்தை ஆலயத்துக்கு வெளியே தள்ளி விட்டார்.

கோபம்

அருமைநாயகம் மிகுந்த உக்கிரத்துடன் மூக்குப்பீறி சென்றார். அங்கு அவருடைய பல சிநேகிதரும், இனஜன பந்துக்களும் அவருக்கு மிகுந்த அனுதாபம் தெரிவித்து, அவருக்குச் சகாயரானார்கள்.

கேமரர் ஐயரது கோபம் அடுத்த படியாக சுவாமியடியான் உபதேசியார் மீது பாய்ந்தது. அவரது மூத்த மகன் ஒரு பில்லிசூனிய வழக்கில் மாட்டிக்கொண்டார். இவ் வழக்கை விசாரித்த கேமரர் ஐயர் உடனேயே உபதேசியாரை வேலையினின்று நீக்கி விட்டார். ஆகவே வேலையிழந்த

வெறுப்பு

இருவரும் ஐயருக்கு இடைஞ்சல் செய்ய ஆயத்தமானார்கள். இச்சமயத்தில்தான் அவர்களுக்குக் கைக்கோளாகக் கால்ட்வெல் ஐயர் சீமையில் வெளியிட்ட மேற்சொன்ன புஸ்தகச் செய்தி திருநெல்வேலிக்கெட்டியது. கிறிஸ்தவர்களும் இந்துக்களுமான நாடார்கள் ஐரோப்பியர்மீது மிகுந்த வெறுப்புக் கொண்டார்கள்.

சமயத்தைப் பயன்படுத்திக்கொண்ட அருமைநாயகம் மூக்குப்பீறி, பிரகாசபுரம் ஜனங்களை ஒன்று சேர்த்துக், கால்ட்வெல் ஐயர் புஸ்தகத்தை வாசித்தும், வியாக்கியானம் பண்ணியும் ஜனங்களின் பூரண வெறுப்பை மிஷனெரிமார்மீது திருப்பினார். மேலும் மிஷனெரிகள்மீது துவேஷம் அதிகரிக்கச் செய்வதற்காக என்னவென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்ததுமல்லாமல், அவர்கள் அனுசரிக்கிற கிறிஸ்து மார்க்கம் வேதத்துக் கொத்ததாயில்லை என்றும், யூத முறைப்படியே ஆண்டவரும் தம் உலக ஜீவியகாலத்தில் நடந்ததால் சனிக்கிழமை, மாதப்பிறப்பு, பஸ்கா முதலிய ஆசரிப்புகளே கடவுளுக்குப் பிரியமானதென்றும் போதித்து ஜனங்களைத் தம் வசமாகத் திருப்பி விட்டார். ஜனங்களும் ஏற்கெனவே மிஷனெரிமார் மீது வெறுப்புக் கொண்டதாலும், சாதுரியப் பிரசங்கியும் மிகுந்த கல்விமானுமாகத் தங்களில் ஒருவரே எழும்பித் தங்களுக்கு உபதேசிக்க ஆரம்பித்து விட்டார் என்ற உற்சாகத்தினாலும் வெகு இலகுவில் கவரப்பட்டு விட்டார்கள். மூக்குப்பீறி, பிரகாசபுரம்,

பிரிவினை

ஒய்யான்குடி, குளத்துக்குடி, பன்றிமடல், வகுத்தான்குப்பம் சபைகளில் மிகுதியானவர்கள் அருமைநாயகத்தைப் பின்பற்றி அவர் ஆரம்பித்த நாட்டுச் (சுதேச) சபையில் அங்கத்தினரானார்கள். இதுவே நாட்டுச் சபையின் ஆரம்பம். இதைச் சட்டாம்பிள்ளை சபை என்றும் சொல்லுவார்கள். அக்காலம் உபாத்திமார் அண்ணாவி, சட்டாம்பிள்ளை என்று அழைக்கப்படுவதால் சட்டாம்பிள்ளை மார்க்கம் என்ற பெயர் நாட்டுச் சபையின் மார்க்கத்தின் பெயராயிற்று. முதல் மூன்று ஊர்களிலும் 16 வீட்டுக்காரரே ஆங்கில திருச்சபையில் இருந்தார்கள். [மூக்குப்பீறியில் 45 ஆத்துமாக்கள் மட்டும்]. தவிரவும்

நாசரேத் முதலிய பக்கத்துச் சபைகளைக் குழப்ப ஷை அருமைநாயகம் உபாத்தியாயரின் கூட்டத்தார் எவ்வளவோ பிரயாசங்கள் செய்தார்கள். அது பலனில்லாது போனது கர்த்தருடைய பெரிதான கிருபையேயாகும்.

மேற்சொல்லப்பட்ட சரித்திர பாகம் வெகுவாய் கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்தே எமக்குக் கிடைத்தது. C. M. S. மிஷனெரி ஒருவர் தம் கடிதங்களில் ஒன்றில் இதுபற்றி எழுதியுள்ளதும் இப்பாரம்பரியத்தை ஒத்தே இருக்கிறது காண்க. அவர் எழுதியுள்ளது பின்வருமாறு: மிகுந்த வேதனையைத் தரத்தக்க இப்பிரிவினை S. P. G. சபையில் (மூக்குப்பீறி) வேலையினின்று தள்ளப்பட்ட இரு ஆசாமிகளு (Mission agents)டைய ஜாதித் துவேஷமும் பகையும் காரணமாக ஏற்பட்டன. இவர்களில் ஒருவர் சில வருஷங்களுக்கு முன்னால் வேலையை விட்டுத் தள்ளப்பட்டபின் சென்னப்பட்டினத்துக்குச் சென்று அங்கேயுள்ள ஐரோப்பிய கிறிஸ்தவர் களிடை காணப்படுகிற மார்க்க பேதங்களை நேரில் கண்டு, தமது ஊருக்கு.........த் திரும்பி வந்ததும் 'யாரும் சுவிசேஷக் குருவாகிக் கொள்ளலாம்' என்றும், 'எந்தச் சபையும் தன் இஷ்டம்போல் பிரிந்து சுயாதீனமாகிக் கொள்ளலாம்' என்றும் போதித்துத், தம்முடைய மனப் போக்கின்படியே ஒரு வணக்க முறையை (A form of worship) வகுத்துக்கொண்டார். பிரகாசபுரத்தில் (நமது சபையின்) மூப்பரான ஒருவரின் இனத்தாளான ஒரு பெண்ணை இவருக்கு விவாகம் செய்ய

நிச்சயித்திருந்தது. ஆனால் தம்முடைய மிஷனெரி

C.M.S. மிஷனேரி (கேமரர் ஐயர்) அப்பெண்ணை விவாகம் செய்யக்கூடா

கூறும் சரித்திரம் தென்று தன்னைத் தடுத்தார் என்று சொல்லிக்கொண்டு

இம்மூப்பரை ஏவிவிட்டு, இவர் மூலமாய் நமது சபை

யில் பெரும்பாலானவர்களைத் தம் கக்ஷியில் சேர்த்துக்கொண்டார். எற் கெனவே சாயர்புரத்தில் ஜாதி அபிமானத்தின் காரணமாய் (மிஷனெரி மாரின் (மீதுண்டான) துவேஷத்தினால், அங்குச் சிலர் சபையை விட்டு நீங்கியும் சிலர் மறுதலித்தும் போய்விட்டதால், இங்கும் இக்கட்சி வெகு விரைவில் பலத்துவிட்டது. டாக்டர் கால்ட்வெல் இந்த ஜாதியாரின் சமூக, சன் மார்க்கப் பண்புகளைப் பற்றித் தமது நூலில் (இழிவாக) எழுதின, அல்லது எழுதினதாகச் சொல்லப்பட்ட சில வார்த்தைகள் இவர்களால் தமிழிலாக் கப்பட்டுத் தீவிரமாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்டன. மேலும் "ஜாதியபிமானம் கிறிஸ்து மார்க்கத்துக்குத் தகாததன்று" என்று நிரூபித்துப் புஸ்தகம் ஒன்றும் வெளியிடும் நோக்கமாய் பணமும் சேகரிக்கப்பட்டது.

இதற்கிடையில் வேலையினின்று தள்ளப்பட்ட மற்ற ஆசாமி, தம்மு டைய சபையைச் சேர்ந்தவர்களைத் தன்னோடு சேர்ந்து சபையை விட்டுப் பிரிந்து விடும்படி தூண்டினர். தங்கள் மிஷனெரியின் மீதுண்டான

பகை காரணமாய் தள்ளப்பட்ட ஆசாமிகளான இந்த உபதேசியாரும் ஷை உபாத்தியாயரும், தமது மருமகள் கலியாணம் தடைப்பட்டதினால் கோபம் கொண்ட பிரகாசபுரம் மூப்பர் மதுரநாயகம் முக்கந்தரும் இப்போது ஒன்று சேர்ந்து, கடைசிமட்டும் நிலைத்து நிற்பது என்று தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். (மூக்குப்பீறியிலிருந்து) பிரிந்தவர்கள் நமது (பிரகாசபுரம்) ஆலயத்தில் ஆராதனைகளில் பங்குபெற அனுமதி கேட்டார்கள். ஆனால் நமது மிஷனெரி (மெஞ்ஞானபுரம் கனம் ஜான் தோமாஸ் ஐயர்) அது ஒழுங்கான முறையன்று என்று மறுத்துவிட்டார். எனவே அவர்கள் தங்களுக்கு ஒரு விடுதியமைத்துக் கொண்டார்கள். அதில் தள்ளப்பட்ட உபதேசியாரே ஆராதனை நடத்தி, விவாகமும் செய்து வைக்கிறார்,'' என்பதாம்.

இப்பிரிவினையினால் கனம் கேமரர் ஐயருக்குண்டான மன வேதனையை நாம் அளவிடமுடியாது. அவரும் நாசரேத் மூப்பரும், மற்ற உபதேசிமார் உபாத்திமாரும் எவ்வளவோ முயன்றும் பிரிவினையைத் தடுக்க முடியவில்லை. ஆனால் அதற்குப் பதிலாய் அது வளர்ந்து, வலுத்துக்கொண்டே போயிற்று.

பிரிந்துபோனவர்கள், மிஷனெரிமாருக்கு இன்னமும் உண்மையுள்ளவர்களாய் உறுதியாய் நின்ற 16 வீட்டுக்காரரையும் தங்களுடன் சேர்த்துக்கொள்ள முயன்றார்கள். அது முடியாது போகவும் அவ்வீட்டார்களைக் கொள்ளையடித்து, பலவிதமான இம்சைகளுக்குட்படுத்தினார்கள். இது கேட்டு, கேமரர் ஐயர் மகா கோபம் கொண்டு அவர்கள் மீது போலீஸ் பிராதுகள் கொடுத்தார். ஆனால் நாட்டுச் சபையினரே அப்பிராதுகளில் ஜெயமடைந்தார்கள். சுவாமியடியான் உபதேசியாரும் பிரகாசபுரம் மூப்பரும் இன்னும் சிலர் மட்டுமே சின்னாட்கள் ஜெயிலில் இருக்க நேர்ந்தது. அருமைநாயகம் உபாத்தியாயர் தாம் தீர்மானித்த பெண்ணை வீட்டில் வைத்து வதுவை செய்து கொண்டார்.

**பிரிவினை முற்றுதல்**

இந்தப் பிரிவினையில் சம்பந்தப்பட்டவர்களில் சுவாமியடியான் உபதேசியார் இரண்டு வருஷங்களுக்குப்பின் மனஸ்தாபப்படலானார். 1858-க்குப்பின்தான் நாட்டுச் சபையினர் சனிக்கிழமை ஆசரிப்பைத் துவக்கினார்கள். இதுகாறும் ஆங்கிலத் திருச்சபைக் கொள்கைகளை நடைமுறையிலாவது அனுசரித்தவர்கள் இவ்விதம் மாறினதும் உபதேசியார் தன் தவற்றை உணர்ந்தார். மறு வருஷத்தில் அவர் கேமரர் ஐயருக்குப் பின் வந்த ஹென்ரி போப் ஐயரிடம் மன்னிப்புப் பெற்று, மறுபடி ஏற்றுக்கொள்ளப்பட்டு செவத்தையாபுரத்தில்

**சுவாமியடியான் உபதேசியார் மனமாற்றம்**

உபதேசியார் வேலையில் அமர்த்தப்பட்டார். சிலகாலம் கழித்த பின் கனம் பிரதர்ட்டன் ஐயர் காலத்தில் மறுபடியும் மூக்குப்பீறிக்கே உபதேசியாராக மாற்றப்பட்டார். இவ்விரண்டாவது ஊழிய காலத்தில் தமது செல்வாக்கினால், நாட்டுச்சபையைச் சேர்ந்திருந்தவர்களில் அநேகரைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பினார். பிரகாசபுரம் மூப்பரான மதுரநாயகம் முக்கந்தரும் மனந்திரும்பினார். அவரது பிள்ளைகளில் ஒருவரான ஹாரீஸ் குருப்பட்டம் பெற்று நாலுமாவடியிலும் மெஞ்ஞானபுரத்திலும் உத்தம பணிவிடை செய்து பிரசித்தி பெற்றவரானார்.

இனி கேமரர் ஐயரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைத் தருவோம்: அகஸ்டஸ் ப்ரெடெரிக் கேமரர் இந்தியாவிலேயே பிறந்தவர். இவரது தகப்பனார் தரங்கம்பாடியில் பிரசித்தி பெற்ற மிஷனெரியாக விளங்கின கனம் டாக்டர் D. C. கேமரர் ஐயர். மகாகனம் வெஸ்ற்றர்ண் அத்தியக்ஷரவர்கள் தம் ஆராய்ச்சியின் பயனாய், ப்ரெடெரிக் கேமரர் நாசரேத்தில் 1804ம் வருஷம் ஏப்ரில்மீ 3ம்உ பிறந்தார் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இவர் நாசரேத்தில் பிறந்ததெங்ஙனம் என்று எம் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கவியலாது போயினும், 1802ல் கனம் கெரிக் ஐயர் காலமான பின், கனம் கோலாப் ஐயரும் (பெரிய) கேமரர் ஐயரும் சேர்ந்தே திருநெல்வேலி மிஷனை மேல்விசாரணை செய்ய ஏற்பட்டபடியால், அக்காலை (பெரிய) கேமரர் ஐயர் தம் குடும்பத்துடன் நாசரேத் வந்திருப்பார் எனவும், அவ்வமயம் அம்மாளுக்குப் பிரசவம் ஏற்பட்டு, பின்னால் இவ்வூருக்கே மிஷனெரியாக வந்து ஊழியம் செய்யவென்று தேவனால் நியமிக்கப்பட்ட கேமரர் குமாரன் பிறந்தார் என்றும் நாம் எண்ணலாம்.

பிறப்பு

இம்மகானின் இளம்பிராயத்தைப்பற்றி யாமொன்றும் அறியோம். தஞ்சை, தரங்கை, சென்னை நகரங்களில் கல்வி கற்றார் என்று ஊகிக்கலாம். இவர் தம் வாழ்நாளில் தம் சுய நாட்டுக்குச் சென்றதேயில்லை.

1826ம் வருஷம், ஹௌராவிலிருந்த, (கல்கத்தா) அத்தியக்ஷர் வேதசாஸ்திரக் கல்லூரியில் சேர்ந்து 1832 வரை வேதசாஸ்திரம் கற்று, பின் சென்னை வெப்பேரியில் உபதேசிகராய் பணியாற்றினார். 1834ம் 1835ம் வருஷங்களில் பிஷப் வில்சனின் மொழிபெபர்ப்பாளராய் தென்னிந்திய சுற்றுப்பிரயாணம் செய்தபோது 1835ம் வருஷம் நவம்பர் 16ம்உயில், கொல்லம் ஆலயத்தில் அவ்வத்தியக்ஷரிடத்தில் உதவிக் குருப்பட்டம் பெற்று, 1836 ஜனுவரி முதல் வெப்பேரி குருவாக நியமிக்கப்பட்டார். இயற்கையிலேயே ஆற்றலும் ஊக்கமும் உள்ளவரானதால், அக்காலம் ஜாதிப் பிரிவினை மனப்பான்மை கிறிஸ்தவர்களிடைக் காணப்படலாகாதென வில்சன்

அத்தியக்ஷர் விடுத்த கட்டளையின் காரணமாய், வெப்பேரிச் சபையில் உண்டான பெரும் குழப்பங்களைச் சித்தியுடன் தீர்த்துக் கீர்த்தி யடைந்தார்.

1837ல் இரியன், ரோசன் ஐயர்மார் திருநெல்வேலியை விட்டுச் சென்னைக்கும், டென்மார்க்குக்கும் போய்விடவே, இம்மிஷன் மறுபடியும், மிஷனெரிப்பாஷையில், "அநாதையாகிவிட்டது". எனவே, 1837 ஜனுவரி 8ம்உ சென்னை மகாகனம் காரி (Bp Daniel Corrie) அத்தியக்ஷரால் குருவாக அபிஷேகம் பெற்று பின்னும் வெப்பேரியிலேயே மிஷனெரியாகவிருந்துவந்த, நம் கனம் கேமரர் ஐயரை நாசரேத்துக்கு மாற்றினார்கள். 1838 மே மாதம் 25ம்உ கேமரர் பாளையங்கோட்டைக்கு வந்து, சில நாட்கள் கழித்து நாசரேத் சேர்ந்தார். அதிலிருந்து, 1839ல் முதலூர் மிஷனெரிகளான கனம் ஹேய்ன், கோலாப் ஐயர்மார் வருமட்டும், திருநெல்வேலி மிஷன் மேற்பார்வை முழுவதும் கேமரரின் பொறுப்பிலேயேயிருந்தது.

நாசரேத் நியமனம்

கேமரர் காலத்தில் நடந்த முக்கியமான பல காரியங்களை ஏற்கெனவே கவனித்தோம். மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷரவர்கள் ஐயரைப்பற்றி சில குறிப்புகளை எழுதியுள்ளார்கள். அத்தியக்ஷர் கேமரரை நேரில் அறிவாராதலால், அன்னார் கூற்று நமது ஆராய்ச்சிக்கு மிகவும் பயனுடைத்து.

* "இயற்கையிலேயே கேமரர் ஐயர் மிகுந்த ஆற்றலும், சரீர சக்தியும், உற்சாகமான ஆவியும், எக்காரியத்தையும் மற்றவர்களைவிடத் திறம்படச் செய்து முடிக்கவேண்டுமென்ற ஆசையும் உடையவர். எனவே முன்னேற்றத்துக்கான பல புதிய காரியங்களைச் செய்யவாரம்பித்தார். இதில், புதிதாக பக்கத்து ஊர்களுக்கு வந்திருந்த C. M. S. மிஷனெரிமாரைவிட எவ்விதத்திலும் தாம் பின்னடையக்கூடாதென்று விரும்பினார். இவ்வித உற்சாகம் மிகுந்திருந்தபடியால் நாசரேத்தையும், அதைச் சார்ந்த கிராமங்களையும் உன்னத ஸ்திதிக்குட்படுத்தியதுமின்றி, தமது மிஷனெரிப் பிராந்தியத்திலுள்ள தூரமான கிராமங்களையும் ஒன்றன்பின் ஒன்றாய் ஆதாயப்படுத்தினார் † இராமநாதபுரம் வரை அவருடைய ஊழியம் வியாபித்தது.............

துணிசயம்

---

* Page 103, Reminiscences of Bishop Caldwell (1894) by Rev. J. L. Wyatt.

† *1855—56*-ல் கேமரர் ஐயரின் சிநேகிதரான புதுக்கோட்டை மிஷனெரி கனம் பீற்றர் ஜார்போ ஐயர் சுகவீனத்தினிமித்தம் ஒரு வருஷ ரஜாவிலிருந்தபோது, கேமரர் நாசரேத்திலிருந்து கொண்டே புதுகோட்டை சேகரத்தையும் பார்த்து வந்தார்.

*1854*ல் ராமநாதபுரம் மிஷன் தற்காலிகமாக கனம் கேமரர் ஐயரின் கண்காணிப்பிலிருந்தது, நாசரேத்திலிருந்து கொண்டே அந்தச் சேகரத்தையும் மேற்பார்வையிட்டார்.

......கேமரர் கட்டின ஆலயங்கள் கோபுரங்கள் இவைகளின் கட்டுமான அமைப்பு (architecture) முதலியவை, முன்னேற்றம் மிகுதியான இக் காலத்திலுள்ளோர்க்கு (1888) இழப்பமாய் தோன்றலாம். ஆனால் அலங்காரம் பெரிதாய் எண்ணப்படாத அக்காலத்தில் அவை பல நன்னோக்கங்களை நிறைவேற்றக்கூடியனவாயிருந்தன. அழகிலும் கூடத்தான் இன்றைய வரையிலும் திருநெல்வேலியில் எவ்வகையிலும் அவற்றிற்கு மிஞ்சின கட்டடங்கள் கட்டப்பட்டுவிடவில்லை..........................................

ஊழியசீலம்

......கேமரர் ஒரு பெரிய வித்துவான், அல்லது கல்வியில் ஒரு மேதாவி என்று கூறிவிட முடியாது; அதிகமாக வாசிப்பவருமல்லர். ஆனால், தமிழ்ப் பாஷையைச் செவ்வனே அறிந்திருந்தார். சுதேச மிஷன் ஆசாமிகளைப் பற்றியும் அவருக்கு நன்கு தெரியும். ஆகவே வேதபாடப் புஸ்தகங்களையும், உயரிய சித்தாந்த, வேத சாஸ்திர நூல்களையும் தமிழில் சுருக்கமான மொழிபெயர்ப்பு நூல்களாய் வெளியிட்டார். இப்பணிவிடை அவரது மனைவியின் மரணத்திற்குப் பின்பே அதிகமாகச் செய்யப்பட்டது. இந் நூல்கள் இந்நாட்டில் இன்றும் (1888) மிகுந்த பயனுடையனவாய்த் திகழ்கின்றன.''

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் கேமரர் ஐயரவர்களது கல்வி ஞானத்தைக் குறித்துப் புகழ்ந்துரையாதுபோயினும், கேமரர் ஐயரவர்கள் மொழிபெயர்த்த, அல்லது தாமே எழுதின நூல்களெவை என்று வாசகர் அறியின், அவரது கல்வித் திறனையும் ஒருவாறு ஊகித்தறிந்துகொள்வதற்கேதுவாகுமென்றெண்ணி அவற்றை ஈண்டுக் குறிப்பிடுவோம்.

நூல்கள்

1. புதிய ஏற்பாட்டுச் சரித்திரச் சுருக்கம். (1854) 2. பழைய ஏற்பாட்டுப் பெயர்களின் சரித்திர, பூசாஸ்திர அகராதி (1853) 3. புதிய ஏற்பாட்டு உள்ளடக்கம் (analysis) (1854) 4. சுருக்க ஜெபங்கள், சுவிசேஷ வாக்கியங்கள் இவற்றின் வியாக்தி (இரண்டு புஸ்தகங்களாக) (1854.) 5. பேய்லி எழுதின ஹோரே பாலினே (மொழி பெயர்ப்பு) Paley's Horae Paulinae (1855). 6. நிக்கோல் என்பரின் ஞாயிறு ஆசரிப்புக்கான அப்பியாசங்களின் மொழிபெயர்ப்பு. (1855) 7. சுவிசேஷங்களின் ஒப்புமை. (Harmony) (1855) 8. நமதாண்டவரின் குணுதிசயங்களும் திருநாமங்களும் (1855) 9. போகாட்ஸ்கி என்பவரின் பொன்னிலயம் (மொழிபெயர்ப்பு) (1855) 10. சங்கீதாகமத்தின் விளக்கவுரை (1857) 11. எண்பத்தியாறு பிரசங்கக் குறிப்புகள் (Eighty-six sketches with skeleton sermons) 12. ஆங்கிலத் தமிழ் அகராதி (முற்றுப்பெறவில்லை)

பழங்காலத்து S. P. G. மிஷனெரிமார்களில் பலர் கனம் கேமரர் ஐயரவர்களைவிடக் கல்வியிலும் ஞானத்திலும் சிறந்தவர்களாய் இருந்த போதிலும் ஒருக்கால் டாக்டர் கால்ட்வெல் அத்தியக்ஷரைத் தவிர வேறு யாரும் கேமரர் ஐயர் போன்ற அளவு நூல்கள் பல வெளியிட்டதாகத் தெரியவில்லை.

கேமரர் ஐயர் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்ததினால், இந்துக்களுடைய குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தார். அவர்களோடுள்ள தம் நடவடிக்கைகளை வெகு ஞானமாய் நடத்தினார். எனினும் தமக்கோ, தம்மைச் சேர்ந்த மற்ற கிறிஸ்தவர்களுக்கோ அவர்களால் ஏதேனும் ஆபத்துவரின், அஞ்சா நெஞ்சுடனும் மகா தீரத்துடனும், விரோதிகளாய் வந்தவர் எத்துணை அதிகமாய் இருந்திடினும், அவர்களை எதிர்த்து வெற்றி கொண்டார். இதை ரூபிக்கப்பல பாரம்பரியச் சரித்திரங்கள் இன்னும் ஜனங்களால் சொல்லிக்கொள்ளப்படுவதுண்டு.

1841-ம் வருஷம் கேமரர் ஐயர் தனியாகப் பாளையங்கோட்டைக்குச் சென்று நாசரேத்திற்கும் மற்றக் கிறிஸ்தவ கிராமங்களுக்கும் ஏற்பட்டிருந்த கொடிய ஆபத்தினின்று, அவர்களைக் காத்ததைப் பற்றி முன்னால் பார்த்தோம்.

1850 போல் பிள்ளையன்மனையில் புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்த சில வீட்டுக்காரருக்கு, பிள்ளையன் என்ற பெயருடைய பண்ணையாரால் தூண்டிவிடப்பட்ட அவ்வூர் இந்துக்களால் கொடிய துன்பம் ஒன்று உண்டாயிற்று. குடிதண்ணீர் முதல் இக்கிறிஸ்தவர்களுக்கு மறுக்கப்பட்டது. அவர்கள் பட்ட துன்பம் இங்கு எடுத்துக்கூறுந்தரத்தன்று. எனவே, ஐயரவர்களின் அனுசரணையில் சில நாசரேத் கிறிஸ்தவர்கள் ஒரு நாள் அதிகாலையில் அங்குச் சென்று, கிறிஸ்தவர்கள் சார்பில் அவர்களுடைய விரோதிகளுடன் போர் தொடுத்து, முடிவில் எதிரிகளான இந்துக்கள் அனைவரையும் மார்க்க ஆராய்ச்சியாளராகச் சேர்த்துவிட்டுத் திரும்பினர். இது ஓர் பாரம்பரியக் கதையாயிருப்பினும், இக்கூற்று முழுவதும் அப்படியே ஒப்புக் கொள்ளப்படாது போயினும், பிள்ளையன்மனையார் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்தபோது ஏற்கெனவே மார்க்க ஆராய்ச்சியாளரானவர் தவிர, மற்றையோரில் மிகுதியானவர்கள் கிறிஸ்துவை அண்டிக்கொண்டபோது, ஒருங்கே கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்தனர் என்பது சரித்திர வுண்மை.


**பிள்ளையன்மனை**

மற்றொரு சமயம் மெஞ்ஞானபுரம் கனம் ஜாண் தோமாஸ் ஐயர் நாலுமாவடியில் ஒரு கொடிய விபத்தில் சிக்கிக்கொண்டார். நாலுமாவடியில் 1840ல் சிலர் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர். எனவே



பிள்ளையன்மனை — பரமேறுதலின் ஆலயம்


பிரதிஷ்டை பரமேறுதலின் திருநாள் 1899



அகப்பைக்குளம் — பரி. அந்திரேயா ஆலயம்



வாழையடி — திரித்துவ ஆலயம்
திறப்பு 1903



மூக்குப்பீறி — பரி. மாற்கு ஆலயம்
பிரதிஷ்டை 25—4—1910



உடையார்குளம் — பரி. பவுல் ஆலயம்
பிரதிஷ்டை 5—2—1907

அங்கு ஒரு சிறு சபை இருந்தது. வழக்கம்போல் அச்சிறு சபையும் துன்பத்தழலில் தன் விசுவாசத்தை உறுதிப்படுத்த வேண்டியதாயிற்று. அக்காலை ஒரு மாலையில் ஜாண் தோமாஸ் ஐயர் அங்குச் சென்று சபையாரை அவர்களின் சிறிய ஜெப வீட்டில் கூட்டி ஆராதனை நடத்திக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவரையும் அக்கிறிஸ்தவர்களையும் ஒருங்கே அடித்துத் துரத்திவிட எண்ணிய ஒரு பகைவர் குழாம் ஆலயத்தைச் சுற்றிக்கொண்டது. அச்சமயம் நடந்தவற்றைக் கனம் ஐயரே விஸ்தரிக்கவிட்டுவிடுவோம்

நாலுமாவடி

* "காரியம் என்னவென்றறிய உபதேசியார் வெளியில் சென்றார். உடனே பகைவர் அவர் தலையில் ஒரு கல்லைக்கொண்டடிக்கவே, அவர் தலையிலிருந்து ரத்தம் பீறிட்டு வடிய, ஜெபவீட்டிற்குள் ஓடி வந்தார். நாங்கள் சீக்கிரமாகக் கதவுகளையும் ஜன்னல்களையும் பூட்டிவிட்டு, இவ்விடத்திலிருந்து நான்கு மைலுக்குள் வசித்த கனம் A. F. கேமரர் ஐயருக்கு ஆளனுப்பி, எங்களுடைய மோசமான நிலையைத் தெரிவித்தோம். அவரும் உடனே (நாசரேத்திலிருந்து) ஏராளமான தம்முடைய ஆட்களைக் கூட்டிக்கொண்டு வந்தார். அவர்கள் வருவதைக் கேள்விப்பட்டதும் எங்கள் பகைவர் ஓடி ஒளித்தனர். பின் நான் அன்று அவரோடு சென்று அவர் வீட்டில் தங்கினேன். பின்னால் மாஜிஸ்திரேட்டுக்கு மனுச் செய்யவே கலகக்காரர்களில் பிரதானமானவர்கள் தண்டிக்கப்பட்டு, நன்னடக்கை ஜாமீன் கொடுக்க வேண்டியதாயிற்று. இக்காரியத்துக்குப்பின், அவ்வூரில் கிறிஸ்து மார்க்கத்துக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாமல் எல்லாம் செவ்வையாய் நடைபெறுகிறது."

இவ்வண்ணம் நாலுமாவடிக் கிறிஸ்தவர்கள் துன்பப்பட்ட காலத்துக் கேமரர் சமய சகாயனாய் நின்று உதவி செய்தார். இவர் காலத்தில் மறவர்களால் நாசரேத்தாராருக்கு இடைக்கிடையே ஏற்பட்டுக் கொண்டிருந்த உபத்திரவமும் அறவே நீங்கிற்று. திருநெல்வேலிப் பிள்ளையன் என்ற பண்ணையாரோவெனின் பிள்ளையன்மனையார் கிறிஸ்தவர்களானபின் கேமரர் ஐயர் வழிக்கே போகக்கூடாதென்று ஒரு முடிவுக்கு வந்து, அக்கிராமத்தையே விலைக்கிரயமாய் விற்றுவிட்டார் என்பர். காரணம் அதுவாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பிள்ளையன்மனையின் பூரண அதிகாரமும் கேமரர் வசம் வந்துவிட்டது என்பது உண்மை.

மேற்கண்டபடி கிறிஸ்துவுக்காகவும், அவர் தம் மக்களுக்காகவும் வைராக்கியம் காட்டி உழைத்த இப்பக்தன், நாட்டுச் சபைப் பிரிவினையின் காரணமாய் 1858ம் வருஷம் நாசரேத்தைவிட்டுத் தஞ்சாவூருக்கு மாற்றப்

* Page 111. Memoir of the Rev. J. Thomas by Rev. A. M. Grey-Edwards (1904)

பட்டார். தம் காலத்தில் நாசரேத் வட்டாரத்தில் இவ்வளவு விசேஷித்த ஊழியத்தை அவர் நடத்தியிருந்த போதிலும், மேல் கமிட்டியார் அதை நன்கு மதித்திலர்.

அவரது இருபது வருஷ ஊழியகாலத்தில் நாசரேத் மிஷன் அனுப வித்த நன்மைகள் அனந்தம். பிள்ளையன்மனை அகப்பைகுளம், கடைய னோடை, பன்றிமடல், உடையார்குளம் முதலிய பெருஞ்சபைகள் அவரது மிஷனெரிச் சேவையின் மாண்புக்கு அழியாச்சான்றுகள் மூக்குப்பீறி, பிள்ளையன்மனை, அகப்பைக்குளம், கடையனோடை போன்ற பேரூர் களின் பழைய ஆலயங்கள் அப்பக்தனின் தொண்டை விளக்கி நின்ற சின்னங்களாயின. லௌகீக வாழ்வில் மக்கள் மேன்மைபெற்று விழங்கு வதற்காக அவர் நிறுவிய பல கிராமக்கலாசாலைகளின் பின்தோன்றல் கள் இன்றுமுண்டு. அவரை என்றும் மறக்கமுடியா ஞாபகச்சின்ன மாகப் புகழுடன் நிலைத்திருப்பது நமது ஆழ்வார்திருநகரி உயர்தர ஆரம் பப்பாடசாலையே. இக்கலாசாலை அவருடைய பெயரைத் தாங்கியிரா விடினும், இதொன்றே அவரால் ஸ்தாபிதமான காலத்தினின்று தொடர்ச் சியான சரித்திரமுடையது. எனின் இப்பள்ளிக்கு கேமரர் உயர்தர ஆரம்பப்பாடசாலை என்று பெயர்தரின் நன்றும். கேமரர் அம்மாளை நாசரேத் ஒருக்காலும் மறக்க முடியாது என்பதற்கும் காரணம் கண் டோம். இத்தம்பதிகள் கல்வி முன்னேற்றத்தைமட்டும்தான் பிரதான மாகக் கொண்டு நின்றார்களோ? இல்லை. மக்கள் வறுமைப்பிணி நீங்கி, சுகமாய் வாழ்வது அவசியமென்பதையு முணர்ந்து அதற்கானவை பல செய்தார்கள். அவற்றில் இன்றும் அவர் புகழை நிலைநாட்டி நிற்பது கேமரர்குளம் என்ற புதுக்குளம். கிராமத்திற்கு வடமேற்கிலுள்ள சாண்பத்துக்குளம் கேமரருடைய முயற்சியினால் விரிவாக்கப்பட்டு, கரை கள் பலப்படுத்தப்படலானது. அது முதற்றான் அக்குளம் கேமரர்குளம் என்ற பெயர் பெற்றது என்று அறிந்தோர் கூறுகிறார்கள். இவை தவிர இன்னும் எத்தனையோ நல் ஈவுகளை இப்பெருமகன் நசரைப் புத்திரருக்கு ஈந்து வந்தார். மக்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு காரி யத்திலும் ஒரு பிரிய தகப்பன்போலப் பங்கெடுத்து, வேண்டும் ஆலோசனை களும் ஒத்தாசைகளும் தந்து உவந்தார். நாட்டுச்சபைப் பிரிவினை ஐய ரின் உத்தம ஊழியத்துடே ஏற்பட்டவோர் இழுக்கெனினும் அதுபற்றி அவர் தம் சேவையைக் குறைத்துரை செய்ய யாம் நாவெடோம்.

நாசரேத்தைவிட்டுச் சென்றபின் கனம் ஐயர் சுமார் மூன்று வரு ஷங்கள் தஞ்சாவூரில் ஊழியம்செய்து, 1862ல் ஓய்வெடுத்துத் தாங்கம் பாடியில் தம் வாழ்நாளின் பிந்திய வருஷங்களைச் செலவிட்டார். அவர் 87 வயதுடையவராய் இருக்கும்போது 1891-ம்ஆு செப்டம்பர்மீ 2ம்வ

அவருக்குப் பாம அழைப்பு வரவே, மிகுந்த சமாதானத்துடன், தாம் நேசித்துச்சேவித்த இயேசுராஜாவின் திருவடிநீழலை யெய்தினர். அவரது சரீரம், உயிர்த்தெழும் நாளை எதிர்நோக்கித் தரங்கையில் தூங்கும் மற்றனேக பக்தருடன் துயிலுறுகிறது.

---

# அத்தியாயம் 6

## பக்தன் பிரதர்ட்டன்

## 1859—1869

இப்பதினெரு வருஷங்களுக்கும் பிரதர்ட்டன் ஐயர் காலம் என்று பெயர் தந்திருப்பினும், இக்காலத்தில், நாசரேத்தில் நல்லூழியம் செய்த தவர் பிரதர்ட்டன் ஐயர் மட்டுமல்லர். *கேமரர் ஐயர் மாற்றப்பட்டதும், ராமநாதபுரத்தில் 1856 முதல் 1858 வரை மிஷனெரியாகவிருந்த, கனம் ஹென்ரி போப் ஐயர் நாசரேத்துக்கு அனுப்பப்பட்டார். இவரது நசரைப்பணியின் காலம் ஒரு வருஷமே. இவர் இங்கு அனுப்பப்பட்டதின் முக்கிய நோக்கம், சட்டம்பிள்ளைப் பிரிவினையை எவ்விதத்திலும் சமாதானப்படுத்திச், சபையை ஐக்யப்படுத்துவதே. இச்சேவையில் இவர் வெகுவாய் சித்திபெற்றார் என்றெண்ணுவதற்கில்லை. கடையனோடை உபதேசியாரான யோபு என்பவரைக் கட்டாயப்படுத்தி நாட்டுச்சபை விஷயத்தில் சற்றச் சோர்வடைந்திருந்த அவரது மாமனுரான சுவாமியடியான் உபதேசியாரைத் திரும்பவும் சபையில் சேரும்படி செய்தார். சுவாமியடியான் உபதேசியாரின் செல்வாக்கினுல் இழுக்கப்பட்டு, மேலும் சிலர் மூக்குப்பீரியில் சபையில் சேர்ந்ததே தவிர வேறு விசேஷமான எண்ணிக்கை ஒன்றுமில்லை. ஒருவாறு போப் ஐயரின் ஊழியகாலம் சரித்திரப் பிரசித்திக்கான எவ்வித சம்பவமும் நேரிடாது கழிந்துவிட்டது என்றே கூற வேண்டும்.

ஹென்ரிபோப் ஐயர்

1859ல் இவர் தம் மிஷனெரி உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டு, உதகமண்டலத்தில் தம் தமையனுரான கனம் G. U. போப் ஐயர் ஸ்தாபித்திருந்த கலாசாலையில் ஆசிரியராயமர்ந்தார். 1866க்குப்பின் மறுபடியும் மிஷனெரியாகச் சென்னை, திருச்சி, பங்களூர் முதலியவிடங்களில் ஊழியம் செய்தபின், 1885ம் வருஷம் சென்னையில் மரித்தார்.

1859ல் போப் ஐயர் வேலையைவிட்டு நீங்கிக்கொண்டதும் கனம் தாமஸ் பிரதர்ட்டன் ஐயர் நாசரேத் மிஷனெரியாய் நியமிக்கப்பட்டார்.

கனம் தாமஸ் பிரதர்ட்டன் ஐயரவர்கள் 1857ம் ஆண்டு சாயர்புரம் செமினெரித்தலைவராயிருந்த கனம் H. C. ஹக்ஸ்டபிள் ஐயர் (Rev. H. C.

---

* வியாஜ்யமொன்றில் கிறிஸ்தவர்கள் உண்மைத் தப்பாய் நடந்துகொண்டார்கள் என்று கேள்விப்பட்டு, மனம் வெந்து, கேமரர் தம் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டார் என்றவோர் பாரம்பரியமும் உண்டு.

Huxtable) சுகவீனத்தின் காரணமாய் S. P. G. இன் ஊழியத்தினின்று ராஜிநாமாசெய்து சுயதேசம் செல்லவே, அவரது ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டனர். இவர் இங்கிலாந்தில் லின்கன்ஷயர் மாகாணத்திலுள்ள பாஸ்டன் பட்டணத்தில் 1809ம் வருஷம் மே மாதம் 31ம்௳ ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். வாலிபனாக கேம்பிரிட்ஜ் சர்வ

பிரதர்ட்டன் ஐயர் இளமைப் பிராயம்

கலாசாலையைச் சேர்ந்த கார்ப்பஸ் கிறிஸ்டிக் கல்லூரியில் M A. பரீக்ஷைக்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் காலத்தில், பிரபல மிஷனெரிஊழியப் பிரசாரகரான சிமியோன் ஐயரின் பிரசங்கத்தைக்கேட்டு மனந்திரும்பினர். தாம் குணப்பட்டதும் தாம் கண்ட சந்தோஷத்தைப் புறமதஸ்தருக்கு அறிவிக்க வேண்டுமென்ற அவா மேலிட்டதால், மிஷனெரி ஊழியத்திற்கு உடனேயே தம்மைத் தத்தம் செய்தார். அக்காலத்தில் கேம்பிரிட்ஜில் 'ஜெப ஐக்கியம்' என்றொரு கழகம் மாணவருக்குள்ளுண்டு. பிரதர்ட்டன் அதிலங்கத்தினராகித் தம் வாழ்நாள் முழுவதும், அக்கழகக் கோட்பாட்டின்படியே, ஒவ்வொரு சனிக்கிழமையிலும் காலை நேரத்தில் ஒரு பகுதியை மற்றவர்களுக்காக மன்றாட்டு ஜெபம் செய்வதில் செலவிடுவார். இப்பக்தனது வாழ்க்கைச் சரித்திரத்தைப் பின்னால் தொகுத்திடுவோமாதலால் இதை இவண் நிறுத்தி நம் சர்க்கிளின் சரித்திரத்தை ஆராய்வோம்.

கனம் பிரதர்ட்டன் ஐயர் மிஷனெரியாகச் சாயர்புரம் வந்து சேர்ந்து திருமறைக் கழகத்தின் தலைவராகவும் மிஷனெரியாகவும் இரண்டு வருஷம் பணியாற்றினர். 1859ல் நாசரேத் ஹென்ரி போப் ஐயர் போய்விடவே, சாயர்புரத்துடன் இவ்வட்டாரத்தையும் சேர்த்து மேற்பார்வை செய்ய அதிகாரம் பெற்றார். ஆனல் வேத சாஸ்திரக்கலாசாலை வேலையுடன் இவ்விரு சேகரங்களையும் கவனிப்பது, பிரதர்ட்டன் போன்ற பக்தருக்கும் கூடியதன்று. எனவே கலாசாலைத் தலைமைப்பதவியைக் கனம் ஜாண் எர்ன்ஷா (Rev. John Earnshaw M. A.) ஐயரிடம் ஒப்படைத்துவிட்டு, 1860ல் நாசரேத்திலேயே தம் குடும்பத்துடன் வசிக்கலானர். அவர் மரிக்குமட்டும் நாசரேத், சாயர்புரம் என்ற இருவட்டாரங்களும் அவர் மேற்பார்வையின் கீழிருந்தன.

1859-ம் வருஷம் அக்டோபரில் நாசரேத் வட்டாரத்தில் 2287 ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களும் 393 ஆயத்தக்காரரும் இருந்தார்கள் 340 பேர் நற்கருணைக்காரர். 1400 பேருக்கு மேலாக நாட்டுச் சபையைச் சேர்ந்து விட்டதால்தான் சபையின் தொகை இவ்வளவு குறைவு. கனம் பிரதர்ட்டன் ஐயர் தமது கடிதங்களில் நாட்டுச் சபையிலிருந்து பிரிந்து நம் சபையில் திரும்பச் சேர்ந்து கொண்டவர்களின்

தொகைகளை அடிக்கடி குறிக்கிறர். எனினும் அத்தொகைகள் வெகு குறைவானவையே என்று நாமறிகிறேம்.

ஆனல் புதிதாக மார்க்கத்துக்கு வந்தவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. உதாரணமாக 1859-ல் 115 பேர்தான் புதிதாகச் சேர்ந்தார்கள். 1860ல் 141, 1861ல் 200. 1861-ம் வருஷத்தில் வெள்ளமடம் சபை உண்டாயிற்று. அதில் 130 பேர் ஆயத்தக்காரராஞர்கள். இச்சபையில் முதன் முதலாவதாக 1852 நவம்பர் 14-ல் 14 பேர் மட்டும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். 1860 வரை சபை விர்த்தியடையவில்லை. அவ்வருஷக் கடைசியில் மேற்சொன்ன 130 பேரும் சபையில் சேர்ந்து 1861-ல் ஞானதீக்ஷை பெற்றுர்கள்.

**சபை வளர்ச்சி**

ஐயரவர்கள் ஒரு தேசாந்தரப் பிரசங்கி. கனம் கால்ட்வெல் ஒரு தடவை "தென்னிந்திய அப்போஸ்தலஞன சங்கை ஷ்வார்ட்ஸ்க்குப் பின் சுவிசேஷ ஊழிய வாஞ்சையிலும் பரிசுத்த வாழ்க்கையிலும் தாமஸ் பிராதர்ட்டன் போன்ற ஒருவர் எழும்பவில்லை" என்று எழுதினர். பிரதர்ட்டனும் 1862-ம் வருஷ ரிப்போர்ட்டில், "தேசாந்திரப் பிரசங்க ஊழியத்திற்கு என்னை முழுவதுமாய் ஒப்புவித்து அவ்வேலையை நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒரு தடையும் வராவண்ணம், சபையின் மேற்பார்வையை எனக்குப் பதிலாக நடத்தத் தக்க உண்மையுள்ள சுதேச குரு ஒருவர் எனக்கு உதவியாக இருந்தால் எவ்வளவு நல்லது"* என்று எழுதுகிறர். தம் வாழ்நாள் முழுவதும் தேசாந்தர ஊழியம் செய்யவே விரும்பினர்.

சனி ஞாயிறுகளில் ஒய்வெடுத்துத் திங்கள் காலையில் சுவிசேஷ ஊழியத்திற்குப் புறப்பட்டு விடுவார். ஒரு கிராமத்துக்குச் சென்றதும் ஊருக்கருகில் கூடாரம் போட்டு அதில் தங்கிக்கொள்வார். இரண்டு மூன்று தினங்களுக்கான அளவு ஆகாராதிகளையும் தம்முடன் எடுத்துச்செல்வார். கூடாரத்தில் தங்கிக்கொண்டு, சுற்றிலும் இரண்டு முதல் நான்கு மைல் சுற்றளவுக்குட்பட்ட கிராமங்களுக்கு காலையிலேயே நடந்து சென்று ஜனங்களை வீடுகளில் கண்டு பேசி சுவிசேஷ நற்செய்தியை அறிவிப்பார். இப்படித் தாம் சந்திக்கச் சென்ற ஒவ்வொரு கிராமத்திலும் வேலை செய்தார். தம்முடன் யாரும் வருவதைப் பற்றியும் வாராததைப் பற்றியும் கவலைப்படுவ

**பிரசங்க வேலை**

* ஐயரவர்களின் இவ்வபேக்ஷை 1867-ம் வருஷத்தில் நிறைவேறினது. பிள்ளையன்மனையின் முதல் உபதேசியாரான மதுரநாயகம் என்பவரின் புதல்வன் ஏசுவடியான் 1867-ல் உதவிக்குருப்பட்டம் பெற்று நாசரேத்திலேயே ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டார்.

தில்லே. "சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" என்றும் வேதவசனத்தைத் தம் சட்டவாக்கியமாகக் கொண்டிருந்தார். இவ்விதம் ஒவ்வொரு மாதத்திலும் சுமார் 20 நாட்கள் செலவிடுவதுண்டு.

ஒரு சமயம் காட்டிலமைக்கப்பட்டிருந்த தம் கூடாரத்தில் இரவில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு நல்ல பாம்பு இவருடன் வந்து படுத்துக்கொண்டது. காலையில் விழித்துச் சற்றுப் புரண்டார்.

நாகப் பாம்பு

நசுங்குண்ட அந்நாகம் இவரது மார்பில் ஏறித் தன் படத்தை விரித்து, தன் கொடிய கண்களால் கோபாவேசத்துடன் பக்தனின் முகத்தைப் பார்த்துச் சீறியது. தானிருந்த ஆபத்தான நிலையைக் கண்ட இயேசுவின் தாசன் தம் ஆண்டவரை நோக்கி மௌனமாக வேண்டுதல் செய்தார். ஜெபத் தந்தி அன்பருக்கெட்டவே அவரது ஆக்ஞை பெற்ற அந்நாகம் தன் படத்தைச் சுருக்கி கோபம் நீக்கி, மெதுவாய் இறங்கி வெளிச் சென்று மறைந்தது.

கனம் ஐயரவர்கள் சுவிசேஷ ஊழியத்தினிமித்தம் அனுபவித்துள்ள கஷ்டங்கள் பல. அவற்றில் இரண்டொன்று தமிழ்ச் சபைத் தீபிகையில், கனம் P. S. கடம்பவனம் அவர்களால் வெளியிடப்பட்டன. அவை அப் பக்தனின் ஊழியவாஞ்சை, தயவு, காருண்யம், பொறுமை, அன்பு முதலிய சற்குணங்களை காட்டுபவையாதலால், சில மாறுதலுடன் அவற்றை இங்கு பெயர்த்தெழுதுவோம். * பிரதர்ட்டன் குள்ளமாயிருப்பார். பருத்த

சிறுவனின் விஷமம்

தொந்தியும் கனத்த அங்கமும் உடையவர். வெளிப் பிரசங்கத்தில் பிரீதி அதிகம் அவருக்குண்டு. எந்நாளும் கையிலே அழகிய சிறு கோல் வைத்திருப்பார். மற்றவர்கள் தெருப் பிரசங்கம் செய்யும் சமயம், அக் கோலைத் தம் இருக்கையாக ஊன்றி அமர்ந்துகொண்டு ஜெப சிந்தையில் நிற்பார். ஓர் தினம் ஓர் இளைஞன் அக்கோலைத் தட்டிவிட்டான். அரியவரான ஐயரோ அடியற்ற மரம்போல கீழே விழுந்தார். உடனே முழங்காலிலிருந்து செந்தமிழ் மணத்துடன் ஜெபித்தார். அவ்விளைஞனை போலீஸார் வசம் ஒப்புவிக்கப் பலர் எத்தனிக்கையில், அவர் அவனை விடுவித்து, அவனைத் தம் கையில் பிடித்தவண்ணம் உடனே, 'பாவம் இவ்வாறுதான்' என்று சொற்பொழிவாற்றினர்.

வேறோரு தருணம் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயில் சந்நிதித் தெருவில் நின்று பிரசங்கம் செய்யும் கிறிஸ்தவக் குழாத்தில் ஐயரும்

* [ஆனால் கனம் கால்ட்வெல் அத்தியக்ஷர் பிரதர்ட்டன் வளர்ந்து கனத்த திரேகமுடையவர் என்று குறித்துள்ளார்]

கின்றார். அச்சமயம், ஓர் நம்பூதிரிப் பிராமண வாலிபன் ஒரு குண்டு-

குண்டூசி

சியை அவரது வயிற்றில் குத்தி இறக்கிவிட்டு ஓடினான். ஐயர் ஊசியைப் பிடுங்கி எறிந்தார். ரத்தம் பீறிட்டது. வேதனை அதிகரித்தது. அச்சமயம் அவ்வாலிபனை மற்றவர்கள் பிடித்து அவனது விஷமத்தனத்துக்காக அடிப்பதைக் கண்டு, உடனே அவனை அணைத்துக்கொண்டு அவனுக்கு அடைக்கலம் அளித்தார். †

எவ்வித ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது, நாசரேத், சாயர்புரம் என்ற இரு வட்டாரங்களிலும் பிற விடங்களிலும் திவ்விய சேவை யாற்றிய பிரதர்ட்டன் தன் கடைசி நாட்களில் எழுதிய கடிதம் ஒன்றில், * "சுவிசேஷச் செய்தியை தங்கள் வீட்டு வாசலிலேயே பெற்றுக்கொள்ளாத புறமதஸ்தரான குடும்பத்தினர் ஒருவரும் இவ்விரு சேகரங்களிலும் இல்லை," என்று எழுதினார்.

கனம் ஐயரவர்களின் சுவிசேஷ ஊழியத்தின் பயனாய்க் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சபைகளில் இன்றும் செழித்து நிற்பவை வெள்ளமடமும் பிள்ளையன்மனையுமாம். பிள்ளையன்மனையில் இன்னமும் எஞ்சி நின்ற சில குடும்பத்தார் 1861 பெப்ருவரி, மார்ச் மாதங்களில் கிறிஸ்துவை

பிள்ளையன்மனை

ஏற்றுக்கொண்டதாக ஐயரவர்களின் கடிதங்களினின்று புலனாகிறது. அவ்வூரைப்பற்றி அவர் எழுதியது என்னவெனின் †† "பிள்ளையன்மனை முற்றிலும் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டாயிற்று. அவ்வூர்க்கிறிஸ்தவர் ளில் ஆலய அசட்டைக்காரராயிருந்தவர்களும் இப்பொழுது ஒழுங்காய் ஆராதனைகளுக்குப்போகத் தலைப்பட்டுவிட்டனர்," என்பதே. 1863 பெப்ருவரி 23ல் ஆழ்வார்திருநகரியில் தேவமாரில் ஆறுபேர் ஐயரிடம் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் அங்கத்தினராயினர்.

வெள்ளமடத்தைப்பற்றி "இச்சபையினால் எனக்கு மிகுந்த ஆறுதல் உண்டு. இச்சபையார் ஒழுங்குள்ளவர்களாகவும், தங்கள் (ஞானோபதேச) பாடங்களைப் படிப்பதில் ஊக்கமுள்ளவர்களாகவும் விளங்குகிறார்கள்," என்று குறிப்பிடுகிறார். மளவையில் 1860ம் வருஷம் தேவமாரில் சில குடும்பத்தார் கிறிஸ்துமார்க்க ஆராய்ச்சியாளரானார்கள். ஆனால் வெகு சீக்கிரத்தில் அவர்களுக்குண்டான துன்பத்தின் காரணமாக இரண்டு வயோதிப விதவைகளைத் தவிர மற்றனைவரும் மறுதலித்துவிட்டார்கள். இவ்விரண்டு ஸ்திரீகளும் மரண பரியந்தம் உண்மையாய் நிலைத்திருந்தார்கள். மேலும் 1869ம் வருஷத்தில் கரையடிப் பட்சேரியில் 4 குடும்பத்தார் மார்க்க ஆராய்ச்சியாளரானார்கள். பழைய சபைகளில் சிலவற்றைப்பற்றியும்

---

† P. 67 Tamil Church Deepika, Feb. 1950.
* Page 542, Two Hundred years of the S. P. G. by C. F. Pascoe
†† M. D. C. Report 1863.

பிரதர்ட்டன் மிகுந்த மகிழ்ச்சியுடன் மேல் கமிட்டியாருக்கு எழுதினர். அவற்றிற் சில வருமாறு :—

"அசுப்பைக்குளம் சபையைப்பற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி" (1861)

"பன்றியடல் இவ்வட்டாரத்தின் 'தங்கச் சபை' (Golden Congregation of the District). ஜனங்களின் உதாரத்துவமும், பொதுவாக அவர்களின் நன்னடத்தையும், ஒழுங்கான ஜீவியமும்

சில சபைகள்

அவர்களை இப்பெயருக்குத் தகுதியுள்ளவர்களாக்குகின்றன. புதிய ஆலயம் ஒன்று கட்டுகிறார்கள். அவ்வாலயக் கட்டுமானம் கிட்டத்தட்ட முடிவுற்றுவிட்டது. கட்டுமானச் செலவுக்கு அவர்கள் உதாரத்துவமாய் நன்கொடையளித்திருக்கிறார்கள்" (1862).

பக்தனுன ஓர் ஊழியன் ஒரு சபையில் எவ்வித சிறந்த ஊழியம் நடப்பிக்கலாம் என்பதற்கு பிரதர்ட்டன் ஐயர் ஓர் முன்மாதிரி. அவருடைய சபை வேலையின் சிறந்த லக்ஷணம் மக்களுக்குள் வேத அறிவையும் ஜெப வாஞ்சையையும் ஊட்டுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட பிரயாசமே. சபை வருமானம், ஆராதனை ஆசரிப்புக்கள் முதலியவை தாமாகவே வளரும் என்பது ஐயரின் ஐதீகம்.

இதற்காக ஒவ்வொரு சபையிலும் ஜெபக்கூட்டங்களை ஏற்படுத்தினர். நாசரேத்திலும் இன்றுவரை வீடுகளில் வாரந்தோறும் நடைபெறும் ஜெபக்கூட்டங்களை ஏற்படுத்தியவர் பிரதர்ட்டனே. முதன் முதலாவதாக 1860ல் இது ஏற்பட்டது. இச் ஜெபக்கூட்டங்களில் தாமாவது ஊழியராவது வேதம் வாசிப்பது கூடாது. ஜெபக்கூட்டத்திற்கு வந்திருக்கும் ஆண்களில் ஐயர் யாரைக் குறிப்பிடுகிறாரோ அவரே வாசிக்க வேண்டும். இப்பாகத்தை வாசிக்கவேண்டுமென்றும் ஐயர் சொல்வதில்லை. நாசரேத் சபையாரிடை வேத அறிவு அக்காலம் அதிகம் காணப்பட்டதினுல் சந்தர்ப்பத்திற்கேற்ற வேதாகமப் பாகங்களை அவர்கள்

சபை வேலை

தாங்களே எடுத்து வாசித்து விடுவார்கள். இதைப் பற்றி எழுதும்பொழுது, "கேமரர் ஐயர் நாசரேத் சபையாருக்கு வேத அறிவை நன்றாய்ப் புகட்டி இருக்கிறார்" என்று தனக்கு முன்னிருந்தவரையே புகழுகிறார். மேலும் "இந்த நல்ல பயிற்சியை இன்னும் அதிகமாய்க் கொடுத்து, அடுத்த வருஷத்தில் இந்துக்களுக்கு வேதத்தை வாசித்துப் போதிக்கவும் இவர்களைப் பழக்கிவிட உத்தேசிக்கிறேன்", என்று நம்பிக்கையுடன் வரைந்தார். ஜெபக்கூட்டம், வேத ஆராய்ச்சிக் கூட்டம் இவற்றில் ஜெபிக்கவும் மக்களுக்குப் பயிற்சியும் அதற்கேற்ற தைரியமும் நாளடைவில் ஏற்பட்டது.

ஆவிக்குரிய விஷயங்களில் இவ்வித உற்சாகம் ஊட்டப்பட்டதும் நாசரேத் சபையில் ஆலய ஆராதனைகளுக்கு ஜனங்கள் திரண்டு வரலாயினர். "ஆலயத்தில் ஆராதனைகளுக்கு ஆஜர் வெகு சேர்த்தி," என்பது ஐயர் கடிதங்களினின்று பொறுக்கி எடுத்த ஒரு வாக்கியம்.

மக்களின் ஜெபவாஞ்சையை நிரூபிக்க ஓர் சரித்திரம் மிஷனெரி ரிக்கார்டுகளில் காணப்படுகிறது. 1865-ம் வருஷத்தில் இப்பாகங்களில் காலரா நோய் வெகு மும்முரமாயிருந்தது. நாசரேத்தைச் சுற்றிலுமிருந்த கிராமங்களில் ஏராளமானபேர்கள் இவ்விஷநோய்க்கிரையானார்கள். எங்கும் பரவிய இவ்வியாதி நாசரேத்தையும் தாக்கிற்று. ஐம்பதுக்கதிக மானவர்கள் இவ்வியாதியால் தாக்குண்டார்கள்.

**ஜெப வாஞ்சை**

எனவே, ஊரார் ஐயரிடம் முறையிட்டு, 'ஜெபமும் உபவாசமுமேயன்றி நாம் கையாடத்தக்க மருந்து வேறொன்றுமில்லையாதலின், இம்முறைகளை உடனே ஏற்படுத்தவேண்டு' மென்று வேண்டிக்கொள்ள, ஐயரும் ஒப்புக்கொண்டு, அவ்வண்ணமே ஒரு நாள் குறிக்கப்பட்டுச் சபையார் அனைவரும் உபவாசமிருந்து ஜெபித்தனர். ஒவ்வொரு வீட்டிலுமிருந்து மனஸ்தாபக் கண்ணீருடன்கலந்த ஜெப தூபம் விண்ணுக்கேறிற்று. 'அன்று உபவாசித்து ஜெபியாத ஆத்துமா ஒன்றுகூட நாசரேத்திலில்லை.' என்ன ஆச்சரியம்! வாதை உடனே நிறுத்தப்பட்டது. தாக்குண்டவர்களில் ஏற்கெனவே மரித்துவிட்ட பதினைந்து பேரைத் தவிர மற்றவர்களனைவரும் சுகம் பெற்றனர். ஐம்பதின்மரைத் தவிர வேறெவரும் நோய்வாயும்பட்டிலர்.

ஓய்வு நாட்களில் மூன்று ஆராதனைகள் நடத்தப்பட்டன. காலையிலும் மாலையிலும் பிரசங்கமும் உண்டு. மற்ற நாட்களில் சுருக்கமான காலை மாலை ஆராதனைகளும் அவற்றில் அந்தந்த நாள் பாடங்களின் மீது சுருக்கமான விளக்கவுரைகளும் கொடுக்கப்பட்டன. புதன்கிழமையிலும், வெள்ளிக்கிழமையிலும் காலையில் லித்தானியாவும் பிரசங்கமும் இருக்கும். மாலையில் பெண்களுக்கென்று வேதாகம வகுப்புகள்; ஓய்வு நாட்களில் ஆண்களுக்கொன்றும் பெண்களுக்கொன்றுமாக இரு வேதபாட வகுப்புகள் நடைபெற்றன. பரிசுத்த நற்கருணை மாதத்திற்கொருமுறை மட்டுமே பரிமாறப்பட்டது. இவ்வாராதனைகளெல்லாவற்றிலும் திரளானவர்கள் பங்கெடுத்தனர்.

**ஆராதனைகள்**

கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் தன் சபையில் நடந்துவரும் திவ்விய பணிவிடையைத் தன் ஜெபத்தாலும் பொருளாலும் தாங்கக் கடமைப்பட்டிருக்கிறான். இப்பெரிய சத்தியத்தைச் சபையாருக்குச் செவ்வனே

கற்பிப்பது ஊழியரின் கடமை. இதைத் தீர்க்கமாய் உணர்ந்தவர் பிரதர்ட்டன். எனவே அவர் 'குருத்துவ ஊழிய சுப ஆதரவு பண்டெ'னவும், 'உபதேசிகர் பண்டெ'னவும் இரு நிதிகள் நிறவினர். இப்பண்டுகளுக்குச் சபையார் உற்சாகமாய் கொடுத்தார்கள். 1865–ல் வேதமுத்து என்ற கொடையாளி ரூ. 1500 'உபதேசிகர் நிதிக்'கென்று கொடுத்தார். பின்னும் சின்னுட்களில் இதை ரூ. 3000 ஆக்கினர். இந்நிதியினின்று வரும் வட்டித்தொகை உபதேசிமார் சம்பளத்துக்காக உபயோகிக்கப்படலாயிற்று. அக்காலச் சபையில் இவர் ஓர் சிறந்த பக்தன். 1829-ல் புதிய ஆலயங்கட்ட வேண்டுமென்று ரேனியஸ் ஐயர் மூலமாய் உதவித்தொகைக்காக மனுப்பண்ணின சபை மூப்பர் மூவரில் இவரும் ஒருவர். 1777-ம் வருஷத்தில் வண்ணமுத்துமுக்கந்தர் என்பவரின் மகனுகப் பிறந்து முதல் கிறிஸ்தவர்களில் ஒருவரானுர். இயல்பிலேயே செல்வவளத்தினர். அதற்கேற்ப அவர் உள்ளமும் வள்ளன்மை கொண்டது. இவரது ஞாபகத்தை நாசரேத் சபை என்றும் கண்ணியப்படுத்தத் தயங்காது, ஆலயத்தின் உட்புறத்தில் அவருக்கென்று ஞாபகச்சின்னம் ஒன்று அமைத்திருப்பது நேயர் அறிவர்.

வேதமுத்து உபதேசிகர் நிதி

மேற்படி நிதிகள் தவிர 'சபைச்சங்கம்' என்ற ஒரு உத்தம ஏற்பாட்டை ஐயர் ஏற்படுத்தினர். இவ்வேற்பாடு ஏற்கெனவே C. M. S. சபைகளிலுண்டு. S. P. G. சபைகளில் மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷரே இவ்வழக்கத்தைப் புகுத்தினர். கனம் ஐயரும் இம்முறையின் மேம்பாட்டைச் சிலாகித்து, 1866—67ல் இதை நாசரேத் சபையில் நிறுவப், பின்னுல் வட்டாரச் சபைகளிலும் இது வழக்கத்திலாயிற்று. C. M. S. சபைகளில் சங்கம் செலுத்தப்பட்டதற்கும், S. P. G. சபைகளில் அது செலுத்தப்பட்டதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. முன்னதில் அது ஊழியர் வாங்கிச் செலுத்தவேண்டிய காணிக்கையாயிருந்தது. கால்ட்வெல், இக்கைங்கர்யத்தை சுதேசச் சங்கம் என்ற சங்கத்தை ஏற்படுத்தி, அக்கழகத்தார் வசம் ஒப்படைத்தார். இக்கழகத்தார் சங்கப்பணத்தை வசூல் செய்வதுமன்றி, சபையில் ஒடுக்கப்பட்டவர்கள், துயரப்பட்டவர்கள் முதலியவர்களுக்குக் கஷ்ட நிவிர்த்தி செய்வதும், தங்கள் கடமையாகவுடையவர். கால்ட்வெல் அத்தியக்ஷரின் ஆலோசனைக்கிணங்கி, ஐயர் நாசரேத்திலும் அவ்வித கழகமொன்றை ஸ்தாபித்து, அதன் மூலமாய் இவ்விரு கைங்கர்யங்களையும் செவ்வனே நடைபெறச் செய்தார்.

சங்கக் காணிக்கை

1868 கடைசியில் பிரதர்ட்டன் ஐயர் நாசரேத் முதலிய சபைகளில் இன்றும் வெகு சித்திபுடன் நடைபெற்று வரும் 'அரிசிக்காணிக்கை'

முறையை ஆரம்பித்தார். இவ்வரிசிக்காணிக்கையும் திருநெல்வேலிக்குப் புதிதன்று. ஏனெனில் 1829லேயே, C. M. S. சபையான அருளூரில் ஒரு உபதேசியாரின் மனைவியினால் இவ்வழக்கம் ஆரம்பிக்கப்பட்டுப், பின் விரைவில் அச்சங்கத்தைச் சேர்ந்த மற்ற சபைகளில் பாவியிருந்தது. நாசரேத் சபையில் இது உண்டானதும், வெகு சீக்கிரமே இவ்வட்டாரத்திலுள்ள மற்றச் சபைகளிலும் இதைப்பின்பற்றலாயினர்.

அரிசிக் காணிக்கை

சபை ஆளுகை விஷயத்தில் பிரதர்ட்டன் ஐயர் புதியதான ஓர் முறையைக் கையாண்டார். அம்முறை தற்போது நடைபெறும் சர்க்கிள் கமிற்றி ஆளுகை முறைக்கு அடிகோலியதாகும். நாசரேத், சாயர்புரம் இரண்டிலும் வட்டார ஆலோசனைக் கழகங்களை (District Committees) ஏற்படுத்தினர். இவை ஏற்படுத்தப்பட இரு காரணங்கள் உண்டு எனலாம். முதலாவது கனம் ஐயர் இருசேகரங்களையும் சேர்த்துக் கண்காணிப்பது வெகு கஷ்டம். இரண்டாவதாக, இந்தியக் கிறிஸ்தவர்களுக்குத் தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளப் பயிற்சியளிக்கும் நன்னோக்கம். எனவே 1860லேயே இக்கமிற்றிகள் ஏற்படுத்தப்பட்டன. இக்கமிற்றியார் தங்கள் வட்டாரங்களில் வரும் சபை வருமானத்தைக்கொண்டு (Local income in the District) தங்கள் சபைகளின் காரியங்களை நிர்வகித்துக்கொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்கள், ஆலயக்கட்டுமானங்கள் முதலியவற்றிற்காகவும், மற்றச் செலவுகளுக்காகவும் சீர்மையிலிருந்தும், மதராஸ் M. D. C. இலிருந்தும் கிடைக்கும் உபகாரப் (Grant) பணங்களின்மீது அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. நூறு வருஷங்களுக்கு முன்னேயே நமக்குச் சுய ஆதாவும், சுய ஆளுகை உரிமையையும் கையளிக்க வாஞ்சித்துத் தொண்டாற்றிய மிஷனெரிமாரை, 'நம்மைக் குழந்தைகளாகவும ஆதாவற்றவர்களாகவுமே மிஷனெரிமார் வளர்த்துவிட்டார்கள்', என்று இன்னும் சிலர் குறை கூறுவது பேதமையும், அறியாமையுமன்றி வேறென்?

சபை ஆளுகை

பிரதர்ட்டன் ஐயர், முன் சொன்ன காரியங்களிலிருந்து, ஒரு சீர்திருத்தவாதியாகத் திகழ்கிறார். இச்சீர்திருத்த மனப்பான்மை பிரதர்ட்டன் ஐயரின் பள்ளிக்கொள்கையிலும் சிறந்து விளங்குகிறது.

ஸ்ரீமதி அனிகேமரர் அம்மையார் 1843ம் ஆண்டில் ஸ்தாபித்த பெண்கள் கலாசாலை இன்னமும் ஒரு சாதாரணப் பள்ளிக்கூடமாகவே இருந்தது. 1860ல் பிரதர்ட்டன் ஐயர் நாசரேத்தில் வசிக்க ஆரம்பித்ததும், அவருடன் வந்த அவாது சகோதரி ஸ்ரீமதி ஸ்கார்பரோ அம்மை

யார் அப்பள்ளிக்கூட மேற்பார்வையைத் (Supervision) தாமே ஏற்றுக் கொண்டார்கள். திருநெல்வேலியில் 1844லிருந்து இடையன்குடி, மெஞ்ஞானபுரம், பாளையங்கோட்டை, கடாட்சபுரம் முதலியவிடங்களில் பெண்கள் 'போர்டிங்' பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு, மிஷனெரிமாரின் மனைவியரின் மேற்பார்வையில் திறமையாக நடந்து வந்தன. ஸ்கார்பரோ அம்மையாருக்கு நாசரேத்திலும் அவ்வித பாடசாலை இருப்பது அவசியம் எனத்தோன்றவே, 1862ல் 41 பெண்கள் கொண்ட ஒரு போர்டிங் ஸ்தாபித்தார்கள்*. பின் சில நாட்களில் ஆண்களுக்கென்று பிரத்தியேகமாக 15 சிறுவர்கள் கொண்ட போர்டிங்கும் ஸ்தாபிதமாயிற்று. இவ்விரண்டு போர்டிங் பாடசாலைகளும் அவ்வருஷ முதல் கடந்த 88 ஆண்டுகளாக, நாசரேத் சுற்றுப்புரங்களுக்குச் செய்திருக்கும் மகத்தான சேவையை நன்றியறிதலுடன் நினைத்து, இப் பெருஞ்சேவைக்காதிகாரணரான பிரதர்ட்டன் ஐயருக்காகவும், ஸ்கார்பரோ அம்மையாருக்காகவும் தேவனை ஸ்தோத்திரிப்போமாக.

**ஸ்ரீமதி ஸ்கார்பரோ அம்மையார்**

நாசரேத் பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற சிறந்த ஆசிரியப் பணியை மெச்சி, சர்க்கார் அப்பாடசாலைகளுக்கு 1869ம் வருஷம் ஏப்ரில் முதலாம் தேதி முதல் உதவித் தொகை (Grant-in-aid) தரலாயினர்.

கனம் பிரதர்ட்டன் காலத்தில் ஆசிரிய ஊழியமும், சபைகளில் தெய்வப் பணிவிடையும் சிறந்திலங்கினமைக்கு வேறொரு முக்கிய காரணமும் உண்டு. குருவொருவர் எவ்வளவு திறமையும், பக்தியும், ஆர்வமுமுடையவராயிருந்தாலும், அவரது உடனூழியரான உபாத்திமாரும், சபை ஊழியரும் அவருடன் ஒத்துழையாவிடில், அன்னவரின் பிரயாசம் தக்க பலன் தராது. இவ்விதம் உடனூழியரின் ஒத்துழைப்பிருக்க வேண்டுமாயின், அவ்வூழியர் பல திறப்பட்ட வேலைகளைச் செய்யாமல், ஆசிரியராயின் பள்ளிக்கூட வேலையையும், ஊழியராயின் சபைப் பணிவிடையையும் மட்டும் கவனிப்பதே தகுதி. இவ்வுண்மையைச் சரிவர அறிந்த ஆதி மிஷனெரிகளில் ஒருவர் பிரதர்ட்டன். அவரது வருஷாந்தரக் கணக்கில் 1859, 1860க்கும் 1861க்கும் ஒரு வித்தியாசத்தைக் காணலாம். அஃதென்னவெனின்

**தனி உபதேசிமார்**

1859ல் உபதேசிமார் 28.
1860ல் ,, 26.
1861ல் உபதேசிமார் 8, பள்ளிக்கூட உபாத்திமார் 7, ஏஜெண்ட்ஸ்

* 1849ல் அனிகேமரர் அம்மையார் ஸ்தாபித்த போர்டிங் பின்னால் மூடப்பட்டிருக்க வேண்டுமென்பதும், அதினால்தான் ஸ்ரீமதி ஸ்கார்பரோ அம்மையார் இப்போது புதிதாய் ஒன்று ஸ்தாபித்தார் என்பதும் எம் அபிப்பிராயம். எனினும் இதுபற்றி அபிப்பிராய பேதங்களும் உண்டு.

(ஆசாமிகள்) 4 என்று குறிப்பிட்டிருப்பது காண்க. இதிலிருந்து நாமறிவது யாதெனின், 1859லும் '60லும் அக்காலத்திலிருந்த சுமார் 10 பள்ளிக்கூடங்களின் வேலைகளையும் சபைவேலையுடன் சேர்த்தே சில உபதேசிமார் செய்து வந்தனரென்றும், 1861ல் ஐயர் அதைப் பிரித்து 8 சபைகளில் 8 தனிஉபதேசிமாரை நியமித்து, மீதியான 7 பேரை பள்ளிக்கூட வேலைக்கு மட்டும் ஏற்படுத்தி, மேலும் 4 பேரை இருவிதப் பணிவிடைகளையும் சேர்த்து ஆற்றும்படி வைத்தார் என்று எண்ணலாம். இவ்விதமான ஊழிய வரையறை கனம் மர்காஷிஸ் ஐயர் காலத்திலும் காணப்பட்டதை வாசகர் பலர் அறிவருவர்.

இக்காலம் உபதேசிமாராக ஊழியம் செய்தவர்களில் சிலர் வெகு திறமை வாய்ந்தவர்களாகக் காணப்பட்டனர். அவர்களில் ஒருவர் 1867ம் வருஷம் குருப்பட்டம் பெற்று, நாசரேத்தில் 1867 முதல் 1882 வரையும், 1896 முதல் 1901 வரையும் மிகுந்த தேவதா பக்தியுடன் உழைத்த கனம் M. ஏசுவடியான் ஐயர்.

கனம் பிரதர்ட்டன் ஐயரவர்களின் காலத்திய நாசரேத் கிராமம் இருந்தவாறென்ன வென்றறியச் சில கைப்பிரதிகளைத் தவிர வேறு ரெக்கார்டுகள் கிடைத்தில. அக்காலத்தில் மிஷன் பங்களாக்களையும், மிஷன் கட்டடங்களையும் தவிர வேறு ஓட்டடுக்குக் கட்டடமாவது காரைக் கட்டடமாவது ஒன்றும் இருந்ததில்லை. கிராமம் ஆலயத்தைச் சுற்றி ஒழுங்கற்ற முறையில் கட்டப்பட்ட பல கூரைக் கட்டடங்களாலானது. பெண்கள் போர்டிங் பள்ளிக்கூடம் ஆலயத்திற்குத் தென் கிழக்காக ஓர் தாழ்ந்த ஓட்டடுக்குக் கட்டடமாகும். தெருவெல்லாம் தேறி மணல்தான். மிஷன் காம்பவுண்டுக்குள் ஏராளமான பழவிருக்ஷங்கள் செறிந்து விளங்கின. இவை கேமரர் ஐயரால் நாட்டப்பட்டிருந்திருக்கலாம்.

நசரைக் கிராமம்

போர்டிங் பள்ளிக்கூடத்தில் உபாத்திமார் வெகு கண்டிப்பாய் இருந்தார்கள். பையன்கள் குற்றம் செய்தால், அவர்கள்மீது கையாளப்பட்ட சிக்ஷை முறைமைகளெல்லாம் தற்கால மக்களுக்குக் கர்நாடகமாகத் தோன்றுவதுமட்டுமன்றிக் காட்டுமிராண்டித்தனமாகவும் தோன்றும். பள்ளிக்கூடத்தில் வேத பாடமும் சங்கீதமும் விசேஷித்த இடம் பெற்றிருந்தன வென்றுமறியலாம்.

பள்ளிக்கூட வேலை

ஊரில் வெற்றிலைப்பாக்குக் கடைதானும் கிடையாது. அக்கால மக்களுக்கு 'இன்றியமையாத' பொருட்களாகிய இவ்வஸ்துக்களுக்காகவும் கூட மக்கள் வாழையடிக்காயினும் பிரகாசபுரத்துக்காயினும் போய்த்தான் தீரவேண்டும்!

பிரதர்ட்டன் ஐயர் கேம்பிரிட்ஜ் கார்ப்பஸ் கிறிஸ்டிக் கல்லூரியில் படித்து 1836ல் **M. A.** பட்டம் பெற்றபின், அவ்வருஷமே உதவிக்குருப் பட்டம் பெற்று S. P. G. மிஷனெரியாக இந்தியா வந்து சேர்ந்தார். இந்தியா வந்தடைந்த சின்னாட்களில், சென்னை மகாகனம் தானியேல் காரி அத்தியக்ஷரவர்களால், கேமரர் குருப்பட்டம் பெற்ற அதே ஆராதனையில் (1837 ஜனுவரி 8ம௳) குருப்பட்டம் கொடுக்கப்பட்டுத் தஞ்சாவூரில் மிஷனெரியாக நியமிக்கப்பட்டார். அதுமுதல் தஞ்சை, கனந்தாகுடி, கும்பகோணம், சென்னை வெப்பேரி முதலியவிடங்களில் ஊழியம் செய்தபின், நாம் முன் கண்டபடி, 1857ல் சாயர்புரம் வேத சாஸ்திரக் கலாசாலைத் தலைவராகவும், 1859ல் சாயர்புரம், நாசரேத் வட்டாரங்களில் மிஷனெரியாகவும் நியமிக்கப்பட்டு, 1860 ஜனுவரி முதல் நாசரேத்திலேயே வாசம் பண்ண வாரம்பித்தார்.

**ஐயரின் ஜீவிய சரிதை**

பிரதர்ட்டன் ஐயர் ஒரு பெரிய கல்விமான். நல்ல பிரசங்கி. மிகுதியாக வாசிப்பவர். தமிழிலும் ஆங்கிலம் போலவே வெகு துரிதமாகவும் தெளிவாகவும் பேசக்கூடியவர். அவர் தமிழ்ப் பேசுவதைப் பார்த்து ஐரோப்பியர் அதிசயமடைவார்களாம். எபிரேயு, சீரியக், அரபி முதலிய பாஷைகளை நன்கு கற்றிருந்தார். எனவே * வேதாகம மொழி பெயர்ப்பில் மிகுந்த உதவியாயிருந்தார். அக்காலத்தில் எபிரேயு ஞானம் படைத்தவர்களில் அவரைப் போன்ற சிரேஷ்டர் எவரும் இந்தியாவிலிலர். எனவே மிஷனெரிகளுள் அவருக்கு 'ரபி' என்ற பட்டப் பெயர் வழங்கலாயிற்று.

**ரபி**

ஒரு சிறந்த பக்தனாகவும் குணசாலியாகவும் விளங்கினார். எப்பொழுதும் மலர்ந்த முகமுடையவராயும், தம்மை முற்றிலும் மறந்த சுயநலமற்றவராகவும் திகழ்ந்தார். தாழ்மை அவரது விசேஷித்த பூஷணம். கடவுள்மீது † ஆழ்ந்த விசுவாசமும், தம் ஊழியத்தைப்பற்றிய நம்பிக்கையுமுடையவர்.

* *1865*ல் வெளிப்பட்டுத் தற்காலம் உபயோகத்திலிருக்கும் வேதாகமம் (Bower Version)

† ஐயரின் ஆப்த நண்பனும், அஞ்சாநெஞ்சம் படைத்தவனும், நாசரேத் உபதேசிகரும் 'தடிக்கம்பு உபதேசியார்' என்று சிறப்புப் பெயர் பெற்றவருமான பெரன் ஏசுவடியான் ஐயருடைய விசுவாச வாழ்க்கையைப்பற்றி அடிக்கடி கூறும் ஓர் சரித்திரம் உண்டு. அஃதென்னவெனில், 'பிரசங்க ஊழியத்திற்காகச் சென்று கிராமாந்தரங்களில் கூடாரத்தில் தங்கும் காலத்திலும், பங்களாவில் பின்னிடும் நாட்களிலும் இரவு 1 மணி முதல் 2 மணி வரையிலும் ஒருவரும் தம்மை எக்காரணம் கொண்டும் அழைக்கக்கூடாதென்று சட்டம் வைத்திருந்தார்கள். இதற்குக் காரணம் என்னவென்றறிய வாஞ்சித்து, அந்நேரத்தில் அவர்கள் கூடாரத்திற்குச் சென்றேன். உள்ளே ஐயரவர்கள் முழங்காலில் நின்று யாருடனோ பேசுவது தெரிந்தது. ஐயரவர்களின் கேள்விகள், அல்லது மற்றவரின் கேள்விகளுக்கு ஐயரவர்கள் கொடுக்கும் பதில்கள் மட்டும் எனக்குக் கேட்டனவேயன்றி, அம் **மற்றவர்** சொல்லும் பதிலாவது கேட்கும் கேள்விகளாவது என் காதில் விழவில்லை. நிச்சயமாகவே ஐயரவர்கள் தம் எஜமானுடன் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றறிந்தேன். இவ்விதம் தினந்தோறும் ஆண்டவரும் ஐயரவர்களும் பேசிக்கொள்வது வழக்கம். ஐயரவர்கள் ஆண்டவரோடு சஞ்சரித்தார்கள்' என்பதே.

தம் வேலையைச் செய்வதில் சுகத்தைக் கிஞ்சித்தும் பாராட்டாது உழைத்தார். வயதாக ஆக அவரது ஊழியத்தின் அளவும் சுறுசுறுப்பும் அதிகரித்ததைக் கண்ட அனைவரும் அவரைப் பார்த்து ஆச்சரியப்படுவதுண்டு.

**உற்சாகம்**

சுவிசேஷ ஊழியத்தில் வாலிபருங்கூட அவரோடு நடக்கவும் களைப்பின்றி வெயிலிலும், பனியிலும் உற்சாகமாய் பங்கெடுக்கவும் முடியாது சோர்புறுவர். இவ்வளவுக்கும் அவர் வளர்ந்து புஷ்டியான சரீரமுடையவர்தாம். தம்முடைய பழக்க வழக்கங்களில் அவர் கிரமமுள்ளவராயிருந்ததே, அவர் தேகக்கட்டு விடாது இருந்ததற்குக் காரணம். மதுபானம் மருந்துக்குங்கூட அருந்தார். அவரது சிரித்த முகமும், யாரிடமும் பக்ஷமுடன் பேசும் அன்பான வார்த்தைகளும் அவரை ஒரு தகப்பனைப்போல் பாவிக்க ஜனங்களை ஏவியது. அக்காலப் பேச்சுமுறையில் நாசரேத்தூரார் அவரை 'வளர்த்த அப்பன்' (வளர்த்தப்பச்சி) என்று அழைத்தார்கள்.

தமக்கு எவ்வளவு அதிக வேலையிருப்பினும் மற்றவர்களுக்கு எந்த நேரத்திலும் உதவி செய்யவும், அவர்கள் பாரத்தைத் தாமே சுமக்கவும் பின் வாங்கமாட்டார். அவருடைய பண்பாட்டை ஒரு வார்த்தையில் சொல்லக்

**'நல்லவர்'**

கூடுமானால் அது 'நல்லவர்' என்பதே. 'நல்லவர்' என்ற இப்பதத்தின் பூரண அர்த்தம் தெளிவுற என்னென்ன பண்புகள் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுமோ அத்தனையும் அவரிடமுண்டு. எனவே கிறிஸ்தவர்களும் இந்துக்களும், ஏழைகளும் செல்வந்தரும் அவரை மிகவும் மதித்து நேசித்தார்கள் அதற்கிசைவாய் அவரும் எவரையும் உயர்வு தாழ்வின்றியும், மார்க்கப் பேதமின்றியும் 'ஐயா' என்றே அழைப்பார். வயதில் சிறியோரானாலும் இவ்விதமே மதித்து நடத்துவார். யாராகிலும் வழக்குகள் கொண்டுவந்தால் எதிரியை அழைத்தனுப்பி, அவர் வந்தபின்தான் வாதியிடம் வழக்கைச் சொல்லக் கேட்பார். இதினால் இரு பக்ஷத்தாருக்கும் நியாயம் கிடையாமற் போவதில்லை. வழக்குகளெல்லாம் அநேகமாய் சமாதானமாகவே

**குணசீலம்**

முடிவுறும். முப்பது வருஷங்களாக இவரை அறிந்த ஒருவர் "பிரதர்ட்டனைப்போல குழந்தையைப் போன்ற மனப்பான்மையும், தாழ்மையும், சமாதானத்தைச் சிநேகிக்கும் குணமும் 'தீங்கு நினையாத' அன்பும், மாய்மாலமற்ற சுபாவமும், சுயநலமே இல்லாத சீலமும், பளிங்கு போன்ற மாசற்ற பரிசுத்த நடக்கையுமுள்ள ஒருவரை நான் இம்முப்பது வருஷ அனுபவத்தில் கண்டதில்லை" என்று எழுதுகிறார்.

எனினும் பிரதர்ட்டனிடமும் இரண்டொரு குறைபாடுகள் கூறப்படாதிருந்ததில்லை. ஆனால் அக்குறைகள், அவரிடத்துள்ள குழந்தை போன்ற கபடற்ற குணத்தின் எதிரொலிகளேயன்றி வேறல்ல. சில சமயங்

களில் தம் மனத்தில் தோன்றும் உள் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ளச் சக்தியற்றவராகக் காணப்படுவார். ஆனாலும் அவரிடத்துள்ள கபடற்ற அன்புக்குமுன் இக்குறைபாடுகளனைத்தும் குறைகளாகா. இவைகளை யெல்லாம் பார்த்தறிந்த புறமதஸ்தர், பிரதர்ட்டனிடத்துக் காணப்பட்ட இத்தூய குணங்களுக்குக் காரணஸ்தர் யார் என்பதை அறியாது, 'இம் மகான் இவ்வுலகத்துக்குறியவர் அல்லர். இவர் 'தெய்வப் பிறவி' என்று போற்றுவார்கள். அவரை அறிந்த பலர், 'பிரதர்ட்டன் ஓர் ஆச்சரியமான மனிதன்,' என்பதுண்டு. ஆண்டவருக்கென்று, திருநெல்வேலி மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்த பக்தர் குழாத்துள் பிரதர்ட்டன் ஒரு பரிசுத்த வான். இவரது சேவையை நாசரேத் வட்டாரம் பெற்றது கர்த்தரின் பேருருளே.

1869 மார்ச்சு மாதத்தில் ஐயரவர்களுக்கு ஒரு கொடிய வியாதி வந்தது. அவர் ஜீவியத்திலேயே இதுதான் முதல் வியாதியாம்! சுகமான பின் முன்னைப் போலக் கடினமாக வேலை செய்யலாகாது என்று பலரால் தடுக்கப்பட்டு, மூன்று மாதம் நாசரேத் பங்களாவிலேயே தங்கினர். ஆனா லும் சும்மா இருப்பதென்றால் வெகு கஷ்டம். ஆகையால் பள்ளிக் கூடங்களைச் சுற்றிப் பார்ப்பதும், பிள்ளைகளைத் தம் அறைக்கு அழைத்து அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதும், தமிழ் வேதஅகராதி எழுதுவது மாகத் தம் நேரத்தைச் செலவிட்டார்.

அவர் மரிக்கும் தினத்திற்கு முன் தினமும் ஆலயத்தில் ஆராதனைகள் நடத்தி மூன்று பிரசங்கங்கள் செய்திருந்தார். இது அவருடைய சக்திக்கு மிஞ்சினதாயிருந்ததுபோலும். அவர் அன்று செய்த கடைசிப்பிரசங்கத்தில் சொன்ன கடைசி வசனம் 'ஓட்டத்தை முடித்தேன்' என்பதாம். மறு நாள் தம் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுதே திடீரென்று மயக்கம் வந்து

**மரணம்**

படுத்தார். எவ்வித சிகிச்சைக்கும் சுகமடையாமல் மாலை நேரத்தில் மீட்கப்பட்ட அவரது ஆவி மீட்பரின் பாதமடைந்தது. பிரதர்ட்டன் ஐயரின் பிரிவு திருநெல் வேலி மிஷனெரி ஊழியத்திற்கே ஓர் பெருநஷ்டம். அவ்வூழியம் ஓர் சிறந்த தொண்டனை இழந்தது. தென்னிந்தியா முழுவதிலும் பிரதர்ட்டனை அறிந்த யாவருக்கும் பெருங்கலக்கமுண்டாயிற்று. நாசரேத்வாசிகள் தங்கள் தகப்பனைத் திடீரென்று இழந்த பாலகரைப் போன்று கண்ணீர் சிந்தினர். ஐயாவர்களின் சடலத்தைக் கடைசி மரியாதைகளுடன் பல C. M. S., S. P. G. மிஷனெரிமார்கள் அடக்க ஆராதனை நடத்தி நாசரேத் ஆலயக்காம்பவுண்டில் "தூய அமைதியில் தங்கித் தூங்கி இளைப்பாற" வைத்தனர்.

கல்லறையில் "தாமஸ் பிரதர்ட்டன் M A, மிஷனெரி S. P. G. 1809 மே 31-ல் பிறந்து சகல மனத்தாழ்மையுடனும் கர்த்தரைச் சேவித்து, 1869 ஜூன் 28-ல் மரித்தார்" என்ற வாசகம் ஆங்கிலத்தில் பொறிக்கப் பட்டுள்ளது.

கனம் பிரதர்ட்டன் ஐயரவர்களின் மரணத்துக்குப்பின், அவர்கள் விட்டுப்போன அவரது மனைவி மேரி அனி பிரதர்ட்டன் அம்மையாரும், சகோதரி S. ஸ்கார்பரோ அம்மையாரும் ஒன்றாக ஆண் பெண் கலாசாலைகளை நடத்திவந்தார்கள். பிரதர்ட்டன் அம்மையாருக்கு ஐயரவர்களின் மரணம் தாங்கொணாத்துயரத்தை உண்டாக்கிவிட்டது. எனவே அவர்களும் 1872-ம் வருஷம் மேய் மாதம் 15-ம்வ கர்த்தருக்குள் நித்திரையடைந்து, ஐயரவர்களின் பக்கத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஸ்ரீமதி அனி பிரதர்ட்டன் பிரிவு

இவர்களின் புத்திரி திருவாங்கூரில் கனம் R. H. விக்கர்ஸ் ஐயர் என்ற ஓர் C. M. S. மிஷனெரியை மணந்திருந்தார்கள். அவர்கள் மகன் ஆர்தர், பிற்காலத்தில் குருப்பட்டம் பெற்றுத், தம் பாட்டனார் ஊழியம் செய்த இவ்வூரிலேயே 1889 முதல் 1892 வரை தெய்வப் பணிவிடையாற்றினர். இவரைப்பற்றிப் பின்னொரு அத்தியாயத்தில் கூறுவோம்.

---

# அத்தியாயம் 7

## டாக்டர் ஸட்ராஹன் (M. D.) ஐயரின் காலம்

## 1870 — 76

திருச்சபை சரித்திரமானவரெவரும், ஆண்டவர் தம் சபையை நடத்தி வருவதில் அவருடைய ஆச்சரியமான செயல்களை வியப்புடன் நோக்காதிருத்தல் கூடாது. எங்குமுள்ள சர்வலோக சபையை மொத்தமாய் நடத்துவதிலுமன்றித், தனித்தனித் தொகுதிகளையும் சின்னஞ்சிறு மந்தைகளையும் அவர் பராமரித்து வளர்த்துவரும் விதத்தில், அவரது நோக்கம் சரித்திர ஆராய்ச்சியாளருக்குத் தெளிவாகத் தெரியும் சத்தியம். நாசரேத் சரித்திரத்திலும் இது இனிது துலங்கும்

சின்னஞ்சிறு கிராமச் சபையாயிருந்த சாண்பத்து முதல் முதலில் எட்டு அங்கத்தினருடன் ஆரம்பமாகி, வெகு விரைவில் ஊராரனைவரையும் தன்னுள்ளாக்கி, இரண்டு மூன்று வருஷங்களுக்குள் நசரையதிபதி வளர்ந்த பதியாம் நாசரேத்தின் நாமம் பெற்றுத், தன் ஆண்டவரைப் போன்றே தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்ச்சியுற்றது. ரோசன், இரியன் ஐயர்மாரின் காலத்தில், அச்சிறுசபை மிகப்பெருகி

**'நீ சிறியதல்ல'**

S. P. G. மிஷனுக்கே ஒரு நடுநாயகமாய் விளங்காநின்றது. கேமரர் நாசரேத் வளர்ப்புத்தந்தையாகி, வெளியிலிருந்துண்டான துன்பங்களை நீக்கி, அமைதியை நிலைநாட்டி, இரு கலாசாலைகளையும், அழகிற் சிறந்த மூன்று தட்டுள்ள கோபுரத்தையுடைய அலங்காரமான கோவிலையும் கட்டினதுமல்லாமல், திருநெல்வேலிச் சபைகளுள், அடைக்கலப்பட்டணமாய் மிளிரும் உன்னதப் பதவியை இவ்வூருக்களித்தார். சுற்றி நின்ற மூக்குப்பீறி, கடையனோடை, எருசலேம், பிள்ளையன்மனை, அகப்பைக்குளம், வாழையடி, பன்றிமடல் என்ற பெரிய சபைகளுக்கும் நாசரேத் தலைமை வகிக்கும் மகிமை அதற்குக் கிட்டியது. "யூதாவின் பிரபுக்களுள் நீ சிறியதல்ல"

கேமரர் மூலம் இவ்வுன்னத பதவியை நாசரேத்துக்களித்த பராபரன், பிரதர்ட்டன் மூலமாய் முன்னதையும் விட மேன்மையான ஆவிக்குரிய உயர்நிலையையும் நாசரேத்மக்கள் கிட்டுமாறு அப்பக்தனின் பரிசுத்த சேவையை ஆசீர்வதித்தார். இன்றைக்கும் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தின் சபைகளிலெல்லாம் மிகப்பெரியதாய் விளங்கும் உயரிய பாக்கியம் இச்சபைக்குக் கிடைத்தது, பிரதர்ட்டனின் மேய்ப்புக்குள்ளடங்கி, அன்பர் அருளால் நம் முன்னோர் நடாத்திய மனந்திரும்பின ஜீவியத்தின் பலனையன்றி வேறெக்காரணம் பற்றியிருக்கக்கூடும்?

"சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் புறப்படும்" என்பதற்கிணங்க கேமரர், பிரதர்ட்டன் காலங்களில் சத்திய சுவிசேஷச் செய்தி நாசரேத்தின் எம்மருங்கிலும் பிரசித்தமாயிற்று. நாம் முன் கண்டதுபோல, "தன் வீட்டு வாசலில் வைத்தே" புறமஸ்தர் ஒவ்வொருவரும் ரக்ஷிப்பின் சுவிசேஷச் செய்தியைக் கேட்டார்கள். கிறிஸ்தவர்களும் தாமறிந்த சந்தோஷத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டியது தம் கடமை என்பதுணர்ந்து சுவிசேஷக் கடனைத் தீர்க்க முன்வந்தனர்.

சீயோனிலிருந்து வேதம்

பள்ளிக்கூடங்களின் மூலமாய் கல்வியபிவிருத்தியடைந்தது. கற்றுத் தேறின அநேகர் உபதேசிகர்களாகவும், உபாத்திமாராகவும் திருச்சபையில் பணிவிடையாற்றலாயினர். சிலர் சாயர்புரத்தில் டாக்டர் போப் ஐயர் ஸ்தாபித்திருந்த கலாசாலையில் உயர்தரக் கல்வியும், பின் வேதசாஸ்திரமும் கற்று குருப்பட்டம் பெற்று, சபையின் தலைவர்களாக விளங்கினார்கள். ஒரு சிலர் தஞ்சாவூர், திருச்சி, சென்னைமாநகர் முதலிய விடங்களுக்குச் சென்று பட்டதாரிகளாயினர். பெண்களிலும் கற்றுத்தேர்ந்த அநேகர் உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டனர். மற்றும் ஏராளமானபேர் உத்தம மனைவிகளாகவும், தாய்மாராகவும் திருச்சபையின் அணிகலன்களாக விளங்கினர். ஒரு சமயம் மூக்குப்பீறி, நாசரேத் பள்ளிக்கூடங்களைப் பற்றி கேமரர் எழுதிய ரிப்போர்ட்டில் "பாடசாலைகளில் சேர்ந்து படிக்காத கிறிஸ்தவப் பிள்ளைகளை இவ்வூர்களில் காணவியலாது" என்று வரைந்தார்.

கல்வி மேன்மை

இனியும் நாசரேத் தன் பிள்ளைகளுக்கும், சுற்றிலுமுள்ள கிராமத்தாருக்கும் செய்யக்கூடிய அருந்தொண்டையாற்ற இப்பத்தாண்டுகளில் (decade) தெய்வத்திருவுளமாயிற்று. எனவே 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இச்சபையின் முன்னோருக்கும், மற்றோர்க்கும் இன்னும் அவசியமான சில சிலாக்கியங்களை அருள, முந்தின கேமரர், பிரதர்ட்டன் என்பவர்களைவிட ஆர்வத்திலும் திறமையிலும் எவ்விதத்திலும் பின்னடையாதவராயும், அன்னவரைவிட மற்றப்பல விஷயங்களில் வித்தியாசமான தாலந்துகளைப் பெற்றவருமான கனம் J. M. ஸ்ட்ராஹன் ஐயரை ஆண்டவனுப்பினர்.

கனம் ஜாண் மில்லர் ஸ்ட்ராஹ்ன் ஐயர் இங்கிலாந்திலுள்ள பார்ன்ஸ்லி (Barnsley) என்ற ஊரில் 1832ம் வருஷம் டிசம்பர்மீ 18ம் தேதி பிறந்தார். இவரது பெற்றோர் வெஸ்லியன் சபையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பக்திபுள்ளவர்களானதால் தங்கள் குமாரனைக் கிறிஸ்துவின் சேவையிலீடுபடுத்தினர். ஜாண் தம் வாலிபத்தில் வெஸ்லியன் சபையில்

பிரசங்கியானர் (Preacher). சில காலம் சென்றபின் ஆங்கிலத் திருச்சபையைச் சேர்ந்து கந்தர்புரி பரிசுத்த அகுஸ்தீன் கலாசாலையில் வேத சாஸ்திரம் கற்று, S. P. G. மிஷனெரியாக இந்தியா வந்து சேர்ந்தார்.

ஸ்ட்ராஹ்ன் ஐயர்

1861ம் வருஷம் மகாகனம் டியல்ட்ரி அத்தியக்ஷரிடம் டீக்கன் பட்டம் பெற்று, திருநெல்வேலியில் கால்ட்வெல் ஐயருக்கு உதவியாகவும், மிஷனெரி ஊழியப் பயிற்சிப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனும், இடையன்குடிக் கனுப்பப்பட்டார். ஒரு வருஷம் சென்றபின் 1862ம் வருஷத்தில் மகாகனம் ஜெல் அத்தியக்ஷரால் குருவாக அபிஷேகிக்கப்பெற்று, ராமநாதபுரம் T. H. சூட்டர் ஐயரவர்கள் ஏப்ரில்மீ 15ல் மரித்துப்போகவே, உடனே தற்காலிகமாக ராமநாதபுரத்திற் கனுப்பப்பட்டார். பின் இரு வருஷங்கள் இடையன்குடியிலேயே ஊழியம் செய்தார். ஆனல் மறுபடியும் ராமநாதபுரத்தில் தங்கி ஊழியம் செய்ய ஏற்ற மிஷனெரி கிடைக்காததால், 1865ல் ஸ்ட்ராஹ்ன் அங்கே செல்லவேண்டியதாயிற்று. இவர் * ராமநாதபுரத்திலிருக்கும் பொழுது, அப்பிராந்தியத்தில் காலரா நோய் மும்முரமாய் நடந்தது. அநேகர் அவ்வியாதியினல் மரித்தனர். ஸ்ட்ராஹ்ன் ஏற்கனவே சற்று மருத்துவம் அறிந்திருந்தபடியால், அச்சமயம் அவர் நோயாளிகளுக்குச் செய்த சேவை நன்கு பயன்பட்டது. அவரது தொண்டின் பயனய் ராமநாதபுரத்தில் அவர் செல்வாக்கும் அதிகரித்தது.

இந்திய மக்களுக்கு இன்றியமையாத சேவை என்ன வென்பதை ஸ்ட்ராஹ்ன் இக்காலத்தில் நன்குணர்ந்தார். அவரே 1872ல் தாய்ச் சங்கத்தாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "சரியான மருத்துவ உதவியின்றி இந்த ஜனங்கள் உறும் சரீர வாதனைகளைக் கண்டு கலக்கமுருமலும், வேதனைப்படாமலும் ஒருவரும் இவர்கள் மத்தியில் வாழ முடியாது" என்று

மருத்துவ ஞானம்

கூறினர். உடனேயே இப்பக்தன் தீர்மானத்திற்கு வந்தார். தாம் மறுபடியும் இங்கிலாந்து சென்று, மருத்துவத்தைத் தீர்க்கமாய் கற்றுத் திரும்பி வந்து, மக்களுக்கு மருத்துவச் சேவை செய்து, அவர்கள் துன்பத்தில் இன்பமூட்டுவதினலேயே கிறிஸ்துவின் அன்பை இந்தியருக்கு விளங்கக்காட்டக்கூடுமென்பதே அவர்கொண்ட உறுதி. எனவே ராமநாதபுரத்தில் காலரா நீங்கினபின் 1866ல் சுயதேசம் சென்று, எடின்பரோ சர்வகலாசாலையில் மருத்துவம் கற்று மிக உயர்ந்த பரீக்ஷைகளில் தேறி M. D. ( Medicinae Doctor ) என்ற பட்டம் பெற்று, 1869ம் வருஷம் நம் நாட்டிற்கு வந்தார். அவர் வந்த சமயத்தில் கனம் பிரதர்ட்டன் ஐயரவர்கள மரித்துப்போகவே, ஸ்ட்ராஹ்ன் ஐயர் அவரது ஸ்தானத்தில்

* Page 47, The Steep Ascent by F. G. F. T. (1914)

நாசரேத் மிஷனெரியாக நியமிக்கப்பட்டு 1870ம் வருஷம் நாசரேத் வந்து சேர்ந்தார்.

இவ்வண்ணம் ஆண்டவர் நாசரேத்துக்கவசியமாயிருந்த மருத்துவ வசதிகளையளித்து அதற்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் எண்ணிறந்த நன்மைகளை ஈய, வேறொருரிடத்திற்கென்று தம்மை ஆயத்தம் செய்துவந்த ஸ்ட்ராஹ்ன் ஐயரை இவ்வூருக்குக் கொண்டுவந்தார். ஸ்ட்ராஹன் ஐயர் நாசரேத் வந்ததும் அவர் செய்த முதல் வேலை 1870ல் இவ்வூரில் ஒரு மருத்துவசாலை ஸ்தாபித்ததே. இவருக்குதவியாக மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷரின் குமாரத்தி ஸ்ரீமதி ஷெப்பர்ட் (Mrs Shepherd) அம்மையாரும் இப்பணியிலீடுபட்டார்.

**நாசரேத் ஆஸ்பத்திரி**

1872ம் வருஷத்தில் கனம் ஸ்ட்ராஹன் ஐயர் வரைந்த ஓர் சிற்றுரை அக்காலத்திய மக்களின் பரிதாப நிலையை விவரிக்கும். * "அவர்கள் (நோயாளிகள்) முற்றிலும் சுதேச வைத்தியரின் கைகளில் விடப்பட்டுள்ளார்கள். வியாதியைத் தீர்ப்பதற்கென இவ்வைத்தியர் கொடுக்கும் மருந்துகள், பல சமயங்களில், பிணியாளிகளின் நோயின் கொடூரத்திலும் அதிக மோசமானவை. இந்த வைத்தியர் கற்றுக்கொண்டதெல்லாம் ஏதோ சில வைத்திய சாஸ்திரச் சூத்திரங்களைப் பாராயணம் பண்ணிக்கொண்டதுதான். இச்சூத்திரங்களும் செய்யுள் நடையில் எழுதப்பட்டு, பல தடவைகளில் அவற்றை கற்பவர்களுக்கே விளங்காதன. பூதவுடற்கூறுபாட்டைப்பற்றி முற்றிலும் அவர்கள் ஒன்றுமேயறியார் எனினும் சுதேச வைத்திய முறைகள் எக்காலத்திலும் இவ்வித நிலையிலுள்ளவைதான் என்று கூறிவிடுவது தகாது. 1400 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட சரகர் மருத்துவ நூல்களிலும் (Charaka's works on medicine), சுஸ்ருதன் எழுதிய ரண சிகிச்சை நூல்களிலும் (Susrutha on surgery) (சரீரத்தைப்பற்றிய) திட்டவட்டமான எண்ணங்களும், உற்றுநோக்கும், வியாதிகளின் தன்மையைப்பற்றிய சுமாரான அறிவும் காணப்படுகின்றன. இன்றோ இந்திய மருத்துவ நிலை, கவனிப்பாரின்றிச் சீரழிந்துபோன தோட்டப்பயிர் போன்று, கெட்டழிந்து குணம் குன்றிவிட்டது. வைத்தியர்களாகத் தங்களைப் பாராட்டிக் கொள்பவர்களில் பெரும்பாலோர் ஒருவிதத் துணிச்சலான அறிவீனத்திற்கு அடிமைப்பட்டுள்ளவர்களே. சில நாட்களுக்குமுன், மெலிந்து இளைத்துப் போயிருந்த ஒரு ஏழைப் பெண்ணைப் பார்த்தேன். துக்கமுகமும், ஒளியற்ற பார்வையும் அவளுடைய வியாதி பக்ஷவாதமெனக் காட்டிற்று. அவளுடைய சரீரம் முழுவதும் நெருப்பால் சுட்டப் புண்களாலும் காயங்க

**சுதேச வைத்திய நிலை**

* M. D. C. Report 1872.

ளாலும் நிறைந்திருந்தது. விஷய மென்ன? அவர்கள் (அவ்வைத்தியர்கள்) அவளைப் பிடித்திருந்த பேயை (!) நெருப்பினால் வெருட்டிவிடப் பிரயாசப்பட்டிருக்கிறார்கள்! அது கூடாதுபோயினமையால், இப்போது பிரம்பால் அடித்து வெருட்டப் பார்க்கிறார்கள்!! அவளுடைய கைகளிலும் முதுகிலும் பிரம்படித் தழும்புகளைப் பார்த்தேன். இந்த ஏழைப் பெண் சீக்கிரம் மரித்துவிடுவாள்,—அவளுடைய வியாதியின் காரணத்தினாலன்று, அதைத் தீர்ப்பதற்காகக் கையாளும் சிகிச்சையினிமித்தமாக''.

நாசரேத் ஆஸ்பத்திரி ஸ்தாபிதமானதும், இச்சந்தோஷச் செய்தி சுற்றுப்புறமெங்கும் பரவிற்று. பிணியாளிகள் திரள்திரளாய்ச் சிகிச்சை நாடி வந்தனர். 1871ம் வருஷத்தில் மட்டும், சுமார் 40,000 நோயாளிகள் மருத்துவ உதவி பெற்றார்கள். இவர்களில் பலர் 40இலிருந்து 80 மைலுக்கப்பாலிருந்து வந்தவர்கள்.

ஸ்ட்ராஹன் ஐயர் பெருஞ் சித்தியுடன் தன் வைத்தியசாலையை நடத்திடினும், தாம் ஒரு வைத்தியப் பிரசங்கி (Medical Evangelist) என்பதைமட்டும் ஒருபோதும் மறக்கவில்லை. சரீரப் பிணியைமட்டும் நீக்கி, ஆத்தும ரோகத்துடன் பிணியாளிகளை அனுப்பிவிடுவது கிறிஸ்தவ வைத்தியர்களுக்கு அழகுமன்று, அடுத்ததுமன்று. எனவே இன்றும் பரிசுத்த லூக்கா ஆஸ்பத்திரியில் நடந்துவரும் 'பிணியாளிகளின் ஆராதனை'யை அவர் ஆரம்பித்தார். அவர் எழுதுவது *''நாளின் வேலை ஆண்களுக்கொன்றும் பெண்களுக்கொன்றுமான இரு சுருக்கமான ஆராதனைகளுடன் ஆரம்பமாகிறது. சகல ஜாதிக்காரருமான இந்துக்களும் கிறிஸ்தவர்களும தேவனுடைய வசனத்தைக் கேட்கிறார்கள். ஒரு பிராமணன், அல்லது ஏன், ஒரு ஐரோப்பியனான பிணியாளிக்காகவும் நான் எவ்வளவு கவனத்துடன் சிகிச்சை செய்வேனோ அவ்வளவு கவனத்துடன் தாழ்ந்த ஜாதிக்காரனையும் கவனிக்கிறேன்.'' என்பதே.

வைத்தியப் பிரசங்கி

ஆஸ்பத்திரியின் ஆதி வரவு செலவு கணக்கொன்றும் நமக்குக் கிட்டியுள்ளது. அது பின்வருமாறு:

வரவு

| | | | |
|---|---|---|---|
| 1871–72 | S. P. G. சங்கம் உதவியது | ரூ. | 540 |
| | Local fund (Tinnevelly) | ரூ. | 500 |
| | சுதேசிகளின் நன்கொடை | ரூ. | 300 |
| | ஐரோப்பியர்களின் நன்கொடை | ரூ. | 60 |
| | பீஸ் வரவு | ரூ. | 100 |
| | | ரூ. | 1500 |

* M. D C. Report 1872.

செலவு

| | | | | |
|---|---|---|---|---|
| இரு திரசருக்கு (Dressers)ச் சம்பளம் | ரூ. | 440 | 0 | 0 |
| மூன்று வேலைக்காரர் சம்பளம் | ரூ. | 108 | 0 | 9 |
| மருந்து வாங்கின வகையில் | ரூ. | 800 | 0 | 0 |
| சில்லறைச் செலவுகள் | ரூ. | 150 | 0 | 0 |
| | ரூ | 1498 | 0 | 0 |
| கையிருப்பு | ரூ. | 2 | 0 | 0 |

1872ம் வருஷத்தில் ஆஸ்பத்திரி எப்படி இருந்தது என்பதும் அதே ரிப்போர்ட்டில் வர்ணிக்கப்பட்டுள்ளது. "ஆஸ்பத்திரியும் மருத்துவ சாலையும் * பழைய பள்ளிக்கூடக் கட்டிடம் ஒன்றில் (Built by Rev. Hough) [பழைய ஆண்கள் பள்ளிக்கூடம்] அமைக்கப்பட்டிருக்கின்றன. இடம் வெகு சுருக்கம். இடவசதிக் குறைவினிமித்தம் அநேக நோயாளிகளை ஏற்க முடியாது மறுக்க வேண்டியதிருக்கிறதினால், அவர்கள் வீணே மரிக்க நேரிடுகிறது. இரு ஆசைகள் எனக்குண்டு. ஒன்று — நல்ல கட்டடம் கட்டவேண்டும் இரண்டாவது, ஆண் பெண் நர்சுகள், மருத்துவச்சிகள் முதலியோர் பயிற்றுவிக்கப்பட மருத்துவ வகுப்புகள் நடத்தவேண்டும்" என்று அவர் எழுதுகிறார். இது எவ்வளவு தியாக சிந்தையும் பிறநல நோக்கும் நிறைந்த வாஞ்சை! இவ்வாசைகளில் முன்னது நிறைவேறிற்று என்று நாமறிவோம். இவ்விதப் பெருந்தியாகவுணர்ச்சியோடு பணி செய்த டாக்டர் ஸ்ட்ராஹனை அக்கால மக்கள் வாயார வாழ்த்தினர். அதுபற்றி, "அறியாமையுள்ள சுதேசிகள் என்னைத் தங்கள் மத்தியில் 'திடீரென்று குதித்துவிட்ட தெய்வம்' என்று எண்ணுகிறார்கள். கடவுள் தாமே நமது ஆண்டவரும் ரக்ஷகருமாகிய இயேசுகிறிஸ்துவின் அன்பும், சாந்தமும், அனுதாபமும் நிறைந்த இலக்ஷணங்களை இவர்களுக்குப் பிரத்தியக்ஷப்படுத்த எனக்குத் தமது கிருபையைக் கொடுப்பாராக" என்றெழுதினர். கடவுளின் பல அவதாரங்களிலும் தோற்றங்களிலும் நம்பிக்கை கொண்டுள்ள இந்துக்கள், அதுவும் அறியாமை நிறைந்த அந்தக்காலத்தில், மரணத்தோடு போர்புரிந்த நோயாளிகளுககு உத்தம மருத்துவ சிகிச்சையினால் சுகம் அடைய உதவி செய்யும் ஒரு பரோபகாரியை 'ஓர் தெய்வ'மென்று புகழ்ந்தார்களெனின், அது ஆச்சரியப்படுவதற்கானதன்று. அவர்கள் அவ்விதம் எண்ணினர் என்பதே நாசரேத் ஆஸ்பத்திரி செய்த ஒப்பற்ற சேவைக்குச் சிறந்த சான்றாகுமன்றோ?

அவரது ஆசை

'மானிடத் தெய்வம்!'

* இக்கட்டடமே தற்காலம் துணைகுருவானவரின் விடாகப்பயனபடுகிறது என்று அறிந்தோர் கூறுகிறார்கள்.

ஸ்ட்ராஹ்ன் ஐயர் ஆஸ்பத்திரி வேலையையும் நடத்திக்கொண்டு, இப் பெரிய வட்டாரத்தில் ஆவிக்குரிய பணிவிடைகளையும் செய்துமுடிக்க வேண்டியதிருந்தமையால், அவருக்கு உதவியாக 1872ம் வருஷத்தில் கனம் ஜியார்ஜ் பில்லிங் ஐயர் (Rev. George Billing M. A.) நியமிக்கப்பட்டார். இவர் நாசரேத்தில் ஊழியம் செய்த காலம் ஒரு வருஷமே. இங்கிலாந்தில் கென்ட் மாகாணத்திலுள்ள வைய் (Wye) என்றவூரில் 1847ல் (Nov. 20) பிறந்து, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையைச் சேர்ந்த பரி. யோவான் கல்லூரியில் கற்று, M. A. பட்டமும் பெற்று, இந்தியாவுக்கு வந்து 1871ல் உதவி குருப்பட்டம் பெற்றபின், சாயர்புரத்தில் ஒரு வருஷமும், நாசரேத்தில் 2 வருஷங்களும் உதவி மிஷனெரியாயிருந்தார். பின்னர் இராமநாதபுரத்தில் இருமுறை 12 வருஷங்களாக (1873—83, 88—89) ஊழியம் செய்தார். இவருடைய சேவையின் பயனை அதிகமாய்ப் பெற்றது ராமநாதபுரமே. இன்றும் இந்துக்கள் நிறைந்த அப்பட்டணத்திலே கர்த்தருக்கு மகிமையாக விளங்கி நிற்கும் பெண்கள் கலாசாலையை (St. Andrew's Girl's High School, Ramnad) * 1875ம் வருஷம் ஸ்தாபித்தும், இன்று ஷ்வார்ட்ஸ் ஹைஸ்கூல் என்றபெயர் வழங்கும் ஆண்கள் கலாசாலையைச் சேர்ந்த போர்டிங் பகுதியை 1874 (ஜூலை 3ம்வயில்) நிர்மாணித்தும், அவ்வருஷத்திலேயே அவ்வூரில் 'சிங்காரத்தோப்பு' என்ற பெயருடைய பெரிய காம்பவுண்டை விலைக் கிரயமாய் மிஷனுக்காக வாங்கி உதவினதும், ராமநாதபுரம் 'கிறிஸ்துவின் ஆலய'த்தைக் கட்டி முடித்து 1875ல் (ஜனுவரி 12) பிரதிஷ்டை செய்ததும், 1876ல் அவ்வூர் 'புது ஆலய'த்தைக் (Church in Singaratope) கட்டி முடித்ததும், 1877ல் உண்டான பயங்கரமான பஞ்சத்தில் அநாதைகளாய்த் துன்ப வாழ்க்கையில் அலைசடிபட்ட குழந்தைகளுக்காக, அவ்வருஷம் அங்கு இரு அநாதைச்சாலைகள் நிறுவினதும், 1882ல் அச்சுக்கூடம், கைத்தொழிற்சாலை முதலியன ஸ்தாபித்ததும், 1889ல் (Feb 24) பரமகுடி "தேவ பொறுமை ஆலயத்தை"க் ("Church of Divine Patience") கட்டி முடித்துப் பிரதிஷ்டை செய்ததும், † ராமநாதபுரம் மிஷனில் 150 கிராமங்களில் புதுச் சபைகளை உண்டாக்கினதும் அவர் ராமநாதபுரத்தில் செய்த ஆச்சரியமான வேலையின் சில குறிப்புகள். நாசரேத்தில் அவர் உதவி மிஷனெரியாய் மட்டுமிருந்ததால் அவரது ஊழியத்தின் சின்னங்கள் ஒன்றும் நமது காலம் வரை வந்தெட்டவில்லை.

ஜியார்ஜ் பீல்லிங் ஐயர்

---

* P 255, The Steep Ascent. by F. G. F. T. 1914.

† P 71, மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள் by Rao Sahib S. K Devasikamoni, Madras.

கனம் பில்லிங் ஐயரைத் தவிர, பல இந்தியக் குருக்கள் இக்கால நாசரேத்தில் இருந்தனர். 1873ம் வருஷக் கணக்கில் நாசரேத்தில் 6 குருமார் இருந்ததாகக் கண்டிருக்கிறது. இவர்கள் கனம் J. M. ஸ்ட்ராஹன்,

**சுதேசக் குருக்கள்**

G. பில்லிங், M. எசுவடியான், G. பாஞ்சோதி, V. ஆபிரகாம், R. பெரியநாயகம் ஐயர்மார். ஸ்ட்ராஹன் மிஷனெரி, பில்லிங் அவருக்கு உதவி மிஷனெரி. M. எசுவடியான் நாசரேத் சுற்றுப்புறச் சபைகளின் குரு. G. பாஞ்சோதி மூக்குப்பீறி குரு; V. ஆபிரகாம் கடையனோடை குரு. R. பெரியநாயகம் நாசரேத் கஸ்பா குரு என்றிவ்வாறு அவர்கள் தம் தம் ஊழியத்தைப் பகுத்துக்கொண்டிருந்தனர்.

இவர்களில் கனம் M. எசுவடியான் ஐயரவர்களை நாம் ஏற்கெனவே சந்தித்துள்ளோம். பிள்ளையன்மனை மதுரநாயகம் உபதேசியாரின் மகனாக 1833 (ஏப்பிரல் 5ல்) பிறந்து வாலிபத்தில் சிலகாலம் நாசரேத்தில் தலைமை உபாத்தியாயராக வேலை செய்து, 1863 முதல் 1866 வரை சென்னைமாநகரில் சல்லிவன் தோட்டத்திலிருந்த வேதசாஸ்திரக் கல்லூரியில் பயிற்சி பெற்று, 1867ம் வருஷத்தில் கனம் பிரதர்ட்டன் ஐயருக்கு உதவியாக உதவிக் குருவாய் அமர்ந்தார். 1869ம் வருஷம், * அக்கால உலகில் மிஷனெரி சரித்திரத்திலேயே மிகப் பெரிய குருப்பட்ட

**எசுவடியான் ஐயர்**

ஆராதனை ('Great Ordination') என்று சிலாகிக்கப் பெற்ற மகத்துவமான ஆராதனையில் பூரண குருப்பட்டம் பெற்றார். நாசரேத்தில் பல இந்திய குருக்களிருந்தாலும், இவர் வயதில் மற்றவர்களைவிடச் சற்று மூத்தவராயிருந்ததினாலும், எல்லாரையும்விட முந்திப் பட்டம் பெற்றபடியாலும் இவர் "நாட்டையர்" என்றழைக்கப்பட்டார். ஸ்ட்ராஹன் ஐயருக்கு இவர்மீது வெகு பிரீதி. சாதுர்ய ஞானம் உடையவர். ஒழுங்கும் கிரமமும் இவரின் விசேஷ குணங்கள். சாப்பாடு, தூக்கம், ஸ்நானம் எல்லாம் கடிகாரப்படி திட்டமாக நடைபெறுமாம். சபைகளை நடத்துவதிலும் சுவிசேஷ ஊழியம் செய்வதிலும் மிகவும் ஊக்கமுள்ளவர் என்று கூறப்படுகிறார்.

---

* P. 522, History of the C. M. S. Vol ii — (இந்தக் குருப்பட்ட ஆராதனை 1869ம் வருஷம் ஜனுவரி 31ல் பாளையங்கோட்டை திரித்துவ ஆலயத்தில் நடைபெற்றது. அவ்வமயம் 22 பேர் உதவிக் குருக்களாகவும் (15 C. M. S.; 7 S. P. G.) 10 பேர் குருக்களாகவும் (3 C. M. S.; 7 S. P. G.) சென்னை மகாகனம் ஜெல் அத்தியக்ஷரால் அபிஷேகிக்கப்பட்டார்கள்.

கனம் V. ஆபிரகாம் ஐயர் கடையனோடை விசுவாசம் உபதேசியாரவர்களின் குமாரர். 1841-ல் (மார்ச் 22) நாசரேத்தில் பிறந்தார். 1873ல் குருத்துவ ஊழியத்தை மேற்கொண்டவர், 1874 இலிருந்து தாம் வேலை நீங்கி ஓய்வெடுத்த 1912-ம் வருஷம் வரை 38 வருஷக் காலமாய்க் கடையனோடை பாஸ்ற்றரேற்றிலேயே திவ்யப் பணிவிடை செய்தார்.

ஆபிரகாம் ஐயர்

கனம் R. பெரியநாயகம் ஐயர் 1823-ம் வருஷம் பாளையங்கோட்டையில் பிறந்தவர். ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த வேளாள வகுப்பார். 1873-ல் பட்டம் பெறுவதற்கு முன்னால் பல காலம் நாசரேத்தில் உபதேசியாராய் ஊழியம் செய்தார். 1873—79 நாசரேத் கஸ்பாவில் குருப்பணியாற்றினர். ஆனால் அக்காலமெல்லாம் உதவி குருவாகவே இருந்தார். மகா பரிசுத்தவான் என்று இன்றும் அவரை அறிந்த பலர் கூறுகின்றார்கள்.

பெரியநாயகம் ஐயர்

கனம் G. பாஞ்சோதி ஐயர் மூக்குப்பீறியின் முதல் குரு. இவர் 1837 ( Sept. 10)ல் பிறந்து, 1873-ல் உதவிக் குருப்பட்டம் பெற்றவர். மூக்குப்பீறி, ராமநாதபுரம் முதலிய இடங்களில் பணிவிடை செய்தார். இவரும் அக்காலமெல்லாம் உதவிக் குருவாகவேயிருந்தார். முள் குத்தின காயங் காரணமாய் 1892-ல் நாசரேத்தில் மரித்தார்.

பாஞ்சோதி ஐயர்

அக்கால குருக்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தைப் பற்றிப் பார்த்தோம். இனி நாசரேத் வட்டாரத்தில் ஸ்ட்ராஹ்ன் ஐயர் காலத்திய கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றிய சில குறிப்புக்கள் தருவோம்.

இக்காலத்தில், பக்தன் பிரதர்ட்டன் தெளித்த சுவிசேஷ விதைகள் முளைத்துப் பலன் தரலாயின. அவ்விதைகள் முளைக்க மேற்சொன்ன குருக்களும் மற்றும் ஊழியரும் செய்த தொடர்ந்த (follow-up work) சுவிசேஷ முயற்சியும் ஓர் முக்கிய காரணம் என்பதை நாம் மறக்கலாகாது.

1871-ல் பெரியவிளைக் கிராமம் முழுவதும் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டது. 177 ஆத்துமாக்கள் ஆயத்தக்காரர் ஆயினர். அவர்களுக்குப் போதனை கொடுக்க A. வேதக்கண் உபதேசியார் நியமிக்கப்பட்டார். அவருடைய ஊக்கமான பிரயாசத்தால் இச்சபை உறுதியுடன் விசுவாசத்தில் வளர்ந்தது.

பெரியவிளை

உடையார்குளத்தில் இரண்டு குடும்பங்களும், வாழையடியில் இரு குடும்பத்தினரும் திருச்சபையில் சேர்ந்தார்கள். அக்காலம் உடையார் குளம் சபையில் 60 பேரே கிறிஸ்தவர்களுண்டு. M. ஏசுவடியான் ஐயர் அவர்களை அடிக்கடி சந்தித்து வேத போதனையிலும், விசுவாச ஜீவியத்திலும் உற்சாகத்துடன் வளர்ந்து வந்தார். நற்கருணைக்காரரான பதினொருவரின் கிறிஸ்தவ வாழ்க்கையைப் புகழ்ச்சிக்குரியதாகக் கண்டெழுதினர். 1873-ம் வருஷம் மேலும் 27 வீட்டார் சபையைச் சேர்ந்தார்கள்.

உடையார்குளம்

வகுத்தான்குப்பத்தில் 4 இந்துக்கள் கிறிஸ்துவையண்டிக் கொண்டார்கள். "அவர்களுக்கு அவர்கள் குடும்பத்தார் மூலமாய்க் கொடிய இன்னல்கள் ஏற்படினும், திடச்சித்தத்துடன் விசுவாசத்தில் நிலைத்து நின்றார்கள்," என்றொரு குறிப்பும் காணப்படுகிறது.

1872-ல் குரங்கணிக் கிராமத்தில் சபை உண்டாயிற்று. முதலில் நான்கு குடும்பத்தாரே விசுவாசிகளானார்கள். அவர்கள் இந்துக்களாயிருந்த காலத்தில் வெகு வைராக்கியம் காட்டியதுண்டு. ஆகையால் தங்கள் பழைய மார்க்கத்தை அவர்கள் புறக்கணித்து விட்டதும், அம்மார்க்கத்தாரால் ஏற்பட்ட இன்னல்களும், இடையூறுகளும் அனந்தம். அவையெல்லாவற்றையும் மேற்கொண்டு வெற்றிகொண்டதைக் குறித்து மிஷனெரி, 'அவர்கள் தங்கள் சோதனைகளிலும், படமிடப்படுதலிலும் உறுதியுடன் நிலைத்து நின்றார்கள்," என்று மகிழ்ச்சியுடன் எழுதக் கூடியதாயிற்று. இப்பக்தரின் வெற்றி அடுத்த வருஷத்தில் (1873) இன்னும் இரு குடும்பத்தார் சபையைச் சேரக்காரணமானது.

குரங்கணி

இன்னும் இதுபோன்ற உற்சாகமூட்டக்கூடிய பல செய்திகளை மிஷனெரி எழுதக்கூடியவராய் இருந்தபோதிலும், கரையடிப்பட்சேரி சபையைக் குறித்து வேதனையுண்டாக்கத் தக்கவோர் விஷயத்தையும் அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதிருந்தது. அச்சபையில் சுமார் 18 குடும்பங்கள் இம்மட்டும் கிறிஸ்தவர்களாயிருந்தனர். ஆனால் 1872-ல் அவர்களில் 16 குடும்பத்தினர் பின்வாங்கிப் போய்விட்டார்கள்.

பிரிவினைச் சபையைச் சேர்ந்தவர்களுக்குள்ளும் ஒழுங்காய் வேலை நடந்துகொண்டிருந்தது. கனம் பிரதர்ட்டன் ஐயர் காலத்திலேயே அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சபையில் சேர ஆரம்பித்தார்கள் என்று கண்டோம். 1875-ல் மூக்குப்பீறியில் நாட்டுச் சபையைச் சேர்ந்த 8 குடும்பத்தாரும், ஒய்யான்குடியில் அச்சபையினின்று 27 குடும்பத்தாரும், குளத்துக்குடியில் 3 குடும்பத்தாரும் திரும்பவும் நம் சபையில் சேர்ந்து கொண்டார்கள்.

நாட்டுச்சபை

அவ்வருஷத்திலும் உடையார்குளத்தில் 4 இந்துக் குடும்பங்களும், மழவையில் 2 குடும்பத்தாரும், இளையான்குடியில் இரு வீட்டாரும் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களானார்கள் என்றறிகிறோம். ஆனால் 1876 ஜனுவரியில் காலரா நோய் மும்முரமாய்ப் பரவி வரவே மழவை, அசுப்பைக்குளம், ஆழ்வார்திருநகரி முதலிய இடங்களில் சில வீட்டார் (7 வீடுகள்) மறுதலித்து விட்டார்கள்.

1876 மார்ச் மாதத்தில் நாசரேத் வட்டாரத்தில் 25 கிராமச் சபைகளும் அவற்றில் ஞானஸ்நானம் பெற்றக் கிறிஸ்தவர்கள் 3875-ம், பெருகவர்கள் 454-ம் இருந்தார்கள். அவர்களுக்கு இரு மிஷனெரிகளும் 4 இந்திய குருக்களும், 9 உபதேசிமாரும், 11 உபாத்திமாரும் தெய்வத் திருப்பணிவிடை செய்தார்கள்.

இவ்வருஷத்தில்தான் நாசரேத் சேகரம் பல உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்பிரிவுகளுக்கு முறையே நாசரேத், கடையனோடை, பிள்ளையன்மனை, மூக்குப்பீறி என்பவை தலைமை ஸ்தானங்களாயின. இதோடு நாசரேத் கஸ்பாவுக்கென்று தனியாக ஒரு குருவானவர் ஏற்படுத்தப்பட்டார். எனவே 1876 மார்ச் மாதத்தில் கனம் ஸ்ட்ராஹன் ஐயர் நாசரேத்தை விட்டு மாற்றிப்போகும்பொழுது M. எசுவடியான் ஐயர் நாசரேத் பாஸ்ற்றரேற் (Rural) குருவாகவும், R பெரியநாயகம் ஐயர் நாசரேத் ஸ்தல (Cuspah) குருவாகவும், V. ஆபிரகாம் ஐயர் கடையனோடை பாஸ்ற்றரேற் குருவாகவும், G. பரஞ்சோதி ஐயர் மூக்குப்பீறி குருவாகவும் இருந்தார்கள். பிள்ளையன்மனை ஒரு பாஸ்ற்றரேற்றின் தலைமை ஸ்தானமாயிற்றெனினும், நாசரேத் சுற்றுப்புரத்தை (Rural) மேற்பார்த்த கனம் M. எசுவடியான் ஐயரே அதையும் விசாரித்து வந்தார். ஆயின் 1876 முதல் "பாஸ்ற்றரேற்" முறை நாசரேத்தில் ஒருவாறு கையாளப்பட்டதென்று குறிப்பிடுமிடத்தில், அவற்றின் முதல் குருக்களெவரெவர் என்றும் இங்கு காட்ட நேரிட்டது.

உப பிரிவுகள்

நாசரேத் சபையின் மக்களுள்ளும் உற்சாகம் மிகுதியாய்க் காணப்பட்டது. சபையில் சிலர் சுயேச்சையாகச் சுவிசேஷ ஊழியம் செய்ய முற்பட்டு ஒழுங்காய் அக்கைங்கர்யத்தைச் செய்ய முன்வந்தார்கள். இதைப் பின்பற்றிக் கடையனோடைச் சபையிலும் 'சுவிசேஷ பிரபல்லியக் கூட்டம்' ஒன்று ஏற்பட்டது. அவர்கள் தங்கள் வேலையைப் பற்றிய ரிப்போர்ட் ஒன்றை, ஒவ்வொரு வாரமும் ஜெபக்கூட்டத்தில் சமர்ப்பிக்க, சபையார் எல்லாரும் அவ்வேலைக்காக ஜெபிப்பார்கள்.

சுவிசேஷ பிரபல்யம்

இந்த நல்ல வழக்கத்தினால் சுவிசேஷ ஊழியம் ஒருசிலர் செய்யும் தனி முயற்சி என்றிராமல், சபையார் அனைவரும் அதில் பங்குபெற ஏதுவாயிற்று. டாக்டர் ஸ்ட்ராஹன் இக்கூட்டங்களை மிகவும் உற்சாகப்படுத்தினார்.

**உடையார்குளம் துன்பம்**

1874-ம் வருஷத்தில் உடையார்குளம் கிறிஸ்தவர்களுக்கு ஓர் கொடுந்துன்பம் உண்டாயிற்று. ஆழ்வார்திருநகரிப் பிராமணரொருவருக்கு அக்கிராமம் சொந்தமாயிருந்தது. எனவே அன்னவரால் என்னென்ன செய்யக்கூடுமோ அத்தனையும் கையாடிப் பார்த்தும் சபையார் உறுதி குலையாமல் நிலைத்து நின்றார்கள். இத்துன்ப காலத்தில் அவர்களுக்குத் துணையாயிருந்தது அச்சபையின் உபதேசிகர். அவ்வுபதேசிகர் 'வாலிபர்' என்றும், 'ஊக்கமும் ஆற்றலும், மிகுந்த ஜாக்கிரதையுமுள்ளவர்' என்றும், மிஷன் ரெக்கார்டுகளில் வெகுவாய்ப் புகழப்படுகிறார். ஆனால் அவரது பெயர் நமக்குத் தெரியாதது வருந்தத்தக்கது.

**அகப்பைக்குளம்**

அகப்பைக்குளத்தில், ஆழ்வார் என்ற பெயரையுடைய சிறு பையன் ஒருவனின் விசுவாசத்திண்மையினால், கிறிஸ்துமார்க்கத்தை முற்றிலும் பகைத்துக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுந்தீங்கிழைத்து வந்த, அச்சிறுவனது தகப்பனார் குடும்பத்துடன் ரக்ஷிப்பைக் கண்டடைந்தார். அகப்பைக்குளத்தில் அவருடைய மாறுதல் ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கிற்று. இவ்விதமாய் சபைகள் விருத்தியடைந்தன.

**ஹாரியட் ஸ்ட்ராஹன் ஆட்சிக்காலத்தில்**

ஸ்ட்ராஹன் ஐயர் மிஷனெரியாய் வந்ததும் பெண்கள் கலாசாலையைத் தாங்கி நடத்தி வந்த ஸ்கார்பரோ அம்மையார் தம் பதவியை ஸ்ட்ராஹன் ஐயரின் மனைவி ஸ்ரீமதி ஹாரியட் ஸ்ட்ராஹன் அம்மாளிடம் ஒப்புவித்துவிட்டுத், தாம் கிறிஸ்தியாநகரம் சென்று அங்குள்ள பெண்கள் போர்டிங் பாடசாலையை நடத்தலானார்கள். ஸ்ட்ராஹன் அம்மாளின் இப்பள்ளிக்கூடம் மிக முன்னேற்றம் அடைந்தது. அதுபற்றி பின்னால் கவனிக்க நேருமாதலால் இவண் அதை நிறுத்துவோம்.

கனம் ஸ்ட்ராஹன் ஐயர் ஆஸ்பத்திரியை ஸ்தாபித்தது மட்டுமல்லாமல் இன்னும் நாசரேத்துக்குச் செய்த நன்மைகள் பல உள. அவற்றில் சிரேஷ்டமானவற்றை மட்டும் அறிந்து கொள்ளினும் போதும்.

1872-ம் வருஷம் ஆலயத்தின் மேற்குப் பாகத்தை இடித்துச் சிலுவை வடிவத்துடன் சற்று விரிவாகக் காட்டினார். இதற்கு முக்கிய காரணம் இடம் பற்றாமையே. அதே சமயத்தில் கிராமத்தில் சின்னஞ்சிறு தெருக்

களும் பல சந்துக்களும் ஒன்றுக்கொன்று ஒழுங்கில்லாமலும் ஒடுக்கமாயும் (narrow) காணப்பட்டபடியால், ஜனங்களைத் தங்கள் வீடுகளை இடித்துத் தாமே வகுத்தபடி அகலமான வீதிகளையுடையதாகவும்

**தெருவமைப்பு**

ஒழுங்கான வரிசைக்கிரமமாயும் கட்டும்படி செய்தார். அக்காலந்தொட்டுத்தான் நம் கிராமத்தில் முதலாம் தெரு, இரண்டாந்தெரு என்று பல தெருக்களும், நேர் நேரான அகன்ற வீதிகளும் ஏற்பட்டன. இவ்விதம் செய்தமையால் கிராமம் அழகுற்றது மன்றிச், சுகாதாரத்துக்கேற்றதாயுமமைந்தது. நாம் முன்னொரு பக்கத்தில் பார்த்ததுபோல், நாசரேத்தில் கடையொன்றுமில்லாத குறையை நீக்க, ஸ்ட்ராஹன் ஐயர் பாக்கியநாதன் என்றொருவருக்கு முன்பணம் கொடுத்து, ஜனங்களுக்கவசியமான பல பண்டங்களையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் வாங்கி விற்கும்படி செய்தார். அது முதல் கடையில்லாக் குறை நீங்கிற்று.

மேலும் 1872-ல் இன்றையவரை நமது ஊரில் நடைபெறுகிற செவ்வாய்க்கிழமை சந்தையையும் ஏற்படுத்தி வைத்தார். இம்மட்டும் நாசரேத்தூரார் பிரகாசபுரம் சந்தைக்கே போய் வந்த

**சந்தை**

னர். அப்படிப் போகையில், அவ்வூர் நாட்டுச் சபையாரின் பல அவதூறான வார்த்தைகளையும் கேட்டுச் சகித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. எனவே பல குழப்பங்களும் கலகங்களும் உண்டாக ஏதுவாயிற்று. நாசரேத்தில் சந்தை ஸ்தாபிக்கப் பட்டதிலிருந்து, இரு ஊராருக்கும் இடையில் சமாதானமும் நல்லெண்ணமும் வளரக்கூடிய நிலைமை உண்டானது.

மேலும் நமது ஊருக்கு அவசியமாயிருந்த போஸ்ட்டாபீசும் ஸ்ட்ராஹன் ஐயர் முயற்சியினால் நம்மூர் பெற்ற ஓர் ஈவு.

அக்காலத்தில் (c.1874?) போஸ்ட்டாபீஸ் வைக்கப்பட்டதும் அதைத் தற்சமயம் T. D. T A. ஆரம்பபாடசாலைக்கு வடக்கிலிருந்த ஓர் கட்டடத்தில் ஸ்தாபித்துவிட்டு, மருத்துவச்சாலையைத் தற்போது போஸ்ட்டாபீசு இருக்கிற கட்டடத்திற்கு மாற்றினர். 1892ம்

**தபாலாபீஸ்**

வருஷம் மர்காஷிஸ் ஐயரால் இன்றுள்ள சாம்பவுண்டுக்கு ஆஸ்பத்திரி மாற்றப்படுமட்டும், அது அக்கட்டடத்திலேயே இருந்தது.

கடைசியாக ஐயர் நம்மூருக்குச் செய்த பேருபகாரம் நாசரேத்-ஆழ்வார்திருநகரி ரோடு அமைத்ததே. இம்மட்டும் ஒரு தீவாந்தரம் போன்று நின்ற நாசரேத் இது முதல் வெளியுலகுடன் சம்பந்தப்பட

வாரம்பித்தது. எனவே வியாபாரம் முன்னைவிடச் சிறப்பாய் நடந்தேறவும் இச்சாதனம் வெகுவாய் உதவிற்று.

ஸ்ட்ராஹன் ஐயர் மேற்சொன்னவாறு சிறந்த பணியாற்றியபின் †1876ம் வருஷத்துவக்கத்தில் (?) சென்னை சான்தோமுக்கு மாற்றப்பட்டு, அவ்வருஷம் மார்ச்சுமீ 31ம்வ‌க்குள் நாசரேத்தைவிட்டுச் சென்றார். சென்னையில் அவர் சல்லிவன் தோட்டம் வேத சாஸ்திரக் கல்லூரித் தலைவராகவும் M. D. C. செக்ரட்டேரியாகவும் சில காலம் வேலைசெய்து 1882ம் வருஷம் S. P. G.யினின்று விலகிக்கொண்டு சுய தேசம் திரும்பினார். அங்கிருக்கும்போது ரங்கூன் அத்தியக்ஷராக நியமனம்பெற்று, கந்தர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷரால் கந்தர்புரி லாம்பத் மாளிகைச் சிற்ருலயத்தில் அத்தியக்ஷப்பட்டாபிஷேகம் பெற்று, ரங்கூன் சேர்ந்து அவ்வாதீனத்தின் இரண்டாவது அத்தியக்ஷராக 20 வருஷம் உத்தம சேவை செய்தார். * அவரது ஊழிய காலத்தில் அவரிடத்துக் காணப்பட்ட ஆழ்ந்த பக்தியும் சுயநலமற்ற சேவையும், உற்சாகமான சம்பாஷணையும், உதாரத்துவமும் என்றும் மக்கள் மறக்கற்பாலனவல்ல. ஓயா உழைப்பின் பயனாக உடல் நலம் குன்றியதால், 1902ம் வருஷம் தம் வேலையை ராஜிநாமாச்செய்து இங்கிலாந்து சென்று, நான்கு வருஷங்களுக்குப் பின் 1906ம் வருஷம் மே மாதம் 2-ம் தேதி பார்ன்ஹாம் (Farnham) பட்டணத்துக்கருகான ரௌலட்ஜ் கிராமத்தில், தம் 70-ம் வயதில் தேகவியோகமானார். அவர் மரிக்கும் போது தம் ஆஸ்தியில் ரூ. 50,000-ஐத் தமது அத்தியக்ஷாதீனத்திற்கும் (ரங்கூன்), ரூ. 10,000-ஐ தாம் கல்விகற்ற கந்தர்புரி பரிசுத்த அகுஸ்தீன் கல்லூரிக்கும் எழுதி வைத்தார். இவ்விதம் மரணத்திலும் தியாகசிந்தை அவரைவிட்டுப் பிரியாதிருந்தது, தமதாண்டவரின் தியாகக்குணத்தை முற்றுமுடிய தம் முன்மாதிரியாய் அவர் கொண்டிருந்ததினாலன்றோ?


ஸ்ட்ராஹன் அத்தியக்ஷர்

கடைசிக் காலம் மரணம்

---

† மகாகனம் உவெஸ்ற்றர்ண் அத்தியக்ஷரவர்கள் அபிப்பிராயப்படி 1874இலேயே ஸ்ட்ராஹன் சான்தோமுக்கு மாற்றப்பட்டு அங்கு போய்விட்டார். (P. 33 Register of Tinnevelly clergy 1776 — 1936. சென்னை S. P. G. வேதசாஸ்திரக் கல்லூரித் தலைவராகவிருந்த A. வெஸ்ற்காட் ஐயரும் அவ்விதமே எண்ணினார். See P. 99. Our Oldest Indian Mission 1897.

* P. 108 S. P. G. Report 1906.



கனேன் மர்காஷில் ஐயர்



கனம் D. பெரியநாயகம் ஐயர்



கனம் C. G. ஸ்டேப்ளி ஐயர்



N. I. C. P. Fund Diamond Jubilee 1947. (See page 235)

# அத்தியாயம் 8

## 'அறுப்பு மிகுதி'

## (மர்காஷிஸ் ஐயர் காலம் Dec 1876 — 1908)

கனம் மர்காஷிஸ் ஐயரவர்கள் நமது ஊருக்கு மிஷனெரியாக வந்து, சிறந்த ஊழியம்செய்து மரித்துச் சுமார் 40 வருஷங்களுக்கு மேலாகியும், அவர்களைத் தெரிந்தவர்களில் ஒருவரும் இன்னும் அப்பெரியாரை மறக்கவியலவில்லை. நாசரேத்தின் எம்மருங்கில் சென்றாலும் அப்பக்தனின் நிழலாட்டம் தோன்றுகிறது. இதற்குக் காரணம் அவரது நீண்டகால உழைப்பு மட்டுமன்று. நாசரேத்துக்கும், நாசரேத் மிஷனுக்கும் தம்மைப் பூரணமாய் அர்ப்பணம் செய்து, அவற்றின் நல்வாழ்வே தம் ஜீவிய நோக்கம் எனக்கொண்டு கண்ணும் கருத்துமாகத் தம் சுக நலத்தையும் பொருட்படுத்தாது அவர் "தம்மையே செலவிட்டதே" முக்கிய காரணமாகும்.

**மர்காஷிஸ் சேவையின் மேம்பாடு**

அவரது சிறந்த சேவையைப்பற்றி S. P. G. இருநூறு வருஷச் சரித்திரத்தில் காணப்பட்டுள்ள ஓர் பாராட்டு வசனம் ஐயரின் 31 வருஷ ஊழியத்தைச் சுருக்கிக் கூறும் ஓர் கூற்று. அஃதென்னெனின் *"மெய்யாகவே நாசரேத் மிஷன் ஊழியம் இந்தியாவிலேயே பயன்மிக்க ஊழியங்களில் ஒன்று ஆகும். கனம் A. மர்காஷிஸ் ஐயரின் மேற்பார்வையில் அதின் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களின் தொகை ஏராளமாய்ப் பெருகியுள்ளது. அதின் ஒவ்வொரு பிரிவிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. மருத்துவ நிலையம், அநாதைச் சாலை, கைத்தொழிற்சாலை இம்மூன்றும் விசேஷித்த ஒலியுடனும், ஒளியுடனும் விளங்குகின்றன. அதின் ஆரம்ப, மத்திப, உயர்தரக் கலாசாலைகள் சங்கத்தின் எவ்வித உதவியுமில்லாமல் சுய ஆதரவுடன் நிலைத்துள்ளன. 'சுய ஆதரவு' தங்கள் உரிமை என உணர்ந்துகொள்ளக் கற்பிக்கப்பட்டதினால் அங்குள்ள கிறிஸ்தவர்கள் காசு பணமாக மட்டுமின்றி தங்களின் ஒவ்வொரு பொருளிலும் 'முதற் பலனை' மாதந்தோறும் ஆலயத்தில் படைக்க முற்படவே சுய ஆதரவுக்கான பணவருவாய் அதிகரித்துள்ளது" என்பதாம்.

மர்காஷிஸ் ஐயரின் சேவையைப்பற்றி இவ்விடத்தில் பாராட்டிக் கொண்டிருப்பது இவ்வத்தியாயத்தின் நோக்கமல்லாது, அக்கடனை வாசகர்களுக்கே விட்டுவிடுவதேயாம். எனவே அதை அவர்கள் நிறைவேற்றுவதற்குதவியாக, நேரே அவர்காலச் சரித்திரத்தை விவரிக்கப் புகுவோம். அக்கால் நாம் மனத்தில் கொள்ளவேண்டியது ஒன்றுளது. அஃதென்

* P. 550 Two-Hundred years of S. P. G.

னெனின் ஐயரவர்களின் காலம் ஆரம்பகாலமன்று, அது முன்னேற்ற காலம். எனவே எவ்வெத்துறைகள் முன்னேற்ற மெய்தியுள்ளனவென வறியுமாறு ஒவ்வொரு துறையையும் தனித்தனியாய் ஆராய்தலே நலம்.

## மிஷனேரி ஊழியமும் சபை வளர்ச்சியும்.

1870ல் நாசரேத் ஆஸ்பத்திரியும், 1872ல் ஆழ்வார்திருநகரி ரோடும் ஏற்பட்டதிலிருந்து அவ்வூருக்கும், நாசரேத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. வியாதியஸ்தர் மருத்துவ ஒத்தாசை தேடி ஆஸ்பத்திரிக்கு வந்தவர்கள் கிறிஸ்துவின் அன்பைச் சொல்லில் மட்டுமல்லாது, நடை முறையிலும் கண்டு அநுபவித்தார்கள். நாசரேத்திலிருந்து உபதேசிமார், குருமார் முதலானோர் சபையாரில் சிலருடன் அவ்வூருக்கு அடிக்கடிச் சென்று சுவிசேஷ நற்செய்தி கூறி வரவுமானார்கள். தவிரவும் ஏற்கெனவே அங்கு நிறுவப்பட்டிருந்த கிறிஸ்தவக் கலாசாலை சுவிசேஷ சத்தியங்களைப் பள்ளிச் சிறுவர் மூலமாகப் பட்டணத்தின் எப்பக்கத்தும் எவ்வீட்டிலும் தெளித்து வந்தது. மார்காஷிஸ் ஐயர் இக்கருவிகளை வெகுவாய்ப் பயன்படுத்த வாரம்பித்தார். 1877ம் வருஷம் மார்ச்சு 11ல் அத்தியக்ஷாபிஷேகம்பெற்ற மகாகனம் கால்ட்வெல் தாம் ஓர் சுவிசேஷ அத்தியக்ஷர் (Missionary – Bishop) என்பதை மறவாதவராய், பட்டாபிஷேகம் பெற்றதும், பிரதான இந்து நகரங்களில் தீவிர சுவிசேஷப் பிரபல்ய வேலை நடத்தவாரம்பித்து, ஆழ்வார்திருநகரியிலும் அம்முயற்சியில் ஈடுபடலானார்.

ஆழ்வார்திருநகரியில் சுவிசேஷப் பிரபல்யம்

அவரது ஊழியம் கைமேல் பலன் தந்தது. உயர்குல இந்துக்களாக மதிக்கப்பட்ட பலர் கிறிஸ்து மார்க்கத்தை ஆராய்ச்சி செய்யலானார்கள். அவர்களில் ஆறு வாலிபர் நமதாண்டவரின்மீது உறுதியான விசுவாசம் வைத்தவர்களாய், கிறிஸ்தவர்களாக விரும்பி மார்காஷிஸ் ஐயரிடம் வந்து தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கவே, அவரும் மனமுவந்து அவர்களை ஆயத்தக்காரராய்ச் சேர்த்தார். இவ்வறுவரில் விசேஷித்தவர் ரங்கையா நாயுடு என்பார். இவர் தமது பழைய வழியைத் துறந்ததினால் அதிக இம்சைகளுக்கு ஆளானார். எனினும் உறுதியாக நின்று 1878ல் நாசரேத் ஆலயத்தில் மார்காஷிஸ் ஐயரிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார். இவரே ஆழ்வார் திருநகரியிலிருந்து ரக்ஷகரைக் கண்டடைந்த இந்துமக்களில் முதல்வர். தாம் கிறிஸ்தவரானதினிமித்தம் இவர் தம் சொத்துக்கள் யாவற்றையும் இழக்க நேரிட்டது. எனவே இவர் மழவைச் சபைக்கு உபதேசிகரா யனுப்பப்பட்டுச் சிலகாலம் அங்கு ஊழியம்செய்து, பின் மணல்குன்று

ரங்கையா நாயுடு

உபதேசிகரானார். பின்னும் இரண்டொரு வருஷங்களில் தம் சொந்த ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக நியமுகம் பெற்றார்.

ரெங்கையா நாயுடு கிறிஸ்தவரான சில மாதங்களில், 20 வயதுள்ள அவரது இளைய சகோதரர் ஒருவர் ஆர்தர் மர்காஷிஸ் சத்தியநாதன் என்ற பெயருடன் ஞானஸ்நானம் பெற்றார். இவரும் தம் உற்றார், உறவினரையும், உலக ஐசுவரியங்களையும் இழக்க வேண்டியதாயிற்று. ஆதலின்

**A. M. சத்திய நாதனையர்**

மர்காஷிஸ் ஐயரால் ஒரு ஆசிரியராக நியமிக்கப்பட்டு சின்னாட்சென்று, அவராலேயே சென்னையில் வேத சாஸ்திரம் பயில அனுப்பப்பட்டார். அப்பயிற்சி முடிந்த பின், 1889ம் வருஷம் உதவிக் குருப்பட்டம் பெற்று, ஒரு வருஷம் குலசேகரப்பட்டினத்தில் ஊழியம் செய்து வருங்கால் சுகவீனப்பட்டு 1890 மே 18ல் நாசரேத்தில் மரித்தார்.

1880ம் வருஷத்தில் ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த இந்துக்களில் இன்னும் சிலர் ரக்ஷிப்பைக் கண்டடைந்தார்கள். இவர்களில் அறுவர் நாயக்கமார், ஏனையோர் பிள்ளைமார். இவர்களனைவரும் மிகுந்த ஆஸ்தியுடையவர்களாயிருந்து, சிலுவையினின்று பரிமளித்த கிறிஸ்துவின் அன்பின் முன்னிலையில் உலக மேன்மையைக் குப்பை என்று உதறித் தள்ளினவர்கள். இவ்வாலிபரின் முன்மாதிரியைப் பின்பற்றி 1882ல் இன்னும் பதினெவர் மோக்ஷ பாதையைச் சேர்ந்தார்கள். இவர்களோடு சேர்ந்து இவ்வருஷத்தில் 'உயர்குல'த்தைச் சேர்ந்தவர்களான கிறிஸ்தவர்களின் தொகை 23 ஆயிற்று. இவ்விருபான்மூவரில் சிலர் பிராமணர். இவர்கள் ஞானதீக்ஷை பெற்ற கிறிஸ்தவர்களாயிருந்தும் வெளிப்படையாக ஆலயத்துக்கு வருவதில்லை. ஆனால் அந்திப்பொழுதில் தாமிரவருணி ஆற்று மணலில் கூடி கிறிஸ்துநாதரின் மகத்துவங்களைப் பற்றிப் பேசி, ஆவியில் அடங்கா மகிழ்ச்சியை அனுபவித்து ஜெபித்துவிட்டு வீடு

**ஜோதிநாயகம் பிள்ளை**

திரும்புவர். இச்சிறு சபையின் மக்களில் ஜோதிநாயகம் பிள்ளை என்பவர் ஓர் ஆசிரியராக விருந்தார். வேளாளரும், பிராமணருமான நாற்பது சிறுவர்களைக் கூட்டுவித்து, அவர்களுக்கு அருளுபதேசம் செய்து, தனி ஜெபம் செய்யப் பழக்குவித்து அவர்களை அந்தரங்க விசுவாசத்தில் வளரச் செய்தது இவர் தம் ஆண்டவருக்குச் செய்து வந்த அரிய சேவை. மற்றொருவரான மாணிக்கம் பிள்ளை தமக்குண்டான கொடிய உபத்திரவத்தில் உயிர் தப்பிப் பிழைத்ததே கடவுளுடைய பெருங்கிருபை. அவர் 1884ல் ஞானஸ்நானம் பெற்றார். அவருடைய இனஜனத்தார் அவருக்கு மிகுந்த துன்பத்தை விளைவித்தார்கள். ஓரிரவு அவருடைய வீடு தீக்கிரையானது. தெய்வாதீனமாய் ஜீவன்

தப்பினர். மறுவாரத்தில் இரண்டாம் முறையாக அவர் தங்கியிருந்த வீடு தீப்பிடித்தது. இத்தடவையும் தம் மனைவியோடும் சேதமின்றிக் காக்கப் பட்டார். ஆனால் அவருடைய தாயாரும், குழந்தையும் நெருப்புப் பற்றின வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்டார்கள். மாணிக்கம் பிள்ளை உயிரைத் துரும்பாக மதித்து எரியும் வீட்டிற்குள் புகுந்து இருவரையும் ரக்ஷித்தார். ஆனால் அவரது தேகமெல்லாம் தீச்சுட்டப் புண்களால் நிறைந்தது. உடனே நாசரேத் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார். பிழைப்பாரென்ற நம்பிக்கையில்லாத நிலைமையில் "பிதாவே, பிதாவே" என்றே சொல்லிக் கொண்டிருந்தார். கடவுளுடைய கிருபையால் சுகம் பெற்றெழுந்த பின், "தேவன் தமது பிள்ளையின் மீது தமது முத்திரையைப் பொறித்துள்ளார் கிறிஸ்துவுக்காகப் பாடனுபவித்ததற்காக நான் மகிழ்கிறேன்" என்றார். இவர்கள் எல்லாரிலும் அதிகத் துன்பம் அடைந்தவர் சாமுவேல் நாயுடு என்பார். இவர் அனுபவித்த பாடுகளை எண்டெழுத இடமில்லை. இவ்விதமாய்ப் பல வருஷங்களாக இச்சிறுமந்தை கொடிய பகைவரின் மத்தியில் உறுதியாயிருந்து, துன்பங்களின் மூலம் சாட்சி பகர்ந்துநின்று கிறிஸ்தவை மகிமைப் படுத்தினது.

**மாணிக்கம் பிள்ளையின் உபத்திரவம்**

ஆழ்வார்திருநகரி என்ற விசேஷித்த விஷ்ணு ஸ்தலத்துள்ள உயர் ஜாதி ஹிந்துக்களாக மதிக்கப்பட்ட பலர் கிறிஸ்தவர்களான செய்திகாட்டுத் தீப்போல் பறந்து பரவியது. இனித் தாங்கள் வாளாவிருப்பது அனர்த்தம் விளைவிக்கும் என்றெண்ணிய சென்னை ஆரிய சமாஜத்தார் பல இந்து 'மிஷனெரிகளை' ஆழ்வார்திருநகரிக்கனுப்பினர். அவர்கள் அங்கு வந்து இந்துப்புராணோபதேசம், கிறிஸ்துமார்க்க வசை, மிஷனெரித் துவேஷம் முதலியவற்றைப் பிரபல்யப் படுத்திப் புதிதாக ஒருவரும் கிறிஸ்து மார்க்கத்தைச் சேராதிருக்கச் செய்யவேண்டிய பிரயத்தனங்களனைத்தும் செய்தார்கள்.

**'இந்து மிஷனேரிகள்'**

ஆயினும் மலைமேல் ஏற்றப்பட்ட கிறிஸ்தவ அறிவொளி மறைந்திருக்கவில்லை. அடுத்த வருஷமே (1885) பட்டர்பிரான் என்ற நாமமுடைய ஐயங்கார் வாலிபர் ஒருவர் ரக்ஷிப்பின் வழியை ஏற்றுக்கொண்டு, C M.S மிஷனெரி கனம் ஹென்றி ஜேம்ஸ் ஷாப்டர் ஐயரிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார். இந்த வாலிபர் 1912ம் வருஷம் குருப்பட்டம் பெற்று புலவனூர், பாளையங்கோட்டை, செவல், திருநெல்வேலி என்றவிடங்களில் 31 வருஷம் தெய்வத் திருப்பணிவிடையாற்றி, 1932ல் விண்ணுலகடைந்தார்.

**கனம் பட்டர்பிரான் ஐயர்**

பட்டர்பிரான் ஐயருக்குப்பின் ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த 'உயர் குலத்தோர்' அதிகமாக இயேசு இரக்ஷகரை அண்டிக்கொள்ள முன் வரவில்லை. இவருக்குப்பின் 13 வருஷங்களாக நாம் அப்படிப்பட்ட ஒருவரைப்பற்றியும் அறியக்கூடவில்லை. அதன்பின் 1898ல் தான் இரு ஐயங்கார் பிராமணர் ஞானஸ்நானம் பெற்றூர்கள். அவர்களில் ஒருவர் நமது பெண்கள் கலாசாலையில் சுமார் 4 வருஷமாக ஆசிரியாய் வேலை செய்து வந்தவரும், வைஷ்ணவ வேதாந்தியுமான சடகோப ஐயங்கார்; மற்றவர் அவரது 17 வயதுச் சகோதரன். இவ்விருவரும் ஏனை யோரைப்போலவே பல துன்பங்களினூடே பிரகாசித்து நின்றூர்கள்.

சடகோப ஐயங்கார்

1877-ம் வருஷத்தில் திருநெல்வேலிச் சீமையில் ஒரு கொடிய பஞ்சமுண்டாயிற்று. இன்றும் இதைத் தாது வருஷப் பஞ்சம் என்ற பெயரால் மக்கள் நினைவுகூர்வார்கள். இப்பஞ்சத்தின் அகோரத்தை யும், அதன் கொடுமைகளையும் விவரிக்க எம்மாலியலாது. பஞ்சத்தோடு காலரா, விஷக்காய்ச்சல் முதலிய கொள்ளை நோய் களும் சேர்ந்துகொண்டன. மக்களின் நிலையை நாம் விஸ்தரியாமலே வாசகர்கள் நிதானித்துக் கொள்ள லாம். ஆயிரமாயிரமாக ஏழைமக்கள் மரித்தனர். நம் அத்தியக்ஷாதீனத்தில் வடக்கே ராமநாதபுரம் தொடங்கி தெற்கே கன்னியாகுமரிவரை கடற்கரைப் பிரதேசங்களில்தான் மரணமானவர் களின் தொகை மிகுதி. பசி பட்டினியினல் வாடிய மக்களுக்கு அன்ன மளித்து உயிரைக்காக்கக் கிறிஸ்தவ மிஷன்களையும் சுதேசக் கிறிஸ்தவ சங்கங்களையும் தவிர யாரும் முன் வரவில்லை. பிணியால் வதங்கிய ஏழை நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்ய மிஷன் ஆஸ்பத்திரிகளைத் தவிர வேறு ஏற்பாடுகள் கிடையா. பெற்றோரை இழந்த எண்ணிறந்த அநாதைக் குழந்தைகளுக்குக் கஞ்சிவார்க்க 'மிஷனெரித் தாய் மாரை'யன்றி வேறு யாருண்டு? சர்க்காரும், அங்கங்கே ஏற்பட்ட சில கழகங்களும் முன் வந்தும், அவர்களது ஒத்தாசைகளும் மிஷனெரிமாரின் வழியாகவே செல்லக்கூடியவாயின. இதுபற்றிக் கனம் கால்ட்வெல் அத்தியக்ஷர் "இங்கிலாந்திலும் இந்தியாவி லும் கிறிஸ்தவர்கள் தங்கள் பணத்தாலும், உதாரத்துவ ஈகையினலும், இரக்கம் காண்பித்து, தங்கள் சுய ஜாதியாராலும், மதத்தினராலும் புறக் கணிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு ஒத்தாசை செய்தார்கள்" என்றெழு தினர்.

1877-ம் வருஷப் பஞ்சம்

கிறிஸ்தவ அன்பு

கிறிஸ்தவர்கள் செய்த இவ்வொத்தாசையின் பயனுய் ஆயிரக்கணக் கானவர்கள் S. P. G , C. M. S. சங்கங்களின் கிறிஸ்தவ சபைகளில்

அங்கத்தினராயினர். நாசரேத் சேகரத்திலும் மூலக்கரை, பிள்ளையன் மனை, வடக்கூர், உடையார்குளம்சேரி, தைலாபுரம், முதலைமொழி, பன்றிமடல் பட்சேரி, ஆசீர்வாதபுரம் முதலிய இடங்களில் 1877—1880ம் வருஷங்களில் சபைகளுண்டாயின. முதலைமொழியில் 1877-ல் சபை உண்டானது. முதன் முதலாக அச்சபையில் 24 பேர் 1878 ஜூன் மீ 9-ம் வ கனம் மார்காஷிஸ் ஐயரிடம் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

முதலைமொழி

ஆசீர்வாதபுரத்தில் 1878 துவக்கத்தில் பலர் ஆயத்தக்காரரானார்கள். அவர்களில் பத்துப் பேருக்கு ஐயர் 1879 ஏப்ரில் 4ல் ஞானதீக்ஷை கொடுத்தார். தைலாபுரம் கிறிஸ்தவ சபை 1880 மே 16ம் வ பரிசுத்தாவியின் திருநாளன்று, அவ்வூராரில் 10 பேர் ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து, தோன்றிற்று. சமயத்தைப் பயன்படுத்துகிறவர்களான ரோமான்சபை அதிகாரிகளும் முன்வந்து பல ஆதித்திராவிடச் சபைகளை உண்டாக்கினர். உடையார் குளம் பட்சேரியிலுள்ள சில கிறிஸ்தவர்கள் இக்காலத்தில் ரோமானித்தரால் இழுப்புண்டு அவ்வூரில் ஒரு சிறிய ஆதித்திராவிட ரோமானித்தச் சபையை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று மார்காஷிஸ் ஐயர் எழுதுகிறார்.

1877 ஆம் ஆண்டு இறுதியில் அநாதைக் குழந்தைகளுக்கென கனம் ஐயர் ஓர் விடுதி யமைத்தார். முதன் முதலில் இவ்விடுதி இன்று ஹைஸ்கூல் கம்பவுண்டில் தலைமையாசிரியர் வீட்டுக் (கச்சேரி பங்களா) கருகில் அக்காலம் நின்ற ஓர் பிரமாண்டமான * ஆலமரத்தினடியில் அமைக்கப் பட்டது. பெற்றோரை யிழந்து அநாதைகளாய்ப் பசிக் கொடுமைக்கு ஆளாகின்ற ஏராளமான சிறுவர் சிறுமியர் அச்சாலையில் சேர்க்கப்பட்டார்கள். அடுத்த வருஷத்தில் (1878) திரித்துவத் திருநாளன்று இப்போது கைத்தொழிற்சாலை இருக்கும் கம்பவுண்டில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களுக்கு அவ்வநாதசாலை மாற்றப்பட்டு கைத்தொழிற் கல்வி ஆரம்பமாயிற்று.

அநாதைச்சாலை

இது முதல் அது மிகுந்த வளர்ச்சியுற்று, தென்இந்தியாவுக்கே ஓர் திலகமென விளங்கலாயிற்று. இதுபற்றி பின்னும் எழுதுவோம். இவ்வநாதைச்சாலையினின்று அநேக பையன்களும் பெண்களும் கிறிஸ்துவின் அன்பை அறிந்து, காலாகாலங்களில் சபையில் சேர்க்கப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள். இவ்விதம் சபையில் சேர்க்கப்பட்ட ஒரு சிறுவனைப்பற்றி மார்காஷிஸ் ஐயர் வெகுநாள் கழித்து தாம் எழுதிய ரிப்போர்ட் ஒன்றில் பினவருமாறு குறிப்பிட்டார் :

* இம்மரம் சுமார் 15 வருஷங்களுக்கு முன்தான் கனம் ராண்ட்ல் ஐயரால் வெட்டப்பட்டது.

"1880 வருஷம்போல் ஒரு பண்டாரச் சிறுவன் அநாதைச்சாலையில் அனுமதிக்கப்பட்டான். சில நாட்கள் கழித்து அச்சிறுவன் இங்கு வசிக்க விருப்பமில்லாதவனாய் ஓடிவிட்டான். நான் அவன் பின்னாலே சென்று தேடியலைந்து, கடைசியில் அவனைக் கண்டுபிடித்துத் திரும்பக் கூட்டிக் கொண்டு வந்தேன். அவன் ஞானஸ்நானம் பெற்றபின் அவனைக் கல்கத்தாவுக்கு அனுப்பி, * மகாகனம் ஒயிட்ஹெட் அத்தியக்ஷரவர்களிடத்தில் அவன் வேதசாஸ்திரக் கல்வி கற்றபின், ஆண்கள் போர்டிங் பாடசாலைத் தலைவராக நியமித்தேன். இதை எழுதுகிற இன்று (1904) கால் நூற்றாண்டுக்கு முன் அஞ்ஞானச் சிறுவனாக நான் சேர்த்துக்கொண்ட பையனான அதே குருவிடம் பரிசுத்த யோவான் ஆலயத்தின் திருப்பீடத்தண்டை முழங்காலில் நின்று ஜீவ அப்பத்தை வாங்கியுட்கொண்டேன்". கனம் மார்காஷிஸ் ஐயரால் இவ்வண்ணம் எழுதப்பட்ட சிறுவனே கனம் ஈனமுத்து யோசேப்பு ஐயர். [இவரைப்பற்றிப் பின்னால் கவனிப்போம்] ஊழியம் மேற்சொன்னவாறு விருத்தியடைந்து கொண்டேவந்தது.

**ஈனமுத்து யோசேப்பு**

எனினும் சில சபைகளில் மறுதலிப்புகளும் காணப்பட்டன. கோமாளிக்குடியிருப்பு, செம்பத்து (செம்பூர்) என்றவிரு கிராமங்களிலுமிருந்த சிறு சபைகள் மறுதலித்துப்போகவே, 1883ம் வருஷம் அச்சபைகள் டாப்பினின்று நீக்கப்பட்டன. இக்காரியம் கனம் மார்காஷிஸ் ஐயருக்கு மிகுந்த துயரத்தைத் தந்தது. எனினும் ஊக்கங் குன்றாமல் ஆத்தும வாஞ்சையாலூக்கப்பட்டு எந்நேரமும் மிகுந்த ஊக்கத்துடன் தம் வேலையைச் செய்துவந்தார்.

**மறுதலிப்பு**

1883-ம் வருஷத்தில் கோமாளிக்குடியும், செம்பத்தும் பின்வாங்கிப் போயினும், உடையார்குளத்தில் "மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று". 1882 முதலே உடையார்குளம் ஒரு சேகர உப பிரிவின் தலைமை ஸ்தானமாக்கப்பட்டிருந்தது (Sub-Station). கனம் ஆரோன் பிச்சமுத்து ஐயர் சேகர விசாரணை நடத்தி வந்தார். சில வருஷங்களுக்குமுன் (நாம் மேலே கண்டபடி) மிகுதியானவர்கள் இந்துக்களாயிருந்தாலும் இவ்வருஷத்தில் 'கிட்டத்தட்ட ஊரார் முழுவதும்' கிறிஸ்தவர்களாகிவிட்டனர். அவர்கள் இந்துக்களாயிருந்த காலத்தில் அங்கு ஐந்து விக்ரகக் கோவில்கள் இருந்தன. இக்கோவில்களுக்குப் பிராமணருடைய ஆதரவு இருந்துவந்தது. இவைகளில் இரண்டு கோவில்கள் சுமார் ரூ. 1000 செலவில் கட்டப்பட்ட கற்கோவில்கள். அவர்கள் கிறிஸ்தவர்களானபின் அக்கோவில்கள் தங்கள் மத்தியிலிருந்தால் தங்களில் சிலருக்கு அவை "கண்ணி"யாகலாம் என்று எண்ணி,

* சென்னை மகாகனம் ஒயிட்ஹெட் அத்தியக்ஷர் அபிஷேகம் பெறுமுன் கல்கத்தா பிஷப்ஸ் காலேஜ் பிரின்சிபாலாகவிருந்தார்.

அவற்றை இடித்துத் தகர்த்துவிட்டு, அக்கோவில்களிலுள்ள விக்ரகங்களில் பதினைந்து உருப்படிகளை மர்காஷிஸ் ஐயருக்கு ஒப்பு வித்தார்கள். 1883-ல் சபையின் தொகை 398. இவர்களில் 290 பேர் ஞானஸ்நானம் பெற்றவர்களும் மீதி 108 பேர் ஆயத்தக்காரருமாயிருந்தார்கள். நற் கருணைக்காரர் 39 பேரே. அவர்களுக்குக் கடவுளை வணங்குவதற்குப் போதிய இடமுள்ள ஆலயம் அவசியமாயிருந்தது. ஆகையினால் ரூ. 2000 செலவில் ஒரு ஸ்திரமான ஆலயக்கட்டடம் கட்டத் தீர்மானித்துத் தாங்கள் இதில் ரூ. 500 கொடுக்க உடன்பட்டார்கள். புதிய கிறிஸ்தவர்களை உற் சாகப்படுத்துவதில் ஆர்வங்கொண்ட மர்காஷிஸ் தாய்ச் சங்கத்தாருக் கெழுதி மீதி ரூ. 1500ஐக் கொடுக்க உடன்பட்டார்.

உடையார்குளம் சபை

1885-க்குப் பின் ஆழ்வார்திருநகரி பிராமணர், வேளாளர் குலத்த வரினின்று கிறிஸ்துவை அண்டிக்கொள்ளச் சிலரேனும் முன்வருவது கூடாததாயிற்று என்று பார்த்தோமல்லவா? அக்குலத்தவர் பின்வாங்க ஆரம்பித்தபோது, ஆண்டவர் தமது மந்தையின் ஆடுகளாக வேறு குலத் தினரைச் சேர்க்கச் சித்தங்கொண்டார். அழைக்கப்பட்டவர்கள் சாக்குப் போக்குச் சொன்னபோது 'வழிச்சந்திகளிலும், பெருவழிகளி'லுமிருந்து விருந்துக்கு ஆட்கள் அழைக்கப்பட்டதுபோல நாசரேத் சேகரத்திலும் நடந்தது. 1886 முதல் 1898 வரை பள்ளர், பறையர், இடையர், மறவர் என்ற ஜாதியினரில் ஏராளமான பேர் திருச்சபையில் சேர்க்கப்பட்டார்கள்

1888-ல் குருகாட்டூரிலும், பாற்குளத்திலும் சிலர் கிறிஸ்துமார்க்க ஆராய்ச்சியாளரானார்கள் இவர்களுக்குப் பிராமணரால் கொடுந் துன்பம் உண்டானபோது மர்காஷிஸ் ஐயர் தலையிட்டு அவர்களுக்கு இலகுவுண்டா கும்படி செய்தார். அடுத்த வருஷம் குருகாட்டூரார் ஏராளமாய்க் கிறிஸ் துவை ஏற்றுக்கொண்டார்கள். இவர்களை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப் படுத்துவதற்காக ஒரு விசாரணை உபாத்தியாயரும், ஒரு குருவானவரும் அனுப்பப்பட்டார்கள். இவ்விருவரும் குருகாட்டூரிலேயே வதிந்து ஜனங் களுக்குக் கிறிஸ்தவ அறிவை ஊட்டினார்கள். நாசரேத் உதவி மிஷனெரி கனம் விக்கர்ஸ் ஐயர் அவர்களைச் சோதித்து ஒப்புக்கொண்டதின்பேரில், மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷரை வரவழைத்து 1889-ம் வருஷம் அக்டோபர்மீ 28-ம்வ மகத்துவமான ஞானஸ்நான ஆராதனை நடத்தப் பட்டது. இன்றும் குருகாட்டூர் ஆலயம் இருக்கும் பூமிக்கருகில் ஓடும் ஓடை ஒன்றின் மேலாகப் பெரியதோர் பந்தல் அமைத்து சகல ஏற்பாடுகளும்

**குருகாட்டூர்**

செய்யப்பட்டன. மகாகனம் அத்தியக்ஷகர்களும், குருமாரும் ஜனங்களால் எதிர்கொண்டழைக்கப்பட்டனர். மர்காஷிஸ், விக்கர்ஸ் என்ற ஐரோப்பிய குருமாரும் எம். ஏசுவடியான் முதலாய ஆறு இந்திய குருமாரும் அன்றைத் தினம் 303 ஆத்துமாக்களை கிறிஸ்துசபையின் அங்கங்களாக ஞானஸ்நானத்தின்மூலம் சேர்த்தார்கள். ஒவ்வொரு ஆளும் ஞானஸ்நானம் பெற்றதும் அவருடைய பழைய பெயர் அடிக்கப்பட்டுப் புதிய கிறிஸ்தவப் பெயர் எழுதப்பட்டது. அன்று குருகாட்டூரில் அவ்வூரார் ஒருநாளும் கண்டிராத குதூகலமும் உற்சாகமும் காணப்பட்டன. அந்நாள் அவர்கட்கு ஓர் நன்னாள். அன்று இரவில் விசேஷித்த சத்காலக்ஷேபங்களும், பிரசங்கங்களும் நடைபெற்றன. இம் மகோற்சவத்தைச் சுற்றி நின்று கண்ணுற்ற ஏராளமான இந்துக்களுள் ஓர்வித பரபரப்பும் பயமும் உண்டாயின.

மறுபடியும் 12 நாட்களுக்குப் பின் நவம்பர்மீ 10-ம்உ மேலும் 98 பேர் கனம் மர்காஷிஸ், விக்கர்ஸ் ஐயர்மாரால் அதே இடத்தில் ஞானஸ்நானத்தின் மூலம் சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

சிலுவைக்கு இவ்வளவான பெரு வெற்றி கிடைத்ததை இந்துக்களால் சகிக்கக் கூடவில்லை. ஹிந்துமிராசுதார்கள் ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு வேலை கொடுக்க மறுத்தார்கள். இன்னும் பல இன்னல்களையும் விளைவித்தார்கள். இவற்றிலெல்லாம் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவர் காட்டிய பொறுமையைக் கடைப்பிடித்தார்கள். எனவே 1890 ஆரம்பத்தில் பல பொய் வியாஜ்யங்கள் ஜோடிக்கப்பட்டுக், கிறிஸ்தவர்கள்மீது நியாயஸ்தலங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. முடிவில் ஏழை மக்களில் பலர் 4 முதல் 6 மாதக் கடுங்காவல் தண்டனை அடைந்தார்கள். அவர்கள் சிறைச்

**குருகாட்டூர் துன்பம்**

சாலைக்கு இழுத்துச் செல்லப்பட்ட நாளன்று மற்றக் கிறிஸ்தவர்களை விளித்து "சகோதர சகோதரிகளே கர்த்தருக்குள் தைரியமாயிருங்கள். சபையில் ஒருவரோடொருவர் சமாதானமாயிருங்கள். நம்முள் ஏழைகளாயிருப்பவர்களைத் தாங்கி ஆதரியுங்கள். திருச்சபைக் காணிக்கை முதலியவற்றைப் பாக்கியில்லாமல் ஒரே மொத்தமாய்ச் செலுத்திவிடுங்கள். வருகிற கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையை மிகுந்த உற்சாகத்தோடும், பயபக்தியோடும் கொண்டாடுங்கள்" என்று ஆலோசனைகூறி வழியனுப்பிக்கொண்டார்கள். ஜெயிலிலும் அவர்கள் ஜெபத்திலும், நம்பிக்கையிலும் நிலைத்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் அடிக்கடி உபவாசித்து ஜெபிப்பது வழக்கம். கனம் மர்காஷிஸ் ஐயர் கிறிஸ்தவர்கள்மீது விதிக்கப்பட்ட கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பு நியாயமற்றதென மேல் கோர்ட்டு

க்கு அப்பீல் மனுக்கொடுக்கவே, அக்கோர்ட்டார் மனுவை விசாரித்துக் கிறிஸ்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு நியாயமற்றது என்று தீர்ப்புக்கூறி அவர்களை விடுதலை செய்ததுமன்றி, துன்புறுத்தினோரைக் குற்றமுள்ளவராகக் கண்டு அவர்களுக்குக் கடுங்காவல் தீர்ப்பு விதித்தார்கள்.

**மணத்தி சுப்புக்கோன்**

குருகாட்டூரார் ஞானஸ்நானம் பெறுமுன்னரே தாங்கள் கேட்டறிந்த சத்தியத்தை மற்றவர்களுக்கும் கூறவேண்டியது தங்கள் கடமை என்று உணர்ந்து அதை நிறைவேற்றினார்கள். அவர்களது உழைப்பின் பயனாய் மணத்தி கோன்கள்மாரில் சுப்புக்கரையாளர் என்பவர் தம் மனத்தில் அசைவுகொண்டார். அவர் அவ்வூரில் தம் ஜாதியாரால் நன்கு மதிக்கப்பட்டு அவர்களின் தலைவராகவும் திகழ்ந்தவர். அக்கால அளவில் ஓர் சிறந்த கல்விமானுமாவர். கிறிஸ்தவராகுமுன் ஓர் வைராக்கிய இந்து பக்தனாக விளங்கினார். அவரோடு சேர்ந்து அவரது குடும்பத்தினரும் மற்றொரு வீட்டாரும் கிறிஸ்தவராக விரும்பித் தங்கள் நன்னோக்கத்தை வெளியிடவே அவர்களுக்குத் துன்பமுண்டாயிற்று. புடமிட்டுப் பரீக்ஷிக்கப்பட்டபின் குருகாட்டூர் ஆலயத்தில் 1890-ம் வருஷம் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

**தென்திருப்பேரி சுப்புக்கோன்**

அவ்வாறே வேறொரு சுப்புக்கோன் தென்திருப்பேரியில் கிறிஸ்துவின் அன்பால் கட்டுண்டார். இவரும் ஒரு முக்கியஸ்தரே. ஊர்க்கோவிலில் ஓர் பங்கு இவருக்குண்டு. ஒரு நாள் இவர் தெருப்பிரசங்கிமாரின் பிரசங்கத்தைக் கேட்டு உணர்வடைந்தார். கடையனோடைக்குச் சென்று கனம் ஆபிரகாம் ஐயரிடம் தன்னை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்று வேண்டினார். ஆனார் ஐயர் அவரது உறுதியைச் சோதிக்கவெண்ணித் தாமதித்தார். இதற்கிடையில் சுப்புக்கோன் உபத்திரவத் தீயிலிடப்பட்டார் அவரது ஆடுகளில் சில களவாடப்பட்டன. பல பவுண்டுக்குள்ளகப்பட்டன. பல தடவைகளில் பொய்க் கேசுகளில் மாட்டி வைக்கப்பட்டார். இவ்வளவிலும் உறுதி குலையாது நின்றார். எனவே இவருடன் இவருடைய மனைவி மக்களும் உறவினரான வேறு எழு வீட்டாரும் 1890-ம் வருஷம் நாசரேத் பரிசுத்த யோவான் ஆலயத்தில் ஓர் ஆராதனையில் ஆயத்தக்காரராகச் சேர்க்கப்பட்டார்கள்.

**தேவமார்**

இவை தவிர ஆழ்வார்திருநகரி தேவமாருள் 1895-ல் ஆவியானவரின் கிரியை ஆரம்பமாயிற்று. அவ்வருஷம் அவ்வூரிலும், பிடாநேரி, தென்திருப்பேரி, கல்லாம்பாறை, மழவை, வெள்ளரிக்காயூரணி முதலியவிடங்களிலும் அம்மரபினரில் பலர் கிறிஸ்துவைச் சேர்ந்து கொண்டார்கள். ஆழ்வார்திருநகரியில் கோபங்கொண்ட இந்துக்கள் தேவாலயத்தைத் தீக்கிரையாக்

கினர். எனினும் அடுத்த வருஷம் ஆலயம் எடுத்துக் கட்டப்பட்டு கூரை ஓடுகளால் மூடப்பட்டது.

**மழவைத் தேவமார்**

மழவைத் தேவமார் மார்க்கத்துக்கு வந்ததுபற்றி எம். ஏசுவடியான் ஐயர் ஓர் விவரணம் எழுதியுள்ளார். என்னெனின்: "30 வருஷங்களுக்கு முன் கனம் பிரதர்ட்டன் காலத்தில் மழவையில் தேவமார்களில் சில கிறிஸ்தவக் குடும்பங்களிருந்தன. ஆனால் அவர்களில் இரு விதவைகளான பெண்களைத் தவிர, மற்றனைவரும் சோதனைகளைத் தாங்கவியலாது மருள விழுந்து போய் விட்டார்கள். இவ்வருஷத்தில் (1892)* அவர்கள் இன்னும் சிலரோடு (சுமார் 100 பேர்) சபையில் சேரவிரும்புகிறார்கள். அவர்கள் உறுதியற்றவர்களாதலால் அவர்களுக்குப் பல நிபந்தனைகள் விதித்தோம். அவையாவன (1) வருங்கால உறுதிப்பாட்டுக்கு அடையாளம ஏதாவது தரவேண்டும. (2) ஒரு ஜெபாலயம் தாங்களே கட்டவேண்டும், அல்லது ஜெபாலயக் கட்டடச் செலவு ரூ. 50 தரவேண்டும். (3) ஓய்வுநாளைக் கைக்கொள்வோம் என்று வாக்குச் செய்வதவசியம். (4) ஒழுங்காக மற்ற ஆராதனைகளுக்கு வருவது தவறலாகாது. (5) முதற்பலன், சங்க காணிக்கைகளை ஒழுங்காய்ப் படைக்கவேண்டும். (6) பிள்ளைகளை ஒழுங்காய்ப் பள்ளிக்கனுப்புவது. (7) திருச்சபை சட்ட திட்டங்களுக்கும், கிரம சிக்ஷைகளுக்கும் உள்ளடங்குவது. அவர்களுக்கு இந்நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மனமில்லாதபடியால் போய்விட்டார்கள். ஆனாலும் திரும்பவும் வந்து மேற்படி நிபந்தனைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டினர். நான் மறுத்துவிடவே வர்த வழி திரும்பினார்கள். மறுபடியும் மூன்றாம் விசையாக வந்து நிபந்தனைகளுக்குட்பட ஒப்புக்கொண்டார்கள். கனம் மர்காஷிஸ் ஐயருக்கு அவர்களைக்காண மிகுந்த மகிழ்ச்சியுண்டாயிற்று. மிஷனிலிருந்து ஆலயக் கட்டுமானத்துக்காக ரூ. 25 கொடுக்கப்பட்டு ஆலயம் கட்டியாயிற்று. எனினும் அவர்களை ஆயத்தக்காரராகத் தானும் இன்னும் சேர்த்துக்கொள்ளவில்லை." * 1892-ம் வருஷத்தில் கனம் ஏசுவடியான் ஷை மழவை மக்களுக்குக் கொடுத்த நிபந்தனைகளை அவர்களில் சிலர் காத்துக்கொண்டமையால் அன்னோர்க்கு 1895-ல் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஆனால் என்னே மனுஷனின் உறுதி! மறு வருஷமே ஒழுங்கீன விவாகம் முதலிய காரணங்களால் அவர்களனைவரும் சபையைவிட்டு நீக்கப்பட்டார்கள் !!

இதன்பின் 1905-ம் வருஷத்தில் தென்திருப்பேரி, அகப்பைக்குளம், வாழையடி, வெள்ளமடம், மணல்குன்று என்றவிடங்களில் பலர் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்ததாக ரிக்கார்டுகளில் காணப்படுகிறது. மற்றப்படி

* M. D. C. Report 1892.

வருஷந்தோறும் சேகரம் முழுவதிலும் இடைக்கிடையே பருவங்கடந்தவர்களின் ஞானஸ்நான ஆராதனைகள் நடத்தப்பட்டே வந்தன.

இவ்வித சிறந்த ஊழியம் நடைபெறக் காரணங்கள் எவை என ஆராய்வது நன்று.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்த நாசரேத் சுயாதீனப் பிரசங்கிமார் கூட்டம் உற்சாகமான உத்தம சேவையாற்றிற்று. இதற்குதவியாக 1878-ல் பெண்கள் சுயேச்சை சுவிசேஷப்படை (Women's Voluntary Evangelistic Band) என்றொரு சங்கம் உண்டாக்கப்பட்டது. இக்கூட்டத்தாரும் ஒவ்வுநாட்தோறும் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷப் படை முயற்சி வேலையிலீடுபட்டார்கள். இவை தவிர 'S. P. G. மிஷன் அத்தியக்ஷ சுவிசேஷச் சங்கம்' (Bishop's S.P.G. Evangelistic Band) மகாகனம் மோர்லி அத்தியக்ஷரவர்களால் 6—1—1903ல் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தில் கனம் N. முத்தையா ஐயர் தலைவராயிருந்தார். இக்கூட்டத்தில் எழு அங்கத்தினர்களிருந்தார்கள். *அவ்வெழுவரும் 5 ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஒருவர் நாம் முன்பு சந்தித்த சடகோப ஐயங்கார் (B A ,L.T.) இப்போது அவர் ஆர்தர் பால் என்ற கிறிஸ்தவப் பெயரைத் தரித்திருந்தார். வேறொருவரும் பிராமணரே. இவர் சைவப் பிராமணராயிருந்து கிறிஸ்தவரானவர். மற்றவர்களில் ஒருவர் †நாயுடு; இன்னுமொருவர் வேளாள வகுப்பினர். மூன்றுமவர் மறவர் குலத்துதித்தோர். இவ்விதம் பல ஜாதியினர் கலந்த கூட்டமாயிருந்தது நன்மைக்கேதுவாயிருந்தது- வெளியுலகத்திற்கு நமது மார்க்கம் 'பொதுவானது' என்பதை ரூபிக்கவும், கூட்டத்தின் அங்கத்தினர் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக ஆகாரம் அருந்திச், சிநேகத்திலும், சகோதர அன்பிலும் ஒன்றுபட்டவர்களாயிருந்ததின்மூலம் கிறிஸ்தவ சகோதரத்துவத்தைப் பேச்சளவில் மட்டுமல்ல, நடைமுறையிலும் காட்டக் கூடியதாயிற்று. அவர்கள் உயர் ஜாதி இந்துக்களுடன் அனுதாபமும் நெருங்கிய தொடர்பும் கொள்ளவும் சாத்தியப்பட்டது. இன்னமும் தங்கள் 'ஜாதி அபிமானத்தை'க் கைவிடாதிருக்கிற கிறிஸ்தவர்கள் இக்கூட்டத்தாரின்று சிறந்த முன்மாதிரியைக் கற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் உண்டாயிற்று. ஆர்தர் பால் (சடகோப ஐயங்கார்) சுவிசேஷ வேலையில் மிகவும் ஊக்கங் காண்பித்தார். அவர் பட்டதாரியும், இந்து மார்க்கத்தை நன்கு கற்றறிந்தவராயுமிருந்தமையால் புறமதஸ்தருடன் அதிகாரத்துடனும் தன்னம்பிக்கையுடனும் பேசக்கூடியவராயிருந்தார்.

அத்தியக்ஷர் S. P. G. சுவிசேஷக் கூட்டத்தார்

* P 92. S. P. G. Report for 1901

† இவரே கனம் N. முத்தையா ஐயர்

இந்தக் கூட்டத்தின் நோக்கம் சுவிசேஷஊழியம் மட்டுமன்று. எதிர் காலக் குருக்களைப் பயிற்றுவிக்கும் ஓர் சாதனமாகவும் இது விளங்கிற்று. *“குருத்துவ ஊழியப் பயிற்சி ஸ்தலமாக இப்பவுஞ்சு ஓர் சிறந்த பள்ளிக்கூடம். இப்படிப்பட்ட ஓர் பள்ளிக்கூடத்தில் பெறும் பயிற்சி கஷ்டங்களை அனுபவிக்க ஒரு மனுஷனுக்குள்ள ஆற்றலையும், மனப்பூர்வத்தையும் திட்டவட்டமாய்ச் சோதித்தறியக்கூடியது. புறநடையில் பார்த்தால், இக்கூட்டத்தில் விவாகம் செய்த ஒருவர் வாரக்கணக்காய்த் தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து, கஷ்டமான பிரயாணங்கள் செய்யவும், பல வசதிக்குறைவுகளைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ளவும், வேளை தவறிப் பசியாற வேண்டிவரின் அந்நிலையையும் ஏற்றுக் கொள்ளவுமான பல சரீரத்திற்கடுத்த பயிற்சிகளைப் பெறுகிறார். தவிர கிறிஸ்து மார்க்கத்துக்கு விரோதமான பல ஆக்ஷேபங்களைக் கற்று, அவற்றிற்கு விடை கண்டுபிடிப்பதற்காகப் பல புஸ்தகங்களை வாசிக்கவும் அறிவில் தேர்ச்சி பெறவும் கூடியதாகிறது”.

**குருத்துவ ஆரம்பப் பயிற்சி**

இவர்கள் வருஷத்தில் 240 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். வருஷந்தோறும் இக்கூட்டத்தார் மூலமாய் S. P. G. சேகரங்கள் முழுவதிலும் சுமார் 100 பேருக்கு அதிகமாகப் புதிதாய்ச் சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

மேற்சொல்லப்பட்ட முறைகளைத் தவிர, ஸ்தாபனங்களின் மூலமாயும் ரக்ஷிப்பின் ஒளி பல இடங்களிலும் வீசிற்று. இவற்றில் பரிசுத்த லூக்கா ஆஸ்பத்திரி முதல் இடம் பெற்றது. நாசரேத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்துமட்டுமின்றி காயல்பட்டினம், காயாமொழி, திருச்செந்தூர், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், உடன்குடி முதலிய பலவிடங்களிலுமிருந்து பதினாயிரத்துக்கதிகமானவர்கள் வருஷந்தோறும் சிகிச்சை நாடி வந்தார்கள். டாக்டர், நர்சுமார், டிரசர்ஸ், கம்பவுண்டர் இவர்களின் மூலம் கிறிஸ்துவின் அன்பைக் கண்கூடாகக் கண்டது மட்டுமின்றி, செவிப்புலனாயுமுணர்ந்தனர். திரும்பிச் சென்றபின் அங்கங்கே மனந்திரும்பினவர்களின் செய்தி காதுக்கெட்டிக் கொண்டயிருந்தது.

**பரி. லூக்கா ஆஸ்பத்திரி**

அநாதை, கைத்தொழிற்சாலைகளினின்றும் புறமதஸ்தரான அநேக பிள்ளைகள் கிட்டத்தட்ட மாதந்தோறும் சபையின் மக்களாகச் சேர்க்கப்

---

* Canon C. P. Gnanakkan's report in quarterly report of the M. D. C. 1902. P. 12.

In 1902 Rev (canon) C. P. Gnanakkan was the leader of the band & Rev. N. Muthiah was his assistant.

பட்டார்கள். இக்கால நாசரேத் சேகரப் பருவங்கடந்தவர்களின் ஞானஸ்நான டாப்பைப் பார்வையிடும்பொழுது மனத்துக்கு உண்டாகிற மகிழ்ச்சி அனுபவித்தவர்களுக்குத்தான் விளங்கும்.

மேலும் ஆண் பெண் போர்டிங் பாடசாலைகளின் மூலமாயும் அநேகர் ரக்ஷிப்பைக் கண்டடைந்தார்கள். அவற்றை யெல்லாம் விஸ்தரிக்க இடம் பற்றாமையால் விஸ்தரியாது விட்டோம். எனினும் S. P. G. 200 வருஷச் சரித்திரத்தில் கண்டுள்ள ஒரு வசனத்தை ஈண்டெழுதி, அதில் காட்டிய சம்பவத்தையும் விளக்கி இவ்வத்தியாயத்தை முடிப்போம்.

**போர்டிங் பள்ளிக்கூடம்**

அஃதென்னெனின் * "போர்டிங் பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவச் சூழ்நிலையில் வாழும் (இந்து) பிள்ளைகள் இயற்கையாகவே விக்கிரக வணக்கத்தையும், பேய்க்கோவிலாராதனைகளையும் வெறுக்கத் தலைப்படுகின்றனர். அநேகர் தாங்களாகவே மனந்திரும்புகிறார்கள். சிலர் மற்றவர்களுடைய மனந்திரும்புதலுக்குக் காரணஸ்தராகின்றனர். அவ்விதம் 1898-ல் நமது பள்ளிக்கூடத்திலிருந்து குணப்பட்ட ஒரு சிறுவனின் மூலம் ஆயர் குலத்தைச் சேர்ந்த ஒன்பதின்மர் சத்தியத்துக்குள் வழி நடத்தப்பட்டார்கள்". இங்குக் கூறப்படும் சிறுவன் கடையனோடையைச் சேர்ந்தவன். பச்சை என்ற பெயரையுடையான். பன்னிரு பிராயமுடையோன். நமது போர்டிங் பாடசாலையில்ச் சேர்ந்து படிக்கும் காலத்துப் பேய் வணக்கத்தைப் பகைத்து விக்கிரக ஆராதனையை வெறுத்தான். ரஜாக் காலத்தில் வீடு சென்றவன் தன் பெற்றோருக்கு உன்னத உபதேசங் கூறினான். பெற்றோரோ விக்கிரக வணக்கத்தார். மகன் கூற்றைக் கேட்டாரில்லை. அக்காலொருநாள் சிறுவன் விளையாடிக் கொண்டிருக்கையில் மரத்திலிருந்து விழுந்து படு காயங்களுடன் நாசரேத்துக்குச் சுமந்து கொண்டு வரப்பட்டு, சிகிச்சைக்கென்று மருத்துவச் சாலையில் அனுமதிக்கப்பட்டான்.

**பச்சையின் சாக்ஷி**

மர்காஷிஸ் ஐயர் தாமறிந்த மருத்துவ முறைகளை யெல்லாம் மிகுந்த அனுதாபத்துடனும், அன்புடனும் பிரயோகித்தும் சிறுவன் குணம்பெற வழியில்லை. அவன் மரண வாசலில் நின்று தனக்கு ஞானபிஷேகம் வேண்டும் என்று கெஞ்சினான். ஐயரவர்களும் இணங்கிப் பெற்றோர் சம்மதத்துடன் அத்தீக்ஷையின் மூலம் அவனைத் திருச்சபையின் அங்கமாக்கினார்கள். அதன்பின் மிகுந்த சமாதானத்துடனும், பூரண அமைதியுடனும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடும், தன்னைத் தம் உயிரினும் அதிகமாய் நேசித்த இயேசுபெருமானின் மீதுள்ள உறுதியான விசுவாசத்தோடும், பையனின் ஆவி பிரிந்ததைப் பெற்றோரும் உற்றோரும் கண்டார்கள். மாலையில் குருக்களும், பாடகர்களும்,

* Page 553 S. P. G. — 200 Years.

பள்ளிச் சிறுவர்களும், ஊராரிலநேகரும் கலந்து கல்லறைவரை உடன்வரச், சகல மரியாதைகளுடனும், மிகுந்த பக்திவினயத்தோடும் அவனது சடலம் நாசரேத் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பெற்றோர் தங்கள் பிள்ளையின் விசுவாசத்தைக் கண்டு தம் இனத்தவர் எழுவருடன், அவனை மீட்ட ஆண்டவர் தங்களை மீட்டுக்கொள்ள வல்லவர் என்று விசுவாசித்துக் கிறிஸ்தவர்களானார்கள்.

---

# அத்தியாயம் 9

## ஸ்தாபனச் சேவை

### (மர்காஷிஸ் ஐயர் காலம் – 2ம் பாகம்)

கனம் மர்காஷிஸ் ஐயர் காலத்தில் நாசரேத் மிஷன் சுவிசேஷ ஊழியத்தில் எத்துறைகளில் முன்னேற்றம் காணப்பட்டது என்று சொன்னோம். விசேஷமாய்க் கல்வி ஸ்தாபனங்களில் அவர் காலத்தில் அடைந்த உயர்நிலையினின்று அவர் காலமாகி 40 வருஷங்களாகியும் நம் காலத்தில் அதிக வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று கூறிவிட முடியுமோ என்பது சந்தேகமே. 1876ல் நாசரேத் சேகரத்தில் சிற்சில கிராமக் கல்வி நிலையங்களே யிருந்தன. ஆனால் அவர் மரிக்கும்போதோ நாசரேத் சேகரத்தில் இரு உயர்தரக் கலாசாலைகளும், ஒரு கைத்தொழிற் கல்வி நிலையமும், மத்திபப் பாடசாலை ஒன்றும், போதனுமுறைக் கல்லூரிகள் இரண்டும், இரு அநாதைப் பிள்ளைகளின் விடுதியும், ஓர் வேத சாஸ்திரக் கலாசாலையும், கிராமங்களில் ஆண் பெண்களுக்கான கிராமப் பள்ளிக்கூடங்களும் சேகர ஊழியத்திற்குப் பக்க பலமாயமைந்தன.

ஸ்தாபனங்கள்

நாசரேத் பெண்கள் கலாசாலை (கனம் அனி கேமரர் அம்மாளால் 1843ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டு) கனம் ஸ்கார்பரோ அம்மாள் காலத்தில் * 1862ல் 41 பெண்கள் கொண்ட நிரந்தர போர்டிங் பாடசாலையாயமைக்கப்பட்டு, 1868ல் கிறிஸ்தியாநகரம், முதலூர் என்ற ஊர்களிலுள்ள பெண்கள் போர்டிங் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்ட சமயத்தில் அப்பள்ளிகளையும் தனக்குள்ளாக்கி, இப்பிராந்தியங்களிலேயே மதிப்புக்குரிய ஓர் பெண்கள் கல்விச்சாலையாகத் திகழ்ந்தது. இந்தம்மாள் காலத்திற்றான் இப்பள்ளிக்கூடம் ஓர் மத்திபப் பாடசாலையாய் வளர்ச்சியுற்றது. 1870ல் ஸ்ட்ராஹன் ஐயர் வந்ததும், ஸ்கார்பரோ அம்மாள் கிறிஸ்தியாநகரம் பெண்களை அழைத்துச் சென்று அங்குத் தாம் 1868ல் மூடிவிட்ட போர்டிங் பாடசாலையை மறுபடியும் ஸ்தாபிக்கவே, நாசரேத் பள்ளிக்கூடம் ஸ்ரீமதி ஹாரியட் ஸ்ட்ராஹன் (Mrs. Harriet Strachan) அம்மாளின் மேற்பார்வைக்குட்பட்டு 1876 வரை (?) அவ்வம்மையாரின் அரவணைப்பிலிருந்தது 1876 டிசம்பரில் கனம் மர்காஷிஸ் ஐயர் அப்பாடசாலையின் கண்காணிப்பை ஒப்புக்கொண்டார்.

நாசரேத் பரி. யோவான் பெண்கள் பள்ளிக்கூடம்

* M. D. C. Report 1862.

தூரதிருஷ்டி கொண்ட மர்காஷிஸ் திருநெல்வேலி S.P.G. ஊழியத் துக்கனுசரணையான எதுக்களில் இதுகாறும் ஏற்பட்டிருந்த ஒரு குறைவை நிவிர்த்திக்கப் இப்பெண்கள் பாடசாலையைக் ஓர் கருவியாகக் கொள்ள லானூர். அக்காலம்வரை கடாக்ஷபுரத்தில் 1846-ம் வருஷம் கனம் C. C. கிபெர்ன் அம்மையாரால் ஸ்தாபிக்கப்பட்டு, 1854ல் பாளையங்கோட்டை மாற்றப்பட்டு சாராள் டக்கர் பெண்கள் கல்வி ஸ்தாபனத்துடன் இணைக் கப்பட்டிருந்த பெண்கள் போதனுமுறைக் கல்விச்சாலையிலேயே S. P. G. சங்கத்தைச் சேர்ந்த சபையின் பிள்ளைகளும் உபாத் திமைப் பயிற்சியடைந்து வந்தார்கள். இருப்பினும் நாசரேத், சாயர்புரம், இடையன்குடிச் சேகரங்களில் நடைபெற்ற பெண்கல்விஅபிவிருத்திச் சேவைக்குத் தேவையான ஆசிரியைகள் கிடைப்பதும் கஷ்டமா யிருந்தது. அதினுல் 1877ம் வருஷமே மர்காஷிஸ் ஐயர் நாசரேத் பெண்கள் பள்ளிக்கூடத்தின் ஒரு பாகமாகப் போதனு பயிற்சிசாலை ஒன்றை ஸ்தாபித்தார். தாம் செய்த இக்காரியம் மிகுந்த பயனுள்ளது என்பதை அவர் தீர்க்கமாய் உணர்ந்தவராய், அடுத்த வருஷத் தில் (1878) தாய்ச் சங்கத்தாருக்கு "இந்த ஜில்லாவில் பெண்களின் உயர்தாக் கல்வி விஷயத்தில் நான் எடுத்துக்கொண்ட ஓர் நடவடிக்கையைக் குறித்து எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்ளுகிறேன். போர்டிங் பள்ளிக் கூடத்தோடு சேர்த்து சர்க்கார் உபாத்திமைத்தொழிற் பரீக்ஷைக்கு ஆயத்தப் படுத்துவதற்கெனப் போதனுமுறை பயிற்சி வகுப்பொன்று ஆரம் பித்திருக்கிறேன். இப்போது அவ்வகுப்பில் பதினெட்டுப் பெண்கள் சேர்ந்து படிக்கிறூர்கள்" * என்றெழுதினூர். அவ்வருஷம் நடந்த சர்க்கார் பரீக்ஷை யில் 12 பெண்கள் கலந்து கொண்டார்கள். அவர்களில் 8 பெண்கள் முதல் வகுப்பிலும் இருவர் இரண்டாம் வகுப்பிலுமாகத் தேர்ந்தார்கள்.

**பரி. யோவான் பெண்கள் போதனுமுறைப் பயிற்சிசாலை**

1884-ம் வருஷத்தில் பெண்கள் மத்திபப் பாடசாலை சர்க்கார் பரீக்ஷை ரிசல்ற்றும் வெகு உற்சாகத்தைத் தரக்கூடியதாயிருந்தது. எழு பெண்கள் அவ்வருஷம் பரீக்ஷை எழுதி, எழு பேரும் தேறினூர்கள். அவர்களில் இருவர் இரட்டை முதல் வகுப்பிலும் (Double first classes) இருவர் முதல் வகுப்பிலும் மூவர் 3-ம் வகுப்பிலுமாகச் சித்தியடைந்திருந்தார்கள். அவ்வருஷம் பரீக்ஷாதிகாரி (Inspecting-officer) "திருநெல்வேலி யிலேயே மிகவும் முன்னேற்ற முறையில் நடத்தப்படுகிற பெண்கள் போர்டிங் பள்ளிக்கூடங்களில் இதுவுமொன்று" என்று நற்சாக்ஷி எழுதி னூர். மேலும் 1884-ம் ஆண்டு M. D. C. ரிப்போர்ட்டில் "திருநெல்வேலி

---

* M. D. C. Report 1878.

S. P. G. மிஷனில் நாசரேத்தில் மட்டும்தான் சர்க்கார் மத்திபப் பாடசாலைப் பரீக்ஷைக்குப் பெண்கள் அனுப்பப் படுகிறார்கள். ஐரோப்பிய (பெண்) மிஷனெரிகள் யாரும் அப்பள்ளிக் கூடத்தை நடத்தாதிருந்தும், மேற்குறித்தவாறு பரீக்ஷாதிகாரிகளிடம் நற்சாக்ஷி பெறத் தக்கதான ரிசல்ற்று கிடைக்கக்கூடிய அளவு அங்கு வேலை செய்கிற சுதேசிகளான ஆண் பெண் ஆசிரியர்களுக்கு மிகுந்த கண்ணியம் உண்டு. அவர்கள் சகல விதத்திலும் உற்சாகப்படுத்தப்பட வேண்டியவர்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. அடுத்த வருஷத்தில் (1885) இப்பாடசாலை சர்க்கார் அங்கீகாரம் பெற்றது. இக்கலாசாலை கனம் மர்காஷிஸ் ஐயர் வந்ததிலிருந்து வெகுவாய் அவருடைய மேல் விசாரணையிலேயே இருந்து வந்தது. இடையில் 1878-ம் வருஷத்தில் மட்டும் புதியம்புத்தூரில் பிரபல மிஷனெரியாகவிருந்து (1857 — '73), தஞ்சாவூரில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காலத்து, 1877 டிசம்பரில் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்த கனம் ஜேம்ஸ் ப்ளேமிங் கீயர்ண்ஸ் ஐயரின் மனைவியான ஸ்ரீமதி கீயர்ண்ஸ் அம்மாள் நசரை வந்து நமது பெண்கள் கலாசாலையின் தலைமை தாங்கினார்கள். ஆனால் அவர்கள் சுகவீனத்தின் காரணமாய் 1879-ல் வேலையை ராஜினாமாக் கொடுத்துச் சென்றபின், மறுபடியும் கனம் மர்காஷிஸ் ஐயரே தம் காலம் முடியும்வரை மேற்பார்வையிடலானார்.

பரி. யோவான் பெண்கள் மத்திபப் பாடசாலை

1886-ம் வருஷம் இக்கலாசாலையில் இரு விசேஷித்த முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஒன்று கிண்டர்கார்ட்டன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. உயர்தரக் கலாசாலையாக்கப்பட்டது மற்றொன்று. கனம் மர்காஷிஸ் ஐயர் இங்ஙனம் நடவடிக்கை எடுத்தது அவரது மனோதிடத்தையும் கடவுள் மீது அவர்கொண்ட விசுவாச உறுதியையும் காட்டா நின்றது. ஏனெனில் அதுவரை பெண்களின் உயர்தரக் கலாசாலை ஒன்றும் தென்னிந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டதேயில்லை. எனவே இதுவே தென்னிந்தியாவிலேயே முதற் பெண்கள் உயர்தரக் கலாசாலை. இவ்வித சிலாக்கியத்தை இவ்வூருக்களிக்கக் காரணராயிருந்த கனம் அனி கேமரர் அம்மையாருக்கும் மர்காஷிஸ் ஐயருக்கும் தீர்க்காலோசனையையும், திடநம்பிக்கையையும் அளித்த இயேசு பகவானுக்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். நாசரேத்தில் வெகுகாலம் உபதேசிகராயிருந்து 1873-ல் உதவிக் குருப்பட்டம் பெற்று 1879 வரை நாசரேத்திலும், 1879 முதல் 1885 வரை மூக்குப்பீறியிலும், மதுரையிலும் குருவூழியம் செய்த கனம் R. பெரியநாயகம் ஐயரவர்களின் புதல்வனும், 1898-ல் குருவபிஷேகம் பெற்று 1900 முதல் 1932 வரை நாச

பரி. யோவான் உயர்தரப் பாடசாலை

ரேத் செமினெரியில் சிறந்த பணியாற்றியவருமாகிய கனம் D. பெரிய நாயகம் B A உயர்தர பெண் கல்விச் சாலேயின் முதல் தலைமையாசிரியாக நியமனம் பெற்ருர். இவர்களின் தலைமைப் பதவி மிகவும் சிறந்தது என்ப தற்கு அத்தாட்சியாக முதன் முதலாவதாக மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு அனுப்பப்பட்ட 5 பெண்களும் வெற்றி பெற்ருர்கள். இது முதல் நாசரேத் பெண்கள் ஆசிரியைகளாக மட்டுமல்லாது, வாழ்க்கையின் பல துறைகளிலும் முன்னணியில் நின்று திருச்சபையிலும், தேசிய, சமூக வாழ்க்கையிலும் கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்தினர்கள். இங்கு உயர் கல்வி கற்ற அநேக பெண்கள் பள்ளிக்கூடப் பரீக்ஷாதிகாரிகளாகவும், சிலர் டாக்டர் களாகவும், சிலர் குமஸ்தாக்களாகவும், சுவிசேஷகிகளாகவும் எண்ணிறந்த பேர் உத்தம மனைவிகளாகவும், கிறிஸ்தவத் தாய்மாராகவும் விளங்குகிருர் கள். 1900-ம் வருஷம் 'முதல் நாசரேத் பெண்'ணுக B. A. பட்டம் பெற்ற ஸ்ரீமதி கெத்சி ஞானம் அம்மாளேயும், வட திருநெல்வேலியில் கிறிஸ்துவை யறியாத பின்னடைந்தோரின் மத்தியில் ஆச்சிரம வாழ்க்கை நடத்திக் கர்த் தருக்காக உத்தம ஊழியம் செய்து வரும் ஸ்ரீமதி ஜாய் சாலமோன் M.A.L.T. அம்மையாரையும் நம் நாட்டுக்களித்த பெருமையும் நமது கல்விச்சாலேக்கே யுரித்தானதால் இறைவனை வாழ்த்துவோம். இவண் 1890-ல் நாசரேத் பாடசாலைகளைப் பார்வையிட்ட ராஜதானி பிரதமக் கல்வியதிகாரி (Director of Public Instruction) எழுதிய ரிப்போர்ட்டை மொழி பெயர்த்து இதை முடிப்போம். அவர் "நாசரேத் பரிசுத்த யோவான் போதனுமுறைக் கல்விச் சாலேயிலிருந்து மட்டுந்தான் மாணவிகள் மெட்ரிக் குலேஷன் பரீட்சைக்கு அனுப்பப்பட்டு வருகிருர்கள். நாசரேத் பரிசுத்த யோவான் கலாசாலே உயர்ந்தரகக் கல்வியிலும், திறமையிலும் முதலிடத்தி லிருக்கிறது. இப்பள்ளிக்கூடத்தில் பயிற்சிபெற்ற உபாத்தினிமார் தலைமை ஆசிரியைகளாகவும், உதவி உபாத்தினிகளாயும் மற்றப் பள்ளிக் கூடங்களில் உத்தம ஊழியம் செய்து வருகிருர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிடுகிறேன்" என்று தம் ரிப்போர்ட்டில் எழுதினர்.

நம்மூர் ஆண்கள் உயர்தரக் கலாசாலே 1882-ம் வருஷத்தில் ஆங்கி லோவெர்னுக்குலர் ஸ்கூல் என்ற பெயருடன் பூரண மத்திபப் பாடசாலே யாய் ஆரம்பிக்கப்பட்டது. அஃதேற்பட்டநாள்முதல் மிஷனெரியின் பரிபூரண ஆதரவுடன் பெண்கள் கல்விச்சாலேயைப் போன்றே வளர்ச்சி யடையலாயிற்று. 1884ம் வருஷம் M. D. C. ரிப்போர்ட்டில் "ஆண் கள் மத்திபப் பாடசாலே பூரண சுய ஆதாரவுடன் விளங்குகிறது"* என்று ஐயர் எழுதினர். 1885ம் வருஷத்தில் சென்னை ராஜதானியிலேயே "முதல்" கல்விச்சாலே என்ற கீர்த்தியுமடைந்தது. ஏனெனின் அவ்

* P 34. M. D. C. Report 1886.

வருஷம் பரீக்ஷைக்கு அனுப்பப்பட்ட பையன்கள் அனைவரும் பரீக்ஷையில் தேறினார்கள். மேலும் "பையன்களுக்கு கிரேக்கப் பாஷை கற்றுக்கொடுக்கப்படுகிறது. தினமும் ஒரு மணி நேரம் கிரேக்கப் புதிய ஏற்பாட்டு வாசிப்பு வகுப்பு நடத்தி வருகிறேன்"* என்று கனம் மர்காஷிஸ் வரைந்தார்.

**ஆண்கள் கல்விச்சாலை**

இக்கலாசாலையையும் 1889ல் அவர் ஓர் உயர்தரப் பாடசாலையாக்கினார். ஆனால் அது மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷருக்கு முற்றிலும் பிரியமில்லையாதலால் அவர் அதைப் பலமாய் ஆக்ஷேபித்தார். நாசரேத்தில் ஒரு ஆண்கள் உயர்தரக் கலாசாலை ஏற்படின் அது தூத்துக்குடியிலுள்ள கால்ட்வெல் கல்லூரியின் (Caldwell College, Tuticorin) வேலைக்கு இடையூறு செய்வதாகும் என்பது அவரது எண்ணம். எனினும் மர்காஷிஸ் ஐயர் விடாமுயற்சியுடன் M. D. C. போர்டாரின் அனுசரணையைப் பெற்று தாம் எடுத்த காரியத்தில் சித்தி பெற்றார். எனவே கால்ட்வெல் அத்தியக்ஷர் வெகு பிரயாசைப்பட்டு நாசரேத் ஹைஸ்கூல் 1892ல் மூடப்படும்படி செய்துவிட்டார். **அவர் 'மிஷன் பிரச்னைகள்' என்ற தலைப்புடைய தம் கட்டுரை ஒன்றில் தூத்துக்குடிக் கால்ட்வெல் காலேஜ் விஷயத்தில் தமக்குள்ள நன்னம்பிக்கையை விவரணம் செய்து, முடிவில் † "கல்வி வெகு விரைவில் முன்னேறுகிறது. வெகு சமீப காலத்துக்குள் கிறிஸ்தவப் பட்டதாரிகளான உயரிய குழாம் ஒன்று திருநெல்வேலி நாட்டில் தோன்றும் என்று நம்புகிறேன். சில இடையூறுகள் தோன்றின. இப்போது அவையில்லாது போயினும், அவ்விடையூறுகள் தோன்றியிருக்கவே அவசியமில்லை. அவற்றில் ஒன்று நாசரேத்தில் போட்டி ஹைஸ்கூல் ஏற்படுத்த M D. C. கமிட்டிமார் கொடுத்த அனுமதி. நான் எவ்வளவோ ஆக்ஷேபணை செய்தும் சர்க்காருடைய ஆதரவும், அத்தியக்ஷ சம்மதமும் (Episcopal Sanction) சற்றேனிலும் பெறாமலே ஷை கமிட்டியார் அவ்வனுமதி கொடுத்தார்கள்" என்றெழுதினார்.

## கைத்தொழிற்சாலை

1877ம் வருஷப் பஞ்சத்தில் ஏழை மக்களில் நூற்றுக்கு 25 வீதம் மரணமானார்கள். எனவே ஏராளமான பாலர் சம்ரக்ஷணை செய்வாரில்லாமல் பசிப்பிணிக்கு ஆளாகியும் நோய்வாய்ப்பட்டும் அல்லலுற்றனர். கனம் 'மர்காஷிஸ் ஐயர் 'இந்தச் சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என்பதற்கிணங்க, அந்தச் சிறியரில் எத்தனைபேரைக் காப்பாற்ற முடியுமோ அத்தனைபேரைக் காக்கும்

* P 34. M. D. C. Report 1886.

** 'மீசை முளைத்த ஆண்பிள்ளைகளா'யிருந்த 'பள்ளிச்சிறுவரின்' (!) முரட்டுத்தனத்தின் காரணமாகத்தான் ஐயர் பள்ளிக்கூடத்தை இழக்கச் சம்மதித்தார் என்போருமுளர்.

† P 177. Reminiscences of Bp. Caldwell by J. L. Wyatt.

நோக்கமாய், நாம் ஏற்கெனவே கண்டபடி, ஆலமரத்துக்கடியில் விடுதியமைத்துப் பல அநாதைக் குழந்தைகளுக்கு அதில் அடைக்கலம் தந்தார்.

**அநாதாச்ரம ஆரம்பம்**

1877 அக்டோபர் மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட இவ்வநாதைச்சாலை முதல் இரண்டு மூன்று மாதங்களாய் வெகு போராட்டத்துடன்தான் நிலைக்கவேண்டியதாயிற்று. பணவருவாய் மிகவும் மோசமான நிலையிலிருந்தது. பணமிருந்தாலும் ஆகாராதிகள் வாங்குதற்குக் கிடைத்தில. விடுதியை முன்னின்று நடத்தத் தகுந்த ஆட்களைக் கண்டுபிடிப்பதும் மிகவும் கஷ்டமாய்க் காணப்பட்டது. அநாதைச் சிறுவரும் அடிக்கடி ஓடிவிடுவர். இப்படிப் பல தொல்லைகளினூடே, பல தடவைகளில் சோர்புற்றும், மிகுந்த சிரமத்துடன் மர்காஷிஸ் அநாதாச்ரமத்தை நடத்தினர்.

1878 ஜனுவரி மாதத்தில் சர்க்கார் பஞ்ச நிவாரண காம்ப் (Govt. Famine Relief Camp) அதிகாரிகள் ஆண்களும் பெண்களுமான 80 அநாதைக் குழந்தைகளை மர்காஷிஸ் ஐயரின் அநாதைவிடுதிக்கனுப்பினர்கள். எனவே ஐயர் பெரிய பாரத்தை ஏற்கவேண்டியதாயிற்று. ஏற்கெனவே தள்ளாடி நின்ற அநாதைச் சாலையை மூடிவிடுவதா என்று ஆலோசித்துக் கொண்டிருந்த மர்காஷிஸின் கிறிஸ்தவ சீலத்திற்கு இது ஓர் அறைகூவலாயிற்று எனலாம் (Challenge). பக்தனினுள்ளத்தில் தம் பணி யெது வென்பது தெளிவாய் விளங்கினது. 'எனக்காக வளர்த்துவிடு' என்று ஆண்டவரே பணிப்பது போலுணர்ந்தார். எண்பது சிறுவர் சிறுமிகளையும் ஏற்றுக்கொண்டார். பணத்துக்கு என்ன செய்வது? இங்கிலாந்துக்கு எழுதினர். சர்க்காருக்கும் மனுப்பண்ணினர். சர்க்காரோ உதவி எதுவும் அச்சமயம் செய்யமுடியாதென மறுத்துவிட்டனர். இங்கிலாந்துக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக மான்ஷன் ஹௌஸ் பஞ்ச நிவாரணக் கமிட்டியார் (Mansion House Famine Relief Committee) ரூ. 750 அனுப்பினர்கள். திருநெல்வேலிக் கலெக்டர் ஸ்ரீமான் J. B பென்னிங்டன் துரையும் விஜயம்செய்து ஆவன செய்ய உடன்பட்டார். 1878 மார்ச்மீ, நாம் முன் சொன்னதுபோல, தற்போது கைத்தொழிற் கல்விச்சாலை இருக்கும் கம்பவுண்டில் இரு கட்டடங்கள் கட்டவாரம்பித்தார்.

**கைத்தொழிற் கல்விச்சாலை உருவானது**

கட்டட வேலை மே மாதம் முடியவே, திரித்துவத் திருநாளன்று திறப்புவிழாக் கொண்டாட்டம் நடந்தது. ராமநாதபுரம் ஜியார்ஜ் பில்லிங் ஐயர், நாசரேத் எம். ஏசுவடியான் ஐயர், மர்காஷிஸ் ஐயர் முதலிய குருக்களும், மற்ற ஊழியரும், ஆண் பெண் பாடசாலைப் பிள்ளைகளும் மாலை 3 மணிக்குக் குரு மனையிலிருந்து புறப்பட்டுப் பவனி சென்று புதுக் கட்டடத்தை "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் விசு

வாசத்'' துடன் திறந்துவைத்தார்கள். மர்காஷிஸ் ஐயர் 'எழிய கிறிஸ்து' என்ற பொருளில் உருக்கமாய்ப் பிரசங்கித்தார். கனம் எம். ஏசுவடியான் ஐயரும் சமயத்துக்கேற்ற பிரசங்கம் ஒன்று செய்தார். இரு கட்டடங்களும் ஒன்றுக்கொன்று 120 கெஜ தூரத்திலிருந்தன. இவ்விரு கட்டடங்களும் இப்பொழுதில்லை. மேல் கட்டடம் இருந்த இடத்தில் இன்றும் அதின் அஸ்திபாரத்தைக் காணலாம். அது தற்போது ஆஸ்பத்திரியின் பேறுகால அறைக்குக் கிழக்கில் தென்வடலாகக் கட்டப்பட்டுள்ள சுவரின் கீழ்ப்புறத்தில் காணப்படுகிறது. கீழ்ப் பக்கத்திலுள்ள அடுத்த கட்டடம் இன்றுள்ள கைத்தொழிற் பாடசாலையின் சாப்பாட்டறைக்கு வடக்கில் கட்டப்பட்டிருந்தது. இவை இரு சமையலறைகளும், உணவு பதார்த்தங்கள் வைக்கும் அறைகளும், மற்றும் அறைகளும் உடையனவாய் வெகு வசதியுடன் கட்டப்பட்டிருந்தன. செலவு ரூ. 1500. அடுத்த வாரத்தில் மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷர் விஜயம் செய்தார். M. D. C. செக்ரட்டேரியான [நாசரேத்தின் பழைய மிஷனெரி] கனம் J. M. ஸ்ட்ராஹன் ஐயரும் அத்தியக்ஷரவர்களுடன் வந்து அநாதைச் சாலையைப் பார்த்துவிட்டுப் போனர்.

1880-ம் வருஷத்தின் கணக்கின்படி 59 ஆண்களும், 63 பெண்களும் பராமரிக்கப்பட்டார்கள். இவர்களில் 60 பேர் இங்கிலாந்திலுள்ள பரோபகாரிகளின் நேரான பராமரிப்புக்குட்பட்டவர்கள். அதிகாலையில் 5 மணிக்கே ஆண்களிலும், பெண்களிலும் பெரிய பிள்ளைகள் துயில் நீத்து, பெண்கள் காலை ஆகாரம் சமைப்பதிலும், ஆண்கள் தோட்ட வேலையிலு

தினசரிக் கடமைகள்

மீடுபடுவார்கள். 6 மணிக்குச் சிறு பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு எல்லாரும் ஸ்நானம் செய்து, 7 மணிக்கு ஆலயத்தில் ஆராதனை முடித்துவிட்டுப்பின் 8 மணிக்குக் காலைப் போஜனம் அருந்துவார்கள். 8-30 மணி முதல் 12 மணி வரை தொழிற் கல்வியும், வேதபாடம், தமிழ், கணக்கு முதலிய பாடங்களும் போதிக்கப்பட்டபின் 12 மணிக்கு அவர்களுக்கு மத்தியான ஆகாரம் கொடுக்கப்படும். மாலையில் பெண்களுக்குத் தையலும், நூல் நூற்றலும் கற்பிக்கப்படும். ஆண்களுக்கு நெசவிலும், தச்சுவேலையிலும் பயிற்சி கொடுக்கப்படும். இதுதவிர ஆண்பாலாரில் சிலர் தோட்டவேலையிலீடுபட்டு 100 மாங்கள் வைத்து வளர்த்தனர். சிலர் தையல் வேலை சற்றனர். பெண்பாலாரிற் சிலர் பூத்தையலிலும் பின்னல் தையலிலும் கைதேர்ந்தார்கள். அநாதை சாலையின் வளவைச் சுத்தமாய் வைப்பதில் இளஞ்சிறுர் ஊக்கம் காண்பித்தார்கள். பெரிய பையன்கள் பாதைகள் அமைப்பதும், சிறு சிறு கட்டடங்கள் கட்டுவதுமான வேலைகளைச் செய்து பள்ளிக்கூடத்தை அழகுறச் செய்தார்கள்.

1884-ல் முதன் முதலாகத் தையல் இயந்திரம் வாங்கப்பட்டது. அது முதல் தையல் பயிற்சி (Art of Tailoring) இக்கல்விச்சாலையின் முக்கிய அம்சங்களிலொன்றாயிற்று. 1887 முதல் சித்திரம் வரைதலும், அதைச் சேர்ந்த மற்றச் சிற்ப சாஸ்திரங்களும் இணைக்கப்பட்டன. ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குறைந்த பக்ஷம் இரு தொழில்கள் கற்பிக்கப்பட்டன.

1897-ல் S. P. G. சங்கத்தார் நாசரேத் அநாதைச் சாலைக்காக 450 பவுன் கொடுத்துதவி, அவ்வொத்தாசை 3 வருஷகாலமாகக் கொடுக்கப்படத் தீர்மானித்தார்கள். அவ்வருஷம் 202 ஆண் பெண் பிள்ளைகள் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். 1900-ம் வருஷத்தில் மேற்சொன்ன பண உதவி நின்றுவிடவே கனம் மர்காஷிஸ் ஐயர் மேலும் 3 வருஷத்துக்கு அச்சகாயம் நீடிக்க வேண்டுமென்று சங்கத்தாருக்கு மனுச்செய்து அவ்வண்ணமே அது வரப் பெற்றார். இவ்வுதவி ஒவ்வொரு 3 வருஷ முடிவிலும் புதுப்பிக்கப்படலாயிற்று.

S. P. G. பணச் சகாயம்

1900-ம் வருஷத்தில் 283 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டார்கள். கிறிஸ்தவர்களானாலும், இந்துக்களானாலும் S. P. G., C. M. S. குருமாரின் சிபார்சுக் கடிதங்களுடன் வரும் எந்த அநாதைச் சிறுவனும் சேர்த்துக் கொள்ளப்பட்டான். சில கிறிஸ்தவச் சிறுவருக்கு S. P. C. K. பணச் சகாயம் (Scholarship) கிடைத்தது; மற்றும் சிலருக்கு இங்கிலாந்திலிருந்து தனிப்பட்ட ஹோதாவில் பல பரோபகாரிகளின் பணவுதவி கிட்டியது. ஹிந்து மாணவரில் சிலருக்கு சர்க்கார் சகாயம் செய்தார்கள். கற்றுக் கொடுக்கப்பட்ட தொழில்கள் தச்சுவேலை, கொல்வேலை, பிரம்புப் பின்னல், தையல், பூத்தையல், நூல் நூற்றல், நெய்தல், சித்திரம் வரைதல், மாடல் டிராயிங், ஜியாமெட்ரி, வர்ணம் தீட்டல், டைப் அடித்தல், *சுருக்கெழுத்து (Short-hand), துணி தைத்தல் முதலியன. இவற்றுடன் போதனாமுறையும் (Teachers' Training) சேர்க்கப்பட்டது. போதனா பயிற்சி மாணவர் பயிற்சி அடைவதற்கான †மாடல் ஸ்கூல் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. டிராயிங், வேத பாடம், இலக்கியப் பாடங்கள் (Literary education) இம்மூன்றும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயமாய்க் கற்பிக்கப்பட்டன. மற்றப்படி தொழிற் கல்விப் பாடங்களில் ஒவ்வொரு மாணவனும், மாணவியும் தன்தனக்கு இஷ்டமானதைத் தெரிந்துகொள்ளலாம். உபாத்திமைப்

போதனா பயிற்சி

* தேர்ச்சியுற்ற பையன்கள் நிமிஷத்திற்கு 50 வார்த்தைகள் எழுதக்கூடியவர்களாயிருந்தார்கள் (M. D. C. Report 1895)

† இது ஏற்கெனவே 1819ம் வருஷத்தில் ஹாப் ஐயரால் ஸ்தாபிக்கப்பட்ட கிராமப் பள்ளிக்கூடமாகும்.

பயிற்சியில் முதலில் லோயர் செக்கண்டரி மட்டும்தான் கொடுக்கப்பட்டது. பின்னல் 1900-ல் தூத்துக்குடியிலுள்ள உயர்தரப் போதனுபயிற்சி வகுப்புகள் (Upper Secondary Training) மர்காஷிஸ் ஐயரின் முயற்சியினல் நாசரேத்துக்கு மாற்றப்பட்டு, S. P. C. K. சங்கத்தாரின் உதவியினல் வெகு சிறப்பாய் நடைபெறலானது.

திருநெல்வேலி ஜில்லாவில் அக்காலத்தில் தொழிற் கல்விச்சாலை என்பதொன்று நாசரேத்தில் மட்டும்தானிருந்தது. அதுவும் சென்னை ராஜதானியிலிருந்த அவ்விதக் கல்விச்சாலைகளிலெல்லாம் மிகவும் முந்தினதும் (Oldest) எல்லாவற்றிலும் பெரியதுமாய் விளங்கிற்று. சர்க்கார் உதவித்தொகை வருஷா வருஷம் கொடுக்கப்பட்டு வந்தது. 1878-ல் ரூ. 1000 கொடுத்தார்கள். 1898-ல் ரூ 4618—14—9 கிரான்று கிடைத்தது. 1899-ல் S. P. G மிஷன் கிரான்று ரூ. 1867—12—5; S. P. C. K. சங்கத்தார் கொடுத்தது ரூ. 2443—6—9; கைத்தொழிற் சாமான் விற்பனை ரூ. 2260—7—8; இவையெல்லாங் கிடைத்தும் 1899-ல் ரூ. 5685—9—11 குறைந்துவிட்டது. ஆக அவ்வருஷம் செலவானது ரூ. 16676—3—6 இவ்வண்ணம், கையில் ஒரு காசுமின்றிப், பரோபகாரமே பிரதானமாகக்கொண்டு 1877 அக்டோபர்மீ கனம் மர்காஷிஸ் ஐயர் ஆரம்பித்த இவ்வேலை 23 வருஷத்திற்குள் 16 ஆயிரம் ரூபாய்ச் செலவில் நடைபெறத் தக்கதான பிரமாண்டமானதோர் முயற்சியாகவும், அதுவும் அதிகக் கஷ்டமின்றிச் செவ்வனே முன்னேறி வரவுமாயிற்று 'அற்ப ஆரம்பத்தை யாரே அசட்டை செய்வார்?' அதுவுமன்றி இப்பள்ளிக்கூடத்தின் மூலமாய் மரணத்துக்கு நீங்கிப் பிழைத்து, நித்ய ஜீவனுக்கு ஆளான ஆத்துமாக்கள் எத்தனை எத்தனை பேர்? உலக முழுவதும் ஒரு ஆத்துமாவின் கிரயத்துக்கு ஈடாகாதெனின் மர்காஷிஸ் ஐயரின் விசுவாசத் திண்மையின் பயனுயேற்பட்ட இக்கலாசாலையின் ஊழியப் பெறுமதியை மதிப்பிடக் கூடுமோ?

கனம் மர்காஷிஸ் ஐயர் மேற்சொன்ன கல்விச்சாலைகள் விஷயத்தில் மிகுந்த சிரத்தை எடுத்தது மல்லாமல், சுற்றுப்பட்டிகளிலுள்ள பள்ளிக்கூடங்களும் சகல விஷயத்திலும் முன்னேற்றம் அடையச்செய்தார். அக்கலாசாலைகளில் சிறந்தது ஆழ்வார்திருநகரிப் பள்ளிக்கூடம். இதை 1883ம் வருஷம் ஹைஸ்கூலாக உயர்த்தினர். அவ்வுயர் நிலையை இப்பள்ளி 1904ம் வருஷம் வரை காத்துக்கொண்டது. லோயர் பிரைமரிப் பாடசாலைகளாயிருந்த நாசரேத், கடையனேடை, எருசலேம், மூக்குப்பீறி, குளத்துக்குடிக் கிராமப் பாடசாலைகள் அப்பர் ப்ரைமரிப் பாடசாலைகளாக உயர்த்தப்பட்டு, மாணவர் சர்க்கார் பரீக்ஷைக்கும் அனுப்பப்பட்டார்கள்.

ஆழ்வார்திருநகரி ஸ்கூல்

இவை தவிர முதியோர் கல்வி விஷயத்திலும் கனம் மர்காஷிஸ் ஐயர் ஊக்கம் காண்பித்தார். ஆண்களுக்குக் கல்வியறிவுண்டாக்குவது மிகவும் சிரமமாயிருந்தது. ஏனெனில் அக்காலத்தில் இப்பாகங்களில் வாழ்ந்த மிச்சமான கிறிஸ்தவர்கள் பனையேறும் தொழிலையே வாழ்க்கைத் தொழிலாய்க் கொண்டவர்கள். ஆகையினால் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க நேரம் கிடைப்பினும் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையை அவர்களிடத்தில்கண்டு பிடிப்பது துர்லபம். எனவே பெண்களுக்குக் கற்பிப்பதே சாத்தியப்படக்கூடியதாயிருந்தது அவர்களும் கற்றுக்கொள்ள வாஞ்சை மிக்கோராயும் காணப்பட்டார்கள். ஆகையால் 1880ம் வருஷத்தில் 'பெண்கள் முதியவர் கல்விச் சாலைகள்' (வகுப்புகள்) நாசரேத், மூக்குப்பீறி, எருசலேம், கடையனோடை, பன்றிமடல், குளத்துக்குடி என்றவூர்களில் ஸ்தாபிக்கப்பட்டன. மிகுந்த உற்சாகத்தோடு சம்பளத்தை எதிர்பாராமல் இவற்றில் கற்பிக்க உபதேசிமாரின் மனைவிபரும், நாசரேத் பெண்கள் கல்விச் சாலையில் கற்று வெளியேறின இளம் பெண்களில் சிலரும் முன் வந்தனர். கல்வியின்மீது எவ்வளவு பிரியம் இருந்தபோதிலும் கற்றுக்கொள்வது சிரமமாயிருந்தமையாலும், வீட்டு வேலைத் தொல்லைகள் இருந்தமையாலும் படிக்க முன்வந்த பெண்கள் ஒழுங்காய் வருவது நாளாவட்டத்தில் நின்று விட்டது. எனவே மர்காஷிஸ் ஐயர் "ஒவ்வொரு உபாத்தினியும்தான் அவ்வகுப்புப் பெண்களின் ஆஜர்கிரமத்திற்குப் பொறுப்புதாரி. கற்று முடித்த பெண்கள் சர்க்கார் பரீக்ஷை எழுதித் தேறவேண்டும். உபாத்திச்சிக்குச் சம்பளம் சர்க்கார் வருஷக்கடைசியில் கொடுக்கும் கிரான்றுத்தொகைதான். எனவே உபாத்தினிகள் ஒவ்வொருவரும் தங்கள் சம்பளத்தைத் தாங்களே சம்பாதித்துக் கொள்ளவேண்டும். மிஷனிலிருந்து மாதம் ரூபாய் 1, அல்லது 2 முன்பணமாகக் கொடுக்கப்படும்" என்று கட்டளை கொடுத்தார். மேலும் முதியவர்களான (adults) படிப்பற்ற பெண்களை கற்றுக்கொள்ள வரும்படித் தூண்டுவதற்காகப் புஸ்தகங்கள் முதலியவை அவர்களுக்கு வெகுமதியாகவும், விவாகச் சமயத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் கலியாணச்சேலை ஒன்று மிஷனிலிருந்து இனாமாயளிக்கப்படவும் ஏற்பாடு செய்தார். எனவே இம் 'முதியோர் கல்வித் திட்டம்' வெகு சித்தியுடன் நடைபெற்றது.

முதியோர் கல்வி

இவ்வாறு பல வகைகளில் கல்வியறிவைப் பரப்பக் கனம் மர்காஷிஸ் ஐயர் முயன்றார். இவையெல்லாவற்றையும் ஒரே ஆள் மேற்பார்ப்பது என்றால் அது கூடாத காரியம். மேலும் ஓயா உழைப்பின் காரணமாய் அவர் அடிக்கடி நோய்வாய்ப்படவுமானார். ஆகையால் தமக்குதவியாக 1889 செப்டம்பரில் கல்வி மேற்பார்வைக் கழகம் (Board of

Education, Nazareth) ஒன்றை ஸ்தாபித்தார். இக்கழகத்தில் ஐந்து அங்கத்தினருண்டு. கனம் M. ஏசுவடியான் ஐயரே

**கல்வி மேற்பார்வைக் கழகம்**

இக்கழகத்தலைவர். கழகத்தினர் பள்ளிக்கூட விஷயங்களில் கனம் மானேஜருக்கு ஆலோசனை கூறி வந்தார்கள். ஐயரவர்கள் சுகவீனமாயிருந்த காலங்களில் கழகத்தின் தலைவரான எம் ஏசுவடியான் ஐயரே மானேஜராகவும் இருந்து வந்தார்.

### நாசரேத் ஆஸ்பத்திரி.

டாக்டர் ஸ்ட்ராஹ்ன் ஐயர் 1876 (?) ஏப்ரில் மாதம் நாசரேத்தைவிட்டுச் சென்றபின் கனம் மர்காஷிஸ் ஐயர் வரும்வரை இந்திய கம்பவுண்டர்களும், டிரஸ்ஸர்களுமே ஆஸ்பத்திரியை நடத்திவந்தார்கள். மர்காஷிஸ் ஐயர் மருத்துவம் கற்றவரல்லர். எனினும் தேர்ந்த டாக்டர்மார் கிடையாத அக்காலத்தில், டாக்டர்கள் கிடைக்காத காரணத்தால் ஆஸ்பத்திரியை மூடி

**மர்காஷிஸ் டாக்டர்**

விட்டால் உண்டாகும் தீமை அனந்தம் என்றுணர்ந்தவராய்ச் சுயமாகவே மருத்துவங் கற்றுத், தாமே டாக்டராக விருந்து ஆஸ்பத்திரியை நடத்தத் தீர்மானித்தார். அதிக தீக்ஷண்ய புத்தியும், எதையும் எளிதில் கிரஹித்துக் கொள்ளும் சக்தியும் படைத்தவராயிருந்தமையின் வெகு விரைவில் சாதாரண வியாதிகளைப் பரீக்ஷித்தறிந்துகொள்ளும் ஆற்றலும், வியாதியின் தன்மை, உடலின் சக்தி முதலியவற்றைச் சீர்தூக்கி அதற்கேற்ப மருந்து கொடுக்கும் வன்மையும் பெற்றார். ஆகையால் டாக்டர் ஸ்ட்ராஹ்ன் ஐயர் காலத்திலிருந்த அளவு மேம்பாடு குன்றாது ஆஸ்பத்திரி வேலை நடந்துவந்தது.

ஸ்ட்ராஹ்ன் ஐயர் காலத்திலிருந்ததுபோன்றே வியாதியஸ்தருக்கென்று காலையிலும் மாலையிலும் சிறிய ஆராதனைகள் நடத்தப்பட்டன. அவ்வாராதனைகளில் புறமதஸ்தரான நோயாளிகள் மனமுவந்து கலந்துகொள்வர். இந்த ஆராதனைகளில் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ உபதேசம் அநேக இந்துக்களின் குணப்படுதலுக்கு நாளடைவில் காரணமாயிற்று. ஏனெனில் உபதேசம் பேச்சளவில் நில்லாமல், டாக்டர் முதல் (ஆஸ்பத்திரியின்) ஒவ்வொரு பணியாளும் அவரவர் கடமைகளைத் தங்கள் 'ஆண்டவருக்காகச் செய்யும் தொண்டு' எனக் கொண்டு அன்புடன் நிறைவேற்றிவந்தார்கள். இதைக்கண்ட உணர்வுள்ள எந்த மனிதனும் தன் மனதில் இவ்வித

**கிறிஸ்தவ அன்பின் சேவை**

சேவைக்கடிப்படையான கல்வாரி அன்பைச் சிந்தியாது போவது சாத்தியமோ? "ஜாதி, மதம், நிறம், அந்தஸ்து, பாஷை இவற்றாலான பேதமெதுவுமின்றி எவ்வகைப் பட்டோருக்கும் ஏற்படும் வியாதி துன்பங்களைப் போக்க எடுக்கும் முயற்சிகள் சகலருடைய நன்றியறிதலையும்

அனுதாபத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர் சிறந்த சாதனம். எனவே அவ்வகை ஊழியத்தின் பயனை எவரும் மிகைப்படுத்திக் கூற முடியாது. மக்கள் சர்க்கார் ஆஸ்பத்திரிகளைவிட மிஷன் ஆஸ்பத்திரி களையே தெரிந்துகொள்ளுகின்றனர். காரணம் இங்கு முன்னதில்விட அதிகக் கவனத்துடனும் கவலையுடனும் சிகிச்சை செய்யப்படுவதேயாகும். நாசரேத் ஆஸ்பத்திரியில் மட்டும் 12000க்கதிகமான 'வெளி', 'உள்' வியாதியஸ்தர் வருஷந்தோறும் சிகிச்சை பெறுகிறார்கள்'' என்ற ஓர் பாராட்டு S. P. G. இருநூறு வருஷச் சரித்திரத்திலுண்டு. சர்க்கார் தர்ம வைத்திய சாலைகளை விட்டு விட்டு நாசரேத் ஆஸ்பத்திரியைத் தேடி பதினாயிரத்துக்கதிகமான வியாதியஸ்தர் வந்தார்கள் என்பதொன்றே, இம்மருத்துவச் சாலையில் நடைபெற்ற ஊழியத்தின் அன்புப்பண்பை விளக்குமன்றோ?

1882ம் ஆண்டில் மருத்துவச் செலவிற்கேற்ற பணவரவின்மையால், வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு நோயாளியும் ஆஸ் பத்திரியில் சிகிச்சை பெற வரும் முதல் நாளில் ஒரு அணா பிரவேசக் கட் டணம் (Admission fee) கொடுக்கவேண்டுமென்று மர்காஷிஸ் ஐயர் விதித்தார். இது அக்கால மக்களுக்கு வெகு பாரமாய்த் தோன்றிற்று! எனவே ஜனங்கள் சிகிச்சை தேடிவருவதும் குறைந்தது.

ஒரு அணா பிரவேசக் கட்டணம்

1881—'82ல் 'வெளி' வியாதியஸ்தர் 9205, 'உள்' வியாதியஸ்தர் 220; ஆனால் 1882—'83ல் 'வெளி' 5694, 'உள்' 103; எனவே 1883 மார்ச்சு மாதத்தில் கட்டண விதியை ஐயர் ரத்துச்செய்தார். 'நல்லவேளை நமக்கு வேலை குறைந்தது. இந்த ஒரு அணாக் கொடுக்க இவர்களுக்கு மனமும் வழியுமில்லையா?' என்று கோபிக்காமல் 'ஐயோ, இந்த ஒரு அணா காசுக்கூட இல்லாத மக்களை மருத்துவ உதவியின்றி மடிய விடலாமா' என்று அனுதாபப்பட்டு அவ்வருவாயையும் இழக்கச் சம்மதித்தார்.

இதுவரையும் தற்போது தபாலாபீஸ் இருக்கும் கட்டிடமே ஆஸ்பத் திரியாயிருந்தது. 'உள்' வியாதியஸ்தருக்காக சிற்றோடைக்கு கிழக்கிலுள்ள மனையில் எழு வீடுகள் கனம் ஸ்ட்ராஹன் ஐயரால் கட்டப்பட்டிருந்தன. வேலை மிக விரிவுற்றமையால் அங்கும் இடவசதியின்மை ஏற்படவே 1890ம் வருஷம் மர்காஷிஸ் ஐயர் புதிய ஆஸ்பத்திரிக் கட்டடம் கட்ட எண்ணி, அதற்கான முயற்சிகளிலீடுபட்டார். வெகு விரைவில் வேண்டிய பண

வைத்தியனாகிய லூக்கா

வரவு கிட்டவே 1891 கடைசியில் தற்போது ஆஸ்பத் திரி நடைபெறும் கம்பவுண்டில் கட்டுமான வேலையை ஆரம்பித்து, அடுத்த வருஷம் (1892) இறுதிக்குள் வேலையை முடித்து, அக்டோபர் மீ 18ம் தேதி 'வைத் தியனாகிய' பரிசுத்த லூக்காவின் திருநாளன்று 'பரிசுத்த லூக்கா ஆஸ்

பத்திரி' என்ற பெயருடன் பிரதிஷ்டை செய்தார். இவ்வைபவத்திற்குத் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி முதலியவிடங்களிலிருந்து பல உத்தியோகஸ்தரும், கன தனவான்களும், கிறிஸ்தவப் பிரமுகர்களும் விஜயம் செய்தார்கள். ஜில்லாக் கலெக்டர் உயர் திரு. G. S. போர்ப்ஸ் (Mr. G. S. Forbes I. C. S.) அக்கிராசனம் வகித்தார். கட்டடம் பக்கங்களில் உள் வியாதியஸ்தருக்கான சுமார் 30 படுக்கை கொண்ட அறைகளும் (wards), மத்தியில் மருந்து சேர்க்கும் அறையும், (compounding room) வெளி வியாதியஸ்தரைச் சோதித்து மருந்து கொடுக்கும் அறையும், மருந்து வைக்கும் அறையுமாக மூன்று அறைகளும் உடையதாய் ஆஸ்பத்திரி கம்பவுண்டின் முகப்பில் கட்டப்பட்டிருந்தது. அன்று மாலை 5 மணிக்கு கனம் மர்காஷிஸ் ஐயரும், மற்ற குருமாரும் பாடகருடன் மிஷன் பங்களாவிலிருந்து, புதிதாய் அமைக்கப்பட்ட ரோட்டின் வழியாக வைத்தியசாலைக்குப் பவனி வந்தார்கள். மாபெரும் பந்தலொன்று சகல அலங்காரங்களுடனும் கட்டடத்தின் முன் விரிவாய் அமைக்கப்பட்டிருந்தது. பவனி பந்தல் சேர்ந்ததும் மர்காஷிஸ் ஐயரே பிரதிஷ்டை ஆராதனையைக் கீத ஆராதனையாக நடத்தி, கட்டடத்தின் முன் கதவுகளைத் திறந்து 'சகல சரீர ரோகங்களையும் நீக்கும் மருத்துவாலயமாகவும், ஆத்ம பிணிகளைப் போக்குவதற்கான சாதனமாகவும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியான திரியேக தேவனின் திருநாமத்தில் 'பரிசுத்த லூக்கா ஆஸ்பத்திரி' என்ற பெயருடன் உலகிலோர் உத்தம ஊழிய நிலையமாய்த் திகழப் பிரதிஷ்டை செய்தார். அதன்பின் அக்ராசனப் பீடம் வகித்த கலெக்டர் துரை ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினர். அவர் தம் வாக்கினின்றும் சில வாக்கியங்களை ஈண்டு எடுத்துக்கூறுவோம். "இவ்வூரின் முதல் வைத்திய ஸ்தாபனம் தற்போது ரங்கூனின் கண்ணிய மிக்க அத்தியக்ஷரான மகா கனம் டாக்டர் ஸ்ட்ராஹன் அவர்களால் 1870-ம் வருஷம் நிறுவப்பட்ட ஓர் மருத்துவச்சாலை. கனம் மர்காஷிஸ் ஐயர் 1876-ம் வருஷம் இவ்வாஸ்பத்திரி வேலையை மேற்கொண்டார். அதுமுதல் இது புத்துயிருடன் விழங்கலாயிற்று. இப்பாகத்தில் வாழும் மக்கள் மர்காஷிஸ் ஐயரை விரும்பத்தக்கதாய்ச் செய்யும் அவருடைய பண்பாடுகளே இந்த ஸ்தாபனம் இன்று கொண்டுள்ள நன்மதிப்புக் காரணம். கடந்த வருஷம் (1891) கிட்டத்தட்ட 16000 நோயாளிகள் இங்குச் சிகிச்சை பெற்றுர்கள். இவ்வருஷம் இன்றையத்தினம் வரை 12500 பேர் மருத்துவ உதவி பெற்றுள்ளார்கள். வேலை அதிகரிக்கவே இடவசதிக் குறைவு அதிகமாய்ப் பாதித்ததால் கனம் மர்காஷிஸ் தமக்கே உரித்தான ஊக்கத்துடனும், ஆற்றலுடனும் நாம் கூடியுள்ள இக்கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளார். தாங்கள் கொடுக்கும் பணம் சத்பிரயோகம் செய்யப்படும் என்ற உறுதியான

ஆஸ்பத்திரிப் புதுக் கட்டடப் பிரதிஷ்டை

நம்பிக்கையுடனும், அப்பணத்தின் பெறுமதிப்பைக் காட்டிலும் பன்மடங்கு மேலான நன்மைகளை மக்கள் பெறுவார்கள் என்ற உறுதியுடனும் (திருநெல் வேலி) ஜில்லா போர்டாரும் ரூ. 1000 கொடுத்திருக்கிறார்கள். ஜனங்கள் இவ்வாஸ்பத்திரியின்மீது கொண்டுள்ள பற்றுதலே இதின் பயன்மிகும் பணிக்கேற்ற சான்றாகும். இவ்வாஸ்பத்திரிக் கட்டடத்தை கட்டி எழுப்பி யது கனம் மர்காஷிஸ் ஐயரின் மேன்மையான சேவைச் செயல்களில் ஓர் சிறந்த அம்சமே.........பாலைவனச் சோலை போல் விளங்கும் இவ்வூருக்கு வரும் எவரும் இவற்றையெல்லாம் பார்த்தும், இங்குள்ளோரின் முகங்க ளில் பிரகாசிக்கும் திருப்தியையும் உள்ளக்கிடக்கையான மகிழ்ச்சியையும், எங்கணும் துலங்கும் ஒழுங்கு, கிரமம் முதலியவற்றையும் கண்ணுற்றும், இவற்றிற்கெல்லாம் காரணஸ்தரான மனிதரின் (மர்காஷிஸ் ஐயரின்) பிற நல நோக்குடன் சுயநலம் கருதாது செய்யும் மனப்பூர்வமான உழைப்பையும், பெருந்தன்மையையும், ஆற்றலையும் மனதாறப் புகழாதிருக்க முடியாது'' கலெக்டரின் சொற்பொழிவின் பின் தாம்பூலாதிகள் பரிமாறப்பட்டன. இரவு 9–30 மணிக்குக் கைத்தொழிற்சாலை மாணவரின் உடற்பயிற்சி வித் தைகளைக் கண்டு, வந்திருந்தோர் பெரு மகிழ்ச்சியெய்தினர்.

1895-ல் மர்காஷிஸ் ஐயர் அதிகமான வேலை செய்ததினால் அவரது உடல் நலம் குன்றவே, S. P. G. தாய்ச் சங்கத்தார் அவருக்குதவியாக மருத்துவப் பரீக்ஷைகளில் தேர்ச்சி பெற்றுப் பட்டாதாரியான டாக்டர் ஸ்மித் (Dr. Smit) என்னும் ஓர் ஆங்கில மருத்துவரை அனுப்பினார்கள்.

டாக்டர் ஸ்மித்

டாக்டர் ஸ்மித்தின் சம்பளத்தை S. P C. K. சங்கத்தார் கொடுக்க முன்வந்தனர். ஆனால் அவர் வந்த 6 மாதத்திற்குள் அவர் தம் வேலையை ராஜினமாச் செய்துவிடவே, மறுபடியும் ஆஸ்பத்திரி வேலை முழுவதும் மர்காஷிஸ் ஐயர் பொறுப்பிலேயே நடைபெற வேண்டியதாயிற்று. ஐயரின் மருத்துவச் சேவையை நம் தேச மக்கள் வெகுவாய் நன்குமதித்து வந்தார்கள் என்ப தற்கு ஏராளமான சான்றுகள் உள. புறமதஸ்தரில் தனவான்களான நோயாளிகளும், மற்றையோரும் ஆஸ்பத்திரி வேலைக்கென கேட்காமலே பண உதவி செய்தார்கள். உதாரணமாக 1894-ம் வருஷத்தில் பரி. லூக்கா ஆஸ்பத்திரியின் சேவையை நன்குமதித்த பிராமணரான ஓர் தனவந்தர் ரூ. 1000 நன்கொடையளித்தார். 1901ல் கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டு நமது ஆஸ்பத்திரிச் சிகிச்சையில் குணமடைந்த மற்றொரு பிராமணர் ரூ. 500 நன்கொடையளித்தார். அவ்வருஷ இறுதியில் திருச் செந்தூர் சுப்ரமணியர்கோவில் தர்மகர்த்தாக்களான பிராமணர் சிலர் அக்கோவில் சார்பில் ரூ. 100 உதவித்தொகை கொடுத்தார்கள். மேலும் தூத்துக்குடித் தாலுகாபோர்டாரும் வருஷந்தோறும் ஒரு தொகை [ரூ. 700] தந்து ஊழியத்தை உற்சாகப்படுத்தினார்கள்.

### வேத சாஸ்திரக் கலாசாலை

இன்று நாசரேத்தின் புகழ் இந்தியாவில் மங்கா விளக்காய் விளங்க உதவியாயிருப்பது திருமறையூரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேதசாஸ்திரக் கல்லூரியே என்கின் எவரும் மறுக்கமாட்டார்கள். திருநெல்வேலி அத்தியக்ஷாதீன வேதசாஸ்திரக் கல்லூரி இன்று இங்கு இலங்குவதற்கு அடிகோலியவர் கனம் மர்காஷிஸ் ஐயரே. எப்படியெனின் 1843-ம் ஆண்டில் சாயர்புரத்தில் கனம் ஜியார்ஜ் உக்லோ போப் ஐயர் என்ற மேதாவி ஸ்தாபித்த கல்விஸ்தாபனம் இடையன்குடி, நாசரேத் முதலிய S. P. G. மிஷன் ஸ்தானங்களிலிருந்து கற்று வரும் மாணவருக்கு உயர்தரக்கல்வி கற்பித்தும், வேதசாஸ்திர வல்லுனராக்கித் தெய்வப் பணிவிடைக்குத் தகுதியுள்ளோராகச் செய்தும், திருநெல்வேலியில் S. P G. சங்க ஊழியம் நிலைநிற்பதற்குவியான இன்றியமையாத் தொண்டாற்றிற்று. பல வருஷங்கள் சென்றபின் அக்கலாசாலை ஒரு உயர்தரப் பள்ளியான காலத்து, சாயர்புரம் கால்ட்வெல் காலேஜோடு இணைக்கப்பட்டுவிட்டது. அதுமுதல் பள்ளியின் முதல் நோக்கம் சிதைவுறவே, உபதேசிமார் பயிற்சிக்கென்று தனியாகவோர் வேதசாஸ்திரக்கலாசாலை ஸ்தாபிக்கப்படல் அத்தியாவசியமாயிற்று. எத்துறையிலும் தைரியமாயும் நன்னம்பிக்கையுடனும் அடியெடுத்து வைக்கும் தன்மை வாய்ந்த மர்காஷிஸ் இக்குறையையும் நீக்க முன் வந்து, 1900-ம் வருஷம் ஜனுவரி மாதத்தில் 8 மாணவருடன் உபதேசிமார் வேதசாஸ்திர வகுப்பை (Theological Seminary) ஆரம்பித்தார். தமது பலதிறப்பட்ட வேலைகளின் மத்தியில் இப்பெரும்பொறுப்பைத் தனித்துத் தாங்குவது கூடாத காரியமாயிருந்தமையால், நாம் முன்கூறினபடி, பெண்கள் உயர்தரப் பள்ளிக்கூடத்தின் முதல் தலைமையாசிரியராய் விளங்கின D. பெரியநாயகம் B. A. அவர்கள் இப்போது பட்டம்பெற்ற (1898) குருவாயிருந்தமையால் அவரை அக்கலாசாலைக்குத் தலைவராகத் தெரிந்துகொண்டார். இருவருஷப் பயிற்சி ஒவ்வொரு மாணவனுக்கும் கொடுக்கப்பட்டது. முதல் வருஷத்திலேயே, 'இக்கலாசாலை மிகுந்த பயனுள்ளதாய்த் திகழும் என்று நம்புவதற்கிடன் உண்டு' என்று கனம் பெரியநாயகம் ஐயர் 1900-ம் வருஷ ரிப்போர்ட்டில் எழுதினர். 1900-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட இச்செமினெரி 20 வருஷத்திற்குள் குருக்களைப் பயிற்றுவிக்கும் ஓர் கலாசாலையாயும், 40 வருஷத்திற்குள் வேதசாஸ்திரச் கல்லூரி (College)யாகவும் வளர்ந்து, 50 வருஷத்திற்குள் இந்தியாவிலுள்ள ஒரே கிறிஸ்தவ சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டு, இந்தியாவின் உயர்தர (First Grade) வேதசாஸ்திரக் கல்லூரிகள் ஐந்தினுள் ஒன்றாகி, இன்னும் சென்னையில் தென் இந்தியத் திருச்சபை முழுவதற்கும் தமிழ்க் குருக்களைப் பயிற்றுவிக்கும் சேவையை

வேதசாஸ்திரக் கலாசாலை

மேற்கொள்ளும் 'தமிழ் நாட்டு வேதசாஸ்திரக் கல்லூரி' யாக உயர்வடைய வும் கூடியதாக வளர்ச்சியுற்றுள்ளது. இதன் வளர்ச்சிபற்றிப் பின் பக்கங் களில் கூற நேரிடுமாதலால் அதை இங்கே விஸ்தரியாது விடுத்தனம்.

## இந்தியக் கிறிஸ்தவ எதிர்காலச் சிக்கன சகாய நிதி

**எதிர்காலச் சகாய நிதி**

'S. P. G. நாசரேத் சுதேச கிறிஸ்தவ மரண சகாயப் பண்டு' என்ற பெயருடன் இவ்வெதிர்கால நிதியை, மிகுந்த தீர்க்கத்தரிசனத்துடன் விளங் கிய கனம் ஐயர் 1887 எப்ரில் 1-ம்வ விக்டோரியா ராணியின் பொன் விழா ஞாபகார்த்தமாகத் துவக்கி வைத்தார். ஆரம்பமுதல் தாமே அதற்குத் தலைவரும் காரியதரிசியுமாயிருந்து, அதைத் திறம்பட நடத்தி வந்தார். நிதியின் நோக்கம் அங்கத்தினர் எவரேனும் மரணமாயின் சந்தாதார் எத்தனை பேருளரோ அத்தனை ரூபாய்கள் மரணமானவரின் வாரீஸாருக்குக் கொடுத்துதவுவதே. இன்சூரன்ஸ் முறைகளை அதிக மாய் அறியாத அக்கால மக்கட்கு இது ஓர் பெரும் 'புதையலாய்'த் தோன்றிற்று இந்நிதி ஆரம்பிக்கப்பட்ட முதல் வருஷமுடிவிற்குள் 305 பேர் அங்கத்தின ராயினர். அவர்களில் 237 பேர் இந்தியக் கிறிஸ்தவர்கள். மற்றையோர் 23 ஐரோப்பியரும், 44 இந்துக்களும் ஒரு முஸ்லீமுமாம். அடுத்த வருஷத்தில் அங்கத்தினர் 425 ஆயினர். இவர்களில் சிலர் கொழும்பு, மதராஸ், பம்பாய், கல்கத்தா, போர்ட் ப்ளேர். (Port Blair) என்னும் தூரவிடங்களிலுள்ளவர்கள். 5 வருஷங்களுக்குள் ஆயிரத்துக்கு மேலாக அங்கத்தினரின் தொகை வளர்ந்துவிட்டது. இஃதொன்றே இந்நிதியின் அவசியத்தையும், பிரயோஜனத்தையும் மக்கள் எவ்வளவு அதிகமாய் உணர்ந் திருந்தார்கள் என்று காட்டக்கூடியது. 1900-ம் வருஷத்திற்குள் இந்நிதி மரித்துப்போன அங்கத்தினரின் குடும்பங்களின் சம்ரக்ஷணைக்காக ரூ. 66,331 கொடுத்துள்ளது என்றறிகிறோம்.

**கைம்பெண் சங்கம்**

மேற்சொல்லிய சுதேசக் கிறிஸ்தவ மரண சகாயநிதி தவிர C. M. S. சங்கத்தைச் சேர்ந்த மிஷனெரிமார் 1834-இலிருந்தே நடத்திவந்த 'திருநெல்வேலி C. M. S. கைம்பெண் சங்க'த்தினால் அச்சங்கத்தின் அங்கத்தினராயிருந்து மரித்துப்போன சபை ஊழியரின் மனைவியருக்குக் கிடைத்த பராமரிப்பை வெகுவாய்ப் பாராட்டி, அம்முன்மாதிரியைப் பின்பற்றி, 'S. P. G. திருநெல்வேலி கைம்பெண் சங்கம்' என்ற பெயருடன், நாசரேத்தில் ஒரு சங்கத்தையும் மர்காஷிஸ் ஐயர் நிறுவினார். 1901ம் வருஷக் கணக்கின்படி இச்சங்கத்திலிருந்து ஒத்தாசை பெற்ற விதவைகள் 59 பேர்.

# அத்தியாயம் 10

## சுய ஆதரவு

### (மர்காஷிஸ் ஐயர் காலம். 3-ம் பாகம்)

**சபை ஊழியம்**

1876ம் வருஷத்தில் கனம் மர்காஷிஸ் மிஷனெரியாக வந்தபொழுது இச்சேகரத்தில் R. பெரியநாயகம் ஐயர் நாசரேத் பாஸ்றரேற்றையும் V. ஆபிரகாம் ஐயர் கடையனோடை பாஸ்றரேற்றையும், பரஞ்சோதி ஐயர் மூக்குப்பீறியையும், கனம் M. எசுவடியான் சேகர முழுமையும் (General Supervision) மேற்பார்வை செய்து வந்தனர் என்று பார்த்தோம். இவர்களெல்லாரும் நாசரேத்திலேயே குடியிருந்தார்கள். சேகரத்தின் பொதுவான வேலைகளைக் கண்காணித்துவந்ததினால் எசுவடியான் ஐயர் மர்காஷிஸின் உதவி மிஷனெரியாக எண்ணப்பட்டார். அவ்வருஷத்தில் இச்சேகரத்தில் சுதேச குருமார் 4, சபை ஊழியர் (உபதேசிமார், உபாத்திமார் முதலியோர்) 31. கிறிஸ்தவ சபைகள் 26. ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 3809. பெருந்தவர்கள் 523. வாசிக்கத் தெரிந்த கிறிஸ்தவர்கள் 881. சபை வருமானம் ரூ. 1912. சர்க்கார் கிரான்று ரூ. 1683 என்ற இக்கணக்கு நாசரேத் சேகரத்தின் அக்கால நிலைமையைக் காட்டுகிறது. சுவிசேஷ ஊழியத்தைப்பற்றி எழுதின அத்தியாயத்தில் சபை வளர்ச்சி விளங்குகிறதாகையால் சபைகளில் நடைபெற்ற மற்ற பலதிறப்பட்ட வேலைகளைவயென்றுமட்டும் இவ்வத்தியாயத்தில் காட்டுவோம்.

சுய ஆதரவு முயற்சிகள். சுய ஆதரவுணர்ச்சியை உண்டாக்குவதற்காகக் கேமரர் ஐயர் காலத்திலேயே பிரயத்தனங்கள் செய்யப்பட்டனவென்று பார்த்தோம். கனம் மர்காஷிஸ் ஐயர் காலத்தில் அம்முயற்சிகள் பன்மடங்கு பெருக்கமுற்றுத் திறம்பட நடத்தப்பட்டு வந்தன. ஒவ்வொரு சபையிலும் சங்கப் பண்டிகை ஒன்று வருஷத்திற்கொருமுறை நடைபெற்றது. சபையில் ஒவ்வொரு குடும்பத்தலைவனுக்கும் ஒரு உண்டியல் கலயம் கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் குடும்பத் தலைவன் அக்கலயத்தில் ஏதாவது ஒரு சிறு தொகையைக் கட்டாயமாகப் போட்டுவைக்க வேண்டும்.

**சங்கப் பண்டிகை**

இப்படி வருஷ முழுவதும் சேர்த்தபின் கலயத்தைச் சங்கப் பண்டிகையன்று ஆலயத்துக்குக் கொண்டுவர, அது குருவானவரால் உடைக்கப்பட்டுத் தொகை எண்ணப்படும். பின்னர் சங்க ஸ்தோத்திர ஆராதனையில் அத்தொகை படைக்கப்படும். இம்முறையினால் ஒவ்வொரு குடும்பத்தலைவனும் சங்கப் பணம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதே சமயத்தில், செலுத்தப்படுகிற தொகை இவ்வளவு என்பது கட்டாயமல்ல. மேலும் தினந்தோறும் தவறாமல் ஆண்டவருக்கென்று தன்னாலியன்ற ஒரு சிறு தொகையைப் பிரத்தியேகப்படுத்தும் நல்ல முறையும் ஏற்பட்டுவிட்டது. சங்கம் எழுதுகிற வழக்கமும், உபதேசிமார் 'சங்கப் பாக்கி பிரிக்கிற' நிர்ப்பந்தமும் இருந்ததில்லை.

சில வருஷங்களுக்குப்பின் நாசரேத் சபையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஜனங்கள் 'சங்கப் பணம்' என்ற வார்த்தையை விரும்பவில்லை. மேலும் தொகை இவ்வளவு கொடுக்கப்படவேண்டும் என்ற கட்டாயமில்லையெனினும், கலயம் கொடுக்கப்படுவதே கட்டாயத்தை நிலைப்படுத்திவிடுகிறதாகையால், 'சுயநிர்ணயக் காணிக்கை' (Free-will offering) என்ற பெயருடன் ஈஸ்டர் வாரத்தில் ஒரு நாள் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் அக்காணிக்கையைப் படைத்துவிடுகிறது என்று தீர்மானித்து, அவ்வண்ணமே 1889-ம் வருஷ முதல் அம்முறையைக் கைக்கொண்டார்கள். இதற்கு "ஈஸ்டர் காணிக்கை", "வருஷாந்தரப் படைப்பு" என்னும் பெயர்கள் வழங்கின.

**ஈஸ்டர் காணிக்கை**

மற்றச் சபைகளிலும் வெகு விரைவில் இவ்வழக்கத்தை மேற்கொள்ளவாரம்பித்தார்கள். ஆனால் 'சுயநிர்ணயக் காணிக்கை' என்பதற்குப் பதில் அச்சபைகளில் 'தசமபாகக் காணிக்கை' என்று பெயர் வழங்கியது. மேலும் அவர்கள் பழைய உண்டியல் வழக்கத்தையும் தள்ளிவிடவில்லை. ஆகையினால் கலயமும் கொடுக்கப்பட்டே வந்தது. அதில் ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத் தலைவரும் தமது வருமானத்தில் பத்திலொன்றை அக்கலயத்திற்குள் மாத இறுதியிலோ, வருஷக் கடைசியிலோ போட்டு வைத்து, குறிக்கப்பட்டவோர் நாளில் ஆலயத்தில் முன்னால் வந்து படைத்து விடுவார்கள்.

**தசமபாகம்**

1892-ம் வருஷம் மூக்குப்பீறியில் அவ்வண்ணம் நடந்த 'தசமபாகப் படைப்பு பண்டிகை'யைப்பற்றி, அக்காலத்தில் அச்சேகரக் குருவாயிருந்த கனம் M. ஏசுவடியான் ஐயர் ஒரு விவரணம் எழுதியுள்ளார். அது பின்வருமாறு "மூக்குப்பீறியில் 25 பேருக்கு மேலாக உற்சாக மிகுந்த முகங்களுடன் 'முன் வந்து' எனக்கு முன் வைக்கப்பட்டிருந்த மேஜையின் மேல் தங்கள் தசமபாக உண்டியல்களை வைத்தது மகிழ்ச்சி தரும் காட்சியாயிருந்தது. ஒருவருடைய உண்டியலில் ரூ. 15-யும், அவருடைய மனைவியின் கலயத்தில் ரூ. 1—8—0-யும், வேறொருவருடையதில் ரூ. 8-ம், மற்றொருவருடைய கலயத்தில் ரூ. 7-மாக கொடுத்திருந்தார்கள். மொத்தம் ரூ. 95—2—4. இந்தத் தொகையைச் சபையின் மூப்பரும், ஊழியருமாக மேள தாளங்களுடன் பவனி சென்று, குருவானவரு

டைய வீட்டுக்குப் புஷ்பாலங்காரங்களுடனும், பூமாலைகளுடனும் வந்து, 'கடவுளுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையை'ச் செலுத்துவதில் [தசம பாகத்தைக் கடவுளுக்குச் செலுத்துவதே அக்கடமை] தங்களுக்கிருந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.'' என்னே, நம் முன்னோரின் கடமையுணர்ச்சி! இக்காலம் தசம பாகம் தரும் கிறிஸ்தவர்கள் எத்தனை சிலர். இன்றைய கிறிஸ்துசபை அதன் முன்னோரிடத்தில் காணப்பட்டதான இத்தகைய 'கடமையுணர்ச்சி'யை மீண்டும் கொள்ளுமானாலன்றி நாம் பூரண சுய ஆதரவுடையவர்களாவதெங்ஙனம்? ஏசுவடியான் ஐயர் அதே விவரணத்தில் அக்கால மூக்குப்பீறிச் சபையாரைப்பற்றி மேலும் கூறுவது: ''மக்கள் வெகு ஏழைகள். பலர் கூலி வேலை தான் செய்கிறார்கள். சிலர் மாத்திரம் இலங்கைக்குச் சென்று பிழைக்கும் வழி தேடுகிறார்கள். மற்றையோர் பனையேறுந் தொழிலிலீடுபட்டுள்ளார். கடந்த வருஷத்தில் மழையின்மையினால் மகசூலில்லை.........எனினும் தங்கள் சம்பாத்தியங்களெல்லாவற்றிலும் முதற்பலனை படைத்து விடுகிறார்கள்.........'' இன்றைய மூக்குப்பீறிச் சபை உலகப் பிரகாரமாய் மிகுந்த ஆசீர்வாதம்பெற்ற சபையாயிருக்கக் காரணம் அச்சபையோரின் முன்னோர் தம் வறுமையிலும் தம் கடமையைச் சரிவரவுணர்ந்தவர்களாய் 'உற்சாகமுள்ள முகங்களுடன்' தங்கள் காணிக்கையைச் செலுத்த 'முன் வந்ததினா'லன்றி வேறென்ன? ''யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்'' (மல்கியா 3) ''குறிக்கப்பட்ட காலங்களிலே செலுத்தவேண்டிய... ......முதற் பலன்களையும் குறித்துத் திட்டம் பண்ணினேன். என் தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்'' (நெகே. 13 : 31).

மூக்குப்பீறி
தசமபாகப்
பண்டிகை

மூக்குப்பீறியைப் பற்றிய ஷ விவரணம் அவ்வூரில் மட்டுமன்றி, அக்காலம் இச்சேகரத்தைச் சார்ந்த எல்லா வூர்களிலும் காணிக்கை விஷயத்தில் ஜனங்களுக்கிருந்த உற்சாகத்தையும், கடமை யுணர்ச்சியையும் காட்டாநிற்கும். தவிர, சபை வாழ்வுக்கான தசமபாகம், முதற்பலன் முதலிய காணிக்கைகளைக் கொடுப்பதுமன்றியில் தங்கள் தங்கள் சபைகளில் ஆலயக் கட்டுமானம், சட்டட ரிப்பேர், ஆலயச் சிப்பந்திச் செலவு முதலியவைகளிலும் மிஷனை எதிர் நோக்காமல், கூடுமான மட்டும் அவற்றிற்கான செலவில் பெரும் பாகத்தைத் தாங்களே கொடுக்கப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இதற்கும் பல உதாரணங்கள் கொடுக்கலாம். 1879ம் வருஷத்தில் ஆகஸ்டு மாதம் குளத்துக்குடிச் சபையார் 25 அடி நீளமும், 13 அடி அகலமுமுடையதான ஓர் சிற்றாலயத்திற்கு அஸ்திபாரம் போட்டு

குளத்துக்குடி
ஆலயம்

டிசம்பர் மாதத்திற்குள் அதைக் கட்டி முடித்தனர். அதற்கான செலவு ரூ. 644—1—0. அதில் மிஷன் கொடுத்த ரூ. 50ஐத் தவிர மீதி ரூ. 594ம் சபையாரே கொடுத்த பணம். இவ்வளவு துரிதமாய்ப் பணம் சேர்த்துக் கட்டி முடிக்கக் காரணம் அச்சபையைச் சேர்ந்த வயோதிபரான ஆபிரகாம் என்பவர் தம் மரணத்திற்கு முன் ஆலயம் பிரதிஷ்டையாகிவிடவேண்டும் என்ற அவாவினால் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியே. அவருடைய விருப்பம் மறு வருஷம் இரண்டாம் மாதத்திற்குள் பூர்த்தியாகவே, அவர் 1880 மார்ச்சு மாதத்தில் 'ஆண்டவரே இப்பொழுது உமது அடியேனை சமாதானத்தோடே போகவிடுகிறீர்' என்ற சிமியோனின் கீதம் தன்னில் நிறைவேறுதல் காண, நித்திரை யடைந்தார். இந்த ஆலயம் வளரும் சபைக்குச் சிறிதாக இருந்தமையால், அது 1902ல் (பின்பாகத்தை இடித்துப்) புதிதாகச் சற்று நீளமாகக் கட்டப்பட்டது.

**உடையார்குளம் பரி. தோமாவின் ஆலயம்**

1884ல் உடையார்குளம் ஆலயம் மழையில் விழுந்துபோனபின் 1885ல் தற்காலிகமாக ஓர் புதிய ஆலயம் கட்டி டிசம்பர் 17ல் பரி. தோமாவின் ஆலயம் என்ற பெயருடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனினும் ஸ்திரமான ஆலயம் ஒன்று கட்ட விரும்பி அதற்கு எஸ்டிமேட் ரூ. 2000ல் ரூ. 500ஐத் தாங்களே கொடுக்க சபையார் உடன்பட்டிருந்தார்கள். இது பற்றி முன் ஒரு பக்கத்தில் எழுதியுள்ளோம். தங்கள் கஷ்டத்திலிருந்து அக்காலத்தில் அச்சிறு சபையார் ரூ. 500 கொடுக்க உடன்பட்டதும், 1886 ஜூன் மாதத்திற்குள் அத்தொகையைக் கொடுத்து விட்டதும் நாம் மேற்கூறியவற்றை ரூபிக்கக்கூடிய ஆதாரமாகும்.

**அகப்பைக்குளம் ஆலயம்**

அகப்பைக்குளத்தில் கனம் கேமரர் ஐயரவர்கள் காலத்தில் முதல் ஆலயம் கட்டப்பட்டிருந்தது. ஆனால் சபை வளர்ச்சியடையவே, அவ்வாலய இட விஸ்தீரணம் போதாமையால் 1884ல் அதை இடித்துவிட்டு 1885ல் புதிய ஆலயக் (தற்போதுள்ள ஆலயம்) கட்டுமானத்தை ஆரம்பித்தார்கள். வருஷக் கடைசியில் தங்களிடம் பணமில்லாததால் வேலையை முடிக்காமல் நிறுத்த வேண்டியதாயிற்று. அவர்களுக்குதவியாக S. P. C. K. சங்கத்தார் ரூ. 100ம், மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் ரூ. 50-ம் கொடுத்தார்கள்.

**தோப்பூர் தேவாலயம்**

தோப்பூர் சபையார் 1889-ல் தங்களுக்கெனவோர் சிற்றாலயம் கட்டத் தீர்மானித்து ரூ. 60 எஸ்டிமேற்றில் பிளான் தயாரித்தார்கள். அக்காலம் அது வெகு சிறு சபை. மக்கள் மிகவும் ஏழைகள். எனினும் செலவான ரூ. 60-ல் பாதியான ரூ. 30ஐயும் தாங்களே தங்களுக்குள் வசூலித்துப், பின் மிஷனிலிருந்து ரூ. 30 பெற்று வருஷக் கடைசிக்குள் கட்டடத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள்.

பிள்ளையன்மனைச் சபையார் புதிய (தற்போதுள்ள) ஆலய வேலையை 1886 அல்லது 87-ல் ஆரம்பித்து, அவர்களும் பணமுட்டுப்பாட்டினுல் வேலையை நிறுத்தி வைத்திருந்தார்கள். 1889-ல் தாங்களே பணம் சேர்த்து மறுபடியும் கட்டத் தொடங்கினுர்கள். கொஞ்சங் கொஞ்சமாக வேலையை முன்னேற்றி 1894-க்குள் இரு தட்டடி வேலையையும் முடித்தார்கள். மேல்க் கோப்புக்கு ஓடு மேவியபின், ஜன்னல்களுக்கும் வாசல்களுக்கும் கதவுகளும், தளம், கோபுரம் முதலிய வேலைகளும் மட்டும் பாக்கியாயிருந்தன. "எப்படியும் சீக்கிரம் ஆலயக் கட்டுமானம் முற்றுப்பெறவேண்டும் என்ற வாஞ்சை மேலீட்டால் தங்களுக்குள்ளேயே வரி விதித்துக்கொண்டு பணம் சேர்க்கிறுர்கள். இப்போது அவர்களிடம் ரூ. 300 தானிருக்கிறது" என்று மர்காஷிஸ் ஐயர் அச்சபையாரின் ஆலயக் கட்டுமான முயற்சிகளைப் பாராட்டிச் சீமைக்கு எழுதினுர். சபையார் 1897, '98-ல் மிகுந்த முயற்சியுடன் உழைத்து, 1899ல் கட்டுமானத்தைப் பூர்த்தி செய்யவே, மகாகனம் மோர்லி அத்தியக்ஷரவர்கள் அவ்வருஷம் கிறிஸ்து பரமேறின திருநாளில் 'பரமேறுதலின் ஆலயம்' என்ற பெயருடன் பிரதிஷ்டை செய்தார்கள். இவ்வாலயக் கட்டுமானத்தில் செலவான தொகை ரூ. 4000. இதில் **S. P. C. K.** சங்கத்தாரின் உதவி ரூ. 250. மொத்தச் செலவில் பெரும்பாகம் சபையாராலேயே கொடுக்கப்பட்டது. *"தாங்களே வெகு பிரயாசத்துடன் மிகுதியாய்த் தங்கள் சொந்தப் பணத்தைக் கொண்டே கட்டினமையால், சபையார் வெகு குதூகலத்துடன் ஒழுங்காய் ஆலயத்துக்கு வருகிறுர்கள்" என்று இவர்களைப் பற்றிக் கனம் M. ஏசுவடியான் ஐயர் நற்சாக்ஷி எழுதினுர்.

பிள்ளையன்மனை பரமேறுதலின் ஆலயம்

எருசலேம் சபையாரும் புதிய ஆலயம் கட்டவுத்தேசித்து 1888 போல் பழைய கட்டடத்தை இடித்தார்கள். ஆனுல் 1889 ஜூன் வரை புதிய ஆலயக் கட்டுமானம் ஆரம்பிக்கவில்லை. எனினும் சீக்கிரம் அவ்வேலையைத் தொடங்க எண்ணி உற்சாகமாய்ப் பணப்பிரிப்பு நடத்தினுர்கள்.

எருசலேம்

ஆழ்வார்திருநகரிப் புது ஆலயப் பிரதிஷ்டையைப்பற்றி மேலே பார்த்தோம். ஒய்யான்குடிச் சபையார் தங்கள் ஆலயத்தை விரிவாக்க வெண்ணினர். பணவசூல் செய்த பின்னரே ஆலய வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்றுன்னித், தங்களுக்குள்ளேயே பண வசூலும் செய்யவாரம்பித்தார்கள். 'இக்காரியத்தில் ஈசாக்கு பிச்சமுத்து என்ற ஓர் வாலிபன் மிகுந்த உற்சாகமுடையவாக இலங்கையில் பண வசூலிலீடுபட்டிருக்கிறுர்' என்று 1896ம் வருஷ ரிப்போர்ட்டில் மர்காஷிஸ் ஐயர் எழுதினுர்.

ஒய்யான்குடி ஆலயம்

* M. D. C. 2nd Quarterly Report of 1901. P. 38.

அவ்வாலிபனின் முயற்சி பயனுடைத்தாயிற்று. சபையாரும் அவருடன் ஒத்துழைத்துத் தங்கள் புது ஆலயக் கட்டுமானத்தை 1898ல் ஆரம்பித்து முடித்து 1900 ஆகஸ்டு 14-ல் மகாகனம் மோர்லி அத்தியக்ஷரைக் கொண்டு பிரதிஷ்டை செய்தார்கள்.

வாழையடிச் சபையாரின் புதிய (தற்போதுள்ள) ஆலயக் கட்டுமானம் 1901-ம் வருஷம் ஆரம்பித்து வெகு துரிதமாய் வேலை நடந்துவந்தது. அவ்வண்ணமே வெள்ளரிக்காயூரணியிலும் ஆலயக் கட்டுமானவேலை 1902ல் ஆரம்பமாகி, இவ்விரு ஆலயங்களும் 1903 டிசம்பரில் தெய்வாராதனைக் கெனத் திறக்கப்பட்டன. வெள்ளரிக்காயூரணி ஆலயத்திற்கு ரூ. 600 செலவானது. இதில் ரூ. 200 சபையாரின் சொந்த முயற்சியால் கிடைத்தது. மீதிப் பணம் சங்கத்தாராலும் மற்றையோராலும் கொடுக்கப்பட்டது. உடையார்குளம் புதிய (தற்போதுள்ள) ஆலய வேலை 1899-ல் ஆரம்பமானது. ஆயினும் 2, 3 வருஷங்களாக வேலை தடைப்பட்டு மறுபடியும் 1902-ம் வருஷம் தொடரப்பட்டது. அவ்வருஷம் செப்டம்பரில் மர்காஷிஸ் ஐயர்,

**வேறுசில ஆலயங்கள்**

"உடையார்குளம் ஆலயக் கட்டுமான வேலை கொஞ்சங் கொஞ்சமாய் முன்னேறுகிறது. வேலையைச் சீக்கிரம் முடித்துவிட அவர்களைத் துரிதப்படுத்திக்கொண்டே யிருக்கிறேன்" என்றெழுதினர். இதே சமயத்தில் வெள்ளமடத்திலும் ஆலயக்கட்டுமான வேலை ஆரம்பமானது. இவ்விரு ஊர்களிலும் கட்டுமானவேலை 1907 துவக்கத்தில் முடிவுறவே, உடையார்குளம் ஆலயம் பரிசுத்த பவுல் ஆலயம் என்ற பெயருடன் 5—2—1907இலும், வெள்ளமடத்தின் ஆலயம் அடுத்தநாளிலும் மகாகனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மேற்சொல்லியவாறு நாசரேத் சேகரத்திலுள்ள பல கிராமங்களில் பழைய ஆலயங்கள் இடிக்கப்பட்டுப் புதிய ஆலயங்கள் கட்டப்பட்டதினால் 1885 முதல் 1907 வரையுள்ள இக்காலத்துக்கு 'ஆலயக் கட்டுமானக் காலம்' எனப் பெயரிடலாம் (Church-building Era). இக்காலத்தில் மேற்சொன்னவை தவிர முதலைமொழி, தோப்பூர், மூலக்கரை முதலிய கிராமங்களிலும் ஆலயக் கட்டுமான முஸ்தீப்புகள் ஆரம்பமாயின.

நாசரேத் ஆலயத்திலும் இடவசதி பற்றுக்குறை ஏற்படவே 1884ல் பின்பாகம் இடிக்கப்பட்டு இடவிஸ்தீரணத்துடன் கிராதி முதலியவை

**ஆலய விஸ்தீரணம்**

சற்று பின் தள்ளிக் கூட்டப்பட்டு, ஆகஸ்டு 14ல் பிரதிஷ்டையானது. 1886ல் கடையனோடையிலும், 1904ல் மூக்குப்பீறியிலும் அவ்விதமாக ஆலயங்கள் விஸ்தீரணமாக்கப்பட்டன. மூக்குப்பீறியில் ஆலய விஸ்தீரணச் செலவுக்கான ரூ. 1500 ஐயும் சபையாரே கொடுத்தார்கள்.

கனம் மர்காஷிஸ் காலத்தில் ஆலய வணக்கம் பிரதான ஸ்தானம் பெற்றது. கர்த்தருடைய வீட்டைப்பற்றிய பக்திவைராக்கியமும், வணக்க முறைகளில் வாஞ்சையும் அக்காலக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் விசேஷித்த அம்சங்களாயின.

ஓய்வு நாட்களில் மத்தியான ஆராதனைதான் முந்தின மிஷனெரிமாரின் காலத்தில் விசேஷித்த ஆராதனை. முதல் ஓய்வுநாடோறும் அவ்வாராதனையில் பரிசுத்த நற்கருணை பரிமாறப்படும். முற்காலத்தில் பழைய ஜெர்மன் மிஷனெரிகளான இரியன், ரோசன் ஐயர்மார் ஏற்படுத்திய முறைகளில் ஆராதனைகள் நடந்தன. இரியனும், ரோசனும் லூத்தரன் முறைப்படி பட்டம்பெற்றவர்கள். [இரியன் பின்பு ஆங்கில திருச்சபைக் குருவபிஷேகத்தையும் பெற்றிருந்தார்.] எனவே அவர்கள் லூத்தரன் முறைப்படியே ஆராதனைகள் நடத்தினார்கள். பின்னர் கேமரர் காலத்தில் ஆராதனைகளெல்லாம் தற்கால 'C. M. S.' ஆலயங்களில் காணப்படுகிற பிரகாரம் 'சாதாரணமாகவே' நடத்தப்பட்டனவேயன்றி உயர் முறையாகவல்ல (High-Church). ஸ்ட்ராஹ்ன் ஐயர் ஆராதனைகளில் துதி தோத்திர ஏறெடுப்புகள் சிறப்பாய் இருக்க வேண்டிப் பாட்டுகள் விஷயத்தில்மட்டும் சற்று முன்னேற்றம் உண்டாகச் செய்தார். அவர் காலத்தில்தான் பாடகர் (Choir) என்ற வகுப்பார் ஆராதனைகளில் பங்குபெறலாயினர்.

மர்காஷிஸ் ஐயர் ஆங்கில உயர் சபையைச் (High-Church Tradition) சேர்ந்தவர். ஆராதனைகளில் சடங்காச்சாரங்கள் அதிகமிருக்கவேண்டுமென்ற துணிபுடையவர் (rituals). அவர் நாசரேத் வந்ததும் இங்குள்ள ஆராதனை முறைமைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. மேலும் சாயர்புரத்தில் 1880ம் வருஷத்திற்குள் உயர்தர முறைகள் கனம் ஆதம்சன் ஐயர் காலத்திலேயே ஆரம்பமாகி வழக்கத்தில் வந்திருந்தன. எனவே நம் ஐயர் இங்கும் அவற்றை ஆரம்பிக்க எண்ணினார். ஆனால் அவர் வெகு ஜாக்கிரதையுள்ளவர். ஜனங்களின் மனதைப் புண்படுத்தத்தக்க காரியங்களெதையும் எளிதில் செய்வது அவருடைய சுபாவத்துக்கு விரோதம். ஆராதனை முறைமைகளில் திடீ-

'உயர்முறை'

ரென்று தலையிட்டு, மாறுதல்களையுண்டுபண்ணி மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பது புத்தியீனம் என்று எண்ணி, முதல் 3 வருஷங்கள் எவ்வித மாறுதலும் செய்யாது விட்டிருந்தார். அதன்பின், மாதத்தில் இரு ஓய்வுநாட்களில்மட்டும் மத்தியானம் நடைபெற்றுவந்த திருவிருந்தாராதனையை 1880ம் வருஷ முதல் நிறுத்திக், காலை 5-30 மணிக்கு அது நடைபெறச் செய்தார். இதற்குமுன் தமக்கு ஒத்தாசையாக, கைத்தொழிற் பாடசாலைத் தலைமையாசிரியர் (அக்காலத்தில் மேற்பார்வையாளர்—Superintendent) திரு கோவிற்பிள்ளை உபாத்

தியார் கனம் வி. ஆபிரகாம் ஐயர், ஸ்ரீ * சாமுவேல் உபதேசியார் முதலியோருடைய அபிப்பிராயத்தையும் தம் கொள்கைக்குச் சாதகமாகக்கொண்டிருந்தார். மேலும் காலை 5–30 மணி யாராதனையும் எவராலும் விரும்பப்படத்தக்கதாயிருந்தமையால், இம்மாறுதலுக்கு, எவ்வித ஆக்ஷேபணையும் இருந்ததில்லை.

எனவே ஐயர் ஊக்கங்கொண்டு மேலும் புதியன பல புகுத்தலானார். அவ்வருஷ இறுதிக்குள் திருமேஜையின்மீது சிலுவை வைக்கப்பட்டது. 'உயர்தர' ஆராதனைச் சடங்குகள் [தலைகுனிதல், திருமேஜையின் பக்கமாகத் திரும்புதல், கிறிஸ்துவின் திருவவதாரத் திருநாமம் — 'இயேசு' என்னும் பரிசுத்த பதம் — உச்சரிக்கப்படும்பொழுது தலை வணங்குதல், தெண்டனிடல், பிரதிஷ்டை ஜெபத்தில் அப்பமும் இரசமும் பிரதிஷ்டையானதும் முழந்தாளில் நின்று வணங்குதல், தூபங்காட்டுதல், திருவிளக்கு எரித்தல் முதலியன]யாவும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. உடனே சபையில் குழப்பமுண்டாயிற்று. மர்காஷிஸ் ஐயர் இதை எதிர்பார்த்திருந்தாரில்லை. ஆனால் இனிப் பின்வாங்கக்கூடாது என்று துணிந்தார். பலர் புதிய முறைமைகளை ஒப்புக்கொண்டார்கள். சிலர் இன்றுள்ளதுபோலவே அன்றும், புறச்சபைகளைச் சேர்ந்துகொள்வதாகப் பயமுறுத்தினர். ஐயர் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. 'சிலுவைக் குழப்பம்' என்ற இச்சம்பவமும் ஓராண்டுக்குள் பழங்கதையாயிற்று.

**சிலுவைக் குழப்பம்**

1883ம் வருஷம் முதல் நாசரேத் ஆலயத்தில் ஒவ்வொருநாடோறும் நற்கருணை பரிமாறப்படலானது. வார நாட்களில் பிரதி வியாழக்கிழமையிலும், திருநாட்கள்வரின் அந்நாட்களிலும் திருவிருந்தாராதனை நடைபெற்றது. கிறிஸ்மஸ், ஈஸ்டர் என்ற விசேஷித்த பண்டிகைகளுக்கொப்பாக பரிசுத்த ஆவியின் திருநாளும் கொண்டாடப்பட்டது. 1886ம் வருஷத்தில் கிறிஸ்மஸ் தினத்தில் 621 பேரும், ஈஸ்டரில் 693 பேரும், பரிசுத்த ஆவியின் திருநாளன்று 331 பேரும் நற்கருணை சேர்ந்ததாகக் கணக்கெடுக்கப்பட்டது.

1902ம் வருஷ இறுதியில் நாசரேத்தூரில் சிலர் காலரா நோய்வாய்ப்பட்டனர். மர்காஷிஸ் ஐயரும், ஆஸ்பத்திரி ஊழியரும் அக்காலை மக்களுக்காற்றிய அரியதொண்டை இவண் விஸ்தரிக்கத் தேவையில்லை. உற்ற தகப்பன்போல ஆன ஒத்தாசைகளைச்செய்து பல சிகிச்சை முறைகளையும் கையாடினர். ஆயினும் சபையாரில் நால்வரும், பள்ளிக்கூட மாணவரில் எழுவரும் மரித்துவிட்டனர். எனவே மர்காஷிஸ் ஐயர்

* திருச்சி காலஞ்சென்ற டாக்டர் A. மதுரம் அவர்களின் பாட்டனார்.

நித நற்கருணை — 1902 டிசம்பர் 6ம் வ முதல் தினந்தோறும் காலையில் 8 மணிக்கு ஆலயத்தில் பரிசுத்த நற்கருணை பரிமாறவும், ஜனங்கள் அதில் பங்கெடுக்கவும் ஒழுங்கு செய்தனர். அன்றையத் தினத்திலிருந்து இன்றைய வரையில் அவ் வாராதனை ஒழுங்காய் ஆலயத்தில் நடைபெற்று வருகிறது.

பரிசுத்த நற்கருணை ஆராதனையில் மட்டுமன்றி, ஆலயத்தில் நடை பெறும் சகல ஆராதனைகளிலும் மர்காஷிஸ் ஐயரின் கவனம் சென்றது. 'பரிசுத்த அலங்காரத்தோடு கர்த்தரைத் தொழுதுகொள்ளவேண்டும்' என்பது அவரது சட்ட வாக்கியம். ஆராதனைகளின் ஒழுங்கு, கிரமம், பிரசங்கங்களின் சொல் நயம், பொருள் நயம், கீதங்களின் இன்னிசை, கருத்துறப்பாடும் பாடலருமை இவையனைத்திலும் அவருடைய செல் வாக்கு மிளிர்ந்தது. ஒவ்வொன்றுக்கும் தனிக்கவனம் செலுத்தலானார். எனவே சாதாரண மாலையாராதனையுங்கூடத் தொழுவோரைப் பரவசப் படுத்தக்கூடியதாயிருந்தது. 1893 ஜனுவரியில் இவ்வூரைப் பார்த்து விட்டுப்போக வந்த ஆஸ்டிரேலியாவிலுள்ள சிட்னி நகரத்து மகாகனம் ஆல்பிரட் பாரி (Rt. Rev. Alfred Barry) அத்தியக்ஷர் "இன்று மாலை ஆராதனையில் பிரசங்கம் செய்தேன். அந்தத் தமிழாராதனை என்னைக் குதூகலப்படுத்திற்று" என்று எழுதுகிறார். 1896 ஏப்ரிலில் நாசரேத் துக்கு வந்த, இலங்கை கொழும்போப் பட்டணத்தில் மிஷனெரியாயிருந்த கனம் F. H. டிவின்ற்ன் (Rev. F. H. De Winton). ஐயர் இலங்கைத் திருச்சபைப் பத்திரிகையில் (Ceylon Churchman) "நாசரேத் என்ற பெயரே எவரையும் கவர்ச்சிக்கக் கூடியதாயிருக்கிறது. இங்கு ஒவ்வொரு நாளிலும் காலையிலும், மாலையிலும் ஆராதனையுண்டு. சராசரி ஆஜர் 80 பேர். உயிர்த்தெழுந்த திருநாளில் இரவு 1-30 மணிக்கும், விடியல் 3-30 மணிக்கும், காலை 7-30 மணிக்கும் பரிசுத்த நற்கருணை ஆராதனைகள் நடத்தப்பட்டன. ஒய்வுநாள் ஆராதனையில் சிறு குழந்தைகள் அமைதி யாயிருந்தது புகழ்ச்சிக்குரியது. பாடகர் வெகு கவலை யுடன் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் பாடினது வெறும் குரல் தொனியல்ல (No mere exercise of voice). ஆனல் அது மெய் யான கிறிஸ்தவத் தொழுகையும், முழு ஆத்துமாவோடும், உள்ளத்தின் உணர்ச்சிமிக்கப் பக்தியோடும் கடவுளுக்குச் செலுத்தும் வணக்கமு மாகும்". என்றெழுதினர். பாடகர் விசேஷித்த பிரகாரமாய் அப்பிய சிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இனிமையாய்ப் பாடுவதற்கனுகூலமாய் இருப்பவைகளிலொன்று இசைக்கருவியாம் (Harmonium). தற்போது நம் ஆலயத்திலுள்ள கருவி கனம் ஐயரால் 1896-ம் வருஷம் வருவிச்

ஆராதனை அலங்காரம்

கப்பட்டது என்று சொல்லுகிறார்கள். வாத்தியக்கருவி மட்டுமல்லாமல் உயர்ந்த பாட்டபிமானிகளையும், தேர்ந்த இன்னிசை யாளரையும் நம் ஆலயப்பாடகர் எக்காலும் தங்கள் ஆசான்களாகக் கொண்டதுபற்றி, இன்றும் தென் னிந்தியாவிலேயே தங்கட்கு நிகரெவருமிலர் என்ற பெருமையை நசரை விஜயம் செய்வோர் பலரது பாராட்டுரைகளின் மூலம் அவர்கள் பெற் றுள்ளனர்.

ஆலயப் பாடகர்

1896ம் ஆண்டு அக்டோபர்மீ முதல் மர்காஷிஸ் ஐயர் நாசரேத் மிஷன் என்ற பெயரை மாற்றி, இம்மிஷனுக்கு பரிசுத்த யோவான் மிஷன் என்று பெயர் வைத்தார். எக்காரணம் பற்றி ஐயர் இப்பெயரைத் தெரிந்துகொண்டார் என்பது எம் ஆராய்ச்சிக்கு எட்டவில்லை. ஒருக்கால் முந்திய ஆல யம் இப்பெயருடன் ஏற்கெனவே விளங்கியிருக்கக்கூடும் என்றும் அக்காரணத்தினுலேயே இப்பெயரைத் தெரிந்துகொண்டா ரென்றும் எண்ணலாம்.

பரி யோவான் மிஷன்

பரிசுத்த யோவான் ஆலயத்தில் குழந்தைகள் ஆராதனை நேரங்களில் காட்டிய கிரமமும், பக்தியும் பலராலும் மெச்சிக்கொள்ளப்பட்டதுண்டு. மர்காஷிஸ் ஐயர் சிறு பிள்ளைகளை வெகுவாய் நேசித்தார். அவர்கள் எப் பொழுதும் தம்மைச் சுற்றிலும் காணப்படுவது அவருக்கு மிகவும் பிரீதி. மாலை வேளையில் தமது சின்னக் குதிரைவண்டியில் சென்று, சற்று உலாவி வரும்பொழுதும் ஐந்தாறு சிறுவரைத் தம்முடனிட்டுச் செல்வார். எப் பொழுதும் தம்முடனே யிருந்துவந்த அக்குழந்தைகள் தேவதா பக்தியிலும், ஆராதனை வாஞ்சையிலும் தம்மைப் போலவே பற்றுத லுள்ளவர்களாயிருக்க அவர்களைப் பழக்கினர். சன் மார்க்க நெறியில் அவர்களை வளர்க்க அவர் வெகு பாடு பட்டார். பம்பாய் அத்தியக்ஷாதீனத்திலுள்ள மாச கோன் பரி. பேதுருவின் ஆலயப் பத்திரிகையில் (St. Peter's Chapel, Mazagon, Bombay) காணப்பட்ட ஒரு வசனம் இங்குக் குறிப்பிடத் தக்கது: "இங்கு (நாசரேத்தில்) தங்கள் சின்ன ஆடைகளையும் கூடச் சரி யாய்க் கட்டிக்கொள்ளத் தெரியாதவர்களும், ஆராதனையில் என்ன நடக் கிறது என்பதைத் தெளியமாட்டாதவர்களுமான சின்னஞ்சிறு குழந்தை கள் ஆலயத்தைத் தங்கள் வீட்டைப்போல நேசிக்கப் பழக்கப்பட்டிருக்கிறார் கள்" என்பதே அவ்வசனம்.

குழந்தைகளின் பக்தி

பிள்ளைகளில் இவ்வளவு தூரம் அன்புகூர்ந்து அவர்களைச் சத்காரியங் களில் பழக்குவித்த ஐயர் அவர்களுக்காக 1903-ம் வருஷம் ஆகஸ்டு மாதத் தில் நாசரேத் சிறுவர் மிஷன் (Nazareth Children's Mission) என்

ஒருரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். இந்த மிஷனின் ஊழியர் தற்காலம் சிறு பிள்ளைகளின் மிஷனர் செய்வது போன்ற ஊழியத்தைச் செய்து வந்தார்கள்.

**சிறுவர் மிஷன்**

* இம்மிஷன் பிற்காலத்தில் 'திருநெல்வேலி S. P. G. சிறுவர் மிஷன்' (S. P. G. Tinnevelly Children's Mission) என்ற பெயருடன் திருநெல்வேலியில் S. P. G. சேகரங்கள் அனைத்துக்கும் பொதுவாயமைந்தது.

**சுய ஆதரவு.**

கனம் கேமரர் ஐயர் காலத்தில் சுய ஆதரவுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டனவென்றும் ஒரே நாளில் ரூ. 1300 சுயசம்ரக்ஷணை நிதிக்கென்று சேர்க்கப்பட்டது என்றும் முன் சொன்னோம். கேமரர் ஐயர் ஆரம்பித்த இந்த நிதியைக் கனம் ஹென்ரி போப், தாமஸ் பிரதர்ட்டன், J. M. ஸ்ட்ராஹ்ன் ஐயர்மார் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து அது வளர்ச்சியுறச் செய்ததின் பயனாய் 1884-ம் வருஷத்திற்குள் அது ரூ. 15000 கொண்ட ஒரு பெரும் நிதியாயிற்று. இத்தொகை ஒரு மூலதனமாயிருக்க, சுய ஆதரவுத்துறையில் மர்காஷிஸ் ஐயர் வேறு ஒரு முறையிலிறங்கினர். 1884-ல் நாசரேத் டிஸ்திரிக்ட் கவுண்சிலில் ஒவ்வொரு சபையும் தன் தன் சுய ஆதாவைத் தேடிக்கொள்ளவேண்டிய கடமையை வற்புறுத்தினர். அதன்படி ஒவ்வொரு சபையும் தன் தன் திராணிக்குத் தக்கபடி உபதேசிமார், சபை ஊழியம் மட்டும் செய்யும் உபாத்திமார் போன்ற தன தன் ஊழியரின் சம்பளத்தில் ஒரு பாகத்தையேனும் கொடுக்க பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டும் என்று அக்கௌண்சிலில் தீர்மானிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி 1885-ம் வருஷத்திலேயே நாசரேத், மூக்குப்பீறி, கடையனோடை, எருசலேம், பன்றிமடல் சபைகள் தங்கள் ஊழியரின் சம்பளம் முழுவதையும், அகப்பைக்குளம், பிள்ளையன்மனை, குளத்துக்குடி, வாழையடிச் சபைகள் தங்கள் ஊழியரின் சம்பளத்தின் முக்கால் பாகத்தையும், வேறு நாலு சபைகள் பாதியையும், சில மூன்றில் ஒன்றையும் இன்னும் சில $\frac{1}{4}$-ஐயும் கொடுக்கக் கூடியவர்களானர்கள். ஒரு சபைக்காவது இத்திட்டத்தினின்று விலக்களிக்கப்பட்டதில்லை. 'நாசரேத் டிஸ்டிரிக்ட் கவுண்சிலாருடைய இத்திட்டம் மிகவும் மெச்சத்தக்க'தென்று, இச்செய்கையை நன்கு மதித்து சென்னை அத்தியக்ஷாதீனக் கழகத்தார் ஒரு பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இத்திட்டத்தை ஜனங்கள் வெகு உற்சாகத்துடன் வரவேற்றது தங்கள் ஊழியருக்குச் சம்பளம் கொடுப்

**சபைச் சுய ஆதரவு**

* ஒவ்வொரு ஊரிலும் 'நாசரேத் சிறுவர் மிஷன்' கிளைச் சங்கங்கள் ஏற்பட்டன. இம்முறை C. M. S. பாகங்களில் ஏற்பட்டிருந்த சிறுவர் வேதாக ஐக்கிய சங்கத்தின் மாதிரியைப் பின்பற்றி நடைபெற்றது.

பதி தங்கள் கடமை என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டதற்கு அத்தாக்ஷி 1886-ல் உடையார்குளம் உபசேகரக் குருவாய் இருந்த கனம் ஆரோன் பிச்சமுத்து ஐயர் "என் பாஸ்றரேற்றில் உடையார்குளம் சபையார் தங்கள் உபதேசியாரின் சம்பளத்தில் பாதியை தாங்களே கொடுக்கிறார்கள். மழவை, கானூர்ச் சபையாரும் தங்கள் தங்கள் உபதேசிமாரின் சம்பளத்தில் $\frac{1}{4}$ பாகத்தைக் கொடுத்துவருகிறார்கள்" என்று வெகு உற்சாகத்துடன் எழுதினர். * 1903-க்குள் நாசரேத், மூக்குப்பீறி என்ற இரண்டு பாஸ்றரேற்றுகளும் தங்கள் குருமாரின் முழுச் சம்பளத்தையும் தாங்களே கொடுக்கலாயின. கடையனோடை பாஸ்றரேற்று மக்கள் குருவானவரின் சம்பளத்தில் $\frac{2}{3}$ஐ கொடுத்துவந்தார்கள்.

சுய ஆதரவில் திருநெல்வேலித் திருச்சபையை மிஷனெரிமார் பழக்குவிக்கவில்லையென்று இன்னும் குறைகூறுகிற திருநெல்வேலி கிறிஸ்தவர் உளரன்றோ! அப்படிப்பட்டவர்கள் சரித்திரத்தை அறிவார்களாயின் அக்குற்றத்தை யார்மீது சுமத்துவார்களோ !

*தவச உற்சவம்*

† தவச உற்சவம் கொண்டாடுதலென்ற நல்வழக்கம் மகோன்னதப் பிரசங்கியும் சிறந்த மிஷனெரியுமான (C. M. S.ஐச் சேர்ந்த) கனம் தாமஸ் உவாக்கர் ஐயர் அவர்களால் முதன் முதலாய் 1891ம் வருஷத்தில் சாக்ஷியாபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பர். ஆனால் அது முதன் முதலாக சாக்ஷியாபுரத்திலன்று, நாசரேத்தில் 1884ல் ஆசரிக்கப்பட்டதென்று புலனாகிறது. 1884ல் இங்கு ஆரம்பிக்கப்பட்ட இவ்வுற்சவம் 20 வருஷங்களாக நடைபெறாமல் தடைப்பட்டு விட்டது. இதற்கிடையில் கனம் உவாக்கர் ஐயரவர்கள் அதைச் சாக்ஷியாபுரத்தில் ஸ்தாபிக்கவே அது வெகு விரைவில் நல்லூர் (1892), மெஞ்ஞானபுரம் (1893), சுவிசேஷபுரம் (1894), டோனாவூர் (1894), பாளையங்கோட்டை (1895), சுரண்டை (1896), பண்ணைவிளை (1896) முதலிய சேகரங்களிலும் ஆசரிக்கப்படலாயிற்று. நாசரேத்தூரார் 'முந்தினோராயினும இப்போது பிந்தினோராகிவிட்டனர்' திருநெல்வேலிச் சபையின் சரித்திரத்தில் இவ்விதம் S. P. G. சங்க ஊழியம் C. M. S. சங்க ஊழியத்திற்கு பின்னிட்டதில் இது முதல் தடவையன்று.

மனுசே, எப்ராம்யீ

---

* *1896*-க்குள் நாசரேத் சேகரத்தில் 7 சபைகள் பூரண சுய ஆதரவு பெற்றுவிட்டன. உபதேசிமார் சம்பளமட்டுமின்றி தங்கள் ஊர் பள்ளிக்கூடங்களின் உபாத்திமார், கோவில்கூட்டி என்ற ஊழியரின் சம்பளத்தையும், ஆலயச் சிறபந்திச் செலவுகள், கட்டட ரிப்பேர் செலவுகள் யாவற்றையும் தாங்களே கொடுக்க கூடியவர்களானார்கள்.

† 100 Years of C. M. S. in Tinnevelly by Paul Appasamy Page 223.

இதைக் குறித்து மகா கனம் கால்ட்வெல் அத்தியக்ஷர் † 1880-ம் வருஷ நூற்றாண்டுக்கொண்டாட்டத்தின்போது S. P. G. ஐயும் C. M. S. ஐயும், யாக்கோபின் மரணப் படுக்கையில் அவனால் ஆசீர்வதிக்கப்பட்ட யோசேப்பின் மக்கள் மனாசேக்கும், எப்பிராயீமுக்கும் ஒப்பிட்டுப் பேசினார். ஆனால், அதினால் குறைவு ஒன்றுமில்லை. கடவுளுக்குச் சித்தமான நேரத்தில்தான் அவருடைய நாம மகிமைக்கான காரியங்கள் நடைபெற்று வருவது கண்கூடு.

C.M.S. பிரதேசங்களில் வெகு விரைவாய்ப் பரவி நின்ற இப்பண்டிகை 1904ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நாசரேத்திலும் கொண்டாடப்பட்டது. ஆனால் C. M. S. தவச உற்சவங்களுக்கும் நாசரேத் பண்டிகைக்கும் ஓர் வித்தியாசம் காணப்பட்டது. C. M. S. இல் ஒரு சேகர கிறிஸ்தவர்கள் எல்லோரும் சேகரத் தலைமை ஸ்தானத்தில் கூடி தங்கள் ஸ்தோத்திர ஆராதனையை ஆசரித்தனர்; இங்கு இப்பண்டிகையை நாசரேத்தூரார் மட்டுமே கொண்டாடலாயினர். இயல்பாகவே தங்களில் உற்சாகமுள்ள சபையார் தங்கள் பொருட்காணிக்கைகளை மனப்பூர்வமாகப் படைத்தார்கள். இம் முதல் கொண்டாட்டத்தில் சேகரிக்கப்பட்ட காணிக்கை ரூ. 358—4—10. புதிய பண்டிகை ஒன்று ஏற்படுத்தினால் சங்கக் காணிக்கை குறையலாம் என்று ஊழியர் ஐயுற்றனர். ஆனால் அவ்வருஷச் சங்ககாணிக்கை முந்திய வருஷத்தியதைவிட ரூ. 100 அதிகமாயிற்று. அடுத்த வருஷமுதல் தவச உற்சவக்கொண்டாட்டம் சேகரத்திலுள்ள மற்றச் சபைகளிலும் ஆசரிக்கப்படலானது.

நாசரேத் உற்சவம்

**பெண்கள் சங்கம்**

சங்கக் காணிக்கை படைக்கும் வழக்கம் ஆரம்பமானகால முதலே அது குடும்பத்தலைவன் பொறுப்பாயிருந்தது என்று நாம் முன்னே பார்த்தோம். கனம் மர்காஷிஸ் ஐயர் கடவுளுக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரக் காணிக்கை படைக்கும் இக்கைங்கர்யத்தில் பெண்களுக்கும் உரிமையுண்டு, ஆகையால் அவர்களும் அப்பண்டிகை கொண்டாடுவது அவசியம் என்று போதித்து, 1904ம் வருஷத்தில் 'பெண்கள் சங்கப்பண்டிகை' ஒன்று ஏற்படுத்தினர். இதுவும் ஜனங்களால் நன்கு வரவேற்கப்பட்டது. மற்றச் சபைகளிலும் வெகு விரைவில் இவ்வழக்கமும் கையாளப்பட்டது.

பெண்களின் காணிக்கை

மேலே சொன்னபடி கிறிஸ்தவமக்கள் தங்கள் காணிக்கைகளைத் தசமபாகமெனவும், தவச உற்சவ மெனவும், முதற்பலன் எனவும், ஆண்கள் சங்க

† Page 160 Reminiscences of Rt. Rev. R. Caldwell by Rev. J. L. Wyatt

மெனவும், பெண்கள் சங்கமெனவும் ஓய்வுநாட் காணிக்கையெனவும் பல வழிகளிலும் உற்சாகமாய்க் கர்த்தருக்கென்று படைக்க முன் வந்ததினால் நாசரேத் சேகரம் வெகு சீக்கிரத்தில் பூரண சுய ஆதரவுள்ளதாய் விளங்கக் கூடியதாயிற்று.

**ஆவிக்குரிய ஊழியம்**

ஆவிக்குரிய பணிவிடையும் திறம்பட நடைபெற்றது. இம்மட்டும் நாம் பார்த்தபடி சுவிசேஷ ஊழியம், ஆலயப் பணிவிடை, திவ்ய ஆராதனைகள், சிறுவர் ஊழியம் முதலிய பலவற்றிலும் முன்னேற்றம் காணப்பட்டது. தவிர, ஒவ்வொரு சபையிலும் வேத வாசிப்புக் கூட்டங்களும் ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றுமாக நடத்தப் பட்டன. ஓய்வு நாளில் காலை ஆராதனை முடிந்தவுடன் ஆண்கள் வேதவாசிப்பு வகுப்புகள் நடைபெறும். அவற்றில் வேதபாடம் வரிசைக் கிரமமாய்க் கற்றுக்கொடுக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகலில் பெண்களுக்கென்று அவ்விதக்கூட்டங்கள் நடைபெற்றன. இவ்வேதாகம வகுப்புகள் நாசரேத், மூக்குப்பீறி, கடையனோடை முதலிய பெரிய சபைகளில் வெகு ஒழுங்காய் நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது.

*வேதபாட வகுப்பு*

திடப்படுத்தல் ஆராதனைகள் கிட்டத்தட்ட வருஷந்தோறும் நாசரேத்தில் நடைபெற்றுவந்தன. இன்றுள்ள நமக்கு இது ஆச்சரியமன்று. ஆனால் அக்காலத்தில் திடப்படுத்தல் என்றால் அது இலகுவில் முடியக்கூடியதன்று. ஏனெனில் கல்வியறிவு மிகக்குறைவு, கற்றுக் கொடுக்க ஆட்களும் மிகவும் சுருக்கம், திடப்படுத்தல் மாணவரைச் சேர்ப்பதும் சிரமம், தற்காலத்தில் போல் அம்மாணவ மாணவிகள் சிறுவரல்லர். வாலிபராயும் வாலிபம் கடந்தோராயும், பலர் வயது முதிர்ந்தோராயுமிருந்தனர்.

*திடப்படுத்தல்*

மேலும் கனம் மர்காஷிஸ் ஐயர் சேகர முழுவதிற்குமாக ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்துவதினால் மிகுந்த பலனுண்டு என்பதை நம்பினவராகையால் கூடுமானமட்டும் அடிக்கடி (சில வருஷங்களுக்கொரு கூட்டமாவது) நடத்தப் பிரயாசப்பட்டார். அக்கூட்டங்களுக்குச் சேகர குருமார், ஊழியர்மட்டுமல்லாமல் கூடியமட்டும் எல்லாச் சபையாரும் தூரத்தைப் பொருட்படுத்தாமல் கிராமங்களிலிருந்தும் வந்து சேரவேண்டும். 1892-ம் வருஷம் முதலூர், கிறிஸ்தியாநகரம் என்ற இரு சேகரங்களும் மர்காஷிஸ் ஐயரின் மேற்பார்வைக்குட்பட்டிருந்தனவாதலால், 1885-க்குப் பின் நடந்த கூட்டங்களுக்கு அச்சேகர ஊழியரும் சபையாரும் வர எதிர்பார்க்கப் பட்டார்கள். இவ்விதக் கூட்டங்களில் ஜனங்களுக்கு

**ஆவிக்குரிய கூட்டங்கள்**

சுவிசேஷ உபதேசம் செய்யவென்று கல்கத்தா, பாம்பே முதலிய நகரங்களிலுள்ள ஆக்ஸ்போர்டு இயக்கத்தைச் சேர்ந்த பக்தர்களையும் அழைப்பது வழக்கம். அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி நாம் ஏதாவது கூறவெண்ணின் இடம் போதாதாகையால் விசேஷித்த சிலரைப்பற்றி மட்டும் இரண்டொன்று கூறுவம்.

1884-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்ட் பட்டணத்தின் குருக்களில் ஒருவரான கனம் சார்ல்ஸ் கோர் (Rev. Charles Gore of Oxford.) ஐயரும் அவருடன் பாம்பேயிலிருந்து கனம் பீல் (Rev. Br. Peale) ஐயரும் நாசரேத்துக்கு வந்தார்கள். இவர்கள் வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்தான் ஆரியசமாஜ 'இந்து 'மிஷனெரிமார்' ஆழ்வார்திருநகரியில் கிறிஸ்துமார்க்கக் கண்டனக்கூட்டங்கள் நடத்திச் சென்றிருந்தார்கள். கோர், பீல் ஐயர்மார் அவ்வூர் சென்று வேதாந்திகளுக்கேற்றவாறு தத்துவ சாஸ்திர முறையில் இந்துக்களுக்குக் கிறிஸ்துமார்க்க சத்தியங்களை விளக்கிக் காட்டினார்கள். திரள் கூட்டமாக இந்துக்கள் கூடியிருந்து இப்பக்தரின் பிரசங்கங்களைக் கவனத்துடன் கேட்டார்கள். கனம் பீல் ஐயர் நாசரேத்திலும் பிரசங்கங்கள் நிகழ்த்தினார். அவர் நாசரேத்

**பீல் ஐயர்**

ஆலயத்தில் பரிசுத்த நற்கருணையில் பங்கு பெற்று மிகுந்த பரவசமடைந்தவராய்த் தம்முடைய மேலதிகாரிகளுக்கு எழுதின கடிதத்திலிருந்து அக்கால நசரை மக்களின் பக்தி எவ்வளவு உச்சநிலையிலிருந்தது என்பது புலனாகிறது. அவர் "கிறிஸ்துவின் அங்கங்களான நாசரேத் சபையார் ஒருவர்பின் ஒருவராய் கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து, ஜீவபானமான அவருடைய ரத்தத்தை உட்கொள்ளுவதை அந்த நீண்ட ஆராதனையில் முழு நேரமும் முழந்தாளில் நின்று கவனித்தேன் இந்த நற்கருணையாராதனைகளின் மூலம் வெளிப்படும் தெய்வீக வல்லமையும் சக்தியும் எத்துணையதிகமாயிருக்கவேண்டும்! இந்த வல்லமையும் சக்தியும் சுற்றிலுமுள்ள கிராமங்களையும் தன் வயப்படுத்தி, பக்கத்திலுள்ள பட்டணமாகிய ஆழ்வார்திருநகரியையும் நிச்சயமாகவே தாக்கக்கூடியதாகும். அங்குள்ள கோவில்களின் தேவதைகள், 'தேவனுடைய குமாரனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? ஏன் எங்கள் பட்டணத்தின் மீது படையெடுத்து, எங்களாலயங்களைப் பாழாக்கி, எங்கள் தொண்டர்களின் இருதயங்களைக் கவர்ந்து செல்கிறீர்? உயிரற்ற சொரூபங்களை வணங்க நாங்கள் அவர்களைப் பயிற்றுவித்திருக்க, அச்சொரூபங்களை அப்புறப்படுத்துவதற்கு ஜீவனுள்ள தேவகுமாரனை அன்பின் சொரூபத்தை ஏன் அனுப்புகிறீர்? என்று அங்கலாய்க்கமாட்டார்களா என்று எனக்குள் சிந்தனை செய்தேன்" என்றெழுதினார்.

1889-ல் பம்பாயிலிருந்து ஆக்ஸ்போர்ட் இயக்கத்தைச் சேர்ந்தவரான கனம் பேஜ் (Rev. Father Page) ஐயரும், கல்கத்தாவிலிருந்து கனம் J. L. பீச் (Rev. J. L. Peach) ஐயரும் மர் காஷிஸ் ஐயரால் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தி, அவற்றில் பேஜ் ஐயர் கிறிஸ்தவ சித்தாந்தங்களை விளக்கியும், பீச் ஐயர் விசுவாச ஜீவிய வளர்ச்சியைப்பற்றியும் பிரசங்கங்கள் செய்தார்கள்.

பேஜ் பீச் ஐயன்மார்

அவ்வருஷ இறுதியில் டிசம்பர்மீ 28-ம௳ கனம் G. U. போப் ஐயரின் மருமகனும் மகளும் (Dr. and Mrs. Drake-Brockman) இரண்டு நாள் இவ்வூரில் தங்கி மக்களைச் சந்தித்து, ஸ்தாபனங்களைப் பார்வையிட்டு நல்லுபதேசம் தந்துபோயினர்.

1893-ம் வருஷம் இந்தியா, பர்மா, இலங்கை மேற்றிராணியார் மகாகனம் E. R. ஜாண்சன் (The Most Rev. E. R. Johnson, Metropolitan of India, Burma & Ceylon) நசரைக்கு விஜயம் செய்து இரண்டு நாட்கள் தங்கிப்போயினர். அவ்வருஷ M. D. C. report-க்கு தம் விஜயத்தைப்பற்றி அவர் எழுதிய அறிக்கையில் "பல திறப்பட்ட வேலைகள் ஒரேஇடத்தில் நடைபெறுவதால், ஒரே நோக்கில் இங்கு நடைபெறுகிற சகல ஊழியங்களையும் கண்கூடு கொள்ளலாம். இவ்வூரில் ஒருவித வசீகரம் காணப்படுகிறது. கிறிஸ்து மார்க்கம் சகல ஜாதிகளையும் பரிசுத்தப்படுத்தக்கூடிய சக்தியுடையது என்னும் சத்தியத்தை அது காட்டா நிற்கும்........... இங்குள்ள கைத்தொழிற் கல்விச்சாலை இந்தியாவிலுள்ள இது போன்ற தொழிற் கல்விச் சாலைகளில் மேம்பாடுடையவைகளில் ஒன்று......" என்று எழுதினர். நசரை மக்கள் தங்கள் சிரேஷ்ட அத்தியக்ஷருக்கு நல்வரவு கூறி, பலவித ஆடல்பாடல்களினாலும் அவரை மகிழ்வித்தனர்.

சிரேஷ்ட அத்தியக்ஷர் ஜாண்சன்

நாசரேத்துக்கு வந்துபோன பெருமக்கள் ஒவ்வொருவரையும் குறித்தெழுதிக்கொண்டே போனால் யாம் முன் சொன்னதுபோல இடம் போதாதாகையினால் அதை இவண் நிறுத்தி, நசரைச் சபையின் குருத்துவ ஊழியம் நடந்தவாறென்னெனவாராய்ந்து இவ்வதிகாரத்தை முடிப்போம்.

மர்காஷிஸ் ஐயரவர்கள் காலத்தில் நாசரேத் சேகரத்தில் பல குருக்களிருந்தனர். அவர்கட்குதவியாக ஒவ்வொரு சபையிலும் உபதேசிமாரும், உபாத்திமாரும் நசரைப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் இருந்தார்கள். எனினும் ஒவ்வொரு சேகரத்தின் ஆவிக்குரிய, சன்மார்க்க வாழ்க்கைக்கும்

சேகர குருவானவரே முதற் பொறுப்பாளியாவர். நாசரேத், மூக்குப்பீறி போன்ற பெரிய சபைகளிலும் தூரமான கிராமங்களிலும் சபை விசாரணையைத் திட்டவட்டமாக நடத்துவது எக்குருவுக்கும் சிரமமாயிருக்குமாகையால், ஒவ்வொரு பாஸ்றறரேட்டிலும் சேகரப் பார்வையாளர் (District Visitors) என்றொரு குழுவினர் ஏற்படுத்தப்பட்டார்கள். இக்குழுவின் அங்கத்தினர் மர்காஷிஸ் ஐயராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களின் முக்கிய கடமைகள் தங்கள் தங்கள் சபைகளின், அல்லது சேகரத்தின் ஆவிக்குறிய ஜீவியநிலைபற்றி மாதாந்தர அறிக்கையொன்று சேகரக் குருவானவருக்குச் சமர்ப்பிப்பதும், சபைகளில் வியாதியஸ்தரிருப்பின் அவர்களைப் பற்றியும், வேறு எவ்வித விசேஷங்கள் நடைபெற்றாலும் அவற்றைப்பற்றியும் குருவானவருக்குத் தெரியப்படுத்துவதுமே. பொதுவாக இக்குழுவினர் 'லே' அங்கத்தினரினின்றே தெரிந்தெடுக்கப்படுவதுண்டு. இக் கூட்டத்தாரின் தொண்டின் மேன்மை சொல்லாமலே விளங்குமாதலின் அதை விஸ்தரிக்க வேண்டியதில்லை.

**சேகர விஜயிகள்**

வீடு சந்திப்பு குருமாரின் முக்கிய கடமைகளில் ஒன்ருய்க் கருதப்பட்டது. சேகரக்குருமாரும் அக்கடனின் சிறந்த பலாபலன்களை நன்கறிந்திருந்தனர் என்பது 1889—'90-ம் வருஷ ரிப்போர்ட்டில் கனம் M. ஏசுவடியான் ஐயர் எழுதும் குறிப்பினின்று புலனாகும் உண்மை. அவர் "இவ்வித சபைவேலை [அதாவது வீடுகளை ஒழுங்காய்ச் சந்திப்பது] ஒரு குருவானவர் தம் மந்தையின் ஒவ்வொரு ஆட்டையும்பற்றி நன்கறிந்துகொள்ளவும், சபையோரிடம் ஒழுங்கீனம் காணப்படின் கண்டிக்கவும், தங்கள் ஜீவியத்தை அவர்கள் சீர்படுத்திக்கொள்வதற்கான ஆலோசனைகளைக் கொடுக்கவும் ஏற்ற தருணத்தை அவருக்களிக்கிறது. இந்த முக்கிய பணிவிடை ஊக்கமுள்ள ஆவியோடு செய்யப்படுமாயின், அது பிரசங்கபீடத்தினின்று மிகவும் நீண்டதாயும், பேச்சுத்திறமையுடனும் செய்யப்படும் எத்தனையோ பிரசங்கங்களுக்கும், நாள்தோறும் செய்யப்பட்டு வருகிற மற்ற ஊழியங்கள் அனைத்துக்கும் மேலான பலனுடைத்தாகும்........" என்று எழுதுகிறார்.

**வீடு சந்திப்பு**

வியாதியஸ்தர் பெயர்களடங்கிய ஒரு ஜாபிதா நற்கருணை மேஜையின் மீது வைக்கப்பட்டு, ஒவ்வொரு ராப்போஜன ஆராதனையிலும் அவர்களுக்காக விசேஷித்த ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. சேகரமெங்கணும் உள்ள வியாதியஸ்தரும், (C. M. S. சபைகளிலிருந்துங்கூடத்) தங்கள் பெயர்களை நாசரேத் குருவானவருக்கனுப்பி ஜெபிக்க வேண்டுவது வழக்கமாயிற்று. அவ்வண்ணமே

**ஜெப ஜாபிதா**

துக்கம் துயரமடைந்தவர்கள், கஷ்டங்களையனுபவித்தவர்கள் முதலானவர்களுடைய பெயர்களையும் பரி. நற்கருணையாராதனையிலும், ஒவ்வொருநாள் மாலையாராதனையிலும் வாசித்து, அவர்களது கஷ்டங்களை சபைக்கு அறிவித்து (எல்லாரும்) ஏகோபித்து ஜெபிப்பதுமுண்டு.

பலவித கூட்டங்கள்

வேத அறிவை வளரச் செய்வதற்காக நாசரேத் சபையில் வேதாகம ஆராய்ச்சிக் கூட்டங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன என்று பார்த்தோம். தவிர, ஒவ்வுநாள்தோறும் 12-30 மணிக்கு 'இந்தியாவுக்காக மன்றாட்டு' ஆராதனை முடிந்தபின் ஆண்களுக்கு (பெரியவர்கள்) வேத வகுப்பு நடைபெற்றது. வாலிப ஆண்களுக்கு ஒவ்வொரு இரவும் இராப் பள்ளிக்கூடம் 8—9-30 மணிவரை நடத்தி அதிலும் வேதாகம ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதே நேரத்தில் வாலிப ஸ்திரீகளுக்கு அவ்விதக் கூட்டம் நடந்துவந்தது. தாய்மார் கூட்டம் வெள்ளிக்கிழமைதோறும் மாலை நேரத்தில் நடக்கும். அதிலும் வேத ஆராய்ச்சிதான். பள்ளிக்கூடங்களின் ஆசிரியைகளுக்குச் சனிக்கிழமைகளில் 9-30 — 12 வரை வேதபாடம் கற்பிக்கப்பட்டது. இவையெல்லாம் குருமாராலும் உபாத்திமாராலும் நடத்தப்பட்டு வந்தன.

ஜெய சிலுவைக் கோடி

இங்கிலாந்து தேசத்தில் பெரிய சேகரங்கள், சபைகளுக்கென்று தனிப் பத்திரிகைகள் அச்சபைக் குருவானவரே அச்சிட்டு வெளியிடுவதுண்டு. இவ்வழக்கத்தை மர்காஷிஸ் ஐயர் நாசரேத் சேகரத்தில் ஆரம்பித்தார். 1882ம் வருஷம்போல் இப்பத்திரிகை 'ஜெய சிலுவைக்கொடி' (Banner of the Cross of Victory) என்ற பெயருடன் ஆரம்பமானது. ராமநாதபுரம் S. P. G. அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு 1884க்குள் 140 சந்தாதார்களையுடையதாயிற்று. சீக்கிரமே இப்பத்திரிகை திருநெல்வேலி S.P.G. ஊழியத்தைப்பற்றிய சகல செய்திகளையும் பொதுக் காரியங்களைப்பற்றிய விஷயங்களையும் சன்மார்க்கப் போதனைகளையும் வெளியிட்டு வரும் பொதுப் பத்திரிகையாயிற்று.

இவ்வாறெல்லாம் சபை ஊழியம் நடந்தபடியால் அக்காலக் கிறிஸ்தவர்களெல்லாரும் உத்தமர்களாகிவிட்டார்கள் என்று எண்ணிவிடுவதற்கில்லை. M. ஏசுவடியான் ஐயர் 1901ம் வருஷம் M. D. C. க்கு எழுதிய கடிதங்களிலிரண்டை மட்டும் இவ்விடம் மொழிபெயர்த்து, வாசகர்களே நிதானித்துக்கொள்ள விட்டுவிடுகிறேன். அவை பின்வருமாறு "......... ஆவிக்குரிய ஜீவியத்தில் மக்கள் ஸ்திரம் பெறச் செய்யவும், கிறிஸ்துமார்க்க அபிமானம் வளர்ச்சி யடையவும், சுய ஆதரவு பெலனுறவும் இன்னும் அதிக வேலை செய்யப்படவேண்டியதுண்டு. இவற்றிற்கான முயற்சிகளில்

இடையருது ஈடுபட்டிருக்கிறோம். நாசரேத், மூக்குப்பீறி, ஒய்யான்குடி, பிள்ளையன்மனை, உடையார்குளம் சபைகளில் தேர்ச்சி காணப்படுகிறது.

சபைகளின் நிலைமை

ஆலய பக்தியும் பரிசுத்தபீடத்தைப் பற்றிய கண்ணியமும் அதிகரிக்கிறது. மக்கள் திறந்திருக்கும்ஆலயத்துட் சென்று தன்னந்தனியாய் தனித் தியானத்திலும் மௌன ஜெபத்திலும் அதிகமதிகமாய் ஈடுபடுகிறார்கள். தசமபாகம், முதற்பலன் முதலிய காணிக்கை விஷயத்திலும் தேர்ச்சியுண்டு''. அடுத்த கடிதம் பின்வருமாறு. 'புற மதஸ்தரில் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வருஷம் (1900) வெகு சிலரே. ஐந்து சபைகளில் மட்டும் சில புதிய சேர்க்கைகள் உண்டு. ஆனல் முறைகேடான விவாகங்கள், அஞ்ஞான மூட நம்பிக்கை நிறைந்த பழக்க வழக்கங்களை அனுசரித்தல், இந்துக்களுடைய உற்சவங்களிலும் விக்ரக ஆராதனைகளிலும் கலந்துகொள்ளுதலான இத்தியாதி ஒழுங்கீனங்கள் அதிகம். இதற்குக் காரணம் ஆவிக்குரிய ஜீவியக் குறைவே; ஆதலால் இக்குறைவை நீக்கத்தான் வெகு முயற்சிகள் செய்துவருகிறோம். பல தடவைகளில் எங்கள் முயற்சிகளில் தோல்வியுற்றவர்களாய்ச் சோர்வுடன், 'ஐயரே இரா முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை' என்று அங்கலாய்க்கிற சமயங்கள் அநேகம் உளவே. என்றாலும் சோர்பு நீத்து வைராக்கியத்துடன் சிரத்தை எடுக்கிறோம்''.

பிந்தின கடிதத்தில் கனம் ஐயர் காட்டுகிற 'இந்து உற்சவங்களில் பங்கு பெறுகிற' கெட்ட வழக்கத்தை நீக்க மர்காஷிஸ் ஐயர் ஒரு முறையை 1905ல் கையாடினர். அது என்னவெனின்: கிராமங்களில் ஏதாவது கொடை முதலிய இந்துமார்க்க விசேஷங்கள் நடந்தால், அந்நாட்களில் கிறிஸ்தவர்களுக்கென்று கிறிஸ்தவ ஆலயத்தின் முன்னுள்ள வெளியில் ஒளிவிசித்திரப் படக்காட்சியுடன் பிரசங்கங்களை கேட்கவும் அல்லது கீர்த்தனைகளைப் பாடிப் பவனி வந்து ஆலயத்தின் முன்னர் அமர்ந்து காலட்சேபங்களை கேட்கவும் செய்த ஏற்பாடுதான். இம்முறை எதிர்பார்த்த அளவில் பயனடைந்ததில்லையெனினும், அதனல் சற்று நன்மை ஏற்பட்டதென்பது உறுதி.

அக்கால மக்கள் மரித்தோரின் ஆவேசங்களைப்பற்றி பெரும்பீதி கொண்டிருந்தார்கள். கல்லறைத் தோட்டங்களை 'மயானங்களா' யெண்ணி மருண்டார்களேயன்றி, மரித்த மானிடச் சரீரங்களின் இளைப்பாறும் ஸ்தலங்களாக வெண்ணவில்லை. இறந்தோரின் ஆவிகளை உயிருள்ளோரின் சத்துருக்களாகக் கருதிக் சலங்கினரேயன்றிப், 'பரிசுத்தவான்களின் ஐக்கியம்' என்ற சீரியக் கிறிஸ்தவக் கோட்பாட்டின் நுட்பத்தை உணர்ந்தாரில்லை. இப்பேய்ப் பயத்தைப் போக்கவும், மேற்படிச் சிந்தாந்த

சத்தியத்தை உணர்த்தவும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை நடைமுறையில் கொள்ளவும் மக்களுக்குப் புகட்டுமாறும், கனம் மர்காஷிஸ் ஐயர் சகல பரிசுத்தவான்களின் திருநாள், சகல ஆத்துமாக்களின் திருநாளாகிய நவம்பர்மீ 1ம் 2ம்உ களை விசேஷித்த பிரகாரமாய்க் கொண்டாட ஏற்பாடு செய்தார். அக்டோபர் 31ம் தேதி இரவு வெகு அலங்காரமாக மாலை ஆராதனை நடத்தி, மறுநாள் காலை விசேஷித்த தூபாராதனையுடன் நற்கருணைத் திருவிருந்தளித்தார். கல்லறைத் திருநாள் என்னும் 2ம்உ கல்லறைத் தோட்டம் சென்று, ஜெப தூபங்கள் ஏறெடுத்து, அங்கிருந்தே பவனியாக ஆலயம் வந்து, அடக்க ஆராதனைப் பாகங்களை வாசித்து, உயிர்த்தெழுதல் சித்தாந்தப் போதனை தரும் வழக்கம் ஏற்படுத்தினர். இதுமுதல் மரித்தோரின் 'ஆவேசத்'தைப்பற்றிய பயம் மக்கள் மனதினின்றும் நீங்கிற்று. இக்காலத்திலும் சகல பரிசுத்தவான்களின் திருநாள் இவ்வூரில் மிகுந்த கோலாகலத்துடனும் பக்தி விநயத்துடனும் கொண்டாடப்பட்டுவருகிறது.

சகல பரிசுத்த வான்களின் திருநாள்

# அத்தியாயம் 11

## மர்காஷிஸ்

(மர்காஷிஸ் ஐயர் காலத்துள்ள சில விசேடங்களும் அன்னவர் வாழ்க்கைக் குறிப்புகளில் சிலவும்)

கனம் ஆர்தர் மர்காஷிஸ் ஐயர் இங்கிலாந்தில் உள்ள லெமிங்டன் பட்டணத்தில் 1852ம் வருஷம் டிசம்பர்மீ 24ம் தேதி பிறந்தார். கந்தர்புரி பரிசுத்த அகஸ்டீன் காலேஜில் வேத சாஸ்திரம் கற்றுத் தேறி 1876ல் நாசரேத்துக்கு மிஷனெரியாக நியமிக்கப்பட்டு, அவ்வருஷம் டிசம்பர்மீ வந்து சேர்ந்தார். அவர் இவ்வூர் வரும்பொழுது பட்டம் பெறாதவராய்த்தானிருந்தார். 1877ல் சென்னை அத்தியக்ஷரால் உதவிக்குருவாக அபிஷேகம் செய்யப்பட்டு மூன்று வருஷம் உதவிக் குருவாகவே பணிவிடை செய்தார். அக்காலங்களில் கனம் M. ஏசுவடியான் ஐயரே குருத்துவக் கடமைகளைச் செய்து வந்தார். பின் 1880ம் வருஷம் மர்காஷிஸ் ஐயர் மகாகனம் சார்ஜன்ட் அத்தியக்ஷரிடத்தில் குருவபிஷேகம் பெற்றார்.

நாசரேத் வருகை

ஐயர் சிறு பிராயமுதலே திடகாத்திரமுடையவரல்லர். குள்ள உருவினர்; குறுகிய தாடியினர். ஆஸ்த்மா வியாதியினால் அடிக்கடி சோர்வுறுவார். எனினும் நுண்மான் நுழைபுலமுடையவர். எக்காரியத்தையும் திட்டவட்டமாய் ஆய்ந்தோய்ந்து செய்யும் இயல்பினர். எடுத்தகாரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலுடையவராக விளங்கினர். அடிக்கடி வியாதியுற்றும், தாம் எடுத்துக்கொண்ட ஊழியத்திற்குப் பங்கம் வாராமல் தம் வேலைகளைச் செய்து நிறைவேற்றும் ஊக்கமுடையவராய் இருந்தார்.

குண மேம்பாடு

தாம் நாசரேத்துக்கு வந்தபோது அங்குள்ள ஆஸ்பத்திரியில் மருத்துவராய்ப் பணியாற்றவேண்டிய கடன் தம் மீது விழுந்துள்ளதை அறிந்ததும் தாமாகவே மருத்துவம் கற்றுச் சற்று அறிவைப் பெருக்கிக்கொண்டார். டாக்டர் ஸ்ட்ராஹனைப் போன்ற அளவு மருத்துவ அறிவு படைத்திராவிடினும், அவர் காலத்திய வேலையினளவு தாமும் செய்யக்கூடியவரானார்; எனின் அவர் கொண்டுள்ள சாமர்த்தியமும் அவருடைய சிறந்த புத்தியும் எத்தன்மையன என்பதை ஓர்ந்துணரலாம். ஆஸ்பத்திரியில் இரவும் பகலும் உழைத்து அதைப் பல விதத்திலும் முன்னேறச் செய்துகொண்டு வந்தார். நாம் எற்கெனவே பார்த்ததுபோல் மிகுந்த பணச் செலவில் புதிய கட்டடங்களை நிர்மாணித்தது மன்றி, வேலைக்குப் பணமுட்டுப்பாட்டினால் இடையூறு நேர்ந்திடாவண்ணம் எவ்வெவ்வகையில் பண வரும்படி

கிடைக்கக்கூடுமோ அவ்வகைகளிலெல்லாம் பணச்சகாயம் கிடைக்கச் செய்தார். அவரது காலம் முழுவதிலும் சிகிச்சை பெற்றவர்கள் வருஷத்துக்குச் சராசரி 11500 பேர். (ஆஜர்)

1893ம் வருஷம் ஜனுவரி மாதம் 23ம் தேதி மகாகனம் சென்னை யத்தியக்ஷர் நாசரேத்துக்கு விஜயம் செய்தார். மர்காஷிஸ் ஐயரும் குருமாரும், ஊழியரும் சபையாருமாக அத்தியக்ஷருக்கு நல்வரவு கூறி உபசரித்தார்கள் அடுத்த நாள் பரி. யோவான் ஆலயத்தில் 197 பேருக்குத் திடப்படுத்தல் கொடுக்கப்பட்டது. அத்தியக்ஷர் இங்கு நடைபெற்ற சகல ஊழியங்களையும் கண்டு பெருவியப்புக் கொண்டார். M. D. C. ரிப்போர்ட்டில் "நாசரேத் மர்காஷிஸ் ஐயரின் மேற்பார்வையிலுள்ள ஓர் கிறிஸ்தவக் கிராமம். அது அவரது ஓயாத உழைப்பினாலும், பல வழிகளிலும் அவர் சேகரித்த பண உதவியினாலும் மிஷன் ஸ்தாபனங்களில் மிகவும் விசேஷித்தவற்றில் ஒன்றாக வளர்ந்துள்ளது. சற்று மருத்துவப் பயிற்சியுள்ளவராயிருப்பதால் மர்காஷிஸ் மருத்துவசாலையில் அதிக நன்மை பயக்கும் சேவையாற்றி வருகிறார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி அநாதைச்சாலைகளுமுண்டு. ஒரு மாதக் குழந்தையொன்றும் அவற்றிலொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக் கண்டேன்......" என்றிவ்வாறாக ஐயரின் பலதிறப்பட்ட சேவையை வெகுவாய்ப் பாராட்டி எழுதினர்.

சேவையின் சீலம்

1885 முதல் தமக்கு ஏற்கெனவே இருக்கும் ஏராளமான வேலைகளுடன் முதலூர், கிறிஸ்தியானகரம் வட்டாரங்களையும் சேர்த்துக் கண்காணிக்கவேண்டிய பொறுப்புக்கொடுக்கப்பட்டதும் அதையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டிருந்தார். எனவே வேலை முன்னைவிடப்பன்மடங் கதிகரித்தது. 1889ம் வருஷத்தில் அவருக்குதவியாக ராமனதபுரம் மிஷனெரி கனம் ஆர்தர் பிரதர்ட்டன் விக்கர்ஸ் ஐயர் இவ்வூருக்கு மாற்றப்பட்டு வந்தார். இவர் பக்தனான கனம் தாமஸ் பிரதர்ட்டன் ஐயரின் பேரன். இவரது தகப்பனார் திருவாங்கூரில் C. M. S. மிஷனெரியாயிருந்தவர். விக்கர்ஸ் ஐயர் 1858-ம் வருஷத்தில் பிறந்தார். 1883ல் சென்னையத்தியக்ஷரிடத்தில் உதவிக் குருவபிஷேகம் பெற்றபின், ஒரு வருஷம் தூத்துக்குடி ஷாராக் ஐயருக்குதவியாகப் பணியாற்றி, 1884 முதல் 1887 வரை ராமனதபுரத்தில் ஊழியஞ்செய்து வருங்கால் நோய்வாய்ப்பட்டுச் சுயதேசம் சென்றார். அங்கு லிங்கன் பட்டணத்து அத்தியக்ஷரால் குருவாக அபிஷேகிக்கப்பட்டு இந்தியாவுக்குத் திரும்பி வந்து, மேற்சொன்னவாறு நாசரேத் உதவி மிஷனெரியானார். இவர் சாதுவான தன்மையும் நற்பண்புமுடையவ

விக்கர்ஸ் ஐயர்

ரெனினும், விசேஷித்த புத்தி தீக்ஷண்யம் உடையவரென்று எண்ணப்பட்டிலர். . எவ்விஷயத்தையும் இலகுவில் கிரஹித்துக்கொண்டு சீக்கிரத்தில் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் உடையவரல்லர். எனவே, மர்காஷிஸ் ஐயருடைய தன்மைக்கு முற்றிலும் வித்தியாசப்பட்டவராயிருந்தார். மேலும் அடிக்கடி பிணியுற்றார். ஆதலின் 1892ம் வருஷத்தில் தெலுங்கு நாட்டுக்கு மாற்றப்பட்டு அங்கு 5 வருஷம் திவ்ய பணிவிடை நிறைவேற்றினபின் 1898ல் வேலையைவிட்டு நீங்கினவர், அடுத்த வருஷத்தில் எப்ரில் 3ல் உலக வாழ்வை நீத்துப் பரமபதம் எய்தினர். எனவே மறுபடியும் மர்காஷிஸ் ஐயரே மூன்று வட்டாரங்களின் காரியாதிகளையும் தனியே கவனிக்கவேண்டியதேற்பட்டதினல் M. ஏசுவடியானையரைத் தமக்குதவிமிஷனெரியாக நியமித்தார். ஏசுவடியானையர் அது முதல் 1901ல் வேலையைவிட்டு ஓய்வெடுக்கும் வரை இப்பதவியை வகித்து வந்தார்.

கனம் மர்காஷிஸ் ஐயர் காலத்தில் நாசரேத்தில் நடந்த மற்ற விசேஷங்கள் பலவுள. அவற்றில் சிலவற்றைமட்டும் ஈண்டு விஸ்தரிப்பான் புகுந்தேன்.

உலக முடிவு!

1875-ம் வருஷத்தில் திருவாங்கூரில் C. M. S. சபைகளிலொன்றில் குருவாயிருந்த யுஸ்து யோசேப்பு (Rev. Justus Joseph) பாதிரியார் அக்காலம் உலகில் பலபாகங்களிலும் பரவிப் பலரால் நம்பப்பட்ட ஓர் நூதனக்கொள்கையை ஒப்புக்கொண்டார். அக்கொள்கை 1881-ம் வருஷத்தில் இரக்ஷகருடைய இரண்டாம் வருகையும், உலக முடிவுமிருக்கு மென்பதே.

ஷிப்டன் அம்மையார்

பல வருஷங்களுக்குமுன் ஷிப்டன் அம்மையார் (Mother Shipton) என்றொரு மாது உலகிற் பிற்காலத்தில் நடைபெறப்போகும் பல காரியங்களை முன்னறிவித்திருந்தாள் அவள் முன்னறிவித்தவற்றில் நீராவிச் சக்தியினல் துரிதமாய் ஓடும் ரெயில் வண்டிகள், தந்திக்கம்பியின் மூலம் செய்திகளை விரைவில் அனுப்புதல், பலூன்களில் பறத்தல். இங்கிலாந்து தேசத்தை ஓர் யூதன் பிரதம மந்திரியாயிருந்து அரசாளுதல் போன்ற பல காரியங்கள் நிறைவேறிவிட்டன. 1881ல் உலகம் முடிந்துவிடும் என்பதும் அவளது தீர்க்கதரிசனங்களிலொன்று. எகிப்திலுள்ள பிரமிட்ஸ் (Pyramids) என்ற கல்லறைகளின் நுட்பங்களை ஆராய்ச்சி செய்த பியாஸி ஸ்மித் சாஸ்திரி (Prof. Piazzi Smith)யும் உலக முடிவு பற்றி ஷிப்டன் கூற்றையொட்டி 1881ல் அது நிகழும் என்று முடிவு கூறினர். ஐரோப்பாவிலும் பலர் இவற்றையெல்லாம் நம்பினர்கள்.

திருவாங்கூர் யோசேப்புப் பாதிரியார் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டு, கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம் செய்யவேண்டும் என்று வெகு ஊக்கமாய் ஜனங்களை ஏவிக், 'கடவுள் கட்டாயம் 1881-ம் வருஷம் வந்து விடுவார்' என்று சாதித்துத் தம் வார்த்தைகளை ஒப்புக்கொண்டு நம்பினவர்களை ஒரு கூட்டமாகச் சேர்த்தார். இவர்களுக்கு 'ஆறு வருஷக் கூட்டத்தார்' (Six Years' Sect) என்ற பெயருண்டாயிற்று. கிறிஸ்து நாதர் வருவதை ஒருவரும் அறியார்கள் என்ற கிறிஸ்

யுஸ்து

தவக் கொள்கையை யோசேப்பு பாதிரியார் மறந்து விட்டார் போலும்! எனவே C. M. S சங்கத்தார் அவரை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். யோசேப்பு உடனே தமது கூட்டத்திலிருந்த ஜேக்கோ (Jacko) என்பவரை அதற்குத் தலைவனாக்கினார். தொம்மன் என்பவர் 'தீர்க்கதரிசி'யானார். பேதுரு என்னப்பட்டவர் 'அப்போஸ்தலனா'னார். இந்நால்வரும் திருவாங்கூர் நாடெங்கும் சுற்றித் திரிந்து கிறிஸ்தவர்களைக் கலக்கினார்கள். ஏராளமான ஜனங்கள் அவர்களையண்டிக்கொண்டார்கள்*. நிற்க.

வட திருநெல்வேலியில் மத்தேயு என்ற வாலிபனொருவன் இருந்தான். இவன் அப் பிராந்தியத்தில் சிலகாலம் சுவிசேஷப் பிரபல்யம் செய்த பிளிமத் சகோதரக் (Plymouth Brethren) கூட்டத்தாரின் கொள்கைகளை ஆதரித்தவன். சாதுர்யப் பிரசங்கி. தன்னுடைய சக்திகளைப்பற்றி நம்பிக்கையுடையவன். முதலில் திருநெல்வேலிச் சபைகளில்

மத்தேயு

புத்துயிருண்டாவதற்காக ஊக்கமாய் உழைத்தான். பலவிடங்களும் சென்று வல்லமையுடன் பிரசங்கித்தான். அநேக சபைகளில் ஆச்சரியமான எழுப்புதல் உண்டாயிற்று. இவன் 1877-க்கு மேல் 'ஆறு வருஷத்தாரி'ன் கொள்கைகளை ஆதரிக்கவாரம்பித்தான். முதலில் தன் பிரசங்கங்களில் அக்கொள்கையை ஓர் உபபோதனையாகவே கொடுத்து வந்தவன். சின்னாட்களில் திருவாங்கூரில் யோசேப்புப் பாதிரியார்போன்று அதே உபதேசங்களைப் பிரபல்யப்படுத்தலானான். திருநெல்வேலியெங்கும் ஆறுவருஷக் கொள்கையைப் பல கிறிஸ்தவர்கள் நம்பி ஏற்றுக்கொண்டார்கள். நாசரேத், மெஞ்ஞானபுரம், தூத்துக்குடி, சாயர்புரம், இடையன்குடி முதலியவிடங்களில் அக்கொள்கையைச்சேர்ந்தவர்கள் அதிகரித்து விட்டார்கள். மத்தேயு இடையன்குடியைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டான். மிஷனெரிமாரும் இந்திய குருக்களும் பலமாக எதிர்த்தும், மகாகனம் கால்ட்வெல் அத்தியக்ஷரவர்கள் மத்தேயுவுக்கு இடங்கொடுத்துத் தம் ஆதரவையும் அளித்ததினால் அன்னோரால் ஒன்றும் செய்யவியலாது போயிற்று. பலவிடங்களில் குழப்பங்கள் ஏற்பட்டன. இச்சமயத்

* 1877 C. M. Record P. 354.

தில் திடீரென மத்தேயு இறந்துவிடவே, அவனது பிரதான சீஷன் அருளானந்தம் தலைவனாகி, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, 1881 மே மாதத்தில் கர்த்தர் பரத்துக்கேறின திருநாளன்று வருகையிருக்கும் என்று அப்போஸ்தலர் 1:11ஐ (“இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்”) ஆதாரமாகக்கொண்டு சாதித்தான். ஆமோஸ் 7-ம் அதிகாரத்தையும் யோவேல் 2-ம் அதிகாரத்தையும் சுட்டிக்காட்டி, அத் தீர்க்கதரிசனங்கள் தன்னில் நிறைவேறின என்றும் கூறிவந்தான். ஜனங்களில் படித்தவர்களும் படியாதவர்களுமான அநேகர் அவனை அப்படியே நம்பிவிட்டார்கள். இளஞ்சுனை என்ற விடத்தில் பரத்துக்கேறின திருநாளில் ‘பக்தர்’ ஏராளமாகக் கூடி கர்த்தரை எதிர்நோக்கினர். கர்த்தரோ வரவில்லை!

**‘தீர்க்கதரிசி’ அருளானந்தம்**

‘தீர்க்கதரிசியாகிய அருளானந்தம் கிறிஸ்துவின் பிரயாணத் திட்டத்தை’ (Programme) மாற்றி, செப்டம்பர் 19-இலாவது 29-இலாவது நிச்சயமாய் வந்துவிடுவார்’ என்று தீர்க்கதரிசனம் கூறினான். செப்டம்பர் 1-ம் தேதியிலிருந்தே ஜனங்கள் ஜெபத்திலும் உபவாசத்திலும் தரித்திருந்தார்கள். அநேகர் தங்கள் ஆஸ்திகளை விற்றுப், பொதுவாக வைத்து எல்லாரும் அனுபவிக்கக் கொடுத்துவிட்டார்கள். இடையன்குடிப் பிராந்தியத்திலுள்ளவர்கள் உவரிக் கடற்கரையில் கூடாரங்களையடித்துப், பல தினங்களுக்கு முன்னேயே அங்கு வந்து தங்கிப், பொதுவாக உணவருந்தி, ஜெபத்திலும், உபதேசத்திலும், பலதடவைகளில் உபவாசத்திலும் நாட்களைக் கழித்தார்கள்.

**தேறியில் ‘இரண்டாம் வருகை’**

நாசரேத்திலும் சுமார் 150 பேர் இம்மாய்கைக்கு உட்பட்டனர். அவர்கள் தேறிக்குச் சென்று, இடையன்குடி மக்களைப் போலவே தங்கள் நாட்களைச் செலவிட்டு, ஆவலோடு கிழக்கு நோக்கிக் காத்திருந்தார்கள். மிஷனெரியும் குருமாரும் எவ்வளவு தூரம் நயமாயும், பயமாயும், அன்பும் ஆதரவும் ததும்பப் புத்தி சொல்லியும் அவர்கள் கேட்க மறுத்தார்கள். செப்டம்பர் 19ம் விடிந்து கடந்து, 29-ம் வந்து போயிற்று. 30-ம் மறைந்தது. கர்த்தர் வரவில்லை! டிசம்பர் வரையிலும் உவரியிலும் தேறியிலும் காத்திருந்த மக்கள் சலிப்புறவில்லை. 1882 ஜனுவரி மாதத்தில் ஒவ்வொருவராக வீடு திரும்பினர். திருச்சபை அவர்களை மன்னித்துத் தன் மக்களாகச் சேர்த்துக்கொண்டது. அருளானந்தம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதற்குள் திருவாங்கூர் யோசேப்புப் பாதிரியார் தாமே 'கிறிஸ்து' என்று கூறியலையலானர். ஆனல் முன்னர் ஏமாற்றமடைந்த மக்கள் வெகு இலகுவில் 'அந்திக் கிறிஸ்து'வை அவரில் கண்டுகொண்டார்கள்.

1883-ல் கனம் மர்காஷிஸ் ஐயர் சீமைக்குச் சென்றார் ஒரு வருஷம் தன் சுயதேசத்தில் தங்கிப் புதுப்பெலனடைந்தவராய்த் திரும்பினர் அதன்பின் ஒரே தொடர்ச்சியாய் 1895 வரை 12 வருஷங்களாக வெளி நாடு போகாதிருந்தார். இதற்கிடையில் அவர் சுகம் வெகுவாய்க் கெட்டுவிட்டது. ஆஸ்த்மா வியாதி முற்றிவிட்டது. பலதடவைகளில் பேசவும் இயலாது துன்புற்றார். எனினும் தம் வேலையை மட்டும் சற்றும் தளர்ச்சி யடையாமல் சரிவர நடத்தியே வந்தார். ஆனல், அவரது உடல் நலம் வெகுநாள் இவ்வித உழைப்பைத் தாங்கி நிற்கக்கூடாமல் 1889 மே மாதத்தில் அதிகச் சுகவீனமாகிவிட்டார். அவர் பிழைப்பாரோ என்ற ஐயமுண்டாயிற்று. உடனே அவரை வண்டியில் வைத்துப் பாளையங்கோட்டைக்கு எடுத்துச் சென்றனர். சிறிது சுகம் கிடைத்ததும், அவர் கடல் யாத்திரை செய்வது நலன்தரும் என்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால், அங்கிருந்தே புறப்பட்டுச் சென்று ஜப்பான் தேசத்துக்குப் பயணமானர். மூன்று மாதங்களில் பூரண சுகம் கிட்டிற்று. எனவே செப்டம்பர் மாதம் 13-ம்வ நாசரேத்துக்குத் திரும்பினர்.

ஜப்பான் பயணம்

இதுகாறும் தங்களைக் கரிசனையுடன் கண்காணித்து வந்த மிஷனெரியின்மீது எவ்வளவு தூரம் நாசரேத்வாசிகள் அன்புகூர்ந்தனர் என்பது அவர் நோயுற்று, நகரைவிட்டுச் சென்றபின்தான் விளங்கினது. ஒவ்வொரு ஆராதனையிலும், ஒவ்வொரு குடும்பத்தின் ஜெபகோத்திலும், தனித்தனி நபர்களின் தனிமன்றாட்டிலும் மிஷனெரி நற்சுகத்துடன் திரும்பிவரவேண்டும் என்று இறைவனை இறைஞ்சாதவர்கள் இல்லை. அவர் சுகத்துடன் திரும்பும் செய்தி கேட்டதும், ஊரார் அனைவரும் ஆண் பெண் பள்ளிக்கூடங்களின் சிறுவர்களும், மாணவ மாணவிகளும, குதூகலத்துடன் வெள்ளமடம் வரை சென்று, எதிர்கொண்டழைத்து வாழ்த்தி, நகர் வந்து சேர்ந்து, ஆலயத்தில் ஸ்தோத்திர ஆராதனையும் நடத்தி, 136-ம் சங்கீதத்தையும், 'தேவனே உம்மைத் துதிக்கிறோம்' (Te Deum) என்னும் கீதத்தையும் உள்ளான நன்றியறிதலுடன் பாடினர்கள். மிஷனெரியும் கிராதியிலிருந்து தமது கரங்களை உயர்த்தி ஆண்டவர் நாமத்தினல் மக்களை ஆசிர்வதித்தார்.

1899-ம் வருஷம் நம் திருநெல்வேலிச் சீமையில் தேவமார்களுக்கும், நாடார்களுக்குமிடையில் பல விபரீதங்களும் சச்சரவும் ஏற்பட்டு மாபெரும் கலகம் மூண்டது. அதனைச் 'சிவகாசிக் கலகமெ'ன்றழைப்பர். இக்கல

சிவகாசிக் கலகம் — கத்தால் இருசாராருக்கும் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் அனந்தம். ஜீவனை இழந்தோர் பலர். அங்கஹீன மடைந்தோர் திரளானபேர். நாடெங்கும் பரந்த இக் கொடிய கலகத்தினாலேற்பட்ட தீமைகளை வர்ணிப்பது நம் நூலின் காரிய மல்ல, எனின் இதற்கும் நசரைச் சபைக்கும் சம்பந்த மென்ன?

இக்கலகம் பற்றி இங்கிலாந்திலும் இந்தியாவிலும் கிறிஸ்தவ மிஷனெரி ஊழியத்துவேஷிகள் பல இழிமொழி கூறினர் "கிறிஸ்து மார்க்கம் அதிக மாய்ப் பரவிய திருநெல்வேலிச் சீமையே ஜாதித்துவேஷக் கலகங்கள் நடை பெற்ற நாடெனின், அந்நாட்டினர்க்குக் கிறிஸ்து சமயத்தாலாய பய னென்ன?" என்ற கேள்வி எங்கும் கேட்கப்பட்டது. இவ்வினா பொருளற்றது என்பதை உலகுக்குக் காட்ட, நாசரேத் மிஷன் ஊழியத்தின் பயனான பலஜாதிக் கிறிஸ்தவர் முன் வந்தனர். அவர்கள் ஒருங்குகூடி, மேற்படி குற்றச்சாட்டை ஆதாரமற்றதெனக் கண்டனம் செய்ததுமன்னி யில், தம் ஒருமைப்பாட்டை உலகுக்குக்காட்டுவான்வேண்டி விருந் தொன்றருந்தினர். அவ்வமயம் கனம் மர்காஷிஸ் ஐயர் பங்களாவில், கிறிஸ்தவர்களாகு முன் பல ஜாதிகளைச் சேர்ந்தவராயிருந்த அவர்களில், பிராமணர் நால்வரும், பள்ளர் இருவரும், வெள்ளாளர் இருவரும், நாடார் இருவரும், ரஜபுதனர், க்ஷத்திரியர், மறவர், ஆசாரி, பண்டாரம், கடையர், ரெட்டி, ஆதிதிராவிடர், பட்டாணியர் [முஸ்லீம்], சளுவர், செட்டி, இடையர், வடுகர், குறவர் என்ற வர்ணத்தாரில் ஒவ்வொருவருமாக மொத்தம் இருபத்தைந்து பேர் கூடினர். அன்று (1900) ஜனுவரி 6-ம் தேதியான கிறிஸ்து பற ஜாதி யாருக்கு வெளிப்பட்ட பிரசன்னத் திருநாளாம். * "133-ம் சங்கீதம் வாசிக்கப்பட்டபின் அவர்கள் கூடிய நோக்கம் தெளிவாய் விளக்கப்பட்டு, கிறிஸ்து புற ஜாதியாருக்கு வெளிப்பட்டதை நினைவுகூரும் அந்நன்னாளில் கடவுளின் நாமம் மகிமைப்படவும், இந்தியாவில் சுவிசேஷத்தின் சக்தியைப் பிரத்யக்ஷப்படுத்தவும் அவர்கள் கூடியது தகுதியும் ஏற்றதுமாயிருக்கிறது என்பதும் வற்புறுத்தப்பட்டது. அதன்பின் கூடினோரெல்லாம் மிஷனெரி யுடன்சேர்ந்து அந்தப் 'பொதுப் போஜனத்தில்' பங்கு பெற்று, கிறிஸ் துவுக்குள் தங்களுக்குள்ள சகோதரத்துவக் கட்டுப்பாட்டை வெளிப் படுத்தினார்கள் ..........ஜாதி வித்தியாசம் இந்த (நாசரேத்) மிஷனில் அனுமதிக்கப்படவில்லை. அது கிட்டத்தட்ட ஒழிந்து விட்டது" என்றே கூறவேண்டும் என்று காட்டப்பட்டது.

ஐக்கிய விருந்து

---

* P. 553 b. Two Hundred years of S. P. G.

இவ்வண்ணம் கிறிஸ்தவர்களிடை ஜாதி வித்தியாசம் காணப்படவில்லையெனினும் சிவகாசிக் கலகத்தின் எதிரொலியாகத் தென்னாட்டிலுள்ள நாடார், மறவர் ஜாதியிலடை விரோத மனப்பான்மை தோன்றிமுற்றலாயிற்று. இதன் பயன் நாசரேத் சரித்திரத்தையும் பாதிக்கவே செய்தது. கேமரர் காலத்திலிருந்து இவ்விரு மரபினரிடையும் ஒருவாறு சமாதானம் நிலவினதுண்டு. காவல் தொழில் தேவமாரின் பிதிராஜ்ஜிகமாய்க் கருதப்பட்டு வந்ததினால், மற்ற ஜாதியினர் அதை ஒப்புக்கொள்வாராகி அன்னோர்க்குரிய காவல் பணத்தைத் தட்டின்றித்தந்து போயினர்.

**காவல்**

தேவமாரும் தம் கடமைச்செவ்வனே நிறைவேற்றி வந்தனர். ஆனால் சிவகாசிக் கலகம் காரணமாய்த் தோன்றின விரோதம் முற்றவே, தேவமார் ஆக்ரமிப்பு நடபடிக்கைகள் புரியலாயினர். இதனால் கிறிஸ்தவர்களான நாடார்களுக்கும் இந்துக்களான தேவமாருக்கும் மனஸ்தாபம் மூண்டுவரக்கூடியதாயிருந்தது. கிறிஸ்தவர்கள் பல இன்னல்களுக்காளாயினர். இவ்வண்ணிருக்குங்கால் மர்காஷிஸ் ஐயர் தலையிட்டு மறவர் குலத்தோரின் பரம்பரைத் தொழிலான 'காவலை' அவர்களினின்று எடுத்துவிட்டு, எட்டையாபுரம் சமஸ்தானத்திலிருந்து அவர் தருவித்த நாயக்க மரபினர் சிலரிடத்து விடுத்தனர். இதனால் ஏற்பட்ட விபரீதங்கள் பலவெனினும், வெகு சீக்கிரத்தில் மறவரால் உண்டான கஷ்ட நஷ்டங்கள் நீங்கலுற்று சமாதானம் நிலைபெற்றுவிட்டது.

1901-ம் ஆண்டு புராட்டஸ்தாந்து மிஷனெரிச் சரித்திரத்தில் ஓர் விசேஷித்த வருஷம். ஏனெனில் அவ்வருஷத்தில்தான் S. P. G. சங்கம் தன் இருநூறு வயதை எட்டிற்று. இச்சங்கம் இங்கிலாந்தில் 1701-ம் வருஷம் ஜூன் மீ 27-ம் தேதி பிரிட்டீஷ் ராஜ்யத்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. எனவே 1901ல் இரண்டாம் நூற்றாண்டு உற்சவத்தை உலகமெங்குமுள்ள S. P. G. சங்கச் சபையினர் கொண்டாடத் தீர்மானித்தனர்.

**S P. G. இரு நூற்றண்டுற்சவம்**

நாசரேத் வட்டாரத்தில் மிஷனெரியும் குருக்களும் லே அங்கத்தினரில் சிலரும் கூடி, ஊழியர் யாவரும் ஒரு மாதச் சம்பளத்தையும், சபையாரில் பெரியவர்கள் ஒவ்வொருவரும் வாரத்திற்குக் குறைந்தது ஒரு * பைசா வீதமும், குழந்தைகள் மாதத்திற்கு ஒரு பைசா வீதமும் காணிக்கையாகச் சேகரிக்கவும், இவை தவிர ஒவ்வொரு வீட்டாரும் உண்டியல் பணம் சேர்க்கவும் தீர்மானித்தார்கள். அவர்கள் சேகரித்த தொகை ரூ. 3465-ம் S. P. G. சங்கத்துக்கு அனுப்பப்பட்டது

---

* பைசா என்பது காலணாவாகும்.

1901 பெப்ருவரி 5-ம் தேதி சாயர்புரத்தில் ஆலயத்தின் அருகில் அமைக்கப்பட்ட பெரிய பந்தலில் சுமார் 3500 கிறிஸ்தவ ஆண், பெண், பிள்ளைகள் திருநெல்வேலி S. P. G. சபைகளினின்றும், அருகிலுள்ள C M. S. சபைகளினின்றும் வந்து குழுமினர். பண்டிகைக்குத் திருநெல்வேலி அத்தியக்ஷரவர்கள் மகா கனம் சாமுவேல் மோர்லி பிஷப் தலைமை தாங்கினார்கள். C. M. S, S. P, G. மிஷனெரிமாரும், பல குருமார் ஊழியர் முதலானோரும் கலந்து கொண்டார்கள். நாசரேத்திலிருந்து சுமார் 400 பேர் இவ்வுற்சவங்களின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். நசரை D பெரியநாயகம் ஐயரே இவ்வைபவத்தின் முதல் ஆராதனையில் பிரசங்கம் நிகழ்த்தும் கண்ணியம் பெற்றார்.

சாயர்புரம் விழா

மேற்காட்டியது S P.G. இருநூறு வருஷ பூர்த்தியின் முதற் கொண்டாட்டமே. இதற்குப்பின் இவ்விதக் கொண்டாட்டங்கள் திருச்சி, தஞ்சை, சென்னை முதலியவிடங்களில் நடைபெற்றன. முடிவாக (Valedictory meeting) நாசரேத்தில் அக்டோபர்மீ 8-ம் தேதி இவ்வுற்சவம் கொண்டாடப்பட்டது. மிஷன் பங்களாவுக் கருகில் பெரியதொரு பந்தலமைக்கப்பட்டது. நாசரேத், கிறிஸ்தியாநகரம், முதலூர் வட்டாரங்களிலிருந்து குருமார், ஊழியர், சபையாரும் அயல் சேகர மக்களுமாகத் திரள் கூட்டம் கூடிற்று. காலை 8 மணிக்குப் பரி. யோவான் ஆலயத்தில் நடந்த திருவிருந்தாராதனையைச் சென்னை மாகாணம் ஒயிட்ஹெட் அத்தியக்ஷரவர்கள் நடத்தி சுமார் 250 ஆன்மாக்களுக்குத் திருவிருந்தளித்தனர். முற்பகல் பத்து மணிக்கு முதல் பொதுக்கூட்டம் அத்தியக்ஷரவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதில் தூத்துக்குடிப் போதக முறைப் பயிற்சி சாலைத் தலைவர் * கனம் C. P. ஞானக்கண் ஐயர் 'சபைகளை ஸ்தாபிக்கும் S. P. G.' என்பது பற்றியும், கனம் D. பெரியநாயகம் ஐயர் 'கல்வியைப் பரப்பும் S P. G' என்னும் பொருள் கொண்டும், ஸ்ரீமான் [பின்னால் குருப் பட்டம் பெற்ற] P. P. சாமுவேல் 'பிறர் நலம் கருதும் S. P. G.' என்றெடுத்தும், திரு † தேவவரம் டேவிட் B. A. அவர்கள் 'திருச்சபையில் சுய ஆளுகை' என்னும் காரியம் பற்றியுஞ் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். பிற்பகலில் C. M S மிஷனெரி கனம் E. A. டக்ளஸ் ஐயர் [Rev. E A. Douglas] முட்களுக்குள்ளே லீலி புஷ்பம் போன்று கிறிஸ்தவ மக்கள் விளங்க

நாசரேத் விழா

* இவர் 1901க்குப் பின் சென்னை பரி. ஜியார்ஜ் அத்தியக்ஷாலயத்தின் கனோன்களில் ஒருவர் ஆனார்.

† இவர் வெகு காலம் பரி. யோவான் பெண் பாடசாலைகளில் ஆசிரியப் பணியாற்றினார். நசரை நகர வாழ்க்கையிலும் முன்னணியில் நின்ற பெரியோர்களில் இவர் ஒருவர்.

வேண்டும் என்று பிரசங்கித்தார். கனம் மக்லியாட் ஹாக்கின்ஸ் ஐயர் (Rev. McLeod Hawkins) கர்த்தருடைய கிருபையைப்பற்றியும், பரி. யோவான் போதனுசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமான் G. S. ஆபிரகாம் 'மிஷன் ஊழியத்தைத்தாங்கும் கடன்' என்பது பற்றியும், பாளையங் கோட்டை ஜில்லாகோர்ட் செரிஷ்டதார் ஸ்ரீ ஜோசப் சவரிராயபிள்ளை 'திருநெல்வேலி திருச்சபை மேல்நாட்டு ஒட்டு நீங்கி சுதேச முறைகளைக் கையாடி வளரவேண்டும்' என்றும் பேசினர். மெஞ்ஞானபுரம் கனம் P. J. ஹாரீஸ் ஐயர் திருநெல்வேலித் திருச்சபை தன் பிள்ளைகளில் ஒருவரையே தன் அத்தியக்ஷராகக் கொள்ளக்கூடிய வயதை எட்டிவிட்டதெனினும், ஜாதித் துவேஷம் பூரணமாய் இன்னும் ஒழிந்து போகாததால் தென்னிந்தியாவில் அப்பரிசுத்த பணியைத் தாங்க ஒருவரும் அருகதையுள்ளவர்களல்லர்' என்று கூறினர்.* பின்னர் சபையார் அத்தியக்ஷருக்கு வந்தனோபசாரம் கூறினர்கள். அவ்வமயம் அத்தியக்ஷர் கூறிய பதிலினின்று மர்காஷிஸ் ஐயரின் ஊழிய சீலம் விளங்குகிறது. அதை இவண் விஸ்தரியாது அத்தியக்ஷரின் கூற்றிற்றோன்றும் ஒரு வாக்கியத்தை மட்டும் மொழிபெயர்த்தெழுததலே போதுமென்றெண்ணினம். "கடந்த 18 வருஷங்களாக இந்தியாவின் பல திசைகளிலும் பல பெரிய மிஷன் ஸ்தாபனங்களைப் பார்வையிடும் சிலாக்கியம் பெற்றுள்ளேன். ஆயினும் கிறிஸ்தவ வாழ்க்கைத்திறனும் (மிஷனெரிச்) சேவையின் பரிபூரணத்துவமும் நாசரேத்தில் காணப்படுகிற அளவு நான் வேறெங்கும் கண்டதில்லை."

மறுநாள் அத்தியக்ஷர் ஸ்தாபனங்களைப் பார்வையிட்டு அகமகிழ்ச்சியுற்றார். மாலையில் ஆண்கள் வேதாகம வகுப்பினர், பெண்கள் வேதாகமச் சங்கத்தினர், தாய்மார் ஐக்கிய சங்கக் கூட்டத்தினர், பரி. யோசேப்பு வாலிபக் கழகத்தினர் முதலியோர் பவுஞ்சு பவுஞ்சாக வந்து அத்தியக்ஷரைக் கண்டுகொண்டார்கள்.

1903ம் வருஷத்தில் நாசரேத் வட்டாரக் கிறிஸ்தவ சபையார் கனம் மர்காஷிஸ் ஐயருக்கு வெள்ளி விழாக்கொண்டாடத் தீர்மானித்தார்கள். இவ்வைபவம் 1901 இலேயே நடந்திருக்கவேண்டியது. ஆனால் கனம் ஐயர் அவ்விதக் கொண்டாட்டத்தை வெறுத்தார். ஏனெனில் புகழ்மாலையை அவர் விரும்புவதே கிடையாது. 'ஊக்கமது கைவிடாத' நசரை மக்கள் இரண்டு வருஷங்களுக்குப்பின், தங்கள் அபேக்ஷையைக் கட்டாயமாக நிறைவேற்றிவிட்டார்கள். ஐயரும் வேறு வழியில்லாமல் சம்மதித்தார். 1903 டிசம்பர் 12ம் தேதி நசரையம்பதி பொலிவுடன் விளங்கிற்று.

* இவ்வுரைக்குப்பின் பத்து வருஷங்களில் V. S. அசரியா ஐயர் தோர்ணக்கல் அத்தியக்ஷரானர்.

ஊரெங்கணும் தோரணங்கள் கட்டப்பட்டு இலங்கியது. ஆலயம் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டது. சகலரும் புத்தாடைகளுடனும் இன் முகத்துடனும் விளங்கினர். அன்று ஒருவரும் தமது வீட்டில் தங்கவில்லை. சகலரும் வைபவத்தில் கலந்துகொண்டார்கள். சென்னை அத்தியக்ஷா வர்கள் இக்கொண்டாட்டத்திற்காகத் தம் பத்தினியாருடன் வந்திருந் தார்கள். காலை 8 மணிக்குத் தூப ஆராதனையுடன் நற்கருணைப் பந்தி பரிமாறப்பட்டபின், 10 மணிக்குப் பொதுக்கூட்டம் நடந்தது. பாளையங் கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் முதலியவிடங் களிலிருந்து சர்க்கார் உத்தியோகஸ்தரும், கனதனவான்களும் மிஷன் உத்தியோகஸ்தரும், ஐயரின் இந்து, மகமதிய சிநேகிதருமான அநேகர்

**மர்காஷிஸ் வெள்ளி விழா**

விஜயம்செய்தார்கள். மகாகனம் அத்தியக்ஷாவர்கள் தலைமை வகித்தார்கள். கனம் D. பெரியநாயகம் ஐயர் உபசார வாழ்த்துப் பத்திரம் வாசித்தார். ஒயிட்ஹெட் அம்மையார் நாசரேத் சேகரச் சபையார் சார்பில் இரண்டு வெள்ளித் தட்டுகளை ஐயருக்கு வெகுமானம் வழங்கினர். மர்காஷிஸ் ஐயர் கூறிய பதிலுரையில் இரண்டொரு வசனங்கள் பின் வருமாறு. "......என்னுடைய சிற்சில நற்குணங்களை வெகுவாய் மிகைப் படுத்தி [உபசாரப்பத்திரம் வாசித்து] விட்டீர்கள். என்னில் காணப்படும் மற்றநேக தீக்குணங்களைக் குறிப்பிடத்தானுமில்லை. இவையெல்லாம் எனக்குப் பிரியமேயில்லை மாவுத்தனால் நடத்தப்படும் யானையைப்போல் தமாஷை விரும்பி இதற்குட்பட்டேனேயன்றி வேறில்லை......" இதன் பின் கனம் P. S. பீற்றர் ஐயர், திருவாளர் தேவவரம், கனம் P. J. ஹாரீஸ் ஐயர் முதலியோர் பேசினர். பீற்றர் ஐயரவர்கள் பேசிக்கொண்டிருக்கை யில் மர்காஷிஸ் உள்ளே சென்றுவிட்டார். முடிவுரையாக அத்தியக்ஷா வர்கள் சில வார்த்தைகள் கூறி, ஜெபித்து, தம் ஆசீர்வதித்துடன் கூட் டத்தை முடித்தார்கள். அதன்பின் தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன. ஏழைகளுக்கும் அன்று அன்னமளிக்கப்பட்டது. இராவில் கீத ஆராதனை யும், அதன்பின் விளையாட்டுகளும் வாண வேடிக்கைகளும் அந்நாளின் வைபவத்தை முடிவுக்குக் கொண்டுவந்தன.

மர்காஷிஸ் ஐயர் இவ்வண்ணம் நாசரேத் வட்டார மக்களால் நேசிக் கப்படவும், இந்துக்களால் நன்கு மதிக்கப்படவும், உயர்ந்த இந்து, கிறிஸ்தவ அதிகாரிகளால் புகழப்படவும் காரணமென்ன? கனம் P. S. பீற்றர் ஐயர் வெள்ளி விழா வைபவத்தில் தம் புலமைத்திறம் நயம்பட விளங்கக் கூறியதுபோல், "மர்காஷிஸ் ஐயர் சுகந்த வாசனையுள்ளவோர் புஷ்பம். அப்புஷ்பத்தின் வாசனை பாளையங்கோட்டையிலும், சென்னையில் கவர்னர் மாளிகையிலும், கல்கத்தா ஆக்ஸ்போர்ட் இயக்கத்தாரின் அரணுக்குள்ளும்,

**சுகந்த புஷ்பம்**

இங்கிலாந்தின் கௌலி சந்நியாசிகள் (Cowley Fathers) மூக்கிலும் வீசிற்று. * நியூகினியாவிலுள்ள நர மாம்ச பக்ஷணிகளும் அதை நுகர்ந்தார்கள். மேலும் அவர் 'பரிசுத்த பவுலும் லூக்காவும்' போன்றவர். அவருடைய வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம் அவரிடத்தில் அமைந்துள்ள ஆளுந்திறமையும், வியாதிப்பட்டாலும் விடா முயற்சியுள்ள உழைப்பும், உன்னத அன்பும், குருக்கள், ஊழியர் முதலியோரிடத்து அவர் கொண்ட பக்ஷம், மன்னிக்கும் சிந்தை, அனுதாபம் இவையுமே''. அன்றைத் தினம் ஸ்ரீமான் தேவவரம் கூறிய வசனம் ஒரு டாக்டராக ஐயர் எவ்விதம் நடந்துகொண்டார் என்பதைப் புலப்படுத்தும். அவர் "நோயாளிகளிடத்துக் காட்டும் உருக்கமும் இரக்கமும், சரீர சுகத்துக்கும் ஆத்தும ஆரோக்கியத்துக்கும் பிரயோகிக்கும் ஔஷதங்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பிரதிபிம்பித்துக் காட்டும் கிறிஸ்தவ அன்பும் ஆன இவையே வியாதியஸ்தரை அவரண்டை இழுத்த சத்துவங்கள்'' என்றார்.

**உற்ற தந்தை**

ஒரு வைதீகக் குருவாயிருந்தபோதிலும், கனோன் மர்காஷிஸ் அதிகத் தமாஷாகப் பேசும் சுபாவமுடையவர். கண்டிப்புள்ளவரெனினும் மிகுந்த மிருதுவான தன்மையுமுடையவர். கடின முகம் காட்டினும் அடுத்த நிமிஷம் அன்பால் அரவணைப்பார். ஆகையினால்தான் சிறு பிள்ளைகளுங்கூட அவரை வெகுவாய் விரும்பினர். அநாதைப் பிள்ளைகளுக்கு உற்ற தந்தைபோல் விளங்கினர். ஒவ்வொரு பிள்ளையின் தன்மையையும் ஒரு உத்தம தகப்பனைப் போல நன்கறிந்து, அதற்கேற்ப அவனுடைய பிற்கால வாழ்க்கைத் திட்டம் வகுத்து, அவசியமாயின் பம்பாய், கல்கத்தா, பூனா முதலிய இடங்களுக்குங்கூட உயர்ந்த கல்விக்காக அனுப்புவதுண்டு.

ஐயாது வேலையை நன்குமதித்து சர்க்கார் 1901ம் வருஷத்தில் கைசர்-இ-ஹிந்த் (Kaisar-I-Hind) பதக்கம் அளித்து அவரைக் கௌரவித்தார்கள். சென்னை சர்வகலாசாலையினர் அவரது உயர்ந்த ஞானத்தையும், கல்வி முன்னேற்றத்திற்காக அவர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகளையும் மெச்சி, 1894ம் வருஷத்தில் தங்கள் சர்வ கலாசாலையின் குழுவினருள் ஒருவராகத் தெரிந்தெடுத்தார்கள் (Fellow of the Madras University). சென்னை அத்திபக்ஷரவர்கள் அவருடைய பக்தியையும்

* நசரை மிஷனெரியின் புகழைக் கேள்வியுற்று, நேரில் வந்து பார்த்த நியூகினியா மிஷனெரி, நர மாம்ச பக்ஷணிகளான அத்தேயத்தார் மத்தியில் ஊழியஞ் செய்ய நாசரேத்திலிருந்து இந்திய ஆசான்களை அனுப்பவேண்டினர். நசரை வாசிகளில் இருவர் முன் வந்தனர். ஆனால் ஆஸ்டிரேலியா நாட்டுக் குடியேற்றச் சட்டம் குறுக்கிட்டு அவ்விருவரையும் போகவிடாது தடுத்துவிட்டது.

வேதசாஸ்திர அறிவையும் பாராட்டி 1902ம் வருஷம் அவரைச் சென்னை அத்தியக்ஷாலய கௌரவக் கனோன்களில் ஒருவராக்கினர். இக்கௌரவத்தை அவருக்கு அளித்தது பற்றி மெட்ராஸ் மெயில் பத்திரிகையில் "கனோன் மர்காஷிஸ் சென்னைக்கு விஜயம் செய்யும்போது மகத்துவமான திருநெல்வேலி S. P. G. மிஷனின் சுறுசுறுப்பு நிறைந்த ஒரு ஸ்தானத்தில் தற்காலிகமாக ஓர் காலியிடம் விழும். யாராவது ஒருவர் கனம் தங்கியவரும் கனத்துக்குரியவருமான இம்மிஷனெரியிடம் இவ்வுயர்வான கௌரவத்தைப் பெறுவதற்கான யோக்கியதாம்சங்கள் என்னென்னவுண்டு என்றறிய விரும்பின், அப்படிப்பட்டவர் பிரயாணம்பண்ணி நாசரேத்துக்குப் போகட்டும் — போய்ச் சுற்றிப் பார்த்துக்கொள்ளட்டும்" என்று எழுதப்பட்ட ஓர் ஆங்கில வாசகம் வெளியாயிற்று.

கனோன் மர்காஷிஸ்

1905-ம் வருஷம் எப்ரில் மாதத்தில் கனோன் மர்காஷிஸின் சுகம் வெகு விரைவில் கெட்டுவிட்டது. ஆஸ்த்மா அதிகரித்ததினல் பேசவும் கூடாதவரானர். எனவே மறுபடியுமொருவிசை கடல் யாத்திரை செய்வது நல்லதென்றெண்ணி, மேமாதம் 2-ம்வ அவ்வித யாத்திரையைத் தொடங்கி ஆஸ்டிரேலியாவுக்குப் போய்ச் சௌக்கியம் பெற்று ஆறுமாத காலத்தில் திரும்பினர். அதன்பின் அவரது உடல்நிலை அதிக உழைப்பைத் தாங்காது என்று கண்ட சங்கத்தார் அவருக்குதவியாகக் கனம் C. W. வெஸ்ற்றன் ஐயரை அனுப்பினர்கள். வெஸ்ற்றன் ஐயர் 1906-ம் வருஷம் நாசரேத்துக்கு உதவி மிஷனெரியாக வந்து சேர்ந்தார்.

C. W. வெஸ்ற்றன் ஐயர்

தமது கடைசி வருஷங்களில் கனம் மர்காஷிஸ் ஐயர் இரு பெரு முயற்சிகளிலீடுபட்டார். அவையிரண்டும் அவர் காலத்தில் நிறைவேறவில்லையெனினும் அவரெண்ணியவாறே முடிவுற்றன. இன்றைய நாசரேத் தென்திருநெல்வேலியில் வெகு விரைவில் வளர்ச்சியுற்று வரக்காரணம் மர்காஷிஸ் ஐயரது பெரும் பிரயாசத்தால் 1911-ம் வருஷம் இந்நகருக்குக் கிடைத்த சாத்தன்குளம்—நாசரேத் பாட்டையும், 1923-ம் வருஷம் போடப்பட்ட திருநெல்வேலி — திருச்செந்தூர் இருப்புப்பாதையுமே. இவ்விரண்டு பாதைகளுமே நாசரேத் வழியாய் போடப்பட்டது முற்றிலும் மர்காஷிஸ் ஐயரின் பிரயாசத்தினல்தான். இவற்றில் சாத்தன்குளம் ரோடு ஆழ்வார்திருநகரி—நாசரேத் பாட்டையிலுள்ள வெள்ளமடத்திலிருந்து நேரே சாத்தன்குளத்துக்கு எடுப்பிக்கப்படவேண்டுமென்பதுவே அதிகாரிகளின் எண்ணமாயிருந்து என்றும், நம் ஐயர் இதையறிந்து தம் மிகுந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, அப்பாட்டை நாசரேத்திலிருந்து போடப்படச் செய்தார் என்றும் முதியோர் கூறுவர். இது போன்றே

திருநெல்வேலி—திருச்செந்தூர் ரயில் மார்க்கமும் தென்திருப்பேரி வழியாய் குரும்பூர் சென்று திருச்செந்தூர் போவதே முதல் ஏற்பாடாயிருந்ததென்றும், கனம் ஐயருடைய முயற்சியின் மூலமாயே இருப்புப்பாதை அவ்வேற்பாடு மாற்றப்பட்டு நாசரேத், கச்சனுவிளை மார்க்கம் தெரிந்துகொள்ளப்பட்டதெனவும் அறிகிறோம். மேலும் கனம் ஸ்டேப்ளி ஐயருடைய கடிதங்களொன்றிலிருந்து, ஸ்ரீவைகுண்டத்திலிருந்தே, மளவை, உடையார்குளம் வழியாய் நாசரேத்துக்கு லைன் எடுப்பிப்பதும் சிலகாலம் அதிகாரிகளின் நோக்கமாயிருந்து, பின்னால் அந்நோக்கம் கைவிடப்பட்டதென்றும் தோன்றுகிறது. மர்காஷிஸ் ஐயர் இறந்து 14 வருஷங்கள் சென்றபின்தான் இருப்பப்பாதை அமைக்கப்பட்டதெனினும், அது ஐயரது இஷ்டப் பிரகாரமே ஆயிற்றென்பதறிவோம். இருப்புப்பாதையிவ்வூருக்கு வந்த காலத்தினின்றே இவ்வூர் வியாபார உலகில் முன்னேற்றமடைந்தது. இதுபரியந்தம் கல்வியின் மூலம் நசரைவாசிகள் பலர் உலக மேன்மையடைந்திருந்தனர். இதன்பின் வியாபாரத்திலுமீடுபட்டனர். சிவகாசி, விருதுநகர் முதலிய பிரபல வியாபாரஸ்தலங்களிலிருந்தும் பலர் இவ்வூருடன் தொடர்பு கொள்ளவுமாயினர். ஒரு ஊர் முன்னேற்றமடைவது அது ஓர் இருப்புப்பாதை நிலையமாய்விட்டால்மட்டும் கூடியதாகிவிடாது. அவ்வூரைச் சுற்றியுள்ள பிரதேசத்துக்கு அது மத்தியஸ்தானமாயும் விளங்கவேண்டும். அவ்விதமிருண்டாகப் பல கிராமங்களோடும் நகரங்களுடனும் சாலைகள் மூலமாயுண்டான தொடர்பு ஏற்படவேண்டும். தீர்க்கதரிசன நோக்குடைய மர்காஷிஸ், மார்க்க சம்பந்தமாயும், கல்வி விஷயமாயும் மக்கட்குத் தாம் அளித்த எல்லாச் சேவைகளுடனும் வருங்கால முன்னேற்றத்துக்காக இப்பிரயாசங்களிலுமீடுபட்டார். அவர்காலத்தில் சாத்தன்குளம் ரோடு வாழையடி வரையுமே நீடித்தது. நாம் மேலே கூறினபடியே அதற்குமேல் தாலுகா, ஜில்லா போர்டார்களுடனும், சர்க்கார் அதிகாரிகளுடனும் தாம் கொண்டிருந்த செல்வாக்கை வெகுவாய்ப் பயன்படுத்தி இச்சாலை வேலைக்கு அடிகோலினர்.

நாசரேத் கிராமம் பிற்காலத்தில் ஒரு பெரிய கிறிஸ்தவ நகரமாகும் என்று ஐயர் தீர்க்கமாய் அறிந்திருந்தார். அவரிறந்த காலத்தில் சந்தைக்கு மேற்கில் வெறும் புதரும் உடங்காடாயுமிருந்தும், ஸ்ரீ லாசரு [பின்னால் கனம் லாசரு ஐயர்] அப்பிரதேசத்தில் தனக்கெனவோர் வீடு கட்டிய காலத்தில், ஐயர் ஒரு நாள் அவரைப்பார்த்து, "நீர் 'தனியனாய் காட்டில் வசிக்கிறேன்' என்று எண்ணுகிறீர். ஆனால் நகரத்தின் மத்தியில் வாசம் பண்ணுவீர்'' என்றார். இப்போது அவரது வாக்கு ஒருவாறு பலித்துள்ளது. இன்னும் சின்னாளில் அது பூரணமாய் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

நகரத்தை விரிவாக்கும் நோக்கத்துடன் நாலாம் தெருவுக்கு வடக்கிலிருந்த எருக்குழிப் பிரதேசத்திலுள்ள மரங்களனைத்தையும் ஒரே நாளில் கைத்தொழிற்சாலை மாணவருதவி கொண்டு வெட்டி, இடத்தைச் சுத்திகரித்து, மக்கள் அவ்விடத்தில் வீடு கட்டிக் குடியேற அவர்களை உற்சாகப்படுத்தினர். அக்குடியேற்றமே ஐந்தாம் தெருவாம். இது தவிர சிற்றோடைக்குக் கிழக்கிலும் ஜனங்கள் வீடு கட்டிக்கொள்ள அவர்களை ஊக்கப்படுத்தினர். எனவே அவர் வந்த காலத்தில் ஒரு சிறு கிராமமாகவிருந்த நாசரேத், அவர் மரணமடையும் காலத்திற்குள் ஒரு பெருங்கிராமமாக, அல்லது ஓர் சிறு நகரமாக மாறிற்று.

5-ம் தெரு

பரிசுத்த யோவான் ஆலயத்தைப்பற்றியும் கனம் மர்காஷிஸ் ஐயர் தம் மனதில் ஓர் பேரவாக் கொண்டிருந்தார். நாசரேத் ஆலயத்தின் மீதும் அங்கு நடக்கும் ஆராதனைகளின் பேரிலும் அவர் கொண்டிருந்த சிறந்த பற்று எத்தன்மையது என்று கண்டோம். காலாகாலங்களில் ஆலயம் விரிவாக்கப்பட்டதெனினும், 1900-ம் வருஷத்துக்கு மேல் அதன் விஸ்தீரணம் 'பக்த கோடிகளு'க்குப் பற்றாது போயிற்று. 1901-ம் வருஷக் கணக்குப்படி நாசரேத் சபையின் தொகை 1482 ஆகும். இன்னும் வெகு விரைவில் 2000-க்கு மேல் இத்தொகை வளரும் என்று கண்ட மர்காஷிஸ் ஆலயத்தை இடித்துக்கட்டத் திட்டம் செய்தார். ஆனால் அதுவும் நாமறிந்தபடி அவர் காலத்திலன்று, அவர் மரித்து 20 வருஷங்களுக்குப் பின்பே நிறைவேறுவது தெய்வ சித்தமாயிருந்தது. இவ்விதம் மர்காஷிஸ் ஐயர் காலம்முழுவதும் நாம் ஏற்கெனவே கூறினதுபோல் வைதீக, லௌகீக, சமுதாய, சன்மார்க்க விஷயங்களனைத்திலும் ஓர் முன்னேற்ற காலமாகத் திகழ்ந்தது என்பதற்கையமில்லை.

பரி. யோவான் ஆலயம்

1908-ம் வருஷத் துவக்கத்திலிருந்து கனம் ஐயரவர்களின் உடல் நலம் மீண்டும் குன்றவாரம்பித்தது. ஆஸ்த்மா தன் கோஷ்டத்தைக் காட்டினது. அதோடு வாதநோயும் கூடிக்கொண்டது. வழக்கமாகச் செய்து கொள்ளும் சிகிச்சைகளைச் செய்யலானர். மறுபடியுமொரு விசை கடல் யாத்திரை செய்யின் பலனுண்டாகலாமெனினும், முதலில் அவர் அதைத் தெரிந்துகொண்டாரில்லை. சிநேகிதரும், அவரது நலனை விரும்பும் மற்றோரும் அவர் தம் சுயநாடு திரும்பிப் பெலனடைந்து வருவதே மேல் என்று ஆலோசனை கூறினர்கள். 1883-ல் இங்கிலாந்துக்குப் போய்த் திரும்பியபின் சுயதேச நாட்டம் அவருக்கேற்பட்டதே கிடையாது. உடல் நலம் குன்றியபின் சுதேசம் சென்றிடின், அங்குள்ளோர் அவரைத் திரும்பவும் இந்தியாவுக்கு வர அனுமதியார் என்றெண்ணி, அவ்வெண்ணமே

தலைகாட்ட இடங்கொடாதவராய்த் தன்னுட்டு நாட்டத்தை ஒழித்தார். தமது ஆண்டவர் தம் சீஷர்கள் மீது 'முடிவுவரை அன்புகூர்ந்த'தற் கொப்பாய்த் தாமும் நாசரேத்தின் மீதும் நாசரேத் மிஷன் ஊழியத்தின் பேரிலும் 'முடிவு வரை அன்பு வைக்க'த் தீர்மானித்தார்.

1908 ஏப்ரில் மாதம் 15-ம்உக்கு மேல் பேசவும் சக்தியற்றவரானுர். படுக்கையில் சாய்வாகத் தலையணைகளை வைத்துச் சற்றுநேரம் அவற்றின் மீது சாய்ந்திருப்பார். பின் அவ்வசதி சரிப்படாது தோன்றவும், சாய்வு நாற்காலியிலமர்ந்து கால்களை நீட்டிப் படுத்திருப்பார். சின்னுட்களில் கால்களில் வீக்கம் கண்டது. அதுமுதல் அவருக்கே 'இவ்வியாதி நீங்கிப் பிழைப்போம்' என்ற நம்பிக்கை யற்றுப்போயிற்று. அவ்விதம் கர்த்தர் தம்மை அழைத்துகொள்வது சீக்கிரம் இருப்பின், அது நாசரேத்தில் வைத்து நேரிடக்கூடாது என்பது அவரது விருப்பம். ஏனெனில் நாசரேத் மக் களின் துயரத்தை அது அதிகரிக்கச் செய்யும் என்று எண்ணினுர் போலும். இக்கால் அவரது நண்பரும், மற்ற நெருங்கிய சிநேகிதரும் அவர் மற்றமோர் விசை ஆஸ்திரேலியாவுக்குச் சென்று வரவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆஸ்திரேலியாவில் அவரது பந்துக்கள் உண்டு. அவ ருடைய தமையனுர் ஒருவர் அங்குப் பிரபல வைத்தியராயிருந்தார். ஐயரும் கடைசியில் இணங்கி அங்குச் செல்லும் நோக்கமாய், ஏப்ரில் 22-ம்உ தூத்துக்குடிக்குச் சென்று தங்கினுர். அவருடன் சனம் வெஸ்ற் றன் ஐயரும், அவருடைய பட்லரான நோவா என்பவரும் கூடச் சென்ருர் கள். தூத்துக்குடியில் அவரைப் பார்வையிட்ட சர்க்கார் வைத்தியர் அவர் பிரயாணத்தைத் தாங்கமாட்டார் என்று சொல்லிவிடவே பயணம் தடைப்பட்டது.

கடைசி வியாதி

26-ம்உ இரவு வழக்கம்போல் படுக்கைக்குச் சென்ருர். ஆஸ்த்மாவின் உபத்திரவம் காலைநேரத்தில் அதிகப்படுவதுண்டாகையினுல் விடியல் 4 மணிக்கு அவர் சூடான தேத்தண்ணீர் அருந்துவதுண்டு. அவ்வழக்கப் படியே அன்றிரவு கழித்து, 4 மணிக்கு நோவா தேத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுத்தார். ஐயர் அப் பானத்தை மேஜையில் வைத்துவிடச் சொல்லி, பட்லருக்கு 'என்னை ஒருவரும் காலையில் எழுப்ப வேண்டாம்' என்று கட்டளை கொடுத்தார். விடிந்து வெகு நேரமாகியும் கதவு திறக்கப்படவேயில்லை. எட்டு மணிச் சுமாருக்கு வெஸ்ற்றன் ஐயர் கதவைத் திறந்து மார்காஷிஸ் ஐயருடைய ஆவி விண்ணுக்கேகிவிட்டதை அறிந்தார்.

உலகில் கடைசி இரவு

மேல் நடந்ததை விஸ்தரியாது விட்டோம். தந்திமூலம் செய்தி நசரைக் கெட்டியதும் அங்குற்ற துயரை வாசகர் அனுமானிக்கலாம். அவர் நேசித்துச் சேவித்த மக்களின் மத்தியில் அவரது சடலம் இளைப்பாறுவதே தகுதி என்றெண்ணி வெஸ்ற்றன் ஐயர் ரயில் மார்க்கமாக ஆதைப் பாளையங் கோட்டைக்குக் கொண்டுவந்தார். அன்றிரவில் அங்கு தங்கி மறுநாட் காலையில் வண்டியிலேற்றி, பிற்பகலில் ஆழ்வார்திருநகரி சேர, நசரை மக்கள் பலர் அங்கிருந்து தோள் சுமையாகவே தங்கள் தந்தையாம் அப் போதகரின் சடலத்தைத் தூக்கி வந்தனர். ஆலயத் தண்டை வந்ததும் மக்கள் கண்ணீர் சொரிந்தார்கள். சகலரும் அவரது முகத்தைக் கடைசியாகத் தரிசிக்க விரும்பினபடியால், கிராதிக்கருகில் பெட்டியை வைத்து, முகத்தைமட்டும் பார்த்துக்கொள்வதற்காக மேல்ப் பலகையில் முகத்துக்கு மேலுள்ள பாகத்தை மட்டும் திறந்து மூடக்கூடியபடி அமைத்திருந்தார்கள். சபை யார் ஒருவர் பின்னொருவராக வந்து 'தந்தையின் முகதரிசனம்' செய்து போனார்கள். புஷ்பங்களும் வாசனைத்திரவியங்களும் அபரிமிதமாய் சடலம்மீது சொரியப்பட்டன.

மறுநாள்

அன்று மாலை (28—4—'08)யில் நல்லடக்க ஆராதனை நடந்தது. கோடைகாலமாயிருந்தமையால் மிஷனெரிமாரெல்லாரும் கொடைக்கான லுக்குப் போய்விட்டார்கள். சாயர்புரம் கோடன் (Rev. A. F. Godden) ஐயர் மட்டும் தலத்திலிருந்ததால் அவர் வந்து அவ்வாராதனையை நடத்தி னார். இந்திய குருக்களிலனேகரும் அவ்வாராதனையில் கலந்து கொண்ட னர். பாடகர் உயிர்த்தெழுதல்கீதம் பாட சகல மரியாதைகளுடனும் சரீரம் பூமிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கல்லறையில் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கனோன் A. மர்காஷிஸ்

நாசரேத் சூப்பரின்றெண்டிங் மிஷனெரி

1876 — 1908

இளைப்பாறுதலுக்குட்பட்டது 27—4—1908.

வயது 55.

"பச்சாத்தாபம் நிறைந்தவராகிய இயேசுவே, நித்திய இளைப்பாறுதலை இவர்க்குமீயுமே"

அவர் மரித்தும் இன்னும் பேசுகிறார் (எபி. 11 : 4)

# அத்தியாயம் 12

## சங்கிலித்தொடர்

## (வெஸ்ற்றன் ஐயர் காலம்) **1906 — 1912**

காலின் வில்ப்ரெட் வெஸ்ற்றன் (Colin Wilfred Weston) ஐயர் நமது தேசத்தில் செக்கந்தராபாத்தில் 1874-ம் ௵ ஏப்ரில் ௴ 7-ம் ௳யில் பிறந்தவர். 1903-ம் 1904-ம் வருஷங்களில் முறையே உதவிக் குருப் பட்டமும் குருப்பட்டமும் பெற்று, இங்கிலாந்தில் 1903 முதல் 1906 வரை ரஷ்டென் என்றவிடத்தில் ஊழியம் செய்து வருங்கால் மிஷனெரியாக விரும்பி S. P. G. சங்கத்தின் சார்பில் 1906-ம் வருஷம் நாசரேத்துக்கு வந்து மர்காஷிஸ் ஐயருக்கு உதவியாளராய்ப் பணியாற்றலானார்.

**பயிற்சி காலம்**

வெஸ்ற்றன் ஐயரும் மர்காஷிஸ் போன்றே விவாகமில்லாதவராயிருந்தார். அவர் வரும்போது 32 வயதுடையவர். மர்காஷிஸ் ஐயரைத் தந்தை போல் மதித்து சகலத்திலும் அவருடைய ஆலோசனையைப் பெற்று மிஷனெரி வேலையின் சன்னல் பின்னல்களையும் அவற்றைக் களையும் வழிகளையும், அவ்வூழியத்தின் பொறுப்பு, அதைத் தாங்கும் முறை முதலிய சகலத்தையும் கற்றுக்கொண்டார். தம் காலம் சீக்கிரமே முடிவுறும் என்பதை உணர்ந்திருந்த மர்காஷிஸும் மிஷனெரி வேலையில் வெஸ்ற்றனை நன்கு பழக்கிவிட்டார் என்றே கூறவேண்டும். எனினும் வெஸ்ற்றன் நாசரேத் வந்த இரு வருஷங்களுக்குள் இத்தனை பெரும் பொறுப்புத் தம் மீது சுமரும் என்பதை அவரேனும் மற்றெவரேனும் கிஞ்சித்தும் சிந்தித்திருக்க முடியாது.

**குணசீலம்**

வெஸ்ற்றன் கபடற்றவர். சிறு பிள்ளையைப் போன்ற இளகிய தன்மையர். பக்தியிற் சிறந்து, மக்களால் 'பரிசுத்த நெஞ்சுடையார்' என்று புகழப்பட்டவர். அவரது முகவசீகரமும், குளிர்ந்த பார்வையும், எவரையும் கவரும். திட்டவட்டமான வாழ்க்கைத் திட்டங்களையுமுடையவராயிருந்தார். மர்காஷிஸ் ஐயருக்கு எதிரிடையாக, நன்றாய் வளர்ந்து கம்பீரத் தோற்றமுடையவராய் விளங்கினார். இந்திய சீதோஷ்ண நிலை அவரது உடல் நிலையையும் பாதித்ததினால் அவர் ஊழியகாலம் சில வருஷங்களே நீடித்தது.

1908 மே மாதம் முதல் நாசரேத் மிஷன் பொறுப்பை ஏற்றதுமல்லாமல், 1909 ஜூன் ௴ 10-௳ கனம் கோடன் ஐயர் மரித்துப்

போகவே M. D. C. தீர்மானத்திற்கேற்ப, திருநெல்வேலி நாட்டின் S. P. G. மிஷன் ஊழியத்தை எல்லாம் மேற்பார்க்கும் உத்தரவாதத்தையும் ஒப்புக்கொண்டார். எனவே அது முதல் நாசரேத் திருநெல்வேலி S. P. G. மிஷன் ஊழியத் தலைமை ஸ்தானமாகத் திகழலாயிற்று. இப்பொறுப்பை ஏற்றது முதல் வெஸ்ற்றன் ஐயர் அடிக்கடி சுற்றுப்பிரயாணங்கள் செய்ய வேண்டியதாயிற்று. பிரயாண வசதி மிகவும் குறைவாயுள்ள அக்காலத்தில் வண்டியிலும், குதிரையிலுமாக அடிக்கடி வெய்யிலிலும், பனியிலும், மழையிலும் அலைந்து திரிந்தது அவரது உடல்நலம் குன்றக் காரணமாயிற்று. எனினும், அவ்வூழியத்தைச் சிறப்பாகவே செய்யலானார்.

நாசரேத் மிஷன் சேவையில் அவர் முழுவதுமாகக் கனம் மார்காஷிஸ் ஐயரின் கொள்கையையே (Policy) பின்பற்றினார். மார்காஷிஸ் ஐயர் செய்த வேலையை அவ்வண்ணமே தொடர்ந்து செய்தமையின் அவர் துவக்கி முடியாது விட்ட பல காரியங்கள் இவர் காலத்தில் நிறைவேறலாயின. அவற்றில் விசேஷித்தது பெண் பாடசாலைப் புதுக்கட்டிடம் கட்டப்பட்டு பிரதிஷ்டையான நற்காரியமெனலாம். இப்புதுக்கட்டிடம் பெண்கள் பாடசாலைக்கு மிகவும் அவசியமாயிருந்தது. 1846-ல் திருமதி அனி கேமரர் அம்மாள், ஆலயத்தின் முன்னால் கட்டிமுடித்திருந்த சிறு கட்டடம் காலாகாலத்தில் சிற்சில இணைப்புகளுடன் விரிவாக்கப்பட்டு, அக்கட்டடத்திலேயே பாடசாலையின் எல்லாப் பிரிவுகளும் நடைபெற்றுவந்தன. நம் காலத்துள்ளோர் இன்று இடிந்து கிடக்கும் அக்கட்டடத்தை அறிவோமாதலால், எவ்வாறு அதனுள் ஆரம்பப் பாடசாலையும், மத்திப, உயர்தர வகுப்புகளும், ஆசிரியைப் பயிற்சி வகுப்புகளும், அதோடு போர்டிங்கும் அடங்கியிருந்தன வென்பது நமக்கு விந்தையிலும் விந்தையாயிருக்கிறது. நடுவில் முற்றமும், சுற்றிலும் பல அறைகளையுடைய சுற்றுக்கட்டும், அதற்கான வெளித்திண்ணைகளும் உடையதான அக்கட்டடத்தில் பலவசதிக் குறைவுகளுடன் அப்பெண்களும், ஆசிரியைகளும் வசித்தும், கற்றும், கற்றுக்கொடுத்தும் பல வருஷங்களைக் கழித்தனர். கனம் மார்காஷிஸ் ஐயர் பெண்கள் கலாசாலைக்கென்று பெரிய கட்டடம் கட்டவேண்டிய அவசியத்தை யுணர்ந்து S. P. G. சங்கத்தாருக்கும், பல சிநேகிதருக்கும் கடிதங்கள் எழுதிப் பணம் சேகரிக்கும் முயற்சிகளி லீடுபட்டார். அவர் வேண்டுகோளுக்கிணங்கி S. P. G. சங்கத்தார் ரூ. 16,500-ம் S. P. C. K. சங்கத்தார் ரூ. 3750-ம் கொடுத்தார்கள். எனவே 1908-ம் வருஷம் தரிசாய்க்கிடந்த மனையில் கட்டடத்தை நிர்மாணிக்க ஏற்பாடுகள் செய்து முடித்தார். ஆனால் திடீரென்று பரலோக ராஜ்ய அழைப்பைப் பெற்று அவர் போய்விடவே, கனம் வெஸ்ற்றன் ஐயர்

**பரி. யோவான் பெண்கள் கல்வி நிலயப் புதுக் கட்டடங்கள்**

அவ்வருஷம் நவம்பர் மீ 30-ம்உ கட்டடத்திற்கஸ்திபாரம் போடத் தீர்மானித்து, இப்பெருங் கைங்கர்யத்தைச் செய்யும் சிலாக்கியத்தை அக்காலம் சென்னை மாகாணாதிபதியாயிருந்த மேன்மை தங்கிய ஸர். ஆர்தர் லாலி துரையவர்களுக்களித்தார். கவர்னரும் அகமகிழ்ச்சியுடன் அதற்கிசைந்து நசரையம்பதி வந்து சேர்ந்தார். இவ்வைபவத்தில் கலந்து கொள்ள திருநெல்வேலி, மதுரை கண்காணியாளரான மகாகனம் A. A. உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்களும், அம்மாளும், ஜில்லாக் கலெக்டர் L. M. வின்ஞ்ச் (Mr. L. M. Wynche I. C. S.) அவர்களும் வந்து சேர்ந்தார்கள். மேலும் மெஞ்ஞானபுரம் மிஷனெரித் துரைசானிமார்களான மிஸ் மார்ட்டின், மிஸ் ரிச்சர்ட்ஸ் அம்மையரும் C. M. S. மிஷனெரிகள் நாசரேத் S. P. G. பெண்கள் கலாசாலையின்மீது கொண்ட தங்கள் நன்மதிப்பைக் காட்டுபவர்களாய், விஜயஞ்செய்திருந்தார்கள். காலை 8 மணிக்குப் பரிசுத்த நற்கருணை யாராதனை மகாகனம் அத்தியக்ஷரவர்களால் நடத்தப்பட்டது. கவர்னர் முதலானோருட்பட, குருக்கள், ஊழியர் மிஷனெரிமார், சபையாரான திரள் கூட்டத்தினர் அன்று திருவிருந்தில் பங்கு பெற்றனர். ஆராதனை முடிந்ததும் கவர்னர் பெருமானை நாசரேத் சபையார் சந்தித்து நல்வரவேற்புக்கூற, அவரும் ஏற்றவாறு பதிலுரைத்துப், பின் சுமார் 10 மணிக்குப் பாடகர், ஊழியர், குருமார், முதலியவர்களுடன் பவனி சென்று அஸ்திபாரக்கல் நாட்டப்பட வேண்டிய தலம் சென்று, ஆங்கு நிறுவப்பட்டிருந்த அழகிய பந்தரின் கீழ் அமர்ந்தனர். பந்தலின் முகப்பில் "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (I கொரி 3 : 11) என்ற திவ்விய வசனம் எழுதப்பட்டிருந்தது. அத்தியக்ஷரவர்கள் ஜெபித்தபின் கவர்னர் அஸ்திபாரக்கல்லை நாட்டினார். இவ்வைபவம் முடிவுற்றதும் கவர்னர் புடைசூழ மற்ற ஸ்தாபனங்களையும் பார்வையிட்டு, மாலையில் பாளையங்கோட்டைக்குத் திரும்பினார்.

அஸ்திபாரம்

1908 நவம்பரில் மேற்கண்டவாறு அஸ்திபார வைபவம் நடைபெற்றும் கட்டட வேலை வெகு மந்தமாகவே நடைபெற்றது. 1909-ம் வருஷம் டிசம்பர் மீ 6-ம்உ தான் தலைவாசல்கல்லை வைக்கப்பட்டது. இச்சமயம் கல்கத்தாவிலிருந்து வைசிராயின் ஆலோசனையாளரில் ஒருவரான J. அந்திரேயா துரை (Mr. J. Andrew I. C. S Member of the Viceroy's Council) நாசரேத்துக்கு விஜயம் செய்து தலைவாசல் நாட்டும் மங்கள கிரியையை நிறைவேற்றிவைத்தார். இதற்கிடையில் கனம் குரோவ்ஸ் அம்மாள் பள்ளிக்கூடத்தின் மானேஜராக நியமனம் பெற்று நாசரேத்துக்கு வந்து பதவி தாங்கினார்கள். இத்தம்மையார் மிகுந்த உற்சாகத்துடன்

வேலையை முன்னின்று நடத்தினபடியால், 1910-ம் வருஷம் செப்டெம்பர் மாதத்திற்குள் கட்டடப்பணியை முடித்து அம்மாதம் 15-ம் உ காலே பிரதிஷ்டை செய்தார்கள். அந்நன்னாளில் மகாகனம் உவில்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் தலைமைதாங்கினார்கள். திருநெல்வேலிக் கலெக்டர் ஆர். டபிள்யூ. டி-ஆஷ் (R. W. De-Ashe Esq. I. C. S.) துரையும் அம்மாளும் உவில்லியம்ஸ் அம்மையாரும், பாளையங்கோட்டை எக்ஸிக்யூட்டிவ் இஞ்சினியர் யு. பெடி அவர்களும் (Mr. U. Peddie), தூத்துக்குடியிலிருந்து மிஷனெரி C. G. ஸ்டேப்ளி துரையும் வந்திருந்தார்கள். பாடகருடனும், குருக்களுடனும் ஆலயத்திலிருந்து பவனி புறப்பட்டு கட்டிடத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கூடினார்கள். அச்சமயம் உயர்தரக் கலாசாலைத் தலைமையாசிரியரான திரு. C. S. கோலாப் (Mr. C. S. Kohloff B. A. L., T.) இக்கலாசாலையின் உயர்ந்த திருப்பணியைப்பற்றிய அறிக்கையொன்று வாசித்து, விஜயமளித்த பெருமக்களுக்கு நல்வரவு கூறினார். அத்தியக்ஷரவர்கள் ஜெபித்து முடிந்ததும் கலெக்டரின் மனைவி ஸ்ரீமதி ஆஷ் அம்மையார் வெள்ளிச் சாவியைக்கொண்டு பிரதான அறையையும், கனம் உவில்லியம்ஸ் அம்மாள் மேல் மாடியறையையும் திறந்து வைத்தார்கள். அவ்வமயம் "கீழ்ப் பெரிய அறைக்கு இப்பாடசாலையை ஸ்தாபித்த கேமரர் அம்மாளவர்களின் ஞாபகத்தை நிலைநிறுத்த 'கேமரர் சபா மண்டபம்' எனவும், மேல் அறைக்கு இவ்வித்தியாசாலையைத்தற்கால உயர் நிலைமைக்குக் கொண்டுவந்த கனோன் மர்காஷிஸ் ஐயரவர்களின் ஞாபகார்த்தமாக 'மர்காஷிஸ் சபா மண்டபம்' எனவும், இரண்டு அறைகளுககு சீர்மை செக்ரட்டரிமார்களின் பெயரால் 'மன்ட்காமரி அறை' 'அல்லன் அறை' எனவும், வேறு இரண்டு அறைகளுக்குக் கட்டிடத்திற்காகப் பணம் சேகரித்துக் கொடுத்த * கனோன் பிரிட்டன் ஐயரவர்களையிட்டு பிரிட்டன் அறை, அனுபவிக்கும்படி திறந்து கொடுத்த அம்மாளை நினைவு கூற 'ஆஷ் அறை' எனவும் நாமகரணஞ் சூட்டப்பட்டது."† இவ்வண்ணம் மிகுந்த ஆடம்பரத்துடன் பிரதிஷ்டை வைபவம் முடிக்கப்பெற்று அன்று முதல் இக்கலாசாலை முன்னிலும் மேலான சேவையை நாசரேத் மக்களுக்கும் சுற்றுப்புறத்துள்ளோர்க்கும் ஆற்றி வருகிறது. S. P. G., S. P. C. K. சங்கத்தார் கையளித்த தொகைக்கு மேலாகக் கனோன் பிரிட்டன் ஐயரவர்களின் முயற்சியால் ரூ. 1483-ம், நசரை வாசிகள் கொடுத்த தொகை ரூ. 1000-மும் கட்டடச் செலவுக்காயிற்று.

பிரதிஷ்டை

---

* Canon Arthur Britten, Supdg. Missionary of Nandyal.

† Page 51, Valibar Mitran 1910.

அடுத்த நாளும் நாசரேத் சரித்திரத்தில் ஓர் விசேஷித்த தினமாயிற்று. அன்றுடன் மகாகனம் உவில்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் இந்தியாவுக்கு மிஷனெரியாக வந்து 30 வருஷங்கள் முடிவடைந்திருந்தன. எனவே அன்று காலை கைத்தொழிற்சாலையில் ஒரு பொதுக்கூட்டம் கலெக்டர் ஆஷ் துரையின் தலைமையில் நடைபெற்றது. கலெக்டர் அத்தியக்ஷரவர்களின் 30 வருஷச் சேவையை பெரிதும் பாராட்டிப் பேசினர். கைத்தொழிற்சாலை மாணவர் 'முற்றிலும் விசித்திரமான எழுத்து மேஜையும் (writing desk) ஜரிகை வேலைப்பாட்டில் வார்த்தைகள் எழுதப்பட்டிருந்த தையலில்லா பூர்ண செசவான திண்டும் ஞாபகச்சின்னங்களாக' அத்தியக்ஷருக்களித்தார்கள். அன்று மாலையில், தற்போது பேறுகால அறையாக வைத்தியசாலையில் உபயோகமாகும் கட்டிடத்தின் கீழ்ப் பாகத்தை வேதசாஸ்திரக் கலாசாலை உபயோகத்துக்கென்று 'உவில்லியம்ஸ் அத்தியக்ஷர் ஞாபகக்கட்டடம்'' என்ற பெயருடன் கட்டுவதற்கென்று ஆஷ் கலெக்டர் அஸ்திபாரக்கல் வைத்தார். இதுமுதல் நாசரேத் வேதசாஸ்திர நிலையம் 'அத்தியக்ஷர் வேதசாஸ்திரக் கலாசாலை' என்னும் புதுப்பெயருடன் வழங்கப்படலாயிற்று.

அத்தியக்ஷர் வேதசாஸ்திரக் கலாசாலை

கனம் வெஸ்ற்றன் ஐயரவர்கள் காலத்தில் மேற்சொல்லப்பட்ட இரு கட்டடங்களல்லாது வேறு சில விடுதிகளும் பெண்கள் கலாசாலையில் அமைப்புற்றன. இதுகாறும் பள்ளிக்கூட மானேஜரான ஸ்ரீமதி குரோவ்ஸ் அம்மாளும், தாய்மார் சங்கக் காரியதரிசி ரிக்ஸ் அம்மையாரும் 'கச்சேரி பங்களா' என்றழைக்கப்பட்ட கட்டிடத்தில்தான் வதிந்து வந்தனர். இதில் பல இடைஞ்சல்களுண்டாகக் கூடியதிருந்ததாலும், பள்ளிக்கூட மானேஜர் பள்ளிக்கூடக் கட்டடத்திற்கருகிலேயேயிருப்பதுதான் சாலச் சிறந்ததாதலாலும், 1911-ல் ரூ. 411 கிரயத்தில் கனம் வெஸ்ற்றன் ஐயர், தற்காலம் பெண்கள் கலாசாலை மிசிமார் பங்களாக் கட்டியுள்ள பூமியை வாங்கி முடித்தார். அதோடு மாணவிகள் தங்குவதற்கும் உறங்குவதற்குமான அறைகள் (Out-houses, and dormitories) கட்டுவதற்கான தலத்தையும் வாங்கி இரண்டிலும் கட்டடவேலையை ஆரம்பித்தார்.

பங்களா

வட்டாரத்தின் பற்பலவூர்களிலும் சில விசேஷ கட்டடப்பணிகள் இவர் காலத்தில் நிறைவேறின. அவற்றில் முக்கியமானது மூக்குப்பீறி பரிசுத்த மாற்குவின் ஆலயம். மூக்குப்பீறி ஆலயம் புதுப்பிக்கப்படவேண்டுமென்று பல வருஷங்களாக அவ்வூரார் பிரயத்தனம் செய்ததின் பயனாக கனம் மார்காஷிஸ் ஐயரவர்களால் புதுக்கோவிலுக்கு அஸ்திபாரம் போடப்

பட்டது. அவ்வூரார் வெகு உற்சாகமாய்ப் பணவுதவி செய்ய முன் வந்தார்கள். 1908 முதல் அவ்வூர் குருவாயிருந்த கனம் D. தேவப்பிரியம் ஐயர் சபையாரை இன்னும் உற்சாகப்படுத்தி அரும்பிரயாசத்துடன் உழைத்தார். சபையார் நூறாகவும், இருநூறாகவும் பணம் கொடுத்தார்கள். ஆலயம் 1910 எப்ரலில் கட்டி முடிவுற்றது. அம்மாதம் 25-ம்உ பரி மாற்குவின் திருநாளன்று மகாகனம் உவில்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் காலை 10 மணிக்குப் பிரதிஷ்டை ஆராதனை நடத்தி ஆலயத்தைத் திறந்து வைத்தார்கள். அச்சமயம் தூத்துக்குடியிலிருந்து கனம் P. S. பீற்றர் ஐயரும், முதலூர் கனம் மதுரநாயகம் தானியேல் ஐயரும், சாயர்புரம் கனம் டேவிட் பாக்கியநாதனையரும் வந்து பிரதிஷ்டை உற்சவத்தைச் சிறப்பித்தனர். அன்று 354 பேர் திருவிருந்தருந்தினர்கள். ஆலயக்கட்டுமானத்துக்கான செலவு ரூ. 11,500-இல் சபையாரே கொடுத்தது ரூ. 9500 ஆகும். திருப்பீடச் சிலுவை மகாகனம் அத்தியக்ஷரவர்களால் இனாமளிக்கப்பட்டது. பின்னர், அன்று மாலையில் ஒய்யான்குடிச்சபையார் ரூ. 3500 செலவில் கட்டி முடித்த கோபுரமும், மகாகனம் அத்தியக்ஷரவர்கள் உதாரத்துவமாய் அக்கோவிலுக்கு ஈந்தளித்த பெரிய நாவு மணியும் பிரதிஷ்டையாயின.

*முக்குப்பீறி பரி. மாற்கு ஆலயம்*

மேற்சொன்ன ஆலயங்களைத் தவிர எருசலேம், மணல்மேடு, குருகாட்டூர், பன்றிமடல், தோப்பூர், முதலைமொழி என்ற கிராமங்களிலும் புதிய ஆலயங்கள் கட்டுவதற்காக அஸ்திபாரம் போடப்பட்டு கட்டுமான வேலைகள் துரிதமாய் நடைபெறலாயின. குருகாட்டூரில் வெஸ்ற்றன் ஐயர் காலத்திலும், மற்றவிடங்களில் அதற்குப் பின்னும் கட்டுமான வேலை முடிந்தது.

வெஸ்ற்றன் ஐயர் சுவிசேஷப் பிரபல்ய வேலையில் மிகுந்த பிரீதியுடையவராய் விளங்கினர். 1909ம் வருஷத்தில் நவம்பர்மீ [இதுகாறும் C. M. S. பாகங்களில் 1907*ம் வருஷம் முதல் அனுசரிக்கப்பட்டு வந்த] சுவிசேஷ ஞாயிறுக் கொண்டாட்டத்தை நாசரேத் வட்டாரத்தில் அனுஷ்டிக்கலானர். 1909ல் இவர் நாசரேத்தில் ஸ்தாபித்த இந்த நல்ல வழக்கம் வெகு விரைவில் S. P. G. பாகமெங்கணும் பரவலாயிற்று. தவிரவும் 1910ம் வருஷத்தில் C. M. S. சபைகளில் இச்சுவிசேஷ ஊழியம் நடைபெறும் அதே நாளில் நாசரேத் வட்டாரத்திலும் அது நடந்தேறுவது நலமென்றெண்ணி அவ்வாறே ஆகஸ்டு மாதத்தில் அந்நாள் கொண்டாடப்பட்டது.

*சுவிசேஷப் பண்டிகை*

---

* P. 245, Hundred years of C. M. S. in Tinnevelly by Judge Paul Appasamy.

1903ம் வருஷம் பாளையங்கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்டு தோர்ணக் கல்வில் ஊழியஞ் செய்யவாரம்பித்த 'திருநெல்வேலி இந்திய மிஷனெரிச் சங்க' விஷயத்திலும் கனம் வெஸ்ற்றன் ஐயர் அனுதாபம் காட்டினர். எனவே 1910ம் வருஷ முதல் சுவிசேஷ ஊழிய ஞாயிறில் சேகரிக்கப்படும் காணிக்கைகள் அனைத்தும் அச்சங்கத்துக் கனுப்பப்படவேண்டுமென்று தீர்மானித்து, அவ்வாறே அனுப்பிவைத்தார். அதுவுமன்றி சபையிலும் இந்திய மிஷனெரிச் சங்கவுணர்ச்சி ஏற்படச் செய்தார். * இதன் பயனாய் நாசரேத் தாய்மார் கூட்டத்தார் தங்கள் காரியதரிசியான மிசிஸ் கேற்றி மதுரம் † அம்மாள் மூலமாய் ரூ. 37 அனுப்பினர்கள்.

I. M. S.

நாசரேத் சேகரத்தில் சுவிசேஷ ஞாயிறிலும், மற்ற நாட்களில் வாலிப சங்கத்தினர், தாய்மார் கூட்டத்தார் முதலியோராலும் நடைபெற்றுவந்த சுவிசேஷ ஊழியத்தின் பயனாய், மேலக்கடம்பாவில் 30 குடும்பத்தினர் 1909ம்வூ டிசம்பரில் புதிதாய் மார்க்கத்தைச் சேர்ந்து ஆயத்தக்காரரானர்கள். அவ்வண்ணமே கோமாளிக் குடியில் ஆவி வணக்கத்தாரில் ஆறு குடும்பத்தார் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். மளவையிலும் (சேரி) அசைவுண்டாயிற்று. மளவையில் முன் உண்டான சபை மறுதலித்துவிட்டதென முன்னொரு பக்கத்தில் எழுதினேம். ஆனல் அச்சபையோர் மறவர் குலத்தினர். இவ்வருஷம் தாழ்ந்த ஜாதியார் என்னப்பட்டவருள் சுவிசேஷ விதை முளைக்கவாரம்பித்தது. 1912ல் சுமார் 50 பேர் ஆயத்தக்காரராகித் தங்களுக்கென ஓர் ஆலயம் கட்ட, தங்களுள் ஒருவர் நன்கொடை யளித்த நிலத்தில் கனம் வெஸ்ற்றன் ஐயரைக்கொண்டு அஸ்திபாரம் நிறுவிக் கட்டட வேலையையும் ஆரம்பித்தார்கள்.

புதுச் சபைகள்

இவ்வண்ணம் சுவிசேஷ வேலை ஒருபுறம் நடைபெற, கிறிஸ்தவர்களுக்குள்ளும் விசேஷமாய்த் தாய்மார், வாலிபர், வாலிபப் பெண்கள் மத்தியிலும் விசேஷித்த ஆவிக்குரிய வேலையும் நடைபெறலாயிற்று. பெண்களுக்குள் வேலை செய்வதற்கென S. P. G சங்கத்தில் ஒரு கிளைச் சங்கம் 'பெண்கள் ஊழியக் கழகம்' (Women Work Committee) என்ற பெயருடன் ஸ்தாபகமாகியிருந்தது. அக்கழகத்தின் வேலைத் திட்டத்தின் படி நாசரேத் வட்டாரத்தின் பெண்களின் மத்தியில் ஊழியம் செய்வதற்கென கனம் ரிக்ஸ் (Miss Rix) அம்மாள் அனுப்பப்பட்டுப் பெண்களுக்குள் உத்தம ஊழியம் நடப்பித்தார்கள். பெண்களின் அனாதைச்சாலைக்கும் 'லேஸ்' வகுப்புக்கும் மானேஜராகவுமிருந்தார்கள். தவறாமல் கிராமப் பெண்களை அவர்

ரிக்ஸ் அம்மாள்

* P. 47 வாலிபர் மித்திரன் 1910 † Wife of Dr. S. Mathuram.

கள் வீடுகளில் சந்தித்து அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்து, நல்லுபதேசம் கொடுத்துக் களிப்புறுவார்கள். இந்தம்மாளின் முயற்சியினால் நாசரேத் வட்டாரத்தில் இந்துப் பெண்களுள் கிறிஸ்தவப்பணியாற்றுவதற்கென வாழையடியிலும் அகப்பைக்குளத்திலும் வேதாகம ஸ்திரீகளும் (Bible-Women) நியமிக்கப்பட்டார்கள்.

கிறிஸ்தவ வாலிபப் பெண்களில் பள்ளிக்கூட வயது கடந்தவர்களுக்குள் ஆவிக்குரிய பணிவிடையாற்றுவதற்காக 1908ம் வருஷத்தில் 'பரி அன்னாள் சங்கம்' (St. Anne's guild) என்றொரு கூட்டத்தை மிஸ்ரிக்ஸ் அம்மாள் ஸ்தாபித்தார்கள். இச்சங்கத்தின் அங்கத்தினர் ஆலய வணக்கம், ஓய்வுநாளாசரிப்பு, வேத வாசிப்பு, தியானம், கிறிஸ்தவ ஈகை, சன்மார்க்க ஒழுக்கம் இவற்றில் சிறந்து விளங்குவதற்கான கூட்டங்கள் ஆராதனைகள் முதலியனவும், அவற்றில் ஆற்றப்படும் உத்தம உபதேசங்களும் ஒழுங்காய்க் கிடைக்கப் பெற்றார்கள்.

பரி. அன்னாள் சங்கம்

கிறிஸ்தவ வாலிபருக்குள்ளும் விசேஷித்த ஆவிக்குரிய ஊழியம் நடைபெற்றது. பெண்களுக்குள் 'பரி அன்னாள் சங்கம்' ஏற்பட்டதைக் கண்ணுற்ற ஸ்தல குரு கனம் P. ஜாண் ஐயர் ஆண்களுக்குள்ளூழியம் செய்யவென்று 'பரிசுத்த யோசேப்பின்' சங்கத்தை (St Joseph's Guild) ஸ்தாபித்தார். இச்சங்கம் நாசரேத் வட்டாரத்துக்கு மட்டுமன்றி S. P. G. பாகம் அனைத்திற்கும் பொதுவானதாய் எல்லாச் சேகரங்களிலுமுள்ள ஒவ்வொரு கிராமச் சபையிலும் கிளை ஸ்தாபனங்களுடன் வளர்ந்து பலனுள்ள பணிவிடையாற்றச் செய்வதே இதன் தலைவரும் (Warden) [வெஸ்ற்றன் ஐயர்] ஸ்தாபகரும் கொண்டிருந்த நன்னோக்கம். அந்நோக்கத்திற்கிசைவாய் முதலாண்டு முடிவுக்குள் நாசரேத் சேகரத்தில் மட்டுமல்லாது முதலூர், கிறிஸ்தியாநகரம் சேகரங்களிலும், இரண்டாம் ஆண்டு முடிவுக்குள் புதியம்புத்தூர், தூத்துக்குடி, சாயர்புரம் சேகரங்களிலும் மொத்தம் 674 அங்கத்தினர் கொண்ட 41 கிளைச்சங்கங்களுடையதாய் இச்சங்கம் வளர்ச்சியுற்றது. இது இவ்வளவு சீக்கிரம் வளர்ச்சியடைய முக்கிய காரணம் அத்தியக்ஷர் (அவர்தான் பரிபாலனர்) முதல் குக்கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் வரை ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட அக்கறையும் பிரயாசமுமே. 1910க்குள் இச்சங்க வேலையைக் கவனிக்க இரு மிஷனர்கள் [ஸ்ரீ ஆபிரகாம், ஸ்ரீ சுந்தரம்] நியமிக்கப்பட்டார்கள். இவ்வூழிய நோக்கங்கள் பொதுவாய் வாலிபருக்குள் ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாக்குவதும், குறிப்பாய், தனித்தனியாக ஒவ்வொரு வாலிபனும் வேத வாசிப்பு, தனி ஜெபம், ஆலய ஒழுங்கு, கிறிஸ்தவ ஐக்கியம், சன்மார்க்க ஒழுக்கம், சுவி

பரி. யோசேப்பின் சங்கம்

சேஷ ஊழிய வாஞ்சை இவற்றில் தேர்ச்சி பெறச் செய்வதுமே. சங்கத்தின் சிறப்பான ஊழியத்தை மெச்சி 1909ல் மிஷனரில் ஒருவருக்கு மாதம் ரூ. 20/- சம்பளம் கொடுக்க M. D. C. ஒப்புக்கொண்டு அவ்வண்ணம் கொடுத்துவந்தார்கள். ஆனால் திடீரென்று தங்கள் உபகாரத்தொகையை 1910 ஜனுவரியில் நிறுத்திவிட்டார்கள். எனினும் வெஸ்ற்றன் ஐயர் மிஷனரை நிறுத்திவிடாமல், தமது சொந்த வருவாயிலிருந்து அவருக்குச் சம்பளம் கொடுக்கலானார். வேலை நன்கு நடைபெற உற்சாகமூட்டும் நோக்கத்துடன் மகாசனம் அத்தியக்ஷரவர்கள் சங்கத்துக்கு நன்கொடையாக ஒரு அலமாரி (Almyrah) கொடுத்துதவினார்கள். ரங்கூன் திருவாளர் J. சாமுவேல் அவர்கள் சங்க சுவிசேஷகர்களுக் குதவியாக விருக்கவென்று ஒரு கிராமபோன் ஈவாகத்தந்தார்கள்.

சங்கத்தின் ஊழியத்தின் பலனைச் சரியாகவறியாதார் பலர் அதைக் குறைகூறினதுமுண்டு. ஆனால் 1910-ம் வருஷ அறிக்கை ஒன்றை மட்டும் பார்த்தோர்கூட அக்குறைபாட்டினை ஒப்புக்கொள்ளார். அவ்வறிக்கையின் கூற்றுக்களில் சிலவற்றை ஈண்டு எடுத்தெழுதுவோம்.

*"நாசரேத்தில் சுமார் 12 வாலிபருக்குள் நல்ல பெரிய (sic) மாறுதல் கவனிக்கப்படுகிறது. அவர்கள் தினந்தோறும் பரிசுத்த வேதத்தை வாசித்து ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியே போய்ப் பிரசங்கித்து, வாரக் கூட்டங்களுக்கு ஆஜராகி ஜெபிக்கவும், சுற்றிலுள்ள புறமதஸ்தருக்குப் பிரசங்கிக்கவும் கற்றிருக்கிறார்கள் ...... பண்டாரஞ்செட்டிவிளையில் எழு வாலிபர்கள் தங்கள் கொடிக்கால்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கடின வேலை செய்த பிறகு மாலை ஆராதனைக்கிருந்து, அதிக ஆவலாய்ப் பரிசுத்த வேதாகமத்தில் தினசரி பாகத்தை வாசித்து, தங்கள் தலைவரின் நடத்துதலுக்குக் கீழடங்கி மாலை 9 மணி வரை மிகுதியான நேரத்தைத் தியானத்திலும் ஜெபத்திலும் செலவிட்டு வருகிறார்கள். அவர்களுக்குச் சுற்றுப்புற ஹிந்துக்களைக் கிறிஸ்தவத்தொழுவத்திற்குள் கொண்டுவர அதிக ஆசை... ...வடக்கூர் † அங்கங்களில் அநேகர் மெஸர்ஸ் பாரிஅன்கோவின் (Messrs Parry & Co.,) சர்க்கரை ஆலைத்தொழிற்சாலையில் கூலிக்காரராக வேலை செய்கிறார்கள். அவர்கள் சங்கத்தின் அங்கத்தினரா சங்க அறிக்கை யிருப்பதால் அவர்களுக்குள் உண்டாயிருக்கும் மாறு தலைப்பற்றி அந்தக் கைத்தொழிற்சாலை மானேஜர் (Sic) நற்சாக்ஷியைச் சுட்டிக்காட்டுவது மிகதிருப்தி. புதூரில் எட்டு வாலிபர் தங்கள் ஜீவியத்தால் உண்மையான கிறிஸ்தவ நடக்கையையும் முன் மாதிரியையும் காட்டிவருகிறார்கள். அவர்களில் ஒருவர் தம்மைத்தாமே கிறிஸ்துவின் ஊழியத்திற்கு முற்றிலும் தத்தம்பண்ணியிருக்கிறார்......

---

* Valibar Mitran 1910. † Kulasekharapatanam.

சேவத்தையாபுரத்தில் கெட்ட ஜீவியம் செய்த நான்கு வாலிபர் புதிய சிருஷ்டிகளாகித் தங்கள் குணப்படுதலைப் பற்றிப் பிரசுரிப்பது [பிரசாரம் செய்வது] தங்கள் கடமையென்றுணர்ந்து வேலை நடத்தி வருகிறார்கள்.... தூத்துக்குடியில் சுமார் 20 வாலிபர் கோவில் ஆராதனைகளுக்கு ஒழுங்காய் வருகிறார்கள். அவர்கள் வேதவாசிப்பு வகுப்பிற்கு ஆஜராகி, வெளியே போய்ப் பிரசங்கித்துத் தாங்களே ஜெபக்கூட்டங்களை நடத்திவருகிறார்கள்.''

இவ்வாறு வாலிபர்க்குள் நடந்த இவ்வரிய ஆவிக்குரிய சேவை சில காலத்திற்குள் முடிவடைந்ததின் காரணம் நமக்குப் புலனாகவில்லை. பரி. யோசேப்பு சங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்ட "வாலிபர் மித்திரன்" என்ற பத்திரிகை ஒன்றின் சில பிரதிகள் மட்டும் எமது கைக்குக் கிட்டின. அப்பத்திரிகையில் ''வேத விளைஞர்'' "இந்தச் சிந்தை" "மிகாவேல் முதலான சகல தேவதூதர்கள்,'' "ஜஸ்டீன் மார்ட்டீர்" "மூன்றைச் சார்ந்த ஐந்து விஷயங்கள்'' என்ற தலைப்புகளுள்ள கட்டுரைகள், ''கிறிஸ்துவில் நம்பிக்கை'' "தாகமாய் இருக்கிறேன்'' (யோவான். 19 : 28) "யோசேப்பின் மாதிரி'' '' ஆயத்தம் '' (மத்தேயு 25 : 6) முதலிய சிறு பிரசங்கங்கள், சிறு கதைகள், ''வாலிபரின் உத்தம வாழ்க்கைக்கான சின்னஞ்சிறு ஆலோசனைகள்'', ''பிசாசுக்கும் ஓர் கிறிஸ்தவனுக்கும் நடந்த சம்பாஷணை'', திருச்சபை வர்த்தமானம், உலக சமாச்சாரங்கள், சங்கச் செய்திகள், ஜெப ஸ்தோத்திர குறிப்புகள் என்பன விசேஷ அம்சங்களாம். பிரதி ஒன்றின் விலை 2 தம்படிதான். தற்காலத்தில் வாலிபருக்குள் ஆவிக்குரிய வேலையை கவனிக்கவென்று நம் அத்தியக்ஷாதீனத்தில் நிலவரக்கழகமொன்று ஏற்பட்டுள்ளது. அக்கழகத்தார் பரி. யோசேப்பு சங்கத்தைப் பார்த்து அவர்களுடைய முறைகளைக் கூடிய அளவு பின்பற்றுவார்களெனின் சிறந்த ஊழியம் நடைபெறலாம் என்பதெம் அபிப்பிராயம். 'யோசேப்பு சங்கம் சில காலம் ஒளி வீசி, பின்னால் மங்கி' அணைந்துவிட்டது நாசரேத், மூக்குப்பீறி முதலிய சேகரங்களின் வாலிபருக்குற்றதோர் துரதிர்ஷ்டமே. அவ்விதம் அது நின்றுவிட்டதற்கான காரணங்கள் எவையாயிருப்பினும், அச்சங்கத்தினர் கையாண்டு வந்த முறைகள் தற்காலக் கழகத்தாரால் பின்பற்றத் தக்கவையே.

வாலிபர் மித்திரன்

கனம் மர்காஷிஸ் ஐயர் உயர்ந்த மருத்துவப் பரீக்ஷைகளில் தேறிப் பட்டங்கள் பெறாதிருந்தும், மருத்துவம் சற்று கற்றிருந்ததினாலும், பல வருஷ அனுபவமுடையவராயிருந்தமையாலும் அவர் காலத்தில் நாசரேத் மருத்துவசாலை தன்னிலையழியாது வளர்ச்சியடைந்து வந்தது. அவருடன்

*ஞானமுத்து, தேவப்பிரியம் திரசர்மாரும், S. மதுரம் டாக்டரும் மருத்துவச் சேவையை நலம்பெற நடத்தி வந்தார்கள். மர்காஷிஸ் ஐயர் மரித்தபின் ஆஸ்பத்திரியை மேற்பார்க்க மருத்துவ ஞானம் படைத்தவராயிராததால் கனம் வெஸ்ற்றன் ஐயர் தகுதி வாய்ந்தவராயில்லை. ஆகையினால் S. P. G. சங்கத்தார் உயர்ந்த மருத்துவ அறிவு உடைய ஸ்ரீமதி N. E. பார்ஸன்ஸ் (Miss N. E. Parsons M. B. B. S.) அம்மையாரை 1908-ல் மருத்துவ மிஷனெரியாக அனுப்பினார்கள். இவ்வம்மையார்தான் நமது அத்தியக்ஷாதீனத்துக்கு வந்த முதல் பெண் வைத்திய மிஷனெரி. இவருக்குப் பின்னரே இராமனாதபுரம் மிஸ் உவால்ற்றர்ஸ் (Miss Walters) அம்மாள் பெண் வைத்திய மிஷனெரியாக வந்தார்கள். ஸ்ரீமதி பார்ஸன்ஸ் அம்மாள் நாசரேத் ஆஸ்பத்திரி மேற்பார்வையாளராகச் (Superintendent) செய்த அருஞ்சேவை யாவராலும் புகழப்பட்டுள்ளது. 1912-ம் வருஷத்தில் இவர்கள் நம் ஆஸ்பத்திரியுடன் அந்தப்புரப் பெண்களுக்கென ஓர் சிகிச்சாலயத்தை இணைக்க (Gosha hospital) எண்ணினர். ஆனால் அது கைகூடாது போயிற்று.

டாக்டர் பார்ஸன்ஸ் அம்மாள்

1910-ம் வருஷம் டிசம்பர்மீ 28-ம்உ கனம் வெஸ்ற்றன் ஐயருக்கும் ஸ்ரீமதி பார்சன்ஸ் அம்மாளுக்கும் பரி. யோவான் ஆலயத்தில் காலை 9 மணிக்கு விவாகம் நடந்தது. மகாகனம் உவில்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் மணவினையை முடித்து வைத்தனர். கனம் D. பெரியநாயகம் ஐயரும், தூத்துக்குடி மிஷனெரி G. H. லாம் (Rev. G. H. Lamb) ஐயரும் விவாக ஆராதனையில் அத்தியக்ஷருக்குதவி செய்தார்கள். கனம் W. E. எவன்ஸ் ஐயர் மாப்பிள்ளைத் தோழனாயிருந்தார். விவாக ஆராதனையின் முடிவில் நாசரேத் சபையார் ஆலயத்தின் முன் கூடித் தங்கள் மிஷனெரிக்கும் டாக்டர் அம்மாளுக்கும் மங்கள வாழ்த்துக்கூறி இரண்டு வெள்ளித் தட்டுகளைப் பரிசாக வழங்கினார்கள். அதன்பின் மாப்பிள்ளையும் பெண்ணும், ரதமேறி அலங்கரிக்கப்பட்ட இரு யானைகள் முன் நடக்கக், கொட்டு மேளங்களுடன் மணப்பவனியாக நசரைத் தெருக்கள் சுற்றிப் பங்களா சேர்ந்தனர். மாலை 3 மணிக்கு மணப்பந்தலில் ஏராளமான மக்கள் கூடி மங்களவாழ்த்துக்கூறி, எண்ணிறந்த பொருட்களைச் சன்மானம் செய்தார்கள். இவ்விவாக மகோற்சவம் இரண்டரை வருஷங்களுக்குமுன் ஒரு தினம் தங்கள் அருமை மிஷனெரியான மர்

விவாக மகோற்சவம்

* ஞானமுத்து திரசர் 1894 வரையும், தேவப்பிரியம் திரசர் 1894 முதல் 1904 வரையும் டாக்டர் மதுரம் 1904 முதல் 1916 வரையிலும் ஊழியம் செய்தார்கள்.

காஷிஸ் ஐயரை இழந்த துயருக்கொருமாற்ருக நசரை மக்களுக்கு விளங்கிற்று.

*　　　*　　　*

மர்காஷிஸ் ஐயரின் ஞாபகார்த்தமாக நாசரேத்திலோர் புதிய ஆலயம் நிர்மாணிக்க வேண்டுமென்பது நாசரேத் ஸ்தலசபைக் கழகத்தாரின் (Local Church Committee) தீர்மானம். அதற்கிணங்க கனம் வெஸ்ற்றன் ஐயர் மர்காஷிஸ் ஞாபகார்த்தமாக ஆலயக் கட்டுமான விஷயமான ஆயத்தங்கள் செய்யவாரம்பித்து லண்டனிலுள்ள வாட்கின்ஸ் என்ற பேர்போன கட்டட நிர்மாணிகரொருவரைப் பிளான் தயாரிக்கக் கேட்டார். வாட்கின்ஸ் தயாரித்த பிளான்படி ஆலயம் கட்டுவதாயிருந்தால் ரூ. 86000 செலவாகும். சபையின் பிள்ளைகளிற் பலர் ரூ. 20000 க்கு மேல் ஆலயக் கட்டுமானத்தில் செலவழிப்பது உசிதமன்று என்று எண்ணினர். இவ்விதம் அபிப்பிராயப் பேதம் ஏற்பட்டதுமுதல் வெஸ்ற்றன் ஐயரின் நாசரேத் வாழ்க்கை அவருக்கு வெறுப்பைத் தரவாரம்பித்தது. தவிரவும் அக்காலத்தில் நாசரேத் சுதேச கிறிஸ்தவ மரணச் சகாயப் பண்டுக் கணக்கு விஷயங்களில் சில சிக்கல்கள் ஏற்பட்டதாகவும், அதுவிஷயமாயும் பலருக்கு அதிருப்தி ஏற்பட்டிருந்ததாகவும் அக்காலம் வெளியிடப்பட்ட கண்டனப் புத்தகம் ஒன்றினின்று வெளியாகிறது. *

ஞாபகார்த்த ஆலயம்

கனம் வெஸ்ற்றன் ஐயர் மிகுந்த சாதுவாகவும் இளகிய நெஞ்சுடையவராகவும் இருந்ததினுல், தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரை மர்காஷிஸ் ஐயரைப்போல் அடக்கியாளுந் திறமை அவரிடமில்லை. எனவே சில குருக்கள் நிமித்தமும் பலவிதச் சங்கடங்கள் தோன்றின. கஸ்பா குருஊழியத்தையும் ஐயர் தம் நேரடியான மேற்பார்வையில் வைத்துக் கொள்ளாது, மற்றவர்களிடம் விட்டுவிட்டதால் பல தொந்தரவுகளுண்டாகித், தம் 4 வருஷ சுயேகைக்ஷ ஆளுகைக்குள் மும்முறை கஸ்பா குருவை மாற்ற வேண்டி வந்தது. அக்காலத்தில் என்றுமில்லாதவாறு ஏராளமான ஐயர்மார் நாசரேத்தூரில் வசித்துவந்தார்கள். கனம் D. பெரியநாயகம் ஐயர் வேதசாஸ்திரக் கலாசாலைத் தலைவராகவும், 1906 முதல் 1910 வரை வேதசாஸ்திரக் கலாசாலைத் தலைமைப்பதவியுடன் நாசரேத் புறச்சபைக் குருவாகவும், கனம் P. S பீற்றர் ஐயர் 1902 முதல் 1906 வரை கஸ்பா குருவாகவும் 1906 முதல் 1910 வரைப் போதனுப் பயிற்சிசாலைத் தலைவராகவும், E. யோசேப்பு ஐயர் 1903 முதல் 1910 வரை வேதசாஸ்திரப் பாடசாலை ஆசிரியராகவும், 1910—11ல் கஸ்பா சபைப் போதகராகவும், P. ஜாண் ஐயர்

குருமார்

* 'Come and see' by Y. Penuel

1903—1906ல் நாசரேத் உதவி குருவாகவும், 1908—11ல் பள்ளிக்கூட ஆசிரியராகவும், 1911—18ல் கஸ்பா சபைக் குருவாகவும், Y. ஞானமுத்து ஐயர் 1904—06ல் நாசரேத்திலிருந்துகொண்டே கடையனோடைத் துணை குருவாகவும், J. N பெரியநாயகம் ஐயர் 1912ல் கஸ்பா துணைக் குருவாகவும், M. ஜீவானந்தம் ஐயர் 1911—14ல் கிராமச் சபை வேலையில் துணைக் குருவாகவுமிவ்வாறு பலர் பலதிறப்பட்ட வகையில் ஊழியம் நடப்பித்தனர். எனவே விதவிதமான அபிப்பிராயபேதங்களும் மனஸ்தாபங்களும் ஊடாடின. இவ்விசச் சூழ்நிலையில் மிஷனெரியான வெஸ்ற்றன் ஐயருக்கும் உடல் நலனும் குன்றவே, அவரும் கனம் வெஸ்ற்றன் அம்மாளும் 1912ம் வருஷம் நவம்பர் மீ 28ம் தேதியில் இரண்டு வருஷ ரஜாவில் சீமைக்குப் பயணமானார்கள். இரு வருஷ முடிவில் S. P G. சம்பந்தத்தைக் களைந்து, தம் மிஷனெரி ஊழியத்தையும் வெஸ்ற்றன் ஐயர் ராஜினாமாச் செய்தார்.

வெஸ்ற்றன் ஐயரின் காலம் மர்காஷிஸ் ஐயரின் காலத் தொடர்ச்சியே. எனினும் அவர் முந்தினவரிடத்து மிகுந்துள்ள ஆட்சித்திறமையுடையவரா யிராததுபற்றி மிஷன் சரித்திரத்தில் மாறுதல்கள் பல ஏற்படக் காரணஸ்த ரானார். மர்காஷிஸ் தம் காலத்தில் மிஷனின் சகல இலாக்காக்களையும் தமது கோடியான மேற்பார்வையின் கீழ்வைத்துத், தம்மையன்றி ஒன்றும் நடைபெறக்கூடாதவண்ணம் செய்திருந்தார். இவர் காலத்திலோ ஆஸ்பத்திரி, பெண்கள் கலாசாலை, இந்திய கிறிஸ்தவப் பிராவிடன்ற் பண்டு, கஸ்பா சபைப் பொறுப்பு முதலிய அனைத்தும், தனித்தனி அதிகாரிகள் வசமாயின. 'முழு S. P. G. பாக மேற்பார்வை' யிலும் 1910 வருஷம் மாறுதல் ஏற்பட்டன. அவ் ஊழியம் இரு பாகமாக வகுக்கப்பட்டு, இடையன்குடி இராமநாதபுரம் சேகரங்கள் கனோன் C. P. ஞானக்கண் ஐயரின் மேற்பார்வைக்குள்ளும், மீதி எட்டும் (நாசரேத், முதலூர், கிறிஸ்தியாநகரம், சாயர்புரம், புதுக்கோட்டை, புதியம்புத்தூர், தூத்துக்குடி, நாகலாபுரம்) வெஸ்ற்றன் ஐயரின் கண்காணிப்பிலும் விடப்படலாயின. மேலும் பிற்காலத்தில் திருநெல்வேலிக் கிறிஸ்தவ மிஷனெரிக் குழாத்தில் பெருமக்களாய்த் திகழ்ந்த கனம் C. G. ஸ்டேப்ளி, W. E எவன்ஸ், G. H. லாம் ஐயர்மார் தனித்தனியே பெருநோக்குடையவர்களாயிருந்தனர். திருநெல்வேலி S. P. G. சரித்திரத்தில் கால்டுவெல், கியர்ண்ஸ், கென்னெட், பில்லிங், மர்காஷிஸ், கோடன் முதலான ஐயர்மார் காலம் மாறி, இனி ஸ்டேப்ளி, எவன்ஸ், ராண்ட்ல், கனோன் C. P. ஞானக்கண், A. ஞானக்கண், கனோன் கோவில்பிள்ளை ஐயர்மாரின் காலம் தோன்றிற்று. இவ்விரு காலங்கட்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. எனவே இவற்றிற்கிடைப்பட்ட காலத்தில் முன் நிலையையும், பின் முறைகளையும் இணைக்கும் சங்கிலித்தொடர் போலவே கனம் வெஸ்ற்றன் ஐயர் தோன்றினார் எனலாம்.

---

# அத்தியாயம் 13

## தற்கால ஆரம்பம்

## ( C. G ஸ்டேப்ளி ஐயர் காலம் )

கனம் செசில் ஜியார்ஜ் ஸ்டேப்ளி (Rev. Cecil George Stapley M. A.) ஐயர் லண்டன் மாநகரத்தில் 1886-ம் வருஷம் பெப்ருவரி மாதம் 7-ம்வ பிறந்தவர். சிறு வயதிலிருந்தே கல்வி வாஞ்சை மிக்கவராய் விரைவில் கற்றுத்தேறி டர்ஹாம் (Durham) சர்வகலாசாலையில் M. A. பட்டம் பெற்றார். இவர் ஓர் மறைவல்லுநர். குருப்பட்டம் பெறுதிருக்கையிலேயே மிஷனெரி ஊழியத்தைத் தம் ஜீவியப் பணியாகக்கொண்டு 909-ம் வருஷம் தூத்துக்குடிக்கு வந்து, அங்கிருந்த கனம் W. E. எவன்ஸ் ஐயருடன் வதிந்து வந்தார். ஒரு வருஷத்துக்குப் பின் 1910-ம் வருஷம் உவில்லியம்ஸ் அத்தியக்ஷரிடத்தில் உதவிக் குருவாகவும் 1912-ல் குருவாகவும் அபிஷேகம் பெற்று 1911 முதல் நாசரேத் வேத சாஸ்திரக் கலாசாலைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதோடு 1912-ல் கனம் வெஸ்ற்றன் ஐயர் ரஜாவில் சீமைக்குப் போனதிலிருந்து, நாசரேத், கிறிஸ்தியாநகரம், முதலூர் வட்டாரங்களை மேற்பார்க்கும் மிஷனெரியாகவுமானார் (Superintending Missionary).

ஸ்டேப்ளி ஐயர் காலத்திலிருந்து தற்காலச் சரித்திரம் ஆரம்பமாகிறது. இன்றைய நாசரேத் வாழ்க்கையின் முக்கிய அம்சங்களில் பல இவர் காலத்துதித்தவையாம். அவற்றில் விசேஷித்தவை நாசரேத் (குருப்பட்ட) வேதசாஸ்திரக் கலாசாலையும், முன்னேற்றமடைந்துள்ள பரி. லூக்கா ஆஸ்பத்திரியுமே. தவிர கிராம அபிவிருத்திக்கனுகூலமாகப் புகைவண்டி நிலையம், பஞ்சாயத்து போர்டு முதலியனவும் இவர் காலத்தேயேற்பட்டன. கைத்தொழிலபிவிருத்தியும் சிறிய யந்திரத்தொழில்களும் காணப்படலாயின. ஒரு பெரு நகரமாக விளங்கக் காரணமான 'நகர விரிவு' (Town Extension) இவரது மிஷனெரி ஆட்சி காலத்திற்றான் ஆரம்பமானது என்று தெரிகிறது. ரெயில்பாதை போடப்பட்டதின் பயனான வியாபார அபிவிருத்தி மட்டுமல்லாது, வேலை நீத்து ஓய்வெடுக்கும் 'மாஜி' உத்தியோகஸ்தர் பலரும் இங்கு வந்து வீடுகள் கட்ட வாரம்பித்ததே நகரம் விரிவுறக் காரணமாயிற்று.

மேலும் தனி மனிதனின் ஆட்சி ஒழிந்து சகல விஷயங்களிலும், சமுதாய வாழ்க்கையாயினும் ஸ்தாபன ஆட்சியானாலும், பலர் பொறுப்பெடுக்கலாயினர். சபைக்காரியங்களில் சமிட்டிகளும் அவற்றின் அங்கத்தினரும் கருத்துச் செலுத்தலானார்கள். சமுதாய வாழ்க்கை நலனுக்கான

வற்றை ஸ்டேப்ளி ஐயரே கிறுவின கிராம (மிஷன்) பஞ்சாயத் கவனிக்க லாயிற்று. அவ்வண்ணமே ஒவ்வொரு துறையும். எனின் சகலமும் சட்டதிட்டங்களுடன் சிருஷ்டிக்கப்பட்ட அமைப்புக்குட்பட்டு புதிய முறையில் முன்னேற்றம் கொள்ளலாயினவென அறிகிறோம். ஆயின் இது சட்டதிட்டங்களுக்குட்பட்ட வளர்ச்சி காலம் (Days of Organized growth) என்று கூறலாம். இவ்விதமான சீர் அவசியமே எனினும், கிறிஸ்து மார்க்கச் சுவிசேஷப் பிரபல்யம் சட்டதிட்டங்களுக்குள்ளடங்கக் கூடியதன்று. ஏதோ சிலவறையறைகளுக் குட்பட்டுத்தான் சுவிசேஷப் பிரபல்யச் சேவை (Missionary enterprise) நடைபெற வேண்டுமென் போமாயின், 'காற்றானது தனக்கிஷ்டமான இடத்தில் வீசுகிறது' என்று கர்த்தர் சொன்ன பொன்மொழியை சற்றாயினும் மறந்தவர்களேயாவோம். சுவிசேஷப் பிரசங்க வேலை மிஷனெரி ஊழியத்தின் பிரதான அம்சம் என்ற உயரிய உண்மை ஒருவாறு மறக்கப்பட்டு, ஸ்தாபன முன்னேற்றம், ஆலய ஆசரிப்பு, அலங்கார வணக்க முறைகள், ஆலோசனைக் கழகங்கள் ஆகிய இத்தியாதி காரியங்களே விசேடமெனக் கொள்ளுங்காலம் நாசரேத் மிஷன் சரித்திரத்தில் மட்டுமன்று, திருநெல்வேலி மிஷனனைத் திலும் இக்காட்களிலேற்பட்டதென்பது தெளிவு.

ஸ்டேப்ளி ஐயர் மிஷனெரிப்பதவி ஏற்றபின் குருமார் மாற்றங்கள் சில வேற்பட்டன. கஸ்பா சபைக் குருவாயிருந்த கனம் P. S. பீற்றர் ஐயர் இடையன்குடிக்கு மாற்றப்பட்டு, வேதசாஸ்திரக் கலாசாலை ஆசிரியர் கனம் P ஜாண் ஐயர் சபை வேலைக்கு நியமிக்கப்பட்டார். கடையனோடையில் சுமார் 40 வருஷமாய்ச் சிறந்த தெய்வப் பணிவிடையாற்றின கனம் V. ஆபிரகாம் ஐயர் தமது 71-வது வயதில் 1913 ஜனுவரி முதல் ஓய்வெடுக்க, மூக்குப்பீறி கனம் I. யோசேப்பு ஐயர் கடையனோடைக்கு மாற்றப்பட்டார். குருகாட்டூர் கனம் Y. மனுவேல் ஐயர் நாசரேத் பாஸ்ற்றரேற் குருவாக நியமனம் பெற்றார்.

குருமார் மாற்றங்கள்

அத்தியக்ஷர் வேத சாஸ்திரம் பாடசாலையிலும் சிறு மாறுதல்கள் ஏற்பட்டன. அக்கலாசாலைக்கு ஸ்டேப்ளி ஐயரே தலைவரானர் (Warden). பெரியநாயகம் ஐபர் உபதலைவராக (Sub-Warden) மாறினர். ஆசிரியராயிருந்த P. ஜாண் ஐயருக்குப் பதிலாக M. D. C. உபதேசிகராயிருந்த திரு. ஜாண்சாமுவேல் நியமிக்கப்பட்டார். இது முதல் இம்மூவரும் பல வருஷங்களாய் அவ்வித்தியாசாலையில் ஆசிரியப் பணியாற்றினர்கள். திரு. ஜாண் சாமுவேல் 1914-ல் குருப்பட்டம் பெற்றார்.

அத்தியக்ஷர் வேத சாஸ்திரக் கலாசாலைச் சிற்றாலயம் அவ்வித்யாசாலைக் கட்டிடத்தின் மேல் கட்டப்பட்டு 1913-ம் வருஷம் ஆகஸ்டுமீ 6-ம்உயாகிய

மறுரூபத்திருநாளன்று 'மறுரூப ஆலயம்' என்ற பெயருடன் பிரதிஷ்டையானது. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பிரதிஷ்டையாராதனையை நடத்தினார்கள். அந்தக் கட்டடம் இன்றும் காணப்படுவதை நாமறிவோம். அன்று அவ்வாலயத்திற்கிடப்பட்ட அப்பெயரையே, அதின் பின்தோன்றலான திருமறையூர் வேத சாஸ்திரக் கல்லூரி ஆலயத்திற்கு மகாகனம் நீல் அத்தியக்ஷரவர்கள் கொடுத்தார்கள். அன்றைத்தினமுதலே, இன்றும் திருமறையூரில் தினந்தோறும் நடந்துவரும் 'மத்தியான மன்றாட்டு ஜெபம்' ஏறெடுக்கப்படலாயிற்று. அவ்வேளை அத்தியக்ஷாதீனம் முழுவதிலும் நடைபெறும் திருப்பணிவிடைகட்காக ஜெபதூபம் விண்ணுக்கேறியது. அது முதல்தான் நாசரேத் ஆலயத்தில் நடைபெறும் திருவிருந்தாராதனைக்கு வேத சாஸ்திர மாணவர் சென்று பங்கு பெறும் நல்ல வழக்கம் உண்டாயிற்றென்றும் கனம் ஸ்டேப்ளி ஐயர் எழுதுகிறார்.

மறுரூப ஆலயம்

1914-ம் வருஷம் இவ்வித்தியாசாலைக்கோர் துயர வருஷம். ஏனெனில் அவ்வாண்டு ஜூன்மீ 30-ம்வ இவ்வித்தியாலயத்தின் நல்வாழ்வில் மிகவும் அக்கரை கொண்டவரும், அதற்கென ஜெபித்து உழைத்தவரும், தம் பெயரையே அதற்கு மனமுவந்து தந்தவருமான மகாகனம் A. A. உவில்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் குன்னூர் புகைவண்டி நிலையத்தில் திடீரெனப் பரலோக வாழ்வெய்தினார்கள். இதுவரை இச்சரித்திரத்தை வாசித்த நண்பர் நசரை நல்வாழ்வில் அவர்கள் எவ்வளவு சிரத்தை கொண்டு விளங்கினார்கள் என்றறிவர். இவ்வூரில் அப்பக்தனை நேரில் அறிந்தவர்கள் அவர்களின் சிரித்த முகத்தையும், பிள்ளைகளின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பையும் இன்றும் மறக்கவில்லை.

உவில்லியம்ஸ் அத்தியக்ஷர் மாணம்

அத்தியக்ஷரவர்களின் ஞாபகார்த்தமாக 1915-ம் வருஷத்தில் கலாசாலை மாணவர் வசிப்பதற்கென 5 வீடுகள் தொடர்ச்சியாய்க் கட்டப்பட்டன (line houses). இக்கட்டடங்கள் கட்டப்படும் வரை அம்மாணவர்கள் [அவர்களில் மிகுதியானவர்கள் விவாகமானவர்கள்] கிராமத்திலுள் வாடகை வீடுகளில் வசித்து வந்தார்கள்.

1918-ம் வருஷம் முதல் இவ்வித்தியாசாலை இம்மட்டும் செய்து வந்த சிறந்த சேவையையும்விட மேலான ஊழியத்தைச் செய்ய முன்வந்தது. 1916 வரை திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தின் S. P. G. குருக்கள் சென்னை சலிவன் தோட்டத்துள்ள S. P. G வேத வித்தியாலயத்தில் தான் பயிற்சி பெற்று வந்தார்கள். இதனாலுண்டான பணச்செலவு அதிகம். மாணவருக்கும் நம் நாட்டுக்கேற்ற சபை ஊழியப்பயிற்சி (Pastoral

Training) அங்கு கிடைப்பதரிது. ஆகையினால் ஸ்டேப்ளிஐயர், எவன்ஸ்ஐயர் முதலியோரின் முயற்சியினால், 1917-ல் நாசரேத் அத்தியக்ஷர் வேதசாஸ்திரக்கலாசாலையிலேயே குருப்பட்ட மாணவரையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று திருநெல்வேலி அத்தியக்ஷாதீன S. P. G. கமிட்டியார் தீர்மானம் செய்ததின்பேரில், 1918 முதல் குருப்பட்ட வகுப்பு ஆரம்பமாயிற்று. மூன்று வருஷங்களில் மேலும் ஓர் உயர்நிலை அதற்குக் கிட்டலானது. எவ்வாறெனின் 1921-ல் கனம் ஸ்டேப்ளி ஐயர் ஒரு வருஷ ரஜாவில் சுயதேசம் போன சமயம், கனம். G. T. செல்வின் ஐயரவர்கள் திருநெல்வேலிப் பழையபேட்டையில் நடத்தப்பட்டுவந்த C. M. S. வேதசாஸ்திரக் கலாசாலையையும் நாசரேத் வேத வித்தியாலயத்தையும் இணைத்து அதற்குத் தலைவரானார்கள். இது திருநெல்வேலி C M. S., S. P. G. சங்கங்களின் சபைகளை ஒன்றுபடுத்தி அத்தியக்ஷாளுகைக்குட்பட்ட ஒரே சபையாக்க (Diocesanization Scheme) மகாகனம் E. H. M. உவாலர் அத்தியக்ஷரவர்களால் செய்யப்பட்ட திட்டத்தின்படி நடந்த ஓர் சிறந்த நடவடிக்கையாகும். கனம் செல்வின் ஐயரவர்களின் தலைமையில் இணைக்கப்பட்ட இக்கலாசாலை அவ்வருஷம் முதல் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தின் C. M. S., S. P. G. குருமாரைப் பயிற்றுவிக்கும் சிலாக்கியம் பெறலாயிற்று. இது வரை திருநெல்வேலியிலிருந்த அத்தியக்ஷாதீன 'ப்ரே புத்தக நிலையமும்' (Diocesan Bray Library) இக்கலாசாலை லைப்ரெரியோடு சேர்க்கப்பட்டது.

குருப்பட்ட வகுப்புகள்

இது போன்ற தீவிர வளர்ச்சி பெண்கள், ஆண்கள், கைத்தொழிற் பாடசாலைகளிலும் காணப்பட்டது.

பரிசுத்த யோவான் பெண்கள் உயர்தரப்பாடசாலை கனம் குரோவ்ஸ் அம்மாளின் மேற்பார்வையிலிருந்தது என்று கூறினோம். இந்தம்மாளுக்கு ஸ்டேப்ளி ஐயரின் பூரண ஆதரவு உண்டு. இவர்களின் முயற்சியினால், ஏற்கெனவே வெஸ்ற்றன் ஐயர் வாங்கியிருந்த பூமியில் பங்களாக் கட்டுமான வேலை ஆரம்பிக்கப்பட்டு 1914-ல் முடிவுற்றது அதனுடன் முந்தின மிஷனெரி கட்ட ஆரம்பித்த படுக்கையறை, பெட்டியறை முதலிய கட்டடங்களும் முடிவுற்று, 1914 ஜூன் முதல் மாணவிகள் அவற்றில் குடிபுகுந்தனர்.

1920-ம் வருஷத்தில் 30 வருஷங்களாக நம் பெண்கள் பாடசாலையில் சிறந்த தொண்டாற்றிவரும் ஸ்ரீமதி லிலியன் M. எவன்ஸ் அம்மாள் உயர்தரப் பாடசாலைத் தலைவியாக நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் காலத்தில் இக்கலாசாலையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்குறிப்புகள் ஒவ்வொன்றையும் விவரிக்க இயலாது. ஸ்டேப்ளி ஐயர் காலத்துக்குட்பட்ட நாட்களில்

அங்குண்டான சில விசேஷங்களை மட்டும் ஈண்டெழுதுவோம். இக்கலா சாலை உயர்தர வித்தியாசாலையானதிலிருந்து கணித பாடம் மட்டுமே இங்கு கற்பிக்கப்பட்ட இஷ்டபாடமாயிருந்தது. 1923 முதல் சரித்திர பாடத்தையும் சேர்க்கச் செய்த பிரயத்தனங்கள் பலித மாகி, 1925 முதல் நடைமுறையில் வந்தது. தவிர வும் பிள்ளைகளுக்கு உலகப் பொது அறிவூட்டவெண்ணி எவன்ஸ் அம்மாள் பற்பல பொருள்களின்மீது உபந் நியாசங்கள் கொடுக்கத் தகுந்த ஆட்களைத் தருவிப்பதும் வழக்கமாயிற்று.

பரி. யோவான் பாடசாலை

நாசரேத் பெண்கள் கலாசாலை எப்பொழுதும் கிறிஸ்தவச் சேவை யில் கனிவுடன் ஈடுபடுவதற்குப் புகழ் பெற்றது. 1903ம் வருஷம் அங்கு ஸ்தாபிக்கப்பட்ட S. P. G. இராஜ தூதர் (S. P. G. King's Messengers) கிளைச்சங்கம் சுவிசேஷ ஊழியம் செய்தும், கஷ்டப் படுகிற ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் பொருளுதவி செய் தும் உத்தமப் பணியாற்றிவருவது நேயர் அறிந்த விஷயம். எவன்ஸ் அம்மையார் இம்மாணவிச் சங்கத்தை அதிக முயற்சியுடன் வளர்த்தார்கள். இராஜ தூதர் கிளைச்சங்கம் ஆரம்பமானதிலிருந்து, அதின் அங்கத்தினர் இம்மட்டும் தவறாது ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் தங்கள் கூட்டங்களை நடத்திவருகிறார்கள். தவிரவும் வருஷந்தோறும் திருக்கதா, சங்கீத நடிப் புகள் (Sacred Concerts) மூலம் பணம் சேகரித்து மேற்கண்டவாறு திவ்யச் சேவைக்கான கைங்கர்யங்களாற்றிவருகின்றனர். 1949ம் வருஷக் கணக்கின்படி அவர்கள் அந்நடிப்பின் மூலமும், இன்னும் பலவிதங்களிலும் சேகரித்துச் செலவிடப்பட்ட தொகை சுமார் ரூ. 900. கனம் எவன்ஸ் அம் மாளின் ஊழிய காலத்தில் அவர்களுக்குதவியாகவும், அவர்கள் ரஜாவில் சென்ற காலங்களில் அவர்களுக்குப் பதிலாகவும் பணியாற்றிய மிஷனெரிப் பெருமாட்டிகள் ஒவ்வொருவரின் சரித்திரத்தையும் இங்கு விஸ்தரிக்கப்புகின் இடங்கொள் ளாதாகையினால் அவர்கள் பெயரை மட்டும் ஈண்டெழுதித் திருப்தி சொள் வோம். அப்பெருமக்கள் மிஸ் வைல்ஸ் (Miss Wiles) 1920—21, மிஸ் நீட்ஹாம் (Miss Needham) 1922—27, மிஸ் காஷ்மோர் 1926—27, மிஸ் A. F. ஷுபெர்ட் (Miss A. F. Schubert) 1922—23. மிஸ் டேல் (Miss S. Dale) 1927 மிஸ் ப்ரினஸ் 1927—28, மிஸ் மார்க்ஸ் 1928, மிஸ் டேவிட்சன் 1930—32, மிஸ் E. ஸ்விங்ளர் முதலியோ ராவர். இக்காலத்தில் பரி யோவான் கலாசாலைகளின் முதல் பெண் மிஷ னெரியான மிஸ் குரோவ்ஸ் அம்மையாரே தலைமை தாங்கினர் என்றும், அவர்களும் மற்றையோரும் அடிக்கடி ஹைஸ்கூல், டிரெயினிங் ஸ்கூல் வேலைகளைத் தம்முள் காலா காலங்களில் பகிர்ந்துகொண்டனர் என்றும்

இராஜ தூதர்

அறிகிறோம். இக்காலத்தில் தலைமையாசிரியராயிருந்தவர்களில் திரு C. S. கோலாப் B. A., L. T. அவர்களும், சாமுவேல் ஜோசப் அவர்களும் இக்கல்விச்சாலைகளின் சேவையில் தங்கள் வாழ்நாளில் பெரும்பாகத்தைச் செலவிட்டவர்கள்.

**மத்திபப் பாடசாலை**

ஆண்கள் கல்விச்சாலையில் இடவசதிக்குறை காரணமாய் 1912ம் வருஷம் முதல் அப்பாடசாலை சில வருஷங்களாகக் கைத்தொழிற்சாலை காம்பவுண்டிலுள்ள டிராயிங், லேஸ் பின்னுதல் முதலிய வகுப்புகளிருந்து வந்த கட்டிடத்தில் நடைபெற்றது. அதோடுகூட கனம் ஸ்டேப்ளி ஐயர் தம் சகோதரர் கொடுத்த நன்கொடைப் பணத்தைக்கொண்டு புதிய அறை ஒன்று கட்டினர். ஒரே காம்பவுண்டில் இரு கலாசாலைகளை நடத்துவதில் பல இடைஞ்சல்கள் நேரிடுவது சகஜமே. ஆகையினால் கைத்தொழிற் சாலைக்கு 1918 முதல் மானேஜராயிருந்த கனம் ராண்ட்ல் ஐயர் ஆண்கள் பள்ளிக்கூடம் வேறு இடத்தில் நடைபெறுவது அவசியம் என்று வற்புறுத்தினர். தவிரவும் 1924ம் வருஷம் கைத்தொழிற்சாலையைப் பரிசோதனை செய்த மாகாணக் கைத்தொழிலபிவிருத்தி அதிகாரி (Director of Industries) யும் அப்பாடசாலையின் சுற்றுவளவுக்குள் வேறுவிதப் பாடசாலையிருப்பது நன்றன்று என்று திட்டவட்டமாய்க் கூறியதின் பேரில், மத்திபப் பாடசாலையினர் உபயோகித்த கட்டிடத்தைக் கனம் ராண்ட்ல் ஐயர் ஸ்டேப்ளி ஐயரிடமிருந்து வாங்கிக்கொண்டு, அதற்குப் பதிலாக அக்காலம் மிஷன் தோட்டம் இருந்த நிலத்தில் மத்திபப் பாடசாலைக் கென்று ஒரு கட்டடத்தை நிறுவினர்.

**கைத்தொழில் சாலை அபிவிருத்தி**

கைத்தொழில் பாடசாலைக்கு 1918ம் வருஷம் கனம் A. P. ராண்ட்ல் ஐயர் தலைவராக வந்ததிலிருந்து அப்பாடசாலைப் புதுப் பொலிவுடன் விளங்கிற்று. தற்காலம் இப்பாடசாலையிலிருக்கும் கட்டடங்களில் பெரும்பாலானவை இவர் கட்டியவையாம். இக்காலத்திலுள்ள நாம் அதை நேரில் அறிவோமாதலால், அவரது கட்டடங்களின் காலக் குறிப்பை இங்கு தருவது அவசியமன்று என்றெண்ணுகிறேன். மற்றபடி, அவர் ஓர் சிற்பியாயிருந்தபடியால் மாணவரின் வேலைத்திறன் பலராலும் மெச்சிக்கொள்ளப்படத்தக்கதாக உயர்வுற்றது. கைத்தொழிலதிகாரிகள், ஜில்லாக் கலெக்டர்கள் முதலியோர் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டுமாறு சொற்பொழிவுகளை யாற்றியும் நற்சாக்ஷிகளளித்தும் ஐயரை வெகுவாய் உற்சாகப்படுத்திவந்தார்கள். 1922ல் சென்னையில் நடந்த பொருட்காட்சிசாலையில் நம் பள்ளிக்கூட மாணவரால் செய்யப்பட்ட சிங்கார மேஜைகள், முன்னறை நாற்காலிகள் முதலியன (Drawing Room

Furniture) மாகாணாதிபதி (Governor) யின் தேவி வெல்லிங்டன் பெருமாட்டியால் பெருமகிழ்ச்சியுடன் வாங்கப்பட்டன. அதுமுதல் பள்ளிக்கூடத்தின் வேலைத் திறன் மாகாணப் பிரபல்யம் பெற்றது. S. P. C. K. சங்கத்தாரும் உவப்புற்று தங்கள் வருஷாந்தர உதவித் தொகையை 50 பவுணிலிருந்து 75 பவுணாக உயர்த்தினார்கள்.

**ரேண்டில் ஐயர் சேவை**

கனம் ரேண்டில் ஐயரவர்களின் சிறந்த ஊழியத்தின் பலாபலனை இன்றும் நாம் கைத்தொழிற் கல்விச் சாலையின் ஒவ்வொரு இலாக்காவிலும் காணலாம். அப்பள்ளிக்கூட வேலை அவர் காலத்திலிருந்து புதுப் பெலனுடன் முன்னேற்ற மெய்தியது. அவரது ஆக்கச்செயல்களை யெல்லாம் இப்புத்தகத்தில் விவரித்து முடியாததலால் குறிப்பாக இரண்டொன்றை மட்டும் கூறின் போதுமென்றால் ணினம் பள்ளிக்கூடத்தின் அழகிய சிற்றாலயம் ஐயரின் பணித்திறனைத் காட்டும். தச்சுப்பட்டறைகளும், சுற்றுச் சுவர்களும் கலாசாலையின் அமைப்பின் அணிகலன்களாக ரேண்டில் ஐயருடைய பிரயாசத்தின் பலன்களாக நிலைநிற்கின்றன. மார்காஷிஸ் ஐயர் முதல் முதல் கட்டின விடுதிகள் காலத்தால் பலவீனப்பட்டிருந்தமையால் அவற்றை யிடித்து விட்டு, உபாத்திமார் குடியிருப்புக்காகச் சில வீடுகளையும் கட்டி முடித்தார். உட்புறத்தில் போஜன அறை ஒன்றைப் பலமுள்ள பெருங்கட்டிடமாயமைத்து, பள்ளிக்கூடத்தின் முதற்பலன்களில் ஒருவரான E. ஜோசப் ஐயரைக் கொண்டு பிரதிஷ்டை செய்வித்தார்.

**ஆசிரியப் பயிற்சி**

கைத்தொழிற்சாலையைச் சேர்ந்திருந்த உபாத்திமைப் பயிற்சிசாலையில் 1913ம் வருஷம் முதல் எலிமென்றரி லோயர் கிரேட் பயிற்சியும் இணைக்கப்படலாயிற்று. அப்பர் செக்கண்டரி வகுப்புகள் அதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே (1910ல்) எடுபட்டு விட்டதினால் ஹையர் எலிமென்றரி, லோயர் எலிமென்றரி வகுப்புகள் வெகு திறமையுடனேயே நடைபெறலாயின. இது விஷயத்தில் அதிகாரிகள் (management) மிகுந்த ஜாக்கிரதையாயிருந்தார்கள். 1924ல் மானேஜராகவிருந்த ரேண்டில் ஐயர் இவ்விதப் பயிற்சியைப்பற்றி "நமது உபாத்திமார் கிராம உபதேசிமாராகவுமிருக்கின்றனர். ஒவ்வொரு கிராமமும் தனக்குரிய பள்ளிக்கூட ஆசிரியர் தவிர தனிப்பட்ட உபதேசிமாரையும் உடையதாக விளங்க இன்னும் வெகு காலம் பிடிக்கும். ஆகையினால் திருச்சபை ஊழியத்தில் அவ்வளவு பெருமையும் முக்கியத்துவமும் வாய்ந்த இவ்வூழியத்தைச் செய்ய ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்" * என்று எழுதுகிறார். மாணவருக்கு ஆசிரியப் பயிற்சிமட்டுமின்றி வேதோபதேச

* Page 19. T. D. C. Report for 1924.

மும் கற்பிக்கப்பட்டது. தவிரவும் அவர்கள் தம் பயிற்சிகால முடிவில் ஒரு மாதம் வேத சாஸ்திரக் கலாசாலையில் உபந்நியாசங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பரிசுத்த லூக்கா ஆஸ்பத்திரி ஸ்ரீமதி வெஸ்ற்றன் அம்மாள் போனபின் டாக்டர் மதுரத்தின் கண்காணிப்பிலிருந்து வந்தது. ஆயினும் சாயர்புரம் ஆஸ்பத்திரியின் தலைவர் டாக்டர் கனம் வெல்ஸ் ஐயர் (Rev. Dr. Frank Wells M. R. C. S; L. R. C. P.) மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். இவர் 1897ம் வருஷம் நவம்பர் 11ல் இங்கிலாந்தின் கீழ் பாகத்திலுள்ள நார்போக் (Norfolk) மாகாணத்திலுள்ள டிக்கிள்பரோ (Dickle-borough) வில் பிறந்தவர். லண்டன் நகரத்து அத்தியக்ஷரிடத்தில் குருப்பட்டம் பெற்று, 1911ல் தூத்துக்குடிக்கு மிஷனெரியாக வந்தார். 1914 முதல் இவர் நாசரேத்துக்கு மாற்றப்பட்டார். அவர் அவ்விதம் மாற்றப்பட்ட நோக்கம் 1892 முதல் ஒரே கட்டடத்தையுடையதாயிருந்த பரி. லூக்கா ஆஸ்பத்திரியைப் பெரிதாக எடுத்துச் சிறப்புடன் விளங்கச் செய்ய வேண்டுமென்பதே. ஆனாலும் அவர் 1917ம் வருஷம் ராமநாதபுரத்திற்கு மாற்றப்பட்டார். வெல்ஸ் ஐயருடன் மிஸ் மில்லர் என்ற ஒரு அங்கிலேய நர்ஸ் அம்மையாரும் நியமிக்கப்பட்டார். ஆனால் அந்த அம்மையார் 1915 ஜூலையில் ராஜினமாச் செய்து விட்டனர். 1916ல் திரசர் S. மதுரமும் ஒய்வெடுத்துக் கொண்டபடியால் அவர்களுக்குப் பதிலாக டாக்டர் R. வேதபோதகம் நியமிக்கப்பட்டு, டாக்டர் வெல்ஸுக்குப் பின் அவரே ஆஸ்பத்திரியின் தலைவருமானர்.

டாக்டர் வேதபோதகம்

டாக்டர் ரத்னம் வேதபோதகம் ஆஸ்பத்திரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது ஒரே ஒரு கட்டடமும், அதற்குப்பின்னல் பிணப் பரிசோதனை அறையும் (mortuary) மட்டும்தானிருந்தன. தினசரி ஆஜரானவர்களின் தொகையும் நாற்பதே. உள்ளிருக்கும் வியாதியஸ்தர் (In-patients) வருஷ சராசரி 1·5 தான். இவ்வித நிலைமையிலிருந்த மருத்துவசாலைக்கு இன்றையத்தினம் அது அடைந்துள்ள மேன்மையான உயர்நிலை கிட்டத்தக்கதாகக் கடவுள் டாக்டர் வேதபோதகத்தின் பிரயாசங்களை மிகவும் ஆசீர்வதித்துள்ளார் என்பதை ஆஸ்பத்திரியின் தீவிர வளர்ச்சியைக் கண்ணுற்றுவரும் இத்தலைமுறையோரான நாமறிவோம்.

1921ம் வருஷம் முதல் டாக்டர் வேதபோதகத்தின் அருமை மனைவியான ஸ்ரீமதி ரூபி வேதபோதகம் அம்மாள் L. M. & S. உதவி வைத்தியராக நியமனம் பெற்றார்கள். அதுமுதல் பெண்கள் வைத்தியமும் சிசு

பரிபாலனமும் முன்னிலும் அதிக நயம்பட நடைபெறலாயின. குஷ்ட ரோகிகளுக்கும் வைத்திய சேவை ஆரம்பிக்கப்படலானது. கனம் ஸ்டேப்ளி ஐயர் 1922ம் வருஷ ரிப்போர்ட்டில் எழுதுவது "வெளி வியாதியஸ்தர் வருஷ ஆஜர் 30,690, ரண சிகிச்சை 530.........புதிய இரண சிகிச்சையறை (Operation theatre) மகாகனம் அத்தியக்ஷாவர்களால் (Rt. Rev. E. H. M. Waller) தற்கால ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் 30வது வருஷாந்திரத் தினமாகிய பரி. லூக்காவின் திருநாளன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதற்கான மொத்தச் செலவு ரூ. 4500. இதில் சர்க்கார் உதவியது ரூ. 1989. மீதிப்பணம் வியாதியஸ்தரும் சிநேகிதரும் நன்கொடையளித்தது.........பேறுகால அறையொன்று கட்டுவதற்காகப் பணம் சேகரிக்கிறோம். பெண் வைத்தியர் ஒருவர் ஆஸ்பத்திரியில் வேலை செய்வதால் அவ்வித ஒத்தாசை தேடிப் பலவிடங்களிலுமிருந்தும் ஏராளமான மக்கள் வருகிறார்கள். தற்போதுள்ள இடவசதி மிகவும் குறைவானது..........நோயாளிகளினிடையே சுவிசேஷ வேலை ஒழுங்காய் நடத்தப்படுகிறது." மேற்காட்டிய இவ்வாசகத்தினின்று 1922க்குள் பரி. லூக்கா ஆஸ்பத்திரி அடைந்துள்ள மேம்பாட்டை நாம் அறிந்துகொள்ளலாம். 1923ன் அறிக்கையும் மிக உற்சாகத் தொனியுடைத்து. அவ்வருஷம் வெளியேயிருந்து வரும் வியாதியஸ்தர் ஆஜர் 47,450. உள்ளே தங்கியிருக்கும் வியாதியஸ்தர் 311. ரண சிகிச்சை 1180. புதிதாக உள் வியாதியஸ்தர் சிகிச்சையறை (ward) ரூ. 1000 செலவில் கட்டப்பட்டு, கிறிஸ்மஸ் தினத்தன்று பிரதிஷ்டையானது. மேலும் வியாதியஸ்தர் தங்குவதற்கான சில அறைகளும் சகல வசதிகளும் உடையனவாய் கட்டப்பட்டன. வியாதியஸ்தர் மத்தியில் செய்யப்பட்ட சுவிசேஷ வேலையைப்பற்றியும் விரிவான அறிக்கைகள் ரிப்போர்ட்டுகளில் காணப்படுகின்றன.

ஸ்ரீமதி வேதபோதகம்

1913 ஆகஸ்டில் ரிக்ஸ் அம்மாள் சுயதேசம் செல்லவே, தாய்மார் சங்கக் காரியதரிசியாகவும் பெண்கள் அனாதைச்சாலைத் தலைவராகவும் ஸ்ரீமதி அனி பாஸ்டர் (Mrs. A. L. Foster) அம்மாள் நியமனம் பெற்றார்கள். இவர்களின் ஆதரவின்கீழ் S. P. G. பாகங்களில் தாய்மார் சங்கம் வெகுவாய்ப் பரவி பல கிளைகளையுடைத்தாயிற்று. அவர்கள் 1922ல் ராமநாதபுரத்துக்கு மாற்றப்பட்டபின் பரி. யோவான் பாடசாலையில் ஊழியம் செய்துவந்த மிஸ். மிலிஸென்ட் ஹொரிங் அம்மாள் தாய்மார் சங்கக் காரியதரிசியானார்கள். ஆனால் இவர்களும் ஒரு வருஷ ரஜாவில் சுயதேசம் சென்று திரும்பினபோது, பெண்கள் கல்விச்சாலையிலேயே மறுபடியும் நியமனம் பெற்றார்கள். இவ்விதம் சில மாறுதல்கள் ஏற்படவே அநாதைப்

பெண்கள் ஊழியம்

பெண்கள் சாலையும் அதைச் சார்ந்த லேஸ் வகுப்பும் பல கஷ்டங்களுக்குள்ளாயின. பண வருவாய் குன்றிவிட்டது. ஆகையினால் T. D. C. கமிட்டியார் 1924ம் வருஷம் ஜனுவரி மாதம் 21ம் தேதி அதை மூடிவிட்டார்கள். இவ்விரு ஸ்தாபனங்களும் 1878ல் கனம் மர்காஷிஸ் ஐயரால் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து அவற்றால் உயிர் பிழைத்து உலகில் முன்னேறிய பெண்கள் அனந்தம்பேர்.

முந்திய அத்தியாயத்தில் பல கிராமங்களில் ஆலயக்கட்டுமான வேலை நடைபெறக் கண்டோம். அவற்றில் முதலில் முடிவுற்றது குருகாட்டூர் ஆலயம். கனம் Y. மனுவேல் ஐயர் இக்கட்டுமான விஷயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசம் மிகுதி. இவ்வாலயத்தை மகாகனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் 1912-ம் வருஷம் டிசம்பர் 10-ம் தேதி "பரிசுத்த பவுலின் ஆலயம்" என்னும் பெயருடன் பிரதிஷ்டை செய்தார்கள்.

**சில புது ஆலயங்கள்**

அடுத்தாற்போல் எருசலேம், முதலைமொழி ஆலயங்கள் வேலை பூர்த்தியாகி 1913-ம் வருஷத்தில், முந்தியது பரிசுத்த மிகாவேல் முதலான சகல தேவ தூதர்களின் ஆலயம் என்றும், பிந்தியது பரி. அகுஸ்தீன் ஆலயம் என்றும் பிரதிஷ்டையானது. *தோப்பூர், பன்றிமடல் ஆலயங்கள் 1914-ம், 1915-ம் வருஷங்களில் கட்டி முடிவுற்றன. அக்காலத்தில் நமது அத்தியக்ஷாதீனத்தைத் தோர்ணக்கல் அத்தியக்ஷரான கனம் அசரியா பிஷப்பவர்கள் தற்காலிகமாகக் கண்காணித்து வந்தார்கள். எனவே இவ்விரு ஆலயங்களும் அவர்களாலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டன. இவை முறையே "பரிசுத்த பேதுருவின் ஆலயம்" (1915) "திருநாம ஆலயம்" (1914) என்றும் பெயர்கள் பெற்றன. இவற்றுடன் நாசரேத் மர்காஷிஸ் ஞாபகார்த்த ஆலயக்கட்டுமான வேலையும் தொடங்குமாறாய் 1920-ம் வருஷம் ஜூன் மாதத்தில் நாசரேத் பழைய ஆலயம் இடிக்கப்பட்டது. புதிய ஆலயம் கட்டப்படுமட்டும் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, முன் மைதானத்தில் ஓலைமேய்ந்த தற்காலிக ஆலயமும் கட்டி முடிவுற்றுப் பிரதிஷ்டையானது. அவ்வருஷமே மகாகனம் உவாலர் அத்தியக்ஷரவர்களால் புதுக்கோவில் அஸ்திபாரம் போடப்பட்டு, கட்டுமான வேலை ஆரம்பமாகி 8 வருஷமாய் நடைபெறலாயிற்று.

**பரி. யோவான் புத்தாலய அஸ்திபாரம்**

அஸ்திபார ஆராதனைச் சமயத்தில் ஒரு சீசாவில் அக்காலத்தில் பிரதானமானவர்களின் பெயர்கள் அடங்கிய ஜாபிதாவை வைத்து மூடி முத்திரையிட்டு, வடகீழ் மூலையில் வைத்து அதன்மேல் கட்டுமானத்தை ஆரம்பித்தார்கள். இந்த ஜாபிதாவில் அடங்கியுள்ள பெயர்களனைத்தையும் நானறிந்து கொள்ளக்கூடாமற் போயிற்று. இப்படிச்

* தற்காலிக ஜெபவீடுதான்

செய்யக் காரணம், ஒருக்கால் பல நூறு வருஷங்களுக்குப்பின் ஆலயம் இன்னும் பெரிதாக்கப்பட வேண்டும் என்று பின்சந்ததியார் கண்டு, இதை இடிப்பார்களேல், அக்கால் அவர்கள் இந்நாளிலுள்ள பிரமுகர் யாரென அறிந்து கொள்ளக்கூடும் என்பதேயாம்.

நொச்சிகுளத்திலும் ஆலயம் கட்டும் நோக்கமாய் ரூ. 21-க்கு ஒரு நிலம் வாங்கப்பட்டது. இவ்வூரில் பிள்ளையன்மனைத்தாய்மார் சுவிசேஷ ஊழியம் செய்ததின் பயனாய், 1920ம் வருஷம் ஆறு குடும்பத்தார் கிறிஸ்துவைச் சேர்ந்து கொண்டார்கள். எனவே பிள்ளையன்மனைச் சபையார் இந்த ரூபாய் 21ல் பாதியைத் தாங்களே கொடுக்க முன்வந்தார்கள். 1922 ஜூலை மாதத்திற்குள் நொச்சிகுளத்திலும், செங்குளத்திலும் ஜெப வீடுகளும், வகுத்தான்குப்பம் (1918), ஆழ்வார்திருநகரி (1919), தோப்பூர் (1921), என்ற விடங்களில் உறுதியான ஆலயங்களும் கட்டப்பட்டுப் பிரதிஷ்டையாயின.

நோச்சிகுளம்

நொச்சிகுளத்தில் மட்டுமல்லாது கரையடி, ஆழ்வார்திருநகரி, உடையார்குளம், மழவை என்றவிடங்களிலும் பலர் ரக்ஷிப்பின் மார்க்கத்தைச் சேர்ந்து கொண்டார்கள். இவையெல்லாம் சபையாரின் சுவிசேஷ முயற்சியின் பலன் என்பது நன்றியறிதலுக்குரிய விஷயம். 1923-ம் வருஷ ரிப்போர்ட்டில் கனம் D. கோவிற்பிள்ளை ஐயர் நாசரேத் சேகரமெங்கும் நடந்த வாலிபரின் உற்சாகமான சுவிசேஷ வேலையைப் புகழ்ந்து எழுதக்கூடியதாயிற்று.

ஸ்டேப்ளி ஐயர் சிறுவர் ஊழியத்தையும் மிகவும் வற்புறுத்தினர். ஆகையினல் 'பெரிய ஞானோபதேசம்' 'சிறிய ஞானோபதேசம்' என்ற சிறுவர்க்கான இரு சித்தாந்தக் கேள்வி—விடைகளைத் தயாரித்து, அவற்றை ஆண், பெண் பிள்ளைகளுக்குச் சபைகள்தோறும் கற்பித்து வரச்செய்தார். மேலும் கிராமச் சபைகளின் பிள்ளைகளும், கஸ்பாப் பிள்ளைகளும் வருடத்திற்கொருமுறை பண்டிகை கொண்டாடுவது நலமென்று கண்டு 1915 ஜனுவரி மாதத்தில் நாசரேத்தில் முதல் உற்சவத்தை நடத்தினர். அப்பண்டிகையே நாம் இன்றும் மிக்க மனமகிழ்ச்சியுடன் ஆசரித்து வரும் மனமகிழ்ச்சிப் பண்டிகை. இப்பண்டிகையில் பள்ளிச்சிறூர் மட்டுமல்லாது, கல்லாமல் கூலி வேலை செய்யும் சிறுவர்களையும் சேர்த்துக் கொண்டார். அப்படிப்பட்ட சிறுவர்களுக்காகவும் சனிக்கிழமை மாலை நேரத்தில் 'ஓய்வுநாள் வகுப்புகள்' கிராமங்கள் தோறும் நடைபெறச் செய்தார். இக்கூட்டங்களில் அவர்களுக்கு வேத சரித்திரங்கள் கற்றுக் கொடுக்கப்படலாயின.

மனமகிழ்ச்சிப் பண்டிகை

ஸ்டேப்ளி ஐயர் கொள்கை 'இளமையில் நற்பழக்கங்களைப் பழகியவர்கள் முதுமையிலும் அதைக் கைவிடார்' என்பதுவாம். அக்காலம் அவர் நாசரேத்திலும் சுற்று வட்டாரத்திலும் மிகுந்திருந்த குடிப்பழக்கத்தைப் போக்கடிப்பதற்குச் செய்த பிரயத்தனங்கள் யாவும் தோல்வியுறவே, மக்கள் சிறு வயதிலிருந்தே அப்பழக்கத்தை வெறுக்கச் செய்வதே மேல் என்று கொண்டார். அஃதோடு கிராமத்திலும் குடியை அகற்றுவதற்கான ஓர் சங்கம் ஏற்படுத்த ஆலோசித்தார். இதில் நசரைப் பெருமக்களில் பலர் அவருக்கனுசரணையாயிருந்து ஒத்தாசை செய்தார்கள். அவர்கள் முயற்சியின் பயனால் 1914ம் வருஷத்தில் அவ்விதச் சங்கம் ஒன்று நாசரேத்தில் ஸ்தாபிதமாயிற்று

**மதுவிலக்கு**

அச்சங்கத்தில் ஒருவர் சேரும்போது அவருக்கு ஒரு பிரவேசக்கார்டு கொடுக்கப்படும். அதில் அவர் மதுபானம் பண்ணாதிருக்கவும், தன் சிநேகிதரைக் குடிவெறியினின்று விலக்கவும் வாக்குக் கொடுத்துக் கையெழுத்திடவேண்டும். இந்நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு 160 தொண்டர் முதல் வருடத்திலேயே அதைச் சேர்ந்து கொண்டனர். சேகரத்தின் பலகிராமங்களிலும் கிளைச்சங்கங்கள் ஏற்படலாயின. 1915 ஆகஸ்டு மாதம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் அச்சங்க வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு, அங்கத்தினரை வெகுவாய் உற்சாகப் படுத்தினார்கள். மாதத்தில் ஒரு ஓய்வுநாள் மதுவிலக்கு ஞாயிறாகப் பிரத்தியேகப்படுத்தப்பட்டு, அந்நாளில் விசேஷ பிரசங்கங்களும் செய்யப்பட்டுவந்தன. இவ்வழக்கம் சென்னை சர்க்கார் மதுவிலக்குச் சட்டம் 1948 அக்டோபர் 2ம் தேதியில் நடைமுறைக்கு வருமட்டும் இருந்து வந்தது.

நாசரேத் நகர முன்னேற்றம் ஸ்டேப்ளி ஐயர் காலத்தில் ஆரம்பமாயிற்று என்று கூறினோமல்லவா? 1912ம் வருஷத்தில் சாத்தன்குளம் ரோடு போடப்பட்டது முதல் அவ்வூரோடு நெருங்கிய போக்குவரத்துண்டாயிற்று.* நசரை நகரும் பெரும் வியாபாரஸ்தலமாகமாறி ஜனநெருக்கம் அதிகரிக்கவாரம்பித்தது. இத்தியாதிகாரணங்களால் கிராம அபிவிருத்திக்கான பல காரியங்கள் கவனிக்கப்பட வேண்டியவவசியம் ஏற்பட்டது. எனவே ஸ்டேப்ளி ஐயர் நாசரேத் கஸ்பா மிஷன் பஞ்சாயத்தை ஸ்தாபித்தார். அவரே அதின் முதல் பிரசிடென்டாயும் இருந்தார். 1922ல் இப் பஞ்சாயத்து சர்க்காரில் ஆவணம் செய்யப்பட்டது.

**நகரப் பஞ்சாயத்து**

இது முதல் நாசரேத் கிராமம் ஒரு நகரமென வளர்ச்சியுறலாயிற்று. ஓடைக்குக் கிழக்கேயும் அநேக வீடுகள் கட்டப்படலாயின. கிராமத்தெருக்களின் சுத்தி, அவசிய

* கருப்புக்கட்டி, விறகு முதலிய பொருட்கள் நாசரேத் வழியாகவே வடக்கிலும், மேற்கிலுமுள்ள பட்டணங்களுக்குச் செல்ல வேண்டியதாகவே, இவ்வூர் ஓர் பெரும் வியாபார ஸ்தலமாக வளரக்கூடியதாயிற்று.

மான இடங்களில் பாலங்கள், இரவில் தெரு விளக்குகள் இவை போன்ற பல குடிமைச்சிலாக்கியங்களை ஜனங்கள் அனுபவிக்கலாயினர். இவ்விதச் சீர்தோன்றும் காலை, (காலஞ்சென்ற மர்காஷிஸ் ஐயர் எடுத்துக்கொண்டிருந்த பெரும் பிரயாசத்தின் பயனாக) திருநெல்வேலி–திருச்செந்தூர்ப் புகை வண்டிப்பாதையில் நாசரேத்தும் ஓர் நிலையமாகி, 1923 மார்ச்சு 21ம் தேதி முதல் ரயில் ஓடவாரம்பித்தது.

சபை வேலையிலும் ஓர் பெரும்மாறுதல் இக்காலத்திலேற்பட்டது. 1919ம் வருஷமட்டும் திருநெல்வேலி S. P. G. மிஷன் வேலை திருநெல்வேலி புரோவின்ஷியல் கமிட்டியாரின் (The Tinnevelly Provincial Church Committee) மேற்பார்வைக்குள்ளும், அக்கமிட்டி திருநெல்வேலி அத்தியக்ஷருக்குட்பட்டு, மதராஸ் டயோசீஸன் கவுண்சிலின் ஆதீனத்திலுமிருந்து வந்தன. 1920ல் திருநெல்வேலி மிஷன் சென்னையிலிருந்து முழுவதும் பிரிக்கப்பட்டு, திருநெல்வேலி S. P. G. டயோசீஸன் கவுண்சிலின் (Tinnevelly Diocesan Council, S. P. G.) ஆளுகைக்குள்ளாயிற்று. இதை எதிர்பார்த்தே 1918 இலிருந்து நாசரேத் மிஷன் நாசரேத், மூக்குப்பீறி என்ற இரு வட்டாரங்களாகப் பிரித்துவிடப்பட்டிருந்தது. இம்மாறுதலின் ஓர் அம்சமாக நாசரேத், பிள்ளையன்மனைப் பாஸ்றரேற்றுகளாலான நாசரேத் வட்டாரத்துக்குக் கனம் ஸ்டேப்ளி ஐயர் சேர்மனாகவும் (District Chairman) மூக்குப்பீறி, கடையனோடைப் பாஸ்றரேற்றுகளைத் தன்னில் கொண்ட மூக்குப்பீறிச் சேகரத்திற்கு கனம் A. P. ராண்ட்ல் ஐயர் சேர்மனாகவும் ஏற்பட்டார்கள். நாசரேத் சேகரத்தில் பெரியநாயகம்

**நாசரேத் சர்க்கிள்**

ஐயர் செமினெரி ஆசிரியப் பதவியுடன் சபைக் குருவாகவும், ஜாண் சாமுவேல் ஐயர் (செமினெரி வேலையுடன்) பாஸ்றரேற் குருவாகவும், S. S. மோசே ஐயர் பிள்ளையன்மனை பாஸ்றரேற் குருவாகவும் பணியாற்றினார்கள். பிள்ளையன்மனைப் பாஸ்றரேற், தற்கால உடையார்குளம் பாஸ்றரேற்றையும், நாசரேத் சூரவில் வெள்ளமடம், முதலைமொழி நீங்கலாக மற்றச் சபைகளையும் தன்னுள் உடைத்தாயிருந்தது. கனம் மோசே ஐயரவர்களுக்குப்பின் கனம் D. கோவில்பிள்ளை ஐயரவர்கள் பிள்ளையன்மனைக் குருவாக ஒரு வருஷம் ஊழியம் செய்து, 1922ல் கஸ்பாவுக்கு மாற்றப்பட்டார்கள். 1924 மார்ச்சு 11ல் C. M. S., S. P. G. என்ற இரு சங்கப் பிரதிநிதிகளும் பாளையங்கோட்டையில் கூடி திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத் திட்டத்தை பெருவாரி வோட்டுகளால் ஒப்புக்கொண்டார்கள். இதன்படி ஒவ்வொரு டிஸ்டிரிக்டும் C. M. S. பாகத்திலிருந்தது போலவே ஓர் இந்திய குருவின் மேற்பார்வைக்குள்ளானது. எனவே 1924 எப்ரில் முதல் இச்சேகரம் கனம் D. கோவில்பிள்ளை ஐயரவர்களைத்தன் முதல் 'சர்க்கிள் சேர்மனா'கக் கொண்டு 'நாசரேத் சர்க்கிள்' என்று வழங்கப்பட லாயிற்று.

கனம் ஸ்டேப்ளி ஐயர் காலத்தில், இவ்வூரில் திவ்யப் பணிவிடை செய்த சில குருக்கள் நித்யசமாதானத்துட்பட்டனர். அன்னவரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் குறிப்பிடாதிருப்பின் குற்றமாம். இவர்களில் கனம் ஏசுவடியான் ஞானமுத்து ஐயர் 1847ம் வருஷம் நாசரேத்தில் பிறந்து, 1899ல் பட்டம் பெற்றபின் கடையனோடை V. ஆபிரகாம் ஐயருக்குதவியாகவும், முதலூர் சேகர குருவாகவுமிருந்து, பின் 1904 முதல் 1906 வரை நாசரேத்தில் ஊழியம் செய்தார். பின்னால் குலசேகரப்பட்டணத்தில் தெய்வச் சேவையிலீடுபட்டிருக்கும்போது 1916 டிசம்பர் 15ல் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார். கனம் J. N. பெரியநாயகம் ஐயர் 1912 — 13ல் இவ்வூரில் வேலை செய்தார். இவர் கனம் D. பெரியநாயகம் ஐயரின் சகோதரி குமாரன். இடையன்குடி, ராதாபுரம், கிறிஸ்தியாநகரம் என்றவிடங்களிலும் வேலை பார்த்தார். 1917 மே 19ல் இடையன்குடியில் மரித்தார். கனம் M. ஜீவானந்தம் ஐயர் 1862ம் வருஷம் நாசரேத்தில் பிறந்தவர். 1911—14ல் இங்கு திருப்பணிவிடை செய்தபின் இடையர்காட்டுக்கு மாற்றப்பட்டார். 1917 ஆகஸ்டு 22ல் பரலோக வாழ்வடைந்தார். கனம் P. ஜாண் ஐயர் புதுக்கோட்டைவாசி. மர்காஷிஸ் ஐயரின் ஆதரவில் கற்று முன்னணியில் வந்தவர்களில் இவர் ஒருவர். 1903—1906லும் 1908—1918இலுமாக இருமுறை நசரையூழியத்திலீடுபட்டார். பிரசங்க வன்மையுள்ளவராகவும், சங்கீத வல்லோனாகவும், கச்சிதமுள்ள தலைமையாசிரியராகவும் ஜனங்களால் இன்னும் பேசிக்கொள்ளப்படுகிறார். இவர் 1918 மே மாதம் 31ம் தேதியில் நாசரேத்திலேயே மரித்தார்.

சில குருமாரின் மரணம்

மேற்சொல்லப்பட்டவர்கள் தவிர அக்காலம் மறுமைக்குட்பட்ட மற்ற குருக்களெல்லாரிலும் மிகவும் கீர்த்திவாய்ந்தவர்கள் கனம் மதுரநாயகம் ஏசுவடியானும், கனம் V. ஆபிரகாமுமே. ஏசுவடியான் ஐயர் நாசரேத்தின் இரண்டாவது இந்திய குரு [ஆங்கிலேய திருச்சபை முறைப்படி பட்டம் பெற்றவர்களில்]. 1833-ம் வருஷம் ஏப்ரில் 5-ம் தேதி பிள்ளையன்மனை மதுரநாயகம் உபதேசியாரின் குமாரனாகப் பிறந்து, நாசரேத்தின் மிஷனெரிமார் அனைவரையும் கண்ணால்கண்டு † அவர்களில் பலரிடம் வேலையும் பார்த்தவர். இச்சரிதத்தில் இடைக்கிடையே இவரைப்பற்றியும் இவருடைய ஊழியத்தைப்பற்றியும் கவனித்தோமாதலின், இக்குருவோத்தமரின் வாழ்க்கையைப்பற்றிய இக்கூற்றைச் சுருக்கியே யெழுதுவம். நாசரேத்தில் முதல் காரை வீட்டை இவர்தான்

M. ஏசுவடியான் ஐயர்

† From Rev. D. Rosen to Rev. C. G. Stapley & Rev. P. Randle.

கட்டினர் என்பர். இவர் மர்காஷிஸ் ஐயரின் அந்தரங்க நண்பராக இச்சேகரத்தின் முன்னேற்றமான சகல காரியங்களிலும் அவருக்குன்னத ஆலோசனை சொல்லி வந்தார். வேலையில் மிகவும் கண்டிப்பும், உண்மையுமுடையவராதலால் இவருடைய செல்வாக்கு மிகுதி. கடைசிக் காலத்தில் முதுமையினுல் கண்பார்வை மங்கியும், பெலனுள்ளமட்டும் இடைக்கிடையே சபைக்குருக்களுக்கு ஒத்தாசைசெய்துவந்து, 1920ம் வருஷம் டிசம்பர் மாதம் 10-ம் தேதியில் 88 வயதுடையவராய்க் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார். இவரது சடலம் நாசரேத் கல்லறைத் தோட்டத்தில் சேமிக்கப்பட்டுள்ளது. கனம் ஐயருடைய மரணத்தை மெட்ராஸ் மெயில் பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு (ஆங்கிலத்தில்) தெரிவித்திருந்தது. * "தென்னிந்தியாவிலேயே கண்ணிய மிக்கவரும், மிகவும் வயது முதிர்ந்தவருமான கனம் M. இயேசுவடியான் ஐயர் நாசரேத்திலுள்ள தமது வீட்டில் காலமானர். சென்னை சலிவன் தோட்ட வேத சாஸ்திரக் கலாசாலையில் முதற்றரமாணவனுக விளங்கி அங்குள்ள பரிசுகளில் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் தாமே பெற்ருர். ஒரு குருவாகவும், அகன்ற கிறிஸ்தவ சேகரங்களைக் கண்காணிப்பவராகவும் இவர் மிகவும் சித்தியுள்ளவராக இருந்தார். ஐரோப்பிய S. P. G. மிஷனெரிமாரும், அத்தியக்ஷரும் அவரிடத்தில் காணப்பட்ட திட்டவட்டமான வாழ்க்கை முறைமைகளையும், ஆளுந்திறமையையும் அதிகமாய் மெச்சினதுண்டு. அவரது சடலத்தைப் பின்தொடர்ந்து கிறிஸ்தவ மக்கள் பெருங்கூட்டமாகக் கல்லறைமட்டும் சென்றனர். கனம் ஸ்டேப்ளி ஐயரும், J. சாமுவேல் ஐயரும் அடக்க ஆராதனையை நடத்தினுர்கள்......" இவரது சந்ததியார் ஐயாவர்களின் ஞாபகார்த்தமாக ஆலயத்தில் உயர்ந்த விலையுள்ள ஒரு 'நீண்டாசனம்' (bench) செய்து வைத்துள்ளார்கள்.

**V. ஆபிரகாம் ஐயர்**

கனம் V. ஆபிரகாம் கடையனேடை விசுவாசம் உபதேசியாரின் மகனுக 1841 மார்ச்சு 21ல் நாசரேத்தில் பிறந்தார். இவருடைய குருத்துவ ஊழியமனைத்தும் கடையனேடையிலேயே செய்யப்பட்டது. சுமார் 40 வருஷகாலம் அவர் செய்த ஊழியத்தின் அழியாச் சின்னங்களாகப் பல சபைகள் இன்றும் அச்சேகரத்தில் விளங்குகின்றன. இவரும் முதிர்ந்த வயதில் 1920ம் வருஷம் ஜனுவரி 7ம் தேதி பரலோக ராஜ்யமெய்தினர்.

கனம் ஸ்டேப்ளி ஐயர் 1924-ம் வருஷம் மே மாதம் 26-ம் தேதியில் தம்முடைய வேலையை ராஜினமாச் செய்தார். அவர்தம் நீண்ட கால

* The Madras Mail 14—12 1920.

மிஷனெரி ஆட்சியின் முடிவில் அவருக்கு மகிழ்ச்சி யளித்த ஒரு காரிய முண்டு. அது நாசரேத் மிஷனின் தலைமை ஓர் இந்திய குருவினிடம் ஒப்படைக்கப்பட்டதே. 1826-ல் S. P. G. சங்கத்தார் இச்சீமையில் சுவிசேஷ உத்தரவாதத்தை மேற்கொண்டதுமுதல், இங்கு இவ்விதமாய் இந்தியத் தலைமை ஏற்பட்ட முதல் தடவை இதுவே இந்தியத் தலைமை என்பதை வாசகர் அறிவர். ஒருவாறு இக்காரியம் இந்தியா சுயராஜ்யம் எய்திய சரித்திரத்தை ஒக்கும். 1920-ல் T. D. C. ஸ்தாபிதமானதும், 1924-ல் இடைக்காலப் பொறுப் பேற்றதும், 1925-ல் அத்தியக்ஷாதீன ஐக்கியமுண்டானதும், ஆங்கிலேய மிஷனெரிமார் 'இராஜ்ஜியத்தை அதன் பிள்ளைகளுக்கு' விட்டு விட்டது போல் தோன்றுகிறதன்றோ? அவர்கள் காலத்தில் இந்திய மக்கள் தங்கள் காரியத்தைத் தாங்களே நிர்வகித்துக்கொள்ளப் பயிற்றுவிக்கப்பட்டு, காலம் வரும்போது அப்பெரும்பாரத்தைத் தாங்கித் திறமையுடன் கண் காணிக்கக் கூடியவர்கள் ஆகிவிட்டார்கள் என்பதைக் கனம் கோவிற் பிள்ளை ஐயர் காலத்திய சரித்திரம் ரூபகாரப்படுத்திற்று.

ஸ்டேப்ளி ஐயர் இங்கு ராஜினமாச் செய்தபின் பம்பாய் அத்தியக்ஷாதீனத்தில் அபு மலைக் கலாசாலையின் தலைவராய் மூன்று வருஷமிருந்து 1928-ல் S. P. G. யை விட்டு விலகிக்கொண்டார். கந்தர்புரி அத்தியக்ஷர் அவரது உயர்ந்த கல்வித்திறமையையும், பக்திச் சிறப்பையும் பாராட்டி, 1929 முதல் கந்தர்புரி பரி. அகுஸ்தீன் மிஷனெரிக் கல்லூரியில் ஓர் ஆசிரியாக அவரை நியமித்தார்.

ஐயர் ஓர் சிறந்த வேத சாஸ்திரி. அவர் எழுதிய "கிறிஸ்துவின் ரூபம்" (The Person of Christ) என்ற நூல் அதை உலகுக்குத் தெரியக் காட்டா நிற்கும் ஓர் சான்று. மகாகனம் டப்ஸ் அத்தியக்ஷரவர்கள் (Rt. Rev. H. N. Tubbs) "இந்த அத்தியக்ஷாதீனம் ஸ்டேப்ளி ஐயரின் ஞானத்திற்கும், அறிவிற்கும், கல்விக்கும் என்றும் கடப்பாடுடைத்து. தம்மை முற்றிலுமாய் அர்ப்பணம் செய்து அத்தியக்ஷாதீனத்தின் வேலையிலும் வாழ்க்கையிலும் தம் திறமையின் அடையாளத்தைப் பின்வைத்துப் போயிருக்கிறார். நாசரேத் வேத சாஸ்திரசாலையில் அவரிடம் கற்றுத் தேர்ந்த மாணவரான அனேக குருக்களின் உண்மையுள்ள உழைப்பிலும், வாழ்க்கை லக்ஷியத்திலும் அவருடைய வேலைத்திறன் இன்றும் விளங்குகிறது" * எனறு பாராட்டு வசனம் எழுதியுள்ளார்கள்.

---

* Page 6 T. D. C. Report of 1924

# அத்தியாயம் 14

## இரு கனேன்கள்

## 1924 — 1936

D. கோவில்பிள்ளை (B. A.) ஐயரவர்கள் 1922-ம் வருஷத்திலேயே நாசரேத் குருவாக வந்துவிட்ட போதிலும், இச்சேகரம் அனைத்திற்கும் அதிகாரியானது 1924 முதலேயாதலின் இவர்கள் காலம் அவ்வருஷத்தில் ஆரம்பித்ததாகவே இச்சரித்திரத்தில் கொள்வோம். இதே போன்று முன்னர் வெஸ்ற்றன் ஐயர் காலச் சரிதமும் எழுதலுற்றது காண்க.

நாசரேத் பரிசுத்த யோவான் தேவாலயமும், மர்காஷிஸ் ஞாபகார்த்த உயர்தரப்பாடசாலையும் கோவில்பிள்ளை ஐயர் இச்சேகரத்தில் ஆற்றிய சிறந்த சேவையின் மேம்பாட்டை நிலைநாட்டும் அழியாச் சின்னங்களா மாதலின், முதலில் அவற்றின் வரலாற்றை ஈண்டு எழுதுவதே முறையென விழைந்தனம். மர்காஷிஸ் ஐயர் நாசரேத் விஷயத்தில் கொண்டிருந்த சீரிய அபேக்ஷைகளிலொன்று கோவில் புதுப்பிக்கப்படல் என்பதையும், அது அவர் காலத்தில் முடியாது போயினமையின் வெஸ்ற்றன், ஸ்டேட்ளி ஐயர் மார் அவரது ஞாபகார்த்தமாக புதிய கோவில் ஒன்று கட்டத்தீர்மானித்த தையும், அதற்காரம்பமாகப் பழைய ஆலயத்தை இடித்துவிட்டு, தற்காலிக ஆலயம் எடுப்பித்தனர் என்பதையும் ஏற்கெனவே கண்டோம். அவர்கள் ஆரம்பித்த இம்மாபெருங் கைங்கர்யமான கோவிற்காரியத்தை முடித்துக் கொடுத்த புகழையுடையோர் கோவிற்பிள்ளை ஐயராவர்.

**பரி. யோவான் ஆலயம்** ஆலயக்கட்டுமானத்திற்கு S. P. G., S. P. C. K. சங்கத்தாரின் உதவித் தொகைக்கு மேலாக நாசரேத் சபையார் ரூ. 20,000 கொடுக்கவுடன்பட்டிருந்தனர். கட்டுமானக் கமிட்டியினர் ஐயரவர்களுடைய தலைமையின்கீழ் வெகு ஊக்கத் துடன் பணம் பிரிக்கும் வேலையிலீடுபட்டனர். இவர்கள் உழைப்பின் பயனாய் நாசரேத் ஆலயக்கட்டுமானப் பண்டுக்கு பணம் தட்டின்றி வந்து கொண்டேயிருந்தது. அன்னிய இடங்களிலுமிருந்து நசரை வாசிகளும் சிநேகிதரும் உற்சாகமாய் நன்கொடை பலவளித்தனர். எனவே 1923 கடைசி மாதத்திற்குள் சுவர்களும், தூண்களும், அலங்காரமான கமான்களும் (arches) கட்டி முடிக்கப்பட்டன. 1924 மார்ச்சு மாதத்தில் அத்தியக்ஷா தீனத்திற்கு விஜயம் செய்த S. P. G. பிரதிநிதிகள் (Delegation) ஆலயப் பிளான், கட்டுமானம் முதலியவற்றைக் கண்ணுற்று, அகமகிழ்ந்து தங்கள் சந்தோஷத்தைக் காட்டுவாராய் சங்கத்தாரின் உதாரத்துவ உதவித்தொகை இன்னும் அதிகமாய்க் கிடைக்க ஆவன செய்ய வாக்குச் செய்தார்கள். அவ்வருஷ இறுதிக்குள் ஆலயச் சுவர்கள் பூரண உயர்வையெட்டி,

தட்டொட்டி வேலையும் கிட்டத்தட்ட முடிவுற்றது. இச்சமயம் S. P. G. சங்கத்தாரின் உதவித்தொகையான 1000 பவுனும் கைக்குக்கிட்டியது. அடுத்த வருஷ முடிவுக்குள் கோபுரத்தில் முதல் இரண்டு தட்டுகளும் தட்டொட்டி வேலை முழுவதும் முடிவுற்றன. 1925-ம் வருஷம் மழைத் தாழ்ச்சியாலும், வியாபார மந்தத்தினுலும் வருவாய் குன்றிய ஆண்டாய் இருந்திடினும், சபையார் தங்கள் வாக்குத் தொகையில் சுமார் ரூ. 5800 பிரித்துக் கொடுத்ததை கனம் ஐயாவர்கள் வெகுவாய்ப் பாராட்டி எழுதியுள்ளார்கள். தங்கள் பணத்தை உதாரத்துவமாய்க் கொடுத்ததுமன்றி சபையார் தாங்களே கட்டுமான வேலையிலீடுபட்டு, வேண்டும் ஒத்தாசை புரிந்து வந்தனர். வேலையை மேற்பார்ப்பதில் தலத்து போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் நோபிள் அவர்களும், ஸ்ரீ V. கனகராஜ் அவர்களும், தங்கள் நேரத்தைச் செலவிட்டு எடுத்துக்கொண்ட சிரத்தை இன்றும் நகரமக்களால் மெச்சப்படுகிறது. அதுபோன்றே மிகப்பொலிவுடன் விளங்கி, எவரும் வியப்புறத் தக்கதாய் மிக்க அழகுடனிலங்கும் பிரம்மாண்டமான இவ்வாலயத்தைக் கட்டின சாமி ஆசாரி என்ற சிற்பியின் வேலைத்திறனையும் மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர். 1926 டிசம்பர் முடிவிற்குள் உள் பூச்சுமான வேலை முடிந்தது. இவ்வாலயத்திற்கு எஞ்ஞான்றும் மின்சார ஒளி வேண்டும் என்ற நோக்கத்துடன், 1927-இல் ஐயாவர்களும் சர்க்கிள் கமிற்றியாரும் அதற்கான பிரயாசங்கள் எடுத்தனர். ஆனால் அது கைகூடாது போயிற்று. அவ்வருஷக் கடைசி நாளுக்குள் கூரை வேலையும் பூர்த்தியாகவே, அடுத்த வருஷம் மார்ச்சு மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்படத் தீர்மானமாயிற்று. அதற்கான நன்னாளாக 1928 மார்ச்சு 12-ம் தேதி திங்கட்கிழமை குறிக்கப்பட்டது. சென்னை கவர்னர் வைக்கௌன்ட் கோஷன் பிரபு இவ்வைபவத்தில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டார். சகல ஆயத்தங்களும் நிறைவுற்று, கவர்னரை எதிர்பார்த்திருந்த சமயம் பல அரசியல் காரணங்களால் அன்னவர் வரவியலாதது தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது. சபையார் உற்சாகம் குன்றாது, பிரதிஷ்டை உற்சவத்தை இனிதே கொண்டாடினர். அன்று காலை 7-30 மணிக்குத் திருநெல்வேலி மகாகனம் நார்மன் டப்ஸ் அத்தியக்ஷரவர்களும், குருமாரும் ஆலயத்தைச் சுற்றிப் பவனி சென்று பிரதான வாசலண்டை வந்து சேரவே, அக்காலம் பாஸ்ற்றரேற் கமிட்டிக் காரியதரிசியாயிருந்த ஸ்ரீமான் M. S. அப்பாத்துரை * ஆலயத்தை அத்தியக்ஷருக்குக் கையளிக்கும் பத்திரத்தை வாசித்து, தேவாலயத் திறப்புக் கடனை நிறை

ஆலயப் பிரதிஷ்டை

* இவரது முன்னோரான கறுப்பன் முக்கந்தர் 98 வருஷங்களுக்கு முன் பிரதிஷ்டையான இரண்டாம் தேவாலயத்தைப் பத்திரம் வாசித்துக் கையளித்தார் என்பது முதியோர் வழிச்செய்தி.

வேற்றுமாறு, சபையார் சார்பில் அத்தியக்ஷாவர்களைக் கோரி நிற்க, அவர்களும் மனமுவந்து அவ்வாறே செய்து, ஆலயத்தினுட் பவனி சென்று பிரதிஷ்டை ஆராதனையை நடத்தினார்கள். அன்று திருவிருந்தில் பங்குபெற்றோரின் தொகை 2500. 11 மணிக்குப் பரிசுத்த ஞானஸ்நான ஆராதனையைக் கனம் கோவிற்பிள்ளை ஐயரவர்களே நடத்தி, 25 குழந்தைகளை கிறிஸ்துவின் அங்கங்களாகச் சேர்த்தனர். பிரதிஷ்டை உற்சவம் நான்கு நாட்கள் கொண்டாடப்பட்டது. கடைசி நாளான வெள்ளிக்கிழமையில் ஊர் அசனம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. ஆலயப்பணிமுட்டுகளிலும் பல புதுப்பிக்கப்பட்டன. இரங்கூன் பிரபல டாக்டரான M. D. டேவிட், அவர் சகோதரர் டாக்டர் ஜான் டேவிட் ஆகிய இருவரும் பிரசங்க பீடம் ஒன்று ஈந்தளித்தார்கள். ஸ்ரீமான் லாமேக் தம் மனைவியின் ஞாபகார்த்தமாக ஒரு வெண்கலப் பாடபீடமும் (lectern), டாக்டர் வேதபோதகமும், கனம் ஜாண் சாமுவேல் ஐயரும் ஒவ்வொரு வாசிப்புப் பீடமும் தந்தனர். பளிங்குக் கற்களால் செய்யப்பட்ட அழகிய ஞானஸ்நானத்தொட்டி நசரைத் தாய்மாரின் ஈவு. நாசரேத் சபையார் தங்கள் குருவானவர் சுமார் ஆறு வருஷங்களுக்குள் பணச்செலவு மிகுந்த இம்மாபெருந் தேவாலயத்தைக் கட்டி முடித்த செயலைப் பாராட்டி, அன்னவரை நன்றியுடன் இன்றும் கொண்டாடுவர். சர்க்கிள் கமிட்டியாரும் ஆலய விஷயத்தில் ஐயரவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையைப் பாராட்டி ஓர் தீர்மானம் நிறைவேற்றினர். ரிட்டயர்டு டிப்டி கலெக்டர் ஸ்ரீ வில்லியம் லாமேக் அவர்கள் பிரேரேபித்த அத்தீர்மானம் பின்வருமாறு:—

**சர்க்கிளார் பாராட்டு**

*"சேர்மனவர்களாகிய கனம் D. கோவிற்பிள்ளை ஐயரவர்கள் ஷை ஆலயக்கட்டுமான விஷயமாய் எடுத்துக்கொண்ட எல்லாப் பிரயாசங்களுக்காகவும், விசேஷமாய்த் தங்கள் சரீர சௌகரியங்களையும் குடும்பக் காரியங்களையும் ஒரு பொருட்டாக யெண்ணாது, அன்னிய நாடுகளுக்குச் சென்று புகழப்படத்தக்கவிதமாய் ஏராளமான பணம் வசூல் செய்து வந்ததற்காகவும் கமிட்டியார் அகம் மகிழ்ந்து ஷை ஐயரவர்களுக்குத் தங்கள் நன்றியறிதலைக் காட்டும் தீர்மானம் ஒன்று இக்கமிட்டியின் நடபடிப் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டது".

கோபுரம் இரு தட்டுகள் மட்டும் உடையதாய்த்தான் முடிவடைந்திருந்தது. சபையாரின் ஆசை தங்கள் ஆலயக் கோபுரம் தென்னிந்தியாவின் ஸ்தூபிகளனைத்திலும் உன்னதமாய் விளங்கவேண்டுமென்பதாம். எனவே வானத்தையளாவும் கோபுரங்கட்டுவதற்காகப் பணம் சேகரிப்பதில் ஈடுபடலாயினர்.

---

* Res. No. 5 of the Circle Committee dated 21—4—28

கோவில்பிள்ளை ஐயரவர்கள் காலத்தில் சேகரத்தின் மற்ற சபைகள் சிலவற்றிலும் தேவாலயக் கட்டுமான வேலைகள் நடைபெற்றன. உடையார்குளம் ஆலய முன்கூடம் 1923ல் ஆரம்பமாகி இரண்டொரு மாதங்களில் (May 1923) முடிவுற்றது. ஆசீர்வாதபுரம் தேவாலாயம் 1926 அக்டோபர் 26ம் தேதி பரி. லூக்கா ஆலயம் என்று பெயர் பெற்றுப் பிரதிஷ்டையானது. அகப்பைக்குளம் கோபுரவேலை 1929இல் முடிவுற்றது.

சில ஆலயங்கள்

பிள்ளையன்மனைச் சபையார் 1920இல் தங்கள் ஆலயக் கோபுரவேலையை ஆரம்பித்துக், கொஞ்சம் கொஞ்சமாய் அப்பெரும் பணியைச் செய்து 1930 டிசம்பர் 24இல் பிரதிஷ்டை செய்தார்கள். செம்பூர் பரி. மேரியின் ஆலயம் 1932ல் கட்டப்பட்டு (1–12–1932ல்) பிரதிஷ்டையானது. வடக்கூர் ஆலய வேலை 1928 கடைசி மாதங்களில் ஆரம்பமாகி, 1931 நவம்பர் 14ல் சகல பரிசுத்தவான்களின் ஆலயம் என்ற பெயருடன் திவ்ய ஆராதனைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வித உயர்ந்த தேவாலயக் கட்டுமான வேலைகளைக் கண்ணுற்ற மகாகனம் டப்ஸ் அத்தியக்ஷரவர்கள் 1927ம் வருஷ ரிப்போர்ட்டில் மிகுந்த குதூகலத்துடன் "* செங்கலாலும் கல்லாலுமான இக்கிறிஸ்தவ சாக்ஷிக்கட்டடங்கள் பனைகளுக்கு மேலாய்த் தங்கள் தலைகளை என்ஞான்றும் உயர்த்தி விளங்குவதாக. மக்களும் அவைகளில் கர்த்தரைப் பரிசுத்தத்தோடும் அலங்காரத்தோடும் வணங்க அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்வார்களாக" என்று ஆசீர்வதித்தெழுதினார்கள்.

ஆலயக் கட்டுமான விஷயங்களில் கோவில்பிள்ளை ஐயர் காட்டிய உற்சாகமும் ஊக்கமும் அஃதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் காலத்தில் ஆண்களின் கல்வி விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்து அநேக பள்ளிக்கூடங்களை முன்னேற்றமான நிலைமைக்குக்கொண்டுவந்தார்கள். 1923ல்

கிராமக் கலாசாலைகள்

வாழையடியில் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடம் 1924ல் சர்க்கார் அங்கீகாரம் பெற்றது. அகப்பைக்குளம் கிராமப் பள்ளிக்கூடம் அவ்வூர்வாசியான டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சாமுவேல் பாலையா B. A., L. T. அவர்கள் பிரயாசத்துடன் சவதரித்துதவிய ரூ. 2000 செலவில் புதுக்கட்டிடம் கட்டி ஸ்திரப்படுத்தப்பட்டது. தவிர 1926ம் வருஷத்தில் இதுகாறும் T. D. C. ஆதீனத்திலிருந்த ஆழ்வார்திருநகரி உயர்தர ஆரம்பப் பாடசாலையை சர்க்கின் ஆதீனத்திற்குள் எடுத்தார்கள். இக்கல்விச்சாலையின் சரித்திரத்தை ஆங்காங்கே கவனித்தோம். இது 1857இல் கேமரர் ஐயரால் ஸ்தாபிக்கப்பட்டு, 1879ல் மர்காஷிஸ் ஐயரால் நடுத்தரப் பாடசாலையாகவும், நான்கு வருஷம் சென்றபின் (1883) உயர்தரப் பாடசாலையாகவும் உயர்த்தப்பட்

* T. D. C. Report 1927 p. 11.

டது. ஆனாலும் சுமார் பத்தொன்பது வருஷச் சேவைக்குப்பின் (1904) பல காரணங்களையிட்டு இரண்டாந்தர உயர்தரக் கலாசாலையாக (Incomplete Secondary School) குறைக்கப்பட்டு, 1913ல் ஸ்டேப்ளி ஐயரால் உயர்தர ஆரம்பப் பள்ளியாக்கப்பட்டது. 1915 முதல் கனம் E. யோசேப்பு ஐயர் இதன் முதல் தலைமை ஆசிரியரானார். இப்பள்ளி சர்க்கின் ஆதீனத்திற்குட்பட்ட பின்பும் ஐந்து வருஷம் யோசேப்பு ஐயரின் தலைமையின் கீழ் சிறந்த பணியாற்றியது.

•

**உடையார்குளம் கலாசாலை**

உடையார்குளம் சபையார் இலங்கையிலுள்ள தங்கள் சகோதரர் ஒத்தாசையால் ரூ. 6000 செலவில் 1929ம் ஆண்டில் தங்களூர் பள்ளிக்கூடத்திற்கென்று ஓர் உறுதியான கட்டிடம் கட்டினர். கல்வி விஷயத்தில் இவ்வளவு ஊக்கத்தை அச் சபையில் கண்ட கனம் கோயிற்பிள்ளை ஐயரவர்கள் அதை மிகவும் பாராட்டி, இதுவரை தொடக்கப்பள்ளியாயிருந்த அக் கல்விச்சாலையை 1930 முதல் உயர்தர ஆரம்பப் பாடசாலையாக உயர்த்தினர். அதுமுதல் உடையார்குளத்திற்கும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் அப்பள்ளி மேலான கல்விச் சேவையாற்றிவருகிறது.

**போதனாமுறைப் பயிற்சிசாலை**

1926ம் வருஷத்தில் நாசரேத் தன் ஸ்தாபனங்களில் விசேஷித்தவற்றில் ஒன்றான ஆண்கள் போதனாப் பயிற்சிசாலையை இழக்க நேரிட்டது. இதன் சரித்திரத்தையும் இப்பக்கங்களில் ஆங்காங்கே கண்டோம். 1925ம் வருஷத்தில் அத்தியக்ஷாதீன நிர்வாகக் கழகத்தார் பண நெருக்கடி காரணமாய் இத்தாபனத்தை மூடிவிட்டு, இதைப் பாளையங்கோட்டை போதனாமுறைப் பயிற்சிசாலையுடன் இணைத்துவிட தீர்மானித்தனர், இது மிகவும் துக்கமான காரியமே. இக்கலாசாலை 1818ம் வருஷத்தில் கனம் ஜேம்ஸ் ஹாப் ஐயர் நிறுவின நாசரேத் பிரிப்பராண்டி கல்விச்சாலையின் பின் தோன்றல். எனவே இதன் பிறப்பு அவ்வருஷமே எனலாம். அக்காலத்தில் (1926) இதன் ஆதீன கர்த்தாவாயிருந்த கனம் P. C. கெர்ஸ்லேக் ஐயர் இதுபற்றி எழுதும் வாசகம் ஒருவாறு அக்கால மக்களின் எண்ணத்தைக் காட்டுமாதலின் அதை மொழிபெயர்த்துள்ளேன். “பல வருஷங்களாய் நிலைத்து நின்ற ஒரு கல்விச்சாலை முடிவடைவதைப் பார்ப்பது பெருந்துயரம்தான். ஆனால் உதவித் தொகை உயராமல், வருஷந்தோறும் செலவுமட்டும் பெருகும்போது அது அவசமான ஓர் நடபடிக்கையே. பாளையங்கோட்டைப் போதனா பயிற்சிசாலை இனி அத்தியக்ஷாதீனப் போதனாசாலையாகும். திருநெல்வேலி (திருச்சபை)யும் அதன் ஸ்தாபனங்களும் ஏக அத்தியக்ஷாதீனத்திற்குட்படும் திட்டத்தில் இதுவும்

ஒரு படி என்று எண்ணி நாசரேத் தன்நஷ்டத்தை மறந்து ஆறுதலடைந்து கொள்ளவேண்டியது" *

ட்ரெயினிங் ஸ்கூல் எடுபட்டதின் காரணமாய் அநாதையாகிவிட்ட அப்பியாசப்பள்ளி (Model School) கோவிற்பிள்ளை ஐயர் ஆதரவை நாடி நின்றது. சர்க்கிள் கமிட்டியாரும் 1926 ஏப்ரில் 1ம் தேதி முதல் அதைக் கஸ்பா ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் தம் ஆதீனத்தில் ஏற்றுக்கொண்டனர். இப்பள்ளியின் சரித்திரத்தையும் இப்புஸ்தக வாயிலாய் நேயர் அறிவாரெனினும் அதைத் தொகுத்து இவண் எழுதுவது நன்று. இது 1820-ல் ஹாப் ஐயரால் ஸ்தாபிக்கப்பட்டு

**கஸ்பா பள்ளிக்கூடம்**

தவசியப்பன் உபாத்தியாரால் நடத்தப்பட்டது. இதனுடன் பிறந்த பெண் பள்ளிக்கூடம் 1826க்குள் மூடப்பட்டதெனினும், இதன் சரித்திரத்தில் அவ்வித சந்தர்ப்பம் சேர்ந்ததில்லை. ஸ்கார்பரோ அம்மாள் இதனோடு போர்டிங்கை இணைத்தார்கள். 1882-ல் கனம் மர்காஷிஸ் ஐயர் ஆண்கள் மத்திப பாடசாலையை ஸ்தாபித்ததும் இப்போர்டிங்கையே உபயோகிக்கலானார். டிரெயினிங் ஸ்கூல் ஏற்பட்ட காலத்து இது மாடல் ஸ்கூலாகி, பின் 1926ல் இப்போது காணும் 'கஸ்பா எலிமென்டரி பாடசாலை' யாகிவிட்டது. ஆகவே தற்கால நாசரேத்தின் ஸ்தாபனங்களெல்லாவற்றிலும் மிக மிகப் பழமை வாய்ந்தது இக்கல்விச்சாலையே.

மேற்கண்டபடி ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்தமையாலும், கஸ்பா, ஆழ்வார்திருநகரிப்பாடசாலைகளைத் தங்கள் ஆதீனத்திற்குட்படச் செய்ததினாலும், நாசரேத் சர்க்கிள் கமிட்டியார் அக்கஷ்ட காலத்தில் அதிகப் பணச் செலவைத் தங்கள் பொறுப்பில் இழுத்துக்கொண்டார்கள். எனவே 1927 இலிருந்து மிகுந்த பண நெருக்கடி இச்சர்க்கிளிலுண்டாயிற்று. இந்நெருக்கடியான சமயத்தில் பிள்ளையன்

**G. V. ஞானமுத்து ஸ்கூல்**

மனைப் பள்ளிக்கூடக் கட்டடம் முற்றிலும் புதுப்பித்தாலன்றி உபயோகிக்கக் கூடாதபடி பழுதுற்றது. இவ்வாபத்தில் உதவும் நண்பனாகப் பிள்ளையன்மனை ஸ்ரீமான் G. V. ஞானமுத்து B. A., L. T., அவர்கள் முன்வந்து அப்பள்ளிக்கூடம் தம் பெயரால் அழைக்கப்படுவதற்குச் சர்க்கிள் கமிற்றியார் அநுமதிப்பார்களேல் தாமே அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள உடன்பட, கமிற்றியாரும் ஒப்புக்கொண்டனர். ஸ்ரீ G. V. ஞானமுத்து தமது வாக்கின் பிரகாரம் அக்கட்டின வருஷ முடிவுக்குள் நிறைவேற்றவே, அப்பள்ளிக்கூடமும் 'T. D. T. A., S. P. G., G. V. ஞானமுத்துப் பாடசாலை' என்ற பெயர் பெற்றது.

---

* P. 69. T. D. C. Report 1925

போதனைமுறைக் கல்விச்சாலையை இழந்ததினால் தன் மகிமை குன்றிய நாசரேத் கடவுளிடமிருந்து வேறொரு வரத்தை கோவில்பிள்ளை ஐயர் மூலமாய்ப் பெறுவது அவரது திருவுளச் சித்தமாயிற்று. மர்காஷிஸ் ஐயரால் திறவப்பட்டு, அவர் காலத்தே மூடப்பட்ட ஆண்கள் உயர்தரக் கலாசாலையை மீண்டும் ஸ்தாபித்துவிட ஐயரவர்கள் துணிவு கொண்டு, 1929 ஜனுவரியில் கூடின சர்க்கிள் கமிற்றியில் உயர்தரக் கல்விச்சாலை ஸ்தாபிக்படுமாயின் வருஷந்தோறும் ரூ. 1000 அப்பள்ளிக்கூடத்திற்கு உதவித்தொகை கொடுக்கவேண்டும் என்று பிரேரபித்தனர். கமிற்றியும் இணங்கியது. ஜூலை சர்க்கிள் கமிற்றியில் உயர்தரப் பாடசாலைக் கட்டடத்திற்காக ரூ. 10,000 கொடுக்கவும், கட்டடம் கட்டுமட்டும் எலிமென்றரி ஸ்கூலின் [தற்போது இடிந்து கிடக்கிறது] வடபாகம் தவிர மற்றப் பாகங்களை உபயோகிக்க அனுமதி தரவும், அப்பள்ளிக்கூடத்தின் பெஞ்சு முதலான பணிமுட்டுகளைக் கொடுத்துதவவும், வருஷாந்தரச் செலவுக்கு ரூ. 1500 உதவியளிக்கவும் வேண்டி ஐயரவர்கள் ஒரு வேண்டுகோள் விடுக்க, சர்க்கிள் கமிட்டியார் அதற்கும் சம்மதம் கொடுத்தார்கள். ஆகவே இனி 1930 மே 31-ம் தேதிக்குள் ரூ. 6500 அத்தியக்ஷாதீன நிலைவரக் கமிட்டியாருக்கு டிப்பாசிட் செய்யவேண்டிய நிபந்தனை எற்பட்டது. இப்பெருந்தொகையை குறுகின காலத்திற்குட் செலுத்துவதற்கு ஐயரவர்கள் எடுத்த பிரயாசம் கொஞ்சமல்ல. ஆயினும் ரூ. 2000 தட்டுப்பாடாயிற்று. இதைச் சம்பாதிக்க வழியொன்றுமில்லை. இச்சமயத்தில் சமய சகாயனாக ஸ்ரீமான் M. S. அப்பாத்துரை தம் சொத்தை ஈடுவைத்து ரூ. 2000 கடனாகத் தந்துதவினார். அவரது இவ் வுதாரத்துவத்தை இன்றும் மக்கள் மெச்சிப் பேசுகின்றனர். அன்னார் அவ்வண்ணம் செய்திராவிடின் உயர்தரப்பள்ளி அவ்வருஷம் ஸ்தாபிக்கப்பட்டிராது. இந்நன்றியை மறவாது உயர்தரப்பள்ளி மண்டபத்தில் (Hall) அவரது உருவப்படத்தை கலாசாலை அதிகாரிகள் தொங்கவிட்டு கௌரவித்துள்ளதை நாமறிவோம். நிபந்தனைப்படி ரூ. 6500 செலுத்தப்படவே 1930 ஜூனில் உயர்தரக் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு, 4-ம் பாரம் திறக்கப்பட்டது. திருமதி எல்லா. M. ராண்டல் அம்மை மானேஜாராயிருக்க ஸ்ரீமான் J. பொன்ரத்தினம் B. A., L. T., முதல் தலைமையாசிரியரானார்.

ஆண்கள் உயர்தரக் கல்வி நிலையம்

இக்காலத்தில் கிராமச் சபை ஊழியருக்கென்று (உபதேசிமார்) பிள்ளையன்மனை, வாழையடி, அகப்பைக்குளம் முதலிய ஊர்களில் வசதியான வீடுகளும் கட்டப்பட்டன.

சபை ஊழியத்திலும் பயன்மிக்க வேலை நடைபெற்றது. நாசரேத் சபைக் குரு 1924 முதல் சேகரத் தலைவராகிவிட்டமையின், அவருக்கு

உதவியாக கனம் I. N. S. பொன்னுசாமி ஐயர் அனுப்பப்பட்டார். பொன்னுசாமி ஐயரே தற்கால நாசரேத்தின் முதல் துணை குரு (Assistant Priest). மறு வருஷத்தில் உடையார்குளம் பாஸ்ற்றரேற் உடையார் குளம் ஆழ்வார்திருநகரி, செங்குளம், செம்பூர், மழவைப்பட்சேரி, குறிப்பங்குளம் பட்சேரிக் கிராமங்களையுடையதாய்ப் புதிதாய் ஏற்படுத்தப் படவே, இவர் அதன் (முதல்) பாஸ்ற்றரேற் சேர்மனாக மாற்றப்பட்டார். அடுத்த வருஷமே இப்புதிய பாஸ்ற்ற ரேற்றுக்கோர் கஷ்டகாலமுண்டாயிற்று. இப்பாஸ்ற்ற ரேற்றைச்சேர்ந்த மழவையில் சில வருஷங்களுக்குமுன் தான் கிறிஸ்துமார்க்கம் வேரூன்றினது என்று பார்த்தோம். இப்புதுக் கிறிஸ்தவர்கள் 1926-ம் வருஷத்தில் புடமிடப்பட்டார்கள். அவர்களுக்கும் அவ்வூர் தேவமாருக்குமிடையில் மனஸ்தாபம் ஏற்பட்டு, அது ஒரு கொடிய துன்பமாய் வளர்ந்தது. கிறிஸ்தவர்கள் தடியடிப் பிரயோகங்களுக்கும் விபாஜ்ய விசாரணைகளுக்கும் உள்ளானார்கள். அவர்கள் வீடுகளும் தீக்கிரையாயின. நாசரேத் சர்க்கிள் கமிற்றிமார் ஜில்லா கலெக்டரிடமும் மற்றுமுள்ள அதிகாரிகளிடமும் மன்றாடினதின்பேரில், சின்னாட் கழித்துத் துன்பம் ஓய்ந்தது. இத்துன்பத்தீயிலும் மழவைக் கிறிஸ்தவர்கள் மறுதலி யாமல் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நின்றார்கள்.

மழவைத் துன்பம்

கோவில்பிள்ளை ஐயர் காலத்தில் நாசரேத்தின் துணை குருமாராகச் சேவை செய்தவர்கள் மேற்சொன்ன பொன்னுசாமி ஐயரும் (1924—25), *ஜாண் ஏசுதாசன் ஐயரும் (1925–28), S. D. மதுரம் ஐயரும் (1928–31), S காலேப் ஐயருமே (1931—33). பிள்ளையன்மனைக் குருமார் S. R. ஞானக்கண் ஐயரும் (1924—26), M. பிரெதெரிக் ஐயரும் (1926–31), வேதசாஸ்திரக் கல்லூரித் தலைவர் †S. C. நீல் ஐயருமாம். உடையார்குளத்தில் I. N. S. பொன்னுசாமி ஐயர் (1925—27), S. காலேப் ஐயர் (1927—31), M. பிரெதெரிக் ஐயர் (1931—33) ஆன மூவரும் குருத்துவப்பணி செய் தனர். நாசரேத் பாஸ்ற்றரேற்றில் முதலைமொழி, கீழவெள்ளமடம், ஆசீர்வாதபுரம், வகுத்தான்குப்பம் முதலியன சேர்ந்திருந்தன. வருஷத்திற் கொருமுறை சேகர ஊழியருக்கு ஆவிக்குரிய ஏகாந்தம் (Retreat) குல சேகரப்பட்டினம், தோப்பூர், குற்றாலம் முதலிய இடங்களில் நடைபெற லாயிற்று. இந்த நல்ல வழக்கம் வெகுகாலம் நம் சர்க்கிளில் நடந்து வந்தது.

குருமார்

தாய்மார் சங்கமும் மிக்க வலியுற்று ஒவ்வொரு சபையிலும் அதன் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டன. நாசரேத் தாய்மார்சங்கமானது 'பெரிய

* Now Circle Chairman, Megnanapuram. † Later Bishop S. C. Neill

தாய்மார் சங்கம்' (Senior Mothers) 'சிறிய தாய்மார் சங்கம்' (Junior Mothers) என இரு பிரிவுகளாய் நடத்தப்பட்டது.

கிராம அபிவிர்த்தியிலும் ஐயாவவர்கள் மிகுந்த அனுதாபம் கொண்டிருந்தார்கள். அவர்கள் நாசரேத்திலிருந்த காலமெல்லாம் கஸ்பா பஞ்சாயத்து பிரசிடென்ருகவிருந்து கிராமத் தெருவிளக்குகள், கிராமச் சுத்தம், சுகாதாரம் முதலிய சீரமைப்புக்களில் ஊக்கம் செலுத்தினர்கள். ரெயில்வே பீடர் ரோட் (Railway feeder-road) இவர்கள் காலத்தில் அமைக்கப்பட்டது. பஞ்சாயத்து போர்டுக்குட்பட்ட மீன் கடை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. தவிரவும் நாசரேத் பஞ்சாயத் நியாயஸ்தலமும் ஸ்தாபிக்கப்பட்டு நீதிக்கும் நேர்மைக்கும் இருப்பிடமாய் விளங்கா நின்றது. துவக்கத்தில் பிற கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட் வியாஜ்ஜியங்களிற் சிலவும் தங்களுக்கு நியாயங் கிடைக்கக்கூடியது நாசரேத்திலேயே என்று நம்பின வாதி பிரதிவாதிகளின் அபேக்ஷைக்கிணங்க, ஜில்லா முனிசீப் கோர்ட்டாரின் உத்தரவுப்படி இக்கோர்ட்டுக்கு மாற்றப்பட்டனவென்று அறியலாகிறேம். இவ்வாறு புகழுடன் தொண்டுசெய்து நின்ற இக்கச்சேரியும் க்ஷீணதசையடையவே இது மூடப்பட நேர்ந்தது நம் நகருக்கேற்பட்ட ஒரு குறையே. கீழ்க்கண்டோர் அதன் அக்கிராசனராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கள் பதவிக்காலங்களில் நியாயம் வழங்கினர்.

**பஞ்சாயத் கோர்ட்**

ஸ்ரீ மாயாண்டி அவர்கள் கி. மு.
,, தேவவரம் உபாத்தியாயர் அவர்கள் B. A.
,, M. S. அப்பாத்துரை அவர்கள்
,, J. N. நாயகம் ,,
,, போதகம் கோயில்பிள்ளை ,,
,, காளிமுத்து ,,
,, சாமுவேல் ,,

நாசரேத் இந்திய கிறிஸ்தவ பிராவிடென்ட் பண்டும் இக்காலத்தில் மேம்பாடுடன் விளங்கிற்று. கனம் G. T. செல்வின் ஐயரவர்கள் அக்கிராசனராகவும், ஸ்ரீ C. S. கோலாப் B. A., L. T. அவர்கள் காரியதரிசியாகவுமிருந்த இக்காலத்தில் (1915—1933) புதிய அலுவலகக் (office) கட்டடமொன்று ரூ. 1750-க்கு வாங்கப்பட்டது (1922). இன்றும் அப்பண்டின் காரியாலயம் அக்கட்டிடத்திலேயே நிறுவப்பட்டுள்ளது.

வேத சாஸ்திரக் கலாசாலையின் தலைவராக விருந்த கனம் C. G. ஸ்டேப்ளி ஐயர் 1924-ல் ராஜினமாக் கொடுத்தபின், சுமார் ஒரு வருஷம் D. பெரியநாயகம் ஐயரே அதன் தலைவராயிருந்தார். 1925-ல் தூத்துக்குடியி

**கேர்ஸ்லேக் ஐயர்**

விருந்து கனம் பெர்ஸி சார்ல்ஸ் கெர்ஸ்லேக் ஐயர் B. A. அதன் தலைவரானார். இவர் 1887-ல் லண்டனில் பிறந்து 1912, 1913-ம் வருஷங்களில் பரி. ஆல்பன்ஸ் பட்டணத்து அத்தியக்ஷரிடத்தில் உதவிக்குரு, குருப்பட்டங்கள் பெற்று சிக்வெல், டில்பரி என்றவிடங்களில் குருத்துவ ஊழியம் செய்தபின், 1916-ல் ஸ்டேப்ளி ஐயர் சீமைக்கு ரஜாவில் சென்றிருந்தபோது நாசரேத்தில் ஒரு வருஷம் ஊழியம் செய்தார். பின்னர் ராமநாதபுரம் தூத்துக்குடி என்றவிடங்களில் மிஷனெரியாயிருந்து 1925-ல் நாம் மேலே சொன்னபடி வேத சாஸ்திரக் கல்லூரித் தலைவராய் வந்தார். இரண்டரை வருஷங்களாக வேலை பார்த்துக்கொண்டிருக்கையில் காலரா வாய்ப்பட்டு, சுகமாகியும் மிகுந்த பலவீனப்பட்டமையால், தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றமுடியாது ரஜா எடுத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றார். அவருக்குப் பதிலாக ராமநாதபுரத்திலிருந்த கனம் ஜாண் கிங்டன் ஐயர் M. A. அனுப்பப்பட்டார். இவர் ஒருவருஷம் தலைமைப்பதவி தாங்கி, குருத்துவ மாணவரின் பயிற்சி முடிந்தவுடன் ராமநாதபுரம் சென்றுவிடவே, 1927-ல் மறுபடியும் ஒருவருஷம் கெர்ஸ்லேக் ஐயரே தலைவரானார். ஆனால் 1928-ல் குருத்துவப் பயிற்சி வகுப்பு மூடப்பட்டதினால் இவர் சென்னை அநாதாச்ரமக் குருவாயமைந்தார். அதுமுதல் குருப்பட்ட வகுப்புகளும் நிறுத்தப்பட்டன. ஆதலின் 1928-ம் வருஷம் முதல் D. பெரியநாயகம் ஐயர் தலைமையில் இவ்வித்தியாசாலை உபதேசிமாரைப் பயிற்றுவிக்கமட்டும் உபயோகிக்கப்படலாயிற்று. இவருடன் கனம் ஜாண் மாணிக்கவாசகம் ஐயர் L. Th. ஆசிரியரானார். தெய்வசித்தம் இக்கலாசாலையின் சீரிய உபயோகம் இவ்வித அகால முடிவெய்துவதன்று. எனவே 1930-ல் மறுபடியும் இது ஓர் குருப்பட்டப் பயிற்சிசாலையாகக் கனம் ஸ்டீபன் நீல் M. A. ஐயரால் மறுபடியும் திறக்கப்பட்டது. அவருக்குதவியாக ஏற்கெனவே தலைவராகவிருந்த D. பெரியநாகம் B. A. ஐயரும், ஜாண் மாணிக்கவாசகம் L. Th. ஐயரும் ஆசிரியராயமர்ந்தார்கள். அடுத்த வருஷத்தில் கனம் A. M. ஹாலிஸ் M. A., B. D.* ஐயரும் கலாசாலை ஆசிரியப்படையைச் சேர்ந்தார். ஏறக்குறைய இவ்வத்தியாயச் சரித்திர கால முடிவுவரை இந்நால்வரும் இவ்வித்தியாசாலையின் பணியிலீடுபட்டிருந்தனர்.

கனம் கோவில்பிள்ளை ஐயரவர்கள் 1932-ம் வருஷத்தில் இடையன்குடிக்கு மாற்றப்பட்டார்கள். இவர்களது அருஞ்சேவையைப் பெற்ற நாசரேத் மக்கள் இதுகேட்டு வருந்தினார்கள் என்று சொல்லத்தேவை

---

* Now Most Rev. A. M. Hollis, M. A., B. D. Bishop of Madras and Moderator of the Church of South India.

யில்லை. தங்கள் நன்றியறிதலையும் அன்பையும் ஏற்றவாறு ஐயரவர்களுக்குத் தெரிவித்துச், சபையார் அவர்களிடத்தில் பிரியாவிடை பெற்றார்கள்.

இடையன்குடியிலும் கோவில்பிள்ளை ஐயரவர்களது அழியாப் புகழ் நிற்கும்வண்ணம் கால்ட்வெல் நூற்றாண்டு ஞாபகார்த்த உயர்தரப் பாடசாலையை நிறுவி. அருந்தியாகத்துடன்சேவை செய்யுங்கால் அதை நன்கு மதித்த அத்தியக்ஷாதீன அதிகாரிகள் அவர்களைத் தென் திருச்சபைக் கவுண்சிலுக்கு அக்கிராசனராக்கினர் (1934). மகாகனம் நீல் அத்தியக்ஷா வர்களும் 1940-ல் அத்தியக்ஷாலயக் கௌரவக் கனோன்களில் ஒருவராக அவர்களை உயர்த்திக் கண்யப்படுத்தினர்கள்.

**கோவில்பிள்ளை ஐயர் மரணம்**

வருங் கால அத்தியக்ஷராக அவர்களை எதிர்நோக்கிநின்ற அத்தியாக்ஷாதீனம், இத்தன்மையதான சீர்விளங்கிய ஐயரவர்கள் நெய்யூர் ஆஸ்பத்திரியில் 1942 ஜூலையில், தான் பூவுலகில் சேவித்த அருள்நாதரைப் பரத்திலும் சேவிக்கச் சென்று விட்ட எதிர்பாராத் துயரச் செய்தியைக் கேட்டுக் கலங்கியது. நாசரேத் நகரும் துக்கத்திலாழ்ந்தது. கனம் கனோன் மர்காஷிஸ் ஐயருக்குப் பின், நாசரேத் சேகரத்தை நன்மைகள் பல வழங்கிப் பெரும்புகழுடன் பரிபாலித்த பெருமை கனம் கனோன் D. கோவில்பிள்ளை ஐயரவர்களுக்குரித்தா மன்றோ? ஐயரவர்களுடைய சரீரம் இடையன்குடிக்குக் கொண்டு வரப் பட்டு, அவ்வூர் கல்லறைத் தோட்டத்தில் திருக்குமாரன் வரும் நாளை எதிர் நோக்கிச் சேமிக்கப்பட்டுள்ளது.

* * * * * *

கோவில்பிள்ளை ஐயர் மாற்றப்பட்டபின் பாளையங்கோட்டையில் இந்திய மிஷனெரிச் சங்கக் காரியதரிசியாகவிருந்த கனம் S. S. மோசே ஐயரவர்கள் இச்சேகர முதலாளியாக வந்தார்கள். மோசே ஐயரும் இவ் வட்டாரத்திற்குப் புதிதல்ல.

**கனோன் S. S. மோசே ஐயர்**

ஏனெனில் இவர்கள் 1918 முதல் 1920 வரை உதவிக்குருவாகவும், குருவாகவும் நாசரேத்தில் பணியாற்றியபின், 1921-ம் வருஷத்தில் பிள்ளையன்மனைச் சேகர குருவாகவுமிருந்தனர். இவர்கள் இங்கு சர்க்கிள் சேர்மனாக மாற்றப்பட்டு வந்த சில நாட்களில் ஆண்கள் ஹைஸ்கூல் 6-ம் பாரம் திறக்கப்பட்டுப் பூரண உயர்கலாசாலையானது (1932). கிராமங்களில், செம்பூரில் நடந்து வந்த ஒரு இந்துப் பள்ளிக்கூடம் மோசே ஐயரவர்களால் சர்க்கிளுக்கு வாங்கப்பட்டு T. D. T. A. பாடசாலையானது. 1935-ல் நாசரேத் மணல்மேட்டிலும் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கத் தீர்மானித்து, திருச்சி டாக்டர் A. மதுரம் அவர்கள் உவந்தளித்த உதவித்தொகை ரூ. 500-இல் ரூ 441-க்கு 50 செண்டு நிலம் வாங்கப்பட்டு, அவ்வருஷம் நவம்பர் மாதத்திற்குள்



கனோன் D. கோவில்பிள்ளை ஐயர்



கனோன் S. S. மோசே ஐயர்


# நான்கு சேகர அக்ராசனர்



கனம் ஜான் சாமுவேல் ஐயர்



கனோன் S. R. ஞானக்கண் ஐயர்




மழவை ஜெபாலயம்



வெள்ளைமடம் — பரி. மேரி ஆலயம் -
உட்பிரகாரம்

பிரதிஷ்டை 4—2—1907



பிள்ளையன்மனை வடக்கூர் சகல
பரிசுத்தவான்களின் ஆலயம்

பிரதிஷ்டை 14—11—1931

பள்ளிக்கூடக் கட்டடம் ரூ. 929—8—0 செலவில் நிர்மாணிக்கப்பட்டது. மேலும் கனம் மர்காஷிஸ் ஐயரால் 1886—ம் வருஷமே ஸ்தாபிக்கப்பட்டிருந்த வகுத்தான்குப்பம் ஆரம்பப்பாடசாலையும் இப்புதுப் பள்ளிக்கூடத்துடன் இணைக்கப்பட்டு, இது டாக்டர் மதுரம் பேரால் T. D. T. A. Dr. மதுரம் ஆரம்பப் பாடசாலை என்று அழைக்கப்படலாயிற்று.

டாக்டர் மதுரம் ஸ்கூல்

சுற்றுப்புறவாசிகள் இக்கல்வி நிலையத்தை மிகுவாய்ப் பயன்படுத்த ஆரம்பிக்கவே, பள்ளிக்கூடம் மேலும் விரிவுறும் காலத்திற்கென்று*1939-ம் வருஷத்தில் (கனம் ஜாண் சாமுவேல் ஐயரவர்கள் காலத்தில்) ரூ. 950 செலவில் 50 செண்டு பூமி வாங்கப்பட்டது. இவ்வாறே ஆழ்வார்திருநகரியிலும் இடவசதியை முன்னிட்டு அவ்வருஷமே (1939) ரூ. 1050-க்கு ஒரு பெரிய வீட்டை வாங்கி அப்பள்ளிக்கூடத்தை அக்கட்டடத்தில் வைத்து நடத்தலானார்கள்.

சர்க்கிள் பணஸ்திதி மிகமோசமான நிலையிலிருந்ததாகவும், சில சபைகளில் சமாதானக்குறைவேற்பட்டு சபை ஊழியருக்கும் குருக்களுக்குமிடையில் பல கஷ்டங்களேற்பட்டதாகவும், உடையார்குளம் சபையில் சிலர் ரோமானித்த சபையையும், நாசரேத்தில் மற்றும் சிலர், ஏற்கெனவே கோவில் பிள்ளை ஐயர் காலம் முதல் இவ்வூரில் பிரசாரம் செய்து வந்த பெந்தேகோஸ்தேக்கூட்டத்தாரையும் சேர்ந்து கொண்டதாகவும் சர்க்கிள் நடபடிப் புஸ்தகத்தினின்று நாமறியக்கிடக்கின்றது எனினும் சபையின் ஆவிக்குரிய நல்வாழ்வுக்கான புத்துயிர்க் கூட்டங்கள் பல சென்னை கனம் பரமானந்தம் ஐயரவர்களைக்கொண்டு நடத்தப்படலாயின. அக்கூட்டங்களினாலான பலன் மிகுதி. சற்று தளர்ந்து நின்ற சபையில் மறுபடியும் உற்சாகமேற்பட்டது.

இக்காலத்திலும் சில தேவாலயங்கள் கட்டப்பட்டன. அவை 1933-ல் தோப்பூரிலும்*, அடுத்த வருஷம் தைலாபுரத்திலும், உடையார்குளம் K. S. பாலையா அவர்களின் நன்கொடை சுமார் ரூ. 500 உடன் இன்னும் பல உதவித்தொகைகளால் குறிப்பன்குளம் பட்சேரியிலும்† கட்டப்பட்ட ஆலயங்களே. தைலாபுரம் தேவாலயம் பரி. மிகாவேலின் ஆலயம் என்ற பெயருடன் 1—11—1934-இலும். குறிப்பன்குளம் கோவில் தேவமாதா ஆலயம் என்னும் பெயர் கொண்டு 18—2—1937-இலும் பிரதிஷ்டையாயின.

கனம் மோசே ஐயரவர்கள் காலத்திய முக்கிய விசேஷம் வேதநகர்** என்றவோர் புதிய சபை தோன்றலாகும். 1935-ம் வருஷத்தில் மேல

---

* ஆலயம் புதுப்பிக்கப்பட்டது.

† இச்சபை மிகுதியாய் கனம் நீல், அருள்தங்கையா ஐயர்மாரின் ஊழியத்தின் பலனும்.

** இச்சிறுசபை கனம் நீல் ஐயரின் அரவணைப்பிலிருந்துவந்தது.

வெள்ளமடத்தில் சுமார் 45 ஆத்துமாக்கள் ஆயத்தக்காரரானார்கள். அவர்கள் குடியிருப்புக்காகவும் ஆலயமொன்று கட்டுவதற்கெனவும் உடையார்குளம் ஸ்ரீ மா. வேதநாயகம் அவர்களது உதாரத்துவ நன்கொடைப்பணத்தைக்கொண்டு அவ்வூருக்கு மேற்கில் வாங்கப்பட்ட பூமியில் புதுக்கிறிஸ்தவக்குடியேற்றமுண்டாயிற்று. அதுவே (அவர் பெயரால்) வேதநகர் எனப்பெயர் பெற்று விளங்கும் சிறுசபை. இந்நாற்பத்தைவரில் 38 பேர் 1936-ம் வருஷத் துவக்கத்தில் ஞானஸ்நானம் பெற்றனர்.

வேதநகர்

இத்துடன் இக்காலத்தில் நாசரேத் நகரில் தோன்றிய பரிசுத்த யோவான் சங்கீதசபாவைப்பற்றியும் இரண்டொரு விஷயங்கள் எழுதாவிடின் இக்காலச்சரித்திரம் முற்றுப்பெற்றதாக எண்ண முடியாது. எனின் அது பற்றி இவண் சில கூறப்புகுந்தேன். இச்சபை சங்கீதப்பிரியர்களான சில வாலிபர்களைத் தன் அங்கத்தினராகவுடையது. ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் ஸ்ரீ G. ராஜரத்தினம் B. A.* அவர்களால் ஊக்கமூட்டப்பெற்று 1932-ல் உருவாயிற்று. அங்கத்தினர் பலவித ஐரோப்பிய வாத்தியக்கருவிகள் கொண்டு மேனாட்டுச் சங்கீதங்களை இனிமையாய் வாசிக்கவும் பாடவும் கற்று, இப்பிராந்தியங்களில் தங்களுக்கு நிகர் எவருமின்றித் தனிப்பெருமையுடன் விளங்கினர். சில வருஷங்களாக மேனாட்டுச் சங்கீத ஞானத்திற்கும், ஆலய ஆராதனைகளில் பாடகர் பணிக்கும் சிறந்த சேவையாற்றிவந்த இக்கலாசபை ஏதோ சில காரணங்களால் தன் அங்கத்தினரால் கைவிடப்பட்டு முறிந்துவிட்டதெனினும், 1938-ம் வருஷத்தில் மறுமலர்ச்சி பெற்றுப் புத்துயிர் கொண்டது. முதலில் ஸ்ரீமான் A. செல்லையாவும், பின்னர் ஸ்ரீ S. கோயில்பிள்ளையும், 1940 முதல் ஸ்ரீமான் யோவேல் இஸ்ரவேலும் அதன் தலைவர்களாய் ஏற்பட்டுத்திறமையுடன் நடத்தி வந்திருக்கின்றனர். சபாவின் காரியாதிகளில் ஆதியிலிருந்தே சம்பந்தப்பட்டிருந்த ஸ்ரீ G. ராஜரத்தினம் B. A. அவர்களும், சங்கீத நிபுணர் J. தாம்சன் F. T. C. L., M. R. S. T., அவர்களும், சங்கீதக்கலாவல்லுனர் தஞ்சை டாக்டர் A. J. பாண்டியன் A. R. P. S. அவர்களும் அதன் பரிபாலனர்களாயமைந்தார்கள். தற்காலம் இது நாசரேத் பரி. யோவான் ஆர்கெஸ்ட்ரா (Orchestra) என்ற பெயருடன் நடைபெற்றுவருகின்றது. சங்கீத உலகில் இதன் அங்கத்தினரது திறமையால் நசரையின் புகழ் கமழ்கிறதுடன், ஆலயப்பணியிலும் இவர்கள் ஈடுபட்டுத் திவ்ய ஆராதனைகளை அழகுபெற நடத்தவுதவிபுரிவதுபற்றி, இவ்வூருக்கும் தேவாலயத்துக்கும் விஜயம் செய்கிற ஐரோப்பியரும், இந்தியருமான பிரமுகர்கள் பலரும் வெகுவாய் அவர்களைப் பாராட்டுவதுண்டு.

சங்கீத சபா

---

* Now Sub-Collector.

கனம் மோசே ஐயரவர்கள் இச்சேகர தலைமைக்குருவாயிருந்த காலத்தில் அத்தியக்ஷாதீனக்கவுன்சிலில் காரியதரிசியாகத் (1934) தேர்ந்தெடுக்கப்பட்டுத் திறமையுடன் அப்பதவியை வகித்து வந்தார்கள். இங்கிருந்து தூத்துக்குடிக்கு 1936-ம் வருஷத்தில் மாற்றப்பட்டு அங்கரில் திருப்பணியாற்றி வருங்கால மத்திபக்கவுன்சிலின் அக்ராசனராகவும் நியமுகம் பெற்றனர். இவர்களது குருத்துவப்பணிவிடையை நன்கு மதித்த மகாகனம் நீல் அத்தியக்ஷரவர்கள் இவர்களையும் அத்தியக்ஷாலயக் கனோன்களில் ஒருவராக நியமித்துக்கௌரவப்படுத்தினார்கள். இவர்கள் தூத்துக்குடி கிறிஸ்தியாநகரம், சாயர்புரம் என்ற சேகரங்களிலும் சுமார் 12 வருஷங்கள் ஊழியம் செய்தபின், இவ்வருஷம் எப்ரில் மீ முதல் ஒய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

---

# அத்தியாயம் 15

## தற்காலம்

## (ஜாண் சாமுவேல், S R. ஞானக்கண் ஐயர்மாரின் காலம்)

### 1936

**ஜாண் சாமுவேல் ஐயர்**

கனம் S. S. மோசே ஐயர் தூத்துக்குடிக்குப் போனபின், இருபது வருஷங்களுக்கு மேலாக நாசரேத்தில் M. D C. உப தேசிகராயும், வேதசாஸ்திரக் கலாசாலே ஆசிரியாராயும், நாசரேத், பிள்ளையன்மனைப் பாஸ்றரேற்றுகளில் குருவாகவும் ஊழியம் செய்து, சிலகாலம் கீழக்கரை சர்க்கிள் சேர்மனுகவிருந்த கனம் ஜாண் சாமுவேல் ஐயரவர்கள் 1936-ம் வருஷம் இச்சேகர அக்ராசனரானுர்கள்.

**பள்ளிக் கூடங்கள்**

இவர்கள் காலத்தில் வட்டாரக் கல்வி ஸ்தாபனங்கள் புதுப்பொலிவுடன் விளங்கின. ஆண்கள் உயர்தரப் பாடசாலேயில், கம்பீரத்தோற்றமுடைய புதுக்கட்டடங்கள், அக்கலாசாலேத் தலேமையாசியரான ஸ்ரீ G. சாம் விக்டர் அவர்கள் எடுத்துக்கொண்ட அரும்பிரயாசத்தின் பலனுய் மேல்மாடியுடன் முடிவுற்று, அவற்றில் வகுப்புகள் ஆரம்பமாயின. கஸ்பா ஆரம்பப் பாடசாலேயையும் புதுக் கட்டடத்தில் அமைக்கும் நோக்கமாய் ஆலயத்திற்கெதிரில் ஓர் நிலம் வாங்கப்பட்டு, பள்ளிக்கூடத்திற்கான அஸ்திபாரம் போடப்பட்டது. கிராமப்பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றிலும் தகுந்த ஆசிரியர்கள் நியமுகம்பெற்றதினுலும், சர்க்காரின் புதிய புதிய நிபந்தனேகள் உடனேக்குடன் திருப்திகரமாய் நிறைவேற்றப்பட்டதினுலும் அரசாங்க உதவித்தொகை கூடுதலுற்றுச் சர்க்கிளின் பணஸ்திதி உயர் நிலேயடைந்தது.

கனம் S. C. நீல் ஐயரவர்களின் தலேமையினகீழ் ஆசிரியரான A. M. ஹாவிஸ் (1931—36), J. D. மாணிக்கவாசகம் L. Th. (1928—33), S பால்மாணிக்கம் (1933—36)*, A. G. ஜெபராஜ் B. A, B. D., (1936—39) ஐயர்மாரின் ஊக்கமான உழைப்பின் காரணத்தால் வேதசாஸ்திரக் கல்லூரி சிறப்புடன் விளங்கிகின்றது. 'தென்னிந்தியாவிலேயே தனிக் கல்விக் களஞ்சியங்கள்' என்று மகாகனம் மேற்றிராணியாரால்† புகழ்ந்

---

* Now Conon S. Paul Manickam, Circle Chairman, Sawyerpuram.

† Late Bp. Foss Westcott, Metropolitan of India, Burma and Ceylon.

துரைக்கப்பட்ட நீல், ஹாலிஸ் ஐயர்மாரின் சேவை இக்கலாசாலைக்குக் கிட்டியது திருநெல்வேலித் திருச்சபைக்கு தேவன் அருளிய ஈவு என்று எவரும் ஒப்புக்கொள்வர். 1936-ல் இக்கலாசாலை 'கல்லூரி' அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. பெருநோக்கும் தூரதிருஷ்டியும் உடைய நீல் ஐயரவர்கள் கல்லூரியின் பிற்கால மேன்மைக்கும் அதன் வருங்காலப் பயன்மிக்க சேவைக்கும் ஏற்றவாறு அதன் கட்டிடங்கள் அமைவது அவசியமென்றுணர்ந்து, நாசரேத் நகரத்துக்குத் தெற்கே தேறிப்பூமியில் 26 ஏக்கர் நிலத்தை வாங்கி, 1937 பெப்ருவரி 18-ம்௳யில் முதல் கட்டிடத்துக்கு அஸ்திபாரம் அமைத்தார்கள். அதுமுதல் கட்டட வேலையை வெகு தீவிரமாய் நடத்தி, 1938 ஆகஸ்ட்டுக்குள் இரு பெரிய பங்களாக்களும், இந்திய ஆசிரியருக்காக சகல வசதிகளையுமுடைய இரண்டு வீடுகளும், குருப்பட்ட மாணவர் வசிக்க, இரண்டிரண்டு வீடுகள் கொண்ட எட்டுக் கட்டடங்களும், அவ்வண்ணமே உபதேசிமார் வகுப்பு மாணவருக்காக ஒன்பது வீடுகளும், வேலைக்காரருக்கென்று நான்கு சிறு வீடுகளும், வகுப்பறைகள் இரண்டும், இந்திய முறையில் விளங்கும் பிரகாரத்தையும் சிற்பக் கற்றூண்களையும் சிங்காரமாய் இலங்கும் கோபுரத்தையுமுடைய அலங்காரச் சிற்றாலயமும், இன்சுவை கொண்ட ஜலமுள்ள நான்கு கிணறுகளையுமுடைய குடியேற்றத்தைப் பெருஞ்செலவில் நிர்மாணித்து, அதற்குப் பரிசுத்த வேதாகமப்பதி என்றர்த்தங் கொள்ளும் "திருமறையூர்" என்னும் திருநாமஞ் சூட்டினார்கள். இக்கல்லூரி இந்நகரிலல்லாது அத்தியக்ஷாதீனத் தலைநகரான பாளையங்கோட்டையிலாவது, பின்னணியில் நிற்கும் வடபிரிவின் பெருநகரான கோவில்பட்டியிலாவது ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று அக்காலத்துள்ளோர் பலர் விரும்பினும், C. M. S., S. P. G. பாகுபாட்டுடன் கிறிஸ்தவச் சுவிசேஷச் சேவை நிறைவேறிய காலத்தில் முன்னதின் முக்கிய ஸ்தானமாயிருந்த பாளையங்கோட்டைக்கு அத்தியக்ஷ இருக்கை ஸ்தானமாகவும், அத்தியக்ஷாதீனத்தின் கிரீடங்களாயிலங்கும் இருபெருங் கல்லூரிகளின் உறைவிடமாகவும் விளங்கும் பாக்கியம் உண்டெனின், S. P. G. யின் சிரேஷ்ட நகரமாய்ப் புகழுடன் விளங்கிய நசரைக்கு, அத்தியக்ஷாதீனத்தின் பிரதான ஸ்தாபனமான வேத சாஸ்திரக் கல்லூரியைத் தன்னுள் கொள்ளும் சிலாக்கியம் கிட்டியதெனின் அது நியாயமே. இக்கல்லூரிக்கு மேற்சொன்னவாறு ஒரு மாபெரும் நன்மையைச் செய்து முடித்த கனம் நீல் ஐயரவர்கள் இரண்டொரு மாதங்களில் அத்தியக்ஷாதீனக் கவுன்சிலின் பெருவாரியான வோட்டுகளால் திருநெல்வேலியின் அத்தியக்ஷராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1939 ஜனுவரிமீ 6-ம்௳யன்று, தோர்ணக்கல் அத்தியக்ஷாலயத்தில் அத்தியக்ஷப் பட்டாபிஷேகம் பெற்றார்கள்.

வேத சாஸ்திரக் கல்லூரி

'திருமறையூர்'

வேதசாஸ்திரக் கல்லூரி போன்றே பரிசுத்த லூக்கா ஆஸ்பத்திரியும் உன்னத ஸ்திதியடைய வாரம்பித்தது. வேதபோதகம் டாக்டரும், அம்மாளும் அங்கு பல அபிவிர்த்திகளை உண்டுபண்ணிக் களித்தார்கள். 1935 ஜூலை 13ம் தேதியில் மூக்குப்பீறி ஆயி. தா. ஆசீர்வாதம் நாடார் ஞாபகார்த்தக் கட்டடம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீ I. C. ஈசுவரன் பிள்ளையால் அஸ்திபாரம் போடப்பட்டு, 1936 பெப்ருவரி 2ம் தேதி ஜில்லாக் கலெக்டரால் திறக்கப்பட்டது. அக்டோபர் மாதத்தில் குஷ்டரோகச் சிகிச்சை கீட்டடம் ஒன்று மாட்சிமை தங்கிய 5ம் ஜியார்ஜ் சக்ரவர்த்தியின் வெள்ளி விழாப் பண்டிலிருந்து கிடைத்த உதவித் தொகை ரூ. 650 கொண்டு கட்டப்பட்டு 'வெள்ளி ஜூபிலி சிகிச்சை யறை' என்ற பெயருடன் அமைந்தது. வருஷ இறுதிக்குள் 'உள் வியாதியஸ்தர்' குடும்பத்தினர் உபயோகத்திற்காக சமையலறைக் கட்டடங்கள் சில (Kitchen blocks) சில பரோபகாரிகளுடைய பண உதவியைக்கொண்டு கட்டி முடிவுற்றன. சிவகாசி, மதுரையைச் சேர்ந்த ஸ்ரீ S. A. S. அருணச்சல நாடார், R. K. செந்தியப்ப நாடார் என்பவர்களின் நன்கொடையாக 16 படுக்கைகளையுடைய பொதுச் சிகிச்சை யறையும் (General Ward) முடிவுற்றது.

ஆஸ்பத்திரி

1938ல் நாசரேத்தில் 19 வருஷங்கள் சிறந்த சேவை செய்துவந்த கனம் R. P. ராண்ட்ல் ஐயரும் அம்மாளும் சீமைக்குச் சென்றனர். இவர்களது இந்நெடுங்கால மிஷனெரிச் சேவையில் நாசரேத் கைத்தொழிற் பயிற்சிசாலையிலும், ஐயாவர்கள் மூக்குப்பீறிச் சேகரத் தலைவராயிருந்த காலத்தில் அங்கும், ஆண்கள் கல்விச்சாலைத் தலைவராய் அப்பள்ளியிலும் சிறந்த ஊழியம் செய்தார்கள் என்பதற்கு, அவர்கள் கைத்தொழிற்சாலையிலும், ஆண்கள் பள்ளிக்கூடத்திலும் கட்டியுள்ள கட்டடங்களும், அவர்களிடம் வேலை பார்த்த அல்லது படித்த ஏராளமான ஆசிரியரும், மாணவரும் சான்றாக நிற்பர். இன்றைக்கும் இச்சேகரத்தின் ஊழியத்திலும், விசேஷமாய் கைத்தொழிற்சாலையின் நல்வாழ்விலும் அக்கரையுள்ளவர்களாக அவர்கள் நம்மில் சிலருக்குக் கடிதங்கள் எழுதிவருகிறார்கள்.

ராண்ட்ல் ஐயர்

மக்களின் ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சிக்கனுகூலமாய் சீரிய கிறிஸ்தவ அத்தியக்ஷர் ஆபிரகாம் மார்த்தோமா பிஷப், சாது கொச்சு குஞ்ஞு என்னும் பக்தர்களைக்கொண்டு பல கூட்டங்கள் நடத்தப்பட்டுவந்தன. இவற்றின் பயனாக கிராமப் பெண்மணிகளில் அநேகர் 'வெற்றிலை போடுதல் புகையிலை, பொடி உபயோகித்தல் ஆகிய பழக்கங்களை விட்டு' தினசரித் தியானம், குடும்ப ஜெபம் முதலிய பழக்கங்களைப் பழகினர். மேலும் சபை ஊழியருக்கான ஏகாந்தமும் (Retreat) ஒழுங்காக நடைபெற்றுவந்தது.

இக்காலத்தில் நெல்லை அத்தியக்ஷாதீனத்தில் கிறிஸ்தவ மக்களின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், பொருளாதார உயர்வுக்கும், கலாச்சார மேம்பாட்டுக்கும் அவசியமான பல விஷயங்களை லே அங்கத்தினராகக் கூடி ஆலோசிப்பது நன்மை பயக்கும் என்ற எண்ணம் பல பிரமுகர்களிடையே தோன்ற, 1938ம் வருஷத்தில் அதற்கான மகாநாடு (Tinnevelly Lay Conference) பிரதி வருஷமும் கூட்டப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. முதல் மகாநாட்டை மே 19, 20ம் தேதிகளில் (1938) நாசரேத்தில் கூட்டுவது என்றும் அவர்கள் நிர்ணயித்தது இவ்வூருக்குக் கிடைத்தவோர் சிலாக்கியமே என்னலாம். ஆண்கள் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் ஸ்ரீ G. S. விக்டர் B. A., L. T. வரவேற்புக் கமிட்டியின் தலைவராகவும், ஸ்ரீமான்கள் M. S. அப்பாத்துரை, A. பிச்சமுத்து, ஆசீர் கோவில்பிள்ளை, டாக்டர் சாமுவேல், * ராவ்சாகிப் M. கோவில்பிள்ளை, M. A., L. T. ராவ்சாகிப் S. M. சாலோமோன் முதலியோர் அக்கமிட்டியின் அங்கத்தினராகவும் அமைந்து மகாநாட்டைச் சிறப்புடன் நடத்தினர்கள். பாளையங்கோட்டைப் பிரபல அட்வோகேட்டும், அத்தியக்ஷாதீன லே காரியதரிசியுமான ஸ்ரீ P. A. தங்கசாமி M. L. மகாநாட்டில் தலைமை வகிக்க, உத்தியோக உலகில் இந்திய கிறிஸ்தவருள் புகழ் பெற்று விளங்கும் ஸ்ரீ ராஜையா D. பால் M. A. அதன் திறப்பாளராகி உயரிய சேவை புரிந்தனர். மகாநாட்டின் பின்சரித்திரம் இப்புஸ்தகத்திற்கடுத்த விஷயமல்லவாதலின், அது சில ஆண்டுகளாக இடையன்குடி, மெஞ்ஞானபுரம் முதலியவிடங்களில் ஒழுங்காய்க் கூட்டப்பட்டுவந்தது என்பதை மட்டும் குறிப்பிட்டு இவண் அதை நிறுத்தினம்.

'லே' காண்பரன்ஸ்

பின்னான காலத்தில் பல அபிப்பிராயபேதங்களுக்கும், மனஸ்தாபங்களுக்கும் இடமேற்பட்டுச் சமாதானம் பங்கமுற்றதெனினும், கனம் ஜாண் சாமுவேல் ஐயரவர்களின் சேவையை நன்றியுடன் நசரை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். ஐயரவர்கள் 1940 முதல் சிலகாலம் வேலை நீங்கி ஓய்ந்திருந்த காலையில் இரத்த அழுத்த நோயால் அடிக்கடி கஷ்டப்பட்டு, 1943 நவம்பர் 29ல் மறுமைக்குட்பட்டார்கள். அவர்கள் சரீரம் மறுநாள் காலையில் சகல மரியாதைகளுடனும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

* * * *

1940ல் ஜாண் சாமுவேல் ஐயருக்குப் பின் கனம் S. R. ஞானக்கண் ஐயரவர்கள் நாசரேத் சேகரக் குருவாக நாகலாபுரத்திலிருந்து மாற்றப்

* Formerly Principal, Bp. Heber College, Trichinopoly.

பட்டார்கள். இவர்கள் காலத்திய முக்கிய சம்பவங்கள் பலவுள. அவற்றில் சில வருமாறு: நாசரேத் ஆலயத்தின் தளம் அலங்காரமாய் புதுப்பிக்கப்பட்டதும், பரிசுத்த ஸ்தலத்தில் காலஞ்சென்ற டாக்டர் ஜாண் ஞாபகார்த்தமாக அவர் தம் மனைவி திருமதி ஜாண் அம்மையாரால் பளிங்குக் கற்றளம் போடப்பட்டதும், 1946ல் ஆலயக்கம்பவுண்டில் மிச்சமான பாகமும், 1950ல் முன்பாகமும் கட்டி முடிவுற்றதும், 1949ல் முன் மண்டபம் நிறைவுற்றுப் பிரதிஷ்டையானதும் இத்தேவாலயக் கைங்கர்யங்களில் சிலவாம்.

கனம் S. R. ஞானக்கண் ஐயர்

கனம் ஜாண் சாமுவேல் ஐயாவர்கள் காலத்தில் மேலவெள்ளமடத்தில் புதிதாக வந்த கிறிஸ்தவர்களுக்கென்று உடையார்குளம் ஸ்ரீ மா. வேதநாயகம் அவர்களது உதாரத்துவ நன்கொடையால் வாங்கப்பட்ட நிலத்திலுண்டான கிறிஸ்தவக்குடியேற்றம் அன்னவரது பெயர்கொண்டு வேதநகர் என்றழைக்கப்பட்டது என்று பார்த்தோம். அக்கிராமத்தில் கனம் ஞானக்கண் ஐயாவர்கள் மிகப்பிரயாசப்பட்டு ஓர் சிங்காரச்சிற்றாலயம் அமைத்து, மகாகனம் G. T. செல்வின் அத்தியக்ஷாவர்களைக் கொண்டு 1947 நவம்பர் 22ல் பரிசுத்த அந்திரேயாவின் ஆலயம் என்ற பெயருடன் பிரதிஷ்டை செய்ததும், கீழ வெள்ளமடம் சபையார் தங்கள் தேவாலயத்தை முற்றிலும் பழுதுபார்த்து முடித்ததும் சேகரக்கிராமங்களில் சில அடைந்த முன்னேற்றங்களாகும். தவிரவும் அகப்பைக்குளம் பரி. அந்திரேயாவின் ஆலயத்தின் தட்டடி பழுதுபார்க்கப்பட்டு, சபையின் பிள்ளையான ஸ்ரீமான் வெள்ளையாவின் செலவில் தளமும் புதுப்பிக்கப்பட்டது. வாழையடித் தேவாலயத்திலும் இக்காலத்தில் பல அபிவிருத்திகள் தோன்றின. அவற்றில் விசேஷித்தவை 1942 டிசம்பரில் அவ்வாலயம் விஸ்தீரணமாக்கப்பட்டுப், புதிதாய்க் கிராதியறை வெகு அலங்காரமானதாய் அமைக்கப்பட்டதும், நான்கு வருஷங்களுக்குப் பின் (1946 நவம்பர்) தளம் புதுப்பிக்கப்பட்டதும், சபையின் பிள்ளைகளில் ஒருவரான ஸ்ரீ ஜெபமணி அவர்கள் ஆலயத்தின் முன்னுள்ள நிலத்தை வாங்கி நன்கொடையாயளிக்க, சாத்தன்குளம் ரோட்டிலிருந்து ஆலயம்வரை ஒரு நேர்பாதை (Road) அமைப்புற்றதுமே. இவ்வூர்ச்சபையில் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதற் கிடையூறாக நின்ற ஜாதிஅபிமானம் முற்றிலும் நீங்கி, 1948ம் வருஷத்தில் ஆதி திராவிடக் குடும்பம் ஒன்று கிறிஸ்துவை விசுவாசித்தபோது சபையார் அக்குடும்பத்தினரை ஏற்றுக்கொண்டு ஆலயத்தில் ஞானஸ்நானம் கொடுத்து,

வேதநகர் ஆலயம்

வித்தியாசமெதுவும் பாராட்டாது அன்னவரைக் கிறிஸ்துவுக்குள் தங்கள் சகோதரராகப் பாவித்து நடந்துகொண்ட கிறிஸ்தவ செய்கை இவண் குறித்தற்குரித்து.

கல்வி விஷயத்தில் தைலாபுரம் பள்ளிக்கூடம் மூடப்படவேண்டிய நிமித்தம் ஏற்படினும், கஸ்பா பாடசாலை மிகவும் முன்னேற்றமடைந்திருப்பது நம் கண்கூடு. அதற்கவசியமான கட்டடத்தின் தென்பாகம் S. P. G. செக்ரட்டேரியான கனம் S. H. தொம்சன் ஐயர் கனம் ஜாண் சாமுவேல் ஐயர் காலத்தில் 1939-ம் வருஷம் பெப்ருவரி மாதம் 2-ம் தேதி விஜயம் செய்த சமயத்தில் அஸ்திபாரம் போடப்பட்டுக் கட்டி முடிந்தது. அடுத்த வருஷத்தில் கீழ்பாகத்திலுள்ள மண்டபத்திற்கு (Hall) அக்டோபர் 31-ம் தேதி மகாகனம் நீல் அத்தியக்ஷரவர்கள் அஸ்திபாரம் நாட்டினார்கள். மண்டப வேலை தளவேலையுட்பட 1943 இறுதிக்குள் முடிவுற்றன. மேலும் 1949 ஜூன் முதல் ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்திலுள்ள டாக்டர் மதுரம் பள்ளிக்கூடம் உயர்தர ஆரம்பப்பாடசாலையாக உயர்த்தப்பட்டதும், ஆழ்வார்திருநகரி உயர்தர ஆரம்பப்பாடசாலையில் மண்டபமும் உடையார்குளம், வாழையடி, முதலைமொழி என்ற கிராமங்களில் உபாத்திமார் குடியிருப்பதற்கான வீடுகளும் கட்டப்பட்டதும், உடையார்குளம் உயர்தர ஆரம்பப்பாடசாலைக்கான புதுக்கட்டடம் முடிவுற்று வருவதும் கிராம ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கான அருஞ்செயல்களாம்.

கஸ்பா ஸ்கூல்

பிள்ளையன்மனை பரமேறுதலின் ஆலயத்துக்கவசியமாயிருந்த பாடகர் அறையையும் (Choir room), குருவறையையும் (Vestry) முறையே ஏசுவடியான் கண்டக்ற்றரும் (1942) ஸ்ரீமான் P. K. ஆசீர்வாதமும் (1944) கட்டி முடித்தனர். இவ்வூர் ஆலயம் கட்டப்பட்டு 1949-ம் வருஷத்தோடு 50 வருஷங்கள் பூர்த்தியாயினமையின் சபையார் பொன் விழாக் கொண்டாட உத்தேசித்தனர். அச்சேகரகுரு கனம் S. T. பால் ஞானையா B.D. ஐயரவர்கள் சுமார் ஒரு வருஷமாய் அரும்பிரயாசையெடுத்து, சபையாரில் பலருடைய உதவியினால் ஆலயம் முழுவதும் பழுதுபார்த்து, கதவுகள், ஜன்னல்கள் முதலியவற்றைப் புதுப்பித்து, புதிய பிரசங்கபீடமொன்று (pulpit) ஆகப்பண்ணி, கிராதியையும் கண்ணாடிச் சன்னல்களால் அலங்கரித்து, மேமாதம் 25-ம், 26-ம் தேதிகளில் அவ்விழாவைக் கொண்டாடினார்கள். அக்கால் பிள்ளையன்மனைச் சபையார் தங்கள் குருக்களில் ஐவர் அத்தியக்ஷாதீனக் கனோன்களாகவும், ஒருவர் அத்தியக்ஷராகவும் உயர்வடைந்ததைப் பெருமையுடன் பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. தவிரவும் நாசரேத்தின்

பிள்ளையன் மனைப் பொன் விழா

முதல் நான்கு சர்க்கிள் சேர்மன்களும் பிள்ளையன்மனையில் ஒவ்வோர் காலத்தில் குருப்பணிவிடை செய்துள்ளதான விஷயம், நாசரேத் சர்க்கிள் சேர்மன் பதவிக்கு வருமொருவர் பிள்ளையன்மனை சேகரக் குருவாக இருந்திருக்க வேண்டும் என்பது அப்பதவிக்குரிய யோக்கியதாம்சமாகக் கடவுளால் ஏற்பட்டிருக்குமோ என்று ஐயுற வேண்டியதாயிருக்கிறது! இவ் விழாவின்போது அச்சபையார் தங்கள் சேகரத்துள்ள ஓர் பெருங்குறையை நிவிர்த்திக்க அதையோர் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். 1922-ம் வருஷம் முதலே பிள்ளையன்மனைக்கோர் குருமனை அவசியம் என்றும், அதற்கான முயற்சிகளிலீடுபட வேண்டும் என்றும் சேகர ஆலோசனைக் கழகங்களில் பேசப்பட்டு வந்தும் ஒன்றும் நடைபெறாதிருந்தது.

**பிள்ளையன் மனைக் குருமனை**

இக்குறை கனம் பால் ஞானையா ஐயரவர்கள் காலத்தில் தீரும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். ஸ்ரீமான் அ. பி. சுவிசேஷமுத்து அவர்கள் நன்கொடையாயீந்த 58 செண்டு நிலத்தில், பிள்ளையன்மனைச் சபையின் முற்காலக் குருக்களிலொருவரும், வட்டாரத்தலைவருமான கனம் கனோன் S. R. ஞானக்கண் ஐயரவர்கள் குருமனைக்கான அஸ்திபாரக்கல்லை ஜெபத்துடன் நாட்டினார்கள்.

குருமனைக்குறை பிள்ளையன்மனையை மட்டும் சார்ந்ததாயிருக்கவில்லை. நாசரேத்தையும் அக்குறைபாடு விடாதிருந்தது. 150 வருஷமாகியும், பல்லாண்டுகளாய் ஏககாலத்தில் பல குருக்கள் இந்நகரில் பணி செய்திருந்தும் ஒரே ஒரு குருமனைமட்டும்தான் ஈண்டிருந்துவந்தது ஓர் விந்தையே. அக்காலங்களில் அவர்களனைவரும் தங்கள் சொந்த வீடுகளில் வசித்து வந்தனர். 1925ல் துணைக்குருவொருவர் இச்சேகரத்துக்கென நிரந்தரமாய் அனுப்பப்பட்டபின் இரண்டாவது வீடு அவசியமாயிற்று. எனவே அதற்கென வீட்டுமனை தேட வாரம்பித்தனர். கஸ்பா பாடசாலை கட்டப்பட்டுள்ள தலம் முதலில் குருமனைக்காக வாங்கப்பட்டுப் பின் அந்நோக்கம் கைவிடப்படவே, அது பாடசாலை ஸ்தானமானது.

**நாசரேத் குருமனை**

கனோன் ஞானக்கண் ஐயரவர்கள் காலத்தில் பழைய பள்ளிக்கூடம் இருந்த காம்பவுண்டு, அதில் வீடு கட்டும் நோக்கமாய், ரூ. 1500-க்கு உயர்தரக் கலாசாலை அதிகாரிகளிடமிருந்து வாங்கப்பட்டதெனினும், விரைவில் அவ்வெண்ணமும் தளர்ந்து, கடைசியில் 1950 பெப்ருவரியில் தற்சமயம் குருவானவர் வாசம் செய்யும் பெரிய வீடு ரூ. 12,500-க்கு அதன் சொந்தக்காரரான தூத்துக்குடி டாக்டர் D. D. தாமஸ் இடமிருந்து வாங்கிக் கிரயம் தீர்க்கப்பட்டு முடிந்துள்ளது. எனவே ஜூபிலி வருஷத்துடன் இக்குறையும் தீர்ந்தது எனலாம்.

ஆண்கள் கல்விச் சாலையில் கனம் ஜாண் சாமுவேல் ஐயரவர்கள் காலத்தில் திருமதி எல்லா ராண்ட்ல் (Mrs. Ella M. Randle) அம்மாளால் 1935 ஆகஸ்ட் 1-ல் புதுக் கட்டடத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. அவ்வேலை வெகு விரைவில் நடைபெற்று 1937-க்குள் ஒரு பாகம் நிவிர்த்தியாயிற்று என்று பார்த்தோம். அடுத்த பாதியும் வெகு சீக்கிரமே நிறைவுற்றது. 1941-ல் தலைமையாசிரியர் ஸ்ரீ ஜேம்ஸ் ஞானமுத்து அவர்கள் இக்கலாசாலைக்குத் தற்காலம் வழங்கிவரும் 'மர்காஷிஸ் உயர்தரப்பாடசாலை' என்ற பெயர் கொடுத்தார். மேலும் அவர் 1945-ல் ரூ. 9000 சேர்த்து மிஷனெரிப் பங்களாவை S. P. G. இடமிருந்து வாங்கி உயர்தரக் கலாசாலையின் போர்டிங்கை அதில் ஸ்தாபித்தார். 1946 முதல் இக்கலாசாலைத் தலைமையாசிரியராய்ப் பணியாற்றும் ஸ்ரீ ஆபிரகாம் தாமஸ் B. A., L. T. அவர்கள் காலத்தில்* இக்கலாசாலை மாணவர்கள் உயர்ந்த சதவிகிதத்தில் தேர்ச்சி காண்பித்து வருகிறார்கள். கிழக்குத் திருநெல்வேலி உயர்தரக் கலாசாலைகளின் வருஷாந்திர போட்டிப் பந்தய விளையாட்டுகளும் இங்கு நடைபெற்று வருவதினின்று, 'இக்கலாசாலை கல்லூரி உலகில்' அடைந்துள்ள மேம்பாட்டை நாம் ஊகித்தறியலாம். †

**மர்காஷிஸ் ஹைஸ்கூல்**

அவ்வண்ணமே ஸ்ரீமதிகள் எவன்ஸ், ஸ்விங்களர் அம்மையரின் ஆதிக்கத்தில் பரி. யோவான் பெண்கள் உயர்தரப் பாடசாலையும், போதனமுறைப் பயிற்சிசாலையும் லௌகீக, ஆன்மீகக் கல்விச்சேவையில் தேர்ச்சியுற்று விளங்குகின்றன. 1931 முதல் இப்பாடசாலைக் கம்பவுண்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் பல. அவற்றுள் மாணவிகள் விடுதிகளான பரி. மிகாவேல் பரி. காபிரியேல, காவல்தூதர் விடுதிகள் 1931, 1936, 1943-ம் வருஷங்களில் முடிவுற்று, முறையே டாக்டர் ரூபி வேதபோதகம், எல்லா M. ராண்ட்ல், R. ஜாண் அம்மையரால் திறக்கப்பட்டன. இத்தோடு சிங்காரச் சிற்றாலயமும் கனம் G. T. செல்வின் ஐயரவர்களால் (1938-ல்) பிரதிஷ்டை செய்யப்பட்டது. புதிய பள்ளிக்கூடவறைகளில் விசேஷித்தன 1933-ல் கட்டப்பட்ட கிண்டர்கார்ட்டன் வகுப்பறையும், போதன பயிற்சி வகுப்பறைகளும், மண்டபமும் (Hall) உயர்தரக் கலாசாலை விரிவறையுமே. கிண்டர்கார்ட்டன் அறைகள் ஸ்ரீமதி

**பரிசுத்த யோவான் பெண்கள் பாடசாலை**

* School radio அமைத்தல், சில புதிய வகுப்பறைகள் கட்டப்படல், பழைய எலிமென்டரிப் பாடசாலை மீள சேர்க்கப்படல் முதலியனவும் இக்காலம் உண்டான பல முன்னேற்றங்களில் சிலவாம்.

† சமீபத்தில் பழைய மாணவர் சங்கத்தார் இவ்வத்தியசாலையத்தைக் கல்லூரி (College) யாக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அச்சீரிய பணியில் ஈடுபட்டுள்ளார்.

E. வெஸ்ற்றர்ண் (Miss E. Western, sister of Bp. F. Western) அம்மையாராலும், High School Extension Room திருமறையூர் திருமதி சுந்தரி சித்தர் அம்மாளாலும் மாணவிகளின் நல்லுபயோகத்திற் கெனத் திறக்கப்பட்டன.* இளங் குழந்தைகளுக்காக 1941-ல் ஸ்தாபிக்கப்பட்ட பாலர் வகுப்பு (Nursery class) ஆற்றிவரும் ஒப்பற்ற சேவையும் இவண் மறத்தற்பாலதன்று.

இவ்விதமாய் விளர்ச்சியுற்ற கலாசாலைகள் கனம் கேமரர் அம்மாளால் 1843-ல் ஸ்தாபிக்கப்பட்ட குக்கிராமப் பெண்கள் பாடசாலையின் பரிபூரண மாதலால், 1943-ம் வருஷத்தில் இப்பாடசாலையினர் தங்கள் நூற்றுண்டு உற்சவத்தைக் கொண்டாடினுர்கள். முதல் நாள் பரி. யோவான் ஆலயத் தில் ஸ்தோத்திர ஆராதனை நடந்தது. அதில் பாளையங்கோட்டை ஆர்ச்

டீக்கன் ராவ்சாகிப் சங்கை R. V. ஆசீர்வாதம் ஐயரவர்

நூற்றுண்டு விழா கள் பிரசங்கம் செய்தார்கள். இவர்கள் 1897 முதல்

சில வருஷங்களாய் பரி. யோவான் பெண்கள் போதனு

பயிற்சிசாலையில் ஆசிரியராய் இருந்தவர்கள். அடுத்த நாள் காலையில் பள்ளிக்கூடச் சிற்றுலயத்தில் வருஷாந்தர ஆராதனை நடந்தது. பிற்பகல் 4 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் மகாகனம் நீல் அத்தியக்ஷரவர்கள் தலைமை வகித்தார்கள். சென்னை மாகாணக் கல்வி இலாக்காத் தலைவர் சர் மெவரல் ஸ்ட்ராதம் (Sir Meverell Stratham) அவர்களும் ஜில்லாக் கல்வி அதிகாரி ஸ்ரீ M. D. பால் அவர்களும் (Mr. M. D. Paul M. A., M. Sc., L. T.) இவ்வைபத்தில் கலந்து கொண்டார் கள். அன்று மாலையில் பள்ளிக்கூட வளர்ச்சியைக் காட்டும் காக்ஷிகள் (Pageant) மாணவிகளால் நிகழ்த்தப்பட்டன. இக்காக்ஷியைக் கண்ணுற்று மகிழ நாசரேத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலுமிருந்து சுமார் 10,000 ஜனங்கள் வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. மூன்றும் நாள் சுமார் 1000 ஏழைகளுக்கு விருந்தளிக்கப்பட்டதுடன் நூற்றுண்டு விழா இனிது முடிந்தது.

பரிசுத்த லூக்கா ஆஸ்பத்திரியில் முன்பு வேத சாஸ்திரக் கல்லூரியா யிருந்த கட்டடம் மூக்குப்பீறி ஸ்ரீ K. P. பெரிய நாடார் அவர்களால் ரூ. 5,000 செலவில் பிரசவ ஆஸ்பத்திரியாக மாற்றியமைக்கப்பட்டு, 1942 நவம்பர் 28-ல் திறக்கப்பட்டது. இச்செயல் நாசரேத்தின் எம்மருங்கிலும், சுற்றுப்புறங்களிலுமிருந்து வரும் பிரசவ நிலைமைக்குட்பட்ட ஏராளமான ஸ்திரீகளுக்கு ஏற்ற சிகிச்சை செய்வதற்கு மிகுந்த பயனுடைத்தாயிற்று என்பதை எவரும் மறுக்கவியலாது. 1934-ல் ஆஸ்பத்திரி நர்ஸ்களுக்காகக்

* A new extension block has lately been added this year

ஆஸ்பத்திரி

கட்டப்பட்டு திருமதி ராண்ட்ல் அம்மாளின் பெயரால் 'எல்லா ஹோம்' என்றழைக்கப்பட்ட வாசஸ்தலத்தைத் தவிர, இம்மருத்துவச்சாலை அதிகாரிகள் வசிப்பதற்கென்று வேறொரு கட்டிடமுமில்லாக் குறையை, டாக்டர் வேதபோதகம் தம் அரும்பிரயாசத்தால் தீர்க்க முன் வந்து, 1941-ல் ஆஸ்பத்திரிக்கு மேற்கில் வீடொன்றுக்கு அஸ்திபாரமிட்டுக் கட்டி முடித்து, மகாகனம் நீல் அத்தியக்ஷாவர்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

வேதபோதகம் தம்பதிகளின் பராமரிப்பின் கீழ் சிகிச்சை பெற ஏராளமான நோயாளிகள் வரலாயினர். எனவே வேலை அதிகமாயிற்று. இருவரால் சமாளிக்க வியலாத நிலைமை ஏற்பட்டது.

டாக்டர் தாமஸ்

ஆகவே அவர்களுக்குதவியாக டாக்டர் தாமஸ் M. B., B. S. 1945-ல் நியமிக்கப்பட்டார். வேலை விரிவடைந்ததினால் மருத்துவரின் எண்ணிக்கை மட்டும் அதிகரித்தால் போதாது; கட்டிட வசதியும் சுகாதார முறைகளும் அவசியம். ஆனதுபற்றி இன்னமும் பல சிகிச்சையறைகளும், தங்கும் விடுதிகளும் சுகாதாரத்துக்கனுகூலமான முறைப்படிக்கான சில கக்கூஸ்களும் (Septic tanks) பெருஞ் செலவில் சீக்கிரமே அமைக்கப்பட்டன.

ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற விரும்பிவரும் நோயாளிகளுக்கு வேண்டிய மருத்துவம் செய்வதோடு, மருத்துவச்சாலைக்கு வரவியலாதிருப்பவர்களுக்கு ஒத்தாசை செய்வதில் உதவியாயிருக்கவும், வெளியூர்களில் ஆபத்துள்ளாேனரைச் சடுதியில் சந்தித்து ஆவன செய்வதற்கனுகூலமாயிருக்கவும், இம்மருத்துவாலய அதிகாரிகள் செலவைப் பொருட்படுத்தாது ஓர் சிகிச்சை வாகனம் (ambulance car) வாங்கியுள்ளார்கள் என்பதையும் இவண் காட்டாது விடலாகாதென வுன்னினம்.

சிகிச்சையறைகள் போதாக்குறைவை நீக்குவதற்காக கேமலபாத் மீயான் அப்துல்காதர் என்ற சீமான் முற்பட்டு தென் கீழ்ப் பாகத்தில் தம் பெயரால் சிகிச்சையறை ஒன்றைப் பெருஞ்செலவில் ஈந்தளித்தார். அவ்வறைத் திறப்பு விழாவை மகாகனம் G. T. செல்வின் அத்தியக்ஷாவர்கள் நடப்பித்துத்தர, அன்று மாலையில் ஆயிரம் ஏழைகளுக்கு வயிறுற உணவளிக்கப்பட்டது.

1949-ம் வருஷம் இம்மருந்துச்சாலைக்கோர் துயரமுண்டாயிற்று. அத்துயர் இவ்வாஸ்பத்திரிக்கு மட்டுந்தானெனின் குற்றம். நாசரேத் நகரமே, ஏன், சுற்றுப்புறமனைத்துமே, இங்கு தம் கணவருடன் சேர்ந்து அன்புமிக்க பணியைப் பல்லாண்டாற்றிய திருமதி டாக்டர் ரூபி வேதபோத

கம் அம்மாளின் பரமண்டலப் பிரவேசத்தைக்கேட்டு துயரக் கடலிலாழ்ந்தது. அவ்வம்மையாரின் உத்தம சேவையையும், அனுதாபமும் அன்பும் கலந்த பணிவிடைகளையும், தயாள மிகுந்த ஈகையையும் நம்மில் அநேகர் அறிந்தும் அனுபவித்துமுள்ளோமாதலின் அவற்றை விவரிக்காது விடுவம். நோயாளிகள் மட்டுமல்ல, ஏழைகளெவரும் அவர்தம் ஈகைப் பண்பின் அருஞ்செயல்களை அறியாதிரார். சரீர நன்மைகளையன்றி, ஆத்மீகலாபங்களையும் மற்றோர்களுக்கீவாராய் இவ்வம்மையார் கிராமப் பெண்களுக்குள் விசேஷித்த ஆவிக்குரிய நல்லுபதேச ஊழியத்தையும் நடத்திவந்தார்கள். நெடுநாள் நோய்வாய்ப்பட்டிருந்தும், தம் ஆண்டவரின் சிலுவைப்பாடுகளைத் தியானித்து அதனால் ஆறுதல் பெற்று, தம் கொடிய வேதனையைப் பொறுமையுடன் சகித்து, 1949 அக்டோபர் 16-ம் தேதி 53 வயதுடையவர்களாய் அவர்தம் திருவடி நீழலடைந்தார்கள். அடுத்த நாள் திரள் திரளாய் மக்கள் கூடி அவர்களுக்குக் கடைசி மரியாதைகளைச் செலுத்தி, கல்லறைவரைக்கும் அவர்கள் சடலத்தின் பின் சென்று துயருடன் திரும்பினர்.

டாக்டர் நபி வேதபோதகம் மறைவு

தம் மனைவியின் மரணம் தாங்கக்கூடாத் துன்பமெனினும், டாக்டர் வேதபோதகம் என்றும் போலின்றும் ஆஸ்பத்திரியின் அபிவிர்த்திக்கானவற்றைச் செய்துவருவதை அன்னார் இப்போது புதுப்பிக்கும் ஆஸ்பத்திரி முதற் கட்டடத்தையும், குழாய் ஜல வசதிக்காக எடுப்பிக்கும் சுமார் 5000 காலன் கொள்ளத்தக்க தண்ணீர் தேக்கத்தையும் (tank) ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்வோர் காணலாம்.

பரி. லூக்கா ஆஸ்பத்திரிக்கருகாண்மையிலிருக்கும் கைத்தொழிற் பயிற்சிசாலை A. P. ராண்ட்ல் ஐயர் காலத்திற்குப்பின் கனம் G. E. ஹப்பர்ட் (Rev. G. E. Hubbard) ஐயரின் ஆதீனத்திற்குள்ளானது. இவர் ஓர் கட்டடப் பிரியன். ஒய்யான்குடித் தேவாலயமும், திருமறையூர் கட்டடங்களும், சிற்றாலயமும், பரி. யோவான் பெண்கள் கலாசாலை ஆலயமும் இக்கூற்றுக்குச் சான்று. இக் குருவானவர் 1944-ல் சுயதேசம் செல்லவே, திருமறையூர் ஆசிரியர் கனம் J. R. C. டாசன் போலிங் ஐயர் சிலகாலம் இக்கலாசாலையின் மானேஜராயிருந்தபின், 1947 முதல் இச்சாலை தற்காலமானேஜர் சங்கை R. V. ஆசீர்வாதம் ஐயர் தலைமைக்குட்பட்டது. ஐயாவர்களும், உதவியாளர் (Asst. Supdt) ஸ்ரீ J. K. தங்கராஜ் B. A., L. T. * அவர்களும் திறம்பட இக்கலாசாலையை நடத்தி ரூ. 9000-க்கு ஒரு லாரி வாங்கினதுமன்றி மானேஜர் வசிப்பதற்கென்று ஒரு சிறு பங்களாவும், ஆசிரியருக்கான சில

ஹபர்ட் ஐயர்

[redacted]

* 1940 முதல் உதவி சூப்பரின்டென்டென்ற் பதவி ஏற்றார்.



ஸ்ரீமதி L. M. எவன்ஸ் அம்மாள்
( 1939-ல் எடுத்த படம் )




திருமதி ரூபி வேதபோதகம் அம்மாள்



கனம் S. C. நீல் ஐயர்
[ பின்னால் அத்தியக்ஷர் ]



கனம் A. P. ராண்ட்ல் ஐயர்



கனோன் T. சித்தர் ஐயர்

வீடுகளும் கட்டியுள்ளார்கள். தவிரவும் கலாசாலைக்குத் தென் கிழக்கிலுள்ள 4 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுப் பள்ளிக்கூட வேலை முன்னிலும் அதிகமாய் விருத்தியடையலாயிற்று.

**திருமறையூர்**

*திருமறையூர் வேதசாஸ்திரக் கல்லூரி கனம் கனோன் T. சித்தர் ஐயர் M. A., B. D. அவர்களின் தலைமையின்கீழ் 1939-ம் வருஷம் முதல் நாளதுவரை பல அபிவிருத்திகளடைந்துள்ளது. உபதேசிமார் வகுப்பு மாணவரில்லாக் குறைவினால் 1944ல் நிறுத்தப்பட்டபோதிலும் மாணவர் தொகை வருஷா வருஷம் வளர்வுற்றது. 1946-ம் வருஷத்தில் குருப்பட்ட மாணவர் மட்டும் 30 பேர் இருந்தனர். இதற்கு முன்னொருக் காலுமில்லாத விதமாய் 1948 முதல் 4 வகுப்புகளும் நடைபெறுகின்றன. மாணவரில் சிலர் 1945 முதல் செராம்பூர் சர்வகலாசாலை B. D. பட்டப் பரீக்ஷை எழுதலாயினர். 1949 முதல் கல்லூரி அச்சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டது. இவ்விணைப்பின் பயனாய் பரீக்ஷை விஷயங்களில் பல சலுகைகள் ஏற்பட்டதுமல்லாமல், இந்தியாவின் உயர்தர வேதசாஸ்திரக் கல்லூரிகள் ஐந்தினுள் இக்கல்லூரியும் ஒன்று என்ற பெருமை இதற்குக் கிட்டியது. வருஷா வருஷம் நடைபெறுகிற B. D., L. Th., P. D. பரீக்ஷைகளில் கல்லூரி மாணவர் உயர்ந்த சதவிகிதத்தில் தேறி வருகின்றனர். கல்லூரியின் மேம்பாட்டை யறிந்த தென்னிந்திய திருச்சபை அதிகாரிகள் தமிழ்நாடு முழுமையிலுமுள்ள ஆறு அத்தியக்ஷாதீனங்களுக்கும் பொதுவான வேதசாஸ்திரக் கல்லூரியாய்ச் சேவையாற்ற இதுவே தகுதியுள்ளதென 1948-ம் வருஷ சினட் கூட்டத்தில் தேர்ந்துள்ள முடிவை, நம் அத்தியக்ஷாதீன நிர்வாகக் கழகமும் ஒப்புக்கொண்டமையின், 1951 முதல் இது தமிழ் நாட்டு வேதசாஸ்திரக் கல்லூரி (Tamil Nad Theological College) என்ற பெயருடன் தமிழகம் முழுவதுக்குமான குருக்களைப் பயிற்றுவிக்கும் கல்லூரியாக மாறக்கூடும் என்று நம்பப்படுகிறது.

**இ. கி. எ. சி. ச. நிதி**

இந்தியக் கிறிஸ்தவப் பிராவிடன்ட் பண்டு என்ற ஸ்தாபனம் 1937-ல் தன் பொன்விழாவையும், 1947-ல் வைரவிழாவையும் கொண்டாடிற்று. 1934 முதல் இப்பண்டு ஸ்தல குருமாரையே அக்கிராசனராகக் கொண்டுள்ளது. 1941-ல் இது இன்சூரன்ஸ் சட்டத்திற்குட்பட்டு "நாசரேத் இந்திய கிறிஸ்தவ எதிர்காலச் சிக்கன சகாயநிதி" என்ற பெயருடன் விளங்கலாயிற்று. அவ்வருஷத்திற்கு முன்னர் இந்நிதி 375 அங்கத்தினரை மட்டுமுடையதாயிருந்தும் 1947-க்குள் அதன் ஊக்கமிகும் காரியதரிசி

* 1946 முதல் இக்கல்லூரி 'திருநெல்வேலி வேதசாஸ்திரக் கல்லூரி' என்றழைக்கப்படுகிறது.

ஸ்ரீ. R. T. கிறிஸ்தியானவர்களின் உழைப்பின் பயனுய் 800 பாலிசிதார்களை உடையதாக வளர்ந்துள்ளது.

மேற்சொன்னவாறு ஸ்தாபனங்களிலன்றிச் சமுதாய வாழ்க்கையிலும் உண்டான பல விருத்திகளையும் ஈண்டு குறிப்பிடக்கூடும். சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்திற்கடிப்படை கூட்டுறவு முறையே என அதன் ஆராய்ச்சியாளர் கூறுவர். இஃதையுணர்ந்த நாசரேத் மக்களும் கூட்டுறவு முறையபிவிர்த்தியை நடைமுறையில்கொள்ளவாரம்பித்தனர். இதற்காய் 1922-ல் ஸ்ரீ C. S. கோலாப் அவர்கள் நாசரேத் கூட்டுறவு பாங்கியை ஸ்தாபித்தனர் (Co-operative Bank). இதன் பயனை நன்கறிந்த நகரவாசிகளும் சுற்றுப்புறத்தார்களும் உவப்புடன் இதை ஆதரிக்கவே, இன்று இப்பாங்கி நன்னிலைமையிலுள்ளது. 1939-ம் வருஷமுதல் புதுக் கட்டடத்தில் குடிபுகுந்து நகரின் பணப்புழக்கத்திற்காதாரவாய் விளங்குகிறது. இதுபோன்ற கோவாப்பரேட்டிவ் பண்டகசாலை (Co-operative Stores) ஒன்று ஸ்ரீமான் டாக்டர் சாமுவேல் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு யுத்தத்தினுல் விலைவாசிகள் உயர்ந்து, பஞ்ச நிலையேற்பட்ட காலத்து மக்கட்கான ஒத்தாசை பல நல்கியது.

கோவாப்பரேட்டிவ் பாங்கி

ஆன்மீக நல்வாழ்வுக்காய் 1942ம் வருஷத்தில் இவ்வூரில் தென் சர்ச் கவுண்சில் பிராந்தியங்களுக்காகப் பொதுவான ஓர் மாபெரும் ஆவிக்குரிய கூட்டம் (Convention) நடைபெற்றது. அவ்வமயம் தோர்ணக்கல், தரங்கம்பாடி அத்தியக்ஷர்மாரும், மகாகனம் நீல் அத்தியக்ஷரவர்களும் உன்னத போதனைகள் பல தந்தார்கள். அத்தியக்ஷாதீனப் பிரமுகர்களில் பாளையங்கோட்டையிலிருந்து ஸ்ரீமான்கள் தானியேல் தாமஸ், P. A. தங்கசாமி, சாயமலை ஆச்சிரமம் ஸ்ரீமதி ஜாய் சாலமோன் அம்மையார் முதலியோர் முறையே 'கிறிஸ்தவ சேவை', 'கிறிஸ்தவ ஈகை', 'கிறிஸ்தவ விவாகமும் ரொக்கமும்' என்பனபற்றிச் சிந்தை கிளரப்பேசினர். பின்னும் 1946ல் மகாகனம் பேக்கன்ஹாம் வால்ஷ் அத்தியக்ஷரவர்கள் வந்திருந்து சில நாட்களாக ஆலயத்தில் சபையாருக்கு உத்தம உபதேசங்கள் கொடுத்ததுமல்லாமல், பல வியாதியஸ்தருக்கு விசுவாசச் சிகிச்சாபிஷேகம் (Faith healing and anointing) அருளினர். இவை தவிர 1943ல் மகாகனம் A. M. ஹாலிஸ் (சென்னை) அத்தியக்ஷரும், 1946ல் கல்கத்தா மேற்றிராணியாரான சங்கைபாஸ் வெஸ்காட் அத்தியக்ஷரும், இரண்டு வருஷங்களுக்குப்பின் (1948) மதுரை மகாகனம் நியூபிகின், திருச்சி மகாகனம் E. B. தார்ப் அத்தியக்ஷர்மாரும் நசரை ஆலயத்தில் பிரசங்கங்கள் நிகழ்த்தினுர்கள்.

கன்வேன்ஷன்

நாடோடிய வாழ்க்கையில், தாய்மார் சங்கம், வாலிபர் கூட்டம், வாலிபப் பெண்கள் கூட்டம் முதலியவை வழக்கமாகத் தங்கள் கூட்டங்களை நடத்தி வருஷோற்சவங்கள் கொண்டாடுவதும் நகரின் விசுவாச ஜீவியத்தின் அம்சங்களாயின. வாலிபர் கூட்டத்தினர் வருஷந்தோறும் குலசேகரப்பட்டணம் முதலியவிடங்களில் ஆவிக்குரிய ஏகாந்தத்திலீடுபடுவதும், அவ்வண்ணமே தாய்மாரில் சிலர் 1946 முதல் அத்தியக்ஷாதீனச் சபைகளின் ஆவிக்குரிய நல்வாழ்வுக்காகத் திருமறையூர் வேத சாஸ்திரக் கல்லூரியில், ஏப்ரில், மே மாதங்களில் சில நாட்களை ஜெபத்திலும் உபவாசத்திலும் செலவிட்டுத், திவ்ய உபதேசங்கள் பெற்றுவருவதும் சபையின் விசுவாச ஜீவிய வளர்ச்சிக்கான சிறந்த ஹேதுக்களாயமைந்துள்ளன. சபையின் பொதுவான ஜீவியத்தில் இத்தாய்மார் ஆற்றிவரும் பலதிறப்பட்ட சேவை பாராட்டப்படத்தக்கது. இஃதுடன் கனம் மார்காஷிஸ் ஐயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னால் ஸ்ரீமான்கள் சால் யோசேப்பு, Y. S. யோசேப்பு என்பவர்களால் நடத்தப்பட்டு வந்த கிராமக் கிறிஸ்தவ சுயாதீனப் பிரசங்கக் கூட்டம் ஸ்ரீ யோசேப்பு பாலையா அவர்களின் தலைமையின்கீழ் கடந்த சுமார் 20 வருஷங்களாக ஓய்வு நாள்தோறும் புற மதஸ்தருக்குச் சுவிசேஷ நற்செய்தியை அறிவித்து வருகிறது.

சுற்றுப்புறங்களில் சுவிசேஷ வேலையிலீடுபடுவதுபோன்றே, புறத்தேசங்களில் நடைபெறும் மிஷனெரிச்சேவையிலும் தீவிரமாய்ப் பங்குபெறும் உரிமை 1943ம் வருஷம் நம் சேகரத்துக்குக்கிட்டியது. அவ்வருஷம் ஸ்தல I. M. S. செக்ரட்டேரி (Local Secretary of the I. M. S.) டாக்டர் S. சாமுவேல் அவர்களின் பெரு முயற்சியால் I. M. S. பொருள் காணிக்கை விற்பனை விழா (I. M. S. Fancy Sale) ஆகஸ்டு மாதத்தில் நடைபெறலாயிற்று. ஸ்தாபனங்களும் சேகரச் சபைகளும் வாலிபர் கூட்டத்தாரும், தனிப்பட்டவரும் பொருட்சாலைகளமைத்து (Stalls) விழாவை இனிது கொண்டாடினர். அதுமுதல் வருஷாவருஷம் ஆகஸ்டு மாதத்தில் அவ்வுற்சவம் நடத்தப்பட்டுவருகிறது. ஒவ்வொரு வருஷமும் விற்பனைக் காணிக்கைத் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

**I. M. S.**

கனம் ஞானக்கண் ஐயரவர்கள் காலத்தில் நம் நாட்டில் ஏற்பட்ட சில மாபெரும் மாறுதல்களையும் குறிப்பிடுவது அவசியம். அவற்றில் முந்தியது 1947 ஆகஸ்டு 15ல் நம் நாடடைந்த பூரண சுதந்திரம். அந்நன்னாள் நாசரேத் மக்களாலும், ஸ்தாபனங்களாலும் வெகு குதூகலத்துடன் தகுந்தவாறு கொண்டாடப்பட்டது. அடுத்தாற்போல் அவ்வருஷம் செப்டெம்பர் 27ம் தேதி தென்னிந்திய சபை ஐக்கியம் ஊர்ஜிதமாயிற்று. அத்

தினத்தில் தென்னிந்தியக் கிறிஸ்தவர்களிடையுண்டான அவ்வொருமைப் பாட்டை நசரைச சபை மிக்க மகிழ்ச்சியுடனும் நன்றியறிதலுடனும் வரவேற்றது. கனோன் S. R. ஞானக்கண் ஐயாவர்கள் இதன் மேம்பாடுகளை ஆலயத்திலும் கமிட்டிகளிலும் ஏற்றவாறு மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். தென்னிந்தியத் திருச்சபை ஐக்கியம் என்பது தற்காலத்துள்ள நம்மனோரில் சிலருக்கு விபரீதமாய்த் தோன்றலாம். ஆனால் இச்சரித்திரத்தை வாசிப்போர் முதல் முதலாக நாசரேத் சபை S. P. C. K. சங்கத்துக்குட்பட்டிருந்தும் லுத்தரன் சபையாகவே யிருந்தது என்பதையும், பின்னர் சிலகாலம் C. M. S. மிஷனெரி யொருவரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பதையும், S. P. G. சபையாய் இருந்தகாலத்தும் 1880 வரையும் ஆராதனை முதலிய விஷயங்களில் சடங்காச்சார முறைகளை அறியாத சபையாகவே இருந்தது என்பதையும், 1881க்குப் பின்பே உயர்தரக் கொள்கைகளையுடைத்தாயிற்றென்பதையும் அறிவாராதலின், இன்று வெஸ்லியன், ப்ரெஸ்பிற்றீரியன், சபை ஆளுகை முறையினர் என்பாரோடு ஐக்கியப்பட்டுள்ளோமென்பின் எவ்வித வியப்பும் கொள்ளார்.

1947

மூன்றாவது முக்கிய விஷயம் முந்திய இரண்டைப்போல் மகிழ்ச்சிக் குரியதல்ல. தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் டெல்லிமாநகரில் கொலையுண்ட துயரச் செய்தி. அவர் மரித்த மறுநாள் அதிகாலையில் நகரத்தை நடுக்குறச் செய்தது. வீதிகளெங்கணும் மக்கள் கூட்டங் கூட்டமாய் நின்று, நம் நாட்டுக் கேற்பட்ட இம்மாபெரும் துன்பத்தைக் குறித்தே பேசினர். எவர் முகத்தும் கவலைக்குறியே தோன்றியது. அன்று நடந்த சர்க்கிள் கமிற்றியிலும், காந்தியடிகளின் சிறந்த தேசத் தொண்டைக் குறித்துப் பாராட்டுரைகள் ஸ்ரீமான் M. S. அப்பாத்துரை, கனோன் ஞானக்கண் ஐயாவர்கள் முதலியோரால் கூறப்பட்டதுடன், அம்மகானின் ஞாபகத்தைக் கண்யப்படுத்துபவராய் கமிற்றி அங்கத்தினர் இரு நிமிஷ நேரம் எழுந்து தலைகுனிந்து நின்றனர். சின்னாட்களுக்குப்பின் பெப்ருவரி மீ 12ம் தேதி மர்காஷிஸ் உயர்தரக் கலாசாலை மைதானத்தில் நகரவாசிகள் கூடியிருக்கப் பல பிரமுகர்கள் தேசத் தந்தையின் சேவை, வாழ்க்கை, குணசீலம் முதலியனபற்றிப் பேசினர். இவ்வண்ணம் காந்தியவர்களின் மரணத்தாலுண்டான தேசியத்துயரில் நசரை மிஷனும் பங்கு பெற்றது.

மகாத்மா காந்தி மரணம்

நான்காவது விசேடம் 1948 அக்டோபர் 2ம் தேதி முதல், மற்றெங்கணும் உள்ளதுபோல் இங்கும் சில மக்களைத் தன் வலைக்குட்படுத்திச் சீரழித்த, 'குடியரக்கனின் குடியழிந்தது' வாகும். அவ்வமயம் சென்னை

மதுவிலக்குச் சட்டம்

மதுவிலக்கு மந்திரி ஸ்ரீமான் டாக்டர் S. குருபாதம் அவர்கள் நாசரேத்துக்கு வந்து ஆலய ஆராதனையில் பங்குபெற்றதுமன்னியில், மாலையில் நடந்த பொதுக் கூட்டத்திலும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். குடிப் பழக்கம் சட்டபூர்வமாய் நீக்கப்பட்டது சாதாரண மக்களின் பொருளாதார மேன்மைக்கும், ஆன்மீக நல்வாழ்வுக்கும் பெருஞ்சாதனமாயுள்ளது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். குடி ஒழிவதற்காக 1914ம் வருஷம் முதல் இச்சபை ஏறெடுத்த ஜெபத்தின் பலனிது எனின் மிகையாகுமோ?

சில குருமாரின் மரணம்

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன் இக்காலத்தில் மறுமைக்குட்பட்ட பலதெய்வ ஊழியர்களை ஞாபகப்படுத்திக்கொள்வதும் நம் கடனாகும். நாசரேத்தில் 1928—31-லும், 1933—36-லும் துணைக்குருக்களாயிருந்த கனம் J. மதுரம் ஐயரும், R. விசுவாசம் ஐயரும் முறையே 1939 மார்ச் 2-ம் தேதியிலும், 1945 அக்டோபர் 15-இலும், 1902—1906-ல் நம் சடைக் குருவாகவும் 1906—10-இலும் 1911—1913-இலும் போதனாமுறை பயிற்சிசாலை ஆசிரியராகவும் ஊழியம் செய்த கனம் P. S. பீற்றர் ஐயர் திடீரென்று 1940 ஜுன் 13-இலும் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்கள்.

1946 மார்ச் 4-ல் நம் கிராமத்தில் பல வருஷங்களாகப் பரி. யோவான் பெண்கள் உயர்தரக் கலாசாலைத் தலைமையாசிரியராகவும், வேத சாஸ்திரப் பாடசாலையின் தலைவராகவும், உபதலைவராகவும், ஆசிரியராகவும், பலதடவைகளில் சபைக் குருவாகவும், சில சமயங்களில் மேற்பார்வையாள மிஷனெரியாகவும் (Superintending missionary), D C. C. சேர்மனாகவும், பல சமயங்களில் பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ருகவும் இந்தியக் கிறிஸ்தவப் பிராவிடன்று பண்டு அக்கிராசனராகவும், சர்க்கிள், பாஸ்றரேற் கமிட்டிகளின் அங்கத்தினராக அனுபவம் மிகுந்த ஆலோசனை தருபவராகவும் 50 வருஷங்களுக்கு மேலாக உத்தம பணிவிடை செய்த கனம் D. பெரியநாயகம் B. A. ஐயரவர்கள் தம்முடைய 82-வது வயதில் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்கள். இவர்களது தகப்பனுரைப்பற்றி ஏற்கெனவே பார்த்தோம். இவர்கள் 1864 ஏப்ரில் 10-ம் தேதி இவ்வூரில்

D. பெரியநாயகம் ஐயர்

பிறந்து மர்காஷிஸ் ஐயாது உதவியினுல் கல்விகற்று B. A. பட்டம் பெற்றபின், 1886-ல் பரி. யோவான் பெண்கள் உயர்தரக் கலாசாலையின் முதல் தலைமையாசிரியராகி, 1898-ல் பட்டம் பெற்றபின், 1900 முதல் வேதசாஸ்திர வகுப்பிற்கும் முதல் தலைவரானர்கள். அமர்ந்த சுபாவமும்

ஆழ்ந்த பக்தியும் இவர்களது சிறந்த குணங்கள். ஆங்கில பாஷாஞானம் உடையவராதலால் ஆங்கில இலக்கணப் புஸ்தகம் (English Grammatical Idioms) ஒன்று எழுதினர்கள். மேலும் எவர்க்கும் எளிதில் விளங்கக்கூடியதாக, கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் சித்தாந்தத்தை "தேவ குமாரன் என் மரிக்கவேண்டும்?" என்ற தலைப்புடைய புஸ்தகத்தில் எழுதி வெளியிட்டார்கள். B. A. ஐயர் என்ற கண்ணியப் பெயருடன் நசரை மக்கள் இன்றும் அவர்களை நினைவு கூறுகிறார்கள்.

1946, 1948, 1949-ம் வருஷங்களின் ஆகஸ்டு மாதங்களில், நாசரேத் சர்க்கிள் கமிற்றியின் அங்கத்தினரான ஸ்ரீ டாக்டர் S. சாமுவேல், ஸ்ரீ வில்லியம் லாமேக் (Retd. Deputy Collector) ஸ்ரீ M. S. அப்பாத்துரை இம்மூவரின் மாணமும் சபையின் நல்வாழ்விற்கேற்பட்ட பெரும் நஷ்டமாகும். இச்சர்க்கிளின் முதல் 'லே' பொக்கிஷதாராக (1940—46)-வும், இந்திய மிஷனெரிச்சங்க சேவையிலீடுபட்டவராகவும் டாக்டர் S. சாமுவேல் சபையின் பக்தி வாழ்க்கை அபிவிர்த்தியில் அதிகமாய்ப் பங்கெடுத்தார். மேலும் ஆஸ்பத்திரியிலும் டாக்டர்மார் ரஜா எடுத்த காலத்தில் அடிக்கடி அவர்களுக்குப் பதிலாக மருத்துவ வேலை செய்து, மக்களின் நன்மதிப்புக்கும் நன்றியறிதலுக்கும் பாத்திரரானர். உயர்திரு உவில்லியம் லாமேக் தம் அனுபவத்தினுலும், ஆழ்ந்த யோசனைகளினுலும் சர்க்கிளின் பல சிக்கலான பிரச்சினைகளைத் தீர்த்து, இச்சர்க்கிளின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டதையும் பலர் அறிவர். ஸ்ரீமான் M. S. அப்பாத்துரை சுமார் 26 வருஷங்களாகச் சர்க்கிள் கமிட்டி அங்கத்தினராயிருந்ததுமன்றி, அக்கமிற்றியின் நடபடிக்கைகளில் பங்கெடுத்து, வேண்டும் ஒத்தாசை பல புரிந்து வந்தார். நசரை மக்களின் உயர்தரக்கல்வி விஷயத்தில் அவர் அதிக ஆர்வம் உடையவராய் அதற்கான முயற்சிகளிலீடுபட்டதை எற்கெனவே பார்த்தோம். நாசரேத் பஞ்சாயத்கோர்ட் பிரசிடெண்டாக நேர்மையுள்ள நியாயவாதி எனப்பெயர் பெற்றிருந்தார்.

**மூன்று பிரிவுகள்**

ஜுபிலி வருஷமான இவ்வருஷத்துவக்கத்தில் நம் சபையில் வெகு காலம் மிகுந்த சித்தியுள்ள உபதேசியாராயிருந்த ஸ்ரீ சுந்தரம் உபதேசியாரவர்களும், 1915—18-ல் நாசரேத் பாஸ்றரேட் குருவாயிருந்த கனம் V. மனுவேல் ஐயாவர்களும் மறுமைக்குட்பட்டார்கள். மேற்சொன்ன பக்தரைத்தவிர இன்னும் பல உத்தம சேவையாளர் பரமபதம் பற்றியுள்ளாரெனினும், அன்னவரின் நாமதேயங்கள் இவண் குறிப்பிடாதது இடக்குறை பற்றியேயாகும்.

**சுந்தரம் உபதேசியார் மனுவேல் ஐயர்**

இன்னமும் நாம் அறியவேண்டிய இரு காரியங்களுள் அவற்றி லொன்று இவ்வருஷம் (1950) முதல் நாளில் பாளையங்கோட்டையில் ஸ்தாபிதமான சுய சம்ரக்ஷண சங்க வரலாறு (Self Support Society). இச்சங்கத்தின் விழுமிய நோக்கம், வயது வந்தும் இன்னமும் பூரண சுய ஆதரவென்னும் இலக்கைச் சேராத நம் அத்தியக்ஷாதீனம், தாய்ச்சங்கங்களின் தானமின்றித், தன் காரியங்களைத்தானே தாங்கத்தக்க தகுதியடையச் செய்வதே. அத்தியக்ஷாதீனத்தின் ஒவ்வொரு ஆத்துமாவும் இதின் அங்கமாகி இதை ஆதரிப்பது நம் கடன். சுய ஆதரவுத்துறையில் மிஷனெரித் தந்தையரால் பழக்கப்பட்டிருந்த நசரைச் சேகரம் இச்சங்கத்தின் அறைகூவலை ஏற்று உதவ முன்வந்துள்ளது. எனினும் இச்சேகரத்தின் ஒவ்வொரு கிறிஸ்தவ ஆணும் பெண்ணும் இன்னமும் வேண்டும் பூரண ஆதரவளிப்பரேல், வெகு இலகுவில் நம் அத்தியக்ஷாதீனம் சிறப்புடன் இலங்கும் என்பது திண்ணம்.

S. S. S.

மற்றது இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் 11 முதல் 16 வரை கொண்டாடவிருக்கும் ஜூபிலி விழா. இவ்வுற்சவத்தை ஆசரிக்கும் சிலாக்கியம் இத்தலைமுறையாருக்கருளப்பட்ட பேறே. எனவே இதனை முன்னின்று நடத்தும் நம் சேகரக்கமிட்டியார் நம்மிடம் விழைந்து கேட்பது, இவ்விதச் சீரும் சிறப்பும் நமக்கருளிய நம் ஆண்டவருக்கு இருவிதக் காணிக்கைகளை நாம் படைக்கவேண்டுமென்பதே. அவற்றில் சிரேஷ்டமானது நமது ஆண்டவர் தமது ஆத்மப் பிரயாசையின் பலனைக்கண்டு திருப்தியடையுமாறு இன்னும் அவரை அறியாத ஆத்துமாக்களில் குறைந்த பக்ஷம் நூற்றைம்பது பேரை அவருக்குப் பாதகாணிக்கையாகக் கொண்டுவந்து 'ஆண்டவரே, இதோ நாங்களும், நீர் எங்களுக்குத்தந்த எங்கள் பிள்ளைகளும்' என்று படைப்பது. மற்றொன்று, நமது முன்னோர் மாபெரும் மகத்துவ ஆலயத்தைக் கட்டி முடித்து, அவ்வாலயத்தில் நமக்கென விடுத்திருக்கும் பணியான கோபுரக் கடிகாரம் ஒன்றை நிறுவுவது. இவ்விரண்டு காணிக்கைகளையும் இரக்ஷா பெருமானுக்குப் படைக்க, நம் ஆவி ஆன்மாவையும் பொருளையும் குறைவின்றி ஈய முன்வந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவோமாக.

ஜூபிலி

கடந்த பத்து வருஷங்களாக இவ்வட்டார அக்கிராசனராயிருந்து 150-வது வருஷ ஜூபிலி விழாவையும் இனிது நடத்திவைக்கச் சிலாக்கியம் பெற்றுள்ளோரான கனோன் S. R. ஞானக்கண் ஐயரது உத்தியோக வாழ்க்கைக் குறிப்புகளில் இரண்டொன்றை இப்புத்தகம் தன்னுள் உடைத்தாயிருப்பது அவசியமாம். கனம் சுவிசேஷமுத்து ராஜேந்திரம் ஞானக்கண் ஐயர் அகரம் என்ற கிராமத்தில் 1891-ம் வருஷம் டிசம்பர் மாதம்

24-ம் தேதியில் ஓர் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து, கிராமக்கல்வி முடிந்த பின், உயர்தரப் பாடசாலை வகுப்புகளிலும் தேறி, இன்டர்மீடியட் பரீக்ஷை முடிந்தபின் வேதசாஸ்திரம் கற்று, 1921-ம் ஆண்டில் மகாகனம் உவாலர் அத்தியக்ஷரிடத்தில் உதவிக்குருவபிஷேகம் பெற்றனர்.

கனோன் S. R. ஞானக்கண் ஐயர் மூன்று வருஷங்களாகப் பாலியர் மிஷனராக வேலை செய்தபின், குருவபிஷேகம் பெற்று பிள்ளையன்மனை, மடத்தாகுளம், கிளாஞ்சுனை என்றவிடங்களில் திருப்பணியாற்றி வருங்காலை, மகாகனம் உவெஸ்ற்றர்ண் அத்திய்க்ஷரின் சேப்ளனாக 1929—33 வரை வேலைபார்த்துப், பின்னர் ஏழு வருஷங்களாக நாகலாபுரத்திலும், 1940 முதல் நாசரேத்திலும் சர்க்கிள் சேர்மன் பதவி வகித்து வந்திருக்கிறார்கள். கனம் D. கோயில்பிள்ளை ஐயரின் மரணத்துக்குப் பின் ஞானக்கண் ஐயர் தென் சர்ச் கவுண்சில் அக்கிராசனராக ஏற்படுத்தப்பட்டதுமன்றி, 1945-ல் மகாகனம் நீல் அத்தியக்ஷயரவர்களால் அத்தியக்ஷாலயக் கனோன் ஆகவும் நியமனம் பெற்றனர்.

நாசரேத்துக்கு வந்த மிஷனெரிகளில் சிலர் ஆண்டவரால் 'சபைப் பிரபுக்களாக' உயர்த்தப்பட்டனர். என்பதை இப்புஸ்தக வாசகர் அறிவர் அவர்கள் கனம் J. M. ஸ்ட்ராஹன் ஐயர், S. C. நீல் ஐயர், A. M. ஹாலிஸ் ஐயர், G. T செல்வின் ஐயர் [இவர்கள் சபைப் பிரபுக்கள் அத்தியக்ஷர்களாயினர்], கனம் A. மர்காஷிஸ் ஐயர் [இவர் கனோனனர்] என்பவர்களே. இந்திய குருக்களில் கனம் D. பெரியநாயகம், S. S. மோசே, S. R. ஞானக்கண் ஐயர் மார் கனோன்களாகவும், ஸ்ரீ R. V. ஆசிர்வாதம் (பின்னல் குருப்பட்டம் பெற்று) நம் அத்தியக்ஷாதீனத்தின் முதல் ஆர்ச் டீக்கனாகவும் உயர்த்தப் பட்டார்கள்.

## முடிவுரை

'இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது' இந்நீண்ட சரித்திரத்தை வாசிக்கும் சிநேகிதரே, 1800ம் வருஷத்துக்கு உங்கள் சிந்தனைகளைத் திருப்புங்கள். தரையில் தேறி மணலும், மேலே பனை மண்டைகளும், சூழ உடைமரங்களும் அடர்ந்துள்ள சாணளவான சாண்பத்தே, இன்று நாம் காணும் உயர்ந்த மாளிகைகளும், நேர் நேரான தெருக்களும், ஆங்காங்கே கடை வீதிகளும், நடுவில் நாயகமாக விளங்கும் பரிசுத்த யோவான் தேவாலயமும், அதனருகில் மர்காஷிஸ் கலாசாலையும், பரி. யோவான் பெண்கள் பாடசாலையும், பரி. லூக்கா ஆஸ்பத்திரியும், கைத்தொழில் பயிற்சிசாலையும், சற்றுத் தொலைவில் வேதசாஸ்திரக் கல்லூரியும், வடக்கே ரயில்வே ஸ்டேஷனும், கிழக்கிலும் தென் கிழக்கிலும் இயற்கையழகைப் பொழிந்து நிற்கும் தேறிக் குன்றுகளும், மேற்கே வனப்பு மிக்க வயல்களும், அருகில் அளிமிகும் தடாகங்களும் கொண்ட நாசரேத் நகராகும். நவீன நாகரீக நகருக்குரித்தான சகல அம்சங்களும், மெய்மார்க்கசின்னங்களும் ஒருங்கே அமையப் பெற்று அது விளங்குகிறது. இன்று நகர் மிகவும் விரிவுற்று மூக்குப்பீறி, பிரகாசபுரம் கிராமங்களையும் அகப்பைக்குளம், பிள்ளையன்மனை, வாழையடி, வகுத்தான்குப்பம் முதலிய ஊர்களையும் இணைத்து நிற்கிறது. நாசரேத் கிராமப் பஞ்சாயத்தும் ஒரு பெரும் பஞ்சாயத் (Major Panchayat) ஆகவும் சீக்கிரம் மாறுதலடையப் போகிறது. சர்க்காரும் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் நாசரேத்தின் மேம்பாட்டை நன்கு மதித்துக், கடந்த வருஷம் முதல் (1949) திருச்செந்தூர் தாலுகாவின் மேல்பாகக் கல்வியதிகாரியின் தலைமை ஸ்தானமாகும் உயர்வை இந்நகருக்கு நல்கினர். இவ்விதம் சமூக, கலாச்சார, பொருளாதார, மத சம்பந்தமான அம்சங்களெவற்றிலும் உயர்நிலையெய்தியுள்ளதாய், தென்கீழ் நெல்லை நாட்டிலேயே நாசரேத் ஓர் தனி நகராய்த் துலங்கலாயிற்று.


இந்நூற்றைம்பது வருஷங்களில் இவ்வுயர்வு எவ்வண்கிட்டினது? 'கர்த்தாலே ஆகாத காரியம் ஒன்றுமில்லை.' சாண்பத்து 'நாசரேத்' ஆகி இயேசுநாதரின் தொழிலகமாயிற்று. மக்களுக்குச் சரீர நன்மைகளையும், பிணி நீக்கி ஆரோக்கியத்தையும், பசி நீக்கி ஆகாரத்தையும், இருள் நீக்கி அறிவையும், மருள் நீக்கி மீட்பையும் அளிக்கவன்றோ தேவன் மனுஷனானர்? அவர் மனுடாவதாரத்தில் கொண்ட அந்நன்னோக்கம் இங்கும் நிறைவேறலாவதை சாத்தன்குளம் ரோட்டில் வரும் எவரும் அறியலாம். ஆகாரம் அருளக் கைத்தொழிற் கல்வியும், பிணி நீக்க ஆஸ்பத்திரிச் சேவையும், இருள் போக்க அறிவூட்டும் கலாசாலைகளும், மருண் மீட்சி வழி காட்ட ஆலய ஆராதனைகளும் இத்தொழிலகத்தின்கண் இயேசுவின்

கிரியை நடவா நிற்பதைக் காட்டும் சின்னங்களாம். ஆயின் இவ்வழிச் சென்றோர் எத்தனை எத்தனை பேர்! இவ் வழிவகுத்தோரான ஆண்பாலார், பெண்பாலாரான மிஷனெரிமார், குருக்கள், உபதேசிமார், ஆசிரிய ஆசிரியைகள், வேதாகம ஸ்திரீகள், சயாதீன ஊழியர் எத்தனை எத்தனை பேர்! இத்தனை பேரையும் அழைத்து ஆண்டு நடத்தி உபயோகித்தருளிய கர்த்தரின் கருணை எத்துணை, எத்துணை!

எசாயாத் தீர்க்கதரிசி மூலமாய் ஆண்டவர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நாசரேத் சரித்திரத்தில் நிறைவேறிவருகிறதை, நாசரேத்தைப் பார்த்து ஆண்டவர் பேசுவதுபோன்று அவ்வாக்கியங்களைச் சற்று மாற்றி எழுதினால், அதுவே நசரை மிஷன் சரித்திரச் சுருக்கமாகும். "இப்போதும் சாண்பத்தே, உன்னைச் சிருஷ்டித்தவரும், நாசரேத்தே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ (துன்பமாகிய) தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருந்தேன்; நீ (கண்ணீராகிய) ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரண்டதில்லை; நீ (உபத்திரவமாகிய) அக்கினியில் நடக்கும்போது வேகாதிருந்தாய். அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றவில்லை. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் ரக்ஷகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்......நீ என் பார்வைக்கு அருமையானபடியால் கனம் பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன்".

இப்பொழுது "நம்முடையவாய் நகைப்பினாலும் நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது......கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்." (சங். 126 : 23.)

உலகப்பிரகாரமான சகல மேன்மைகளும், ஆவிக்குரிய உன்னத பணிவிடைகளும் ஆண்டவர் கரத்திலிருந்து ஈவாகப்பெற்றுள்ள நமது சேகரச்சபைகளின் தற்கால நிலைமையைக்குறித்தும் இரண்டொன்று கூறுவிடின், இச்சரித்திரம் பூரணப்பட்டதாகாது. கனம் ஸ்டேப்ளி ஐயர் காலத்திலிருந்து சட்டதிட்டங்களுக்குள் அமைவுற்ற வளர்ச்சிக்காலம் ஆரம்பமாயிற்றெனவும், மிஷனெரி ஊழியச்சேவையிலோர் மாறுதல் தோன்றிற்றெனவும் கூறினம். அது முதல் ஆவிக்குரிய ஊழியத்திலும், ஆராதனை ஆசரிப்புகளிலும் ஆர்வம் குன்றியுள்ளதெனவே எம் ஆராய்ச்சியின் பயனாய் நாம் கண்டது. இடைக்கிடையே ஆவிக்குரிய கூட்டங்



நாசரேத் நகரம் 1950



முதல் திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவ 'லே' கான்பரன்ஸ் — வரவேற்பு கமிற்றி (1938)

கள் நடத்தப்பட்டனவெனினும், பொதுப்பட உற்சாகம் குன்றியே காணப் படுகிறது. தற்காலச் சபைகளில் வேதாகம அறிவு தாழ்ந்த நிலையிலிருக் கிறது என்பதும், ஒய்வு நாளாசரிப்பு தன் உன்னத நிலையிலிருந்து வழுவி நிற்பதும், ஆலய ஆராதனை ஆஜர் ஆண்கள் சம்பந்தப்பட்டமட்டிலாவது குன்றியிருப்பதும் கண்கூடு. மர்காஷிஸ் ஐயர் காலத்துள்ள ஆண்கள், பெண்கள், வாலிபரின் வேதாகம வகுப்புகளெங்கே? ரிக்ஸ் அம்மாளின் 'பரிசுத்த அன்னாளின் வாலிபப்பெண்கள் சங்கம்' என்னவாயிற்று? வெஸ்ற்றன் காலத்திற்றோன்றிய 'பரி. யோசேப்பு வாலிபர் சங்க' வேலை போன்ற ஊழியம் இக்காலத்தும் நடைபெற்று, 1910-ம் வருஷ ரிப்போர்ட் டில்க் கண்டவாறான மனந்திரும்புதல்களை (Conversions) வாலிபருக் குள் உண்டாகச் செய்வது கூடாத காரியமா? ஸ்டேப்ளி ஐயரின் 'பெரிய, சிறிய ஞானோபதேசங்கள்' 25 வருஷங்களுக்குள் காலங்கடந்த (out-of date) காரியங்களாயினவோ? கோவில்பிள்ளை, மோசே ஐயர்மார் காலத்தில் நடந்த ஆவிக்குரிய கூட்டங்களும் ஏகாந்தங்களும் மறுபடி யும் புதுப்பிக்கப்படுமாயின் நலமாகாதா?

இன்னமும், நமது சபைகளில் சிற்சிலருக்குள் ஆங்காங்கே காணப் படுவதாகச் சொல்லப்படும் பேய்ப்பயம், இந்துமார்க்கப் பழக்கவழக்கங் கள், மூடநம்பிக்கைகள், ஒழுங்கீனங்கள் முதலியன ஒழியவும், கிட்டத் தட்ட ஒவ்வொரு சபையிலும் காணப்படுகிற 'மறுதலித்த கிறிஸ்தவர் கள்', தெய்வபயமற்றோர், புறக்கணிக்கப்பட்டவர்கள் முதலானோர் மனந் திரும்பவும் தக்கதாகப் பரிசுத்த ஆவியின் அருள்பெற்ற பரிசுத்த ஊழியம் நடைபெற்று, நம் சபைகளின் பிள்ளைகள் அனைவரும் பரலோக ராஜ்யத் தின் புத்திரராகக் கூடுமானால் கடந்த நூற்றைம்பது வருஷ மிஷனெரி, வைத்திய, சபை, பள்ளிக்கூட, ஆஸ்பத்திரிச் சேவைகளனைத்தும் வீண் போய்விடவில்லை எனலாம். அவ்வித காலம் மறுபடியும் வரும்போது கேமரர், பிரதர்ட்டன், மர்காஷிஸ் காலத்துள்ளதுபோல், புறமதஸ்தர் பவுஞ்சு பவுஞ்சாகத் 'தங்கள் பலகணிக்குத் துவாரங்களுக்குத் தீவிரிக் கிற புறாக்களைப்போலப் பறந்து' வருவார்கள். ஏனெனில் அப்போது நாசரேத்திலிருந்து 'வேதமும்', அதன் சபைகளிலிருந்து 'கர்த்தருடைய வசனமும் புறப்படும்'. இவ்'வெல்லைகளிலுள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய ரக்ஷிப்பைக் காண்பார்கள்.'

# அனுபந்தங்கள்

## I

## நாசரேத் குருமார்

(லுத்தரன் முறைப்படி பட்டம் பெற்றவர்கள்)

| | | |
|---|---|---|
| கனம் விசுவாசநாதன் ஐயர் | | 1819–20 |
| | | 1820–22 |
| ,, ஆபிரகாம் | ,, | 1820 |
| ,, டேவிட் ரோசன் | ,, | 1830 மிஷனெரி |
| ,, பாக்கியநாதன் | ,, | 1838 |

(ஆங்கில திருச்சபை முறைப்படி பட்டம் பெற்றவர்கள்)

| | | |
|---|---|---|
| கனம் J. L. இரியன் ஐயர் | | 1836–38 மிஷனெரி |
| ,, A. F. கேமரர் | ,, | 1838–58 ,, |
| ,, A. மாசிலாமணி | ,, | 1856–57 (முதல் இந்திய குரு) |
| ,, H. போப் | ,, M. A. | 1858–59 மிஷனெரி |
| ,, T. பிரதர்ட்டன் | ,, M. A. | 1860–69 ,, |
| ,, M. ஏசுவடியான் | ,, | 1867–82<br>1896–1901 |
| ,, J. M. ஸ்ட்ராஹன் | ,, M. D. | 1870–76 மிஷனெரி |
| ,, G. பில்லிங் | ,, M. A. | 1872–73 உதவி மிஷனெரி |
| ,, V. ஆபிரகாம் | ,, | 1873–74 |
| ,, G. பாஞ்சோதி | ,, | 1873–74 |
| ,, R. பெரியநாயகம் | ,, | 1873–79 |
| ,, கனோன் A. மர்காஷிஸ் ஐயர் | | 1876–1908 மிஷனெரி |
| ,, A. பிச்சமுத்து | ,, | 1888–1901 |
| ,, A. B. விக்கர்ஸ் | ,, | 1889–92 உதவி மிஷனெரி |
| ,, M. ஞானக்கண் | ,, | 1893–94 |
| ,, S. வேதக்கண் | ,, | 1895, 1904–5 |
| ,, D. பெரியநாயகம் ஐயர் B. A. | | 1898–1932 செமினெரி |
| ,, E. யோசேப்பு ஐயர் | | 1900–01செமினெரியும்<br>1903–11சபையும் |
| ,, Y. ஞானமுத்து ஐயர் | | 1904–06 டிஸ்டிரிக்ட் |
| ,, P. S. பீற்றர் | ,, | 1902–10ற்ரெயினிங் ஸ்கூலும்<br>1911–13சபையும் |
| ,, N. முத்தையா | ,, | 1902–06 சுவிசேஷ ஊழியம் |
| ,, P. ஜாண் | ,, | 1903–06செமினெரியும்<br>1908–18சபையும் |

| | | | |
|---|---|---|---|
| கனம் D. தேவப்பிரியம் | ஐயர் | | 1905–08 டிஸ்டிரிக்ட்டும் சபையும் |
| ,, C W. உவெஸ்ற்றன் | ,, | | 1906–12 மிஷனெரி |
| ,, M. ஜீவானந்தம் | ,, | | 1911–14 டிஸ்ட்ரிக்ட் (உதவி) |
| ,, C. G. ஸ்டேப்ளி | ,, | M. A. | 1911–24 மிஷனெரி |
| ,, Y. மனுவேல் | ,, | | 1913–15 டிஸ்டிரிக்ட் |
| ,, F. வெல்ஸ் ஐயர் | | M. R. C. S. | 1914–17 ஆஸ்பத்திரி |
| ,, ஜாண் சாமுவேல் ஐயர் | | | 1914–22 செமினெரி<br>1936–40 சர்க்கிள் சேர்மன் |
| ,, P. C. செர்ஸ்லேக் | ,, | B. A. | 1916–17<br>1925–27 செமினெரி |
| ,, A. P. ரேண்டல் | ,, | B. A., L. TH. | 1918–37 கைத்தொழிற்சாலை |
| ,, * S. S. மோசே | ,, | | 1918–20 சபை<br>1932–35 சர்க்கிள் சேர்மன் |
| ,, † G. T. செல்வின் | ,, | M. A. | 1921–22 செமினெரி |
| ,, ‡ M. V. ஜாண் | ,, | | 1925–26 ,, |
| ,, ‖ D. கோவில்பிள்ளை | ,, | B. A. | 1922–32 (1924 முதல்) சர்க்கிள் சேர்மன் |
| ,, J. கிங்டன் | ,, | M. A. | 1926–27 செமினெரி |
| ,, J. M. தேவதாசன் | ,, | B. A., L. T., B. D. | 1928 ,, |
| ,, J. D. மாணிக்கவாசகம் ஐயர் | | L. TH. | 1928–33 ,, |
| ,, கனோன் S. R. ஞானக்கண் ஐயர் | | | 1941– சர்க்கிள் சேர்மன் |

## II

## நாசரேத் துணைகுருமார்

| | | |
|---|---|---|
| கனம் I. N. S. பொன்னுசாமி ஐயர் | | 1924—25 |
| ,, ஜாண் ஏசுதாசன் | ,, | 1925—28 |
| ,, G. மதுரம் | ,, | 1928—31 |
| ,, S. காலேப் | ,, | 1931—33 |
| ,, R. விசுவாசம் | ,, | 1933—36 |
| ,, E. A. செல்லையா | ,, | 1936—37 |

---

* கனோன் S. S. மோசே ஐயர் *(1940)*
† மகாகனம் G. T. செல்வின் அத்தியக்ஷர் *(1945)*
‡ கனோன் M. V. ஜாண் ஐயர் *(1940)*
‖ ,, D. கோவில்பிள்ளை ஐயர் *(1940)*

| | | | |
|---|---|---|---|
| கனம் C. S. தவமணி | ஐயர் | | 1937—40 |
| ,, ஜேம்ஸ் தானியேல் | ,, | | 1940—42 |
| ,, A. M. தாமஸ் | ,, | | 1942—44 |
| ,, *S. T. பால் ஞானையா | ,, | | 1944—46 |
| ,, G. இஸ்ரவேல் | ,, | B. A. | 1946—47 |
| ,, G. ஜெயராஜ் | ,, | | 1947—48 |
| ,, A. J. சாமுவேல் | ,, | B. A. | 1948— |

## III
## பிள்ளையன்மனைக் குருமார்

| | | | |
|---|---|---|---|
| கனம் M. ஏசுவடியான் ஐயர் | | 1886—1902 | (மூக்குப்பீறியுடன்) |
| ,, S. வேதக்கண் | ,, | 1902 — 03 | |
| ,, P. S. பீற்றர் | ,, | 1904 — 06 | (நாசரேத்திலிருந்து கொண்டு) |
| ,, D. தேவப்பிரியம் | ,, | 1906 — 10 | (மூக்குப்பீறியுடன்) |
| ,, J. யோசேப்பு | ,, | 1910 — 12 | |
| ,, Y. மனுவேல் | ,, | 1913 — 18 | (டிஸ்டிரிக்ட்டுடன்) |
| ,, ஜாண் சாமுவேல் | ,, | 1918 — 19<br>1922 — 24 | செமினெரியிலிருந்து |
| ,, S S. மோசே | ,, | 1919 — 21 | |
| ,, S. D. மதுரம் | ,, | 1921 | |
| ,, D. கோவில்பிள்ளை | ,, B. A. | 1921 — 22 | |
| ,, S. R. ஞானக்கண் | ,, | 1924 — 26 | |
| ,, M. பிரடெரிச் | ,, | 1926 — 31 | |
| ,, S. C. நீல் † | ,, M. A. | 1931 — 33 | செமினெரியிலிருந்து |
| ,, **S. பால்மாணிக்கம் | ,, | 1933 — 35 | |
| ,, R. விசுவாசம் | ,, | 1936 | |
| ,, A. G. ஜெபராஜ் | ,, B.A., B.D. | 1936 — 39 | செமினெரியிலிருந்து |
| ,, M. பேசில் | ஐயர் | 1939 — 40 | |
| ,, †† T. சித்தர் | ,, M.A., B. D | 1940 — 42 | திருமறையூரிலிருந்து |
| ,, S. S. சீமோன் | ஐயர் | 1942 — 46 | |
| ,, S.T. பால் ஞானையா | ,, B. D. | 1946 | |

* கனம் S. T. பால் ஞானையா ஐயர் B. D. *(1950)*
† மகாகனம் S. C. நீல் அத்தியக்ஷரவர்கள் *(1939)*
** கனம் கனோன் S. பால் மாணிக்கம் ஐயர் *(1947)*
†† ,, கனோன் T. சித்தர் ஐயர் *(1942)*

## IV

## உடையார்குளம் குருமார்

**(1925** முதல்)

| | | | |
|---|---|---|---|
| கனம் I. N. S. பொன்னுசாமி ஐயர் | | 1925—26 | |
| ,, S காலேப் | ,, | 1927—31 | |
| ,, M. பிரடெரிக் | ,, | 1931—33 | |
| ,, A. அருள் தங்கையா | ,, | 1933—36 | |
| ,, R. G. ஏசுதாசன் | ,, B. D. | 1939—40 | திருமறையூரிலிருந்து |
| ,, S. C. சாமுவேல் | ,, | 1941—43 | |
| ,, A. தங்கையா சித்தர் | ,, | 1943—46 | |
| ,, D. A. கிறிஸ்துதாஸ் | ,, B.A. L.T. | 1947—48 | திருமறையூரிலிருந்து |
| ,, P. S ஜெயராஜ் ஐயர் | | 1948— | |

## V

## பரி. யோவான் பெண்கள் உயர்தரக் கலாசாலை தலைமையாசிரியர்

| | | | |
|---|---|---|---|
| ‡ ஸ்ரீ D. பெரியநாயகம் B A. | | | 1886—1900 |
| ,, G. S. ஆபிரகாம் B. A., L. T. | | | 1901—1907 |
| ,, C. S. கோலாப் B. A., L. T. | | | 1908—43 |
| திருமதி † ஆசீர்வாதம் | ,, | | 1943—45 |
| ஸ்ரீமதி ‖ அருமைநாயகம் | ,, | | 1945—49 |
| ,, G. மனுவேல் | ,, | | 1949— |

## VI

## பெண்கள் போதனமுறைப் பயிற்சிசாலைத் தலைமையாசிரியரும், தலைமையாசிரியைகளும்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ V. ஞானவொளிவு | 1885—02 | * |
| கனம் P. S. பீற்றர் ஐயர் | 1902—06 | * |
| ஸ்ரீ R V. ஆசீர்வாதம் | 1906—09 | * |
| ,, சாமுவேல் ஜோசப் | 1909—21 | |
| ஸ்ரீமதி V. G. சுந்தரி | 1921—23 | |
| திருமதி மரியம்மாள் ஜோசப் | 1924 | |

‡ கனம் D. பெரியநாயகம் ஐயர் B. A. *1898*

† திருமதி — Mrs.

‖ ஸ்ரீமதி — Miss.

* I dont claim accuracy for these figures.

| | |
|---|---|
| ஸ்ரீமதி பாக்கியத்தாய் ஆசீர்வாதம் | 1924—26 |
| ,, தேவதிரவியம் | 1926—30 |
| திருமதி M. பரமானந்தம் | 1930—32 |
| ,, ராஜம் அருள் | 1932—33 |
| ஸ்ரீமதி வில்லி துரைராஜ் | 1933—34 |
| ,, R. அருமைநாயகம் | 1934—38 |
| ,, வில்லி பொன்னையா | 1938—40 |
| திருமதி செல்லா ரிச்சர்ட் | 1940—46 |
| ஸ்ரீமதி R. அருமைநாயகம் | 1946—47 |
| திருமதி விக்டோரியா சந்திரன் | 1947—50 |
| ஸ்ரீமதி R. கோவில்பிள்ளை | 1950— |

## VII

## மர்காஷிஸ் உயர்தரக் கலாசாலைத் தலைமையாசிரியர்

| | |
|---|---|
| ஸ்ரீ J. பொன்ரத்தினம் B. A., L. T. | 1930—33 |
| ,, G. சாம்விக்டர் ,, | 1933—39 |
| ,, ஜேம்ஸ் ஞானமுத்து ,, | 1939—46 |
| ,, S. A. தாமஸ் ,, | 1946— |

## VIII

## வேதசாஸ்திரக் கல்லூரித் தலைவரும், ஆசிரியரும்

| | | | |
|---|---|---|---|
| 1. | கனம் S. C. நீல் ஐயர் M. A. | 1929—38 | தலைவர் |
| | ,, ,, D. பெரியநாயகம் ஐயர் B. A. | 1900—32 | ஆசிரியர் |
| | ,, ,, J. D. மாணிக்கவாசகம் ஐயர் L. Th. | 1928—33 | ,, |
| | ,, ,, * A. M. ஹாலிஸ் ஐயர் M.A., B.D. | 1931—36 | ,, |
| | ,, ,, S. பால்மாணிக்கம் ஐயர் | 1933—36 | ,, |
| | ,, ,, A. G. ஜெபராஜ் ஐயர் B. A., B. D. | 1936—39 | ,, |
| | ,, ,, M. C. லாங்டன் ஐயர் M. A. | 1937—42 | ,, |
| 2. | கனோன் தாமஸ் சித்தர் ஐயர் | 1939— | தலைவர் |
| | கனம் † R. G வசுதாசன் ஐயர் B. D. | 1939—42 | ஆசிரியர் |
| | ,, J. R. C. டாசன் போலிங் ஐயர் M. A. | 1942—46 | ,, |
| | ,, ‡ ஜோசப் ஆபிரகாம் ஐயர் B. A. | 1942—46 | ,, |

---

* மகாகனம் A. M. ஹாலிஸ் (சென்னை) அத்தியக்ஷர். *(1943)*

† கனம் R. G. ஏசுதாசன் ஐயர் M. A., B. D. *(1943)*

‡ ,, V. ஜோசப் ஆபிரகாம் ஐயர் B. A., B. D. *(1948)*

| | | | |
|---|---|---|---|
| கனம் | M. G. சாமுவேல் ஐயர் B. A., L T., L. Th. | 1946—48 | ஆசிரியர் |
| ,, | D. A. கிறிஸ்துதாஸ் ஐயர் B A., L.T., B.D. | 1946— | ,, |
| ,, | T. S. காரட் ஐயர் M. A. | 1946— | ,, |
| ,, | D. M. சாமுவேல் ஐயர் B. D. | 1950— | |
| ஸ்ரீ | L. A. ஞானதுரை M. A., B. D. | 1950— | உதவி ,, |

## IX

## கைத்தொழிற் கல்விச்சாலை மானேஜர்களும் தலைமையாசிரியரும்

| | | |
|---|---|---|
| கனம் கனோன் A. மர்காஷிஸ் ஐயர் | 1877—1908 | மானேஜர் |
| ஸ்ரீ D. கோவில்பிள்ளை | 1877— 90 | தலைமை ஆசிரியர் |
| ,, A. மாணிக்கம் | 1890— 97 | ,, |
| ,, E. ஹாக் [E. Hogg] | 1898—1901 | ,, |
| ,, M. உவால்ற்றர் | 1901— 04 | ,, |
| ,, M. அகஸ்ற்றின் | 1904— 16 | ,, |
| கனம் C. W. உவெஸ்ற்றன் ஐயர் | 1908— 12 | மானேஜர் |
| ,, C. G ஸ்டேப்ளி M. A. ,, | 1912— 18 | ,, |
| ,, A. P. ரேண்ட்ல் ,, B. A., L. Th. | 1918— 37 | ,, |
| ஸ்ரீ பொன்னம்பலம் | 1916— 18 | தலைமை ஆசிரியர் |
| ,, J. R. மனுவேல் | 1937— 38 | ,, |
| கனம் G. E ஹப்பர்ட் ஐயர் | 1938— 44 | மானேஜர் |
| ஸ்ரீ J.K தங்கராஜ் B.A., L.T. | 1940— | த. ஆ. & உதவி சுப்பரின்டென்டென்ற் |
| கனம் J. R. C. டாசன் போலிங் ஐயர் M. A. | 1944— 46 | மானேஜர் |
| சங்கை R. V. ஆசீர்வாதம் ஐயர் | 1946— | ,, |

## X

## (தற்காலச்) சேகரச் சபை ஊழியர்

| | | | |
|---|---|---|---|
| நாசரேத் | ஸ்ரீ J. தியாபிலஸ் | — | நாசரேத் (சர்க்கிள் ரைட்டர்) 1947 — |
| | ,, D. S. ஜெயராஜ் | — | வகுத்தான்குப்பம் 1949— |
| பிள்ளையன்மனை | ,, J. ஞானசிகாமணி | — | பிள்ளையன்மனை 1950 — |
| | ,, K. மோசே | — | வாழையடி 1950 — |
| | ,, K ரத்தினம் | — | அகப்பைக்குளம் 1948 — |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஸ்ரீ M. கோயில்பிள்ளை | — | தைலாபுரம் / தோப்பூர் | 1949 — |
| | ,, E. S. லாசரு | — | வடக்கூர் / நொச்சிகுளம் | 1949 — |
| உடையார்குளம் | ,, S. தேவபிச்சை | — | உடையார்குளம் | 1950 — |
| | ,, G. எட்வர்ட் | — | மழவை / கரையடி | 1949 — |
| | ,, *S. ரத்னம் | — | குரிப்பன்குளம் சேரி | 1947 — |
| நாசரேத் ரூரல் | ,, A. சாமுவேல் | — | ஆழ்வார்திருநகரி | 1950 — |
| | ,, S. J. சுவிசேஷமுத்து | — | வேதநகர் | 1949 — |
| | ,, K. நோவா | — | கீழவெள்ளமடம் | 1950 — |
| | ,, M. ஞானதிரவியம் | — | செம்பூர் | 1950 — |
| | ,, Y. லாசரு | — | முதலிமொழி | 1950 — |
| | ,, விசுவாசமணி | — | ஆசீர்வாதபுரம் | 1948 — |

## XI

### ஆழ்வார்திருநகரி உ. ஆ. பாடசாலைத் தலைமை ஆசிரியர் (1926 முதல்)

| | |
|---|---|
| கனம் E. யோசேப்பு ஐயர் | 1918—1930 |
| ஸ்ரீ P. S. பரமானந்தம் | 1930—37 |
| ,, A. K. துரைராஜ் | 1937—42 |
| ,, * P. J. தேவசகாயம் | 1942—44 |
| ,, D. அற்புதமணி | 1944—49 |
| ,, A. ஞானசிகாமணி | 1949— |

## XII

### உடையார்குளம் பரி. பவுல் உ. ஆ. பா. தலைமை ஆசிரியர் (1930 முதல்)

| | |
|---|---|
| ஸ்ரீ S. V. ரத்தினராஜ் | 1930—32 (6ம் வகுப்பு மட்டும்) |
| திருமதி மரியம்மாள் யோசேப்பு | 1932—34 |
| ஸ்ரீ P. விசுவாசமணி | 1934—40 (7ம், 8ம் வகுப்புகள் 1938ம், 39ம் ஆண்டுகளில் திறக்கப்பட்டன) |

---

* கனம் P. J. தேவசகாயம் ஐயர் 1947

| | | |
|---|---|---|
| ஸ்ரீ அசரியா லாசரு | 1940—41 | |
| ,, காபிரியேல் துரைராஜ் | 1941—44 | |
| ,, K. தேவநேசன் | 1944—45 | |
| ,, † B. மாணிக்கராஜ் | 1945—46 | |
| ,, A. N. திரவியம் | 1946—47 | |
| ,, P. விசுவாசமணி | 1947—48 | (இரண்டாம் விசை) |
| ,, ஜெரோம் ஜெபமணி | 1948 | |
| ,, K. கனகராஜ் | 1948— | |

## XIII

### டாக்டர் மதுரம் உ. ஆ. பாடசாலை (நாசரேத்) தலைமை ஆசிரியர் (1949 முதல்)

ஸ்ரீ D. S. ஜெயராஜ் 1949 —

## XIV

### பரி. லூக்கா ஆஸ்பத்திரி டாக்டர்களும், * திரசர்களும்

| | | |
|---|---|---|
| 1. | கனம் டாக்டர் J. M. ஸ்ட்ராஹ்றன் ஐயர் M. D. | 1870—76 (?) |
| | i. சைமன் திரசர் | (?) |
| 2. | கனம் கனோன் A. மர்காஷிஸ் ஐயர் | 1876—1908 |
| 3. | டாக்டர் ஸ்மிற் | |
| | ii. ஞானமுத்து திரசர் | (?) —1894 ‖ |
| | iii. தேவப்பிரியம் ,, | 1894—1904 ‖ |
| | iv. S. மதுரம் ,, | 1904—1916 ‖ |
| 4. | கனம் ஸ்ரீமதி N. E. உவெஸ்ற்றன் அம்மாள் ‡ M. B., B. S. | 1909—1912 |
| 5. | கனம் டாக்டர் F. வெல்ஸ் ஐயர் M. R. C. S., L. R. C. P. | 1914—1917 |
| 6. | ,, ரத்தினம் வேதபோதகம் L. M. P. | 1917— |
| 7. | ,, திருமதி ரூபி வேதபோதகம் L. M. & S. | 1921—49 |
| 8. | ,, தாமஸ் ஞானமுத்து M. B., B. S. | 1945— |
| 9. | ,, ஸ்ரீமதி பேஷன்ஸ் தாமஸ் M. B., B. S. | 1950— |

† கனம் B. மாணிக்கராஜ் ஐயர் *1950*

* The list of Dressers is not claimed as complete.

‖ These dates may not all be accurate.

‡ (Nee) Dr. Miss N. E. Parsons.

## XV

## நாசரேத் பஞ்சாயத்போர்ட் தலைவர்

(1922 முதல்)

| | |
|---|---|
| கனம் D. கோவில்பிள்ளை ஐயர் B. A. | 1922—24, |
| | 1926—32 |
| ஸ்ரீ C. S. ஜோலாப் B. A., L. T. | 1924—26 |
| ,, W. லாமேக் B. A. | 1932—33 |
| | 1935—38 |
| ,, J. N. நாயகம் | 1933—35 |
| ,, ராவ்சாகிப் M. கோயில்பிள்ளை M. A., L. T. | 1938—50 |
| ,, V. கனகராஜ் | 1950— |

## XVI

## நாசரேத் இந்திய கிறிஸ்தவ எதிர்காலச் சிக்கன சகாய நிதி பிரசிடென்ற்கள்

| | | |
|---|---|---|
| கனம் கனோன் A. மர்காஷிஸ் ஐயர் | | 1887—1908 |
| ,, A. J. கோடன் | ,, | 1908—09 |
| ,, D. பெரியநாயகம் | ,, | 1909—13 |
| ,, C. G. ஸ்டேப்ளி | ,, | 1913—15 |
| ஸ்ரீ மோசஸ் ஆபிரகாம் | | 1915—17 |
| கனம் R. V. ஆசீர்வாதம் | ஐயர் | 1917—21 |
| ,, J. B. ஞான ஒளிவு | ,, | 1921—22 |
| ,, G. T. செல்வின் | ,, | 1922—31 |
| ராவ்சாகிப் M. கோவில்பிள்ளை | | 1931—34 |
| கனம் S. S. மோசே | ஐயர் | 1934—36 |
| ,, ஜாண் சாமுவேல் | ,, | 1936—40 |
| கனோன் S. R. ஞானக்கண் | ,, | 1941— |

# Books Referred


1. Early Records of the History of Tinnevelly Missions by Bishop R. Caldwell.
2. The Tinnevelly Mission (1835—47) by Rev. G. Pettitt.
3. Reminiscences of Rt. Rev. R. Caldwell by the Rev. J. L. Wyatt.
4. A Centenary History of the C. M. S. in Tinnevelly by Mr. Paul Appasamy.
5. Ringeltaube, the Apostle of S. Travancore by Mr. S. A. Azariah.
6. Memoir of the Rev. J. Thomas (of Megnanapuram) by the Rev. A. G. Grey-Edwards.
7. Two-hundred Years of the S. P. G. by Pascoe.
8. South Indian Missions by the Rev. J. A. Sharrock.
9. South Indian (Protestant) Missionaries. S. P. C. K.
10. Register of the Tinnevelly Clergy by Rt. Rev. F. J. Western.
11. 'Others laboured' (in Tamil) by Sri S. K. Devasikhamoni.
12. Valibar Mitran 1910.
13. 'Come and See' by Mr. K. Y. Penuel.
14. M. D. C. Reports 1834—1912 (Reports of some years excepted not being availabl
15. C. M. Records 1821—1870 ,,
16. Manuscript notes by late Maduranayagam Catechist.
17. ,, letters of late V. Joel, M. D. C. Catechist.
18. Baptism, Marriage & Burial Registers of Nazareth, Pillaianmanai etc. from 1840.
19. Circle and Pastorate Committees Minute-books.
20. Minute-books of the Panchayat Board from 1922.
21. Minutes of the Musical Association, Nazareth.
22. T. D. C. Reports 1920—1927.
23. Tamil Church Deepikas 1945—49.
24. The Steep Ascent by F. G. F. T.
25. Our Oldest Mission by A. Westcott.


---

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை. 24—7—'50 — C. 1000

# பிழை திருத்தம்

பக்கம் 11. வரி கீழிருந்து 2.

'வாழையடிச் சபையின் பிறந்தநாள்' என்பதற்குப் பதில் 'வாழை யடியில் நடந்த முதல் ஞானஸ்நானம்' என்றிருக்க.

[1802 அக்டோ 15உ யை அச்சபையின் பிறந்த நாளெனலாம். ஏனெனில் அன்று வாழையடி ஊராரில் மூவர் எருசலேமுக்குச் சென்று அங்கு நடந்த ஞானஸ்நான ஆராதனையில் கிறிஸ்து சபையில் சேர்க்கப் பட்டனர்.]

பக்கம் 149. வரி 22.

'அடுத்த நாளிலும்' என்பதற்குப்பதில் 'அதற்கு முந்தின நாளிலும்' என்று வாசிக்க.

பக்கம் 155 வரி 28. 'எப்ராம்மீ' க்குப்பதில் 'எப்ராயீம்' என்றிருக்க.

,, ,, Foot-note } For 'Hundred years of' Read 'A
,, 186 ,, } Centenary History of'.

,, 177 வரி 30. 'அவரிறந்த' என்பதற்குப்பதில்' 'அவரிருந்த' என்று வாசிக்க.

,, 224 Foot-note For 'Conon,' read 'Canon'.

,, 233 வரி 11. 'டாக்டர் தாமஸ்' என்பதற்குப்பதில் 'டாக்டர் தாமஸ் ஞானமுத்து' என்றும்.

,, 242 வரி 23. 'D. பெரியநாயகம்' என்பதற்குப்பதில் 'D. கோவில் பிள்ளை' என்றும்.

,, 253 வரி 18. 'டாக்டர் ஸ்மிற் —' என்பதற் குப்பதில் 'டாக்டர் ஸ்மிற் 1895' என்றும் வாசிக்க.